நோயழிவிளக்கத் தின்மணி புத்தகம்

T.D.R.C. NO. 1201

R.R. NO. 13 / 4.1887.

Q7
M87

பிசுமில்லாஹிற்றகுமானிற்றஹீம்.

இஃது

நேர்வழிவிளக்கந் தீன்மணிமுழக்கம்.

திருநெல்வேலிப்பேட்டை வடக்குத்தெரு
செய்குமதாரு ராவுத்தரவர்கள் குமாரர்
செ-செய்கப்துல்காதிறு ஆலிம்சாகிபு
அவர்களா லியற்றியது.

இதனை
திருநெல்வேலிப்பேட்டை
த-செய்கு அப்துற்றகுமான்ராவுத்தர்
அவர்களின் குமாரர் புலவர்
த-அ, காதிறுமுகியித்தீன்
ராவுத்தரவர்களால்
எழுத்துக்குற்றங்களை பரிசோதித்துத் திருத்தப்பட்டு
ஷை யூர்
கரூர்-இபுறுகிம்ராவுத்தர் அவர்கள்குமாரர்
க-இ, செய்யதுராவுத்தரவர்களின்
பொருளுதவி முயற்சியால்,

சென்னை
சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்
திருத்தமான
முதற் பதிப்பு
பதிப்பிக்கப்பட்டது.
ஹிஜுறத்து 1304௵ துல்ஹஜ்ஜு௴.

Registered Copy Right.

அறிவிப்பு.

இந்த நேர்வழிவிளக்கந் தீன்மணி முழுக்கத்தைக் கோர்வைசெய்த திருநெல்வேலிப்பேட்டை வடக்குத்தெரு செ-செய்கப்துல்காதிரு ஆலிம்சாகிபு அவர்களும் இதைப் பொருளுதவி முயற்சிசெய்து அச்சிடுவித்த ஷை யூர் க-இ-செய்யதுராவுத்தர் அவர்களும் ஆகிய இவ்விரண்டுபெயர்களுடைய அநுமதியின்றி அச்சிற் பதிப்பிக்கின்றவர்களும் அச்சிற் பதிப்பிக்கும் அச்சுக்கூடத் தலைவர்களும் 1847 - ஸ்த்து 20 - வது, ஆக்டிற் கூறியபடி மேற்படியார்களாற் செய்யும் நஷ்டத்திற் குத்திரவாதிகளாகவும் பினல்க் கோர்ட்டார் அவர்கள் கேள்விக்குச் ஜவாபுதாரிகளாகவு மிருப்பார்களென் றியாவரு மறிவீர்களாக.

விளம்பரம்.

இப்புத்தகம் வேண்டியவர்கள் சென்னபட்டணம் குஜிலி ஒற்றவாடை இரிசப்பமேஸ்திரி தெருவு 45-வது, நம்பர் வீட்டில் க-இ-செய்யதுராவுத்தர் ச-பீ-செய்கப்துல்காதிறு ராவுத்தர் இவர்களிடத்திலும், திருச்சிருப்பள்ளி பாலக்கரை ஷாப்புக்கடை ம-செ-ஹாஜிசேகு முகம்மதுராவுத்தரவர்களிடத்திலும், மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்புக்கடை ச-பீருகாதரொலிராவுத்தரவர்களிடத்திலும், கிரையத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கி,

க-இ-செய்யதுராவுத்தர்.

இ ஃ து

திருநெல்வேலிப்பேட்டை

த - செய்கப்துற்றகுமான் ராவுத்தரவர்கள் குமாரர்

புலவர் த - அ - காதிறுமுகியித்தீன்

ராவுத்தரவர்க ளியற்றிய

சாத்துக்கவிகள்.

இருபத்துநான்குசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

பூரணன் ஒப்புவமை யின்றியே யெங்குநிறை
பொங்கும் புகழ்க்குரியவன்
பொன்னகர் சுவப்பிரங் குறுசறுசு மந்தரம்
புவனமலை யெவையுமதனுட்
பொலிசகல வகையுயிர்க ளியாவையு மமைத்தினிது
பூக்கும்படிக்கு நிதமும்
புனிதமொடு காத்தருள் வல்லவன் றன்னையும்
புதுமைபல வுலகினுலவக்

காரணங் கொண்டுவரு நபிகளுக் கரசான
கபீபிறசூல் நபியையுங்
கக்கென்று நம்பிவிசு லாநிலையி லாகியே
கலிமாவுரைத்த முதியோர்
கறையறத் தொழுகைமுத லைவகைச் செயலையும்
கண்டிங்கி தத்தனுற்றிக்
களைகளை யொதுக்கிமிகு நலமுலவு சுவனபதி
களிமீறி நின்றுவாழ்க

ஆரணந் தன்னையே பாராய ணஞ்செய்து
வறிவாலுயர்ந்த பெரியோ
ராற்றின் மிகந்துவரு கனியினால் வெளியான
வற்புதந் தந்தகலைஞே
ரஞ்ஞான மியாவையுந் தூர்த்துமெஞ் ஞானமதை
யானந்த மோடணிந்தோர்
அபூகனி பாவென்ற நாமத்தி னோர்செய்த
அனபிமத கபின்படிக்குக்

தீரமணி பிக்குகுக் கித்தாபுகள் பலதையுந்
செவ்வையுற வேதெளிந்து
சேகரம தாக்கியுயர் நேர்வழிவி ளக்கமொடு
தீன்மணிமு ழக்கமெனவே
செய்யபெயர் தந்தனர் வையக மெலாந்துதி
செயும்பேட்டை தன்னில்வாழும்
செய்குமதார் ராவுத்த ரின்தவப் பலனுப
செய்கப்துல்க் காதிராலீம்.

வெண்பா.

ஏகனுரை யும்மெழிலா ரெங்கணபி தம்முரையும்
வாகுயிமா மானவர்கண் மானுரையுஞ்—சேகரமா
யறபியுரை யானவையை யாய்ந்து தமிழுரையாய்த்
திறமை பெறச் செய்தார் தினம்.

கலித்துறை.

தினகரன்காந்திபடாதடர்பாசடைசேர்பொழிலார்
வனமுலவுந்திருப்பேட்டையில்வாழப் துல்காதிரொனுங்
கனமுலாவாலீம்சாகீபியற்றுமிக்காட்சியுரை
யனுதினமுஞ்சுகம்பெற்றுய்யவேவழியாயதன்றே.

விருத்தம்.

ஆதிதன்னுரையு மருணபியுரையு மறிவுறு மிமாம்களி னுரையுஞ்
சோதிசேர்யறபி யுரையதாயிருக்கிற் றுலங்குவ தரிதெனத் துணிந்து
வீதிசேர்தமிழி னுரைபெயர்த்தளித்தார் விண்டொடுபொழிதிருப்பேட்டை
நீதிசேர்ஆலீம் செய்கப்துல்காதிரென நிகழ்த்திடு நிபுணருமே.

கலிவிருத்தம்.

நிண்ணயமதாய்நமர்க ணேர்வழியிலாக
வண்ணமுறுமாநபியின் மார்க்கவறவாற்றைத்
திண்ணமுறுசெந்தமிழி னுனுரைசெய்தாரா
லண்ணலணிசெய்கு அப்துல் காதிறெனுமாலீம்

வல்லவனபிக்குரிய மார்க்கநிதம்வாழி
நல்லதமிழாலுரையை நாட்டியவர்வாழி
சொல்லியமுறைக்கொழுகு துய்யவர்கள்வாழி
யல்லலறத்தீனவர்க ளன்புபெறஆமீன்.

சாத்துகவி - முற்றிற்று.

நேர்வழிவிளக்கந்

தீன்மணிமுழக்கத்தின்

அட்டவணை.

பக்கம்.

௫ அல்லாகுத்தஆலாவின் றுதி

௬ றசூல்சல்லல்லாகு அலைகிஉசல்லமவர்களின் புகழ்ச்சி

,, தீனிலிசுலாமின்மகிமைப்பிரசங்கம்

௰௬ கலிமாக்களின்பாடு

௨௪ ஈமானிசுலாமின்பிரசங்கம்

௨௫ ஈமானுடைய சிபத்துகளின்பயான்

,, அல்லாகுத்தஆலாவின்பேரில் ஈமான்கொள்கிறவிபரம்

௨௯ மலக்குகளின்பேரில் ஈமான்கொள்கிறவிபரம்

௩௰ வேதங்களின்பேரில்ஈமான்கொள்கிறவிபரம்

௩௧ றசூல்மார்களின்பேரில் ஈமான்கொள்கிறவிபரம்

௩௨ ஒடுக்கத்துநாளின்பேரில் ஈமான்கொள்கிறவிபரம்

௩௩ அல்லாஹு சுபுகானஹு ஒத்தஆலாவின் கட்டளையின்பேரி
லீமான்கொள்கிறவிபரம்,

௩௪ இசுலாத்தின்பயான்

௩௭ நித்தத்தென்னுங் குபிர்கடத்தைகளின்பாபு

௪௪ முறுத்தத்துடைய குக்குமுகளின்பயான்

௪௬ முறுத்தத்துடைய அதாபின்பயான்

௪௮ தீனின்பேரிற்றரிபடாக யிருக்கிறதின்பயான்

௬௩ தீனுடையயில்மின் வரிசைப்பிரசங்கம்

௭௧ இமாம்களின் வரிசைப்பிரசங்கம்

௭௨ இமாமுல்லகுலம் அபூகனிபா றகுமகுல்லா அவர்களின்வரிசை

௮௰ மூன்றுஇமாம்களின் விபரம்

௮௧ பிக்குகுடைய குக்குமுகளின் விபரம்

௮௨ தஹாறுத்தென்னுந் துப்புரவுகளின் பிரசங்கம்

பக்கம்.	
,,	மலபாதை ஜலபாதைசுத்திசெய்வதின் பாபு
௮௫	ஒலுவினுடைய பாபு
௮௭	ஒலுவின் பறுலுகள்
,,	ஒலுவின் சுன்னத்துகள்
௮௯	ஒலுவின்முஸ்தஹப்புகள்
௯௰	ஒலுவின் மக்குறூகுகள்
,,	ஒலுவின் முறிச்சல்கள்
௯௨	குசுலென்னும் முழுக்கின்பாபு
௯௪	முழுக்கின் பறுலுகள்
,,	முழுக்கின் சுன்னத்துகள்
௯௫	சுன்னத்தான முழுக்கு
௯௬	ஹய்லுநிபாசின் பாபு
௯௭	முழுக்காளிகளுக்கு விலக்கானசெய்கை
௯௮	வியாதிக்காரர்களின் குக்கும்
௧௦௦	தண்ணீரின்பயான்
௧௦௧	கிணற்றின் பயான்
௧௦௨	முஸ்தகுமலான தண்ணீரின்விபரம்
௧௦௩	எச்சியின் விபரம்.
,,	தயம்முமுடையபாபு
௧௦௫	தயம்முமுடைய சுன்னத்துகளாவது
,,	தயம்முமுடைய அடவென்னு மொழுங்காவது
௧௦௭	தயம்முமுடைய முறித்தலாவது
௧௦௮	நஜீசுகளின் பாபு
௧௧௦	தொழுகையின் பிரசங்கம் அதின்வரிசை
௧௧௪	தொழுகையை விடுகிறவர்களுக்குண்டாகிற அதாபின் பயான்
௧௧௮	தொழுகையின் குக்குமுகளின்பயான்
௧௧௯	தொழுகையின் வக்த்துகளின் பாபு
௧௨௦	ஹறுமான வக்த்துகளின் விபரம்
௧௨௧	மக்குறூஹான வக்த்துகளின் விபரம்
௧௨௨	ஸபாரியுடைய தொழுகையின் பயான்
௧௨௪	பாங்குடைய பாபு
௧௨௭	தொழுகையுடைய பறுலுகளின்பயான்

பக்கம்	
கஙய	தொழுகையுடைய வாஜிபுகளின்பயான்
கஙக	ஸஜதாசகுவு
கஙஉ	ஸஜதாத்திலாவத்து
கஙங	தொழுகையின் சுன்னத்துகளின் பயான்
கஙரு	தொழுகையின் முஸ்தஹப்புகளின் பயான்
கஙசு	தொழுகையுடைய அடவின்பயான்
கசய	தொழுகையை முறிக்கும்படியான செய்கைகளின் பாபு
கசஉ	தொழுகையுடைய மக்றூகுகளின் பயான்
கசச	தொழுகையில் மறதிவருவதின் பயான்
கசசு	உள்ளச்சமாய்த் தொழுவதின்பயான்
கசஅ	இமாமத்தின் பாபு
கருய	இமாமத்துடைய சறுத்துகள்
,,	இமாமைத் தொடருகிறதற்கு சறுத்துகள்
கருச	முக்ததியின் விபரம்
கருரு	வித்றுத்தொழுகையின் பாபு
கருசு	நபிலானதொழுகைகளின் பாபு
கருஎ	தறாவீகுத்தொழுகையின்பயான்
கருகூ	இசுராக்குடைய விபரம்
,,	தகிய்யத்துல் மஸ்ஜிதின்விபரம்
,,	ஒலுவின் தொழுகையுடைய விபரம்
கசுய	ளுகாத்தொழுகையின் விபரம்
,,	தஸ்பீகுத்தொழுகையின் விபரம்
கசுக	தகச்சுதுத்தொழுகையின் விபரம்
,,	ஸபறுடையநபில்த்தொழுகையின் விபரம்
,,	தாய்தகப்பன்மீது நபில்த்தொழுகிறதின் விபரம்
கசுஉ	தப்பிப்போனதொழுகையை நிறவேற்றுவதின்பாபு
கசுச	ஜும்ஆநாளின்அதபுகள் வரிசைகளுடைய பயான்
கசுஎ	ஜும்ஆத்தொழுகையின் பாபு ஜும்ஆவின் குக்குமுகள்
கஎய	இரண்டுபெருநாள்தொழுகையின் பாபு
கஎக	அத்தொழுகையின் ஒழுங்காவது
கஎஉ	சதக்காபித்றுவின்பயான்
கஎச	உளுகிய்யாவின் பயான்

பக்கம்.	
௧௭௬	ஜனாசாவுடைய ஹுக்குமுகளின் பாபு
௧௭௮	கபனுடைய விபரம்
,,	ஜனாசாத்தொழுகையின் சறுத்துகள்
௧௭௯	ஜனாசாத்தொழுகையின் றுக்குனுகள்
,,	ஜனாசாத்தொழுகையின் சுன்னத்துகள்
௧௮௧	கபுறின் விபரம்
௧௮௨	கபுறைச் சியாறத்துச்செய்வதின்பயான்
,,	கபுறைச்சியாறத்துச்செய்வதின் அதபுகள்
௧௮௩	ஜனாசாதொழுகை வகையறுக்களின் வரிசை
௧௮௫	ஒப்பாரிசொல்லி யழுகிறதின்பயான்
௧௮௬	சபூர்செய்கிறதின் பயான்
௧௮௭	முசிவிமானமனிதர்களை கசல்மினவுதலின் பயான்
௧௯௦	மவுத்தினுடைய பாபு
௧௯௬	ஸக்காத்தின் பிரசங்கம்
,,	ஸக்காத்துடைய மகிமையின்பயான்
௧௯௭	ஸக்காத்துக்கொடாதவர்களுடைய கெடுதியின்பாபு
௧௯௯	ஸக்காத்தின் குக்குமுகளின் பாபு
,,	இனி அதுபறுலாகிறதின் சறுத்தாவது
௨௦௦	நிசாபின்விபரம்
௨௦௧	ஆடுமாடு வகையறுக்களுடைய ஸக்காத்தின்பயான்
௨௦௨	ஸக்காத்தைவாங்கப் பாத்திரமானவர்களின் பயான்
௨௦௪	சுன்னத்தானசதக்காவின் பயான்
,,	ஸதக்காவின் தவாபு
௨௦௬	கையேந்திக்கேட்கிறதின் பயான்
௨௦௮	விருந்துடைய வரிசையின்பயான்
௨௧௦	நோன்பினுடைய பிரசங்கம்
௨௧௧	நோன்புடைய வகைகளின்விபரம்
௨௧௨	நோன்புடைய நிய்யத்தின் விபரம்
௨௧௩	முஸ்தகப்பான நோன்பின்நிய்யத்தாவது
௨௧௪	பிறையின் விபரம்
௨௧௬	நோன்பை முறிக்காத செய்கைகளின் விபரம்
,,	தெண்டமில்லாமல் நோன்பை முறிப்பதின்பயான்

பக்கம்.

௨௧௭ தெண்டகுற்றம்விதியாகுவதின் விபரம்
௨௧௮ நோன்பில்லாதிருந்தவர்கள் தின்னுமலிருப்பதின் விபரம்
௨௧௯ நோன்புடைய மக்குறூகுகளின் விபரம்
௨௨௰ நோன்புடைய முஸ்தகப்புகளின்விபரம்
௨௨௧ நோன்பாளிக்கு ஒஜீபனங்கொடுக்கிற தவாபு
௨௨௨ நோன்புடைய பதவியின் விபரம்
,, தங்கடத்தால் நோன்பைவிடுகிற விபரம்
௨௨௩ றமலாநோன்புடைய வரிசையின்பயான்
௨௨௪ லெயிலத்துல்க்கதிரவின் வரிசை
௨௨௭ இருக்திக்காபின் பயான்
௨௨௯ நோர்ச்சையின் பயான்
௨௩௨ ஹஜ்ஜின்பிரசங்கம் அதின்வரிசை.
௨௩௪ ஹஜ்ஜுடைய ஹுக்குமுகளின்பயான்
௨௩௫ ஹஜ்ஜுடைய வாஜிபுகளின் விபரம்
௨௩௭ ஹஜ்ஜுடைய சுன்னத்துகளின் விபரம்
௨௩௯ உம்றுவின் விபரம்
,, ஹஜ்ஜுல்அக்குபறின் விபரம்
௨௪௰ ஹஜ்ஜுனுடைய குற்றங்களின்பயான்
,, இகுறுமின் குற்றம்
௨௪௨ ஹறத்தின் குற்றம்
௨௪௩ குறுபாளியின் பயான்
௨௪௪ மக்கத்தின் வரிசை
௨௪௫ நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் றவுலாவை சியாறத்
துச்செய்வதின் பயான்
௨௪௯ அதின் அதபுகள்
௨௫௰ குறுஆன்வோதுவதின் பயான்
௨௫௧ சிலகுறத்துஆயத்து வசையறுக்களின் பாயிதா
௨௫௪ ஸலவாத்துடைய வரிசையின்பாபு

பக்கம்.

உசு௰ சங்கையாகிய மவுலூதுஷரீபின் பதவியின்பயான்

உசுரு பலதுஆக்களின் பயான்

உசுஎ கடன்நீங்கவோதுகிற துஆ

,, பறக்கத்துண்டாக வோதுகிற துஆ

,, கபுருளிகளுக்கு வோதுகிற துஆ

,, பாத்திஹா வகையறு வோதியபின் பக்சுசெய்கிற துஆ

உசுஅ மவுத்தானவர்கட்கு வோதுகிற துஆ

,, விருந்துபசியாறினவுடன் வோதுகிற துஆ

உசுகூ ஷகுபான்மாதம் பதினைந்தாமிரவையிற் செய்கிறவிபரம்

உஎ௰ நிக்காஹுடைய பிரசங்கம்

,, நிக்காகுடைய வரிசையின்பாபு

உஎஉ நிக்காகினுடைய வகைகளின் பயான்

,, நிக்காகின் குக்குமுகளின்பயான்

உஎ௪ நிக்காஹினுடைய றுக்குனுகளின் விபரம்

உஎரு நிக்காஹுடைய சுன்னத்து முஸ்தகப்புகளின் விபரம்

உஎஎ ஜமாகினுடைய அதபுகள் சுன்னத்துகளின் விபரம்

உஎகூ நிக்காஹுசெய்யுத ஹறுமானபெண்டுகளின் பயான்

உஅ௰ தலாக்கு வகையறுவின்பாபு

உஅசு பால்குடியின் பயான்

உஅஅ வலியுவுடைய பாபு

உகூஉ ஆணோடாணும் பெண்ணோடுபெண்ணும் ஹறும்செய்கிறபா

உகூரு கள்ளுடையபயான்

உகூசு கக்குகளின் பிரசங்கம்

,, தாய்தகப்பனுக்குப் பிள்ளைகள்செய்கிற கக்குமுகளின்விபரம்

உகூகூ பெண்சாதிநடக்கவேண்டிய கக்குகள்

௩00 புருஷன்நடத்தவேண்டிய ஹக்குகள்

௩0௪ பிள்ளைகளுக்குத் தகப்பன்செய்யவேண்டிய ஹக்குகள்

௩0சு குடல்வாசி ஜனங்களுக்கு செய்யவேண்டிய ஹக்குகள்

பக்கம்.

௩௦௭ அடுத்தவீட்டுக்காரர்களுக்கு செய்யவேண்டியஹக்குகளின் ப{யான்

௩௦௮ எத்தீம்களுக்குச் செயயவேண்டிய ஹக்குகள்

௩௧௦ இசுலாமுடைய ஹக்குகளின் பயான்

௩௧௫ வுஸ்தாதுக்குப் பிள்ளைகள்செய்கிற ஹக்கு

௩௧௬ அதபுகளின் பிரசங்கம்

,, தீன்குடிப்பின் பயான்

௩௧௭ குடிப்பின் அதபுகள்

௩௧௮ நித்திரையின் அதபுகள்

௩௧௯ கனவுடைய விபரம்

௩௨௦ உடுப்புவகையறுக்களின் விபரம்

௩௨௩ தலைமுடிவைக்கிறது யிறக்கிறதுகளின் பயான்

௩௨௫ சபர்போகிற அதபுகளின்பயான்

௩௨௭ வீடுகட்டுவதின் பயான்

௩௨௮ பறக்கத்துண்டாகிற வகைகளின் விபரம்

௩௨௯ மிடிமையை யுண்டாக்கிற வகைகளின்விபரம்

௩௩௦ ஹலாலாகிய வுயிர்ப்பிராணிகளை யறுக்கிறதின்பாபு

௩௩௪ அறுப்புகளின் சுன்னத்துகளுடைய பயான்

,, அறுப்புகளின் முஸ்தகப்புகள்

௩௩௫ அறுப்புகளின் மக்குறூகுகள்

,, அறுத்தவைகளில் தின்னஹறுமானவைகளின்விபரம்

௩௩௬ ஹறுமான வுயிர்ப்பிராணிகளின் பயான்

௩௩௭ தங்கடஞ்செய்கிற வுயிர்ப்பிராணிகளைக் கொல்வதின்பயான்

௩௩௮ தொழிற்செய்வதின் பிரசங்கம்

௩௪௧ வட்டியினுடைய பாபு

௩௪௨ வியாபாரத்துடைய வட்டியின்பயான்

௩௪௪ ஸலமென்னும் உடன்படிக்கையின்பயான்

௩௪௫ கைக்கடனுடைய வட்டியின்பயான்

௩௪௭ கடனை நிறைவேற்றுவதின்பயான்

௩௪௮ இல்லாதவனுக்கு கடனைமன்னிக்கிறதின் பயான்

பக்கம்.

௩௪௯ கூட்டுவியாபாரங்களின் பயான்
௩௫௰ கூலிவாடகையின் பயான்
௩௫௨ மேளதாளங்களின் பயான்
௩௫௩ அனியாயத்தின் பாபு
௩௫௪ கல்புனுடைய பாவங்களின் பாபு
௩௫௫ பெருமையின் விபரம்
௩௫௭ முகத்தாட்சிணையின் பயான்
௩௫௯ கோபத்துடைய பயான்
௩௬௰ ஹசதுடைய பயான்
௩௬௧ குறிகேட்கிறதின் பயான்
,, நாவால்வருகிற பாவங்களின் பாபு
௩௬௨ புறம்பேசுவதின் பயான்
௩௬௪ புறம்பேசுகிறது ஆகுமானதானங்கள்
௩௬௫ படர்சொல்லுகிறதின் பயான்
௩௬௬ கோட்சொல்லுவதின் பயான்
௩௬௮ பொய்சொல்லுவதின் பயான்
௩௬௯ பொய்ச்சாட்சியின் பயான்
௩௬௯ பொய்சொல்லுவது ஆகுந்தலம்
,, முசிலிமானவர்களை யேசுவதின்பயான்
௩௭௧ லகுனத்துச்செய்வதின் பயான்
,, பாவங்களைவிட்டுந் தௌபாச்செய்வதின் பாபு
௩௭௪ கலப்பறுதலான தௌபாவின்பயான்
௩௭௫ தௌபாவின் வரிசையின்பயான்
௩௭௭ அல்லாகுத்தஆலாவைப் பயப்படுகிறதின்பயான்
௩௭௯ அல்லாகுத்தஆலாவின் றகுமத்துடைய பயான்
௩௮௨ நற்புத்தியுபதேசப்பிரசங்கம்
௩௮௪ ஸாலிகானவர்களுடைய ஹிக்காயத்துப்பிரசங்கம்

அட்டவணை முற்றிற்று.

நேர்வழிவிளக்கந்

தீன்மணிமுழக்கத்தின்

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்.
௨	௬	கித்தாப்புகளில்	கித்தாபுகளிலும்
டிஷ	௰	தாற்ஜுமா	தர்ஜுமா
டிஷ	௨௪	புத்தகங்களை	புத்தகங்களையும்
௫	௭	பலலல்	பல்லலல்
௰	௨௧	சொன்னனிச்செய்தி	சொன்னாரிச்செய்தி
௨௫	௯	கமர்	கமர
௨௬	௰	தன்மைகொண்டு	தன்னைக்கொண்டு
௨௯	௨௫	யெங்கிறவர்கள்	லெங்கிறவர்கள்
௩௩	௨௨	மென்று	மென்றுஞ்
௩௫	௰	தாயிருப்பதா	தாவுமிருப்பதா
௩௭	௨௨	நல்லமற்மளை	நல்லமற்களை
௪௰	௰௬	ஒருவேளை	ஒருவரும்
௪௩	௰௨	சுஜூரு	சுஜூது
டிஷ	௰௮	அபுலியா	அவுலியா
௪௪	௰௨	மின்சா	மின்ச
௪௫	௪	ணிதிலிசுலா	தீனிலிசுலா
௫௮	௰௫	லீலாவென்ற	பிலாவென்ற
௬௰	௧	கல்லெபன்பவன்	கலலெபன்வன்
௬௨	௨௩	பிராமணத்தை	பிராணத்தை
௬௩	௰	பாலிகாகி	பாலிகாகவுமாகி
௬௪	௨௨	என்றுங்	என்னுங்
௬௮	௨௫	ளுக்கும்	ளுக்கு
௮௰	௨௨	பேசு	பேச
௯௰	௮	செய்து	செய்த
௧௱௪	௨௩	ரிருக்கிறதா	ரிருக்கிறதா
௧௱௭	௬	பெறுகிறதுமாயிருக்கும்	பெறுகிறதும் எந்தத்தங்கடத்திர்க்காகத்தயம்முஞ்செய்தானோ அந்தத் தங்கடம் நீங்குறதுமாயிருக்கும்
௧௱௮	௭	நஜீது	நஜீசு
௧௧௧	௨௧	சமஅத்து	சமாஅத்து
௧௨௰	௮	நிண்யமானல்	நிண்ணயமானல்
௧௨௨	௰௧	கடந்து	கடந்தது

பக்கம்.	வரி	பிழை.	திருத்தம்.
௧௨௫	௰௧	கய்யா	கய்ய
ஷடி	௨௪	கற்றத்தையினீ	கற்த்துஜனீ
௧௨௭	௯	முகப்பா	முகப்பபா
௧௩௮	௨௮	சேர்த்தி	சேர்த்து
௧௪௫	௧	செய்யும்	செய்யவும்
௧௪௭	௰௩	விட்டபோதும்	விடப்போதும்
௧௫௧	௨௩	தாழ்மையிருக்கிறது	தாழ்மையாயிருக்கிறது
௧௯௰	௫	பின்வரையிலாயிருக்கு [ம்	பின்னுயிருக்கும்
௧௯௧	௧	தறபீக்க	தவுபீக்க
௧௯௪	௪	மூடி	முடி
௧௯௯	௩	தொழுகிறதும்	தொழுகிறது
ஷடி	௨௮	ஆகிறலோகமென்றும் ஆகிறபருலென்றும்	ஆகிறலோகமென்று அல்லது ஆகிறபறுலென்று
௧௭௰	௨௩	அறிவில்லாம இரைந்து	அறிவில்லாமல் பாதையில் பிரைந்து
௧௭௧	௨௨	ஹத்தா	அத்தா
௧௭௫	௰௭	தகப்பல்கீர்	தகப்பல்கா
௧௮௰	௫	வப்பதகு	வப்பகு
௨௰௩	௯	(கொடுக்கலாம்)	கொடுக்கலாம் இன்னும்வேலேருசீமானுடைய யேழையாகிய புலூக்கான பெரியபிள்ளைகளுக்கு ஸக்காத்தையும்ஸதக்காவையும் கொடுக்கலாம்
ஷடி	௰௨	மூக்காதப்பு	மூகாத்தப்பு
ஷடி	௰௩	கூடாது	கூடாது (ஆனால்) இவர்களில் தன்னடிமை பெண்சாதி மிஸ்க்கீனுகிய தாய்தகப்பன் பாட்டன்பாட்டி பிள்ளை பிள்ளையுடைய பிள்ளை முதலானவர்கட்கு அன்னவஸ்திரம் கொடுக்கிறது வாஜிபு
௨௨௰	௨௯	அமது	சம்த்து
௨௩௩	௰	சலலத்து	சல்லத்த
௨௩௫	௰௪	கிறது	கிறதும்
௨௪௧	௩	சறுத்து	சத்று

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
௨௱௨	௧	சகீபு	சறீபு
௨௫௪	௰௪	கிறம்	கிறல்
௨௫௫	௰௩	கனா	கன்
௸	௨௬	ஞாபகத்தானே	ஞாபகதப்பானே
௨௬௧	௰௫	பிஸ்ஸான்	பிஸ்ஸான்று
௨௬௭	௩	ஓலகஸல்	ஒல்கஸல்
௸	௪	நாஹூ துபிக்க	நஹூ துபிக்க
௸	௨௩	மாகநஹூ	மாகநல்ஹூ
௨௬௯	௰௧	தேன்னையாகிறதை	தேன்னையறுகிறதை
௸	௨௪	பிஹி வஅகுலமு	பிஹி அகுலமு
௨௭௩	௰௮	பறுலுக்காரர்	பறுலுக்காரரில் தாய்பாட்டி
௸	௰௯	னவர்கள் இருந்து	னவர்களிலொருவரிருந்து
௨௭௬	௰௨	ஹிலல்த்து	ஹிலல்த்து
௨௭௮	௨௫	இராசாமத்தில்	இராச்சாமத்தில்
௨௯௨	௰	இதர்க்குபகாரமாக	இதர்க்குப்பகாரமாக
௩௧௯	௨௫	என்னும்	என்றும்
௩௪௰	௪	தருவாயாவென்று	தருவாயா வாங்கிக் கொண்டேனென்று
௩௬௨	௭	கொள்வேனென்று	கொள்வேனென்றும்
௸	௰	சலாமத்தும்	சலாமத்துப்
௩௮௫	௭	றாக்கு	றாகரு
௩௮௮	௨௩	சலிகின்	சாலிகீன்
௸	௨௬	அவர்கள் பேசிவருகிறதாவது	அவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டிருக்கிறதாவது
௩௯௩	௨௭	நவுனகுல்மசாலிஸ்	றவுனகுல்மசாலிஸ்
௩௯௪	௬	இராஜாளியை	நாரையை
௩௯௬	௨௮	வேவொரு	வேறொரு
௪00	௪	மஸாயிலுத்தின்	மஸாயிலித்தின்
		றக்குவிஹில்	றஸூலிஹில்
௸	௰	ஒவும்மத்தி	ஒவும்மத்திகி

இக் கித்தாபை பார்வைசெய்கிற சங்கைவான்கள் இந்தப் பிழைதிருத்தலின்படி திருத்திக்கொள்கிறதுந்தவிர க௱௭ - வது, பக்கம், ௬ - வதுவரி, க௱௰ - வது பக்கம், ௫ - வதுவரி, க௱௯ வது பக்கம், ௨௮ - வதுவரி, க௭௰ - வது பக்கம், ௨௩ - வது வரி, ௨௱௩ - வதுபக்கம், ௯ - வதுவரி, ஷை பக்கம் ௰௩ - வது வரி, ௨௭௩ - வது பக்கம், ௰௮ - வதுவரி, ஷை பக்கம், க௯ - வது வரி, ௩௪௰ - வது பக்கம், ௪ - வதுவரி, இத்தலங்களில் அவசியம் மேற்சொன்ன பிழைதிருத்தத்திற் கண்டபடி திருத்திக்கொள்ளவேண்டுமென்று மிகவும் விரும்புகிறேன் .

பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீம்.

இ ஃ து

முகவுரை.

மகா வலுப்பத்தையும் மேன்மையும் பொருந்தி விளங்காநின்ற பரிபூரணப் பொருளாகிய அல்லாகுத்த ஆலாவின் ஹிதாயத்தையும் யெல்லாப் படைப்புகளிலும் சிறப்பைத்தங்கிய ஹலறத்து முகம்மது நபி சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் சபாஅத்தையும் ஆதரவு வைத்து நற்கதை சேர்வதை விரும்பி நல்லறிவைத் தேடும்படியாகிய மூமீன் முசிலீமென்னும் யெமது யிகுவான்களான தீன்தாராகிய யெம தன்புற்ற பிறவி நேசர்களான ஜனங்கள் யாவருக்குந் திருநெல்வேலிப் பேட்டையி லிருக்கும் யேழையான பாவியடியானாகிய (செய்கப்துல்க்காதிரிபுனு செய்கு மநாற்அபாஅன்குமல் கொப்பா றென்பவன்) தெரிவிப்பது யாதெனில் இக்கருனாட்டகமென்னுந் தமிழ் தேசத்தில் வசிக்கின்ற ஜனங்களி லநேகர் அறபி - பாரிசு - ஹிந்திக் - கித்தாபுகளிற் புதைந்து கிடக்குகின்ற மார்க்கவிதிகளையறிந்து விளங்கி அமற் செய்யயேலாத்ததைப்பற்றி சில ஜனங்க ளென்னிடம் வந்து மனிதர்கள் நல்ல அமல்களைச்செய்து நேர்வழி பெற்று சொற்கபத்விசேரவுதாரணங் கொடுக்கும்படியான (குறாஆன்) ஆயத்துகளிற் சிலபொருட்களையும் சில (கதீதின்) மகனுக்களையும் நல்லோர்களின் சில நடத்தைகளையும் அகத்தியமான சில பிக்குகுடைய குக்குமுகளையுஞ் சாலிகானவர்களுடைய சில ஹிக்காயத்துகளையும் பொதிந்ததாக ஒரு கித்தாப்பு தமிழ்வாக்கியமாக தமிழி லெழுதும்படி சிறிதுகாலங் கோரிக்கை செய்ததினால் ஹிஜறத்து (௲௩௱௩) வருடம் சகுபான்மாதம் அல்லாகுத்தா ஆலாவின் கிருபையா லாரம்பஞ்செய்து தபுசீர் றாகுல்பயான் தபுசீர் மஆலிமுத்தன்சில் றத்தூல்முகுத்தாறு பத்தாவா ஆலம்

கிறி - சறகுஜ்ஜனி - தன்பிகுல்காபிலின் - துற்றத்துன் ஞசிகீன் - துரு
றுல்ஆபிதீன் - முறுசிதுத்துல்லாபு - இறுசாதுல் யிபாது - றவுலு
றயாஹீன் - சிறுஹறத்துல்யிசுலாம் - சறகுபிக்குகுல் அக்குபறு - சற
குல் அக்காயிதுன்னசபீ - நுசுகத்துல் மஜாலிசி - றவனக்குல் மஜாலிசி
இவைகளிலும் இவைகள்போலொத்த இன்ன மநேக மறபு கித்தாபுக
ளில் நேர்வழியைவிளக்கித் தீன்மணியை முழக்குகின்ற இரத்தினச்ச
டர்போன்ற நுட்பமான கதீதுகள் - மசலாக்கள் - நல்லோர்களின்
சரித்திரங்கள் - ஹிக்காயத்துகள் - பிக்குகினுடைய குக்குமுகள் - ஆ
கிய அவைகளைத் தெரிந்தெடுத்துச் சேகரஞ்செய்து நம்முடைய யிகு
வான்கள் வேண்டிக்கொண்ட பிரகாரம் தமிழ் வாக்கியத்தால் தார்ஜு
மாச்செய்து (நேர்வழிவிளக்கந் தீன்மணிமுழக்க) மென்று
பெயர் கூறலாயிற்று.

இக்கித்தாப்பின் பொருட்டால் நம்ம ளியாவருக்கும் அல்லாகுத் தாஆலா யிருபதியிலும் கிறுபை றகுமத்தும் பிரயோசனமுந் தருவா ளுக ஆமீன் ஒலாகவுல ஒலாக்குவ்வத்த யில்லாபில்லாகில் அலியில் அலீம் ஒகுவஹுசுபீ ஒ நிகுமல்வக்கீல்.

(இனி) மேன்மையுஞ்-சிறப்பும் - வரிசையுந்தங்கிய தீனுடைய கனவான்களான வுலமாக்களிடத்தில் இந்த மிஸ்கினுகிய நான் கேட்டுக்கொள்கிறதாவது - அல்லாகுத்தஆலா மனிதர்களை மறதிக்குங் கத்தாவுக்கு மிடையிலாகப் படைத்திருப்பதால் இக்கித்தாபில்யேதாவது குற்றங் குறை வெளியானல் நன்றுய் ஆறாய்வுசெய்து திருத்தும்படி கோருகிறேன், இன்னும் யிக்கித்தாபை பார்வை செய்யும்படியான புண்ணியவான்களாகிய ஜனங்கள் இதையு மிதுபோலொத்தபுத்தகங்களை தமிழ்ப்புத்தகந்தானே யென்று இலேசாக யெண்ணிப் பேணுதற் குறைவு செய்யாமலுங் கீழேபோடாமலு மிருக்கவேண்டியது அப்படிப் பேணுதற் குறைவுசெய்தாற் குற்ற வாளியாவார்கள் இப்படிவராமல் அல்லாகுத்தாஆலா நம்ம ளியாவரையுங் காப்பாளுகவும் இந்தக் கித்தாப்பையு மிதுபோலொத்த மார்க்கத்தைச்சார்ந்த கித்தாப்புகளை

யும் சங்கையாகப்பேணினால் மேன்மைபெறுவார்கள், யேனென்றால் அல்லா றசூலுடைய திருநாமங்களையும் - குறுஆன் ஆயத்துகளையும் - கதீதுகளையும் - பொதிந்த வஸ்துக்களையுஞ் சங்கைசெய்யவேண்டியது வாஜிபாக விருக்கும்.

ஹிக்காயத்து.

றவுனக்குல் மஜாலிசு யென்னுங் கித்தாபில் வருகிறதாவது பிசுறுல் ஹாபீ யென்று ஓர்மனித னொரு வூரிலிருந்தார், அவர் ஆரம்பத்தில் சில வூர்களிற்போய்க் களவு செய்கிறது வளமை களவு கிடையாவிடில் தனக்காகக் குறுஆனை ஓதத்தெரிந்த ஒருமனிதனை இரவுகாலங்களிற் கூடக்கொண்டுபோய் ஓர் தெருவில்வைத்து இராகமாகக் குறுஆனையோதச் சொல்லுவார் அந்த இராகங் கேட்டவுடன் வூர்ச்சனங்களியாவரும் வீட்டைவிட்டு வெளியில்வந்து கூடுவார்கள் அப்பால் இவர் வீடுகளுக் குட்புகுந்து துணி, நகை, பொருள் வகையறுக்களைக் களவுசெய்துக்கொண்டுபோய் விடுகிறவளமையாக விருந்தது.

அப்படியிருக்க ஒருநாள் ஒரு வூரிலிருந்து வரும்போது வழிமேல் ஒருகாகிதத்தில் (பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீம்) யென்றெழுதப்பட்டு கீழேகிடக்கிறதைக் கண்டு யெடுத்து மண்ணுகளைத் துடைத்து முத்தமிட்டுக் கண்ணில்வைத்து பத்திரமாய்ப் பெட்டகத்துக்குள் வைத்திருந்தார், அன்றிரவில் ஒரு ஆபிது நித்திரை செய்யும்போது ஓய் இன்னாரே பிசுறுல்ஹாபீ யென்கிற மனிதனிடத்திற்போய் நம்முடைய பெயரை யெடுத்துச் சங்கைசெய்தாய் யுன் பெயரைப் பாவிகளுடைய கூட்டத்தைவிட்டு நீக்கி நல்லோர்களுடைய கூட்டத்திற் சேர்த்தேன் நீ - தௌபாச்செய்து மீண்டுக் கொள்ளென்று சொல்லுமென்கிறதாகக் கனவிற் கண்டு அந்த ஆபிது கண்விழித்து யிப்படிக் கொத்த வுத்திரவு அந்த மனிதனுக்கு லாயக்கில்லையே இதென்ன மாருட்டமா யிருக்கிறதென் றெண்ணி மறுபடியும் நித்திரை செய்ததில் முன்போற் கனவுகண்டு எழும்பி மறுபடியும் நித்திரைசெய்து கினவு கண்டு மூன்றாவது விடுத்தமெழுந்திருந்து பிசுறுல்ஹாபீ யென்கிற மனிதன் வீட்டுவாயலில்வந்து பார்க்க அவர் வீட்டுக்குள் வீணைச்சத்தமுந் தவுல்ச்சத்தமும் விளையாட்டுமாக யிருந்தது கதவைத்தட்ட ஒரு

வெள்ளாட்டி வந்தாள் அவளிட மிவ்வீடு அடிமையின் வீடா நாட்டா மகன் வீடாவென்று கேட்க இது நாட்டா மகனுடைய வீடென்று சொன்னாள் நாட்டாமக்களின் வீடு மிப்படித்தானு யிருக்குமென்று ஆபிதுகேட்க, அவள்போய்த் தன்னிசமானிடத்தி லிச்செய்திகளைச் சொல்ல பிசுறென்கிற மனிதன் ஓடிவந்து செய்கே வெள்ளாட்டி பிசகுசொன்னளென்கிலும் அல்லாவுடைய அடியார்களில் மிகவும் பாவியான அடியான் வீடாகயிருக்குமென்று சொன்னார் அப்போது ஆபிது தாங்கள் கனவிற்கண்ட சங்கதியைச்சொல்ல உடனே தௌபாச் செய்து மீண்டு ஆபிதுடன் கூடப்போக நாடும்போது தலைவிரி கோலமாக யிருந்ததைப் பற்றியுங் காலில் மிதியடியு மில்லா திருந்ததைப்பற்றியும், வெள்ளாட்டி அவனைப்பார்த்துக் கொஞ்சம் நில்லுங்கள் மிதியடியுந் தலைக்கெட்டு மெடுத்துக்கொண்டு வருகிறேனென்று சொல்ல அவைகள் தேள்வையில்லை யிப்படித்தான் யென்னை யழைக்கப்பட்ட தென்று சொல்லிவிட்டார்கள் அப்பாலிவர்கள் வலுப்பமாகிய ஒலிமார்கள் கூட்டத்திற் சேர்ந்து ஒலியாகி மேன்மையுஞ் சிறப்பும்பெற்று சொற்க பதவியடைந்தார்கள்.

ஆதலால் முஸ்லீமாகிய வுடற்பிறப்புகளே இவர்கள் ஆண்டவனுடைய திருநாமத்திற்கு செய்த ஒரு அதபுடைய காரணத்தா லிவ்வளவு மேன்மைபெற்று அவுலியாக்களுடைய கூட்டத்திற்சேர்ந்து இருபதியிலுஞ் சங்கைபெற்றார்கள், இப்படிக்கொத்த தறஜாக்களை விரும்பி யதபைப்பேணி நடக்கவேண்டியது முக்கியமாக யிருக்கின்றது.

நம்மனைவோரையும் அல்லாகுத்த ஆலா குறுஆனுடைய பறக்கத்தாலும், அவன் திருநாமங்களின் பறக்கத்தாலும் நபிசல்லல்லாகு அலைகி வசல்லமவர்களின் பறக்கத்தாலும், ஒலிமார்களின் பறக்கத்தாலும், அதபுசெய்த கூட்டத்திற் சேர்த்துத் தீனில் லிசுலாமில் தரிபடுத்தி நபிசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்கு அசல் பாகமாக பிருதவு சென்னுஞ் சொற்க்பதி சேர்ப்பானாக ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

முகவுரை—முற்றிற்று.

பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீம்.

இஃது

நேர்வழிவிளக்கந்

தீன்மணிமுழக்கம்.

அல்லாகுத்த ஆலாவின்றுதி

(அறபுவாக்கியம்.)

அல்கம்துலில்லாஹில்லதீபல்லல்அனம

பிவுஹூமித்தீன்ஒவ்வலலாத்துஒவ்வலலாமுஅலா

செய்யிதில்ஹாதீன்முகம்மதின்

வஅலாஆலிகிஒவஸகுபிகிஅஜ்மயீன்.

தமிழ்வாக்கியம்.

எல்லாப் புகழும் புகழ்ச்சியும் ஆலத்தார்களைப் படைத் தாளும் படியான சர்வவல்லமையுள்ள கடவுளான அகது-சமது - பறுது - வித்துறு - கொப்பாறு - சத்தாறு - கரீம் - றகீம் - மாலிக்குல்முல்க்காகிய அல்லா சுபுகானகு ஒத்தா ஆலாவுக்காயிருக்கும் அவன் யெப்போர்க்கொத்த வலுப்பமுடைய ஆண்டவனேயானால் அவன் மனிதர்களை மார்க்க விதிகளாகிய குக்குமுகளை அறியும்படியானயில்முகளைக்கொண்டு மற்ற கல்குகளைக்காண மேன்மையாக்கிவைத்து ஹலா லின்னது, கருமின்னது, சக்கின்னது, பாத்திலின்னது, நீதமின்னது. அநீத மின்னதுயென்றறிவித்து நம்மனையாவருக்கு நேர்வழிகாட்டி பாதுகாத்து றிஸ்க்குக் கொடுத்துத் தங்கடங்களைவிட்டு மிரவிலும், பகலிலும், இரட்சிக்கிறானே அப்போர்க்கொத்த ஆண்டவன்.

{ றசூல்சல்லல்லாகு அலைகிவ்சல்லமவர்களின் புகழ்ச்சி. }

துவக்கமு முடிவும் ஆதியு மந்தமுமில்லாது பரிபூரணப் பொருளாய் விளங்கும் அல்லாகுத்தா ஆலாவின் முறுசலீன்களான நேர்வழிகாட்டும்படியாகிய நபிமார்கள் யாவருக்கும் நாயகமாக மகா சிறப்பு மேன்மையும் பொருந்தின காரணக்குருவாய் மகா தவப்பொருளாய் பேரின்பக்கடலாய் விளங்கும் முஸ்தபா - முஜுதபா - முறுத்தலா - தாசீன - தாஹா , காமீமாகிய முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள்மீதுஞ் சங்கையாகிய அவர்களின் கிளை கோத்திரத்தார் மீதுஞ் சிறப்பாகிய அவர்களின் அசுகாபிகள்மீதுந் சலவாத்துஞ் சலாமு முண்டாவதாகவும் ஒல்கம்துலில்லாகி றப்பில் ஆலமீன்-ஆமீன்- யா அற்கமற்றுகிமீன்.

புகழ்ச்சிகள்—முற்றிற்று.

(தீனிலிசுலாமின் மகிமைப் பிரசங்கம்)

தீனின்பொருளாவது அல்லாகுத்தாஆலா யேற்படுத்திய பாதையின்பெயர் இன்னும் தீனென்பது யீமானையும் யிசுலாமையுஞ் சறுயிகுயென்னும் மார்க்கவிதிகளாகிய யேவல், விலகல், அடங்கலையும் பொருந்த கட்டளையாயிருக்கும்.

எவ்வுலகங்களையு முயிர்களையும் படைத்து றிஸ்கு கொடுத்து இரவிலும் பகலிலும் பாதுகாத்து யிரட்சிக்கும்படியாகிய நமதிறைவனை அல்லாசுபுகானகு ஒத்நாஆலா தன்னுடையஹபீபாகிய தாகாஹாமீம் ஷமஸம்மில் முதத்திறுகிய மணிமுத்து மகுமூதென்னும் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவ்சல்ல மவர்கள்மீதி லிறக்கப்பட்ட புறுக்கானுல் மஜீது குறுஆனுல் கமீது யென்னுஞ் சங்கையாகியவேதத்தில் மூன்றுவது ஜுஉ-பத்தாவது றுக்கூகில்த் திருவுளம் பற்றினதாவது யாதெனில் அல்லாசுபுகானகு ஒத்நா ஆலாயிடத்திற் பொருத்தமாக்கப்பட்ட

தீனுகிறது மெய்யாக யிசுலாமார்க்கமாயிருக்கும் (யெகுனி) அல்லாகு சுபுகானகு ஒத்தா ஆலாவுக்குப் பொருத்தமாக்கப்பட்ட மார்க்கமாவது தௌகீதையுஞ் சிறப்பாகிய சறகையும் பொருந்திய யிசுலாமென்னு மார்க்கத்தைத்தவிர வேறொன்றுமில்லை நபி ஆதமலைகிஸ்ஸலாமவர்களின் காலமுதல் நமது நாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகி ஒசல்லமவர்களின் காலம்வரை அந்த யிசுலாமென்னு மார்க்கந்தான் மெய்யானமார்க்கமாயிருக்கும் மற்ற மார்க்க மடங்களும் பாத்திலென்னுந் தன்ளுபடியாயிருக்கும்.

எல்லா நபிமார்களு மவர்களி னும்மத்துகளு மிந்த யிசுலாமென்னு மார்க்கத்துடைய வுள்ளாரங்கமான தௌகீதில்த்தா னிருந்தார்கள் ஆதலால் தௌகீது யெல்லா நபிமார்களுக்கு மொன்றே யொழிய வேறில்லை.

சூறத்தென்னும் வெளிகோலத்தில் யேவல் விலகல்களாகிய ஷறகுகளில் ஒருவஸ்துவு ஒருநபிக்கு கலாலென்றும், ஒருநபிக்குகறுமென்றும், விதர்ப்பமாயிருக்கும் அதுகொண்டு அசலாகிய தௌகீதுக்குப் பேதகமாகமாட்டாது,

(இன்னும்) அல்லாசுபுகானகு ஒத்தாஆலா ஒன்றுவது ஜுசுவு பதினொன்றுவது றுக்கூகில்த் திருவுளம் பற்றினதாவது யாக்கூபு அலைகிஸ்ஸலாமவர்கள் மிசுறெங்குகிற பட்டணத்தில் ஜனங்கள் புத்துகானென்னும் விக்கிரகங்களை வணங்குகிறதைக்கண்டு தாங்கள் சக்கறுத்திலிருக்கும்போது மக்களை நோக்கி ஆய்-மக்களே அல்லாகு சுபுகானகு ஒத்தா ஆலா தெளிவாளிய தினிஸிசுலாமென்கிற மார்க்கத்தை யுங்களுக்குத்தந்தான் நீங்க ளந்தமார்க்கத்துக்குத் தலைசாய்க்காமலும் தௌகீதைக் கலப்பறுதலாக்காமலும் மவுத்தாக வேண்டாமென் றுரைசியத்துச்செய்தார்கள் இச்செய்திகள் (தப்சீர் றூகுல்பயானில்) வருகின்றது.

ஹதீது.

இன்னம் மேற்சொன்ன கித்தாப்பில் வருகிறதாவது, நபிகள்சிகாமணியாகிய முகம்மது நபிசல்லல்லாகு அலைகி ஒசல்ல மவர்களுக்குத்

தீனைப் பிரசங்கஞ்செய்யும்படி ஆண்டவன்கட்டளையிட்டபோது தங்கள் பந்துஜனங்களையழைத்து ஆய் யென் பந்து ஜனங்களாகிய முற்றத்தின் கூட்டங்களே, பனிஹாசிங்களே, பனிமுத்தலிபுக்களே, யென் கல்புக் கனியாகிய பாத்திமாவே நீங்க ளியாவருந் தீனிலிசுலாமிலாகாவிட்டால் வுங்களுக்குவந்து நேரிடப்பட்ட கஸ்டம் அதாபு இவைகளைத் தட்டிவிலக்க யென்னல் முடியாதாகையால் நீங்க ளெல்லோருந் தீனி லிசுலாமிற்சேர்ந்து வுங்கள் சடலங்களை நரகத்தைவிட்டுங் காப்பாத்திக்கொள்ளுங்களென்று திருவுளம் பற்றினார்கள்.

இன்னம் யாருகிலு மொருமனிதன் குறைசிவம்மிசமாகயிருந்தாலும், தீனிற்சேராவிட்டால் நரகவாதியாகிவிடுவான். ஹபசிப்புளுக்கையாக யிருந்தாலும் தீனிற்சேர்ந்தால் சுவற்கவாதி யாவானென்று நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளம் பற்றினார்கள்.

ஹிக்காயத்து.

இமாம் முகம்மதிபுனு யிதிரீசு - சாபியீ றகிமகுல்லா அவர்கள் பேசிவருகிறதாவது யாதெனில், நான் மக்காவி லிருக்கும்போது நசாருக்களில் னின்றும் அசுபக்கென்றொரு மனிதனைக் கருபாவில் தவாபு செய்யக்கண்டு வுன்னுடைய பிதாக்களின் மார்க்கத்தைவிட்டுநீங்கி யெங்கள் மார்க்கத்தி லாகவேண்டிய காரண மென்னவென்று கேட்டதற்கு அம்மனிதன் சொன்னதாவது, யென் பிதாக்களின் மார்க்கத்தைக் காண இம் மார்க்கத்தை மேன்மையாகக் கண்டேன் அதேதெனில், நானு மின்னுஞ்சிலருமாகக் கப்பலில்சபர்போகிறகாலத்திற் கப்பலுடைந்துவிட்டது அதினின்று மெனக்கொரு பலகை கிடைத்தது அதிலேறிக்கொண்டே னப்பலகையை அலைகள் கடலின் தீவுகளினின்று மொருதீவிற் சேர்த்துவிட்டது, அப்போதந்தப் பலகையைவிட்டுக் கீழிறங்கி யந்த தீவினுட்புகுந்து சுற்றிப்பார்க்கும்போது தேனினின்று மதுரமாகவும், வெண்ணையினின்று மிருதுவாகவு முள்ள கனிகளையுடைய அநேக மரங்களையும், தெங்கிராநீரினுந் தெளிவாகிய தண்ணீரையுடைய

ஆறுகளையும், சுனைகளையும் பார்த்து ஆண்டவனைப்புகழ்ந்து அக்கனிக ளைப்புசித்து அந்நீரையு மருந்தி நமது ஊருக்குப் பிரயாணப்படுகிற யேதுகரம் வருகிறமட்டிலு மிதிலிருந்து காலங்கழிக்கலாமென் றெண் ணி யதிற்றரித்தே னப்படியிருக்கச் சூரியனஸ்தமித்து யிரவுவந்தவுடன் காட்டின் ஜவாமிருகங்களின் தீங்கைப் பயந்து வோர்மரத்தின்மே லே றியுட்கார்ந்து கொஞ்சந் தூங்கினேன் நடு யிரவானவுடனே ஓர் மிருக த்தைத் தண்ணீரில் (லாயிலாக யில்லல்லாகுல் கொப்பார் முகம்மதுற் றசூலுல்லாகின் னபியுல்முகுத்தார்) இதன்பொருள் பிழைபொறுக்கு ம்படியான அல்லாகு சுபுகானகு ஒத்தா ஆலாவைத்தவிர வேறே நாய னில்லை முகம்மது நபிசல்லல்லாகு அலைகிஸசல்லமவர்கள் அல்லாகுத்த ஆலாவின் தெரிவுதலாக்கப்பட்ட நபியாகிய திருத்தூதாங்கராக யிருக் கும் யிக்கலிமாவை நாகரீகமான பாசையாற் சொல்லித் தஸபீகு செய் ததாக வரக்கண்டே னம் மிருகங் கரைவந்து சேர்ந்தவுடனே அதைப் பார்த்தேன் அதின் தலை தீமுழுங்கிப் பட்சியின் தலையைப் போலவும், அதின் முகம் மனிதனின் முகத்தைப்போலவும்; அதின் காலுகள் ஒட் டகையின் காலுகளைப்போலவும், அதின் வால் மீன்வாலைப்போலவு மி ருக்கக் கண்டேன்.

அந்த வுடனே நம்மை இம்மிருகம் யேதாவது தீங்கு செய்யுமெ ன்று பயந்து மரத்தைவிட்டுக் கீழிறங்கி வெருண்டோடினே னப்போ து அம்மிருகம் யென்னைப் பார்த்து நில்லு நில்லாவிட்டால் ஹலாக்கா வாயென்றது, அப்பவே நின்றே நிற்கவும் வுன்மார்க்கமென்னவென்று கேட்டது, யென்மார்க்கம் நசாறுவின்மார்க்கமென்று சொன்னேன் அ ப்போது ஓய் நஷ்டவாளனே வுனக்கென்னகேடு ஹக்கைச்சேர்ந்த மார் க்கத்தனவிற் சேர்ந்துகொள் யேனெனில் நீ-மூமீனாகிய ஜின்கள் குடியி ருக்குந் தானத்தில் வந்திறங்கி யிருக்கிறுயென்றது அப்போது அந்தயி சுலாமார்க்க மெப்படியென்றுகேட்டேன்.

அப்போது அம்மிருகமானது யென்னைப்பார்த்து அல்லாகுசுபு கானகு ஒத்தஆலா ஒருநாயன் மெய்யானவன் அவனுக்குச் சரியானவ

ஞெருவருமில்லை முகம்மதுநபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அல்லாகு சுபுகானகு ஒத்தா ஆலாவின் படைப்புகளில் அதிகமேன்மையுஞ்சிறப்பும்பெற்ற திருத்தூதரா யிருக்குமென்று மவர்கள் கொடுவந்த மார்க்க மெய்யென்றுநிண்ணயங்கொண்டு(அஷ்ஹது அன்லாயிலாக யில்லல்லாகு வஅஷகது அன்னமுகம்மதுற்ற சூலுல்லாகி) யென்கிற கலிமாவைச் சொல்லுமென்ற சொன்னது, அக் கலிமாவைச் சொல்லி யுடனே நா னிசுலாமார்க்கத்தி லாயினேன் அப்பொழுது நீரிந்தத்தலத் திலிருக்கப் பிரியமிருக்கிறதா வும்முடைய வூருக்குப்போகப் பிரிய மிருக்கிறதா யென்றது, அப்போது நான் என்னூருக்குப்போகப் பிரிய முடையவனு யிருக்கிறே னென்றேன்.

அதர்க்கு அம்மிருகமானது, ஓர் கப்பல்வருமளவு மித்தலத்திலிருமென்று சொல்லிக் கடலிலிறங்கிக் கொஞ்சந் தூரத்திற்போய் யென் கண்ணுக்குத் தெரியும்படி நின்றது, அதன்பின் ஞெருகப்பலை வரக்கண்டு ஓர் மேட்டிலேறி வெள்ளை வீசினேன் அதை யந்தக் கப்பற்காரன்கண்டு யென்சமீபம்வந்து யென்னையு மக்கப்பலினுட் டேக்கி வைத்துக்கொண்டு யென் வரலாறுகளைக் கேட்டார்கள் நான் துவக்கமுதற் கடாசிவரை நடந்த வர்த்தமானங்களைச் சொன்னேன் அப்பவே யக்கப்பலிலிருந்த நசாறுக்களென்னுங் கிறீஸ்துவ ரடங்கலு மிதைக்கேட்டுத் தற்சணமே இசுலாத்தி லாயினுர்க ளிவ்விதமான காரணத்தாற் றீனிலிசுலாம் நல்லதென்று நானு மிம்மார்க்கத்தி லாயினேனென்று சொன்னு னிச்செய்தி யிறுசாதுல் யிபாதென்கிற கித்தாப்பில் வருகின்றன.

ஹிக்காயத்து.

இமாம் அப்துல்லாகில் யாபியீ றகிமகுல்லா அவர்கள் தங்களின் றவுலுற்றயாஹீ னென்னுங் கித்தாப்பிற் பேசிவருகிறதாவது, முற்காலத்தி லொருராஜன் நான்தான்நாயனென்று சொல்லி வன்பு செய்தான் அவனை முசிலிமாகிய ஜனங்களடங்கலுஞ் சேர்ந்து அவனை யுத்தஞ்செய்து கைப்பிடியாகப்பிடித்து இவனை யெவ்விதங் கொல்வோமென்று ஆலோசித்ததில் எல்லாரு மவனையொரு கிடாரத்தில்லாக்கி யடுப்பில்

வைத்து நெருப்பை யெரித்தா லவனுக்கு வருத்தந்தெரியு மின்ன மிவ னைப்போலொத்த வன்பர்களுக்கும் புத்திவருமென்று தீர்மானித்து யிப்பிரகாரஞ் செய்ததில் அவ னிதர்க்குமுன் வணங்கிய புத்துக்க ளொன்றொன்றையு மின்னுனே யின்னுனேயென்று கூவிக்கூவி வுங்களைவணங்கினதர்க்காக வென்னை யிக்கஷ்டத்தைவிட்டு மிரட்சித்துக்காப்பாத்தவேண்டுமென்று பலவிடுத்தஞ் சொல்லிச்சொல்லி யழுது சப்தமிட்டுப்பார்த்ததில், ஒன்றும் பிரயோசனஞ் செய்யவில்லை யப்பாற்றனக்கு வேதனை யதிகமானவுடனே மனமுருகி வானத்தை நோக்கி லாயிலாக யில்லல்லா வென்னுங் கலிமாவைச்சொல்லி யிசுலாமாகி வானலோகங்களையும், பூலோகங்களையும்படைத்து அதிலுள்ளயாவற்றையும்காக்கும்படியாகிய ஆண்டவனே நான்படுகிற யிக்கஷ்டத்தை நீக்கி யிரட்சிப்பாயாகவென்று சொன்னவுடனே ஆகாயத்தி னின்றும் மழை பொழிந்து நெருப்பை நாற்று ஒருகாற்றுவந்து அக் கிடாரத்தை யாகாயத்திலுயர்த்தி வானத்திர்க்கும் பூமிக்கு மிடையிற் சுற்றிக்கொண் டிருக்கச்சே அவ் வரசன் கிடாரத்திர்க்குள் ளிருந்துக்கொண்டு ஒருமூச்சாவது பாக்கியில்லாமல் அக்கலிமாவையே சொல்லிக்கொண் டிருந்ததின் பின் அக் கிடாரத்தை ஆண்டவனை வணங்காமலுந் தீனி லிசுலாமை ஒப்புக் கொள்ளாமலு மிருந்த ஜனங்கள் குடிகொண்ட ஒருநாளவில் லெறிந்து விட்டது.

அப்பா லவ்வூரையுடைய ஜனங்க ளியாவரும்வந்து யிவனை யக் கிடாரத்தைவிட்டும் வெளியாக்கி ஆச்சரியமடைந்து வுன்னளவி னடந்தசெய்தி யென்னவென்று விசாரிக்க அவ்வரையன் தன்னளவி னடந்த செய்தி முழுமையுஞ் சொல்லக்கேட்ட அச்சனங்க ளியாவருந் தீனிலிசுலாமார்க்கத்திலாகி யீமான் கொண்டார்கள்.

ஹிக்காயத்து.

தல்வீயத்துல் அவது யென்னுங் கித்தாபிற் பேசிவருகிறதாவது மாலிக்கிபுனு தீனுர் றகிமகுல்லா அவர்களுடையகாலத்தில் நெருப்பை வணங்கிற மஜூசிக்காபிர்களி லிரண்டுபேர் தமையன் றம்பி யிருந்தார்

கள் அவ்விரண்டுபேரி லொருவன் நெருப்பை யெழுபது வருடக்காலம் வணங்கினான் மற்றொருவன் முப்பத்தைந்து வருடக்காலம் வணங்கினான் அப்பா லிளையவன் தமையனைப்பார்த்து நாம் நீண்டகாலமாக நெருப்பை வணங்கிக்கொண் டிருக்கிறோமே இதன் பலன் வெளியாகவில்லையே யாதலின் இந்நெருப்பு நெருப்பை வணங்காதவர்களைச் சுடுவதுபோல் நம்மையுஞ் சுடுமா சுடாதா விதைப் பரிசோதிப்போமென்றுசொல்லத் தமையன் நீதானிந்த யோசினையில் முந்தினவன் வுன் கையைத்தான் நெருப்பில்வைத்துப் பாரென்று சொன்னபின் அதை யொப்புக்கொண்டு யிளையவன் தமையன் முன்னிலையில் நெருப்பில்கையை வைக்கக் கைவெந்துபோய்விட்டது.

அப்பவே இளையவன் வீண்வேலையா யிந்த நெருப்பைவணங்கிக்காலமெல்லாம் போக்கினோமே யென்று கைசேதப்பட்டு முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுடைய தீனிஸுலா மார்க்கத்திலாகிவிடுவோமென்று தமையனுக்குச்சொல்லத் தமையன் எனக்கு மிச்சம் வயசாகிவிட்டது, ஜனங்க ளென்னைக் கேவலமாகப் பேசுவார்கள் நீதானே அம்மார்க்கத்தி லாகிவிடு நான் வருகிறதில்லை யென்று சொல்லிவிட்டான், பின்பு இளையவன் தமையனைத் தூடணித்துவிட்டு மாலிக்கிபுனு தீனார் றகிமகுல்லா அவர்களிடம்போய் யிச்செய்தி யாவற்றையுஞ் சொல்லித் தீனிஸுலாமார்க்கத்திற் றானுந் தன்பெண்சாதிபிள்ளைகளும் சேர்ந்துவிட்டார்கள்.

அப்பாலவர்கள் மார்க்கவிதிகளை யிவருக்குப் படித்துக் கொடுத்ததின்பின் வும்முடைய குஸ்றானகிய காலச்சேபங் கழிக்கிறதற்காகக் கொஞ்சம் பணங்காசு யென் முறீதுப்பிள்ளைகளிடஞ் சொல்லிச் சேகரித்துத் தருகிறேனென்று சொல்ல அவர் நான் துன்யாவுக்குப் பகரமாகத் தீனை விற்கமாட்டேனென்று சொல்லி வேறேயொருவூரிற்போய் ஒரு பாழ்வீட்டில் தன்மனைவியையும் பிள்ளைகளையும் வைத்துவிட்டுத் தெருவில்வந்து கூலிவேலைக்கு யாள் தேள்வையாவென்று சத்தமிட்டுப்பார்த்ததில் வொருவரும் வேலைக் கழைக்கவில்லை யப்பால் பள்ளி

வாயலில் வந்து மகுறிபுவணை தொழுதுவிட்டு வீட்டுக்கு வந்ததில் பெண்சாதி ஓசிபன மெங்கேயென்றுகேட்க நானொரு யெசமானுக்கு வேலைசெய்தேன் கூலி கேட்காமல் வந்துவிட்டேனென்று சொன்னார் அன்றிரவையி லிவர்க ளெல்லோரும் புசிப்பன்றிப் பசியுடன் யிராத் தரித்தார்கள், மறுநாள் முன்போலவே தெருவிற் சுற்றிப்பார்த்ததில் வேலை கிடைக்காமற் பள்ளிவாயலில் வந்து மகுறிபுவணை தொழுதுகொண்டிருந்துவிட்டு வீட்டுக்குவந்ததில் பெண்சாதி கூலியெங்கே யென்றுகேட்க நேற்றையக்கூலியு மின்றையக்கூலியும் நம்மளெசமான்நாளைக்குச் சேர்த்துத்தரப் போதுமென்று சொன்னார், யெல்லோரும் நேற்றையப்போற் புசிப்பன்றிப் பசியுடன் ஆண்டவனை சுக்குர்ச் செய்துக்கொண்டு ராத்தரித்தார்கள் மறுநாள் வெள்ளிக் கிழமை காலையி லெழுந்திருந்து முன்போல தெருவைச் சுற்றிப்பார்த்ததில் வேலை கிடைக்காமற் பள்ளிவாயலில் வந்து தொழுதுகொண் டிருந்தார் ஜும்ஆவின் னேரத்திற் கைகளையேந்தி ஆண்டவனே இனி விசுலா மார்க்கத்தின் பறக்கத்தாலு மிந்த வெள்ளிக்கிழமையின் பறக்கத்தாலும் யென் பெண்சாதிபிள்ளைகள் புதிய விசுலாமாக யிருப்பதாற் பிள்ளைக ளொருவேளை மார்க்கத்தைவிட்டுப் பசியினுடைய கொடூரத்தால் நீங்கிவிடாமற் றரிபாடா யிருக்கும்படி யவர்களின் பசி நீங்கும்பொருட்டு அவர்களுக்கு றிசுக்குக் கொடுயென்று துஆச்செய்துவிட்டு மகுறிபுவணை தொழுது முடித்தபின்னர் வீட்டுக்குவரும்போது கொஞ்சமணலைவாரித் துணியிற்கட்டிக்கொண்டு பெண்பிள்ளை கேட்டா லிதைப் பாருமென்று சொல்லலாமென்கிற யெண்ணத்தின்பேரில் வருகிறமத்தியில் வீட்டில் நெருப்புப்புகை வருகிறதைப்பார்த்து மணலைக் கட்டுடன் வாயலினிடமாகவைத்துவிட்டு வீட்டினுட் புகுந்து புகை யெழும்புவ தேதென்று கேட்டார்.

அப்போது தன்மனைவி சொன்னதாவது ஜும்ஆநேரத்திலொரு வாலிப னொருதாம்பாளத்தில் ஆயிரந் தங்கக்காசை வைத்து அழகான சரிகை லேஞ்சியால் மூடி யென்னிடங்கொடுவந்து தந்து வுன்புருஷன்

அல்லாகுத்தா ஆலாவுக்காகயின்றையத்தினஞ்செய்த யிபாதத்தின்கூலி துன்யாவி லிதுவாயிருக்குமென்று மிதர்க்குமுன்னிரண்டுநாள் அல்லாகுத்தா ஆலாவுக்காக செய்த அமலின்கூலி யினிமேற் கொடுக்கப்படுமென்றுஞ் சொல்லிவிட்டுப் போய்விட்டார் பின்பு அதிலொரு காசையெடுத்துக் கடையிலொரு நசாருயிடத்திற் கொடுத்தேன் அதை யந்த நசுருணி தூக்கி நிறைபார்த்ததில் இரண்டு காசினிடை யிருந்தது அதைப்பார்த்து அவ னுச்சரியப்பட்டு யிக்காசு வுனக் கேதென்றுகேட்க நடந்தசெய்தியைச்சொன்னே னுடனே அக்காசின் முத்திரையைப் பார்த்தான் (லாயிலாக யில்லல்லாகு முகம்மதுற்றசூலுல்லாகி) யென்றெழுதப்பட்டிருந்தது அதைப்பார்த்தவம்மனிதன் தீனிலிசுலாமாகிவிட்டார் அவ்வொருகாசுக் காயிரங்காசு தந்தா ரதிலொரு காசையெடுத்து அரிசி கறிவாங்கிச் சமைத்துக்கொண்டிருக்கிறேனென்று சொன்னாள்.

அத்தனையுமவர்கேட்டு அல்லாகு சுபுகானகு ஒத்தா ஆலாவை மிகவும்புகழ்ந்து சஜதாசுக்கூர்செய்தார் பின்பு துணியில் நீங்கள் கட்டிக்கொண்டு வந்ததென்னவென்றுகேட்க விவர் அதையெடுத்துப்பாரென்றசொன்னார் அவளதை யவிழ்த்துப்பார்க்கக் கோதம்பு மாவாகயிருந்தது வுடனே யெல்லோரும் அல்லாகுத்தஆலாவை யதிகமாகப் புகழ்ந்து தீனிலிசுலாத்தின்பேரில் சுக்கூர்ச்செய்தார்கள்.

(நசீகத்து) ஆய் தீனேர்களாகிய மூமீன் முஈமின்களான எமதுபிறவிநேசர்களே அல்லாகு சுபுகானகு ஒத்தஆலா முகம்மது நபிசல்லல்லாகு அலைகி ஒசல்லமவர்களின் தீனிலிசுலாமென்னு மார்க்கத்தில் நம்மையாக்கிவைத்ததற்காக அவனையெப்போதும் நமதாயிசுவனா யொரு விநாடிகை யிடைவிடாமற் சுக்கூர்ச்செய்யவேண்டியது நம்மளடங்கல் பேரிலுங் கடமையாயிருக்குகின்றது.

ஏனெனில் நமக்கெல்லாஞ் சறுதாராகிய நாயகம் முகம்மது நபி சலகல்லாகு அலைகிஒசல்லமவர்கள் சிறப்புப்பெற்ற ஹதீதில் திருவுளம் பற்றினதாவது யாதெனி லொருமனிதனுக்கு அல்லாகு சுபுகானகுஒத்தா ஆலா ஒருநிகுமத்தைக் கட்டளைசெய்தால் அந்த நிகுமத்துக்கு அவ

ன் சுக்கூர்ச்செய்யவேண்டியது கடனாகிவிட்டது ஆனால் நமக்கு யிந்ததீனிலிசுலாமென்று மார்க்கத்தை அல்லாகுத்தஆலா தந்திருக்கிறது எல்லா நிகுமத்துகளிலும் மகாவலுப்பமான நிகுமத்தா யிருக்கும் அதர்க்குச் சரியாகும்படியான சுக்கூர்ச்செய்து நிறைவேற்ற நாம் தகுதிபெறவில்லை.

இமாம் (கொஸ்ஸாலி) றகிமகுல்லா அவர்கள் சொன்னதாக முறுலிதுத்துல்லாபென்னுங் கித்தாப்பிற் சொல்லுகிறார்கள் ஒருமனிதனை துன்யாவின் துவக்கத்திற் படைக்கப்பட்டு கியாமநா ளாகிறவரை ஆயிசுகொடுக்கப்பட்டிருந்து அவனை நாயன் தீனிலிசுலாமென்னு மார்க்கத்திலாக்கியதர்க்காக அவன் வயசெல்லாம் அல்லாகுத்த ஆலாவை சுக்கூர்ச்செய்வானாகிலும் அல்லாகுத்தஆலா கொடுத்த நிகுமத்துக் கணக்கிலடங்காத வலுப்பத்தையுடையதா யிருப்பதால் அந்த நிகுமத்துகளின் ஹக்குகளில் சிலதையாகிலும் நிறைவேற்றினவனாக யிருக்கமாட்டான்,

ஆகையால் நாமதர்க்குத் தகுந்தபடி சுக்கூர்ச்செய்ய யேலாதவனாக யிருந்தபோதிலும் நம்மனுக்குக் கொடுத்திருக்கிற ஆயிசுகளிற்கொஞ்சமும் வீண்காலம்போக்காம லெப்போது மிதைநினைத்து சுக்கூர்ச்செய்துக்கொண்டிருக்கிறது நம் மனைவர்கள்பேரிலும் கடமையாக யிருக்கின்றது.

சகுதீஷிருசி யென்றபெரியோர்கள் போஸ்தானென்னுங் கித்தாப்பிற் சொல்லுகிறார்கள் யாதென்னிற் வுனக்கு அல்லாகுத்தஆலா தந்திருக்கிற நிகுமத்துக்கு சுக்குர்ச்செய்வதை யதிகப்படுத்தினு லந்த நிகுமத்தை வுனக்கு அதிகப்படுத்துவான் அந்தநிகுமத்துக்குச் சுக்கூர்ச்செய்யாமல் மாறுசெய்தா லதை அல்லாகுத்தஆலா வுன்னைவிட்டும் பறித்துக்கொள்ளுவானென்று ஆகையால் நம்மனைவர்களையும் ஆண்டவனுடைய நிகுமத்துகளுக்குச் சுக்கூர்ச்செய்யாமற் கெட்டுப்போன தோசிகளின்கூட்டத்திற் சேர்க்காம லவனுடைய நிகுமத்துக்கு அதிக சுக்கூர்ச்செய்த் சாலிகான சிதேவித்தனம் பெற்ற நல்லோர்களின் கூட்டத்திற்சேர்த்து தீனிலிசுலாமென்னு மேன்மையுஞ் சிறப்புமுற்ற மார்க்க

த்திற் றரிபடுத்தி பாதுகாத்து இரட்சிப்பானாகவும் ஆமீன் யாறப்ப ஆலமீன்.

கலிமாக்களின்பாபு·

(அவ்வல்க்கலிமாதையிபு) (லாயிலாஹா யில்லல்லாகு) வுண்ண யாக லோகங்களில் வணக்கத்திர்க்குப்பாத்திரமாகிய மெய்யான ஆ டவன் அல்லாகுத்தஆலா ஒருவனைத்தவிர வேறேயொரு நாயனுமி லை (முகம்மதுற்றசூலுல்லாஹி) முகம்மது நபிசெல்லல்லாகு அலைகி ஒ ல்ல மவர்கள் அல்லாகு சுபுகானகு ஒத்தஆலாவின் திருத்தூதரா ருக்கும்.

ஹதீது.

நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்க அபூகுறைறு றெலியல்லாஹு அன்குவும் யின்னஞ்சில அசுகாபுக மிருக்கும்போது நீங்களுங்க ளீமானைப் புதுப்பியுங்களென்று திரு ளம்பற்றினார்கள்.

அசுகாபுகள் வுடனே அல்லாவுடைய றெசூலே நாங்களெங்க மானை யெப்படிப் புதுப்பிக்கவென்றுகேட்க லாயிலாஹ யில்லல்ல ஹு வென்னும் கலிமாவ்வ மிகுதமாக்கிக் கொள்ளுங்களென்று தி வுளமானார்கள்·

இன்னும் (லாயிலாக யில்லல்லாகு) யென்ற கலிமா யென் கோ ட்டையாயிருக்கும் அக்கலிமாவைச் சொன்னவன் அக்கோட்டையினு ட் புகுந்தான் யென்கோட்டையினுட் புகுந்தவன் யென்அதாபைவி டும் அச்சந்தீர்வானென்று அல்லாகுத்த ஆலா திருவுளம்பற்றினதாக ஜிபுறாயில் அலைகிஸ்ஸலாமவர்கள் நபிசல்லல்லாகு அலைகிஒசல்லமவா களுக்கறிவித்தார்கள்.

இன்னும் அபூகுறைறு றெலியல்லாகு அன்கு அவர்களைத்தொ டும் வந்திருக்கிறதாவது ஒருமனிதன் சக்கறுத்துடைய காலிலிருக்கு ம்போது மலக்கல்மவுத்து அலைகிஸ்ஸலாமவனிடத்தில்வந்து அவன் நன

மையான அமற்செய்திருக்கிருனுவென்று வுறுப்புகளைப் பரிசோதிப்பார்கள் ஒருவுறுப்பிலும் நன்மையான அமலைக்காணுமற் பின்புஅவனுடைய நாவைப்பார்ப்பார்கள் அப்போது அந்த நாவு முரசென்னுமேலணுரில்(லாயிலாஹயில்லல்லாஹு)வென்னுங் கலிமாவைக்கொண்டு சேர்ந்ததாக யிருக்கிறதைக்கண்டு அல்லாகு சுபுகானகு ஒத்தஆலாயவினிடம் அறிவிப்பார்களுடனே அல்லாகு சுபுகானகு ஒத்தஆலா அந்த மனிதனிந்த இகுலாசுடைய கலிமாவைச்சொல்லிக்கொண் டிருந்த பறக்கத்தா லவனுடைய பாவங்களைப் பொறுப்பான் இந்த ஹதீதுகள் இருசாதுல் யிபாதென்னும் கித்தாப்பில்வருகின்றன.

ஹிக்காயத்து.

(றவுலுற்றயாகீ) னென்னுங்கித்தாபில் அபீயெசீதில் குருத்துபியென்னு மிமாமைத்தொட்டும் பேசிவரப்பட் டிருங்கிறதாவது யாதெனில் சிலஹதிதுகளில் யாராகிலு மொருவன் (லாயிலாக இல்லல்லாகு)வென்னுங்கலிமாவை(எழுபது)தரமும் ஓதிவருவாணுகில் நரகத்தை விட்டும் வுரிமை பெறுவானென்று வந்திருக்கிறதைப்பற்றி அக்கலிமாவின் பலனை ஆதரவுவைத்து தங்களினுடையபெந்துகளுக்காக (எழுபது)தரமும்மேற்கொண்டு (எழுபது-ம்) தரமும் ஓதிவைத் திருந்தார்கள் அப்பாலவர்களும் ஒருகாரணத்துடைய வாலிபருஞ்சேர்ந்திருக்கும்போது ஒருமனிதன் யெல்லோரையும் விருந்துக்கழைத்து தன்வீட்டுக்குக்கூட்டிக்கொண்டுபோய் யெல்லோரும் பசியாறிக்கொண்டிருக்கும்போது அவ்வாலிபராகிய கருமத்தையுடையவர் கொய்பான சங்கதிகளை யறிவிக்கும்படியானவரா யிருப்பதால் கொரமான சத்தமிட்டு ஓய் வுமறென்கிற மனிதனே யிதோ யென்னுடைய தாய் நரகத்தி லிருக்கிருளென்று கூக்குரலிட்டழுது சத்தமிட்டா ரப்பால் அந்த அபீயெசீதில் குருத்துபீயென்னு மிமாம் யிவருடைய ஹாலைப்பார்த்து இன்றையி லிந்த கதிதுடைய வுண்மையைப் பரிசோதனை செய்யலாமென் றெண்ணி ஆண்டவனே அந்த ஹதீது மெய்யாயிருக்கும் அதைப் பேசிவந்தவர்களும் மெய்சொல்லுகிறவர்களா யிருக்கும் நான்ஓதிவைத்திருக்கிற(எழுபது)

திக்கிறை யிந்தவாலிபரின் தாயாகிய நரகத்தி லிருக்குகின்ற பெண்பிள்ளைக்கு நான் பிதியாக்கொடுத்தேனென்று கல்பில் நாடினார்கள் அப்பவே யவ்வாலிபர் ஓய் ஓமறென்கிற மனிதனே யெல்லாப்புகழும் புகழ்ச்சியும் அல்லாவுக்காகயிருக்கு மென்னுடைய தாயை யிப்பவே நரகத்தைவிட்டு முரிமையாக்கிவிட்டானென்று சந்தோசத்தை யடைந்தார்.

{ இரண்டாங்கலிமா ஷகாதத்து. }

(அஷகது) நான்பிசகற வறிந்து விண்ணப்பஞ்செய்து சாட்சிசொல்லுகிறேன் (அன்லாயிலாஹ யில்லல்லாஹு) மெய்யாக வணக்கத்திர்க்குப் பாத்திரமாகிய நாயன் அல்லா ஒருவனைத்தவிர வேறில்லை (வகுதகு) அவன்தனித்தவன் (லாஷரிக்கலகு) அவனுக்கு யாதாமொன்று யிணையில்லை (வஅஷ்ஷகது) யின்னும் பிசகறவறிந்து சாட்சி சொல்லுகிறேன் (அன்னமுகம்மதன்) மெய்யாக முகம்மது நபிசல்லல்லாகு அலைகிஉசல்லமவர்கள் (அப்துகு) அல்லாகுத்தா ஆலாவின் பிரியமாகிய அடியாருமாய் (ஒறசூலுகு) இன்னுமவனுடையதிருத்தூதருமாயிருக்கும்.

ஹிக்காயத்து.

(துற்றத்துன் ஞசிகீன்) யென்னுங்கித்தாபில் இபுருகீமுல் வாஸ்தீ யென்பவர்கள் அறபாத்துமலையில் ஹஜ்ஜுடைய இரவில் தாங்கள் கையிலேழுகல்லெடுத்து அயே கல்லுகளே யெனக்கு நீங்கள் ஷாகிதாகயிருங்களென்று சொல்லி (அஷஷகதுக் கலிமாவை) யேழு விடுத்தஞ்சொல்லி அக்கற்களை யெறிந்துவிட்டு அன்றிரவில் நித்திரைசெய்தார்கள் அப்பாற் கனவிற் கியாமத்து நாளானதாகவு மவரைக் கேள்வி கணக்குக் கேட்கப்பட்டு நரகத்திர்க்கு அனுப்பப்பட்டதாகவும் மலக்குகளவரை நரகத்தின் வாயலினிடமாய்க் கொடுபோகும்போது ஒரு கல் அந்நரகத்தின் வாயலையடைத்துக்கொண்டு அஷகது கலிமாவைச் சொன்னது பின்னர் மலக்குகளெல்லோரும் மக்கல்லைத் தள்ளிப்பார்த்ததிற் கல்லு விலகவில்லை அப்பால் வேறொரு வாசலுக்குக் கொடுபோக வேறொரு கல்வந்து முந்தின முறைபோலவே யடைத்துக்கொண்டது.

இம்முறையேயவ்வொருவாசலிலு மொவ்வொரு கல்(ஷகாதத்துக்கலி மாவைச்) சொல்லி யிவனை நரகத்திற்குட் போகவொட்டாமற் றடுத்துக்கொண்டது.

இதைப்பார்த்து மலக்குகள் புதுமையுற்று யிவனை அறுசிகீட மாகக் கொடுபோய் நிறுத்தினர்கள் அல்லாகு சுபுகானகு தஆலா யிவனைநோக்கி ஆய்இன்னுரே நீர்கற்களைச்சாட்சிவைத்ததற்கு அவைகள் சாட்சிசொல்வதைப் பழுதாக்கவில்லையே அப்படிக்கிருக்க நானும் முடைய சாட்சியின்பேரி லுதயமாய்ப்பார்த்திருக்க வும்முடைய அமற்களை யொருநாளும் பழுதாக்க மாட்டேனென்று சொல்லியபின் மலக்குகளையழைத்து நீங்களிவனை சுவற்கத்துக்குக் கொடுபோங்களென்று வுத்தாவுசெய்ய மலக்குகள் அவனை சுவர்க்கத்துக்குக் கொண்டுபோனார்கள் அப்போததின் வாயற்கள் திறக்கப்பட்டிருந்தது அதனுட் புகுந்து சேரும்படிகண்டேனென்று சொன்னதாக வருகின்றன.

{ மூன்றுங்கலிமா தம்ஜீது. }

(சுபுகானல்லாஹி) அல்லாகுத்தஆலா தூய்தானவன் (வல்கம்து லில்லாஹி) யெல்லாப்புகழும் புகழ்ச்சியும் அல்லாவுக்காக யிருக்கும், (லாயிலாக யில்லல்லாகு) வணக்கத்துக்குப் பாத்திரமாகிய ஆண்டவன் அல்லாகுத்த ஆலாவைத்தவிர வேறே ஆண்டவனில்லை (வல்லாகு அக்குபறு) அல்லாகுத்தஆலா மிகவும்பெரியவன் (வலாகவுல) பாவத்தைவிட்டுத் திரும்பவும் (வலாக்குவ்வத்த) நன்மையைச்செய்யப் பெலனும் (இல்லாபில்லாகில் அலியில்அளிம்) மேலான வலுப்பத்தையுடைய அல்லாகுத்தஆலாவின் வுதவிகொண்டே யொழியவில்லை.

ஹிக்காயத்து

(துருறுல்ஆபிதீ) னென்னும் கித்தாப்பில் வருகிறதாவது இராஜர்நாயகம் ஹஜறத்து நபிசுலைமான்அலைகிஸ்ஸலா மவர்களின்தக்த்தாகிய

சிம்மாசனம் அபரஞ்சித் தங்கத்தாற் காதவழி விஸ்தீனத்திற் செய்ய ப்பட்டிருந்தது அவர்கள் சிம்மாசனத்தி னவரத்தினத்தாலழுத்தப்பட்ட ஒருபெரிய குறிசியின்பேரிலும் அக்காலத்திலுள்ள மற்ற நபிமார்களத ர்க்கடுத்த தங்கக் குறிசிகளின்பேரிலும் வுலமாக்கள் வெள்ளிக் குறிசி களின்பேரிலும் அசருபுகளாகிய பெரிய மனிதர்கள் விரிப்பின்பேரி லுமாக யிருக்கச்சே யிவர்களைச் சூழ்ந்து ஜின்களும் சைத்தான்களும் காவல்காக்கும்படியாயும் ஆகாயத்திற் பக்ஷிசாரங்கள் இறக்கைகளைவிரி த்து நிழலிடும்படியாய் யச்சிம்மாதனத்தை யொருநா ளொன்றுக்கு இர ண்டுமாத்தையப் பயணத்திர்க்குக் காற்றெடுத்துக்கொண்டு நடக்கிறவ ளமையாக யிருந்தது ஒருநா ளிப்பிரகாரம் அந்தரவழியா யவர்கள் சிம் மாதனம் பரந்து போகிறதைப்பற்றி ஒரு மலையில் அல்லாகுத்த ஆலா வை வணங்கிக்கொண்டிருந்த ஒரு ஆபிது ஆகாயத்திலே பார்த்து ஆச் சரியமடைந்து (சுபுகானல்லாகி) இதென்ன புதுமைதான் நபிதாவூது அலைகிஸ்ஸலாமவர்களின் புத்திரசிகாமணியாகிய நபிசுலைமான் அலைகி ஸ்ஸலாமவர்கட்கு இவ்விதமாகிய தெளலத்தைக்கொடுத்தாயே யென்று சொன்னார் அவ்வார்த்தை நபிசுலைமான் அலைகிஸ்ஸலாமவர்கட்குத் தெ ரிந்து சிம்மாதனத்தைக் கீழிறக்கி யிந்த ஆபிதினிடத்தில்வந்து ஆய் ஆ பிதே புதுமையடையாதையு மென்னுடைய தெளலத்தெல்லா நீர்சொ ன்ன சுபுகானல்லாவென்ற தஸ்பீகுக்கு யீடாகாது யேனென்றால் யெ ன்னுடைய தெளலத்து அழிந்துபோய்விடும் நீர் சொன்ன தஸ்பீகுக்கு க்கூலியாகச் சொற்கலோகத்தில் மகா வின்பமுடைய கனியைப்போன் ற ஒருமரத்தை நட்டப்படு மதின்பலாபல னொருநாளு மழியாதென்று சொல்லிவிட்டுப் பிரயாணித்தார்கள்.

நாலாங்கலிமாத் தெளகீது

(லாயிலாக யில்லல்லாகு) வணக்கத்துக்குப் பாத்திரமாகியநாயன் அல்லாகுத்தஆலாவைத்தவிர வேறேயாருமில்லை (வகதகு) அவன்தனி த்தவன் (லாஷரிக்கலகு) அவனுக்கு யாதொரு யிணையுமில்லை (லகுல் முல்க்கு) இராஜாங்கமெல்லா மவனுக்கே சொந்தமானது (வலகுல்கம்

து) யெல்லாப்புகழும் புகழ்ச்சியு மவனுக்கேயாயிருக்கும் (யுகுயி) மவு த்தானவர்களை கயாத்தாக்குவான் (ஓயுமீத்து) கயாத்தானவர்களை மவு த்தாக்குவான் (பியெதிகில்கைறு) நலவடங்கலு மவன்வசமே யல்லாது வேறில்லை (ஒகுவ அலாக்குல்லி செய்யின்கதீர்) யெல்லா வஸ்துக்களி ன்பேரிலு மிகவுந் தத்துவம்பெற்றவனாக யிருக்கும்.

{ ஐந்தாங்கலிமா றத்துல்க்குபிர். }

(அல்லாகும்ம) ஆண்டவனே(யின்னீஅவூது பிக்கமின்அன் வஷ் ரிக்கபிக்க ஷெய்அன் வஅனு அகுலமுபிகி) நானறிந்தவனாக அறவேவு னக்கு ஒருவஸ்துவையு மிணைவைப்பதைவிட்டு வுண்மையாக வுன்னை க்கொண்டு கார்மானந் தேடுகிறேன் (ஒஅஸ்தகுபிறுக்கலிமாலா அகுல முபிகி) நானறியாமற் செய்ததர்க்கு வுன்னிடத்திற் பிழை பொறுக்கத் தேடுகிறேன் (இன்னக்க அந்தஅல்லாமுல் குயூபு) நீமெய்யாக யிரகசி யமடங்கலையு மிகவு மறிகிறவனாகயிருக்கும் (துப்த்து அன்கு) யிணை களைவிட்டுத் தௌபாச்செய்து மீண்டேன் (ஒத்தபற்றவத்து அன்குல் லி தீனின் வலிவாத் தினிலிஸ்லாம்) யிசுலாமென்னு மார்க்கத்தைத்தவி ர மற்ற மார்க்கங்கள் யாவையும்விட்டு நீங்கிவிட்டேன் (ஒஅசுலம்து ஒ அக்கூலு) நானிசுலாமாகிச் சொல்லுகிறேன் (லாயிலாக யில்லல்லாகு முகம்மதுற்றசூலுல்லாகி) வணக்கத்திர்க்குப் பாத்திரமாகிய நாயன் அ ல்லாகுத்த ஆலாவைத்தவிர வேறேநாயனில்லை முகம்மது நபியாகிறவ ர்கள் அல்லாகுத்த ஆலாவினுடைய திருத்தூதராயிருக்கும்.

நசீகத்து.

முசுலிமாகிய யிகுவான்களே யிக்கலிமா குபிறையுஞ்சிறுக்கையும் நீக்கும்படியாகிய கலிமாவாக யிருப்பதாற் காலையிலும் மாலையிலுமோ திவரவேண்டியது யெல்லோர்களுக்கு மகத்தியமானதாகயிருக்கும் இ தர்க்காகத்தான் றத்துல்முக்தாறென்னுங் கித்தாபிற் சொல்லி. யிருக் கிறார்கள் அதாவது இந்த ஜமானிலுள்ள முசுலிமாகிய சனங்களுக்கு

இன்னவிதத்தாற் குபிர்வந்து சம்பவிக்குமென்கிறவிவரம் நன்றாகத்தெரியாதிருப்பதாலுஞ் சிலநேரங்களில் அசதி மறதியாகக் குபிராகிய நடத்தைகள்வந்து நேரிடுவதினாலு மிந்த றத்துல்க்குபிறென்னுங் கலிமாவை பேணுதலுக்காக ஓதிவருகிறது முஸ்தஹப்பா இருக்குமென்று (இன்னும்) (தம்பீகுல்க்காபிலீனென்னுங் கித்தாபில்) பக்கீஹீ அபுலேது சமர்க்கந்தி றகிமத்துல்லாகி அலேகி யவர்கள் முன்னோர்களாற் சொல்லப்பட்டதாகப் பேசிவருகிறார்கள் அதாவது யாராகிலுமொரு மனிதன் யேழுவார்த்தையைப் பாடஞ் செய்து வோதவேண்டிய தலங்களிலோதிவருவானாகில் அவன் அல்லாகு சுபுகானகு ஒத்தஆலாவிடத்திலு மவன்மலக்குகளிடத்திலுஞ் சிறப்புப்பெற்றவனாகஇருப்பான்.

இன்னும் அல்லாகு சுபுகானகு ஒத்தஆலா அம்மனிதன் செய்த பாவங்கள் கடலுரைக்குச் சமமாக இருந்தபோதிலும் பொறுத்து அவனுக்கு இபாதத்துச் செய்வதற்கு இன்பத்தையுங்கொடுத்து அவன் கயாத்தாக யிருக்கும்போதும் மவுத்தாகும்போது மவன் காரியங்களை யழகாக்கிவைப்பான்.

க—வது, (அச் சொற்களாவது) ஹலாலானயெந்தவேலை யாரம்பஞ் செய்யும்போதும் பறக்கத்திர்க்காக (பிசுமில்லா கிற்றகுமானிற்றகீம்) யென்று சொல்வதும் இதன் பொருள் அல்லாகு சுபுகானகு ஒத்த ஆலாவின் திருநாமங் கொண்டு இவ் வேலையைஆரம்பஞ் செய்கிறே னவன் துன்யாவில் நல்லோர்கள் பொல்லாதவர்கள் யெல்லோருக்குங் கிருபைசெய்கிறவன் ஆகிறத்தில் மூமீன்களுக்குமாத்திரந் தனது கிருபை செய்கிறவ னென்பதாம்.

உ—வது, எல்லா வேலைகளு முடிவானவுடன் சுக்குருக்காக (அல்கம்துலில்லா) யென்று சொல்வதும் இதன் பொருள் யெல்லாப் புகழும் புகழ்ச்சியும் சருவவல்லமையுள்ள அல்லாகு சுபுகானகு ஒத்தஆலாவுக்கா யிருக்குமென்பதாம்.

ங—வது, வீண்வேலை பாயிதா இல்லாத்த வார்த்தை பேசும்படி நேரிட்டவுடனதை விட்டும் பிழை பொறுக்கத் தேடுவதர்க்காக

(அஸ்தகுபிறுல்லா)யென்றுசொல்வதும் இதன்பொருள் ஆண்டவனு கிய அல்லாகுத்தஆலாவினிடம் பிழைபொறுக்கத் தேடுகிறேனென் பதாம்.

ச—வது, ஒருவருக்கு ஒரு காரியத்திற்க்கு வாக்குக் கொடுத்தா லதை நிறைவேற்றுவதற்க்காக (இன்சா அல்லாஹுத்தஆலா) யென்று சொல்வதும் இதன்பொருள் வுயர்த்தியாகிய அல்லாகுத்தஆலா நாடினு லென்பதாம்.

ரு—வது, ஒரு பொருத்தக்கேடாகிய கருமங்க ணேரிட்டா லதைவிட்டு நீங்குவதற்க்காக (லாகவுல வலாகூவ்வத்த இல்லாபில்லா ஹில் லலியில்அலீம்) யென்றுசொல்வதும் இதன்பொருள் மேலான தன்மையையுடைய வலுப்பமான அல்லாகுத்த ஆலாவைக் கொண் டே யொழிய பாவத்தைவிட்டுத் திரும்புவதும் நன்மையைச் செய்ய ப் பெலனுமில்லை யென்பதாம்.

சா—வது, ஒருமுசீபத்தி லகப்பட்டவுட னதின்பேரில் சபூர்செ ய்வதற்க்காக (இன்னலில்லாஹி வஇன்னயிலைஹி றாஜஊன்) யென்று சொல்வதும் இதன்பொருள் உண்மையாக நாங்கள்அல்லாகுத்தஆலா வின் வுடமையாகயிருக்கு மவன் னுடினதைச்செய்வான் யின்னும் நா ங்க ளவனளவில் மீளுகிறவர்களாக இருக்கு மென்பதாம்.

எ—வது, இரவிலும் பகலிலு மற்ற யெந்நேரமும் ஆண்டவனை த்திக்குறச் செய்வதற்க்காக (லாயிலாக யில்லல்லாகு) யென்றுசொல் வது மிதன்பொருள் அல்லாகுத்த ஆலாவைத்தவிர வணக்கத்திற்க்கு ப்பாத்திரமாகிய நாயன் வேறேயாருமில்லை யென்பதாம்.

அல்லாகு சுபுகானகு வத்தஆலா இக்கலிமாக்களின் தவாபுகளை யுந் தறஜாக்களையு நாமனைவரும்பெற்றுக்கொள்ளும்பொருட்டுநல்லு தவிசெய்வானாக ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

கலிமாக்களின் பாபு—முற்றிற்று.

ஈமானிசுலாமின் பிரசங்கம்.

(ஈமானுகிறது கல்பென்னு மிருதயத்தா னிண்ணயங்கொண்டு நாவால் விண்ணப்பஞ்செய்கிறதாயிருக்கும்) குறுஆன் சரீபில் அல்லாகு சுபுகானகு ஒத்தஆலா திருவுளம் பற்றினதாவது (ஆய்) மனிதர்களே வுங்களையு முங்களுக்கு முன்னுண்டானவர்களையும் படைத்துப் பூமியை விரிப்பாகவும் வானத்தை மோடாகவு மமைத்து அதினின்றுந் தண்ணீரை யிறக்கி யுங்களியாவருக்கும் ஜீபனமாயிருப்பதர்க்காகப் பலவகைக் கனிவர்க்கங்களையும் றிசுக்குகளையு மத்தண்ணீரைக் கொண்டு வெளிப்படுத்தினானே அப்பேர்க்கொத்த வுங்களின் றப்பாகிய நாயனைப் பயந்ததர்க்காக தௌகீது செய்து வோர்மைப்படுத்தி யீமான் கொள்ளுங்கள் ளவனுக்கிணைகளை யாக்கிக்கொள்ளாதிருங்களென்றும்.

இன்னமொரு ஆயத்தில் அல்லாவையு மவனுடைய றசூலையுமொப்புக்கொள்ளாமல் மாறுசெய்யும்படியாகிய காபிர்களுக்குக் கடிசாகிய நரகத்தைத் தயாரியஞ்செய்திருக்கிறோ மென்றுந் திருவுளம்பற்றி யிருக்கிறான்.

இனி அக்கீதாவுடைய இமாமக ளிரண்டுபெயரில் (அபூமன்சூறில் மாத்துறைதீ) றகிமகுல்லாவைச் சேர்ந்த ஹனபி மதஹபாராகிய மாத்துறைத்தியாக்களிடத்தில் ஈமானுடைய பறுலு (இரண்டு) அதிலொன்றாவது அல்லாகுத்தஆலாவையு மவனுடைய றசூலையு மிருதயத்தா னிண்ணயங்கொள்கிறதும் இரண்டாவது அப்பிரகார நாவால் விண்ணப்பஞ் செய்கிறதுமாயிருக்கும்.

அபுல் ஹசனில் அஷ்அரி றகிமகுல்லாவைச்சேர்ந்த மாலிக்கி ஷாபியீ ஹம்பலிமதகபாரென்னுமசுஅரியாக்களிடத்தி லீமானுடைய பறுலு மூன்று அதில் முன்சொன்ன விரண்டும்போக பறுலாகிய அமற்களை வுறுப்புகளா னிறைவேற்றுகிறதா யிருக்கும்.

இதர்க்காகத்தா னீமான் கூடவுங் குறையவுஞ் செய்யுமென்று சொல்லுவார்கள் நம்மிடத்தி லீமான் கூடவுங் குறையவு மாட்டாது

யென்கிலு மமற்களின் காரணத்தாற் பெலமானதாகவும் பலகீனமானதாகவுமாகும் பெலமாகிய யீமானில் அல்லாகுத்தஆலாநம்மியாவரையுந் தரிபடுத்துவானுகவும் ஆமீன்.

ஈமானிசுலாமின் பிரசங்கம்—முற்றிற்று.

ஈமானுடைய சிபத்துகளின் பயான்.

அதாவது (முஜ-மலென்னும்) விபரிக்கப்படாத யீமானென்றும் (முபஸ்ஸலென்னும்) விவரிக்கப்பட்ட யீமானென்றும் இரண்டுவகைப்படும் (முஜ-மலாகிய) யீமானுவது ஆமந்துபில்லாகி அல்லாகுத்தஆலாவைக்கொண்டு (கமர்குவபிஅசுமாயிகி ஒசிபாத்திகி) அவன் றன்னுடைய திருநாமங்களைக் கொண்டு மவன் றன் சிபாத்தாகிய வன்னிப்புகளைக் கொண்டுமாயிருப்பதுபோல் ஈமான் கொண்டேன் (ஒகபில்த்து ஜமிஅ அஹீக்காமிகி ஒஅஹீக்காபிறசூலிகி) அவன் கட்டளைக ளடங்கலையு மவன் றசூலுடைய கட்டளைக ளடங்கலையு மொப்புக்கொண்டேன் (முபஸ்ஸலாகிய யீமானுவது) ஈமானுடைய ஆறுசறத்துகளையும் பொதிந்ததாக யிருக்கும் அதாவது (ஆமந்துபில்லாகி) அல்லாவைக்கொண்டு யீமான்கொண்டேன் (ஒமலாயிகத்திகி)அவனுடைய மலக்குகளைக்கொண் டீமான் கொண்டேன் (ஒகுத்துபிகி) அவனுடைய வேதங்களைக்கொண் டீமான்கொண்டேன் (ஒறுசுலிகி)அவனுடைய நபிமார் றசூல்மார்களைக்கொண் டீமான்கொண்டேன் (ஒலயவுமில் ஆஹிறி) ஒடுக்கத்துநாளைக்கொண் டீமான்கொண்டேன் (ஒல்கதிரி கைறிஹி ஒஷற்றிஹி மினல்லாகித்தஆலா) அல்லாகுத்தஆலாவினின்று முள்ள நலவாகிய கட்டளைகளையுந் தீங்காகிய கட்டளைகளையுங்கொண் டீமான்கொண்டேனென்பதாம்.

{ அல்லாகுத்தஆலாவின்பேரில் ஈமான்கொள்கிற விபரம். }

அதாவது, ஆலங்களையெல்லாம் படைத்தாளும் படியாகிய ஆண்டவ னொருவ னவனுக்குத் துவக்கமு முடிவுமில்லை பூர்வீகமானவ னவனுக்கு ஒப்பாக அவன்படைப்பில் யாதாமொரு வஸ்துவுமில்லை யவ

னொரு வஸ்துவளவிலும் ஹாஜத்தில்லாதவன் அவ னுண்டென்கிறதி
ன்பேரில் ஒவ்வொரு வஸ்துவடங்கலு மறிவிக்கிறது அது யேதுபோ
லெனில் கட்டிடங்க[illegible]னவ னொருவனிருக்கிறானென்று அறிவிப்பது
போலும் எழுத்தை [illegible]தினவ னொருவ னிருக்கிறானென்று மறிவி
ப்பதுபோலுமா யிருக்கும்.

இன்ன மவனைத்தவிர வுள்ளவஸ்துவடங்கலு மழிந்துபோகு மத
ற்குத் துவக்கமுமுடிவுமுண்டு மின்னம் அல்லாகு சுபுகானகு ஒத்தஆ
லா ஆதாரமான அணுவென்னும் ஜவுகருமில்லை பல அணுக்கள்கூடிய
ஜிசுமென்னுஞ் ஜடலமுமில்லை நிறங்கள் - குணங்கள் - சுவைகள் - வா
சங்கள் இதுபோலொத்த தன்மைகொண்டு நிலைப்படாமல் வேறொன்
றி னிலைப்பட்ட ஆதாரமில்லாத அற்னு மில்லை அவனொரு வஸ்து
வைப் பெறவுமில்லை அவ னின்னமொருவஸ்துவாற் பிறந்தவனுமில்லை
மட்டுத் திட்டமாக்கப்பட்டவனுமில்லை ஒருதிசையி லடங்கியவனு மில்
லை அவனை இன்னவிதத்தி லடங்கினவன் தானென்று வன்னிக்க முடியா
து அவனைக் கியாமத்துநாளில் மூமீனாகிய அடியார்கள் ஒரு ஒப்புவமை
யில்லாமற் காண்பார்கள் துன்யாவில் வெளிக்கண்கொண்டு காணமுடி
யாது அவனுடைய பூர்வீகமாகிய சிபத்தென்னும் வன்னிப்புகள் அவ
ன்தாத்தென்னு முள்ளமையைக்கொண்டே நிலைத்தது அந்தசிபத்துக
ளாவது தாத்திய்யா வென்றும் அபு ஆலியாவென்று மிருவகைப்படும்
சிபாத்துதாத்திய்யாவாகிறது, ஹயாத்தென்னு முயிர் குதறத்தென்னுந்
தத்துவம் இல்மென்னுமறிவு இறாதத்தென்னு நாட்டம் பஸிறென்னும்
பார்வை ஸம்குவென்னுங் கேள்வி கலாமென்னும் பேச்சு ஆக இவை
யேழுமாயிருக்கும் (அபுஆலியாவென்னுஞ் சிபாத்தாவது) தக்குவினா
கயிருக்கும் அதாவது, லோகங்களையு மவைகளி லிருக்கிற வஸ்துக ள
னைத்தையும் படைக்கிறது மழிக்கிறதும் றிஸ்க்குக் கொடுக்கிறதும் சீ
மானாக்கிறதும் யேழையாக்கிறது மிதுபோலொத்த செயல்களுமாயிரு
க்கும் அவன்பேரி லொரு வஸ்துவையு மடிமைகளுக்கு வுபகாரமாகச்
செய்யவேண்டிய கடமையில்லை யென்கிலு மவனப்படிச்செய்வது அவ
னுடைய யிகுசானாகயிருக்கும்.

ஹதீது.

என்னுடைய வும்மத்துகள் மேலைக்கு (எங)கூட்டமாகப் பிரிவார்க ளதிலொருகூட்டம் நானடந்த வழியு மென்னுடைய அசுகாபுகள் ணடந்தவழியு நடப்பார்க ளவர்கள் சுவர்க்கம்புகுதுவார்கள் மற்ற (எஉ) கூட்டமு மவங்கள் மனம்போனபோக்கில் யேறுக்கு மாறுகநடப்பார்க ளிவர்கள் அவர்கள் நரகவாதியாக யிருப்பார்களென்று நபிநாயகம் திருவுளமானார்கள்.

ஷறகு அகாயிது நசபீயென்னும் கித்தாபிற் சொல்லி வருகிறது யாதென்னில் முதலாவது நேர்வழியைவிட்டு நீங்கினவர்கள் முகுத்திசிலாக்களா யிருக்கும் அவர்களில் முந்தினதலைவன் வாஸிலிபுனு அதாவென்கிற மனிதனாகயிருக்கு மவன் ஹசனுல்பஸரீ றகிமகுல்லாகு அவர்களிருந்த சபையில் பெரும்பாவஞ்செய்த மனிதனைக் காபிருமில்லை மூமீனு மில்லையென்றுசொன்னான் அந்தமசுலிசில் இவன் நம்மைவிட்டுநீங்கிவிட்டானென்று ஹசனுல்பஸரீ யிமாம் சொன்னார்கள் இதற்க்காகத்தானிவனையு மிவனைச்சேர்ந்தவர்களையும் முகுத்திசிலா வென்று சொல்லப்பட்டது இதன்பொருள் நேர்வழியைவிட்டு நீங்கினகூட்டமென்றுசொல்லப்படும்.

இக்கூட்டத்தார் அல்லாகுத்த ஆலாவின்பேரில் அடியார்களுக்கு நலஞ்செய்யவேண்டியது வாஜிபாயிருக்குமென்று சொல்லுகிறார்கள் சுன்னத்து ஜமாத்தாகிய நம்மளிடத்தி லெப்படிச்சொல்வது பிசகாயிருக்கும் அல்லாகுத்தஆலா நம்மளியாவரையும் சுன்னத்து சமாஅத்துக்கூட்டத்திற் றரிபடுத்திவைப்பானாக ஆமீன் யாகய்யு யாகையூம்.

ஹிக்காயத்து.

இமாம் அபுல்ஹசனில் அஷ்அரீ றகிமகுல்லாஃ அவர்கள் அபிஅலிய்யில் ஜுப்பாயி யென்ற ஒருமுகுத்திசிலியிடத்தில் ஓதிக்கொண்டிருந்தார்கள் ஒருநா ளவரிடத்தி லொருமசலாக் கேட்டார்க ளதாவது மூன்றுபேர் தமையன் தம்பிமார்களி லொருவன் அல்லாகுத்தஆலாவுக்கு

வழிப்பட்டவனாக வயசுசென்று மவுத்தானான் ஒருவன் பாவியாகிவய
சென்று யிறந்தான் ஒருவன் சிறுபிள்ளையாக யிறந்தான் இவர்கட்கு
ங்கள் சொற்படிக்கி ஆண்டவன்பேரில் அடிமைகளுக்கு நலஞ் செய்
வேண்டியது கடமையாகயிருப்பதால் முந்தினவனுக்கு என்னகுக்கும்
யிருக்குஞ் சொல்லுங்களென்றுகேட்க சுவர்க்கமா யிருக்குமென்றார்
ரண்டாவதானவனுக்கு என்ன குக்குமென்றுகேட்க நரகமென்றார்
ன்றாவதானவனுக்கு என்ன குக்குமென்றுகேட்க நரகமுமில்லை சுவர்
கமுமில்லையென்றார் சரியிருக்கட்டும் அந்த மூன்றாவதானவன் கியாம
ளில் அல்லாகுத்த ஆலாயிடத்தில் ஆண்டவனே என்னையேன் சிறுபி
ள்ளையாக மவுத்தாக்கினு யென் பெரியதமையனைப்போல் வயசுசென்ற
ன்பின் மவுத்தாக்கினால் நானுன்னைக்கொண்டமான்கொண்டு வுனக்
வழிப்பட்டு நான் சுவர்க்கலோகத்திற் புகுதுவேனே யென்று கேட்ட
ல் அல்லாகுத்தஆலா அக்குழந்தைக்கு எவ்விதம் பதில்சொல்லுவாரெ
ன்றுகேட்க வதற்குபதில் நீ-பெரியவயசாகினு லெனக்குமாறுசெய்து
நரகத்திர்க்குப் பாத்திரப் படுவாயென் றெனக்குத் தெரிந்திருப்பதா
நானுன்னைச் சிறுபிள்ளையாக மவுத்தாக்கினேனென்று ஆண்டவன் ப
த்சொல்லுவாரென்று ஜுப்பாயிசொல்ல இரண்டாவதானவன் ஆண்ட
வனே என்னை என்தம்பியைப்போற் சிறுவனாக மவுத்தாக்கினால் நரக
ஞ்சேராமல் யென் றம்பியைப்போலாவனே என்றுகேட்டால் அல்லாகு
த்தஆலா மறுமொழி என்ன சொல்லுவாரென்று அசுஅரீ றகிமகுல்
லாஃ கேட்கஜுப்பாயி ஜவாபுசொல்ல ஏலாமல்த்தட்டழிந்தான் அப்ப
வே இவன் வழிகேட்டிலிருக்கிறானென்றறிந்து யவனைவிட்டுநீங்கி யவ
ர்களு மவர்களைச் சேர்ந்தவர்களு முகுத்தஸிலாக்களுடைய பாதையை
நபிநாயகமவர்களுடைய ஹதீஸைக்கொண்டும் அசுகாபுகளுடைய நடத்
தைகளைக்கொண்டும் பாத்திலர்க்கத் துணிந்தார்கள் அதுமுதற்றான் சு
ன்னத்து ஜமாஅத்துடைய மேன்மைபிரசங்கமாச்சுது சுன்னத்து ஜமா
அத்துக்கூட்டமாவது மாத்துறைதி யிமாமையும் அஷ்அரீ யிமாமையு
ஞ் சேர்ந்தவர்களாக யிருக்கும்.

மலக்குகளின்பேரில் ஈமான்கொள்கிறவிபரம்.

அதாவது மலக்குகளியாவரும் அல்லாகுத்த ஆலாவின் சங்கைபெற்ற அடிமைகள் அவர்களொளிவாற் படைக்கப்பட்டவர்கள் அவர்கள் நாடின ரூபத்தின்பேரில்த் திராணி பெற்றவர்கள் அணுவளவாவது ஆண்டவனுக்கு மாறுசெய்யமாட்டார்கள் அவர்கள் ஆணுமல்லப் பெண்ணுமல்ல அவர்களில் மிகவும் மேன்மைபெற்றவர்கள் ஜிபுரியீல் மீய்க்காயீல் யிசுறாபீல் யிசுறாயீல் இந்நான்கு மலக்குகளுமா யிருக்கும் மற்ற மலக்குக ளிவ்வளவென்கிறதை அல்லாகுத்த ஆலாவைத் தவிர ஒருவருமறியமாட்டார்கள் அவர்களிற் சிலர் (வுல்வியென்னு) மேலோக மொன்றுந் (சுபுலியென்னுங்) கீளோகமொன்றுந் சொல்லப்படும்.

(இனி) மலக்குக ளொன்பதுபங்கென்று மனிதர்கள் ஜின்கள் செய்த்தாங்க ளிம்மூன்றுஞ்சேர்ந்து வொருபங்கென்றுந் தப்சீறு ருகுல்பயானென்கிற கித்தாப்பில்வருகின்றது (இன்னம்) மலக்குகளுக்குத் தீண் குடிப்பு சேர்க்கை பிள்ளைப்பேறு யிவைகளில்லை யவர்கட்குக் கேள்வி கணக்கில்லை யவர்களிற் சிலர் மூந்தின சூறூதினவுடனேயுஞ் சிலர் அதற்குப்பின்னுமையு மவுத்தாவார்களே தவிர யிடையில்மவுத்தாகமாட்டார்க ளிப்போது அறுவைஷச் சுமந்துகொண்டிருக்கிற மலக்குகள் நாலுபேர்கள் சூறூதினவுடனே யெட்டு மலக்குச் சுமப்பார்கள் மலக்குகளுக்கு இறகுகளுண்டும் (தபுசீறு பகுவி) யென்றகித்தாபில் வருகிறது அதாவது ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்களுக்கு (௬௱) சிறகுண்டு மொருசிறகுக்கு மடுத்த சிறகுக்குமிடையில் அஞ்ஞூறு வருடத்தூரப்பயணமாக யிருக்கும்.

றிவாயத்து.

இபுனு ஆதி யென்கிறவர்கள் பேசிவருகிறதாவது ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்கள்

நபி - ஆதமலைகிஸ்ஸலாமவர்களிடத்தில் (௰௨) தரமும்
நபி - இதுறீசுஅலைகிஸ்ஸலாமவர்களிடத்தில் (௪) தரமும்
நபி - நூகுஅலைகிஸ்ஸலாமவர்களிடத்தில் (௫௰) தரமும்
நபி - இபுறாகீமலைகிஸ்ஸலாமவர்களிடத்தில் (௪௰) தரமும்
நபி - மூசாஅலைகிஸ்ஸலாமவர்களிடத்தில் (௪௱) தரமும்
நபி - ஈசாஅலைகிஸ்ஸலாமவர்களிடத்தில் (௰) தரமும்

நம்மள் நாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களிடத்தில் (உ௰௪௲) தரமு மிறங்கினார்கள் அவர்கள் யிமைதட்டி முழிக்கிறதர்க்குமுன் பூமியிலிருந்து வானலோகத்திர்க்குப் போய்விடுவார்கள் அவர்கள் மிகவும் பலாட்டியமுடையவர்களாயு மிருக்கும் இச்செய்திகள் மஜாலிசு ஸ்ஸனிய்யா வென்கிற கித்தாபில்வருகின்றன.

{ வேதங்களின்பேரில். ஈமான்கொள்கிறவிபரம் }

அதாவது வேதங்களுஞ் சுகபுகளும் அல்லாகுத்த ஆலாவின் திருவசனம் அது தன்னில் சத்தங்கள் அட்சரங்கள் முந்துதல் பிந்துதலை விட்டுந் தூய்தாக்கப்பட்டுது அதை நாமள் அறபாலும் மற்றும் பாசைகளாலு மட்சரங்களைக்கொண் டெழுதி சத்தங்களால்ஓதுகின்றோம் நம்முடைய சப்தங்களும் யெழுத்துகளு நம்முடைய செயலாக யிருப்பதால் நாமள் படையுண்ணப்பட்டதுபோற் படைக்கப்பட்டதாக யிருக்குமவைகள் அல்லாகுத்தஆலாவின் திருவசனமாகிய கலாமெநபுசியின் பேரிலறிவிக்கும் அக்கலாமு நபுவஸீ அல்லாகுத்தஆலா படையுண்ணப்படாத்தவனாக யிருப்பதுபோல் அதுவும் படையுண்ணப்படாத்ததாக யிருக்கும்.

(இன்னும்) அல்லாகுத்தஆலாவின் திருவசனம் தாத்தைக்கொண்டுந் தரிபாடாகிய பூர்வீகமான சிபாத்தாயிருக்கும் (இனி) குறுஆனெனபது அல்லாகுத்தஆலாவின் திருவசனமாக யிருப்பதால் படையுண்ணப்பட்டதென்று சொன்னவன் காபிராகிவிடுவான் முகுத்திசலாக்கள்

குறுஆனை படையுண்ணப்பட்டதென்று ஹும்பலி யிமாமமவர்களைச் சொல்லும்படி வேதனை செய்ததற்கு அவர்களொப்புக்கொள்ளாமல் அல்லாகுத்த ஆலாவிடத்தில் வெகுமதியைப் பெற்றுக்கொண்டார்கள்.

(இனி) வேதங்களாவது நபிமூசா அலைகிஸ்ஸலா மவர்கட்கு (தவுறுத்துவேதம்) அபுறுனிப்பாசையாலும் நபிதாவூது அலைகிஸ்ஸலா மவர்கட்கு (சபூர்வேதம்) யூனானிப் பாஷையாலும் நபி ஈசா அலைகிஸ்ஸலா மவர்கட்கு (இன்சீல்வேதம்) சுரியானிப்பாஷையாலும் நம்மள் நாயகம் நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிஉசல்லமவர்கட்கு (புறுக்கான்வேதம்) அறபுப்பாசையாலும் அல்லாகுசுபுகானகு ஒத்தஆலா இறக்கிவைத்தான் ஆக யின்னான்குவேதமாகயிருக்கும்.

சுகபுகளாவது ஒரு சொற்படி (ர) ஒரு சொற்படி (ரய) மாம் அவைகள் நபி ஆதமலைகிஸ்ஸலா மவர்கட்கு (ய) நபிசீது அலைகிஸ்ஸலா மவர்கட்கு (ருய) நபியிதிரீசு அலைகிஸ்ஸலாமவர்கட்கு (௩ய) நபி யிபுறாகீமு அலைகிஸ்ஸலாமவர்கட்கு (ய) இனி சுகபு (ரய) யென்றவர்கள் சொற்படி நபிமூசா அலைகிஸ்ஸலாமவர்கட்குத் தவுறுத்துவேத மிறங்குவதற்குமுன் (ய) சுகபு யிறங்கினதாகயிருக்கும் குறுஆன் யென்கிற வேதத்தைத்தவிர மற்ற வேதங்களுஞ் சுகுபுகளு மாற்றப்பட்டதா யிருக்கும் குறுஆனின்படியே கியாமநாள்வரை அமற்செய்யப்படும்.

ரசூல்மார்களின்பேரில் ஈமான்கொள்கிற விபரம்.

அதாவது நபி ஆதமலைகிஸ்ஸலா மவர்கள்முதல் நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகி உசல்லமவர்கள்வரையிலுள்ள நபிமார்களும் றசூல்மார்களும் மெய்யான மார்க்கங்களிற்றானிருந்தார்கள் அவர்களடங்கலும் சிறுபாவங்கள் பெரும்பாவங்களைவிட்டுந் தூய்தானவர்கள் விசுவாசமுடையவர்கள் பொய்சொல்லமாட்டார்கள் ஆண்டவ னனுப்பினதைஜனங்களுக்கு அறிவிப்பார்கள் அவர்கள் மதுவுப்பிறவியாக யிருக்கும் (நபி மார்க சொன்னது) ஆண்டவன் உத்தரவு கொண்டு முன் மார்க்கத்தை

யறிவிக்கிறவர்களாக யிருக்கும் (றசூல்மார்க ளென்பது) முன்மார்க்க த்தை யறிவிக்கிறதுடனே புதிய மார்க்கங்கொண்டு வந்தவர்களாக யிருக்கும் றசூல்மார்களை யெல்லாம் நபிமார்களென்று சொல்லலாம் நபிமார்களை யெல்லாம் றசூல்மார்களென்று சொல்லத்தகாது இனி நபிமார்களின் கணக்கு இத்தனையென்று சொல்லமுடியாது யென்கிலு மொரு சொற்படி (௧௨௪௲) ஒரு சொற்படி (௨௨௪௲) மாகயிருக்கும் றசூல்மார்கள் ஒருசொற்படி (௩௱௰௩) ஒருசொற்படி (௩௱௰௫) மாகயிருக்கும் குறுஆனில் வருகிற நபிமார் களின் பெயராவது ஆதம் - இதிறீசு - நூகு - கூது - ஸாலிகு - இபுறுகீம் - லூத்து - யிசுமாயீல் - யிசுகாக்கு எஹுக்குபு - யூசுபு - அய்யூபு - சுஐபு - மூசா - ஹாறூன் - அல்யெசகு - துல்க்கிபுலி - தாவூது . சுலைமான் - இல்யாசு - யூனுசு - சக்கறியா - எகியா யீசா முகம்மதுசல்லல்லாகு அலைகி ஒஅலைகிம் ஒசல்லம் ஆக (௨௫) முகம்மது நபிசல்லல்லாகு அலைகிஒசல்ல மவர்கட்குப்பின் நபிமார்கள்பிறக்கமாட்டார்கள் அவர்கள் நபிமார்களுக்கெல்லா முத்திரையா யிருக்கு மிவர்கள்தா னெல்லா கல்குகளிலு மெல்லாநபிமார்களிலு மிகவுஞ் சங்கையு மேன்மையும் பெற்றவர்களாகயிருக்கும்

ஒடுக்கத்துநாளின்பேரில் ஈமான்கொள்கிற விபரம்

அதாவது ஒவ்வொருமனிதன் மவுத்தானதின்பிறகு கபுறிலெழுப்பிக் கேள்வி கணக்கு முன்கறு நக்கீறு யென்கிற இரண்டு மலக்குகள் கேட்கிறதும் அப்பால் யிசுறாபீலென்குற மலக்கு சூறென்னுங் குழலில் ஊதினவுடன் யெல்லா கல்குகளுமழிந் துபோகும் அப்பால் (௪௰) வருடஞ்சென்று இரண்டாவது சூறூதுவார்கள் ஜீவனான பிராணிகளடங்கலு முயிர்த்தெழுந்து அறசாத்து வெளியில் னிறுத்தப்பட்டு கியாமநாளிற் கேள்விகணக்குக் கேட்கப்பட்டு மூமினாகிய ஜனங்களைத் தன்வரிசைகொண்டு சுவர்க்கலோகத்திற்குங் காபிர்களைத் தன் நீதங்கொண்டு நரகத்திற்கு யூழியூழி காலமிருக்கும்படி தீர்ப்புச் செய்கிறதும்,

மூமினாகயிருந்து பெரும்பாவஞ்செய்து தௌபாவில்லாமல் மவுத்தானவர்களை யவர்கள் செய்த பாவத்திர்க்குத் தகுந்தகூலி நரகத்திற்கொடுத்து சுவர்க்கத்திற் கனுப்புகிறதும் இன்னம் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மன்றாடுகிறதும் அல்லாகுத்தஆலா மூமீன்களில் அவனுடைய பெயர்களை அதாபில்லாமற் பிழைபொறுத்து சுவர்க்கத்திர்க் கனுப்புகிறது முண்மையாகயிருக்கும்.

அல்லாஹுசுபுகானஹு ஒத்தஆலாவின்
கட்டளையின்பேரி லீமான்கொள்கிற
விபரம்.

அதாவது அடியார்களின்செயல்களாகிய நன்மைதின்மை லாபநட்டம் வுசும்புதலொடுங்குதல் அடங்கலையும் படைத்தான் நன்மையான செயலுக்குப் பொருத்தங்கொண்டு வுபகாரஞ்செய்வான் தின்மைக்குப் பொருத்தமில்லாம லுபகாரஞ் செய்வான் நன்மைக்குத் தவாபுந் தின்மைக்கு அதாபுங்கொடுப்பான்.

ஹிக்காயத்து.

ஒரு ஆபிதுயிடத்தி லொருமனிதன்வந்து ஆய்ஆபிதே அல்லாகுத்தஆலா யெங்குமிருக்கிறதாய்ச் சொல்லுகிரீரே யவனை யெனக்குக் காட்டிக்கொடுமென்றும் பின்னு மெல்லாச்செயலும் ஆண்டவனுடையநாட்டப்படி யுண்டாகிறபடியால் மனிதன்செய்கிற பாவத்திர்க்குத்தெண்டனையில்லை நீர் அதர்க்கு விரோதம் பேசினால் யெம்பினை சொல்லுமென்று மின்னும் சைத்தானை நரகத்திர்ப்போட்டு அதாபு செய்யப்படுமென்று சொல்லுகிரீரே யவனை நெருப்பாற் படைக்கப்பட் டிருக்க வெப்படி நரகமவனைச் சுடுமென்று மிந்த மூன்றுகேள்விக்கும் ஜவாபு சொல்லுமென்று கேட்டான்.

அதர்க்கு ஆபிது ஒருமண்ணாங்கட்டியைக்கொண்டு அவன் தலையை யுடைத்தார்கள் உடனே யதன் வேதனையால் அழுதுக்கொண்டு

சுல்த்தானிடத்திற்போய்ச் சொல்லிமுறையிட சுல்த்தான் ஆபிதையழைத்து விசாரித்தார் அதற்கு நானவன் கேட்டகேள்விக்கு ஜவாபுசொன்னனேதவிர வேறில்லையென்று ஆபிதுசொன்னார், அதுகேட்டு சுல்த்தானதின்விபர மெப்படியென்றுகேட்க அல்லாகுத்த ஆலா யெங்குங் காணிர் நாலிருகவிருக்க வவனைக்காட்டச்சொன்னன் ஆகச்சே யிவனுடைய தலைவலியை யென்கண்ணுக்குத் தெரியும்படிகாட்டினு லவனையுநான் காட்டுகிறேன் தின்மைசெய்தவனைத் தெண்டிக்கப்படாதென்றான் நானவனை யெறிந்தது ஆண்டவனுடைய நாட்டப்படி யாச்சுது யென்னைத் தெண்டிக்கிறமட்டு மெனக்கென்ன செயலிருக்கிறது சைத்தானை நரகம் வேதனை செய்யாதென்றான் அப்படியானு லிவனை மண்ணாற்படைக்கப் பட்டிருக்க அந்த மண்ணாங்கட்டி யிவனை யெப்படி நோவினைசெய்யுமென்றார்கள்.

சுல்த்தான் கேட்டுச் சரியான ஜவாபு சொன்னீர்களென்று ஆபிதைப்பார்த்து சந்தோசமுற்று மடையனையடித்துப் புத்திவருத்தித்துரத்தினார்கள் இந்தப்படி கிக்காயத்துல் லதீபாவில்வருகின்றன (பின்னர்) அல்லாகுத்த ஆலாவின்பேரி லீமான் கொள்கிறதற்கு ஃறுத்தாவது மேலே ஆமந்து பில்லாஹியில் சொல்லியிருக்கிற ஆறுசறுத்தாக் யிருக்கும்.

இசுலாத்தின்பயான்.

இசுலாமாகிறது அல்லாகுத்தஆலாவின் யேவலை யெடுத்து விலகலைத்தவிர்த்து நடப்பதாயிருக்கும் அதன் சறுத்தாவது அய்ந்தா யிருக்கும் (அதாவது) நபிசல்லல்லாகு அலைகிஒசல்லமவர்கள் திருவுளம் பற்றினார்கள் (புனியல்விசுலாம் அலாகம்சின்) இசுலாமார்க்கத்தைஅய்ந்து காரியத்தின்பேரி லெடுக்கப்பட்டது-அதில் (முதலாவது) (ஷகாதத்து அன்லாயிலாக யில்லல்லாகு ஒ அன்னமுகம்மதற் றசூலுல்லாகி) வணக்கத்திற்குப் பாத்திரமானநாயன் அல்லாகுத்த ஆலாவைத்தவிர யாருமில்லை முகம்மது நபிசல்லல்லாகு அலைகி ஒசல்லமவர்கள் அல்லாகுத்த ஆலாவின் திருத்தூதர்களாகயிருக்குமென்று பிசகறவறிந்து விண்ண

ப்பஞ்செய்கிறது (௨ - வது,) (ஒயிக்காமுஸ்ஸலாத்தி) தொழுகையை அய்ந்தொகுத்து நிலைபாடாகத்தொழுகிறது (௩ - வது) (ஒயீத்தாவுஸ் ஸக்காத்தி) நாற்பதிலொன்று வருடத்தி லொருதரஞ் சக்காத்துக்கொடுப்பது (௪ - வது) (ஒசௌமுறமுலான்) றம்லான்மாத மடங்கலுநோன்புபிடிப்பது (௫ - வது) (ஒகஜ்ஜுல்பைத்திமனிஸ்ததா அயிலைகிஸபீலா) மக்கத்திர்க்குப்போய்வரத் திராணிபெற்றவன் கருபத்துல்லாவிற்போய் ஹச்சுச் செய்வதுமாக யிருக்கும்.

(இனி) ஈமானுகிறது வுள்ரங்கமாகிய வழிப்பாடாகவு மிசுலாமாகிறது யேவலுக்கு வுள்ரங்கத்திலும் வெளிரங்கத்திலுந் தலைசாய்த்து வழிப்படுகிறதா யிருப்பதா லீமானு மிசுலாமும் முதுகும் வயிறுந் தசையு நகமும்போ லொன்றுயிருக்கும் அசு அரியாக்களிடத்தி லீமானுகிறது வுள்ரங்கமான வழிபபாடாகவு மிசுலாமாகிறது வெளிரங்கமான வழிப்பாடாகவு மிருப்பதா லீமானு மிசுலாமும்வெவ்வேருகயிருக்கும்.

ஹதீது.

ஈமானுகிறது (எய) சில்வானங் கப்புகளாகயிருக்கு மதிலுயர்ந்த கொப்பாகிறது (லாயிலாக யில்லல்லாகு முகம்மதுறற சூலுல்லாகி) என்னுங் கலிமாவாகயிருக்கு மதிற்றணிந்த கப்பாகிறது பாதைவழிகளிற் கிடக்கின்ற முள் - முரடு - மண்ணாங்கட்டி முதலாகிய நோவினைசெய்கிற வஸ்துக்களை வழியைவிட்டு மப்புறமெடுத் தெறிகிறதா யிருக்குமென்று நபிசல்லல்லாகு அலைகிஒசல்லமவர்கள்திருவுளம்பற்றினார்கள்.

ஹிக்காயத்து.

அறபிராச்சியத்திற் தகிய்யத்தில் கல்பியென்றொரு இராஜ னிருந்தா ரவருடைய கையின்கீழாக அவர் பந்துக்களி லெழுநூறு ஜனங்களுண்டாயிருந்தார்கள் அவரிசுலாமானு லிந்த யேழுனூறுபெயரு மிசுலாமாவார்களென்று நபிசல்லல்லாகு அலைகி ஒசல்லமவர்கள் ஆதாவு வைத்து ஆண்டவனே தகிய்யத்தில்கல்பி யென்கிற விராசனைத் தீனி லிசுலாமிற் சேர்த்துவைத்தருளென்று துஆக் கேட்டார்கள் அது கபூலா

கிவிட்டது அப்பா லொருநாள் பஜுறுக்குப்பின் கலறத்து நபிசல்லல்லாகு அலைகி ஒசல்லமவர்களு மநேக மசுகாபுகளு மிருக்கும்படியான நேரத்தில் ஜிபுரீயீல் அலைகிஸ்ஸலா மவர்கள்வந்து அல்லாவுடைய றெசூலே அல்லாகுத்தஆலா தகியத்துல் கல்பியென்கிற மனிதனுடைய கல்பில் யீமானுடைய வொளிவை யழகாக்கிவைத்தா னவரிப்போது நங்களிடம் வருவார்களென்று சொன்னார்கள் கொஞ்சநேரத்திற்குள் அம்மனிதன் பள்ளிவாயலுக்கு வந்தவுடனே இவர் முன்னசுகாபுகளுக்குச்செய்த கெட்டேரத்தால் ஒருவருஞ் சங்கைசெய்யா திருக்கு நேரத்தில் அவர் தீனில்வருகிற மகிழ்ச்சியின்பேரில் நபிநாயகமவர்கள் தங்கள் பரிவட்டத்தைப் பூமியின்மீது விரித்து இதின்பேரி லிருமென்று சைக்கினைசெய்தார்கள் நபிநாயகமவர்க ளிவ்வித மவருக்குச் சங்கை செய்கிறதைப்பார்த்து அவ ரழுதுகொண்டு அப் பரிவட்டத்தை யெடுத்து முத்தமிட்டுக் கண்ணில்வைத்து நாயகமே யிசுலாத்தின் சறத்தென்ன வெனக் கறிவியுங்களென்று சொல்ல (லாயிலாக யில்லல்லாகு முகம்மதுற்ற சூலுல்லாகி) யென்னுஞ் சிறப்பாகிய கலிமாவைச் சொல்லிக்கொடுத்து யீமானிசுலாத்தின் விபரத்தை யறிவித்தார்கள் அவர்கள் கலிமாச்சொல்லி யிசுலாமாகியு மழுதுகொண் டிருக்கிறதைப்பார்த்து நீரிசுலாத்தில் வந்ததைப்பற்றி அழுகுறீரோ வேறே கருமத்திற்காக அழுகிறீரோவென்று நபிநாயக மவர்கள்கேட்க நாயகமே நான்செய்த பெரும்பாவத்தை அல்லாகுத்தஆலா யெப்படிப் பொறுப்பானென் றெண்ணியழுகிறேன் அதற்குத் தெண்டகுற்றமாக வென்னைத் தன்னைத்தான் வெட்டும்படி சொல்வீர்களானாலும் யென் முதலடங்கலையுஞ் சதக்காக் கொடுக்கும்படி யேவுவீர்களானாலுஞ் செய்யக் காத்திருக்கிறே னென்றுசொல்ல நீரப்படி யென்னகுற்றஞ் செய்தீரென் றுநபிநாயகங்கேட்டார்கள் அவர் நபிநாயகத்தைப்பார்த்து அல்லாவுடைய றெசூலே யெனக்கு (எ௰) பெண்மக்களிருந்தார்கள் நாம் அறபிராஜனாகை யிருக்க அந்தப் பெண்மக்களைக் கலியாணஞ் செய்துகொடுத்து அவர்களுக்கு நாம் தாழ்மையாக நடப்பது கேவலமென்றெண்ணி யென்கையால் அப்பெண்மக்கள் எழுபது பெயரையுங் கொன்றுபோட்டேனென்று சொல்ல

நபிநாயகமவர்கள் கொஞ்சநேரஞ் சும்மா யிருந்தார்க ளுடனே ஜிபுரீலலைகிஸ்ஸலாமவர்க ளிறங்கி அல்லாகுத்தஆலா தன் வலுப்பத்தின்பேரிலுஞ் சிறப்பின்பேரிலுஞ் சத்தியஞ்செய்து தகிய்யத்துல் கல்பி அறபனவருடஞ்செய்த குபிர் நடத்தைகளை அவர் (லாயிலாகஇல்லல்லாகு முகம்மதுற்றசூலுல்லாகி)யென்னுங் கலிமாவைச்சொல்லி யிசுலாமானவுடனே நான் பொறுத்துவிட்டே னப்படிக்கிருக்க வவர்செய்த வெழுபது கொலையுடைய பாதகங்களை யெப்படிப் பொறுக்காம லிருப்பேனென்று தகிய்யத்தில் கல்பி யென்பவனுக்குச் சொல்லும்படி சொல்லி யென்னை யனுப்பினானென்று ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்கள் சொல்ல வுடனே நபிநாயகமவர்களு மசுகாபுமார்களும் அழுதுகொண்டு ஆண்டவனே தகிய்யத்தில் கல்பி யென்பவ னொருவிடுத்தங் கலிமாச்சொல்லி யீமான்கொண் டிசுலாமானவுடன் அவர்செய்த பாவங்க ளடங்கலையும் பொறுத்துவிட்டாயே மற்ற மூமினான மனிதர்களுடைய பாவங்களை அவர்களோதிவருகின்ற சங்கையாகிய கலிமாவின் பொருட்டால் நீ பொறுக்க வல்லமை யுடையவனா யிருக்குமென்று அல்லாகுத்த ஆலாவை மிகவும் புகழ்ந்தார்கள் இச்செய்தி அபுபக்கர் றலியல்லாகு அன்கு அவர்களைத்தொட்டும் துற்றத்தென்னுங் கித்தாபில் வருகின்றன (ஆதலால்) யெனதன்புற்ற முசிலிமாகிய வுடற்பிறப்புக்களே மாய வஞ்சகனான இபுலீசுடைய வலையினுட் சிக்கிக்கொள்ளாமலுங்களுடைய தெளிவாகிய அறிவென்னுங் கண்களா லீமானுடைய மகிமையையு மதினுடைய தறஜாவையு நோட்டமிட்டந்த யீமானுடைய விபரங்களை நன்குயறிந்து நல்லமற்களைச் செய்துவருவீர்களாகவும் நம்ம லியாவருக்கு மல்லாகுத்தஆலா பிழைபொறுத்து ஒதேவித்தனம் பெற்ற மூமீன்களுடைய கூட்டத்திலாக்கி நங்களை சேர்த்துவைப்பானாக ஆமீன்.

{ றித்தத்தென்னுங் குபிர் நடத்தைகளின் பாபு }

றித்தத்து யென்பதின் பொருளாவது முசுலிமானவர்க ளொருந்தி ரானசெயலைச் செய்வதாற் தீனிலிசுலாமென்னுஞ் சங்கையானமார்க்கத்தைவிட்டு நீங்கி யீமான் மாறிப்போகிறதின்பெயர் (இனி) அந்த றித்

தத்தென்னுங் குபிர்வகை யநேகமுண்டு மதில் முக்கியமா யறியவேண்
டியவைகளை முறுசிதென்னுங் கித்தாபிற் சிலதையும் ஷறகு பிக்குகுல்
அக்பறென்ற கித்தாபிற் சிலதையும் இருஷாதென்ற கித்தாப்பிற் சில
தையும் றத்துல்முக்தாறென்ற கித்தாபிற் சிலதையும் பேசிவருகிறார்க
ள் (அதாவது) சொல்லாலுஞ் செயலாலு நிணைபத்தாலும் மன மூர
ண்டாலுங் கேலி பரியாசத்தாலுங் குபிர்வந்து சம்பவிக்கும் அதின்விப
ரம் வுலோகமாகிய ஆலங்கள் பூர்வீகமென்னுந் துவக்கமில்லாததென்
று நிணைபங்கொண்டவர்களும்' அல்லாகுத்த ஆலாவுக்கு வாஜிபாகி
ய சிபத்துகள் ஹயாத்து நாட்டந் தத்துவமிவைபோலொத்தது யில்லை
யென்று நிணையங் கொண்டவர்களும் அல்லாகுத்த ஆலாவுக்குச்
சொல்லத்தகாத சிபத்துகள் நிறங்கள் சேருதல் பிரிவுத லிதுபோலொ
த்தது வுண்டுமென்று நிணையங் கொண்டவர்களும்' மோதாளங்க
ளைப்போல் வீண்வேலை விளையாட்டுகளின் கருவிகள் ஹறுமல்லவென்
று நிணையங்கொண்டவர்களும்' சுல்த்தானுக்கு மனம்போனபோக்
கில் நாடினதை ஹலாலாக்கவும் ஹறுமாக்கவும் வம்பறிசெய்யவு மாகு
மென்று நிணையங்கொண்டவர்களும்' மவுத்துக்குப் பின் னெழுப்பு
வதில்லையென்றுஞ் சொற்க நரகமில்லையென்றும் கேள்வி கணக்குக்கே
ட்கிற தில்லையென்று நிணையங் கொண்டவர்களும்' யெகூதி நசாறுக்
கள் நபிநாயகத்தின் காலத்திலிருந்து கியாமநாள்வரை யி லுள்ளவர்களை
காபிறென்கிறதில் சந்தாபித்தவர்களும்' இவ்விதஞ் சொன்னவர்களும்'
அல்லாகுத்த ஆலாவின் திருநாமங்களி லொன்றைப் பரியாசஞ்செய்தவ
ர்களும்' அவனுடையவேலையு மவன் சொற்கந் தருவேனென்று வார்
த்தைப்பாடு செய்ததையும் நரகத்தைக்கொண் டச்சம் பூட்டிவித்ததை
யும் பரியாசஞ்செய்தவர்களும்' (இன்னும்) அல்லாகுத்த ஆலா யென்
பிள்ளையை யநீதமாக மவுத்தாக்கி விட்டானென்று' சொன்னவர்களு
ம்' அல்லாகுத்தஆலா அநியாயக்காரனென்று சொன்னவர்களும்' மு
சிபத்துவந்தநேரத்தி லாண்டவனே யிருந்ததெல்லாம் பிடுங்கிக்கொண்
டாயே யினி யென்னசெய்வாயென்று சொன்னவர்களும்' நபிமார்களைப்
பொய்யர்களென்றுசொன்னவர்களும்' நபிமார்களைப் பரியாசமாகப்பே

சினவர்களும்' நபிமார்களைத் தூடணித்தவர்களும்' குறுஆனுடைய ஒரு அட்சரத்தையாவது பெலவந்தமாகிய கதீதுகளி லொரு அட்சரத்தையாவது மார்க்கத்தினுடைய குக்குமுகளி லொரு குக்குமையாவது தூஷணித்துக் கேலிபேசினவர்களும்' யெல்லா இமாம்களுடைய சொற்படிக்குங் ஹறுமாகியசெய்கை விஞ கள்ளுண்ணல் வட்டிவாங்கலிவை போலொத்த செயற்களை ஹலாலென்று சொன்னவர்களும்' யெல்லா இமாம்களிடத்திலும் பறுலாகிய செய்கை அய்ந்தொகுத்துத் தொழுகைகளை அல்லது பறுலாகிய ஒரு றக்காயத்தை அல்லது ஹஜ்ஜு இவ்வை போலொத்ததை பறுலு அல்லவென்று அல்லத்தட்டினவர்களும்' தொழுகைக்கு அல்லது வேறொன்றிர்க்கு தயம்முஞ்செய்கிறதைப்பார்த்துப் பரியாசஞ்செய்தவர்களும்' லாஹவுல ஒலாக்கூவ்வத்த யில்லாப் பில்லாகில் அலியில் அலிமென்று சொன்னவர்களை அல்லது தும்மலுக்கு ஜவாபு யெறகுமுக்கல்லாவென்று சொன்னவர்களை அல்லது திக்கிர்செய்கிறவர்களை அல்லது குறுஆன் ஓதுகிறவர்களை அல்லது தொழுகிறவர்களை இதெல்லா முனக்கு யென்ன பிரயோசனங் கொடுக்கப்போகிறதென்று சொன்னவர்களும்' ஒரு முசிலிமை அவனிற் குபிர் நடத்தையில்லாதிருக்க காபிரென்று சொன்னவர்களும்' அல்லாவைப் பயப்படமாட்டேனென்றுங் கியாமநாளைப் பயப்படமாட்டேனென்றுஞ் சொன்னவர்களும்' அல்லாவுடைய முனிவு ஆலீங்க ளடங்கல்பேரிலாயிருக்குமென்று சொன்னவர்களும்' ஆலீங்களைப்போலவும் பெரியோர்களைப்போலவும் வேசம்போட்டு ஒருயிடத்திற்கூடி யெல்லோர்களுஞ் சிரிக்கும்படி செய்தவர்களும்' ஒரு ஆலிமுடைய பத்துவாவை தூஷணமாகத் தூர் யெறிந்தவர்களும்' ஒரு ஆலிம் ஹக்கானவார்த்தைகளைச்சொல்லி வஅலு நசீகத்துச் செய்ததர்க்காக யாதொரு பிசகு அவர்பேரி லில்லாதிருக்க அவர்பேரிற் கோபமானவர்களும்' நமதுமார்க்கத்தை இந்தமார்க்க மென்னவென்று தூடணமாகப் பேசினவர்களும்' பணங் காசுகளுக்காக யிசுலாத்தைவிட்டு நீங்கி மறுபடி யிசுலாமிலிடலாமென்று மேலெண்ணம் வைத்தவர்களும்' அல்லது தீனுடைய யில்மைக்காண ஒரு சிக்கருச்சோறு யேற்றமென்று சொன்னவர்க

ளும்' நீ மனிதர்களுக்கு யேவல்விலகலே யேன் அறிவிக்கிறு யில்லை
யென்று சொன்னதர்க்கு மார்க்கத்தின்பேரில் பொருத்தக்கேடாக யி
ந்த வீண்வேலையில் எனக்கென்ன பிரயோசன மென்று சொன்னவர்
களும்' பெண்சாதியைப்பார்த்து நீ யெனக்கு அல்லாவிலும் றசூலிலு
மிகப் பிரியமாக யிருக்குமென்று சொன்னவர்களும்' ஒரு முசுலிமை
அநீதமாக அடிக்கிறவனைப்பார்த்து சந்தோசமாக நல்லவேலை செய்தீ
ரென்று சொன்னவர்களும்' இசுலாமார்க்கத்தைப் படித்துத்தாருமென்
று கேட்டு யிசுலாமாக வந்தவர்களுக்குக் கொஞ்சம் பொறுமென்று
சொன்னவர்களும்' யீமானென்னவென்று கேட்டதர்க்கு அது எனக்
குத் தெரியாதென்று சொன்னவர்களும்' நபிசல்லல்லாகு அலைகிவசல்
லம அவர்கள் ஜின்பிறவியாக யிருந்தார்கள் அல்லது கறுத்த மனித
ராக யிருந்தார்கள் அறபிதேசத்திர்குமாத்திரம் நபியாகயிருந்தார்களெ
ன்று சொன்னவர்களும்' நபிசுலைமான் அலைகிஸ்ஸலா மவர்கள் துன்யா
வின்பேரில் மிகவும் ஆசையுள்ளவர்களாக யிருந்தார்களென்று சொன்
னவர்களும்' இவைகளை நிண்ணயங்கொண்டவர்களும்' யெல்லாநபிமார்
களும் பனுவாகி மண்ணுகப்போனார்கள் ஒருவேளை கபுறிலே இல்லை
யென்று சொன்னவர்களும்' ஒரு சாலிகான தொழுகையுள்ள மனிதன்
தொழுகையில்லாதவர்களை நோக்கி நீங்கள் யேன் தொழுகாமலிருக்கு
றீர்கள் தொழுதுவந்தால் அநேகம் பலனும் மோட்சமிருக்குது தொ
ழுதுவாருங்களென்று சொல்லத் தொழுகிறவர்க ளெல்லாங் கனைவழி
யேபோனால் நாங்கள் கம்மாவழிபோவோமென்று தீனின்பேரில் இக
ழ்ச்சியாக சொல்லிப் பரியாசஞ்செய்தவர்களும்' ஒரு பாடலை அல்லது
ஒருபைத்தை வைத்துக்கொண்டு எங்களுக்கு வேதமென்றாலுங் குறு
ஆனென்றாலு மிதுதானென்று சொன்னவர்களும்' ஒருபாடலை அல்ல
து ஒருபைத்தைவைத்துக்கொண்டு இதில் யெல்லாமடங்கிவிட்டது யி
ந்தபடி நடப்பமேயல்லாது குறுஆனில் கண்டபடிக்கும் கித்தாபுகளிற்
கண்டபடிக்கும் நடக்கமாட்டோமென்று சொன்னவர்களும்' குறு
ஆனை வோதித் தவிலடித்து விளையாடினவர்களும்' நபியாத மலைகிஸ்ஸ
லாமவர்கள் கோதும்மைக் கனியைத்தின்றதால நாம பாவியாகினோ

மென்று சொன்னவர்களும்' இசுலாமார்க்கத்தைவிட்டும் வேறேமார்க்கத்தி லாகலாமாவென் றெண்ணினவர்களும்' இன்ன காரிய மிப்படியாகுமேயானல் நான் வேறே மார்க்கத்தி லாகிவிடுவேனென்று சொன்னவர்களும்' காபிர்களுக்கு புத்தைவணங்க வுபகாரஞ்செய்தவர்களும்' முசிலீமைக் குபிர்மார்க்கத்திற் சேர்ந்துவிடென்று சொன்னவர்களும்' நான் நபியென்று சொன்னவர்களும்' ஆயிஷா அம்மா அவர்களைப் படர் பேசினவர்களும்' நானுண்டவனை வெளிக்கண்ணாற் கண்டு அவனுடன் பேசினே னென்றவர்களும்' அபுபக்கறு - வுமறு - வுதுமான் - ஹஸி - ஹசன் - ஹுசைன் - பீவி பாத்திமா றெலியல்லாகு அன்கும் இவர்களை யேசினவர்களும்' நபிநாயக மிகுருஜிக்குப் போகவில்லையென்று சொன்னவர்களும்' குறுஆன்ஓதி குறுஆன்ஓதி வயிறுநிறைந்துபோச்சுதென்று தூடணமாகச் சொன்னவர்களும்' கட்குடிக்கும்போது ஆண்டவன்பெயரை தூஷணமாகப் பிசுமில்லாச்சொல்லிக் குடித்தவர்களும்' அல்லாகுத்தஆலா சுவர்க்கத்தைத்தந்தாலு முள்ளேபோகமாட்டேனென்று சொன்னவர்களும்' எனக்கிருக்கிற நசலையும் வருத்தத்தையும் பார்த்திருந்தும் நான் தொழுகாம லிருந்ததற்காக யென்னை ஆண்டவன்குற்றம்பிடித்தால் அவ னநியாயக்காரனு யிருக்குமென்று சொன்னவர்களும்' ஒரு பாவத்தைச் செய்துவிட்டு அதற்கென்ன நானென்னசெய்தேன் கையை நீட்டினு லொருபாவமென்று சொன்னவர்களும்' வயசில் அல்லது வருசத்தில் அல்லது மாத்தையில் அல்லது வாரத்தில் ஒருதரந் தொழுதாற் போதுமென்று சொன்னவர்களும்' தொழுகவில்லையாவென்று கேட்கிறவர்களுக்கு அதைவிட்டும் ஆண்டவனென்னைக் காப்பாற்றினுனென்று சொன்னவர்களும்' தொழுது வருகிறவனுக்கு மிடிமை வருமென்று சொன்னவர்களும்' நானிரகசியத்திலிருக்கிறே னெனக்கு ஹலாலென்றும் ஹறுமென்றும் பார்க்கவேண்டிய தில்லையென்று சொன்னவர்களும்' வெளியரங்கமான அமற்கள் தொழுகை நோன்பு யிவைபோலொத்ததை விட்டுவிடு காரிய மிரகசியத்திற்ற னிருக்கிறதென்று சொன்னவர்களும்' யெனக்கு ஆண்டவன் ஒகியிறக்கினுனென்று' சொன்னவர்களும்' நான் மவுத்துக்குமுன் சுவர்க்கலோகத்திற்குப் போய்

அங்குள்ள கனிவர்க்கங்களைத் தின்று கூறலீன்களைச் சேர்ந்தேனென்று
சொன்னவர்களும்' அல்லாகுத்தஆலா வென்னிடத்தில் வந்து சோறுக
றியாக்கித்தந்தான் சாப்பிட்டேனென்று சொன்னவர்களும்' அல்லாகு
த்தஆலா அறுஷின்மேற்று னிருக்கிறுனென்று சொன்னவர்களும்' ஒ
ருமனிதனுக்கு நானின்னவேலையை யின்னவிதமாகச் செய்தேனென்று
பொய்யாகச்சொல்ல வவன் ஒப்புக்கொள்ளாம லிருந்ததற்கு நான்சொ
ன்னதை அல்லா அறிவானென்று சொன்னவர்களும்' மலக்குகள் நபி
மார்கள்வந்து யென்னிடஞ் சாட்சி சொன்னாலு மொப்புக்கொள்ளமாட்
டேனென்று சொன்னவர்களும்' சோறுதின்றவுடன் நபிநாயகமவர்கள்
விரற்களைச் சூப்பினார்கள் நாமளுஞ் சூப்பிக்கொள்கிறது சுன்னத்தாகயி
ருக்குமென்று சொன்னதற்கு அதென்ன அசங்கியமான வேலையென்
று சொன்னவர்களும்' சோறு வொருமனிதன் முன்னாலே வைத்திருக்
க பிசுமில்லாச்சொல்லி யுண்ணுமென்று நாடாமல் மொத்தம்பிசுமில்லா
யென்று லோகப்பேச்சுக்குப்பதிலாக அல்லாவுடையகலாமாகிய அந்த
பிசுமிலைச்சொன்னவர்களும்' ஒலுவில்லாமல் அல்லது தயம்மு மில்லா
மல் வுறுப்புகள் சலாமத்தாகயிருக்கத் தொழுதவர்களும்' கயலுக்காரப்
பெண்பிள்ளையை ஜமாகுசெய்கிற தாகுமென்று சொன்னவர்களும்' கு
றுஆனுபத்து அல்லது ஹதீது ஷறகியத்தான யில்மு அல்லாவுடைய
பெயர் நபியுடையபெயர் மலக்குடையபெயர் யெழுதப்பட்டிருக்கிற க
டிதத்தை யல்லது ஓலையை அல்லது பலகைபோ லொத்தவைகளை நஜீ
சில் அல்லது காறல் துப்பாணிபோலொத்த அருவருப்பான வஸ்துவி
ன்பேரிற் றாஷணமா யெறிந்தவர்களும்' இன்னம் அக்கடிதம் ஓலை ப
லகைபோ லொத்ததிலும் பள்ளியிலுங் காறல் துப்பாணிபோலொத்த
வருவருப்பான வஸ்துவைத் தடவினவர்களும்' இன்னான் மலக்கல்
மவுத்தைப்போலே வந்து பிடித்துக்கொண்டானென்று சொன்னவர்க
ளும்' குறுஆனி லொருசொல்லைத் தன் புத்தியாற் கூட்டினவர்களும்'
குறைத்தவர்களும்' ஒரு மனிதனைப்பார்த்து அல்லாகுத்தஆலா வுனக்
கு யீமானைத் தராம லிருக்கட்டுமென்று சொல்லி பத்துஆ செய்தவர்
களும்' ஒரு மனிதன் மேன்மீசையை நறுக்கித் தாடிவைத்திருக்கிறதை

ப்பார்த்து புதுமைப்பட்டு யிதென்ன கெட்டசெயலாகயிருக்கிறது நன்ருகவில்லையே யென்று சொன்னவர்களும்' நீமூமினுவென்றுகேட்டால் மூமினென்று சொல்லவேணு மப்படிக்கில்லாமல் அல்லா நாடினுல் நான் மூமீன்தானென்று சக்குவைத்து இனிமேல் மவுத்தாகும்போது மூமீனுக மவுத்தாகிறதும் வேறேவிதமாக மவுத்தாகிறது மல்லாவுக்குத்தான் தெரியுமென்று நாடாமற் சொன்னவர்களும்' ஒருமனிதனைப் பார்த்து யென்னைக் காப்பாத்துகிற ஆண்டவனே யென்று சொன்னவர்களும்' சக்காத்துக் கொடுக்கக் கொடுக்க நீ - பக்கீருகிறதேதவிர வேரில்லையென்று சக்காத்தைத் தாடணித்துப் பேசினவர்களும்' ஒரு இராஜனுக்கு சுசூது செய்யச்சொன்னதர்க்குச் செய்யாவிட்டால் நம்மைவெட்டிப்போடுவானென்று பயங்கரமில்லாமற்சுசூதுசெய்தவர்களும்' புத்துகளுக்கு சுஜுகுசெய்தவர்களும்' சந்திரன் - சூரியன் - விளக்கு - பஞ்சா - கொடிமரம் - யிவைகளுக்கும் அவுலியாக்களுடைய கபுறுபோலொத்தவைகளுக்குஞ் சுஜூது செய்கிறவர்களும்' குறிகாரர்களிடத்திற் குறிகேட்டு அவன் சொன்னதை யொப்புக்கொள்கிறவர்களும்' புத்துகான் நசாருக்களின் விக்கிரக மிவைபோலொத்தவைகளுக்கு நேத்திக்கடன் நேர்ந்துகொள்கிறவர்களும்' மூகற்றமாத்தையில் பஞ்சாவைப்பேனென்று நேருகிறவர்களும்' அபுலியாக்களே சாகிபுமார்களே எனக்கிருக்கிற வியாதியைத் தீர்த்துவைத்தால் உங்களுக்கு ஒரு ரூபாய் தருவேன் அல்லதுவிளக்குக்கொடி சந்தனக்கூடு இதுபோலொத்தவைகளைச் செய்து வைக்கிறேனென்று சொல்லி அவுலியாக்கள் அல்லாகுத்த ஆலாவையன்றியே வியாதியையு நாட்டத்தையுந் தீர்ப்பார்களென்று நிண்ணயங்கொண்டு நேர்ந்தவர்களும்' புத்துகளுக்கு ஆடு-மாடு -கோழி வெட்டிப் பலிகொடுக்கிறவர்களும்' காபிர்களுடைய கோவில்களுக்கு அவர்களுடைய கோலம்போற் பூனூல் நெற்றியில் ராம மிவைபோலொத்த கோலம்போட்டு சாம்பற்பூசிக்கொண்டு போகிறவர்களும்' நட்சத்திரங்களால்த்தான் மழை பெய்யுமென்று சொன்னவர்களும்' நன்மையைப்படைக்க ஒருநாயனுந் தின்மையைப்படைக்க ஒருநாயனுமென்று சொன்னவர்களும்' நிண்ணயங் கொண்டவர்களும்' நபிசல்லல்லா

கு அலைகிஸசல்லமவர்கள் அறபி குறைசியல்லவென்று சொன்னவர்களு ம்' அவர்களை மக்கத்திற்பிறந்து மதினத்தி லுபாத்தானார்களென்று நா னறியமாட்டேனென்று சொன்னவர்களும்' காபிர்களுக்கு ஆயுதபூசை திருக்கார்த்திகை தைப்பொங்க லிதுபோலொத்த விசேஷமான நாட்க ளிற் சங்கையைநாடி அவர்களுக்கு வெகுமதிகொடுத்தவர்களும்' மன முரண்டாக கருபத்துல்லாவின் றிசையைத் தெரிந்திருந்தும் மற்றொரு திசையைப்பார்க்கத் தங்கடமன்றியே தொழுதவர்களும்' செய்த்தான்க ளைச் சுத்திசெய்கிறவர்களும்' பூசைசெய்து அவைகளைக்கொண் டுதவி தேடுகிறவர்களும்' (காபிராகிவிடுவார்கள்) நவூது பில்லாகி மின்கா அ ல்லாகுத்தஆலா யிவைகளைவிட்டும் நம்மைக் காப்பாத்துவானாகவும் ஈ மான் சலாமத்தாக யிருக்கிறதர்க்காக (அல்லாகும்ம நவ்விர் குலூபனா பினூறி மகுறிபத்திக்க யாஅல்லாகு அல் அமான் அல் அமான் மின்சா வாலில் யீமான் பிறகுமத்திக்க யா அறுகமற்றாகிமீன்) யென்றோதவும்.

றித்தத்தென்னுங் குபுர் நட்த்தைகளின் பாபு முற்றிற்று.

{முறுத்தத்துடைய குக்குமுகளின் பயான்}

இயாராகிலுமொருவன் மேலேசொன்ன றித்தத்தென்னுங் குபிர் வகைகளி லொன்றைச்செய்தாலுஞ் சொன்னாலுநிண்ணயங்கொண்டா லு மதைவிட்டு நீங்கித் தௌபாச்செய்து (ஐந்தாங்கலிமா) ஓதுவது க டமை இப்படி நீங்காமலுந் தௌபாச்செய்து கலிமாச்சொல்லி தீனி லி சுலாமென்ற மார்க்கத்தில் வாராமலுமிறந்துபோய்விட்டா லவ னூழியூ ழிகாலம் நரகவாதியாக யிருப்பான் நபிசல்லல்லாகு அலைகிஸசல்லமவர்க ளின் ஷபாஅத் தவனுக்கில்லை (இனி) யித்தாத்திருகிறவனாயி லவனிசு வா மாகாதிருந்தால் ஷாபியீ மதுகபின்படி அவன் சேர்க்கைசெய்த பெ ண்சாதி யவனைவிட்டுநீங்கிவிடுவாளென்றுஞ் சேர்க்கைசெய்யாத பெண்

சாதி வுடனே அவனைவிட்டு நீங்கிவிடுவாளென்றும் பத்துகுல் முகினெ
ன்கிற கித்தாபில்வருகிறது.

(இன்னும்) நம்மள் பிக்குஹு ஆலங்கீறி கிதாயா அயினி முதலா
கிய கித்தாபுகளில் வருகிறதாவது ஸிதீலிசுலாமைவிட்டுப் பிசகற நீங்கி
ன முறுத்தத்துக் காபிரா அறிந்தவர்களுடனே யவனை மார்க்கத்தி லெ
ழைத்து யெவ்விதத்தால் மார்க்கத்தைவிட்டு நீங்கினையென்று விசாரித்
து அவனுடைய சந்தாபங்களை நீக்கிக்கொடுத்து அவனைத் தலைசாய்க்கு
ம்படிசெய்து மார்க்கத்திற்சேர்த்து அவன் குபிர் நடத்தையைச் செய்த
வுடனே யவன் பெண்சாதி நீங்கிவிடுகிறபடியா லவனுக்கு அவளை மறு
படி நிக்காகு செய்வித்துக்கொள்ளவேண்டும் நிக்காகுசெய்யாம லவனு
டனே சேர்க்கக்கூடாது அவன்மார்க்கத்தில் வரமாட்டேனென்று சொ
ன்னால் சுல்த்தான்க ளவனைப் பிடித்து மூன்றுநாள்வரை கைதுகானவி
ல் வைத்து யிசுலாத்தி லழைக்கவேண்டு மழைத்து மூன்றுநாளில்வந்து
விட்டால் நல்லது யில்லையானால்வெட்டப்படு மவன்முதற்களை ஷாபியீ
மதுகபின்படி பைத்துமாலிற் சேர்க்கப்படும் நம்மள் அனபி மதுகபின்
படி அவனிசுலா மாகயிருக்குங் காலத்திற் சம்பாதித்த முதலை யனந்தர
ங் கொள்ளப்படும் முறுத்தத்தாயிருக்குங்காலத்திற் சம்பாதித்தமுதலை
பைத்துமாலிற் சேர்க்கப்படும் சுல்த்தான்களில்லாத்த தேசங்களி லவ
னை வுறவின்முறைக் கழைக்கிறதும் அவனுக்கு நிக்காகுசெய்துவைக்கி
றதும் அவனுடன் கலந்துறவாடி யிருக்கிறதும் அவன் செத்தால்த் தொ
ழுவித்தடக்கிறதும் (ஹறுமாயிருக்கும்) அவனுடைய பெண்சாதியை
யவனை விட்டு நீக்கப்படும் (ஆகையால்) முன்சொல்லப்பட்ட குபிர் ந
டத்தைகளைவிட்டு நீங்கிறதும் அவைகளை யுறிகிறதும் முசுலிமாகியஆ
ண் பெண் ணனைவர்கள் பேரிலுங் கடமையாக யிருக்கும் (குறுஆன்
சரீபில் அல்லாஹு சுபுகானகு ஒத்தஆலா திருவுளம்பற்றினதாவது)
நானுண்மையாக யிணையென்னுஞ் சிறுக்காகிய குபிர்நடத்தைகளை ஒ
ருக்காலும் பொறுக்கமாட்டேன் மற்றப்பாவங்களை நாடினபேர்க
ளுக்குப் பொறுப்பேனென்றும் இன்னுமொரு ஆயத்தில் ஆய்முசிலி

மான ஜனங்களே வுங்களில் யாராகிலுந் தீனிவிசுலாமென்னு மார்க்கத்
தைவிட்டு நீங்கி மறுபடி இஸ்லாமிற் சேராமல் காபிராக மவுத்தா
கிவிடுவார்களே யவர்கள்செய்த நன்மையான அமல்களடங்கலுந் துனி
யாவிலு மாகிறத்திலு மழிந்துபோய்விடு மவர்கள் நரகவாதிகள் அந்ந
கத்தி லூழியூழிகாலம் வேதனைப்படுவார்களென்று திருவுளம்பற்றினு
ன் (றத்துல் முகுத்தாறென்கிற கித்தாபில்) ஒரு மனித னொருவக்துத்
தொழுததின்பின்பு யீமான்மாறி யந்த வக்த்தில் தௌபாச்செய்து மீண்
டவுடன் வக்த்திருந்தால் அவன் அந்த வக்த்திற்றொழுதிருந்த அதாவா
ன தொழுகையைத் திருப்பித் தொழுகிறது பறுலாயிருக்கும் அந்த வ
க்த்திற்கு முன் தொழுதிருந்த தொழுகைகளை திருப்பித் தொழவே
ண்டிய கடமையில்லை பறுலான ஹஜ்ஜுசெய்த மனிதன் காபிராகி விட்
டால் கச்சை மறுபடி திருப்பிச்செய்கிறது கடமையாக யிருக்குமென்று
சொல்லப்பட்டிருக்கிறது.

{ முறுத்தத்துடைய அதாபின்பயான். ஹதீது. }

நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளம்பற்றினதாவது
காபிர்களுடைய கபுறில் (௯௯) பாம்பைச் சாட்டப்படும் அவைகளி
லொன்று பூமியிற் றன்னுடைய நஞ்சை யூதிவிடுமானால் ஒரு புற்பூடா
வது முளையாது அந்தப்பாம்பு கியாமநாளாகிறவரையு மவனையதாபுசெ
ய்யு மாகிறத்திற் காபிர்களை நரகத்திலாக்கினவுடனே ஒரு காபிரினுடை
ய தோலியின் கனம் (௭௨) முளம் அவன் பல்லு உகுதுமலைப் பிரமா
ணம் அவனிருக்கிற யிடம் மக்கத்திர்க்கு மதீனத்திர்க்கு மிடையிலுள்
ள விஸ்தீனமாகயிருக்கும் நரகவாதிகளுக்கு நரகத்திலிருக்குங் காலத்தி
லொரு பசியுண்டாகு மது முன்னிருந்தஅதாபிலுங் கடிசாகிய அதாபா
கிவிடு மொஜீபன மொஜீபனமென்று சத்த மிடுவார்கள் வுடனே பசி
யையாற்றுத திருகுகள்ளியைப்போலொத்த லதீகுயென்னு முள்ளைக்
கொடுக்கப்படும் மறுபடியுமொஜீபன மொஜீபனமென்று சத்தமிடுவா
ர்களப்போது விக்குதலையுடைய ஒருவகை ஓசீபனங் கொடுக்கப்படு

முடனே விக்கிக்கொள்ளு மப்போது துன்யாவில் விக்கிக்கொள்கிற ஒ
ஜீபனந்தின்றால் தண்ணீர் குடிப்பமேயென்று நினைத்துத் தண்ணீர் த
ண்ணீரென்று சத்தமிடுவார்க ளுடனே இரும்பு வகப்பைகளால் னரக
வாதிகள் ஜடலத்திலிருந்து புறப்பட்ட நாற்றமாகிய ஊன் முடிவறக்கா
ச்சப்பட்ட வெந்நீரை முகத்தி னீட்டப்படு முகத்திர்க்கருகே போனவு
டனே முகநொந்து வெந்துபோகும் தாகம் பொறுக்காமற் குடித்தவுட
னே வயிற்றுக்கு ளிருக்குகின்ற ஈரல் - குடல் இவைகளெல்லாந் து
ண்டந் துண்டமாக வறுந்து போய்விடு மப்போது நரகத்தின் வேலைக்
காரர்களைக் கூவிக்கூவி யழுவார்க ளப்போது நரகத்தின் வேலைபார்க்
கு மலக்குகள் ஆய் சனங்களே வுங்களுக்குத் துன்யாவி லிருக்கும்போ
து நபிமார்க ளுலமாக்க ளிவ்வித முறுமென்று வுங்களுக்குச் சொல்ல
வில்லையாவென்றுகேட்க நரகவாதிகள் சொன்னார்க ளென்று சொல்லு
வார்கள் பின்பு சபானியாக்க ளுங்களை ரட்சிக்க யெங்களால் முடியா
தென்று சொல்லிவிட்டுப் போய்விடுவார்க ளப்பா லிவர்களைக்காணப்
பெரிய வதிகாரியாகிய மாலிக்கி அலைகி ஸ்ஸலாமைக்கூவி யெங்கள் து
ன்பங்களை யாண்டவ னீக்கும்படி யுத்தரவு கேளுங்களென்று சொல்லி
யழுது கூப்பிடுவார்க ளவர்க ளாயிரம் வருடத்திர்க்குப் பின்பு இந்நரக
மே யுங்களுக்குக் கதியென்று சொல்லிவிடுவார்கள் அப்புற நம்மள் நா
யனைக்காணக் கிருபைசெய்ய யேற்றமானவர்களொருவருமில்லை யவனை
க் கூப்பிடுவோமென் றெண்ணி யாண்டவனே யாண்டவனே யெங்கள்
பேரில் மூதேவித்தன மதிகமாகிவிட்டது நாங்கள் வழிகெட்ட ஜனங்க
ளாக யிருந்தோ மிந்நரகத்தைவிட்டு மீட்சி யாக்கிவைத்தா லினி மாறு
செய்யமாட்டோ மென்று சொல்வார்கள் அப்போது நாய்களைப்போல
துரப்பட்டு அந்நரகத்திலேயே அதாபுப் படுங்கீ ளொத்தனை யெத்தனை
யோ வத்தாட்சிகள் காரணங்கள் துன்யாவிற் காட்டித்தந்தே னப்படி
யிருந்துங் குபிர்நடத்தைகளையும் பாவங்களையும்விட்டு நீங்காமற் செய்
திர்களே யாகையா லொன்று மென்னிடத்திற் பேசா திருங்களென்று
சொல்வான் அப்போது இனி நமக்கொரு கெதியுமில்லையென்றுசொல்
லிக் கைசேதப்பட்டு நரகத்திற் கூவிக்கூவி யழுதழுது வதாபும்பட்டு

க்கொண் டிருப்பார்கள் அல்லாகுத்தஆலா நம்மனைவரையு மதைவிட்
ந் காப்பாற்றுவானாகவும் யிந்தவிசேடமாகிய கதீதைத் திருமதியென்
ற கித்தாபிற் பேசிவருகிறார்கள்.

முதுத்தத்துடைய வதாபின்பயான்
முற்றிற்று.

தீனின்பேரிற் றரிபாடாக
யிருக்கிறதின்பயான்
நசிஹத்து.

தீனிலிசுலாத்தின்பேரிற் றரிபாடாகி யீமானைப் பேணிவரும்ப
டியாகிய யெமது பிறவி நேசர்களாகிய மூமினான நற்சனங்களே யிப்
போது சொல்லப்பட்டகுபிர்நடத்தைகளையு மிவைபோலொத்த குபி
ர்நடத்தைகளையுஞ் செய்து காபிராக மவுத்தாகி நரகவாதியானவர்க ள
ன்னரகத்திற்படுகிற அதாபுகளையும் வருத்தங்களையுங் கொஞ்சங் கவ
னித்து வுங்களின் றெளிவாகிய புத்தியா லாராய்ந்து அந்தக் குபிராகிய
சொற்கள் செயற்க ளெண்ணங்க ளின்னையங்க ளியாவையும் விட்டு
நீங்குவதைப் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள்.

ஏனென்றால் (அபூதறுதா றலியல்லாகுஅன்கு) அவர்கள் சொல்
லுகிறார்கள் நபிசல்லல்லாகு அலைகிஉசல்லமவர்க ளெனக்குப் பிராண
சிநேகிதராக விருக்கு மவர்க ளெனக்கு ஆய் அபூதறுதாவென்ற மனித
னே வும்மைத் துண்டுதுண்டாக வெட்டப்பட்டு நெருப்பிற்போட்டெ
ரித்துச் சாம்பலாக்கப்பட்டாலு நீரணுவளவாவது அல்லாகுத்தஆலாவு
க்கு யிணைவையாதையு மின்னந் தொழுகையை மனமுரண்டாக விட்
டவனுடைய அறுதிமானம் அவனைவிட்டுநீங்கிவிட்டதாதலால் நீர் தொ
ழுகையை விடாதையுங் கள்ளாகிறது தீங்குகளடங்கலுக்குந் திறவுகோ
லாக விருக்கு நீரதைக் குடியாதையுமென் றுரசியத்துச் செய்தார்கள்

இன்னும் (சஹீஹுல் புகாறி) யென்ற கித்தாபில்வருகிறது ஹப்
பா புறலியல்லாஹு அன்கு அவர்கள் சொல்லி வருகிறார்கள் நபிசல்லல்

லாகு அலைகி ஒசல்ல மவர்க ளொருநாள் சகுபத்துல்லாவீ னிழலிற்றங் கனின் கோதடியை மடித்துவைத்து அதின்பேரிற் சாய்ந்துகொண்டிரு ந்தார்கள் அப்போது நாயகமே அல்லாகுத்தஆலாவிடத்தி னமக்குதவி தேடுங்கள் துஆச்செய்யுங்களென்று சொல்லி முறையிட்டோம்.

அப்போது நபிசல்லல்லாகு அலைகி ஒசல்லமவர்க ளெங்களைப் பார்த்து வுங்களுக்கு முந்தினகாலத்திற் சில மூமீன்களை யீமானைவிட்டு நீங்காம லிருந்ததற்காகக் கொண்டுவந்து பூமியி னிறுத்தி மரமறுக்கி றவாளா லிரண்டு துண்டாகப் பிளக்கப்பட்டது இன்ன மிரும்புச் சீப் புகளா லவர்களின் றசைபைச்சீவப்பட்டது வப்படிச்செய்து மவர்களு டைய யீமானைவிட்டு நீங்காம லீமான்பேரி லொரோ யெக்கீனுக யிருந் தார்கள் நீங்களிக் காலத்தின் காபிர்களின் கெடுதிகளுக்குப்பயந்து பத றுகிறீர்கள் சபூர்ச்செய்யுங்க ளல்லாகுத்தஆலா நமக்கு யின்னஞ் சொற் பவேளையில் வெற்றி மாராயமாக்கிவைப்பானென்று திருவுளம் பற்றி னார்கள்.

ஹிக்காயத்து.

இபுனுல் ஜவுசி யிபுனுல் அஸியில்ப் பறுபறியைத்தொட்டும் பே சிவருகிறதாவது சாமி ராச்சியத்திலுள்ள முசிலிமாகிய ஜனங்களில் மூ ன்றுபெயர் தமையன் றம்பி மகா வீர சூரர்களாக வெகுகாலம் பீசபீற் செய்துக்கொண் டிருக்கச்சே ஒருதடவ லம்மூன்று பெயர்களையும் றூ மி நசாறுக்கள் கைப்பிடியாகப்பிடித்து அந்த றூமிகளி னிராசன் யிம் மூன்று பெயர்களுக்கு மென் பெண்மக்களை விவாகஞ்செய்துதந்து இ ராஜதானியை யுங்களி லொருவருக்காக்கித் தந்து விடுகிறே னீங்கள் முகம்மதிய்யா மார்க்கத்தைவிட்டு நீங்கி கிறீஸ்து மார்க்கத்திற் சேர்ந்து விடுங்க ளென்றதற்கு அம்மூன்றுபெயர்களு மெங்கள் தீனை யிந்தசொ ற்பமாகிய துன்யாவுக்குப் பகரமாக வொருக்காலு மல்லாவிணுணை வி ற்கமாட்டோ மென்றுசொல்லி யாமுகம்மதா வென்று சப்த மிட்டார்க ள் அப்புற மவ்வாசன் மூன்று கிடாரங் கொண்டு வரும்படி சொல்லி

யதில் செய்த்தூன்யெண்ணெயைவிட்டு அடுப்பில்வைத்து நெருப்பைப் போட்டு மூன்று நாட் காச்சப்பட்டது அம் மூன்று நாளிலு மோவ்வொரு நாளடங்கலிலு மிம்மூவரையுமக்கிடாரத்தினடுக்கக் கொடுபோய்விட்டு முன் சொன்னதுபோ லெங்களுடைய மார்க்கத்தி லாகிவிடுங் களப்படிக்கில்லாதிருக்கி லிக்கிடாரத்தி லுங்களைப் போட்டு விடுவோமென்று சொன்ன னதற்க்கு யிவர்கள் நீயெவ்விதஞ் செய்துவிட்டபோதிலு நாங்க ளெங்கள் தீனைவிட்டு நீங்கிற தில்லையென்று சொல்லிவிட்டார்கள்.

அப்பா லம்மூவர்களின் முந்தினவரை யக்கிடாரத்திற் போடப்பட்டது பின்பு அவருக்கிளையவரையும் போடப்பட்டது அதன் பின்பு யெல்லாருக்கு மிளையவரை யக்கிடாரத்தி னருகே கொடுவந்து நிறுத்தி தீனிவிசுலாமென்கிற மார்க்கத்தைவிட்டு நீங்கும்படியான பிரட்டுக ளநேகவிதமாகச் செய்யப்பட்டது அவைகளுக்கெல்லா மிவரஞ்சாமலுந் தீனைவிட்டு மாறாமலு நின்றார்.

அந்த சமையத்தி லச்சபையினின்றும் யில்ஜீயென்ற பெயரையுடைய வொரு காபிரானவனெழுந்து ஆய் இராஜனே நானிந்தமனிதனை யவனுடைய மார்க்கத்தைவிட்டு நீங்கும்படி செய்கிறே னென்றான் அப்போது இராஜ னவனைப்பார்த்து வுன்சொற்படி இவனை மார்க்கத்தை விட்டுத் திருப்ப வுன்னிட மென்ன தந்திரமிருக்கிறதென்று கேட்க யில்ஜி யென்பவன் அறபுதேசத்தார் பெண்களளவில் மிகவும் விரைந்தவர்களாக யிருக்குமென் றெனக்கு நன்றாத் தெரியு மானாலிந்த ரூமிதேசத்திலோ யென்னுடைய மகளைக்காண அழகான பெண்கிடையா தாதலா லென்னிட மிவனை நாற்பதுநாளைக்கி ஒப்பிவையுங்க ளப்படி ஒப்புத்தந்தா லிவனை யென்மகளுடன் தனித்துவைப்பே னானால் அவளிவனை மார்க்கத்தைவிட்டுத் திருப்பிவிடுவாளென்று சொன்னான்.

அப்படி இராஜ னவரை யில்ஜீயென்ற காபிர்வசமொப்பிவித்துவிட்டான் இவனவரைக் கொடுபோய்த் தன் மகளிடஞ் சேர்த்துக் காபி

யாதினையயுஞ் சொல்லி நீயிவனை யெவ்விதத்தாலாவது திருப்பி விடவே
ணுமென்று சொன்ன னப்போ திவளவனை நோக்கி அந்தமனிதனை எ
ன்னிடம் விட்டுவிடு அவனிடத்தி லுனக்காக வேண்டிய கருமத்தை நா
ன் முடித்துக் கொள்கிறே னென்று ளிவ்விதமாய் அவளுட னிவர் பக
லெல்லா நோன்பு பிடித்தவராகவு மிரவெல்லா மாண்டவனை நின்று வ
ணங்கினவராகவு மொரு சுமார் முப்பது முப்பத்தைய்ந்து நாள்வரையு
மவளிடந் தரிபட்டிருந்தார் இல்ஜி யென்றவன் றன்மகளைப் பார்த்து நா
னுன்னிட மொப்பிவித்த மனிதனை யென்னசெய்தாயென்று கேட்க நா
னவனையொன்றுஞ் செய்யவில்லை யவனுடைய சகோதரர்களிருவரு மிவ்
வூரில் மரணமடைந்திருப்பதா லவரை நானழைத்தா லந்த மனவருத்த
த்தால் வரமாட்டாரென்று பயப்படுகிறே னாகிலு மிராஜனிடத்திற்போ
ய் முன்சொன்ன நாற்பதுநாட் டவணையைத்தவிர வேறே தவணை கே
ட்டுக்கொண்டு என்னையு மிந்த விசுலாமான மனிதனையு மின்ன மொரு
புறதேசத்திர்க் கனுப்பிவையுமென்றாள்.

அப்படியே யில்ஜி யென்பவன் இராஜனிடம் போய்த் தவணை
யை யதிகப்படுத்திக்கொண்டு யிவ்விருவரையும் வேறொரு சிற்றூருக்
கனுப்பினான் அங்கே போயு மிவர் முன்போலவே பகலெல்லா நோன்
பு பிடித்தவராயு மிரவெல்லா மாண்டவனை நின்று வணங்கினவராயு மீ
ரண்டாவது கேட்டுக்கொண்ட தவணை முடிவதற்கு சுமார் நாலஞ்சுநா
ளிருக்கிறமட்டிலு மந்த வூரிற் றரிபட்டிருந்தார்.

அப்போதவள் சொல்லுகிறாள் ஆய் மனிதனே நீர் வலுப்பமாகி
ய ஆண்டவனைந் தஸ்பீகுசெய்துக் கொண்டிருக்கிறவராய் நான் காணு
கிறேன் ஆதலால் நானு மும்முடனே நீர் வணங்கிற ஆண்டவனை ஒப்பு
க்கொண்டு அந்த மார்க்கத்தி லாகிவிட்டே னென்முன்னோர்களின் மா
ர்க்கத்தை விட்டுவிட்டேனென்றாள் அப்போதவளிட மிவர் சொல்லு
கிறார் நாமினி யிவடமிருந்தால் நம்மை யிராஜன் யேதாவது வருத்தப்
படுத்தவும் போதுமாகச்சே நாமிதைவிட்டு மோடிப்போவதற்குத்

தந்திரமென்னவென்று கேட்டார் அப்போதவள் நானுமக்கொருதந்திர
ஞ்செய்கிறேனென்று சொல்லி யொரு குதிரையைத் தய்யார்செய்து அ
திலிருவருமேறி யிரவெல்லா நடக்கிறதும் பகலெல்லா மறைந்துகொள்
கிறதுமாக நடந்துபோனார்கள்.

இவ்வித மொரு யிரவெல்லா நடந்து வழிதுலைக்கும்போது வே
றே குதிரைக் குளம்படிச்சத்தங் கேட்டதுடன் முன்கிடாரத்தில் மரண
மடைந்த யிருவரையுஞ் சிலமலாயி கத்துகளுடன் வரக்கண்டார்கள் அ
ப்போது இளையவர் வந்தயிருவருக்குஞ் சலாஞ்சொல்லி யவர்களிருவரு
டைய சரித்திரத்தையுங் கேட்க யெண்ணைக் கொப்பரையில் மரணம
டைந்த யிருவருஞ் சொல்லுகிறார்கள் யெங்களை நீர்பார்க்கும்படி கிடா
ரத்திற் போடப்பட்டதுதான் தெரியும் அப்பவே நாங்களிருவரும் பெ
ருதவுசி யென்ற சொற்கத்திற் சேர்ந்துவிட்டோ மிப்போது நீர் கொண்டு
வந்திருக்கிற பெண்ணை யுமக்கு நிக்காகு செய்துவைப்பதர்க்கு ஷாகி
துக்காக யெங்களை யல்லாகுத்தஆலா அனுப்பியிருக்கிறானென்று சொ
ல்லி யப்பெண்ணை விவாகஞ் செய்து வைத்துவிட்டு அவர்கள் போய்
விட்டார்க ளிவர்களிருவருஞ் சாமிராச்சியத்திர்க்குவந்து சேமமுற் றிரு
ந்தார்க ளிது யிருசாதென்கிற கித்தாபில் வருகின்றது.

ஹிக்காயத்து

சுகைபு றலியல்லாகு அன்கு றிவாயத்துச் செய்ததாக ஸஹீகுல்
முசுலிமென்கிற கித்தாபிலும் ரூகுல்பயானிலும் சொல்லுகிற தாவது
நபிசல்லல்லாகு அலைகிவசல்லம்அவர்கள் திருவாய்மலர்ந் தருளினார்கள் யெ
ங்களுக்குமுன்பாக (யெகூனீ) நபிநாயகம் பிறக்கிறதர்க்கு (கூ0) வரு
டத்திர்க்குமுன்பாக நஜூறானென்னுமூரில் தூனவாசென்று ஒரு இரா
ஜ னுண்டாயிருந்தா னவனுக்கொரு மாந்திரியக்கார னிருந் தவனுக்கு
விருத்தாப்பியகால மாகிவிட்டபொழுது இராஜனிடத்தில்வந்து யென
க்கு வயசு காலமாகிவிட்டபடியா லென்னளவி லொரு சிறு பிள்ளையை
அனுப்பும் அப்பிள்ளைக்கு நான் வஞ்சனை சூனிய முதலானவைகளைப் ப
டிப்பித்துக் கொடுக்கிறேனென்று சொன்ன னப்படியே யிராஜா அப்

துல்லாகிபுனுத் தாமிறென்ற சிறுவனை யவனிடத்தி லனுப்பினான் அங்
குழந்தை போய்வருகிறபாதையில் யீசா நபியுடையமார்க்கத்தில் ஆலி
மான ஒரு ருகிபுண்டாயிருந்தார் யிக் குழந்தை போம்போதும் வரும்
போது மவரிடத்திலிருந்து அவருடைய வார்த்தைகளை சிலநாட் கேட்டு
க்கொண்டு வருகிறதாகயிருந்தது யிப்படியாக வவரிடத்தி லிருந்து தா
மதித்துப் போவதினால் மாந்திரியக்காரன் அடித்தா னதையிட்டு குழ
ந்தை ருகிபிடத்திற்போய் முறையிட்டதார்க்கு வீட்டுக்காரன் கண்டித்
தால மாந்திரவாதி தாமதப்படுத்திக் கொண்டாரென்றும் மாந்திரவாதி
கண்டித்தால் வீட்டுக்காரன் தாமதப் படுத்திக் கொண்டாரென்றுஞ்
சொல்லென்று ருகிபு யோசனை சொல்லிக்கொடுத்து அந்தப்படி நடந்
துவரும்போது ஒருநாட் பாதையி லொரு பெரிய துஷ்டமிருகம்வந்து
பாதையை யடைத்து மனிதர்கள் போகவர யிடமில்லாதிருந்தது அப்
போ தந்தப்பிள்ளை யொருகல்லைக் கையிலெடுத்து ஆண்டவனே யிந்த
ருகிபுனக்குப் பிரியமானவராக யிருப்பாராகில் யிம்மிருகத்தைக்கொன்
றுவிடென்று சொல்லிக் கல்லை யம்மிருகத்தின்பேரி லெறிந்தது.

வுடனே யம்மிருக மிறந்துபோக மனிதர்கள் முன்போற் புழக்க
மானார்கள் அதன்பிறகு அந்தப்பிள்ளை ருகிபுயிடத்தில்வந்து யிச்செய்தி
யையறிவிக்க மகனே வுனக்குயிவ்விதமானகாரண முண்டாகிவிட்டதா
லென்னைக்காண மிகவும் மேன்மையாகிவிட்டாய் மேலைக்கு வுன்னை அ
ல்லாகுத்தஆலா சோதிப்பா னப்போதென்னை நீகாட்டிக்கொடுக்காதே
யென்றுசொன்னா ரதுமுத லிக்குழந்தை பிறவிக்குருடு வெண்குட்டங்
கருங்குட்டமுதலான அநேகவியாதிகளைச் சொஸ்தப்படுத்துகிற தாகிவி
ட்டது யிச்செய்தியை அவ்வரசனுடைய மந்திரியான குருடன் கேட்ட
பொழுது அநேக வெகுமதிகளை யிப்பிள்ளைக்குக்காணிக் கையாகக்கொ
டுவந்து வைத்து யென்கண்ணை நீர்சொஸ்தப்படுத்தினா லிக்காணிக்கை
களை யெடுத்துக் கொள்ளுமென்றா னதற்கு வியாதிகளை ஆண்டவன்
தீர்ப்பானே யல்லாது யென்னா லொன்றுமில்லை நீ - அல்லாகுத்தஆலா
வை யொப்புக்கொண்டு யீமான்கொண்டா லுனக்காக நான் ஆண்டவ

ளிடந் துஆச்செய்வே னவனுன் கண்ணைச் சொஸ்தப்படுத்துவானென் றிக்குழந்தைசொல்ல அம்மந்திரி யந்நேர மீமான்கொண்டார் அப்பவே அல்லாகுத்தஆலா அவர் கண்ணிற்பார்வையைக் கொடுத்தா னதன்பின் அம்மந்திரி இராஜசபைக்குவந்து முன்வளமைபோ லிருக்குந் தானத்திற் கோல்காட்டி யில்லாம லுட்கார்ந்தார் இவரை இராசன் பார்த்து ஆச்சரியப்பட்டு இப்படி யுன்கண்ணைத் தெளிவாக்கினது யாரென்றதர்க்கு யென்னுடைய ஆண்டவ னெனக்குத் தெளிவாக்கித் தந்தானென்று சொன்னார்.

இதை யவ்வாயன்கேட் டென்னைத்தவிர வேறொரு நாயனுனக்குண்டோவென்று கோபமுற்றுச் சொல்ல மந்திரி யென்னையு முன்னையும் படைத்தவன் அல்லாகுத்த ஆலாவாக யிருக்கு மென்று சொன்னாரிதைக் கேட்டவுடன் அவரைப் பிடித் ததிக வருத்தப்படுத்தி வுனக்கிதைப் படித்துத் தந்தவ னியாரென்று கஷ்டப் படுத்தினதால் யெனக்கு யிப்பிள்ளைதான் படித்துத் தந்ததென்று சொன்னா ருடனே யக்குழந்தையைக் கொடுவரச்செய்து ஆய் மகனே யுன்னுடைய மாந்திரியப்படிப்பின் திறமையால் பிறவிக்குருடு வெண்குட்டங் கருங்குட்டமுதலான வநேக வியாதிகளைத் தீர்க்கிறாயென்று யெனக்குத்தெரியவருகிறதென்று சொன்னா னுடனே நானொருவருக்குஞ் சொஸ்தப்படுத்தக் கூடிய வல்லபத்தை யுடையவனல்ல ஆண்டவன் தான் சொஸ்தப்படுத்துகிறானென் றிக்குழந்தை சொன்னது தற்சணமே பிடித்து முன் மந்திரியைச்செய்ததுபோ லுனக்கு யிவ்விதம் படித்துத்தந்த தாரென்று அதிகக் கஷ்டப்படுத்தினா னதைப்பொறுக்கமுடியாமல் றாகிபை அக்குழந்தை காட்டியது வுடனே யவரைக் கொண்டுவந்து நீ யுன்னுடைய மார்க்கத்தைவிட்டு மீண்டுவிடென்று இராஜன் சொன்னான் யென்னைப்படைத்த ஆண்டவனொருவனேயல்லாது மற்றொருவரும் நாயனில்லை யுன்சொல்லுக்கு வழிப்படமாட்டேனென்று சொன்னார் வுடனே யந்தஇராசன் மரமறுக்கிற வாளைக்கொண்டு அந்த றாகிபை யிரண்டு துண்டாகப்

பிளக்கும்படியுத்திரவுசெய்து பிளக்கப்பட்டவுடன்மந்திரியைக்கொவேந்து யிப்பிரகாரம் ருகிபைச் செய்ததுபோலே செய்துவிட்டான்.

அப்பாலக் குழந்தையைக் கொண்டுவந்து மார்க்கத்தை விட்டு நீங்கிவிடென்று சொன்னா னக்குழந்தையினுடைய கல்பில் அல்லாகுத் தஆலாபேரி லீமான் தரிபாடாக யிருந்ததால் இராசனை மிகவுந் தூஷணித்து வுன்மார்க்கத்தி லாகமாட்டேனென்று விலகினவுடனே இராஜன் தன்சேவகர்வச மொப்பிவித்து யிந்தப்பிள்ளையை யின்ன மலைக்குக் கொண்டுபோ யம்மலையி னுச்சத்திலேற்றி பின்பு அந்தப்பிள்ளையிடத்தி லுன்னுடைய மார்க்கத்தைவிட்டு நீங்கிவிடென்று சொல்லுங்கள் நீங்கிவிட்டா லிவடத்திற்க்குக் கொடுவந்துவிடுங்கள் நீங்காவிடில் மலையி னுச்சத்திலிருந்து வுருட்டி விடுங்களென்று வுத்திரவு கொடுத்தனுப்பினான் அம்முறையே யக் குழந்தையைக் கொடுபோய் மலையி னுச்சத்திலேற்றிக் கேட்டார்க ளப்போதிக் குழந்தையானது ஆண்டவனே யிவர்களுடைய தீங்கைவிட்டு மென்னைக் காற்றுக்கொள்ளென்று துஆக்கேட்டது வுடனே யந்தமலைதுளும்பி யெல்லாரு முருண்டுவிழுந்து ஹலாக்காகிவிட்டார்க ளக்குழந்தைமாத்திரம் சலாமத்தாகி இராஜனிடத்தில் வந்தது.

வந்த குழந்தையைப்பார்த்து வுன்னுட னனுப்பினவர்களெங்கேயென்று கேட்டான் அவர்கள் செய்யவந்த துன்பத்தைவிட்டு மென்னை யாண்டவன் காப்பாற்றினா னவர்கள் ஹலாக்காகிவிட்டார்களென்றுசொன்னது பின்பு யின்னஞ் சிலசேவகர்கள்வச மிக்குழந்தையை யொப்பிவித்து வொருவத்தையி லேற்றி நடுக்கடலுக்குப் போனவுடன் அக்குழந்தையிடத்தி லுன்னுடையமார்க்கத்தைவிட்டு நீங்கிவிடென்று கேட்டு நீங்கிவிட்டால் கொடுவந்து விடுங்கள் நீங்காவிடிற் கடலிற் ருழ்த்திவிடுங்களென்று வுத்திரவுகொடுத் தனுப்பினான் அம்முறையே யக்குழந்தையை வத்தையிலேற்றிக் கடலிற்கொடுபோய்க்கேட்டார்க ளப்போ திக்குழந்தை ஆண்டவனே யிவர்களுடைய தீங்கை

விட்டு மென்னைக் காற்றுக்கொள்ளென்று துஆக் கேட்டது வுடனே
வத்தை புரண் டெல்லாருங் கடலிற்றாழ்ந்து ஹலாக் காகிவிட்டார்கள்
அக் குழந்தைமாத்திரம் சலாமத்தாகி யிராஜனிடத்தில்வந்தது வந்தகு
ழந்தையைப்பார்த்து வுன்னுட னனுப்பினவர்களை யெங்கேயென்று
கேட்டான் அவர்கள் செய்யவந்த துன்பத்தைவிட்டு மென்னை யாண்
டவன் காப்பாற்றின னவர்கள் ஹலாக்காகிவிட்டார்களென்று சொ
ன்னது.

அப்பா லவ்வரச னிக்குழந்தையை யெவ்விதமாகக் கொலைசெ
ய்யலாமென் றாலோசித்தா னவைகளை யறிந்து அக்குழந்தை இராஜ
னே நீ யெவ்விதமாக வென்னைக் கொலைசெய்யக் கருதினாலு முடியா
து யென்கிலு நான் சொல்லுகிறபிரகாரஞ் செய்வாயானால் நான் மவு
த்தாவே னதெப்படியென்றால் ஊர்ஜனங்க ளியாவரையு மொரு மை
தானி லழைத்து ஒரு யீத்தமரத்தின் கழுவின்பேரி லென்னைவைத்து
என்னுடைய அம்புக்கூட்டி விருக்கின்ற அம்புகளினின்று மொரு அ
ம்பையெடுத்து (பிசுமில்லாகி றப்பிலகுலாம்) இக் குழந்தையின் ஆ
ண்டவனுடைய திருநாமத்தால் அம்பை யெய்கிறே னென்றுசொல்லி
யெய்தால் நான் மவுத்தாவேனென்று சொன்னது.

அப்பா லக்குழந்தை சொன்னமுறைபோற் செய்து (பிசுமில்லா
கி றப்பிலகுலாம்) யென்றம்பை யெய்தா னுடனே யப்பிள்ளையின்
பொயக்கண்ணி லவ்வம்புதைத்து அக்காயத்தின்பேரிற் கையை வை
த்துக்கொண்டு மவுத்தாகிவிட்டது

இவைகளைப்பார்த்து மைதானிற்கூடிநின்ற ஜனங்களியாவரு மி
ப்பிள்ளையுடைய வாண்டவனைக்கொண்டு நாங்க ளீமான் கொண்டோ
மென்று சொன்னார்கள் இச்செய்தியை யவ்வரசனுடைய ஆட்கள் வந்
து இராஜனுக்குச்சொல்லி யிரண்டுமூன்று பெயர்க ளுன் சொல்லுக்
கு வழிப்படாம விருந்ததர்க்காகக் கொலை செய்தாயே யந்தயேதுவா
லூர் ஜனங்க ளியாவரு முனக்கு விரோதமாக யீமான்கொண்டுவிட்டா
ர்க ளென்றறிவித்தார்கள் இவைகேட்ட வவ்வரசன் அவ்வூர் முச்சந்

தியிலொரு பெரிதாகிய கிடங்கு தோண்டி யதினெருப்பைப் போட்டெ
ரிக்கும்படி செய்வித்து மனிதர்களை யீமானை விட்டு மீளும்படியான தந்
திரஞ்செய்து மீளாதவர்களை யந்நெருப்பிற் றள்ளும்படி யுத்திரவு செய்
தா னந்தமுறையே மனிதர்களைக்கேட்டு அவன் மார்க்கத்திற் றிரும்பின
வர்களைத் தவிர மற்றவர்களை யக்கிடங்கிற் றள்ளிக்கொண்டுவரும்போ
து வொரு பால்குடிப்பிள்ளையைக் கொண்டொரு பெண்பிள்ளை வந்து
சேர்ந்தா ளவளிடத்தி லிவ்விதங்கேட்க அந் நெருப்பின் வேதனையை
ப்பயந்து அவன் மார்க்கத்திற் றிரும்பிவிடுவோமாவென்று ஆலோசித்
தா ளப்போதவள் கொடுவந்த பேசத் தத்துவமில்லாத கைக் குழந்தை
யென் தாயே நீ யுண்மையான மார்க்கத்தி லிருக்கிறா யதலா லதைவி
ட்டுத் திரும்பிவிடாதே சபூர்ச்செய்து கொள்ளென்று சொன்னது அந்
நேரமே யக்குழந்தையையு மதின்றாயையு நெருப்பிற் றள்ளிவிட்டா ன
ப்பவே யந்நெருப்பு அவ்வரசனின் கோட்டை கொத்தளங்களிற் பிடி
த்து அவ்வரசனுக்கு மழிவு நேரிட்டது.

றிவாயத்து.

அப்துல்லாஹிபுனு அபூபக்கரைத்தொட்டு மிபுனு யிசுகாக்கு
யென்பவர்கள் பேசிவருகிறதாவது நஜுறானென்கிற தேசத்தி னின்று
மொரு பாழான பூமியை கறைத்து வமறிபுனு கத்தாபு றலியல்லாகு அ
னகு அவர்களுடையகாலத்தி லொருமனிதன் தோண்டினாரப்போதொ
ரு கபுறுக்குள்ளே அப்த்துல்லா கிபுனுத் தாமிறென்றசிறுபிள்ளை பொ
ய்க்கண்ணி லம்புதைத்த காயத்தின்பேரிற் கையை வைத்துக்கொண்
டுட்கார்ந்திருப்பதாகவு மந்தக் காயத்தைவிட்டு மனிதர்கள் கையையெ
டுத்தவுடன் யிரத்தங் கொப்பிளிக்கிறதாகவுங் கையை விட்டவுடன் ப
ழையபடி யம்புதைத்தகாயத்திற் கைபோ யிரத்தம் வாமற் றடுத்துக்
கொள்கிறதாகவு மக்குழந்தையுடைய கையில் (றப்பியல்லாகு) யென்
றெழுதப்பட்ட ஒருமோதிரங் கிடக்கவுங் கண்டார்கள் றப்பியல்லாகு
யென்றதின் பயான் யென்னுடைய ஆண்டவனாகிறவன் அல்லாகுத்தஆ
லா யிருக்குமென்பதாம்.

இச்செய்தியை கலறத்து பாறூக்குறலியல்லாகு அன்குஅவர்கட்கு யிவர்களெழுத இவர்க ளவர்கட்கு அப்பிள்ளையை முன் னிருந்தபடியேவைத் தடக்கஞ்செய்து விடும்படியாக யெழுத வதன்படி யடக்கஞ்செய்துவிட்டார்க ளிதர்க்காகத்தான் (ஷஹீதாக) மவுத்தானவர்களை மண்திண்ண மாட்டாதென்று நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைஹிஒசல்லமவர்க டிருவாய்மலர்ந்தருளினூர்கள் அல்லாகுத்த ஆலா நமக்கு யிவர்களின் துஆப்பேனா தருவானாக ஆமீன்.

ஹிக்காயத்து.

றவுலத்துல் வுலமாவென்னும் கித்தாபில் ஹசறத்து அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களைத்தொட்டும் வந்திருக்கிறதாவது நபிசல்லல்லாகு அலைஹிஒசல்லமவர்கள் காலத்தில் வுமய்யத்திபுனு கலபு யென்றகாபிருக்கு அநேகமுதற்களும் பிள்ளைகளு மடிமைகளு மிருந்தது யின்ன மவனு மவனைச்சேர்ந்தவர்களும் வணங்குகிறதர்க் கொரு புத்தைவைத்திருந்தா னவ னடிமைகளிற் றனக்கு மிகப் பிரியமுற்ற பிலாலென்ற அடிமையை யந்தப் புத்துக்குப் பணிவிடை செய்யும்படி யேற்படுத்தியிருந்ததில் அந்த பிலாலென்ற அடிமை யிந்தப் புத்துக்கு யெக்கீன் கொள்ளாமல் அல்லாகுத்தஆலா வொருவனென்று நின்னையங்கொண்டு புத்தைவைத்திருக்கின்ற வீட்டிற் சாட்டாங்கஞ் செய்யும்போது அல்லாகுத்தஆலாவுக்காக சுஜூது செய்கிறவராகவும் (அகது) ஒருவன் ஒருவனென்று சொல்லுகிறவராகவு மிருந்தார்.

இவ ரீமான்கொண்டிருக்கிறது நபிநாயகத்திர்க்குத் தெரிந்து மிகவுஞ் சந்தோசமுற்றூர்க ளப்பா லப்பிலாலென்கிற அப்த்து முகம்மதுநபியின் ஆண்டவனுகிய அல்லாகுத்த ஆலாவுக்கு யீமான்கொண்டு புத்துக்குச் சுஜூதுசெய்யாமல் அல்லாவுக்குச் சுஜூது செய்கிறது வுமய்யத்திர்க்குத் தெரிந்து ஆப் பிலாலே யென் சுவாமிகளை வணங்கிறாயா அல்லது முகம்மது நபியுடைய நாயனை வணங்கிறாயா வென்று வுமய்யத்திபுனு கலபென்பவன் கேட்க வம்பார்களையெல்லா மடக்கி யாசானும்

டியாகிய வொருவனுனை வுயர்த்தியுற்ற பெரியவனென் றெங்குந்துலங்கு மேழுவான மேழ்பூமியையு மிந்த விரண்டிற் கிடையிலுள்ளவைகளையும் படைத்தவனுமான முகம்மது நபியின் றப்பாகிய அல்லாகுத்தஆலாவுக்குத்தான் நான் சுஜூதுசெய்து வணங்குகிறனே யல்லாது வுன் புத்துகளை வணங்கவில்லையென்று னிகரத்துடஞ் சொன்னார்கள்.

வுடனே இவர்களை யஜனிசுலாமென்ற மார்க்கத்தைவிட்டு நீங்கும்படியான அதாபுகள் செய்யவுங் கஷ்டப்படுத்தவு மடிக்கவுந் துணிந்தா னின்னம் பகற்கடிசான வெயில்நேரம் வந்தவுடனே பிடித்துக்கட்டி நிருவாணமாக ஜடலமென்னு மெண்ணையைத் தேய்த்துச் சூட்டையுடைய மணற்களிலும் பாறைகளிலு முருட்டிக் காலிற் புரியைக் கட்டிச் சிறுபிள்ளைகளை யிழுக்கும்படி சிலகாலஞ் செய்கிறவனாக யிருந்தான் மணலின் சூடும் பாறைகளின் வெப்பும் வுடலிற்றுவி வருத்தமுண்டானவுடனே அகதாகியநாயனே ஒருவனாகிய நாயனே யென்று பிலால் சத்தமிட்டழுவார்க ளிப்படியிருக்கும்போது ஹலறத்து அபூபக்கர் றலியல்லாகு அன்கு அவர்கள் நடந்து போகிற வழியில் பிலாலவர்களை யவன் அதாபு செய்கிறதைப்பார்த்து ஆப் வுமய்யத் தென்கிறவனே இந்த அப்த்தை யெதுவனாக்குங் கஷ்டப்படுத்தி நோவினைசெய்வாயென்றுகேட்க நானிவனை என்முதலைக் கொடுத்துவாங்கினே னிவனை நோவினைசெய்கிறதற்கு நான் பாத்திரப்பட்டவனுனென்றுசொல்ல அல்லாவுக்கு யீமான்கொண்டு (லாயிலாக யில்லல்லாகு முகம்மதுற்ற சூலுல்லாகி) யென்று சொல்லும்படியான அடிமையை யதாபுசெய்கிறது வுனக்கு நல்லதல்லவென்று ஹலறத்து அபூபக்கர் றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்ல இரண்டுபேர்களும். மனவருத்தமான வார்த்தைகளைக் கொண்டு தர்க்கித்தார்கள் அப்பால் நீ-யிந்த அப்த்தை என்னவிலைகொடுத்து வாங்கினு யிப்பம் யென்ன விலையானு லெனக்கு கொடுப்பாயென் றிவர்கள்கேட்க ஒரு வெண்மையான அப்த்தையு மெண்பது களஞ்சிப்பொன்னையுங் கொடுத்து வாங்கினேனென் றவன்சொல்ல நல்ல தந்துவிலைக்கு நான் சம்மதித்தேனென்று அபூபக்க றலியல்லாகு அன்கு

அவர்கள்சொல்ல வுமய்யத்திபுனு கல்பென்பவன் நீரிப்படியென்னயோ
சினையில்லாமல் அதிக விலைக்குக் கேட்டுவிட்டீரோ யொரு திருகத்திர்க்
குக் கேட்டாலுந் தந்துவிடுவேனென்று சொன்னனப்போ திவர்கள்
நீ எனக்குச் சகாயமான விலைக்குத் தந்துவிட்டா யென்முத லடங்கலை
யு மிந்த அப்த்துக்குப் பகரமாக விலைகேட்டாலுந் தந்துவிடுவேனென்
றுசொல்லி விலையைக்கொடுத் தந்த பிலால் றலியல்லாகு அன்கவர்களு
டைய கையைப்பிடித்துத் தங்கள்மேல் வேட்டியைக்கொண்டுமூடி முக
த்திலிருந்த மண்ணைத் துடைத்து நபிசல்லல்லாகு அலைகி ஒசல்ல மவர்க
ளுடைய சமுகத்திற் கொடுவந்துவிட்டு குறைசிர் கூட்டங்களே நானிந்
த அப்த்தை அல்லாவுக்காக வுரிமைவிட்டு நமது நாயகம் நபிசல்லல்லா
கு அலைகிஒசல்லமவர்களுடைய பணிவிடைக்காக வொப்புக்கொடுத்து
விட்டேனீங்களெல்லோர்களு மிதர்க்கு சாகிதாக விருங்களென்று அ
பூபக்கர் றலியல்லாகு அன்கு அவர்கள் சொன்னார்க ளுடனே யல்லாகு
த்தஆலா (ஒல்லெய்லி) யென்கிற சூறத்தில் அபூபக்கர் றலியல்லாகு அ
ன்குஅவர்களைப் புகழ்ந்திரக்கினன்.

நசிகத்து.

ஆய் தீனோர்களாகிய எமது பிரியமுற்ற யிகுவான்களான தோ
ழர்களே யிப்பேர்க்கொத்த நல்லோர்களாகிய நல்தீனின்பேரில் ஒரே வு
றுதியாக யிருந்து துன்யாவினுடைய கஷ்டங்கள் - அதாபுகள் வேதனை
கள் இவைகளைக் கிஞ்சமு மஞ்சாமல் ஆகிறத்தி னதாபை மிகவும்பெரி
தென்று நினைத்து வுயினை வெறுத்து மார்க்கத்தைவிட்டு நீங்காம லொ
ரே யெக்கீனக யிருந்தார்களே யவர்களின் கூட்டத்தாவிலுங்களுடை
ய கூர்மையான புத்தியைச்செலுத்தி யாராய்தல்செய்து கவனித்துப்பா
ருங்கள் நீங்கள் யிலேசாகிய கஷ்டமான காசசற் றலையிடி முதலிய தங்க
டங்களுக்கு சபூர்செய்யாமற் காபிர்களிடத்திற் குறிகேட்கவுஞ் சாதகங்
கணிக்கவும் செயித்தானைட்டவுஞ் சாந்தி கழிக்கவும் புத்துகளுக்கு நே
ரவும் கோயிற்களுக்கு மாதாந்தம் வெள்ளி திங்கட்போகவு மின்னு
மநேகவிதமாகிய குபுர் நடத்தைகளைச்செய்து மார்க்கத்தைவிட்டு நீங்

இவிடுகிறீர்கள் அப்படி இதனை விட்டு நீங்கிவிடுகிறது ஆகிறத்திற் பெரித்
திய கஷ்டத்திற்கு மூழியூழிகாலம் நரகத்தில் றெண்டனைப் படுகிறதற்
க்குங் காரணமாகிவிடும் (ஆகையால்) குறு ஆனில் துன்யாவுடைய வா
ழ்வு மின்பமு மாகிறத்தளவில் சேர்த்துப் பார்த்தால மிகவு மற்பமே
யொழிய வேறில்லையென்று அல்லாகுத்தஆலா திருவுளம்பற்றினான்.

(சஹிகுல்முசுலி) மென்கிற கித்தாபில் வருகிறதாவது துன்யாவி
ல் மிகச் சந்தோசமாகவும் மகிழ்ச்சியாகவும் பாவங்களைச் செய்து நரகத்
திற்குப் பாத்திரப்பட்ட மனிதர்களில் துன்யாவில் மிகவும் மகிழ்ச்சி
சந்தோச மெக்களிப்புமாக யிருந்த வோர்மனிதனைக் கியாமநாளிற் கொ
டுவந்து நரகத்திற் சற்றுநேரம் வைத்திருந்து யெடா ஆதமுடைய மக
னே நீ-துனியாவி லிருக்குங்காலத்திற் கொஞ்சமாவது மகிழ்ச்சி யடை
ந்தாயா வென்று கேட்கப்பட்டா லவனந்நரகத்தி னதாவைப் பார்த்தவு
டனே முன் தான் துன்யாவி லனுபவித்த சுகங்களையெல்லாமறந்து அ
ல்லாவினாணை நாமொருகாலு மகிழ்ச்சியடையவில்லை யென்றுசொல்வா
ன் இன்னமொருமனிதன் துன்யாவி லிருக்குங் காலமெல்லா மனிதர்க
ளியாவரினு மிகக் கேவலத்தையடைந்து தரித்திரப்பட்டு கஷ்டத்தோ
டிருந்து அல்லாகுத்தஆலாவைப் பயந்து நல்ல அமற்களைச்செய்துசொ
ற்கத்திற்குப் பாத்திரமானவனைக் கொடுவந்து சற்றுநேரம் சொற்கத்
திற்குள்வைத்து எடா ஆதமுடைய மகனே. நீ- துன்யாவி லிருக்குங்
காலத்தி லெப்பவாவது கஷ்டத்தையடைந்தாயாவென்று கேட்கப்பட்
டா லவன்முன் துன்யாவி லனுபவித்த கஷ்டமடங்கலையு மறந்து அல்
லாவி னாணை நான் துன்யாவிலிருக்கும்போது கஷ்டமடையவேயில்லை
யென்று சொல்வானென்றதாக நமதுநாயகம் நபிசல்லல்லாகு அலைஹி
சல்லமவர்கள் திருவுளம்பற்றினார்கள் (ஆதலால்) துன்யாவின் கஷ்ட
முசிவிமான ஜனங்களுக்கு ஒருபோதுங் கஷ்டமேயில்லை யவர்கட்கு
அதிலுடைய மகிழ்ச்சி யொருபோது மகிழ்ச்சியேயில்லை துன்யாவின
சுகங்க ளடங்கலு நித்திரையிற் காணுகின்ற பல கனவுகளைப் போலாக
யிருக்குமிதற்காகத்தான் நாதாக்களென்னும் பெரியோர்களடங்கலும்

துன்யா தங்களை விட்டு நீங்கிறதற்கு முன்பாக வதைவிட்டு மவர்கணீங்கி ஆகிறத்திற்கு வேண்டிய சவாதாக்களென்னு நல்லமற்களைத் தெண்டித்து அல்லாகுத்தா ஆலாவின்திருச்சமுகத்தில் வெகுமதிகிடைக்கும்படியாகவு மவனுக்குச் சந்தோசமுடையவர்களாகவுமாகிவிட்டார்கள்.

இப்படிக் கிருப்பதால் துன்யாவினுடைய சொற்ப வின்பத்துக்காக தீனைவிட்டுநீங்கிக் காபிர்களாகி விடுகிறது புத்திவான்களுடைய செய்கை யல்லாததாகயிருப்பதால் தீனின்பேரிலே தரிபாடாக யிருப்பதும் அல்லாகுத்தஆலாவினுடைய கட்டளைகளுக்குச் சபூர்செய்வதும் எல்லோர்கள்பேரிலுங் கடமையாகயிருக்கும் நம்ம ளெல்லோரையுந் தீனின்பேரிற் றரிபாடாக யிருக்கும்படி அல்லாகுத்தஆலாநல்லுதவிசெய்வானாகவும்.

(இனி) யாராவது குபிராகிய நடத்தைகளைச் செய்துவந்தவர்கள் அதைவிட்டு நீங்கித் தௌபாச்செய்து மீண்டு வச்செய்கையின்பேரிற் கைசேதப்பட்டு யினிமே லிப்படியான செய்கைகளுக்கு வுட்படக்கூடாதென்று கல்பிற் கருதிக் கலிமாச்சொல்லித் தீனிலிசுலாமென்ற மார்க்கத்தளவில் மீளவேண்டியது பறுலாகயிருக்கும்.

முந்தின நபிமார்களி னும்மத்துகள் ஒரு குபிர்நடத்தையைச்செய்தால் அவர்களை வெட்டப்பட்டாசற்றுன் அவர்களுடைய தௌபா அல்லாகுத்தஆலாவிடத்திற் கபூலாகும் ஹலறத்து நபிமூசா அலைகிஸ்ஸலாமவர்களுடைய கவுமுகள் சாமிறி யென்கிற மனிதனுடைய சொற்படி காளைமாட்டை வணங்கினதற்காக எழுபதினாயிரம் பெயர்கள் பிராமணத்தை மாய்த்து சஹீதாகிறவரை அல்லாகுத்த ஆலா அவர்களுடைய தௌபாவைக் கபூற் செய்யவில்லை அல்லாகுத்த ஆலா நம்மள் பேரில் கிறுபைகூர்ந்து நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின்பொருட்டா லிவ்விதங் கடினமாகிய குக்குமுகளை நீக்கி கைசேதப்பட்டு தௌபாச்செய்து குபிரைவிட்டு மீளும்படி கட்டளைசெய் திருக்கிறுன்

நம்மனைவர்களையும் அல்லாகுத்தஆலா தௌபா கபூலாகிய மூமீன் களிற் சேர்த்து எப்போதும் யீமானின்பேரிற் றரிபடுத்தி நேர்வழியி லாக்கிசெதேவித்தனத்தைத் தருவானாகவும் ஆமீன்யா அற்கமற்றாகிமீன்.

தீனின்பேரிற் றரிபாடாக யிருக்கிறதின்பயான்
முற்றிற்று.

{ தீனுடைய யில்மின் வரிசைப்பிரசங்கம். }

இல் மென்கிறது மார்க்கத்தைவிளங்கி யறிகிறதாகயிருக்கும் மு றுசிதென்னும் கித்தாபில் வருகிறதாவது ஒருமனிதன் பைத்திய மில் லாது புத்திசாலியாகவும் பாலிகாகிவிட்டால் முதலாவது அவன்பேரி ற் பறுலாகிய கருமம் (லாயிலாக யில்லல்லாகு முகம்மதுற்றசூலுல்லா கி) என்ற கலிமாவின் பொருளையுமறிந்து யீமானிசுலாத்தின் விபரத் தையுமறிந்து குறுஆனை எக்கினும்கொண்டு யீமானை முறிக்கும்படியா ன செய்கைகளை விட்டும் பேணிக்கொள்கிறதாக யிருக்கும் இரண்டாவ து மார்க்கத்திர்க்கு அகத்தியமாக்கிய (பிக்குகு) என்கிற இல்மைப் ப டிக்கிறதாக யிருக்கும் ஏனென்றால் இல்மு இல்லாமல் அமல்ச்செய்கிற து வுப்பில்லாத்த ஓசிபணம்போலாயிருக்கும்.

இன்னும் இல்மு அடிமூடாகவும் அமல் பணர்களாகவு மிருப்ப தால் இல்முடன் அமல்ச்செய்யவேண்டியது கடமையாக யிருக்குறது குறுஆன் சரீபில் அல்லாகு சுபுகானகு ஒத்தஆலா நானுங்களில் யீமா ன் கொண்டார்களே அவர்களுடைய தற்ஜாவை யுயர்த்தியாக்கி வை ப்பேன் இன்னம் அந்தமூமினான ஜனங்களில் இல்மைக் கொடுக்கப்ப ட்டுதே அவர்களுடைய தறஜாவை மிகவும் வுயர்த்தியாக்கி வைப்பே னென்று திருவுளம்பற்றினான்.

ஹதீது

இல்மைப்படிக்கிறது முசிலிமாகிய ஆண்பெண் ணடங்கலின்பே ரிலும் கடமையாக யிருக்கும் (பெகுனீ) ஒருமனிதர் ஆக்கில்பாலிகா

ய்விட்டால் அவனுக் ககத்தியமாகிய பிக்குடைய யில்மைப்படிக்கிறது ம் தொழுகைக்குப் போதுமானமட்டிலும் குறுஆனைப்படிக்கிறதும் பறுலர்யிருக்கும் (யின்னும்) ஒருவன் யில்மைப்படிக்ககோடி காலில் மிதியடிபோடுவானாகில் அவன் காலடி எடுத்துவைக்கிறதர்க்கு முன் அல்லாகுத்தஆலா அவன்செய்த பாவங்களைப்பொறுப்பான்.

அல்லாகுத்தஆலா நபிசுலைமான் அலைகிஸ்ஸலா மவர்கட்குத் துன்யாவில் வுமக்கு முதல்வேண்டுமா இராசாங்கம் வேண்டுமா இல்மாகிய கல்விவேண்டுமா வென்றுகேட்க அவர்கள் கல்வியாகிய இல்முதானைக்கு வேண்டுமென்று சொன்னார்கள் அல்லாகுத்தஆலா சந்தோசமாகி அவர்கள் இல்மைத் தெரிந்துகொண்டதாற் பொருளையும் இராஜாங்கத்தையும் இல்மையுங் கொடுத்தான் இன்னும இல்மைப் படிக்கிறவனுக்கு மலக்குகள் சிறகுகளைத் தாழ்த்துவார்கள் இன்னும் இல்மைப்படித்தவர்களுக்கு வானலோகத்தி லிருக்குகிற மலக்குகளும் பூலோகத்திலிருக்கிற வஸ்துகள் மீன்முதலாகிய வுயிர்ப் பிராணிகள் யாவும் பிழைபொறுக்கத் தேடுவார்களென்று நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளம்பற்றினார்கள்.

ஒரு சாஅத்துநேரம் இல்மைப்படிக்கிறது ஒரு இரவெல்லாம்விழித்திருந்து சுன்னத்தான வணக்கம் வணங்கிறதைக் காண ஏற்றமாகயிருக்கும் இன்னும் இலமில் ஒருபாடம்படிக்கிறது நபிலான தொழுகை ஆயிரம் றக்காஅத்துத் தொழுகிறதைக்காண ஏற்றமாகயிருக்கும் எல்லாவஸ்துக்களுக்கும் தானுண்டா யிருக்கிறது இந்தத் தீனுக்குத் தாணுகிறது பிக்குகுயென்றுந் தீனைவிளங்கி யறிகிறதாக யிருக்கும் ஒருயிடத்தில் ஒரு பக்கீராகிய ஆலீ யிருக்கிறது ஆயிரம் ஆபிது வணங்கிற தைக்காண செய்த்தானுக்கு மிகவுங்கோபமாகயிருக்கும் இன்னும் அல்லாகுத்தஆலா ஒரு மனிதனைக்கொண்டு நன்மையை நாடினால் அவ

ளைத் திளைவிளங்கி யறிகிறவனுக்கிவைப்பானென்று நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளம் பற்றினார்கள்.

இன்னும் (துர்சுமானுல் குறுஆனென்னும்) ஹலறத்து இபுனு அப்பாசு றெளியல்லாகு அன்கு அவர்கள் மூமினாகிய மனிதர்களைக்காண வுல்மாக்களுக்கு (௭௱) தறஜா அதினமுண்டும் ஒரு தறஜாவுக்கும் அடுத்த தறஜாவுக்கு மிடையிலிருக்குந் தூரமாவது (௫௱) வருடத்துப்பயணமாக விருக்குமென்று சொன்னதாக (இகியாவுல்வுலூ) மென்கிறகித்தாபில் வந்திருக்கிறது.

ஹிக்காயத்து.

முற்காலத்தி லிரண்டு தமையன் தம்பி ஒரு இல்மில்லாத வூரிலிருந்து இன்ன மொருவூருக்கு இல்மு படிக்கப்போகிற மத்தியில் மூத்தவர் தம்பியைப்பார்த்து நான் நம்மனூரிற்போய் அல்லாகுத்தஆலாவை வணங்கிக்கொண்டிருக்கிறேன் யென்றுசொல்லத் தம்பி இல்மில்லாமல் அமல்செய்கிறது பிரயோசனங் கொடுக்காதென்றுசொன்னார் அதற்கு நான் மலையிற்போய் தனியேயிருந்து வணங்கிக்கொண் டிருப்பேனென்று சொல்லிவிட்டுவந்து மலையில் ஒருஇபாதத்து கானாக்கட்டி வணங்கிக்கொண்டிருந்தார் தம்பி பத்துவருடம்வரை யநேக யில்முகளைப்படித்துத் தகுசீல்செய்து வூருக்குவந்து தாயாரிடம் தமையனாரை விசாரிக்க மலையில் பத்துவருடமாகயிருந்து வணங்கிக்கொண் டிருக்கிறாரென்று சொல்ல இவர் மலைக்குப்போய்ப் பார்த்தார் அப்போது தமையன் தொழுதுகொண்டிருந்தார் அவர் தொழுதுதீர்ந்ததின்பின் சலாஞ் சொல்லித் தமையனுடைய விபரங்களை விசாரித்தார் தமையன் நடந்தசங்கதிகளையெல்லாஞ் சொல்லிவரும்போது அஞ்சுவருடத்திற்குமுன் ஒரு எலியை யடித்துப்போட்டேன் அப்பால் வயசுசென்ற ஒருமனிதன் சுப்பாப்போட்டுக்கொண்டு கையிற் றசுபிகுபிடித்தவராய் யென்னிடம்வந்தார் அவரிடம் நானிச் செய்தியைச் சொல்ல அவர் ஒகே அந்தமாக ஒருவுயிரைக் கொலைசெய்துபோட்டீரோ யென்று சொல்லிக் கைசேதப்

பட்டு நீர்செய்த அய்ந்துவருடத்து அமலழிந்துபோச்சுதே யென்று சொன்னர் நானதர்க் கென்செய்யலாமென்று கேட்டேன் அவர் அந்த யெலியைக்காயவைத்து ஒருதாவீசுபோலே கட்டிக் கழுத்திற்போட்டுத் தொழுதால்மாத்திரம் வும்முடைய பாவ நீங்குமென்றுசொல்ல நான் நல்லதென்று ஒப்புக்கொண்டு இதுவரை செய்துவருகிறேனென்றார் வுடனே தம்பி கைசேதமுற்று அவன் இபுலீசல்லவா வும்மைக்குபாடஞ் செய்து நஜீசைக் கழுத்திற் போடும்படி செய்வித்து பின் செய்த அஞ்சுவருடத்து அமலையும் அழித்துப்போட்டான்.

நான் முந்தியே இல்மில்லாத அமல் பிரயோசனங் கொடுக்காதென்று சொல்லவில்லையாவென்றார் வுடனே மிகவும் அவர்கைசேதப்பட்டு பின்செய்த அஞ்சுவருடத்தின் அமலு மழிந்துபோய்விட்டதேயென்றழுது மனக்கவலையுற்று கலாச்செய்தார் நம்மளியாவரையுமாண்டவன் யில்முடனமல்ச்செய்யஉதவிசெய்வானாக ஆமீன்யா அக்றமல் அக்றமீன்

ஹதீது.

அல்லாகுத்தஆலா அறுசிக்குங் கீழே ஒரு பட்டணத்தைக் கத்தூரியாற் படைத்து அதில் ஒருமலக்கைச் சத்தமிடும்படி கட்டளைசெய்திருக்கிறான் அம்மலக்கு நித்தியம் ஆப் மூமினான ஜனங்களே வுங்களில் யாராவது ஒருமனிதன் ஒரு ஆலிமைப்போய்த்தெரிசித்தால் ஒரு நபியைத் தெரிசித்தவனாவான் ஒரு நபியைத்தெரிசித்தால் என்னைத்தெரிசித்தவனாவான் என்னைத் தெரிசித்தால் அவனுக்கு சொற்கத்தைஅல்லாகுத்தஆலா கொடுப்பான்யென்று சத்தமிடுகிறார்யென்பதாய் தாஜல்லன்பியாவான நமது நாயகம் முகம்மதுநபிசல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினதாக (உம்முல்பறுகீன்) யென்கிற கித்தாபில் வருகின்றது.

ஹதீது

இன்னம் யாராவது ஒருவன் ஒரு ஆலிமைச் சங்கைசெய்தால் எனக்குச் சங்கை செய்தவனாவான் எனக்கு ஒருவன் சங்கை செய்தா

என்னுடையஆண்டவனைஅல்லாகுத்தஆலாவுக்குச்சங்கைசெய்தவனாவான் அல்லாகுத்தஆலாவுக்குச் சங்கைசெய்தால் சொற்கம்புகுதுவான்.

இன்னும் யாராவது ஆலிமைக் கோபித்தால் யென்னைக்கோபித்தவனாவான் என்னைக் கோபித்தால் என்னுடைய நாயன் அல்லாகுத்தஆலாவைக் கோபித்தவனாவான் அல்லாகுத்தஆலாவைக் கோபித்தால் நரகம் புகுதுவான்.

இன்னும் யாராவது ஒருமனிதன் முசிலிமாகயிருந்து இல்முபடிக்கிறபெயர்களுக்கு கால்ரூபாய் செலவுசெய்தால் அல்லாவுடைய பீசபீலுக்கு வுகுதுயென்ற மலையைப்போற் றங்கத்தைச் செலவுசெய்தது போலாயிருக்கும் யென்று நபிசல்லல்லாகு அலைகி ஒசல்லமவர்கள் திருவுளம்பற்றினார்களென்று உம்முல் பறுகீனில் வருகின்றன.

(மிசுக்நாத்துல்அன்வார்) யென்கிறகித்தாபில் வந்திருக்கிறதாவது கியாமனாளில் ஆலீம்களுக்கும் ஹச்ஜுக்குப்போனவர்களுக்கும் பீசபீற்செய்தவர்களுக்கும் கொடையாளிகளுக்கும் கேள்விகணக்கில்லாமற் சொற்கத்திற்கு போகும்படி உத்திரவு கொடுக்கப்படும் இன்னான்கு பெயரும் சொற்கத்து வாசலில்போனவுடனே அவரவரே நான் முந்திப்போவேன் நான் முந்திப்போவேன் யென்றுதர்க்கிப்பார்கள் அல்லாகுத்தஆலா ஜிபுறாயில் அலைகிஸ்ஸலாமவர்களை பய்சல்ச்செய்யும்படி யனுப்புவான் அவர்கள்வந்து ஒருவரிடம் ஆய்சகிதானமனிதனே நீர்சொற்கம்புகுத முந்துகிறீரோ நீயென்ன அமல்செய்தீரென்றுகேட்க நான் என்னுயிரை அல்லாகுத்த ஆலாவுக்குக் குறுபானிகொடுத்தேனென்று சொல்ல யாரிடத்தில் தவாபைக்கேட்டுப்படித்து பீசபீற்செய்தீரென்று கேட்க வுடனே வுலமாக்களிடத்திலென்று சொல்லுவார் அப்போவுலமாக்களுமக்கு ஒஸ்தாதாச்சுது ஒஸ்தாதின் அதபைப் பேணுமென்று சொல்லிவிட்டு அப்பால் ஹச்ஜாளியிடத்திலுங்கொடையாளியிடத்திலும் முன்போற் கேட்டுமடக்கி வுலமாக்களை முந்தி சொற்கத்திற்குப் போகும்படி ஜிபுறாயில் அலைகிஸ்சலாமவர்கள் பைசல் செய்வார்கள்

அதன்பின்பு வுலமாக்கள் ஆண்டவனே யெங்களுக்கு இல்முகிடைத்தது கொடையாளிகள்செய்த வுபகாரத்தாலும் ஷஹ்றாவத்தாலுமே யொழிய வேறில்லை ஆதலால் கொடையாளிகள் தானே சுவர்க்கத்திற்கு முந்திப் போகட்டுமென்று வுலமாக்கள்சொல்ல அல்லாகுத்தஆலா சரிதானென்று ஒப்புக்கொண்டு ஆப் றிலுவானென்கிற மலக்கை சொற்கத்துவாயலைத் திறவுமென்று சொல்லுவான் இந்தக் கொடையாளிகள் தானே யெல்லாத்திற்குமுந்தி சுவர்க்கம் புகுதுவார்களென்று நமது நாயகம் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளம்பற்றினார்கள்.

(இன்னும்) யாராவது ஒருமனிதன்படித்த இல்மை அதற்கு லாயக்கானவர்களுக்குச் சொல்லாமல் மறைத்தானாகில் நெருப்பினுலே வாயிற் கடிவாளம்போடப்படும் இன்னம் ஒருமனிதன் படித்த இல்மைப்படித்துக்கொடுத்தால் அமல்ச் செய்கிறவனுடைய கூலியில் ஒன்றுங் குறைவன்றி இந்த இல்மைக்கொண்டு அமல்ச் செய்தானே அவனுடைய கூலிபோலொத்ததை அல்லாகுத்தஆலா கொடுப்பான்.

காலைநேரமு மாலைநேரமும் பள்ளிகளிற்போய் இல்மைப்படிக்கிறது பீசபிலைக்காண அல்லாகுத்தஆலாவிடத்தில் யேற்றமாகயிருக்கும் யாராகிலுமொருவன் வுலமாக்களைப் பெருமை யடிக்கிறதற்காக அல்லது மடையர்களை மடக்கிறதற்காக அல்லது மனிதர்களைத் தன்பக்கந்திருப்புவதற்காக நாடி இல்மைப்படித்தால் அவனை அல்லாகுத்தஆலா சஹன்னமென்கிற நரகத்திற் சேர்ப்பான் இன்னமியாராவது ஒருமனிதன் இல்மைப்படித்து அமற்செய்யாவிட்டால் அவன் அல்லாகுத்தஆலாவுக்கு மிகத் தூரப்படுவான் இன்னும் கியாமநாளில் அல்லாகுத்தஆலா சபாயத்துச் செய்யும்படி நபிமார்களுக்கும் வுலமாக்களுக்கும் பீசபீலிற்செகிதானவர்களுக்கும் உத்தரவு கொடுப்பான் இன்னம் வுலமாக்களுக்கும் நீங்கள் சங்கைசெய்யுங்கள் அவர்கள் நபிமார்களின் அனந்தரக்காரர்களாக யிருக்கும் யாராகிலுமொரு மனிதன் அவர்களுக்குச் சங்கைசெய்தால் அல்லாவுக்கும் அல்லாவுடைய றசூலுக்கும் சங்கைசெய்தவனாவான் இன்னம் என் உம்மத்துகளிலுள்ள வுலமாக்கள் பனுயிசு

ருயீலுடைய நபிமார்களைப்போலாக யிருக்கும் இந்தகதீதுகளை நபிநாய கமவர்கள் திருவாய்மலர்ந்தருளினதாக (இருசாதென்கிற) கித்தாபில் வருகிறது.

ஹிக்காயத்து.

தபுசீர் (றூகுல்பயான்) யென்கிற கித்தாபில் வருகிறதாவது இமாம் அபுல் ஹசனிஸ்ஸாதிலீ றகுமத்துல்லாகி அலைகி அவர்கள் சொல்லுகிறார்கள் நானொருநாள் பைத்தில் முகத்திசுப் பள்ளியில்படுத்துநித்திரைசெய்யும்போது ஒரு கனவு கண்டேன் அதாவது பைத்தில்முகத்திசு ஹறத்தின் நடுவில் பள்ளியின்வெளியில் ஒருசிம்மாதனத்தைக்கொடுவந்து வைக்கப்பட்டுது வுடனே யநேகம் கல்குகள்வந்து கூட்டங்கூட்டமாகக் கூடினார்கள்.

அப்போது இது யேதுகூட்டமென்று கேட்டேன் நபிமார்கள் றெசூல்மார்களுடைய கூட்டம் சகல சற்குருவாகிய நமது நாயகம் முகம்மதுநபிசல்லல்லாகு அலைகி வசல்லமவர்களிடத்தில் ஹுஜ்ஜதுல்இசனிபுஹுஜ்ஜதுல் ஹல்லாசி றகிமகுல்லா அவர்கள் ஷறகுக்கு விரோதமாக அதபு கேடு செய்ததற்க்காக வேண்டி முறையிடுகிறதற்க்காக வந்தவர்கள்யென்று சிலர்சொன்னார்கள் அப்போது அந்த சிங்காசனத்தளவில் பார்த்தேன் நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள்மாத்திர மதின்பேரிலு மற்ற நபிமார்கள் இபுறாகீம் மூசா - ஈசா - நூகு- அலைகிமிஸ்ஸலா மிதுபோலொத்த நபிமார்கள் யெல்லாம் பூமியின்பேரிலு மிருக்கக்கண்டேன்.

அப்போது இவர்கட்கிடையில் என்னவார்த்தைகள் நடக்கிறது பார்ப்போ மென்றெண்ணி நின்றேன் அப்போது நபிமூசா அலைகிஸ்ஸலாமவர்கள் நமது நாயகத்தைப்பார்த்து நீங்கள் என்னுடையஉம்மத்துகளிலுள்ள வுலமாக்கள் பனியிசுறயீல்கூட்டத்திலுள்ள நபிமார்களைப் போலென்று சொன்னீர்களே அந்த வுலமாக்களி லொருவரை யெனக்கு அறிவித்துக் கொடுங்களென்று கேட்க வுடனே (கஸ்ஸாலி) இமாமவர்களைக் காட்டினார்கள்காட்டினவுடனே நபிமூசாஅலைகிஸ்ஸலாமவர்

கள் கஸ்ஸாலி இமாம் அவர்களிடத்தில் ஒரு கேள்விகேட்டார்கள் அத
ர்க்கு இமாமவர்கள் பத்து ஜவாபு சொன்னார்கள் வுடனே நபியவர்கள்
யென்னகாணும் கேட்டதர்க்குமட்டும் ஜவாபுசொல்லாமல் அதிகமாகஜ
வாபு சொல்லுகிறீரென்று தர்க்கித்தார்கள் அப்போது நபிமூசா அலைகி
ஸ்ஸலாமவர்களைப்பார்த்து வுங்களிடத்தில் அல்லாகுத்தஆலா வும்மு
டையகையி லென்னயிருக்கிறதென்று கேட்டதர்க்கு கம்பென்று மாத்
திரஞ் சொல்லாமல் இது கம்பு இதை யூணிக்கொள்வேன் இதைக்கொ
ண்டு ஆட்டுக்கு இலைகுழைகள் தட்டிப்போடுவேன் இன்னமிதிலநேக
வேலைக ளிருக்கிறதென்று யேன் சொன்னீர்களென்று இமாம்அவர்கள்
கேட்டதர்க்கு நபியவர்கள் ஒன்றுஞ் சொல்லவில்லை.

அப்பால் நான் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள்மாத்திர
ம் சிங்காதனத்தின்பேரி லிருக்கவு மற்ற நபிமார்களெல்லாம் கீழே யிரு
க்கிறார்களே யென்று யோசித்துக்கொண்டிருந்தேன் அப்போது ஒரு
மனிதன்வந்து இப்பேர்க்கொத்த யெண்ணம் யேன் எண்ணினீரென்று
என்னைக் கண்டித்தார் வுடனே நான்பதறிவிழித்துவிட்டேன் அப்பால்
அம்மனிதனை நான் காணவில்லை யென்கிறதாகச் சொன்னார்கள் அல்லா
குத்தஆலா நம்மனைவருக்கும் இல்மைத்தந்து அமற்செய்யும்படி நல்லு
தவிசெய்வானாக ஆமீன்.

தீனுடையயில்மின் வரிசைப்பிரசங்கம்

முற்றிற்று.

இமாம்களின் வரிசைப் பிரசங்கம்.

குறஆன் சரீபில் அறிந்தோர்களும் அறியாதோர்களும் சரியாவார்களா சரியாகமாட்டார்கள் என்றும் இன்னமொருஆயத்தில் ஆய்மனிதர்களே நீங்கள் அறியாதவர்களாக யிருப்பீர்களாகில் அறிந்தவர்களிடம் படித்துக்கொள்ளுங்களென்று அல்லாகுத்தஆலா திருவுளம்பற்றினன் இவ்விரண்டாயத்தி னின்றும் வெளியானதாவது வுலமாக்களாகியதீனைவிளங்கி யறியும்படியானவர்கள் அறியாதவர்களைக் காண யேற்றமானவர்களாக யிருக்கு மென்றும் இன்னமும் அறியாதவர்கள் அறிந்தவர்களிடம் கேட்டுப்படிப்பது வாஜிபென்றுந் தெரிந்தது.

(மவுலானா றூமி ஜலாலுத்தீன்) அவர்கள் தங்கள் (மதுனவி) யென்றகித்தாபில் தீனுடைய இல்மு மூன்றாகயிருக்கும் அதில் (முதலாவது) பிக்குகுயென்கிற இல்மு அதாவது தீனில் யேவலின்னது விலகலின்னது பறுலின்னது வாஜிபின்னது கலாலின்னது கறாமின்னது என்றுவிளங்கி யறிகிறதாகயிருக்கும் (இரண்டாவது) குறஆனின் தபுசீறுடைய பயானை யறிகிறதாகயிருக்கும் (மூன்றாவது) நபிசல்லல்லாகு அலைகி வசல்லமவர்களின் ஹதீதை அறிகிறதாயிருக்குமென்று சொல்லுகிறார்கள்.

இம்மூன்று இல்மையும் அறிந்தவர்கள் தீனுடைய வுலமாக்களாகயிருக்கும் தீனுடைய வுலமாக்களில் நாலு மதஹபையுடைய நாலு இமாம்களும் மிகவும் மேன்மைபெற்றவர்களாக யிருக்கும் இந்த நாலு இமாம்களின் மதகபுகளி லொன்றைக் குறிப்பாகத்தொடர்ந்துநடப்பதுவாஜிபாகயிருக்கும் ஒவ்வொரு மதகபுகளிலு மொவ்வொரு லேசான குக்குமுகளைப் பிறக்கியெடுத்து அதின்படி அமல்ச்செய்வது ஹறாமாக யிருக்கும் இந்த குக்குமுகள் (றத்துல்முகுத்தார்) முதலான கித்தாபுகளிற் பேசிவரப்பட்டிருக்கிறது.

இன்னமும் (றத்துல்முகுத்தார்) யென்கிற கித்தாபில் சொல்லி வருகிறதாவது பிக்குகுடைய இல்லமை முதலாவது விளைத்தது (அப்த் துல்லாகிபுனு மசுகூது றலியல்லாகு அன்கு) அவர்களாகயிருக்கும் அ தர்க்கு (அல்க்கமாறலியல்லாகு அன்கு) அவர்கள் தண்ணீர் இறைத்தா ர்கள் (இபுருகீமுன் நுகயீ றலியல்லாகுஅன்கு) அவர்கள் அப் பயிளை ய றுத்தார்கள் (கம்மாது றகிமகுல்லா) அவர்கள் சூடடித்தார்கள் இமா முல்லகுலம் (அபூகனீபா றகிமத்துல்லாகி அலைகி) அவர்கள் அதை சா விசண்டு நீக்கி மணியாக்கினார்கள் அவர்களின் முதலாவது சிடராகிய (அபூயூசுபு றகுமத்துல்லாகி அலைகி) யவர்கள் அதை மாவாக்கினார்கள் அப்பால் இரண்டாவது சிடராகிய (முகம்மது றகிமகுல்லா) அவர்கள் அதை வுறட்டிசுட்டார்கள் மற்ற மனிதர்கள் அதையெடுத்துப் பொசிக் கிறார்கள்.

{ இமாமுல்லகுலம் அபூகனிபா றகிமகுல்லா அவர்களின் வரிசை. ஹதீது. }

(சகீகுல்முசிலீம்) யென்கிற கித்தாபில் அபூகுறைறு றலியல்லாகு அன்கு அவர்களைத்தொட்டும் பேசிவருகிறதாவது வானத்தி லிருக்கிற (துறய்யா) வென்கிற நட்சத்திரத்தினருகே யீமானிருந்தாலும் பாறிசுக் காரர்களுடைய பிள்ளைகளி லொருவர்போய் அதையெடுத்துக்கொண் டு வருவாரென்று நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவாய்மல ர்ந்தருளினார்கள்.

இன்னும் (குல்யா) வென்னுங்கித்தாபில் அபூநயீம் பேசிவருகிறா ர்கள் இல்மு (துறய்யா) வென்கிற நட்சத்திரத்திற்கருகேஇருந்தாலும் பாறிசுக்காரர்களிற் சில மனிதர்கள் பெற்றுக்கொள்வார்களென்று நபி சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினார்கள்.

இந்த ஹதீதின் பயானாவது அபூகனிபா றகுமகுல்லாகு அவர்க ளுடைய பாட்டனார் அவர்கள் பாறிசுக்காரர்களி லுள்ளவர்களாக யிரு

க்கும் ஆகையால் அந்தப் பாரிசுவம்பிசத்தாரில் நம்முடைய இமாம் அபூகனீபா றகுமதுல்லாகு அவர்களைப்போற் கல்வியிற்றேர்ந்துகடப்பாகிய மனிதர் யாருமில்லாத்ததினால் இந்த கதீதில் வரப்பட்டவர்களைக் கொண்டு நபிநாயகமவர்கள் நாடினது நம்முடைய இமாம் அபூகனிபா றகிமகுல்லாகு அவர்களைத்தானென்று காபிலு ஜலாலுத்தீன் சுயூத்தி அவர்கள் தைலமியிமார்றத்தொட்டுஞ் சொன்னதாக (சிபுருமுல்லிசி) யென்கிற கித்தாபில் சொல்லுகிறதாக (றத்துல்முகுத்தார்) யென்கிறகித்தாபில் வருகின்றன.

ஹதீது.

நபிநாயகம் முகம்மதுநபிசல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினார்கள் நபி ஆதமலைகிஸ்ஸலா மவர்கள் யென்னைச் சொல்லி மலக்குகளிடத்திற் பெருமையடித்தார்கள் நான் யென்னுடைய வும்மத்தினின்று மொருவனைக் கொண்டு பெருமையடிக்கிறேன் அவர்பெயர் நுகுமான் அவருக்குச் சைக்கினைப்பெயர் அபூகனீபா அவர் யென்னுடைய வும்மத்துகளுக்கு விளக்காக யிருக்குமென்றும்.

இன்னமொரு கதீதில் யெல்லாநபிமார்களும் யென் பெயரைச் சொல்லிப் பெருமையடிப்பார்கள் நான் அபூகனீபா யென்னும் சங்கையாகிய வொருவர் யென்னுடைய மார்க்கத்தைத் துலக்கமாக்கிவைப்பாரென்று பெருமையடிக்கிறேன் அவரை யாராவது பிரியம்வைத்தால் என்னைப் பிரியம்வைத்தவராவார்கள் அவரை இகழ்ந்தவர்கள் என்னைஇகழ்ந்தவராவார்கள் யென்று நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினதாக (ஷறகுமுகத்திமா அபீலெய்து) யென்கிற கித்தாபில் வந்திருக்கிறது.

இன்னும் (ஜுறுஜானி) யென்கிறவர்கள் முன்னோர்கள்சொன்னதாகப் பேசிவருகிறதாவது கலறத்து நபி மூசாஅலைகிஸ்ஸலாம் ஈசா அலைகிஸ்ஸலா மவர்களும்மத்துகளில் இமாம் அபூகனீபா அவர்களைப் போ லொருவரிருந்தால் அவர்களின் உம்மத்துகள் யெகூதி நசாறு வா

கமாட்டார்களென்றும் (இன்னும்) காபிலு ஜமாஅத்தின் அவர்கள் (த
குத்தீபுல் கமால்) யென்கிற கித்தாபிலும் அபுல் அப்பாசி யிபுனுகுல்க
கான் யென்பவர்கள் தங்கள் (தாறீக்)கென்னுங்கித்தாபிலும்பேசிவருகி
றதாவது இமாம்அபூகனீபா றகுமகுல்லாகுஅவர்கள் கிஜறத்து(அ௰-ம்)
வருடங் கூபா விராச்சியத்திற் பிறந்தார்கள் இனனமொரு சொற்படி
பல்கு இராச்சியத்திற் அம்பாறென்கிற வூரிற் பிறந்தார்களென்றும் கிஜ
றத்து (ா௫௰) வருடம் றஜபுமாதம் பகுதாதென்கிற வூரில் மவுத்தானா
ர்கள் அதின் காரணமாவது ஒருசொற்படி அக்காலத்தில் சுல்த்தானாக
யிருந்தவர்கள் இவர்களை காவி ஹாக்கீம் வேலையை ஒப்புக் கொள்ளச்
சொல்ல இவர்கள் ஒப்புக் கொள்ளாததற்கு சிறைச்சாலையில் வைக்க
ப்பட்டு நித்தியங் கடைவீதியில் அவர்களைக்கொடுவந்து சாட்டையால்
பத்துப் பத்தடி யடிக்கும்படி வுத்திரவுசெய்து நடத்தி வரும்போது வ
ருத்தந் தாங்கமுடியாமல் ஆண்டவனிடத்தில் மவுத்தாக்கி விடுயென்று
துஆக்கேட்டார்கள் அந்த சபயினாலே வுபாத்தானார்கள் இன்னம் ஒரு
சொற்படி அவர்களை ஹசதுவைத்த பகையர்கள் ஒசிபனத்தில் நஞ்சை
க்கலந்துகொடுத்தார்கள் அதினாலே ஷகீதாக மவுத்தானார்கள் யென்று
வந்திருக்கிறது.

அவர்களுடைய ஜனாசாத் தொழுகைக்குவந்து கூடிய ஜனங்கள்
மட்டிலடங்காத கூட்டமாக யிருந்ததால் அய்ந்து விடுத்தம் ஜனாசாத்
தொழுவிக்கப்பட்டது கடாசியில் அவர்களின் குமாரசிகாமணியாகிய
ஹம்மாது றகிமகுல்லா அவர்கள் இமாமாக நின்று தொழுவித்தார்கள்
(மகுதனுல் யவாக்கீதயென்) கிற கித்தாபில்வருகிறது குளிப்பாட்டின
காவில்க் குலாத்து ஹசனிபுனு இமாது யென்கிறவர்கள் குளிப்பாட்டு
ம்போது இமாமானவர்களே அல்லாகுத்தஆலா வுங்களுக்குறகுமத்துச்
செய்வானாகவும் வுங்களின் பிழையைப் பொறுப்பானாகவும் நீங்கள்மு
ப்பதுவருடமாக நாள்த் தவராமல் நோன்புபிடித்தீர்கள் ஒருநாளாவது
இரவையில் நித்திரையொழித்து நாற்பதுவருடம்அல்லாகுத்தஆலாவை
நின்று தொழுதவர்களாக யிருந்தீர்கள் யென்று சொன்னார்கள்.

ஹதீது.

துன்யாவினுடைய சீனத்தாயகிய அழகை ஹிஜ்றத்து (௱௫௰) வருடத்தி லுயர்த்தப்படுமென்று நமதுநாயகம் முகம்மது நபிசல்லல்லா ஹு அலைகிவசல்லமவர்கள் திருவாய்மலர்ந் தருளினதாக (கையிருத்துன் கிஸரன்) யென்கிறகித்தாபில் (இபுனு ஹஜருல் மக்கி)யவர்கள்பேசிவரு கிறார்கள் (ஷம்சில்அயிம்மத்தில்கருத்தறீ) யென்கிறவர்கள் இந்த கதீது இமாமுல் லகுலம் அபூகனீபா றகுமதுல்லா அவர்களுடைய ஹக்கில் வுபாத்தைக்கொண்டு நபிநாயகமவர்கள் அறிவித்ததா யிருக்குமென்று சொன்னார்கள் இன்னமனேக சைக்கினையாகிய ஹதீதுகள் இமாமுல்லகு லம் அவர்கள் ஹக்கில்வந்திருக்கிறது.

ஹிக்காயத்து.

இசுமாயீல் இபுனு அபீறசா சொல்லுகிறார்கள் நான் முகம்மதுற குமதுல்லா அவர்களைக் கனவிற் கண்டு அல்லாகுத்தஆலா வுங்களை எ ன்னசெய்தானென்று கேட்டேன் அப்போதுயென்பாவத்தை அல்லா குத்தஆலா பொறுத்து ஆய் வும்மை நான் அதாபு செய்யநாடினால் இ வ்வளவு இல்லை வுமக்கு நான் தாமாட்டேனென்றுசொன்னதாகச்சொ ன்னார்கள் அபூயூசுபு றகுமதுல்லா அவர்களையெங்கேயென்றுகேட்டே ன் யெனக்குமேலே இரண்டு தறஜா அதிகமாகி விட்டார்களென்று சொன்னார்கள் வுங்கள் வுஸ்தாது இமாமுல்லகுலம் அபூகனீபா றகிம குல்லா அவர்கள் யெங்கேயென்று கேட்டேன் அதற்குஅவர்களுடை ய வுயர்ந்த தறஜாவை யென்னாற்சொல்லமுடியாது அவர்கள் இல்லியீ ன் யென்கிற சொற்கத்தி லுயர்த்தியான தானத்திலிருக்கிறார்கள் ஏனெ ன்றால் அவர்கள் யெசாவுடைய ஒளுவால் நாற்பதுவருடம் பஜிறுதொ ழுதார்கள் இன்னம் (௫௫) ஹஜ்ஜுசெய்தார்கள் அல்லாகுத்தஆலாவை கனவில் ஒரு ஒப்புவமையன்றி நூறு விடுத்தம் கண்டார்களே யானதா க்காக வென்று முகம்மது றகிமகுல்லா சொன்னார்கள்.

ஹிக்காயத்து.

இமாமுல் லகுலம் அபூகனீபா றகுமகுல்லா அவர்களின் கடாசி ஹஜ்ஜில் கருபா வேலைக்காரர்களிடத்தில் ஒருநாளிரவையில் வுத்திரவுகேட்டுத் திறவுகோலைவாங்கித் திறந்து வுள்ளே புகுந்து இரண்டு றாணுக்கிடையில் வலது காலின்பேரில் இடதுகாலை வைத்து நின்று தக்பீறுகட்டி குறுஆன் பதினைய்ந்து ஜூசுவோதி றுக்கூகுசெய்து இரண்டாவது றக்காஅத்தில் இடதுகாலின்பேரில் வலதுகாலைவைத்து குறுஆன் பதினைய்ந்து ஜூசுவோதித் தொழுதுதீர்ந்து சலாம் வாங்கினவுடனே கண்ணீ ரொலித்தோடும்படி கடிசாக அழுது ஆண்டவனேபெலக்கேடாகிய வுன்னுடைய யேழை யடிமையாகிய நான் வுன்னுடைய வலுப்பத்திர்க்குத் தகுமாகுமே அப்பேர்க்கொத்த ஹக்கான வணக்கமாக வுன்னை வணங்கவில்லையென்கிலும் வுன்னை வுண்மையாகியஅறிவாக அறிந்திருக்கிறேன் வுன்னுடைய இபாதத்தில் குறைவுசெய்ததை ஈமானுடைய நிறப்பத்திர்க்காக வேண்டி நிறப்பமாக்கி வைத்து வெகுமதி கொடுவென்று சொல்லித் துஆச்செய்தார்கள் வுடனே வுருத்தோற்றமின்றியே கருபத்துல்லாவினுடைய மூலையிலிருந்து அபூகனீபாவே நீர் சரியான அறிவாக அறிந்து அழகான கிதுமத்தாகிய வணக்கமும் வணங்கினீர் வுண்மையாக உம்முடைய பாவத்தையும் கியாமநாள்வரைக்கும் உம்முடைய மதுகபாகிய பாதையின்பேரில் வும்மைத் துடர்ந்துநடப்பார்களே அவர்களின் பாவத்தையும் பொறுத்தேனென்று சப்தம்வந்தது இச்செய்திகள் (துற்றில்முகுத்தார்) யென்கிற கித்தாப்பில் வருகிறது.

ஹிக்காயத்து.

(மஜாலிசுல் அபுறூர்) யென்கிற கித்தாபில் முல்லா சகுது றாமி பேசிவருகிறார்கள் யாதெனில் கலறத்து இமாமுல்லகுலம் அபூகனீபா றகிமகுல்லா அவர்கள் ஓர்காட்டினிடமாகத் தனித் திருக்கும்போது தகுரிய்யாவென்னும் காபிர்கள் வுருவினவாளுடனேவந்து இமாம் அவர்களை வெட்டமுடுகினார்கள் யென்னை நீங்கள் யேன் வெட்ட முடுகிறீர்க

ளென்று இமாமவர்கள்கேட்டதற்கு தகுரிய்யாக் கூட்டக்காரர்கள் நா ங்கள் ஆண்டவன் இல்லையென்று நிண்ணையங்கொண்டிருக்க நீர் ஆண் டவனிருக்கிறானென்றும் அதற்கு அநேக மத்தாட்சியாகக் கித்தாபுக ளும் கோர்வைசெய்து யெங்கள் எண்ணத்தை றத்துச் செய்கிறீர் ஆத லால் வும்மை வெட்டாமற் திரும்புகிறதில்லையென்றார்கள் அப்பால் இ மாமுல் லகுலமவர்கள் நல்லது நானுங்களிடம் ஒருசுவால்க் கேட்கிறே னதற்கு பதில்ச்சொல்லிவிட்டு யென்னை வெட்டுங்க ளென்றார்கள் நீர் சுவால்க்கேளுமென்று தகுரிய்யாக்கூட்டங்கள் வெட்டுகிறதை நிறுத்தி னார்கள் இமாமுல்லகுலமவர்கள் ஓர் சமுந்திரத்தில் கடுமையான காற் றும் புசலும் அதிகரித்து அகோரமான அலைகள் யெழும்பி மோதும்ப டியானநேரத்தில் மிகுந்த சரக்குகள் யேறின ஒருகப்பல் பாய் விரித்து அக்கடலில் ஓடும்பொருட்டு அதில் மாலீமி மில்லாவிட்டால் அக்கப்பல் சலாமத்தாகக் கரைபோய்ச் சேருமாவென்று கேட்க அதற்கு தகுரிய் யாக்கூட்டங்கள் ஒருபோதும் அக் கப்பல் கரைபோய்ச்சேராது சமுத் திரத்தில் தானே கலாக்காகிவிடுமென்று சொல்ல இமாமுல்லகுலம் அ வர்கள் தண்ணீருக்குமேல் பூமியைவிரித்திருக்க இதற்கு ஒரு மாலீமி ல்லாவிட்டால் இந்த பூமி நிலைத்துயிருக்குமா யென்றார்கள் இவைகளை த் தகுரிய்யாக் கூட்டங்கள்கேட்டு அப்பவே ஆண்டவன் வுண்டுமென் கிறது அவர்கட்கு மனப்பூரணமாய் நிண்ணையப்பட்டு அக்கூட்டத்தின் சனங்கள் யாவரும்முசிலிமாகிவிட்டார்கள்·

ஹிக்காயத்து,

(அஸ்பாகு ஒன்னலாயிறு) யென்கிற கித்தாபில் வருகிறது றூமு சுல்த்தான் கூபா இராச்சியத்திலுள்ள உலமாக்களுக்கு அநேகமான மானியங்கள் விட்டிருந்தார் அவர் மூன்றுகேள்வியெழுதி ஒருமனிதனி டத்திற் கொடுத்து இன்ன மநேக இனுங்களு மவரிடஞ்சேர்த்து கூபா இராச்சியத்திர்க்கும் போய் இம் மூன்றுகேள்வியையு மங்குள்ள வுலமா க்களிடம் கேளும் அவர்க ளிதற்கு சரியானபடி பதிற்சொல்லிவிட்டா ல் இந்த இனும்களைச் சொன்னவர்கட்கு கொடுத்துவிட்டு வந்துவிடும்

அவர்கள் பதில்ச் சொல்லாதிருக்கில் முன் னம்மால் விடப்பட்டிருக்கிற மானியங்களையும் மாத்திவிட்டு இப்போது நீர் கொடுபோகிற இனும் களையும் திரும்பக் கொடுவந்துவிடுமென்றுசொல்லி அனுப்பினார்,

அம்மனிதன் அவைகளுடன் கூபா இராச்சியத்திற்கு வந்து ஒரு மேசைபோட்டு அதின்பேரில்நின்று அங்கேயுள்ள வுலமாக்களையெல்லாம் வருத்தி சுல்த்தான் யென்னை இவ்விதமாக அனுப்பியிருக்கிறார்கள் இம்மூன்று கேள்விக்கும் நீங்கள் பதில்ச் சொல்லவேணுமென்று சொல்ல வுலமாக்கள் அம்மூன்று கேள்வியுஞ்சொல்லும் நாங்கள் பதில் சொல்லுகிறோமென்றார்கள் அதற்கு இவர் முதலாவது கேள்வி நாயனுக்கு முன்னுலென்ன வுண்டாயிருந்தது இரண்டாவது கேள்வி நாயன் எந்தமுகமாக யிருக்கிறான் மூன்றாவதுகேள்வி நாயனிப்போது என்ன அலுவல்பார்க்கிறான் இம்மூன்று கேள்வியுமாக யிருக்குமென்றார் அதற்கு இவர்களில் ஒருவரும் பதில்ச்சொல்ல யேலாமல்த் திகைத்திருந்துவிட்டு இன்ன நாளைக்குப் பதில் சொல்லுகிறோமென்று வாயதாக் கேட்டுக்கொண்டுபோய் அவ்வாயிதா வருமட்டிலும் அவரவர்களால் யேன்றமட்டிலும் கித்தாபுகளைப்பார்த்து அம்மசாலாவெளிப்படாமல் வாயிதாஅன்றைக்கு எல்லோர்களும்வந்து கூடினார்கள் றூமிவிருந்துவந்தவர் முன்போலவே மேஜையில் யேறிக்கேட்க இவர்கள் அவரவரே தங்களுக்குத் தெரியாமல் மற்றொருவர் சொல்லுவார்கள்யென்று எண்ணி சும்மாயிருந்துவிட்டார்கள் அப்போது நம்முடைய இமாம் அபூகனிபா றகுமகுல்லா அவர்கள் சிறுபிள்ளையாக யிருந்ததினால் அவர்கள் தகப்பனாரவர்கள் கூடவந்திருந்தார்கள் இப்படி உலமாக்கள் பேசாதிருந்ததைப்பார்த்து நாமாவது பதில்சொல்லுவோமென்றெண்ணித் தகப்பனாரவர்களிடம் உத்திரவுகேட்டார்கள் நீர் சிறுபிள்ளையாக யிருப்பதால் போகவேண்டாமென்று சொன்னதுகேட்டு கொஞ்சஞ் சும்மாயிருந்துபார்த்துவிட்டு அந்தலூர் அமீரிடத்தில் நான் ஜவாபுசொல்லலாமாவென்று கேட்டு வுத்திரவுபெற்றதின்பின் மேஜையின்சமீபத்தில்வந்து அதில் நிற்கிற மனிதனைப்பார்த்து நீர் யேதுக்காக மேலேநிற்குறீர் யெ

ன்றுகேட்க அவர் நான் மூன்றுகேள்வி வுலமாக்களிடங் கேட்க நிற்கு றேனென்றுசொல்ல நீர் கேட்கிறவரும் நாம் பதில்சொல்லுகிறவனு ம ல்லவாவென்றார்கள் அவர் ஆமென்றார் இமாமவர்கள் கேட்கிற மனித ன் மேலேநிற்கிறதா பதில்ச்சொல்லுகிற மனிதன் மேலேநிற்கிறதாவெ ன்றுகேட்க பதில்ச் சொல்லுகிறவர்தான் மேலே நிற்கவேணு மென்று சொல்லிக் கீழேயிறங்கிவிட்டார் வுடனே இமாமவர்கள் மேஜையின்மே லேறி நின்றுக்கொண்டு வும்முடைய கேள்வி யென்னவென்று கேட்க முதலாவது நாயனுக்கு முன்னு லென்னவென்றார் இமாமவர்கள் ஒண் ணுக்குமுன்னாலே யென்ன கால்-அரை-முக்கால் யென்றாலும் ஒண்ணு டைய துண்டாகத்தானிருக்கிறது அப்படிக் கில்லாமல் அதற்கு முன் னாலே யென்னசொல்லுமென்றுகேட்க அதற்குஅவர் அப்படியாதொ ன்றுமில்லையென்று சொல்லவும் இமாமவர்கள் ஒன்று யென்ற லக்கம் நாம் யேற்படுத்தியது இதற்கு முன்னாலேயே ஒன்றுமில்லை யென்றால் அசலிலேயே ஒன்றாயிருக்கிற அல்லாகுத்த ஆலாவுக்கு முன்னாலே எ ன்ன யிருக்குமென்றுசொல்ல ஒன்று மிருக்காதென்று ஒப்புக்கொண் டார் இரண்டாவதுகேள்வி நாய னெந்தமுகமாக யிருக்கிறான் யென்று கேட்டார் இமாமவர்கள் நீர் ஒரு விளக்கையேற்றிவைத்தால் அவ்விள க்கின்சுடர் எந்தமுகமாக யிருக்கும் சொல்லுமென்க விளக்கின்சுடர் இ ன்னமுகமாக யிருக்குமென்று சொல்ல முடியாது அதற்கு நான்குதி சையுஞ் சரியாகத்தா னிருக்குமென்றார் இமாமவர்கள் நாம் யேற்றிவை த்த விளக்கின்சுடர் இப்படியாக யிருக்குமானால் எல்லாத்திற்கு அச லொளிவாகிய அல்லாகு சுபுகானகு ஒத்தஆலாவுக்கு ஒருதிசையைக்கு றிப்பிட யேலுமாயென்க சரிதான் யேலாதுயென்றுஒப்புக்கொண்டார் மூன்றாவதுகேள்வி அல்லாகுத்தஆலா இப்போது என்னசெய்கிறானெ ன்று கேட்டார் இமாமவர்கள் இப்போது வும்மைக் கீழேயிறக்கிவிட்டு யென்னை மேலே யேற்றினானென்றார்கள் அப்பவே அவர் மிகவுஞ் சந் தோச மடைந்துகொண்டு வந்தவெகுமதிக ளடங்கலையும் இவர்கள்வசங் கொடுத்துவிட்டுத் திரும்பிப்போய்விட்டார் இந்த யிமாமுல்லகுலம் அ பூகனீபா றகிமகுல்லாகுத்தஆலா அவர்களின் வரிசையால் நமமள்பாவ த்தை ஆண்டவன் மன்னிப்பானாக் ஆமீன்.

மூன்று இமாம்களின் விபரம்.

(எருலா முன்ஞசி)யென்கிற கித்தாபிலும் (தபகாத்துல்புக்ககா) யென்கிற கித்தாபிலும் (இமாம்) மாலிக்கி றகுமதுல்லா அவர்கள் ஹிஜ்றத்து (௯௰) வருடம்பிறந்து அமீறுல் மூமினீன் ஹாறூன் றசீதுயென்ற சுல்த்தானுடைய காலத்தில் மதீனத்தில் ஹிஜ்றத்து (௱௭௯) வருடம் றபீகுல்லவ்வல்மாதம் (௰௪) தெய்தியன்று சுபுகுநேரத்தில்வுபாத்தாகி சென்னத்தில் பக்கீகுயென்கிற தானத்தில் அடங்கினூர்கள்.

(இமாம்) சாபியீ றகுமதுல்லாகு அவர்கள் ஹிஜ்றத்து (௱௫௰)வருடம் சாமுக்கு மிசுறுக்கு மிடையிலுள்ள குற்று யென்கிற ஊரிற்பிறந்து மிசுறு பிராச்சியத்தில் புறுக்கத்து சுகுறுயென்கிற ஊரில் ஹிஜறத்து (௨௱௪) வருடம் முகத்தமென்கிறமலைச்சார்பில் றசபுமாதம் கடைசி வெள்ளிக்கிழமை யிரவில் உபாத்தாகி விடிந்து அசறுக்குப்பின்பு அடங்கினூர்கள்.

(இமாம்) அகமதிபுனு முகம்மதிபுனுல் ஹம்பல் றகுமதுல்லா அவர்கள் பகுதாதில் ஹிஜறத்து(௱௯௪) வருடம்பிறந்து அவடத்தில் ஹிஜறத்து (௨௪௧) வருடம் றபிகுல்லவ்வல்மாதம் (௰௨) தேதி வெள்ளிக்கிழமை இரவு வுபாத்தாகி பாபுஹறபு யென்கிற தானத்தி லடங்கினூர்களென்று (தபகாத்துல்புக்ககா தகுதிபுல்கமால்) இதுபோலொத்தகித்தாபுகளில் வருகின்றது.

(இனி) இந்த யிமாம்களுடைய சங்கதிகளையும் யிவர்களைச்சேர்ந்த பின்னுள்ள யிமாம்களுடைய சங்கதிகளையுங் காரணத்துடன் விவரமாகப் பேசு வேண்டுமானுல் அவைகள் மிகவும் விரிவாக யிருப்பதாலு மிக்கித்தாபு சிறுசாகயிருப்பதாலு மிதில் பேசவில்லை நம்ம ளியாவருக்கும் யிவர்களின் துஆ பறக்கத்துண்டாவதாகவும் ஆமீன்.

இமாம்களின் வரிசைப்பிரசங்கம்

முற்றிற்று.

பிக்ஹுடைய ஹுக்முகளின் விபரம்.

மார்க்கத்திற் செய்யும்படியான வகை யைந்து அதில் (௧-வது) பறுலு அதாவது குறுஆன் ஹதீது இவைகளில் ஈருத்தங்கொள்ளாத அத்தாட்சியால்த் தரிபட்ட செய்கை அதைச் செய்தால் தவாபு கிடைக்கும் வுதுறன்றிவிட்டால் பெரும்பாவம் அதிகவேதனை கொடுக்கப்படும் யெல்லா இமாம்களும் ஒத்துமையான பறுலை அல்லத்தட்டினவன் காபிராகி விடுவான் வெளிப்பறுலைச் சறுத்தென்றும் வுள்பறுலை றுக்குனென்றுஞ் சொல்லப்படும் (௨-வது) வாஜிபு அதாவது ஈருத்தங் கொள்ளும்படியான அத்தாட்சியாற் றரிபட்டசெய்கை அதைச் செய்கிறதும் விடுகிறதும் தவாபிலும் அதாபிலும் பறுலைப்போலாகவிருக்கும் அதை அல்லத்தட்டினவன் காபிராகமாட்டான்என்றிலும் பெரும்பாவியாவான் (௩-வது) சுன்னத்து அதாவது நபிசல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் ஒருவிடுத்தம் இரண்டுவிடுத்தும் விட்டு மற்ற நேரங்களெல்லாம் நடத்திவந்த செய்கை அதைச்செய்தால் தவாபு விட்டால் அதாபு (௪-வது) முஸ்தகப்பு அதாவது நபிசல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் ஒருவிடுத்த மிரண்டுவிடுத்தஞ் செய்து மற்றநேரம் விட்டுவந்தசெய்கைக்கும் அசுகாபுகள் இமாம்கள் பிரியம்வைத்தசெய்கைக்கும்பெயர் அதைச்செய்தால் தவாபு விட்டால் அதாபில்லை (௫-வது) முபாகு அதாவது செய்கிறதும் விடுகிறதும் சம்மதங்கொடுக்கப்பட்ட செய்கைஅதைச்செய்தால் தவாபுமில்லை விட்டால் அதாபுமில்லை,

மார்க்கத்திற் செய்யக்கூடாத நடத்தை மூன்று வகைப்படும் அதில் (௧-வது) ஹறாமாக்கப்பட்டது அதாவது பெலவந்தமாகிய அத்தாட்சியால் விலக்கென்கிறது தரிபட்டதுந் தவிர ஆகுமாக்கும்படியாகிய அத்தாட்சி அதில் சேரிடாமலிருக்குமே அப்பேர்க்கொத்த செய்கை அதைச் செய்தாற் பெரிய அதாபும்விட்டால் தவாபுங் கிடைக்கும் எல்லா இமாம்களும் ஹறாமென்கிறதில் ஒத்துமையானதை ஆகுமென்று சொன்னவன் காபிராகிவிடுவான் (௨-வது) மக்குறூகு அதாவது வே

ருரு தலீலால் ஆகுமென்பது தரிபட்டிருக்கிறதுடன் விலகலென்ப
து பெலவந்தமாகிய அத்தாட்சியால்த் தரிபட்டசெய்கை அதைச்செய்
தால் வேதனையும்விட்டால் தவாபுங் கிடைக்கும் ஆகுமென்றுசொன்ன
ல் காபிராகமாட்டான் (௯-வது) முபுசிது அதாவது செய்த அமலை மு
றிக்கும்படியான செய்கை அந்த முபுசிதானசெய்கையை மனமுரண்டா
கச் செய்தால் வேதனை மறதியாகச்செய்தால் வேதனை இல்லையென்கிற
ம் அமலை முபுசிதான செய்கையுடன் மனமுரண்டாக அல்லது மறதியா
கச் செய்துமுடித்தால் அவன் அந்த அமலை மறுபடிசெய்யவேண்டியது
பறுலாகயிருக்கும்.

தஹாறத்தென்னுந் துப்புரவுகளின் பிரசங்கம்.

நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சொற்கத்திர்க்குத் திறவு
கோல்த் தொழுகையாயிருக்குந் தொழுகைக்குத் திறவுகோல் துப்புர
வாகயிருக்குமென்று திருவுளம்பற்றினார்கள்.

மலபாதை ஜலபாதை சுத்தி செய்வதின்பாபு. ஹதீது.

சடலத்தையும் பிடவைகளையுஞ் சுத்திசெய்யாம லிருப்பதுகொ
ண்டு கபுறுடைய அதாபு அதிகமாக யிருக்குமென்று நபிநாயகம் முக
ம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள்திருவுளம்பற்றினார்கள் ஆகை
யால் துப்புரவு செய்வதிற் சற்றுஞ் சோம்புதற் செய்யாமலிருப்பது
மனிதர்களின்பேரிற் கடமையாயிருக்கிறது (இனி) சிறுநீர்ச் செய்கிற
தர்க்கு முன் நீரையுண்ணும்படியாகிய துப்புரவான மண்கட்டியைப்
போலொத்ததிற் பிறலார் சொத்தில்லாத்ததை பூமியில் மூன்றுதரந் த
ட்டி யெடுத்துக்கொண்டுபோய் பூமியுறைந்திருந்தால் மெதுவாக்கிஅல்
லது மேட்டிலிருந்து சிறுநீர்ச்செய்தபின் ஆண்குறியென்னுந் தக்கரை
அடியிலிருந்து கத்தனுனைமட்டிலும் மெதுவாய்ப் பிடித்துவிட்டு நீர்

வடிந்தபின் கட்டி பிடித்து வுலாத்திக் கனைத்து இடதுகாலை வலது கா லின்பேரிற்சேர்த்து நீர்க்கசிவு நின்றதாகக் கல்புக்கு சுமாரானபின் தண்ணீர்விட்டு இடதுகையாற் கழுகவேணும் நீர்க்கசிவு நிற்கிறது சு மாராகாமல் ஒலுச்செய்தால் துருஸ்த்தாகாது.

(இனி) மலபாதை ஜலபாதை செய்ய வுட்காரும்போது அபத் தைக் கிபுலாவுக்கு நேராக்கிறதும் பிற்காட்டுகிறதும் கட்டிடத்திற்கு ள்ளிருந்தாலுஞ் சரி மக்குறூகு தகுரீமாயிருக்கும்.

இன்னும் சுத்திசெய்யும்போது அபத்தைக் கிபுலாவுக்கு நேராக் கிறதும் பிற்காட்டுகிறதும் மக்குறூகு தன்சீகாயிருக்கும்.

என்கிலுஞ் சிறுநீர் சுத்திசெய்வதற்கு வுடுத்தாடையை முழங் காலைவிட்டும் பின்துவாரத்தைவிட்டும் நீக்காமல் கிழக்கேபார்க்க விரு ந்து சுத்திசெய்வது மக்குறூகல்லை ஜனங்க ளிருக்கும்போது வுடுத்தா டையை முழங்காலைவிட்டு நீக்கிறதுஹறும் மலபாதை ஜலபாதை செய் யும்போது பொழுதை நிலவை முன்னோக்குவது மக்குறூகு இன்னு ம் செங்கல்-கரி-சுண்ணாம்பு இவைபோலொத்த எரிந்தவஸ்துவும் யெலு ம்பு காய்ந்தயெரு அல்லது தின்னப்பட்ட வஸ்து பளிங்கி இவைபோ லொத்த வஸ்துக்களைக்கொண்டு துப்புரவுசெய்வதும் வலது கையைக் கொண்டு துப்புரவுசெய்வதும் மக்குறூகு யெந்த நேரமாவது கிபுலா வை நோக்கித் துப்புகிறதும் வலதுபுறந் துப்புகிறதும் மக்குறூகு.

(பின்னற்) மலபாதைக்குப் போகும்போது முன்ஜலபாதைக்குச் சொன்னபிரகாரம் துப்புரவாக்கும்படியான வஸ்துகள் பிறர்சொத்துக ளில்லாமல் யெடுத்துக்கொண்டுபோய் (பிசுமில்லாகி அல்லாகும்ம இ ன்னீ ஆவூது பிக்க மினல்குபுதிஒல்கபாஇதி) யென்றுசொல்லி இடது காலை யுள்ளேவைத்து வாய்பேசாமல் மூக்குச்சிந்தாமல் அதிகந் திரும்பி ப்பார்க்காமல் கனைக்காமல் அதிக நேரமிருக்காமல் வெட்கத் தலத்தை யும் நஜீசையும் பாராமல் யெச்சிதுப்பாமல் தலைகவிழ்ந்தவனாக இருந்து

மலஜலத்தைவிட்டு நீங்கினவுடனே ஆண்குறியை அடியிலிருந்துமெதுவாய்ப்பிடித்துவிட்டு மூன்றுகல்லு அல்லது அதிகக்கற்களைக்கொண்டு நஜீசைத் துடைக்கும்விதம் கோடைகாலத்தில் பீசந்தொங்குமாதலின் முதலாவது கட்டியையும் மூன்றுவது கட்டியையும் முன்பக்க மிருந்து பின்பக்கங் கொண்டுபோகவும் இரண்டாவது கட்டியைப் பின்பக்கமிருந்து முன்பக்கங் கொண்டுவரவும் குளிர்காலத்தில் பீசஞ் சுருங்குமாதலின் முதலாவதுகட்டியையு மூன்றுவதுகட்டியையும் பின்பக்க மிருந்து முன்பக்கங்கொண்டுவரவும் இரண்டாவதுகட்டியை முன்பக்கமிருந்து பின்பக்கங்கொண்டுபோகவும் பெண்பிள்ளைகள்எக்காலமும் ஆண்பிள்ளைகள் கோடைகாலத்திற் செய்துவரவேண்டிய முறைபோல் முதலாவது கட்டியையும் மூன்றுவதுகட்டியையு முன்பக்கமிருந்து பின்பக்கங் கொண்டுபோகவும் இரண்டாவதுகட்டியை பின்பக்கமிருந்து முன்பக்கங் கொண்டுவரவும்.

(இனி) ஆண்பிள்ளைகள் கட்டிபிடித்து வெட்கத்தலத்தை மறைத்து யெழுந்து வலதுகாலை வெளியில்வைத்து வந்து மறைவான தலத்தில் உலாத்திநின்று நீர் வுலர்ந்தபின் வேறே யொருதானத்திலிருந்து முதலாவது இரண்டு கையையுங்கழுகி இடதுகையால் முன் துவாரத்தைக்கழுகி பின் துவாரத்தை நாற்றம் போய்விட்டதுநிண்ணயப்படுகிறவரையு நடுவிரலைக்கொண்டு அல்லது நடுவிரலையு மதை யடுத்த இரண்டு சின்னவிரலையுங்கொண்டு விரல்களின் நுனி அல்லது நகக்கண் பின்துவாரத்திற்படாமற் துப்புறவுசெய்யவும் அப்பால் பூமியில் கையைத்தேய்த்துக் கழுகவேண்டும் இந்த குக்குமுகளில் பெண் பிள்ளைகளுக்கும் ஆண்பிள்ளைகளுக்கும் வித்தியாசமில்லை யென்கிலும் கட்டிபிடிக்கிற குக்கும் பெண்பிள்ளைகளுக்கில்லை ஆனல் அவர்கள் இருந்த யிடத்தைவிட்டு நகண்டு கொஞ்சநேரமிருந்து கல்லால்த் துடைத்துவிட்டு தண்ணீரைக்கொண்டு துப்புரவுசெய்யவேண்டும் துப்புரவு செய்தபின்பு (அல்கம்துலில்லாஃ அல்லாகும்ம ஹஸ்ஸின்பறுசீ ஒயெச்சிர் அம்றீ) யென்று ஓதவேண்டியது.

(இனி) ஓடுகிற தண்ணீரிலுங் கட்டுக்கிடைத் தண்ணீரிலு மாற்றருகிலுங் கிணற்றருகிலுங் குளத்தருகிலு மூற்றருகிலு மனிதர்களுக் கிருக்க வுபயோகமான நிழலிலும் வெள்ளாண்மையிலும் கனியுள்ள மரத்தினடியிலும் பள்ளிவாசலுக் கருகிலும் பெருநாள்க்கொத்துபாப்பள்ளி வாசலுக்கருகிலும் கபுறிஸ்தானிலும் ஆடு மாடுகளுக் கிடையிலும் புடைகளிலும் ஒலுச்செய்கிற தலத்திலுங் குளிக்கிற தலத்திலும் மலபாதை ஜலபாதைக் கிருக்கிறது மக்குறூகு கால்களைக் கிபுலாவுக்கு நேரே நீட்டுகிறதும் குறுஆனுக்கு நேரேநீட்டுகிறதும் மக்குறூகு நின்று சிறுநீர்ச்செய்வதும் மலபாதை ஜலபாதைக் கிருக்கும்போது பேசுகிறதும் மக்குறூகு நம்ம ளியாவரையும் அல்லாகுத்தஆலா துப்புரவான கூட்டத்திலாக்குவாராக ஆமீன்.

115367

ஒலுவினுடைய பாபு ஹதீது.

ஒருமனிதன் ஒலுச்செய்யநாடி முகத்தைக் கழுகினால் பார்வையாற்செய்த பாவமடங்கலும் இரண்டு கையையுங் கழுகினாற் கையாற்றெட்ட பாவமடங்கலும் இரண்டு காலைக்கழுகினாற் காலால் நடந்தபாவமடங்கலும் ஒலுச்செய்த வுறுப்புகளிலிருந்து விழுகிற தண்ணீர்த்துள்ளிகளுடன் நீங்கிப் போய்விடுமென்று நமதுநாயகம் நபிசல்லலல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளம்பற்றினதாக (முசுலி) மென்கிற கித்தாபில் வருகிறது.

இன்னும் ஒருமனிதன் மவுத்தாகிக் கபுறிலடக்கப்பட்டபின்பின் வுன்னை நூறடியடிக்கும்படி அல்லாகுத்தஆலா வெனக்கு வுத்தரவுசெய்து அனுப்பினானென்று ஒரு மலக்குவந்து சொன்னார்கள் உடனே இவன் பதறி ஆண்டவனே நான் இன்ன இன்ன நல்ல அமற்களைச் செய்தேனென்று முறையிட்டபின் ஒரு அடி அடிக்கும்படி அல்லாகுத்தஆலா வுத்தரவுசெய்தான் அம்மலக்கு அவனை ஒருஅடி அடித்த வுடனே கபுறு நெருப்பாக நிறைந்துவிட்டது யென்னை யேன் இவ்வித மடிக்கப்ப

ட்டதென்று கேட்டார் ஒருநாள் ஒலுவில்லாமல் நீர்தொழுதீர் இன்னம் ஒருயேழையை ஒருமனிதன் அடிக்கக்கண்டு தட்டி விலகாமற்போய்வி ட்டீர் இந்த இரண்டு குற்றத்திர்க்காக வும்மை நாடி யடிக்கிறதர்க்கு நான் வந்தேன் உம்முடைய நல்ல அமலினுல் ஓரடி யடித்தே னென்று அம்மலக்குச் சொன்னுர் யென்கிறதாக நபிநாயகம் முகம்மதுநபிசல்லல் லாகு அலைகிஉசல்லம் அவர்கள் திருவாய்மலர்ந் தருளினுர்கள்,

இன்னம் (அபூதாவூதென்கிற) கித்தாபில் வந்திருக்கிறதாவது ஒருமனிதன் ஒலுச்செய்து அவ்வொலுவைக்கொண்டு ஒருஅமலை நிறை வேற்றி அவ்வொலுவிருக்க மறு ஒலுச்செய்தால் அவனுக்குப் பத்துந ன்மை எழுதப்படுமென்று நபிநாயகம் முகம்மதுநபிசல்லல்லாகு அலை கிஉசல்லமவர்கள் திருவுளம்பற்றினுர்கள்.

ஹிக்காயத்து.

(றவுலுற்றயாகீ) னென்கிற கித்தாபில் வருகிறதாவது சுனைதுல்ப குதாதி றகிமகுல்லா அவர்களுக்கு ஒருநேரம் கண்வலியுண்டாயிருந்த து அப்போது ஒரு நசுருணி வைத்தியனிடத்தில் இவ்வியாதிக்கு என் னமருந்து செய்யவேணுமென்றுகேட்க தண்ணீரை முகத்தில்த்தடவா மலிருந் கண்வியாதி தீர்ந்துபோகுமென்று அவன்சொன்னுன் அப்பா ல் வைத்தியன்போய்த் தொழுகைநேரம் வந்தவுடனே வைத்தியன்சொ ல்லைக் கவனியாமல் ஒலுச்செய்து அல்லாகுத்தஆலாவின் கட்டளையாகி ய தொழுகையை நிறைவேற்றிவிட்டு கொஞ்ச நித்திரைசெய்து விழித் துப்பார்க்கக் கண்ணுடைய வியாதிதீர்ந்து சுகத்துப்பெற்றுர்கள் உட னே உருத்தோற்றமன்றியே சுனைதென்பவர் தமது இரு கண்ணையும் நம்முடைய பொருத்தத்திர்க்காக விட்டுவிட்டு ஒலுச் செவ்வையாய்ச் செய்ததால் இவருடைய கண்வியாதியைத் தீர்த்தோம் நரகவாதிகளாகி ய ஜனங்க ளிப்பேர்க்கொத்தசெய்கையைச்செய்து என்னிடம் இதுபோ ல் மூடுகுதல் பெறவேணுமென் றெண்ணினுல் அவர்களுக்கு நான் ஜ வாபு சொல்லுவேனென்று ஒரு சத்தங்கேட்டது.

பின்னர் வைத்தியன்வந்து இவர்கள்கண் ருகத்தாகிஇருக்கிறதை ப்பார்த்து என்ன செய்தீரென்றுகேட்க ஒலுச்செய்து என்னுடைய நாயனைத் தொழுதேனென்று சொன்னூர்கள் இதைக் கேட்டவுடன் புதுமைப்பட்டு வைத்தியன் சொன்னதாவது இது படைத்தவனுடைய மருந்தேயல்லாது மனிதருடைய மருந்தல்ல வாகையால் இதையாலோசிக்குமளவில நான்தான் வியாதிக்காரனுகயிருக்கிறேன் நீங்கள் வைத்தியாக யிருக்கிறீர்கள் உங்களுடைய மார்க்கத்தை எனக்குப் படித்துத்தாங்களென்று கேட்டுப் படித்து ஈமான்கொண் டிசுலாமார்க்கத்திற்சேர்ந்தார்.

ஒலுவின் பறுலுகள்.

அதாவது நாலாகயிருக்கும் அதில் (க-வது) முகத்தைநெற்றிமுடிமுளைக்குந் தானத்திலிருந்து நீளத்தால் நாடிக் குளிவரைக்கும் வலது காதிலிருந்து அகலத்தால் இடதுகாதுவரை இடைவிடாமல் நன்றாய்க் கழுகிறது (உ-வது) இரண்டுகையையு முழங்கை யுள்படக் கழுகிறது (ங-வது) தலையில் நாலிலொருபங்கு மசஹுசெய்வது (பெருனீ) தண்ணீரால் தேய்ப்பது (ச-வது) இரண்டு கால்களையும் கறண்டை யுள்படக் கழுகிறது சாபியீ மத்ஹபில் இந்த நாலு பறுலுடனே அடவாகக் கொண்டுவருகிறதும் ஒலுச்செய்கிறேனென்று முகங்கழுகும்போது நீயத்துச்செய்கிறதும் பறுலு ஆருகயிருக்கும்.

ஒலுவின் சுன்னத்துகள்.

அதாவது (மச) அதில் (க-வது) அல்லாகுத்தஆலாவின் யேவலுக்குத் தலைசாய்த்துத் துடக்கை நீக்குவதற்க்காக ஒலுச்செய்கிறேனென்று நிய்யத்துச்செய்கிறது (உ வது) பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீம் பிசுமில்லாஹில் அலிம் ஒல்கம்துலில்லாகி அலாதீனி யிசுலாம்யென்று சொல்வது (ங - வது) இரண்டுகையையு மணிக்கட்டுவரை கழுகிறது (ச-வது) நாருள்ளமரத்தி னின்றுமுள்ள குச்சியைக்கொண்டு பற்தீட்டுவது ஆனல்பற்தீட்டுகிற குச்சிகளில் ஏற்றமானது அகாக்குச்சிபின்பு

செய்த்தூன் குச்சியாயிருக்கும் பல்த் திட்டுவெதின் பாயிதாவென்னும் பிரயோசனம் அநேகமுண்டு அதிலொன்று பிசுவாக்குச்செய்த காரணத்தால் தொழுகையை தவாபால் எழுபதுபங்கு இ[illegible]டிப் பாக்கப்படும் (இனி) மிசுவாக்குச் செய்கிறவிபரமாவது குச்சியைக் கையி லெடுத்துச் சுண்டுவிரலின்மேற் குச்சியு மடுத்த மூன்றுவிரலுங் குச்சிக்கி மேலும் பெருவிரல் குச்சியினுள்ளிலு மாகப்பிடித்துப் பல்லுகளின் வெளியிலு முள்ளிலு மருங்கிலு முறசிலுங் தேய்க்கிறது வாயைவிட்டு வெளியிலெடுக்காமற் றேய்க்கவேணும் யெடுத்தால் மறுபடி குச்சியைக்க[illegible] மூகித்தேய்க்கவேணும் வெளியி லெடுத்த குச்சியை[illegible] ல்வைத்துத்தேய்த்தால் செய்த்தான் அதைக்கொண்டுதேய்ப்பான் குச்சி யொருச்சாணுக்கு அதிகமானல் செயித்தா னதின்பேரி லிருந்துக்கொள்வான் மறுபடிதேய்க்கிறவனை பதனமாகக்கட்டிவைக்கவேணும்.

இவ்விதமாக அதபுடனே தேய்த்துவந்தால் மவுத்தைத்தவிர மற்ற வியாதிகளுக்கெல்லாம் மருந்தாகயிருக்கும் யிச்செய்திகள் பகரு-நகரு-சன்னு-சரம்பலாலியா யிதுபோலொத்த கித்தாபுகளில்வந்திருக்கிறதாய் றத்துல்முகுத்தாரென்கிற கித்தாபில் பேசிவருகிறார்கள் (ரு-வது) மூன்றுவிடுத்தம் வாய்கொப்பளிக்கிறது (சா-வது) நாசியிரண்டிலு மூன்றுவிடுத்தந் தண்ணீர்செலுத்துகிறது (எ-வது) தாடி யடர்ந்திருக்கிறதை கோதுகிறது (அ-வது) கழுகப்பட்ட வுறுப்புகளை மூன்றுவிடுத்தஞ் செவ்வையாய்க்கழுகிறது (கூ-வது) கை-கால் விரற்களைக் கோதிக் கழுகிறது (ய-வது) தலையடங்கலுமசகுசெய்கிறது (யக-வது) தலைக்கியெடுத்த தண்ணீரால் யிரண்டு காதுக்கும் மசகு செய்கிறது (யஉ-வது) பறுலான வுறுப்புக்களை யிதிற்சொல்லியிருக்கிறபடி ஒழுங்காகக் கொண்டுவருகிறது (யங-வது) வுறுப்புகள் காய்கிறதர்க்கு முன் துடருகக்கொண்டுவருகிறது·

ஹிக்காயத்து,

புலைவிபுனு யியாலு நகிமகுல்லாஅவர்கள் ஒருபோதையில் ஒரு சுன்னத்தைவிட்டு ஒதுச்செய்து தொழுது நித்திரைசெய்தபின் நபிநாயகம் முகம்மதுசல்லல்லாகு அலைகி ஒசல்லமவர்கள் கனவில் வந்து ஆய் இதென்னபுதுமை ஒலுவில் என்னுடைய ஒரு சுன்னத்தை விட்டுவிட்டீரோ யென்று சொன்னவுடன் பதறியெழுந்து மறுபடி ஒலுச் செய்து அதற்குத் தெண்டமாக நித்தியம் அஞ்ஞூறு றெக்காயத்து விகிதம் ஒருவருடம்வரை தொழுதார்கள் ஆகையால் ஒலு தொழுகை முதலிய வைகளிற் சுன்னத்தைப் பேணுதலாகக் கொண்டு வரவேண்டியது முசுலிமாகிய எமது பிறவிகளடங்கலுக்கு மகத்தியமாகயிருக்கும்.

ஒலுவின்முஸ்தஹப்புகள்

அவைகளநேகமுண்டும் அதிற் சிலதாவது கிபுலாவைமுன்னோக்கிறதும் தலையிலொன்றுமில்லாமல் ஒலுச்செய்வதும் வலதுவுறுப்புகளை முற்படுத்துவதும் இரண்டு புறங்கைகொண்டு கழுத்துக்கு மசகு செய்வதும் தண்ணீர் அதிகச்செலவு செய்யாதிருப்பதும் அல்லாவுடைய பெயர்முதலிய தெழுதின மோதிரங்களைக் கழற்றிக்கொள்வதும் துன்யாவினுடைய பேச்சுகள் அகத்தியமன்றிப் பேசாமலிருப்பதும் ஒவ்வொரு வுறுப்புகள் கழுகும்போதும் பிசுமில்லா சலவாத்து சகாதத்துக்கலிமாச் சொல்வதும் அந்தந்த வுறுப்புகளுக்கு யேற்பாடான துஆவோதுவதும் விஸ்தீனமான மோதிரத்தைத் திருப்பிக் கொள்கிறதும் ஒலுச்செய்து முடிந்தபின் கிபுலாவை முன்னோக்கி நின்று அல்லது யிருந்து ஒலுவின் மிச்சத்தண்ணீர் குடிப்பதும் இன்னம் யின்னஅன்சல்ணகு மூன்றுவிடுத்தம் ஒதுவதும் (அல்லாகும்மச் அல்னிமினத்தவ்வாபீன் ஒசு அல்னீ மினல்முத்த தஹ்ஹிறீன்) யென்று கிபுலாவை முன்னோக்கி ஒதுவதும் இவைபோல் சூம-முஸ்தகப்புக்குமேல் கசாயீன் என்கிற கித்தாபிற் சொல்லுகிறார்கள். யின்னும் உள்ளச்சமாக ஒலுச்செய்யவும்

ஒலுவின் மக்குறூகுகள்.

அதாவது முகம் அல்லது அதுபோலொத்த வுறுப்புகளைத் தண்ணீரைக்கொண்டு அடிப்பதும் தண்ணீரைத் தன் ஆசத்துக்குமேல் அதிகச் செலவுசெய்கிறதும் மூன்று விடுத்தத்திற்குமேல் வுறுப்புகளைக் கழுகிறதும் அல்லது குறைக்கிறதும் மஷகு செய்யப்பட்ட வுறுப்புகளைப் புதிய தண்ணீர்கொண்டு மூன்றுதரம் மஷகுசெய்வதும் நஜீசான யிடத்தில் அல்லது துப்புரவுசெய்கிற யிடத்திலிருந்து ஒலுச்செய்கிறதும் பெண்பிள்ளைகள் ஒலுச்செய்து மிச்சத் தண்ணீரைக்கொண்டு ஆண்பிள்ளைகள் ஒலுச்செய்கிறதும் பள்ளிக்குள் தண்ணீர் சிந்தும்படி ஒலுச்செய்கிறதுமாக யிருக்கும் இனி மக்குறூகுகளிற் சிலது கருமுக்கு அடுத்த மக்குறூகு தஹ்றீமாக யிருப்பதால் (சஅ) மக்குறூகு சேர்ந்தால் ஒரு ஹறுமென்று மனிதர்கள் சொல்வது பிசகாகயிருக்கும்,

ஒலுவின் முறிச்சல்கள்.

அதாவது (கூ) அதில் (க-வது) முன்துவாரம் பின் துவாரத்திலிருந்து யாதொரு வஸ்துகள் புறத்திப்படுகிறது (உ-வது) சரீரத்தினின்று மிரத்தஞ் சீள் சலம் புறப்பட்டுக் காயத்தைவிட்டு வழிந்தோடுகிறது (ங-வது) வாய்நிறம்பச் சத்தியெடுக்கிறது (ச-வது) படுத்து அல்லது ஒருவஸ்துவிற் பெலமாகச் சாய்ந்து நித்திரை செய்கிறது (ரு-வது) பைத்தியம்பிடிக்கிறது (சு-வது) போதக்கேடாகிறது (எ-வது) ஒரு வஸ்துவைத்தின்றுலகிரியாகிறது (அ-வது) றுக்கூகு சுஜூதுடைய தொழுகையில் பாலிக்கானவர்கள் வெடிசிரிப்புச் சிரிக்கிறது (கூ- வது) ஆணும் பெண்ணும் அல்லது ஆணுமாணும் இருவரின் வெட்கத்தலம் ஆண்பிள்ளைக்கி யுசும்புதலுடனே திரையன்றி அல்லது பெண்ணும் பெண்ணும் திரையன்றி வெட்கத்தலம் ஒன்றோடொன்றுதொடும்படி இரண்டு வுறுப்புஞ் சந்திக்கிறது.

இனி முன்துவாரத்தில்மாத்திரம் காற்று வெளிப்பட்டாலும்அல்லது காயத்திலிருந்தாவது செவியிலிருந்தாவது நாசியி லிருந்தாவது வாயிலிருந்தாவது புழுப்புறப்பட்டாலும் சிறு குழந்தை தொழுகையிலிருக்கும்போது வெடிசிரிப்புச்சிரித்தாலும் பாலிக்கானவன் ஷஹுசாத் தொழுகையில் வெடிசிரிப்புச் சிரித்தாலும் கொஞ்சம் ஓங்கார மெடுத்தாலும் அல்லது வாய்நிறம்பக் காறலாகச் சத்தி யெடுத்தாலும் சாயாமல் நித்திரைசெய்யும்போது ஒரு வஸ்துவில்விழுந்து தரிபடுமுன்னெழும்பினுலும் வெட்கத்தலத்தையாவது பெண்பிள்ளையை யாவது தொட்டாலும் ஒலுவை இவைகள் முறிக்காது.

சரீரத்தில் பெரிய வுண்ணியாவது அட்டையாவது கடித்து வழிந்தோடும்படியான திட்டமுள்ள யிரத்தத்தை யருந்தினுலும் ஒரு வஸ்துவில்விழுந்து கொஞ்சம் தரிபட்டு நித்திரைசெய்தபின் விழித்தாலும் ஒலு முறியும்,

(இனி) ஒலுவில்லாம விருப்பவர்கள் மூன்றுவேலைசெய்வது ஹறாம் அதில் (க-வது) தொழுகிறது (உ-வது) ஒருசொற்படி கஉபாவைச் சுற்றித் தவாபுசெய்கிறது (ங-வது) வுறையில்லாமல் குறுஆனைத் தொடுகிறது.

ஒலுவின்பாபு—முற்றிற்று.

குசுலென்னும் முழுக்கின்பாடு.

முழுக்கை விதியாக்கிற வகைகளாவது நித்திரையில் அல்லது முழிப்பில் ஆசையுடனே மனியென்னும் இந்திரியம் ஆண்பிள்ளையின் முதுகின் தண்டிலிருந்தும் பெண்பிள்ளையின் நெஞ்சாங்கொழுந்திலிருந்தும் புறப்பட்டாலும் அல்லது வரைமறையும்படி சேர்க்கைசெய்தாலும் இதினால் இந்திரியம் புறப்படவில்லையானாலுஞ் சரி இன்னும் ஒருவன் நித்திரையில் செய்த்தான் ஹறக்கத்து ஞாபகமில்லாம லிருந்தாலும் முழித்தவுடன் இந்திரியத்தை அல்லது இந்திரியமோ சொற்ப ஆசையால் வெளியாகும்படியான மதியோ வென்று சந்தாபிக்கப்பட்ட ஈரத்தைக் கண்டாலும் குளிக்கவேண்டியது கடமை இன்னம் ஹயிலென்னுஞ் சூதகம் நின்ற யுடனேயும் நிபாசென்னும் பிள்ளைத்துடக்கு நின்றயுடனேயும் குளிக்கிறது பறுலா யிருக்கும்.

ஆனால் சேர்க்கைசெய்வதில் இருவர்மீதும் குளிக்கிறது கடமை (இனி) சொற்பவிளையாட்டால் வெளியாகும்படியான மெல்லினமாகிய வெள்ளைத்தண்ணீரென்னும் மதிவெளிப்பட்டாலும் சிறுநீருக்குப்பின் வெளிப்படும்படியான கனத்த நீரென்னும் ஒதி வெளிப்பட்டாலும் கனவில் ஆண்பெண் சேர்க்கை செய்யக்கண்டு வெட்கத் தலத்தில் ஈரத்தை முழித்தபின் காணவில்லை யானாலும் குளிக்கவேண்டிய கடமையில்லை.

ஹதீது.

இரண்டுபேருஞ் சேர்ந்து கத்தனுவரை மறைந்தால் மனி இறங்கினாலும் இறங்காவிட்டாலும் இரண்டுபேர்பேரிலும் முழுக்கு விதியாகிவிட்டது,

இயாராவது ஒருவன் முழுக்குவிதியாகியிருக்க குளியாமல் ஒரு நாள்ப் பிற்படுத்துவானாகில் அவன்பேரில் பூமியிலுள்ள வஸ்துகளெல்லாம்·லகுனத்துடன் பத்துஆச் செய்யும் அவன் பொருளில் அல்லாகு

த்தஆலா நாற்பதுநாளேக்கி பறக்கத்தை யெடுத்துவிடுவான் அவன் கபுறைவிட்டு மெழுந்திருக்கும்போது துர்நாற்றம் மகுசர் மைதானிலுண்டாகும் அப்போது மகுசறிலிருக்கிற ஜனங்கள் இந்த வாடையென்னவென்று கேட்பார்கள் அப்போது மலக்குகள் இது முழுக்குவிதியாகியொருநாள்வரை குளியாமலிருந்தவனுடைய நாற்றமென்று சொன்னவுடனே ஆண்டவனே இந்த மூதேவியைவிட்டும் யெங்களை ரட்சித்துக்காப்பாத்தென்று ஜனங்கள் சொல்லுவார்கள் அந்நேரம் அல்லாகுத்தஆலா இவனை நரகத்தில் கொடுபோய் மாவுல் ஹமீமென்னும் வூன்வெந்நீரிற் குளிப்பாட்டுங்களென்று வுத்திரவு செய்தனுப்புவான்.

இயாராவது ஒரு மனிதன் முட்டுமறைய வுடுத்தாடையில்லாமற் குளித்தால் நாற்பதுவருடம் செய்த நல்ல அமலை அல்லாகுத்தஆலா அழித்துவிடுவான் யென்று நபிநாயகம் முகம்மதுசல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் திருவுளம்பற்றினதாக (றயாகீனுல் அகியார்) யென்னுங்கித்தாபில் வந்திருக்கிறது.

ஹிக்காயத்து

இப்பானுல் புஜலி யென்கிறவர்கள் சொல்லி வருகிறார்கள் அதாவது எங்கள்வீட்டுக்கு அடுத்தவீட்டுக்கார மனிதன் மவுத்தாகி குளிப்பாட்டி கபுறுக்கு கொண்டு போகும்போது அக் கபுறில் பூனையைப் போலொரு மிருகமிருந்தது அம்மிருகத்தை வெருட்டி மண்வெட்டியால் அடித்ததில் போகவில்லை வேறொரு கபுறு தோண்டினதிலும் முன்போலவே பூனைவடிவாகவே ஒரு மிருகமிருந்தது அடித்துத் துறத்தினதில் போகவில்லை அப்பால் அவர் விதி இதுதானென்று அடக்கி மண்ணைத் தள்ளினவுடனே அவனுடைய எலும்பையுமுறிக்கிற சத்தம்கேட்டது இதைப்பற்றி நாங்கள் மனவருத்தமடைந்து இவர் யென்ன அமற்செய்தாரோ வென்று யோசித்து அவர் பெண்சாதியிடத்தில் இந்தவிபரஞ் சொல்லிக்கேட்க அவர் பறுலானமுழுக்கைப் பிற்படுத்திப் பிற்படுத்தி முழுகுவாரென்று அந்தப் பெண்பிள்ளை சொன்னாள்.

இதற்க்காகத்தான் ரூபமெழுதப்பட்டவீட்டிலும் நாயிருக்கிறவீட்டிலு முழுக்காளியிருக்கிற வீட்டிலும் றஹ்மத்துக்கொண்டு வருகிறமலக்குகள் வரமாட்டார்கள் யென்றும் யாராவது ஒரு மனிதன் ஒரு வுரோமப்பிரமாணம் கழுகாமல் விட்டுவிட்டால் இன்ன இன்னவிதமான கடிசான அதாபுகள் செய்யப்படுமென்று நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிஉசல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினார்கள்.

முழுக்கின் பறுலுகள்,

அதாவது (ங) அதில் (க-வது) வாயை நன்றாய்க் கொப்பளிக்கிறது (உ-வது) நாசிக்குத் தண்ணீர்செலுத்துவது (ங-வது) தொப்புள் மேல்மீசை புருவம் தாடி தலைரோமங்கள் பெண்பிள்ளைகள் உட்காரும் போது வெளியில் தெரியும்படியான பெண்குறி அபம் வுள்பட அடங்கலும் நன்றாக நனையும்படி குளிக்கிறது.

முழுக்கின் சுன்னத்துகள்.

அதாவது (எ) அதில் (க-வது) நீயத்து அதாவது நவைத்து அன் அகுத்தசில் லிறப்கில் ஜனுபத்தி இம்த்தி தாலன் லிஅம்றி ல்லாகித்தஆலா யென் பேரிலுள்ள ஜனுபத்தென்னும் பெருந் துடக்கை நீக்குவதற்க்காக அல்லாகுத்தஆலாவின் யேவலுக்கு வழிப்பட்டுக் குளிக்கிறேனென்று நீயத்துச்செய்கிறது (உ-வது) பிசுமில்லாச் சொல்லுகிறது (ங-வது) இரண்டுகையையு மணிக்கட்டுவரை கழுகிறது (ச-வது) அய்பானதலத்தைக் கழுகிறது (ரு-வது) சரீரம் பிடவைகளில் நஜீசுபட்டிருந்தால் அதைக் கழுகிறது (சு-வது) தொழுகைக்கு ஒலுச்செய்வது போல ஒலுச்செய்வது (எ-வது) தலையின்பேரில் மூன்றுவிடுத்தம் வலதுதோளின்பேரில் மூன்று விடுத்தம் இடது தோளின்பேரில் மூன்று விடுத்தம் அப்பால் சரீரமடங்கலிலு மூன்றுவிடுத்தந் தண்ணீர் வார்த்துக்குளிக்கிறது (இனி) ஒருவன் வாய்கொப்பிளித்து நாசிக்குத் தண்

ணீர் செலுத்தியபின் ஓடுகிற தண்ணீரிலாவது மிகுதமாகிய நிலைத்தண்ணீரிலாவது சரீரம் உசும்பும்படி வார்த்துக்குளிக்கிற நேரம்வரை தரித்திட்டால் சுன்னத்துடைய தவாபுகிடைக்கும்.

(இனி) மையத்தைக் குளிப்பாட்டுகிறது ப்ருலுக்கிபாயா சுனுபாக இசுலாமார்க்கத்தில் வந்தவன் குளிக்கிறதும் மனி இறக்குதலென்னும் இன்சாலைக்கொண்டு அல்லது ஹைலைக்கொண்டு பாலிக்கான சிறுபிள்ளைகள் குளிக்கிறதும் பறுலாகவிருக்கும்.

சுன்னத்தான முழுக்கு,

சும்ஆநாளிலும் இரண்டு பெருநாளிலும் அரபாத்து மலையிலும் கச்சுக்கு அல்லது உம்றுவுக்கு இகுறுங்கட்டும்போதும் குளிக்குகிறது சுன்னத்து (இனி) முழுக்கென்னும் பெருந்துடக் கில்லாமல் துப்புரவாக இசுலாத்தில்வந்தவன் குளிக்கிறதும் பைத்தியகாரனாக யிருந்து தெளிவுபெற்றதின்பின் குளிக்கிறதும் சிறுபிள்ளை (௰௫) வயது கொண்டு பாலிக்கான்வுடன் குளிக்கிறதும் போதக்கேடாகக் கிடந்தவன் தெளிவுபெற்றவுடன் குளிக்கிறதும் இரத்தங் குத்திவாங்கினவுடன் குளிக்கிறதும் ஷகுபான்மாசம் பறுஅத்து இராத்திரியில் குளிக்கிறதும் துல்ஹஜ்ஜு மாதம் ஒன்பதாந்தேதி இர்ராத்திரியிற் குளிக்கிறதும் லெயிலத்துல் கதுறி இரவிற்குளிக்கிறதும் மக்கத்தினுட் புகும்போது குளிக்கிறதும் கிராணத்தொழுகைக்கும் மழைக்காகத் தொழும்போதும் நிடுக்கம் இருள் கடிசான்காற்று இவை நீங்கிறதர்க்காகத் தொழும்போது குளிக்கிறதும் ஆக இந்த (௰௪) வகை முழுக்கும் முஸ்தகப்பாக யிருக்கும்.

முழுக்கின்பாபு - முற்றிற்று.

ஹய்லு நிபாசின் பாபு.

(ஹய்லாவது) ஒன்பது வயதுள்ள கமலில்லாதவளுடைய கெற்பம் பிள்ளைப்பெறுகிறதன்றியே வெளிப்படுத்தும்படியான இரத்தாமாயிருக்கும் அதின் நிறமாவது துய்ய வெள்ளையைத்தவிர கறுப்பு சிவப்பு மஞ்சள் பச்சை மண்ணிறம் கலங்கல் இந்த ஆறுநிறமாகயிருக்கும்அதின் காலமாவது ஒன்பது வயதிலிருந்து அய்ம்பத்தைந்து வயது வரையிலுமாகயிருக்கும் அதில் குறைந்தது மூன்றுநாள் கூடியது பத்து நாள் இதர்க்கு அதினங்கண்டாலு மூன்றுநாளைக்குக் குறைந்தாலும் ஹய்லல்ல சூதகவியாதியாக யிருக்கும்

(நிபாசாவது) பிள்ளைபிறந்ததுமுதல் அல்லது குழந்தையில் மிகுதம் புறத்திப்பட்டது முதல் கெற்பத்திலிருந்து வெளியர்கிற உதிரமாயிருக்கும் அந்த வுதிரத்தில் குறைந்ததர்க்கு மார்க்கத்திலித்தனைநாளைக்கென்று யேற்பாடுயில்லை யெங்கிலும் ஒரு வினாடிகைநேரம்கண்டு மறைந்திடவும் போதும் அதில் கூடியது நாற்பது நாள்மட்டாகயிருக்கும் இதில் அதினமானால் நிபாசல்லை வியாதியாகயிருக்கும்.

ஒரு பெண்பிள்ளை தொழுகையின் கடாசிநேரத்தில் ஹைலுகண்டால் அந்த வக்த்தின்தொழுகை அவள்பேரில் வாஜிபில்லை அப்படியானநேரத்தில் ஹைலைவிட்டுந் துப்புரவானால் அவள்பேரில் அந்த நேரத்துத்தொழுகை விதியாக யிருக்கும் ஒருபெண்பிள்ளை பகலையின்கடாசியில் ஹைலானால் அன்றைய நோன்பு முறிந்துவிடும் பகலில்துப்புரவாகி யாதொன்றும் தின்னா திருந்தபோதிலும் அந்த நோன்புகூடாது ஆனாலவள் நோன்பு பிடித்தவளைப்போல வூண் தீன்முதலானது யாதொன்று மில்லாமலிருக்கவேண்டியது அவள்பேரில் வாஜிபாகயிருக்கும்.

பின்பு அன்றையநோன்பைக் கலாவுஞ் செய்யவேண்டியது ஒரு பெண்பிள்ளை யெப்போது ஹைலை விட்டுத் துப்புர வாகி விட்டாளோ அப்பவே யாதொரு தாமதமன்றிக் குளித்துத் தொழுகைநோன்பைப்

பிந்தாமலெடுக்கவேணும் இதன்றியே கொஞ்சநேரமாகிலும் பிற்படுத்துவது ஹறாம் இனி ஹைலு கண்டிருக்கும்போது தொழுகையின் ஒருத்து வந்துவிட்டால் ஒலுச்செய்து தொழுகிற தானத்திலிருந்து அந்த ஒருத்துத் தொழுகை தொழுது தீருகிறதர்க்கு யெவ்வளவு நேரஞ் செல்லுமோ அவ்வளவு நேரமிருந்து கலிமா தஸ்பீகு இஸ்திகுபாறு இவைகள் ஓதிக்கொண்டிருக்கிறது முஸ்தகப்பென்று ஆலங்கீறி முதலான கித்தாபுகளில் வருகின்றன.

முழுக்காளிகளுக்கு விலக்கான செய்கை.

அதாவது (அய்ந்து) விபரம் தொழுகிறதும் பள்ளியிற் புகுதுகிறதும் தவாபு செய்கிறதும் குறுஆன் ஓதுகிறதும் குறுஆனைத் தொடுகிறதுமாகயிருக்கும் யென்கிலும் பறக்கத்துக்காக பிசுமில்லாச்சொல்லுவதும் சுக்குறுக்காக அல்கம்து சொல்லுவதும் சலவாத்துங் குறுஆனைத்தவிர யாதொன்றை யோதுவதுங் கருமல்ல.

ஹைலு நிபாசுக்காரப் பெண்பிள்ளைகளுக்குமேலே சொல்லப்பட்டிருக்கிற அய்ந்து காரியமும் நோன்பு பிடிக்கிறதும் அவளுடைய தொப்புளுக்கு முட்டுக்கு மிடையிலுள்ள வுறுப்புகளைப் பிடவைக்குங் கீழ் ஆண்பிள்ளை தொடுகிறதும் ஹறாம்.

(ஆனால்) இந்த ஹைலு நிபாசுடைய காரணத்தால் விடப்பட்ட நோன்பைக் கலாச்செய்யவேண்டியது கடமை தொழுகையைக் கலாச் செய்யவேண்டியதில்லை.

இனி ஒருபெண்பிள்ளை வளக்கமாக அய்ந்துநாள் ஹைலுகண்டு சுத்தகாலஞ் சென்றபின்பு பத்துநாள் ஹைலுகண்டால் அப் பத்துநாளையும் ஹைலென்று குக்குமுசெய்யப்படும் (௰௪) நாள் அல்லது (௰௫) நாள்வரை கண்டால் முன் வளக்கமான அஞ்சுநாள் ஹைலென்றும்

அதிகமானதை வியாதியென்றும்குக்குஞ்செய்யப்படும் துப்புரவிற் குறைந்தது பதினைய்ந்துநாள் கூடியதர்க்குக் கணக்கில்லை ஹைறலுடைய காலத்தில் இரண்டு இரத்தத்திர்க்கிடையில் இடையூறுன துப்புரவை ஹைலென்றும் நிபாசுடையகாலத்தில் இரண்டுஇரத்தத்திர்க்கிடையில் இடையூறுன துப்புரவை நிபாசென்றும் குக்குஞ் செய்யப்படும்.

ஒரு பெண்பிள்ளை ஹயிலென்றெண்ணி சிலநாட்களில் தொழுகையைவிட்டுப் பின்னால் அது வியாதி இரத்தமென் றறிந்தால் அந்தத் தொழுகையைக் கலாச்செய்யவேண்டியது கடமை ஹைறு நிபாசுடையகாலத்தில் அறிந்து சேர்க்கைசெய்கிறது ஹறாம் அப்படிச்செய்தால்த் தௌபா இஸ்த்திக்குபாறு செய்து தன்னால் இயன்றதை சதக்காக்கொடுக்கவேண்டும்.

வியாதிக்காரர்களின் குக்கும்.

ஒறு பறுலானதொழுகையின் நேர மடங்கலிலும் ஒலுச்செய்து தொழுகிறநேரம் இடைவிடாமல் சூதகம் ஓடிக்கொண்டிருக்கும்படியான பெண்பிள்ளைகளும் அப்படியே நீர் கசிந்துக்கொண் டிருக்கிறவர்களும் வயத் தோட்டக்காரர்களும் காற்று அதிகமாகப் பறிகிறவர்களும் புண்ணில் நீர் கசிந்துகொண் டிருக்கிறவர்களும் பொன்னிமூக்கு ஓடிக்கொண்டிருக்கிறவர்களும் இதுபோலொத்த வியாதிக்காரர்களும் அந்தந்த ஒக்த்தில் ஒலுச்செய்து பறுலு வாஜிபு சுன்னத்து நபில்முதலாகிய அதாவான தொழுகைகளையும் கலாவான தொழுகைகளையும் நிறைவேற்றவேண்டும்.

வேறே ஒலுவை முறிக்கும்படியான செய்கைகள் நேரிட்டாலும் ஒக்த்துத் தப்பிப்போய்விட்டாலும் இவர்களின் ஒலு முறிந்துபோய்விடும் மறுஒலுச்செய்து தொழவேண்டும் இவ்வியாதிக்காரர்கள் பள்ளியிக்குள் போகிறது மக்குறூகு;

ஒரு மனிதனுக்கு இவ்வியாதிக ளிருந்தால் நஜீஸைப் பேணிக்கொள்கிறதற்காக வுள்ளில் ஒருசீலைவுடுத்திக்கொள்கிறது அல்லதுகாயத்தைக் கட்டிக்கொள்கிறது யேற்றமா யிருக்கும் இவ்வியாதிகளினால் தொழுகையைவிட்டால் பாவியாவார்கள் ஹைலுக்காலத்தில் பெண்பிள்ளைகள் பஞ்சையல்லது துணியை வைத்து அடைத்துக்கொள்ளவேண்டும் இப்பிரகாரம் முன்யா கிதாயா துற்றுல்முகுத்தார் முதலான கித்தாபுகளில் வருகின்றன.

(இ:ரி) இவ்வியாதிக்காரர்களுக்கு ஒரு ஒக்த்தில் ஒருவிடுத்தமாவது வியாதி வெளிப்படவில்லையானால் அவர்கள் அந்த குக்குமை விட்டு நீங்கி சுவாத்தியமானவர்களைப்போல நடக்கவேண்டும் நம்ம ளியாவரையும் வியாதிகளை விட்டு அல்லாகுத்தஆலா சுகப்படுத்துவானாகவும்.

கைஹுபாசுடைய பாபு

முற்றிற்று.

தண்ணீரின் பயான்.

சிறு துடக்கென்னு மொலு வில்லாம லிருக்கிறதையும் பெருந் துடக்கென்னு முழுக்காயிருக்கிறதையும் (முத்தலக்) கென்னு மொத்தமாகிய தண்ணீர்கொண்டு நீக்கவேண்டும் அந்தத் தண்ணீராவது வானத்திலிருந் திறங்கிற தண்ணீர் குளத்துத்தண்ணீர் கிணற்றுத்தண்ணீர் ஆற்றுத்தண்ணீர் ஊற்றுத்தண்ணீர் கடல்த் தண்ணீர் இவைகள்போலொத்ததாம் (முகய்யதென்னும்) ஒருபேர்கொண்டு குறிப்பிடப்பட்ட தண்ணீர்கொண்டு நீக்கப்படாது அத் தண்ணீராவது மரத்துத்தண்ணீரும் பழத்துத்தண்ணீரும் ஒலுவகையறுக்களில் நசிசை நீக்குவதன்றி பரிமாறப்பட்ட தண்ணீரும் யாதொருவஸ்துவை முத்தலக்கான தண்ணீரிற்கலந்து அந்தத் தண்ணீரைக்காண அதிற் கலந்த வஸ்துவு அதிகமாகயிருக்குமே அப்பேர்க்கொத்த நீரும் இவைகளைப்போலொத்ததுமாம்

(இனி) சதுரம் பத்துப்பத்து முழமானகுளியில் ஒரு முழம் சதுரமான நூறு குளியடங்கியிருப்பதால் இக்குளியின் பிரகாரம் கணக்கிட்டு முக்கோணம் அய்ங்கோணம் ஆறுகோணம் வட்டம் ஒரோநீளம் ஆகிய இவைபோலொத்த கவுலுகளுக்கு முழங்களை ஈவுசெய்து சவுக்கமான கவுலுக்குச்சொன்ன நூறு குளியடங்கும்படியான கிடங்குகளில் நிலைத்தண்ணீரள்ளும்போது நிலம் வெளியாகாமலிருக்கிறமட்டும் ஆளமிருக்குமே அப்படிக்கொத்த கவுலிலும் வைக்கோற் றுரும்பை ஓட்டும்படியான ஓடுகிற தண்ணீரிலும் நஜீசுவிழுந்தால் அதின் குணமாகிய வாடைநிறம் சுவை இம்மூன்றில் ஒன்றையாவது அத்தண்ணீரிற் காணப்படவில்லையானால் அதினுட் குளிக்கவுங் குடிக்கவு மொலுச்செய்யவுமாகும் நசிசின் குணமாகிய வாடைநிறம் சுவை இவைகளி லொன்றைக் காணப்பட்டால் ஆகாது.

இந்த அளவுக்குக் குறைந்ததண்ணீரில் நஜீசு கொஞ்சமாகவது விழுந்தால் நஜீசாகிவிடும் நஜீசு விழவில்லையானாலும் ஷாபியீ மதகபுக்கா

ரர்கள் ஒலுச்செய்து புழங்கவில்லை யானாலும் அந்தத் தண்ணீரை யொருபாத்திரத்திலள்ளி ஒலுச்செய்யவுங் குடிக்கவுங் குளிக்கவுமாகும்.

இன்னும் ஓடுகிற தண்ணீரிலே நஜீசு விழுந்தால் அத் தண்ணீரின் கடைத்தலையில் அந்த நஜீசின் குணத்தைக் காணவில்லை யானால் அக்கடைத்தலையில் ஒலுச்செய்யவுங் குடிக்கவுங் குளிக்கவுமாகும்.

கிணற்றின் பயான்.

மேலேகூறிய கவுலின் அளவில்லாத்த கிணறுகளில் ஒரு துள்ளி நஜீசாவது விழுந்தால் அதின் தண்ணீரடங்கலையு மிறைத்தால்தான் துப்புரவாகும் அக்கிணற்றில் யெலி சிட்டுக்குருவி பல்லி இவைகள்போலொத்தது விழுந்து செத்தபின் வயிறு ஆதுகிறதர்க்கு முன்னெடுத்தால் பட்டணம் படி (௨௰) கொள்ளுகிறபட்டையால் இருபதுமுதல் முப்பதுபட்டைவரை இறைத்தால் துப்புரவாகும் புறா - கோழி - பூனை இவைகள்போலொத்தது விழுந்திறந்தால் நாற்பதுமுதல் அறுபதுபட்டைவரை இறைத்தால் துப்புரவாகும் நாய் - ஆடு - மாடு - மனிதன் இவைகள்போலொத்தது விழுந்திறந்தால்த் தண்ணீர் அடங்கலையு மிறைத்தால் துப்புரவாகும்.

இப்போது சொன்னவைகளடங்கலிலும் ஒன்று விழுந்திறந்து ஊதினாலும் அல்லது வுடைந்தாலும் தண்ணீர் அடங்கலையுமிறைத்தால் துப்புரவாகும் இன்னம் இக்கிணற்றில் ஒரு காபிர் விழுந்து கயாத்தாக யெழுந்தாலும் அவன்பேரில் முழுக்கிருக்கின் சந்தாபமிருப்பதால்த் தண்ணீரடங்கலையு மிறைத்தால் துப்புரவாகும் இறைக்க இறைக்கத் தண்ணீர் வற்றாமல் முன்போலவே யிருக்கிற கிணறானால் ஒரு கண்ணாளியைக் கொண்டுவந்து அக்கிணற்றில் தண்ணீர் இம்மாத்திர மிருக்குமென்று சுமார்செய்து அதர்க்குச் சரியாக யிறைத்துவிடவேண்டியது ஒருசொற்படி (௨௱) முதல் (௩௱) தோண்டி யிறைத்தால் துப்புரவாகும்.

இனி இக்கிணற்றில் மூட்டை கொசுகு ஈ வண்டு நட்டுவக்காலி மீன் - தவளை - நண்டு இவைபோலொத்த வொலித் தோடும்படியான இரத்தமில்லாத வுயிர்ப்பிராணிகள் விழுந்திறந்தால் அத் தண்ணீர் நஜீசாகாது யாதொரு கயவான் விழுந்ததை அறியப்பட்டால் அறிந்தநேரத்திலிருந்து அத்தண்ணீரை நஜீசென்று குக்கும்செய்யப்படும் அதுமுதல் தொழுத தொழுகையைத் திருப்பித்தொழவேணும்,

ஊதாமலும் வுடையாமலுமிருந்து விழுந்திறந்தநேர மறியப்படவில்லையானால் ஒரு இரவும்பகலும் நஜீசாகிவிடும் ஊதினாலு முடைந்தாலும் மூன்று இரவும்பகலும் நஜீசாகிவிடும் அதில் ஒலுச்செய்து தொழுத தொழுகைகளைக் கலாச்செய்யவேணும் அந்தத் தண்ணீர்பட்ட வஸ்து வடங்கலையுங் கழுகவேணும் அக் கிணற்றில் கோழி தாராவைப் போல் ஆகாயத்திற் பறக்கும்போது யெச்சம் போடாத பறவைகளைத் தவிர புரு-சிட்டுக்குருவி இவைபோலொத்த தின்ன ஆகுமான பறவை யெச்சம் போட்டாலும் தங்கடத்திர்க்காக தின்ன ஹறுமான ஜவாப்பட்ட பறவை யெச்சம்போட்டாலும் எலியின் மூத்திரம் விழுந்தாலும் இறைக்கிறது வாஜிபல்ல.

இனி ஒட்டகை ஆடு - மாடு இவைபோலொத்தவைகளின் புழுக்கை ஒன்று இரண்டு விழுந்தால் யிறைக்கிறது வாஜிபல்ல காட்டில் ஆடு - மாடு - மிகுதமாகப் புழக்கமான சுத்துக்கட்டில்லாத்த கிணற்றில் அற்ப சொற்பஞ் சாணிவிட்டை விழுந்தால் தங்கடத்திர்க்காக மன்னிக்கப்படும் தங்கடமில்லையானால் மன்னிக்கப்படாது.

{மூஸ்தகுமலான தண்ணீரின் விபரம்.}

அதாவது சிறுதுடக்கு அல்லது பெருந் துடக்கை நீக்கியதர்க்குப் பவிமாறின தண்ணீர் அதைக்கொண்டு மறுவிடுத்தம் சிறு துடக்

கை அல்லது பெருந்துடக்கை நீக்கிறதுகூடாது ஆனால் நஜீசுபட்டவஸ்துக்களை அதைக் கொண்டு கழுகிக் கொள்ளலாம் குடிக்கிறதுமக்குறூகு.

(இனி) சிறுதுடக்குப் பெருந்துடக் குள்ளவன் பானையிலிருக்கிற தண்ணீரை யள்ளவேண்டிய ஹாசத்தில்லாமலும் அப்பானையினுள்ளே விழுந்த சிறுபாத்திரத்தை யெடுக்கிற ஹாஜத்தில்லாமலும் கையையுள்ளேவிட்டால் அத்தண்ணீர் (முஸ்தகுமு) லாகிவிடும் ஒருவிரலை அல்லது இரண்டுவிரலை யுள்ளேவிடுகிறதுகொண்டு முஸ்தகுமலாகாது யெனகிலும் முன்கையை யுள்ளேவிட்டால் முஸ்தகுமலாகிவிடும்.

எச்சியின் விவரம்.

மனிதன் வாய்வைத்துக்குடித்து மிஞ்சின யெச்சியும் தின்னுகிறக்கு கலாலான வுயிர்ப்பிராணிகளின் யெச்சியும் வாயில் நசீசில்லாவி... ப்புரவு.

...நாய் கின்சிறு இவைபோலொத்த தின்னகறுமான மிருகங்களின்யெச்சி நஜீசு ஆனால் வீட்டுப்பூனை அவிழ்த்துவிட்டு மேய்கிறகோழி மாடு ஜவாப்பட்ட பறவை வகையறுக்களின் யெச்சியும் பாம்பு யெலிபோல் வீட்டிற் குடியிருக்கிறதின் யெச்சியும் மக்குறூகு (இன்னும்) ஒருபெண்பிள்ளையின் யெச்சியை வேற்றுமையான ஆண்பிள்ளைகுடிக்கிறதும் ஒரு ஆண்பிள்ளையின் யெச்சிலை வேற்றுமையான பெண் பிள்ளை குடிக்கிறதும் மக்றூகாயிருக்கும்

தயம்மமுமுடைய பாபு.

தண்ணீரைவிட்டு ஒரு மயிலத்தூரத்திற்கு அப்புறப்பட்டவன் அல்லது தண்ணீரைப் பவிமாறினால் வியாதியதிகப்படுமென்று பயந்தவன் அல்லது வேறே யெவ்விதத்தாலாவது தண்ணீரைப் பவிமாறத்தி

ராணி பெருதவன் ஒலுவுக்குப் பகரமாக அல்லது முழுக்குக்குப் பகரமாகத் தய்யம்மும் செய்யவேண்டும் (அதின் சறுத்தென்னும் பறுலாவது) ஆறாகயிருக்கும் அதில் (௧-வது) நிய்யத்து அதாவது (நவைத்துத்தயம்முமலிஸ்ஸலாத்தி) தொழுகைக்காகத் தயம்முஞ் செய்கிறேனென்று நிய்யத்துச்செய்கிறது (௨-வது) கொஞ்சமேனு மிண்ட விடாமல் முகத்தையு முழங்கையுள்பட இரண்டு கையையு மடையவளைந்து தடவுகிறது (௩ - வது) மூன்றுவிரலால் அல்லது மிகுந்த விரலால் தடவுகிறது.

(௪- வது) பூமியில் அல்லது அதினுடைய இனத்தில் அதாவது மண்-மணல்-கல்-காறை-சுண்ணாம்பு-சுருமா காக்காய்ப்பொன் தாளகம் செம்மண் இவைபோலொத்தவைகளில் தீயிலிட்டால் உருகிக்கட்டாததாகவும் சாம்பலாகாத்ததுவுமாகயிருக்கிற வஸ்துகளில் புழுதியில்லாவிட்டாலும் அவைகளிற் றய்யம்முஞ் செய்கிறது (௫-வது) பூமியு மதினுடைய இனமும துப்புரவாகயிருக்கிறது ஆனால் பூமியில் நஜீசுபட்டு வுலர்ந்து அந் நஜீசின்குணம் போய்விட்டாலும அப் பூமியில்த் தய்யம்முஞ் செய்யப்படாது அது தன்னில் முஸ்தகுமலான தண்ணீரைப்போல்த் துப்புரவாக யிருப்பதால் அதின்மேலத் தொழுதால்த் தொழுகை கூடும் மற்றொன்றைத் துப்புரவாக்காது,

(௬-வது) தண்ணீரில்லாதிருக்கிறது அல்லது தண்ணீரிருந்து அதைப் பரிமாறத் திராணி பெருதிருக்கிறது (இனி) தண்ணீர் சமீபத்திலிருக்கிறதென்று கேள்வியானவன் அல்லது பெலவந்தமாகயெண்ணினவன் (௩௱) முதல் (௪௱) முழத்துலேவரை தண்ணீரைத் தேடுகிறது கடமை கூட்டாளி இடத்தில்த் தண்ணீ ரிருக்கிறதாவென்று கேட்கிறது வாஜிபு அவன் தண்ணீர் தரமாட்டேனென்று சொன்னால் தய்யம்முஞ் செய்யலாம் சரியான விலைதந்தால்த் தருவேனென்றுசொல்லி இவனிடத்தில் அய்வேசிருந்தால் தய்யம்முஞ் செய்யக்கூடாது அந்த யிடத்தில் விற்கிறவிலைக்கு அதிகவிலைசொன்னாலும் அறவே இவனிடத்தில

அய்வேசு இல்லாவிட்டாலும் தயம்முஞ் செய்யலாம் (இனி) முத்துப்ப வளம் தங்கம் வெள்ளி இவ்வபோலொத்தவைகளிலு மரமட்டை சாம் பலிலுந் தய்யம்முஞ் செய்யலாகாது (ஆனால்) மண் மிகுதமுஞ் சாம்ப ல்ச் சுருக்கமுமாகக் கலக்கப்பட்டதிலும் மண் புரண்டிருக்கிற வஸ்து க்களிலும் புழுதியைக்கொண்டு தய்யம்முஞ் செய்கிறதாகும்.

(அதின் றுக்குனென்னும் பற்லாவது) இரண்டாக யிருக்கும் அ தில் (௧-வது) முகத்தையும் முழங்கைவரை இரண்டு கையையுந் தடவு கிறதர்க்காக புழுதியுள்ள பூமியில் அல்லது புழுதியில்லாத்த பூமியில் அல்லது அதினுடைய் இனமான வஸ்துக்களில் இரண்டு கையையு மி ருகடவ லடிக்கிறது மோதிரம்போ லொத்தவைக ளிருந்தால் கழற்ற வேண்டும் அல்லது திருப்பவேண்டும் (௨-வது) முகம் இரண்டுகைமு முங்கைவரை இடைவிடாமல் அடையவளாந்து தடவுகிறது முகம்மது றகிமகுல்லா அவர்களின் சொற்படி புழுதியில்லாத்த பூமியில் தய்யம்ம ஞ்செய்தால் கைவிரல்களைக் கோதிவிடுகிறதர்க்காக மூன்றுவது ஒருவி டுத்தம் பூமியி லடிக்கவேண்டும்.

இரண்டு கையு முழங்கையிலிருந்து அறுபட்டவன் மொளியை த்தடவவும் அதர்க்குமே லறுபட்டால்த் தடவவேண்டிய தில்லை இது போல்த்தான் ஒலுவிலும்.

இனி ஒருவனுக்கு இரண்டுகால் இரண்டுகை அறுபட்டு முகத் திலுங் காயமிருந்தால் ஒலுவில்லாமலும் தயம்மு மில்லாமலுந் தொ முகிறதாகும் துப்புரவான மண் அல்லது தண்ணீரில்லாத்தவன் அது கிடைக்கிறவரை இமாமுல்லகுலம் அபுகனீபா றகிமகுல்லா அவர்களின் சொற்படி தொழுகையைப் பிற்படுத்தலாம் அபுயூசுபு றகிமகுல்லா மு கம்மது றகிமகுல்லா அவர்களின் சொற்படி வாஜிபாக ஒருத்தைப் பே ணி கிருஅத்தோதாமல்த் தொழுகிறவர்களைப்போற் பாவினை செய்து முடித்தபின் தண்ணீராவது மண்ணுவது கிடைத்தவுடன் தொழுகை யை மீளவைக்கவும் (இனி) ஒரு முழுக்காளியின் சரீரத்தில் மிகுந்த வு

றுப்புகளின்பேரிற் காயமிருந்தால்த் தய்யம்முஞ் செய்யவும் கொஞ்ச வுறுப்புகளி லிருந்தால் நல்ல வுறுப்பைக்கழுகி காயமான வுறுப்பைத் தண்ணீர்கொண்டு தடவவும் திராணி பெருவிட்டால் பிளாஸ்திரியிற் றடவவும் அதுவு மேலாவிட்டால் தடவுகிறதைவிட்டுவிடவும் இதுபோலவே ஒலுவினுறுப்புகளிலு நடப்பிவிக்க வேண்டியது புண் காய்ந்தபின் கழுகாமலிருக்கலாகாது

தயம்முமுடைய சுன்னத்துகளாவது.

இரண்டு முன்கையின் வெளிப்புறத்தா லடிக்கிறதும் அக் கையை முன்னுற்பின்னு லிழுக்கிறதும் வுதறுகிறதும் விரல்களை விடுத்துக்கொள்கிறதும் அவூது பிசுமில்லாச்சொல்லுகிறதும் அடவாகச்செய்கிறதும் துடராகச்செய்கிறதுமாக யிருக்கும்.

(இனித்) தண்ணீர் கிடைக்குமென்று ஆதரவுவைத்தவன் தய்யமமுஞ்செய்யாமல் தொழுகையை முஸ்தகப்பான ஒக்த்துடைய கடாசிவனா பிற்படுத்துகிறது முஸ்தகப்பு.

{தயம்முமுடைய அடவென்னு மொழுங்காவது.}

துடக்கை நீக்குவதர்க்காக தய்யம்முஞ் செய்கிறேனென்று நிய்யத்துச்செய்து அவூது பிசுமில்லா ஓதித் துப்புரவான யிடத்தில் விரல்களை விரிவுடனே இருகைகளையும் அடித்து அசைத்து யெடுத்துப் புறங்கையால் தட்டி முகத்தில்த் தடவிக்கொண்டு இரண்டாவதும் அடித்து இடதுகை நான்கு விரலை வலதுகையின்புறத்திலும் வுள்ளங்கையை எதிர்ப்புறத்திலும் பெருவிரலைப் பெருவிரல்மீதும் திருப்பி அப்படியே

வலதுகையை இடதுகைமீது திருப்பவும் அடிக்கும்போது மோதிர மிருந்தால்த் திருப்பிக் கொள்ளவும்.

தயம்முமுடைய முறிதலாவது.

ஒலுவை முறிக்கும்படியான செய்கைகளும் தன்னுடைய ஹாஜத்தில் அகத்தியமானதைவிட்டு மிஞ்சும்படியான தண்ணீரின் பேரில்த் திராணி பெறுகிறதுமா யிருக்கும்.

(இனி) ஒக்த்து வருகிறதர்க்கு முன்பாகத் தய்யம்முஞ் செய்கிறதும் ஒரு ஒக்த்துப்பறுலுக்கு அதிகப்பட்ட தொழுகைகளுக்குத் தய்யம்முஞ் செய்கிறதும் ஒலுச் செய்கிறதர்க்கு முன்பாக ஜனுசாத்தொழுகையல்லது பெருநாள்த்தொழுகை தவரிப்போகிற பயங்கரமிருந்தால் தயம்முஞ் செய்கிறதும் ஆகும்.

(ஆனல்) தண்ணீர் ஒருமயிலுக்குள்ளிருந்து அதிற்போய் ஒலுச் செய்து வருகிறதர்க்குள்ளாக ஒக்த்துத் தவரிவிடுமென்கிற பயமிருந்தாலும் ஜும்ஆத்தொழுகைக்கு நேரத்தொழுகைக்குந் தய்யம்முஞ் செய்கிறது கூடாது.

ஒரு முசாபிர் தன்னுடைய சாமானுடன் தண்ணீரிருப்பதை மறந்து தயம்முஞ்செய்து தொழுதபின் தண்ணீரிருந்தது ஞாபகம்வந்நால் அத்தொழுகையை இரண்டாவது மீட்டுவது கடமையில்லை (ஆதலால்) எம தன்புற்ற பிறவிகளே நம்மள் தீனி லிசுலாமென்னும் மார்க்கத்தில் யிப்பேர்க்கொத்த இலெகுவாகிய தயம்மும் வகயருக்களான குக்குமுகளை தங்கடமானநேரத்திற்காக நமதுமீதில் எற்படுத்தி ஒக்த்துவந்தவுடன் தொழும்படி கட்டளைசெய்தானே அப்பேர்க்கொத்த ஆண்டவனை நினைத்து முந்தின நபிமார்களுடைய உம்மத்துகள்மீது இதுபோல் இலெகுவான குக்குமுகளை கட்டளைசெய்யாமல்யென்ன தங்கடமிருந்தாலும் ஒலுச்செய்தே தொழவேணுமென்றும் (எ) தாம்குளிக்கவேணுமென்றும் பள்ளியிலேயேதொழவேணுமென்றும் இதுபோலானவைகளை

அவர்கள்மீது யேற்படுத்தினதுபோல் நம்மள்மீதிற்ச் செய்யாம லிருப்ப
தற்காக சுக்குற்செய்து தொழுது வருவீர்களாகவும்.

தயம்முடையபாபு

முற்றிற்று.

நஜீசுகளின்பாபு.

நஜீசு முகல்லலா வென்னும் கனத்த நஜீசு முகப்பபா வென்னு
ம் லேசான நஜீது ஆக இரண்டுவகைப்படும் (கனத்தநஜீசாகிறது) மல
ம்-ஜலம்- இந்திரியம் - மதி - ஒதி-இரத்தம் - சீ- ஜலம் - வாய் நிறம்பிய
சத்தி பன்றி - சாருயம் - கள்ளு - செத்ததின் இறைச்சி அதின் பச்சை
த்தோல் ஆகாயத்திற் பறக்கும்போது யெச்சம்போடாத கோழி தாரா
இவைபோற்கொத்ததின் யெச்சம் - விட்டை - சாணி - புழுக்கை - தி
ன்னப்படாத ஐவர்மிருகங்களின் மலம் - சலம் அவைகளின் வாய் நீர்
பூனையின்மலம் ஆகிய இவைகளாகயிருக்கும்.

இந்த நஜீசுகளில் இளகலானதில் வுள்ளங்கை யகலம் அல்லது க
ண்டிப்பானதில் ஒருகளஞ்சி சடலம் பிடவை இவைகளிற் பட்டால் ம
ன்னிக்கப்படும்.

(இனி) லேசான நஜீசாகிறது தின்னப்பட்டதின் மூத்திரமும் வல்
லூறு இராசாளி பருந்து இவைபோற் றின்னப்படாத பறவைகளின்
யெச்சமுமா யிருக்கும்,

இந்த லேசான நஜீசு ஜடலத்தினின்றும் ஒரு வுறுப்பிற்பட்டால்
அவ்வுறுப்பில் நாலிலொரு பங்குக்கு குறைந்ததையும் தொழுகையில்
பறுலானவுறுப்பைமறைக்கும்படியான பிடவை அதுபோலொத்ததில்

நாலிலொரு பங்குக்கு குறைந்ததையும் மன்னிக்கப்படும்இன்னமொருசொற்படி சாணி துப்புரவென்று வந்தது பெலமான தல்ல.

(இனி) தின்னப்பட்ட பறவையின் யெச்சமும் வவ்வால்ப் புழுக்கையும் வைவாலின் மூத்திரமும் துப்புரவாகயிருக்கும் ஊசிமுனையைப் போற்றெரித்த மூத்திரத்தையும் மீன் இரத்தத்தையும் கழுதை யெச்சியையும் மன்னிக்கப்படும்.

இலேசான நஜீசும் கனமான நஜீசும் ஒரு பிடவையிற் பட்டிருந்தாற் கனமான நஜீசுடைய குக்குமாக யிருக்கும்.

(இனி) ஜடலமும் பிடவையும் முத்தலக்கான தண்ணீரைக் கொண்டும் முஸ்தகுமலான தண்ணீரைக்கொண்டும் பன்னீர்த் தண்ணீரைப்போலவும் கடலைக் காடியைப்போலவும் நஜீசை நீக்கும்படியான இளகலாகிய வஸ்துவைக்கொண்டும் நஜீசின்குணம் போகிறவரை கழுகினாற் துப்புறவாகிவிடும்.

நஜீசுகளின் பாபு

முற்றிற்று.

தொழுகையின்பிரசங்கம் அதின்வரிசை.

குறாஆன் சரீபில் அல்லாகு சுபுகானகு ஒத்தஆலா திருவுளம்பற்றியிருக்கிறதாவது தொழுகையை இசுலாமாகிய ஜனங்கள்பேரிலே அய்ந்தொகுத்துந் தொழும்படி வேத விதியாக்கினே னென்றும் இன்னமொரு ஆயத்தில் யெனக்கும் யென்னுடைய றெசூலுக்கும் அவர்கொண்டுவந்த இசுலாமென்னும் மார்க்கத்திர்க்கும் ஈமான்கொண்டுசாலிகான நல்ல அமலுகளையுஞ்செய்து தொழுகையும் நிலைபாடாகத்தொழுது சக்காத்துங் கொடுத்து வரும்படியான கூட்டக்காரர்களுக்கு வுண்மையாக நம்மிடத்தில் வெகுமதியானகூலியுண்டாயிருக்கிறது அவர்களுக்குக் கொஞ்சமாவது அதாபுகளில்நின்றும் பயமில்லை அவர்கள் கியாமநாளில்ச் சலித்துக் கைசேதப் படமாட்டார்களென்று திருவுளம் பற்றினான்.

ஹதீது.

கியாமநாளில் அல்லாகுத்தஆலா கல்க்குகளை யெழுப்பும்போது சில கூட்டக்காரர்கள் நட்சத்திரங்களைப்போல் முகமாக யெழுந்திருப்பார்கள் அப்போது மலக்குகள் என்னஅமல்ச்செய்தீர்கள் வுங்களுக்கு இவ்வளவு வெகுமதிகிடைத்தது யென்று கேட்க நாங்கள் பூமியிலிருக்கும்போது பாங்குச் சத்தத்தைக் கேட்டவுடன் யென்னவேலையிருந்தாலும் அவைகளையெல்லாம் விட்டுவிட்டு ஒலுச்செய்து தொழுதோமென்று சொல்வார்கள் இன்னும் சிலகூட்டக்காரர்கள் சந்திரனைப்போலெ முகமாக யெழுந்திருப்பார்கள் அப்போது நீங்கள் யென்னஅமல்ச் செய்தீர்களென்று மலக்குகள் கேட்பார்கள் நாங்கள் பாங்குச்சத்தங் கேட்கிறதர்க்கு முன்பாக ஒலுச்செய்து தய்யாராக யிருந்தோமென்று சொல்லுவார்கள்;

இன்னும் சிலகூட்டக்காரர்கள் சூரியனைப்போல முகமாக யெழுந்திருப்பார்கள் அப்போது மலக்குகள் நீங்கள் யென்ன அமல்ச்செய்தீர்களென்று கேட்பார்கள் நாங்கள் பாங்குச் சத்தத்தைப் பள்ளியிக்குள்ளிருக்கும்போது கேட்டோமென்று சொல்வார்கள் யென்று நபிநாயகம் முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினார்கள்.

(இன்னும்) ஒருமனிதன் தொழுகைக்காகத் தக்கிபீறு கட்டினவுடன் அல்லாகுத்தஆலா ஆய் மலக்குகளே யென்னுடைய இந்தஅடிமையின் பாவங்களடங்கலையும் யென்னைத் துப்புரவாக வணங்குகிறதர்க்காகக் கட்டித்தூக்கி யுயர்த்துங்களென்று அல்லாகுத்தஆலா சொல்வான் வுடனே மலக்குகள் அவன் பாவங்களடங்கலையும் ஒரு சுமையாகக் கட்டி ஆகாயத்தில் சுமந்துகொண்டு நிற்பார்கள் இவன்தொழுது சலாம் வாங்கினவுடனே யெவ்வுயிரையும் படைத்து வளர்க்குகின்ற ஆண்டவனே இச்சுமையைத் திரும்ப யிவனிடம் விட்டுவிடவாயென்று மலக்குகள் கேட்பார்கள் அப்போது அல்லாகுத்தஆலா மலக்குகளே என்னுடைய துப்புரவான அடியானை நான் நஜீசாக்கிறது அழகல்ல அவன் பாவங்களடங்கலையும் பொறுத்துவிட்டேன் இச்சுமையை தூரக் கொண்டுபோய் யெறிந்துவிடுங்களென்று சொல்லுவான் வுடனே அச்சுமையைத் தூரக்கொடுபோய் யெறிந்துவிடுவார்கள்.

இன்னம் யாராவது ஒருமனிதன் அய்ந்தொகுத்துத் தொழுகையும் இமாமுஞ் சமஅத்துடன் தவராமல்த் தொழுது வருவானேயானால் அவனுக்குத் துன்யாவில் மிடிமை வரமாட்டாது கபுறுடைய அதாபை அவனைவிட்டு நீக்கப்படும் அவனுடையபட்டோலையை வலதுகையிற் கொடுக்கப்படும் (சிறுத்தல்முஸ்தகீ) மென்னும் பாலம் வாளிலுங் கூர்மை முடியிலு நேர்மை வெண்ணையிலு மெதுவுபாடாக வளைவான (௯௰௲) வருடத்துப்பயண முள்ளபாலத்தின்பேரில் மின்னல் வெட்டி மறைவதுபோல் நடந்துவிடுவான் சுவர்க்கலோகத்திற்க்குக் கேள்விகணக்கன்றியும் அதாபன்றியும் போய்ச்சேர்வானென்று நபிசல்லல்லாகு அ

லைகிஹிசல்லமவர்கள் திருவுளம்பற்றினதாக (மிஸ்பாகென்னும்) கித்தாபிலும் (துற்றத்) தென்னுங் கித்தாபிலும் வருகின்றன.

றிவாயத்து,

(மிசுக்காத்துல் அன்வா) றென்னுங் கித்தாபில் நபிசல்லல்லாகுஅலைகிஹிசல்லமவர்கள் திருவுளம் பற்றினதாக வந்திருக்கிறதாவது யாதெனில் அல்லாகுத்தஆலா சங்கையாகிய கலறத்து ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்களைப் படைக்கும்போது அவர்களுக்கு வலதுபுறம்(கூ) சிறகும் இடதுபுறம் (கூ) சிறகும் ஒரு சிறகுக்கும் அடுத்த சிறகுக்குமிடையில் (ஙு) வருடத்துத் தூரமுண்டு இவ்விதமான சிறகுகளைக்கொடுத்து அழகு சவுந்தரியமாய் யெவ்வருணமான சூறத்தில்ப் படைத்தான் அதன் பின்பு தங்கள் அழகைப்பார்த்து யாறப்பி யென்னைக் காண அழகான சூறத்தில் யாரையாவது படைத்திருக்கிறுயாவென்று கேட்கப் படைக்கவில்லையென்று அல்லாகுத்தஆலா திருவுளமானுன்,

அப்பால் இதன் சுக்குறுக்காகத் தக்கிபீறு கட்டி ஒரு றக்கஅத்துக்கு (உ௦௦௦) வருடம் இரண்டாம் றக்காஅத்திற்கு (உ௦௦௦) வருடம் நின்றுதொழுது சலாம்வாங்கினுர்கள் இந்த யிபாதத்தைக் குறித்து அல்லாகுத்தஆலா திருவுளமானுன் ஆய் சிபுறாயீலே நீர் யென்னை நிறப்பமாக வணங்கினீர் இப்படி யொருவரும் யென்னைவணங்கவேயில்லையென்கிலும் ஆகிர் ஜமானில் யென் கிறுபை றகுமத்துப் பொருந்திய முகம்மதுயென்று ஒரு நபியை வெளிப்படுத்துவேன் அவர் உம்மத்திலிருந்த பெலக்கேடாகிய கயாத்துக் குறைந்தபாவியான ஒரு அடியான் அவன் கல்பு ஒத்துமையில்லாமல் பலவித கபலத்து மறதியுடன் சொற்பநேரத்தில் இரண்டுறக்காஅத்து யெனக்காகத்தொழுவான் அத்தொழுகை யும்முடைய (சடு௦௦௦) வருடத்துத் தொழுகையைக் காண நம்மிடம் யேத்தமாக யிருக்குமென்றும் அவனுக்கு (மௌவா) யென்றசொற்கத்தைக் கொடுப்பேனென்றுந் திருவுளம்பற்றினுன்,

அந்த சொற்கத்தை நான் பார்க்கவேணுமென்று சிபுரீல்அலைகிஸ்ஸலா மவர்கள்கேட்கப் பார்க்கும்படி உத்திரவு செய்தான் அப்பால் அவகள் (௬௱) சிறகுகளையும் ஒவ்வொருதரம் விரித்தால (௫௲) வருடத்துப் பயணத்தையும் தங்கள்சடலத்தோடு சிறகைச்சேர்த்தால் (௫௲) வருடத்துப் பயணத்தையும் கடந்து விடுவார்கள் இவ்விதமாக (௫௱) வருடம் ஆகாயத்திற் பறந்ததில் அந்த சொற்கத்துடைய முடிவு யெத்தாமல் பறக்கவுந் தாக்கத்தில்லாமல் ஒருமரத்தின்கிழவில் இறங்கி சுஜூது செய்து யாறப்பி அந்த சொற்கத்தில் கால்வாசியல்லது மூன்றிலொன்றாவது பறந்திருப்பேனு வென்றுகேட்க அல்லாகுத்தஆலா திருவுளமானன் ஆய் சிபுறாயீலே வுமக்கு முன் கொடுத்த கூவத்தைப்போல் இப்போது கொடுத்து (௫௱) வருடம் பறக்கும்படி செய்தாலும் அந்த சொற்கத்திற் பத்திலொரு பாகத்தை யெத்தமாட்டீர் யென்று அல்லாகுத்தஆலா திருவுளம்பற்றினன்.

ஹதீது.

வஸ்துக்க ளடங்கலுக்குந் தூணுண்டாயிருக்கிறது அதுபோல்த் தீனுக்குத் தூணுகிறது தொழுகையா யிருக்கு மென்றும் அத்தொழுகையை யாதாமொருவன் தரிபாடாகத் தொழுது வருவானுகில்த் திடனுகத் தீனைத் தரிபடுத்திவைத்தவனுவான் தொழுகையை விடுவானுகில்த் திடனுகத் தீனை யிடித்தவனுவானென்று மிருலோகத்திற்குஞ் சர்த்தாருகிய நபிநாயகம் முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளம்பற்றினதாக (இருசாதில்) வருகின்றன.

இன்னும் துற்றத்துன் ஞசிகீன் யென்னுங்கித்தாபில் வருகின்றது ஹசறத்து முகம்மதுமுஸ்தபா சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் தங்களுடைய முபாறக்காகிய ஹதீதில் திருவுளம்பற்றினதாவது யாதெனில் தொழுகையாகிறது அல்லாகுத்தஆலாவின் பொருத்தத்தையும்மலக்குகளுடைய மகப்பத்தையும் ஈமானுடையதொளிவையும் துஆவுடைய கபூலையும் செய்த்தானுடைய பொருத்தக்கேட்டையும்வுண்டாக்கும்

இன்னும் கச்சவட பறக்கத்தையும் றீதலுடைய லாபத்தையும் அதிக மாக்கும் இன்னும் இவனை நரகத்தைவிட்டும் காக்கும்படியாகிய கேடக மாகவும் கபுறுடைய இருட்டுக்கு விளக்காகவும் ஆகிவிடும் இன்னும் மீசானென்கிற தராசில் நன்மையை அதிகப்படுத்தி சிறுத்துல் முஸ்தகீ மென்னும் பாலங் கடக்கும்படி உதவிசெய்து சுவர்க்கபதி சேர்க்கிறதா யிருக்கும்,

(ஆதலால்) யெமது பிறவிநேசர்களாகிய தீன்தார்களே இப்பேர்க் கொத்த மேன்மையாகிய தொழுகையைக் கலாவிடாமல் அய்ந்தொகுத் துந் தொழுதுவருவீர்களாகவும் அல்லாகுத்தஆலா நம்மளியாவருக்கு ம் பிழைபொறுத்துக் கிறுபைசெய்வானாகவும்.

{ தொழுகையை விடுகிறவர்களுக் குண்டாகிற அதாபின் பயான். }

குறுஆன் சரீபில் அல்லாகுத்தஆலர் திருவுளம்பற்றியதாவது சா லிகான் அவுலியாக்கள் பெரியோர்களுக்குப் பின்பு சில கூட்டக்காரர்க ள் வுண்டாவார்கள் அவர்களாவது தொழுகையைப் பிற்படுத்தவும் ஒ ரு ஒக்த்துவிட்டு ஒரு ஒக்த்துத்தொழுகவும் அறவே தொழுகாமலிருக் கவும் துன்யாவுடைய சுகங்களை கலாலென்றும் கறாமென்றும் அறியாம ல் மனம்போனபோக்கில் நடக்கவுமாக யிருப்பார்களே அந்தக் கூட்ட க்காரர்களாக யிருக்கும் அவர்களைக் (கொய்) யென்னுங் கடினமாகிய நரகத்தில் தள்ளப்படும் அது யெப்பேர்க்கொத்த நரகமானுல் ஜகன்ன மென்கிற நரகத்தில் ஒருஓடை மற்றும் ஓடைகள் இதைவிட்டுங் காவ ற்பாடு தேடுகிறதாயிருக்கும் ஆனுல் தௌபாச்செய்து ஈமான்கொண் டு சாலிகான நல்ல அமலுகளைச் செய்தார்களே அப்பேர்க்கொத்தகூட் டக்காரர்களைச் சொற்கலோகத்திற் சேர்க்கப்படும் அவர்கள்செய்த நல் லஅமலின் கூலிகளை அணுவாவது குறைக்கப்படாதென்று அல்லாகு த்தஆலா திருவுளம்பற்றினுன்.

ஹதீது

இயாராவது ஒருமனிதன் பாங்குச் சத்தத்தைக்கேட்டுத் தொழுகைக்கு யுடனே வரவில்லையானல் அவனை அல்லாகுத்தஆலா கைசேதப்பட்ட கூட்டத்தாருடன் யெழுப்புவான் அவனை நரகத்தில்த் தள்ளி நரகவாதிகளின் ஹுன் வெந்நீரை அவன்காதில் ஊற்றி யெடா அல்லாகுத்தஆலாவின் தொழுகைக்காக பாங்கு சொன்னதைக்கேட்டு நீ-வராமலிருந்தாயே அதற்க்காக இப்பேர்க்கொத்த துன்பமான அதாபைப்பெற்றுக்கொள்ளென்று மலக்குகள் சொல்லி அதாபு செய்வார்கள் இந்த கதீது நபிநாயகம் அவர்கள் திருவாய்மலர்ந்தருளினதாக உமறிபுனுகத்தாபு றலியல்லாகு அன்குஅவர்கள் சொல்லியிருக்கிறுர்கள்.

இன்னம் தாய்தகப்பனை நோய்வினை செய்கிறவன்பேரிலும் கள்ளுக்குடிக்கிறவன்பேரிலும் தொழுகையை விடுகிறவன்பேரிலும் என்னுடைய சபாஅத்தில்லையென்று நபிநாயகம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளினதாக (றயாகீன்) யென்கிற கித்தாபில்வந்திருக்கின்றது.

இன்னும் இமாம் (கொஸ்ஸாலி) றகிமகுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது யாதெனில் ஒருமனிதன் யெனக்கும் அல்லாவுக்குமிடையில் ஒரு ரகசியமிருக்கிறது அந்த ரகசியத்தால் யென்னைவிட்டுந்தொழுகை விழுந்துவிட்டதென்று சொல்லுவானேயானல் அவனை வெட்டுகிறது வாஜிபு யென்கிறதில் கொஞ்சமாவது சக்கில்லை அவனை வெட்டுகிறது நூறு காபிரை வெட்டுகிறதைக்காண யேற்றமாக யிருக்கும் இச்செய்தி (இருசா) தென்கிற கிதாப்பில் வந்திருக்கின்றது.

றிவாயத்து,

நம்முடைய நாயகம் முகம்மதுநபிசல்லல்லாகு அலைகிஒசல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினதாக (அறுபகீன்) யென்கிற கித்தாபில்ச்

சொல்லியிருக்கிறது யாதெனில் ஜகன்னமென்கிற நரகத்திலே ஒருவோடையிருக்கிறது அந்த வோடையைவிட்டும் எங்களைக் காத்துக்கொள்ளென்று நாளொன்றுக்கு எழுபதினாயிரந்தரம் நரகத்தை யுடையவர்கள் காவற்றேடுகிறார்கள் அந்த வோடையிலே நெருப்பினாலே ஒருவீடியிருக்கிறது அந்த வீட்டிலே நெருப்பினாலே ஒரு கிணறுண்டாயிருக்கிறது அந்தக்கிணற்றிலே நெருப்பினாலே ஒரு பெட்டக முண்டாயிருக்கிறது அந்தப் பெட்டகத்திலே நெருப்பினாலே ஒருபாம்புண்டாயிருக்கிறது அந்தப் பாம்புக்கு ஆயிரந்தலை யுண்டாயிருக்கிறது அந்தத்தலைகளி லொவ்வொருதலைக்கு ஆயிர முகமுண்டாயிருக்கிறது அந்த முகங்களி லொவ்வொரு முகத்திர்க்கு ஆயிரம்வாயுண்டா யிருக்கிறது அந்தவாய்களி லொவ்வொரு வாயிக்குப் பதினாயிரம் பல்லுண்டா யிருக்கிறது அந்தப் பற்களி லொவ்வொரு பல்லின்நீளம் ஆயிர முளமுண்டாயிருக்கிறது என்று நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினார்கள்.

இவ்விதந் திருவுளமானதைக்கேட்டு அனசிபுனு மாலிக்கு றெலியல்லாகு அன்கு அவர்கள் நபிநாயகம் அவர்களைப்பார்த்து அல்லாகுத்தஆலாவின் றசூலே இவ்விதமான அதாபுகள் யாருக்காகயிருக்குமென்று கேட்டதர்க்கு நபிநாயகமவர்கள் அனசிபுனு மாலிக்கவர்களைப் பார்த்து அந்த அதாபானது தொழுகையை விட்டவனுக்கும் கள்ளுச்சாராயங் குடிக்கிறவனுக்குமா யிருக்குமென்று திருவுளமானார்கள்.

ஆதலால் எமது இகுவான்களாகிய நேசர்களே தொழுகையை விடுகிறதினால் இப்படிக்கொத்த கடிசான தெண்டனையும் அதாபுமுண்டாகிறதைப் பயந்து தொழுது வருவீர்களாகவும்.

இன்னும் சகலபடைப்புக்களையும் படைத்து ஊணுணவு முதலானவைகள் அதுஅது தராதரப்படி கொடுத்து இரட்சித்துக்காக்கின்ற வல்லபத்தின் வல்லபம்பூண்ட அல்லாகுத்தஆலா தானிறக்கிய நமது புறுக்கானென்ற சிறப்புற்றவேதத்திலே தொழுகையைப்பற்றி (௩ ௬௧)

ஆயத்துகள் வெட்டவெளிச்சமாக அனுப்பியிருக்கிறான் அதாவது தொழுதுகொள்ளுங்கள் தொழுதுகொள்ளுங்கள் யென்று மடங்கிமடங்கிச் சொல்லியிருக்கிறான் அப்படிக்கிருக்க நாம் அந்தச்சொல்லின்பிரகாரம் நடக்காமல் விட்டுவிடுகிறோம்,

ஆனால்ப் பாருங்கோ அல்லாகுத்தஆலா படைத்தமனிதர்களில் நின்றும் ஒரு அதிகாரி தெருக்களிலே யாதாமொரு குப்பை செத்தைகள் கிடக்கப்படாதென்றும் போடக்கூடாதென்றும் துப்புரவாகவைக்கவேணுமென்றும் தாக்கீது அனுப்பிவைத்துத் தண்டோரா அடித்தால் அதற்காக வெவ்வளவு பயத்துடனே சீக்கிரமாய் நாமுஞ்செய்து நம்முடைய பெண்டுமுதலான அடுத்தவீட்டுச் சனங்களையும் செய்யும்படி யேவுகிறோம் அப்படிக்கிருக்க அதிகாரிகட் கெல்லா மதிகாரியாகிய கடவுளான அல்லாகுத்தஆலா அனுப்பிய ஆயத்தின்படிக்கு நாம் நடக்காமற்போனால் கியாமத்துநாளையிலே யெந்த முகங்கொண்டு அல்லாகுத்தஆலாவைச் சந்திக்கிறது யென்னஜவாபுசொல்லுகிறது சுபுகானல்லாஹி அல்லாகுத்தஆலா குறுஆனில் பீசபீலுடைய படைக்களத்திலுங் தொழுகையைத்தவறவிடாமற்தொழும்படி தாக்கீதுசெய்திருக்கிறான்.

இன்னும் பிக்குகுக் கிதாப்புகளில் ஒரு கெர்ப்பஇஸ்திரியானவள் பேறுகாலம் சமீபித்துப்பிரசவிக்கும்போது கொஞ்சம்பிள்ளைவெளிதோற்றியிருக்கச்சே அந்த வக்த்தின் தொழுகை தவறுகிறதென்கப் பயந்தானாகில் ஒலுச்செய்து பிள்ளையை ஒரு தாணிகொண்டுமூடி நோவிப்பாமலிருந்து றுக்கூகு சுஜூதுடனே தொழவேண்டுமென்றும் வேறே எவ்விதமான் தங்கடங்களிலுந் தொழுகையைப் பிற்படுத்தக்கூடாதென்றுங் கட்டாயமான வுத்தரவுகள் வந்திருக்க இக்காலத்திலுள்ள முசுலிமாகியஜனங்கள் தொழுகையை விட்டுவிட்டு துன்யாவுக்கே தொண்டூழியஞ்செய்து வீண்பொழுதுபோக்கித் தாங்கள்தேடின முதல்களையெல்லாம் பண்கயர்களுக்கு ஒப்புக்கொடுத்துவிட்டு மரணமாகிறார்கள் அப்படிக்குவீராமல் இவைகளை நன்றாகவாலோசித்து நீங்களும்வுங்களுடைய பெண்சாதி பிள்ளைமுதலான பந்துக்களும் சிறப்பாகிய தொழுகையை

யெடுத்து நடந்து நற்கதை சேர்வீர்களாகவும் நம்மெயியாவருக்கும்அல்லாகுத்தஆலா நேர்வழி கட்டளைசெய்வானாகவும் ஆமீன்,

{ தொழுகையின் குக்குமுகளின் பயான், }

ஆக்கில் பாலிகான முஸ்லிமாகிய ஆண் பெண் அனைவோர்கள் பேரிலும் அய்ந்து ஒத்துத்தொழுகை பறுலு அய்னாகயிருக்கும் ஒரு மனிதனுக்கு ஒரு குழந்தைபிறந்து யேழுவயசானவுடன் அக்குழந்தைக்குத் தொழுகைமுதலானவைகளைப் படித்துக்கொடுத்துத்தொழும்படி சொல்லுங்கள் அக்குழந்தைக்குப் பத்துவய சாகிறவரை தொழுகாவிட்டால் அடித்துத் தொழும்படி சொல்லுங்களென்று நபிநாயகம் முகம்மதுசல்லல்லாகு அலைகிஉசல்லமவர்கள் திருவுளம்பற்றியிருப்பதால் தாய்தகப்பன்பேரில் பிள்ளைகட்குப் பத்து வயசானவுடன் அடித்துத் தொழும்படி யேவுகிறது வாஜியாகயிருக்கும்.

(பின்னர்) ஐந்து ஒக்த்துத்தொழுகை பறுலாவதற்கு முன்பாக இரண்டுநேரம் அதாவது சூரியன் வுதயமாகிறதர்க்கு முந்தியும் அது அஸ்தமிக்கிறதர்க்கு முந்தியும் யேற்படுத்தப்பட்டிருந்தது.

அப்பூறல் நபிநாயகம் முகம்மதுசல்லல்லாகு அலைகிஉசல்லமவர்கள் மக்கமா நகரம்விட்டு மதீனமாநகரத்திர்க்குப் பிரயாணப்பட ஒண்ணரை வருடத்திர்க்கு முன்பாக பெலமான சொற்படி றஜபுமாதம் (உஎ) திகதி சனிக்கிழமை மிகுறுசுக்குப்போன இரவில் சூரியன் உதயமாகிறதர்க்குமுன் அய்ந்து ஒக்த்து நரளொன்றிர்க்குத் தொழும்படி பறுலாக்கப்பட்டது அதுமுதல் கியாமநாள்வரை தொழும்படி யேற்படுத்தப்பட்டிருப்பதால் இரண்டுநேரந் தொழும்படியான குக்குமை மாற்றப்பட்டது.

தொழுகையின் ஒக்த்துகளின் பாடு.

பஜ்றுத்தொழுகையின் ஒக்த்தாவது கிழக்கே மெய்வெள்ளை கீறினது முதல் சூரியன் உதயமாகிறதற்கு சற்று முன்வரையிலா யிருக்கும் (அனல்) பஜ்றுத்தொழுகையை ஆண்பிள்ளைகள் நிலந்தெளிந்து தொழுகிறது முஸ்தகப்பு பெண்பிள்ளைகள் இருளிருக்கும்போதே தொழுகிறது யேற்றம் மற்ற வொக்த்துகளில் இமாம் ஜமாஅத்து பள்ளியில்முடிந்தபின் தொழுகிறது யேற்றம் இந்தநேரத்தில் இரண்டு றக்கஅத்து பறுலு இதர்க்குமுன் (இரண்டு) றக்கஅத்து சுன்னத்து.

(இனி) லொஹறுடைய ஒக்த்தாவது மதியத்தில் சூரியன் சற்றே மேற்கே திரும்பியதுதொடுத்து ஒரு வஸ்துவுடைய உச்சி சாய்வு கிழலைத்தவிர அவ்வஸ்துவின் னிருபங்கு கிழல் கிழக்கே சாய்கிறவரையுமாயிருக்கும் இந்தநேரத்தில் (நாலு) றக்கஅத்து பறுலு இதர்க்குமுன் (நாலு) றக்காஅத்துப்பின்பு (இரண்டு) றக்காஅத்தும் சுன்னத்து இதர்க்குப்பின்பு ஒருசொற்படி (நாலு) றக்காஅத்து ஒருசொற்படி (இரண்டு) றக்காஅத்து முஸ்தகப்பு வெயில் காற்றுகாலத்தில் லொஹறை இமாமும் ஜமாஅத்துக் தவறிவிட்டால் கொஞ்சம் பிற்படுத்துவது முஸ்தகப்பாயினும் ஒருபங்குசாய்கையை யெற்றுமுன் தொழுகவேணும் மாரிகாலத்திர்க்கும் பனிகாலத்திர்க்கும் மேகமில்லையானல் லொஹறை முற்படுத்துவது முஸ்தகப்பு மேகமிருந்தால்ப் பிற்படுத்துவது முஸ்தகப்பு.

(இனி) அசறின் ஒக்த்தாவது இருசாய்கைதொடுத்து சூரியன் அடைகிறவரையுமாயிருக்கும் இந்த நேரத்தில் பறுலு (நாலு) றக்காஅத்து இதர்க்குமுன் முஸ்தகப்பு (நாலு) றக்காஅத்து இந்தஅசறை யெக்காலமும் மஞ்ச வெய்யிலிறைக்கிறதர்க்கு முன்வரை பிற்படுத்துவது மேகமில்லை யானல் முஸ்தகப்பு மேகமிருந்தால் முற்படுத்துவது முஸ்தகப்பு.

(இனி) மகுறிபின் ஒக்த்தாவது சூரியனடைந்ததுமுதல் இமாமு ல்லமுலம் அபூகனீபா றகிமகுல்லா அவர்களுடைய சொற்படி செம் மேகத்திர்க்கு பின் வருகிற வெள்ளைமேகம் மறைகிறவணாயிலும் அபூ யூசுபுமுகம்மது றகிமகுமல்லாவுடையசொற்படி செம்மேகம் மறைகிற வணாயிலுமாயிருக்கும் இந்த நேரத்தில் (மூன்று) றக்காஅத்து பறுலு இதர்க்குப்பின் (இரண்டு) றக்காஅத்து சுன்னத்து அப்பால் நபிலென் னு முஸ்தகப்பு ஒருசொற்படி (இரண்டு) ஒருசொற்படி (நாலு) ஒரு சொற்படி (ஆறு) ஏகுத்து நிண்யமானல் காலமடங்கலிலும் இம்மகறி பை முற்படுத்துவதே முஸ்தகப்பு,

(இனி) இஷாவின் ஒக்த்தாவது மகுறிபின் கடாசியிலிருந்துகிழக் கு வெளுக்கிறமட்டுக்குமாயிருக்கும் இதில் (நாலு) றக்காஅத்து பறு லு பின் (னிரண்டு) றக்காஅத்து சுன்னத்து பறுலுக்கு முந்தி (நாலு) றக்காஅத்தும் அடுத்த சுன்னத்திர்க்குப்பின் ஒருசொற்படி (நாலும்) ஒ ருசொற்படி (இரண்டு) மிவைகள் முஸ்தகப்பாகயிருக்கும் இந்தயிஷா வில் பறுலுக்குப்பின் (வித்துரு) (மூன்று) றக்காஅத்து வாஜிபு இராவி ல் மூன்றிலொருபங்குவணா மாரிகால்த்தில் இஷாவைப் பிற்படுத்துவ து முஸ்தகப்பு கோடைகாலத்திலும் மேகத்துடைய நாளையிலும் ஒக்த் து வந்தது நிண்ணயப்பட்டால் முந்தின ஒக்த்தில் தொழுகிறது முஸ் தகப் பு வித்திருத் தொழுகையை இரவின் கடாசிவணா மெய் வெள்ளை கிறுவதர்க்குமுன் நிச்சயமாக முழிக்கலாமென்று நிண்ணயங்கொண்டு அறிந்தவன் பிற்படுத்துவது முஸ்தகப்பு இப்படிக்கில்லையானல் நித்தி ரைசெய்வதர்க்குமுன் தொழவேண்டும் ஒக்த்துவருவதர்க்குமுன்தொ ழுகிறதும் வித்துரை இஷாவுடைய பறுலுக்குமுன் தொழுகிறதுங் கூடாது.

ஹறாமான ஒக்த்துகளின் விபரம்.

அதாவது சூரியன் உதயமாகி ஒரு வல்லையப்பிரமாணமாகிறதே தம வரையும் சூரியன் உச்சியிலிருக்கும்போதும் அசறில் சூரியன் சிவங்

தகிறமாகி அடைகிறவனாயினுமாயிருக்கும் இம்மூன்று ஒக்த்திலும் கலாவான தொழுகையும் நபில்த்தொழுகையும் ஜனுசாத் தொழுகையும் சஜதாவின் ஆயத்தை ஓதினதர்க்கு சஜதாதிலாவத்துச் செய்கிறதும் இதுபோலொத்தது ஒன்றும் செய்யலாகாது.

ஆனல் அசர்நேரத்தில் அன்றையின் அதர்வான அசர்த் தொழுகையைமாத்திரம் மஞ்சள் வெயிலெறித்தபின் தொழுகிறதும் அம்மூன்றுஒக்த்தில் வந்த ஜனுசாவைத் தொழுவிக்கிறதும் அந்த ஒக்த்தில் ஓதினதர்க்கு சஜதாதிலாவத்துச் செய்கிறதும் ஆகும்.

{ மக்குறூஹான ஒக்த்துகளின் விபரம். }

அதாவது பஜிறுடைய பறுலு தொழுதபின்னும் அசறுடைய பறுலு தொழுதபின்னும் இமாம் கொத்துபா ஓத மின்பறில்யேறியது முதல் தொழுகிறவனாயுள்ள நேரமும் மகுறிபுடைய பறுலுக்கு முன்னுமாக யிருக்கும் இவ்வொகுத்துகளிற நபிலென்னும்சுன்னத்துத்தொழுகிறதும் நேர்ச்சையான தொழுகைகளைத் தொழுகிறதும் இன்னும் பறுலானதொழுகைகளுக்கு காமத்துச் சொன்னபின் சுன்னத்துத் தொழுகிறதும் இரண்டு பெருநாள்த்தொழுகைக்கு முன் சுன்னத்துத்தொழுகிறதும் பறுலுக்கு ஒக்த்துக்கிட்டுமையாயிருக்கும்போது சுன்னத்துத் தொழுகிறதும் ஒஜீபனம் ஆசராக யிருக்கக் கல்லை அதனவில் பராக்காக்கிக்கொண்டு தொழுகிறதும் மக்குறாகு.

ஆனல் பஜிறுடைய பறுலை இமாம் ஜமாஅத்தாய்த் தொழும்போது அதின் சுன்னத்தை வைப்பைவிட்டும் மாறிநின்று இமாமத்துத் தவராமலிருக்கும்படி ஜல்தியாய்த்தொழுது இமாமுடன்சேர்ந்துக்கொள்கிறதும் ஒரு சொற்படி பறுலுக்கு காமத்துச் சொன்னபின் வேறொரு மத்ஹபுக்காரர் இமாமத்துச் செய்யும்போது சுன்னத்துத் தொழுகிறதும் குற்றமில்லை.

பஜிறுடைய முந்தின இமாமத்து சுன்னத்துத் தொழுவதால்தவறிவிடுமென்று பயந்தால் சுன்னத்தை விட்டுவிட்டு இமாமுடன்சேர்ந்துக்கொள்ளவேணும் (இனி) இமாம் தப்புரத்தைப்பயந்ததர்க்காக பஜுறுடைய சுன்னத்தை தஹு அவூது சுன்னத்தான கிறுஅத்து இவைகளைவிட்டுவிட்டு பாத்திஹாவைக்கொண்டும் ஒரு ஆயத்தைக்கொண்டும் றுக்கூகு சுஜூதில் ஒரு தஸ்பீகைக்கொண்டும் முடித்துவிட்டு இமாமைச் சேர்ந்துக்கொள்கிறதுமாகும்.

ஸபருளியுடைய தொழுகையின் பயான்.

ஒருமனிதன் முகீமான ஊரைவிட்டும் நடுத்தரமாக ஒருகத்துடன் நடந்து மூன்றுநாளையில்ப்போய்ச் சேரும்படியான ஊரைநாடிப் பயணம்புறப்பட்டு வீடுகளைக்கடந்தால் அவனை முசாபிறென்று சொல்லப்படும் அவன் அந்த வூரின்வீடுகளின் யெல்லையை விட்டும் கடந்துமுதல் நவ்வாலு றக்காஅத்துப் பறுலான தொழுகைகளை இரண் டிரண்டு றக்காஅத்தாகத் தொழுகிறது வாஜிபு ஒரு வூரில்ப்போய்ச் சேர்ந்து,அவ்வூரில் (யரு) நாள் அல்லது அதிகமாக யிருக்கவேணுமென்று நீயத்துச் செய்தால் அதுமுதல் அவன் முகீமாகி விட்டபடியால் நாலுறக்காஅத்தும் சரியாய்த் தொழவேண்டும் மூணு இரண்டு றக்காஅத்துள்ள தொழுகைகளிலும் பறுலைத்தவிர வுள்ளதொழுகைகளிலும்கசறில்லை.

இனி ஒருமனிதன் ஒருவூரில்இருந்துக்கொண்டு நாளைக்குப்போகலாம் அல்லது பத்துநாளையில் பதினைலுநாளையில் போகலாம்யென்றுயெண்ணி யெவ்வளவுநாளிருந்தபோதிலும் நவ்வாலு றக்கா அத்துள்ள தொழுகைகளை கசறுக இரண் டிரண்டு றக்காஅத்தாகவே தொழவேண்டும்.

ஒருமனிதன் அவனுக்கு கசறுவிதியாகியிருக்க நாலு றக்கா அத்தை சரியாகத்தொழுதால்க் குற்றவாளியாவான் ஆனால் அவ்வூரில் மு

க்கீமு இமாமத்துச்செய்ய முசாபிர் துடர்ந்தால் நாலு றக்காஅத்துஞ் சரியாகவே தொழவேண்டும் முசாபிர் இமாமத்துச்செய்ய முக்கீமென்னும் ஒருவூரில் பதினைய்ந்துநாளிருக்கவேணுமென்றுநீயத்துச்செய்தவன் அல்லது வூரிலேயே பதிவாகயிருக்கிறவன் துடர்ந்தால் முசாபிருகிய இமாம் இரண்டு றக்காஅத்துத்தொழுது சலாம்வாங்கினபின் பெழும்பி மீதம் இரண்டுறக்காயத்தும் தொழும்போது கிறுஅத்து வோதாமலும் மறதிவந்ததர்க்கு சஜதா சகுவு செய்யாமலும் தொழவேண்டும்.

ஒரு முசாபிரான இமாம் (இரண்டு) றக்காஅத்துத்தொழவேண்டியதிருக்க (நாலு) றக்காஅத்துத்தொழுதால் அவனைத்துடர்ந்த முகீமானவர்களுக்குத் தொழுகைகூடாது யேனெனில் முசாபிறுக்கு இரண்டு றக்காஅத்துக்தான் பறுலு அவன் அதிகமாகத்தொழுத இரண்டு றக்காஅத்துங் குற்றத்துடன் நபிலுமாக யிருக்கிறது.

நபில்த்தொழுகிற மனிதனைத் தொடர்ந்து பறுலுத்தொழுதால் க்கூடாது இம் முக்கீமும் நபிலத்தொழுகிறவன் பின் பறுலுத் தொழுகதுபோலாகிவிட்டது ஆனதால்த்தான் கூடாது (இனி) முசாபிராக யிருக்கும்போது தவரிவிட்ட கசர்த் தொழுகையை இரண்டு றக்காஅத்தாகவும் முக்கீமா யிருக்கும்போது தவரினதை (௪)றக்காஅத்தாவுமே கலாச்செய்யவேண்டும்.

ஒரு தொழுகையின் கடாசிஒக்த்தில் முசாபிராகயிருந்தால் அவனை முசாபிரென்றும முகீமாயிருந்தால் முகீமென்றுங் குக்கும் செய்யப்படும் அதேதுபோலெனில் ஒரு மனிதன் கடாசிநேரத்தில் முசாபிராகயிருந்தால் அவன்பேரில் இரண்டு றக்காஅத்துக்தான் வாஜிபு முகீமாகயிருந்தா லவன்பேரில் நாலு றக்காஅத்து வாஜிபு புருஷனும் பெண்சாதியும் சபர்போனால் புருஷனுடைய நீயத்தின்படியே ஹுக்கும் செய்யப்படும் தன் அசலானவூரில்வந்தால் வுடனே முகீமென்று குக்கும்செய்யப்படும்.

{ பாங்குடைய பாபு
ஹதீது. }

மூன்று செய்கையுடைய பாயிதா அதின்பலனை மனிதர்கள் அறிந்தால் ஒருவரோடொருவர் தர்க்கித்து ஒருவனையும் முந்தவிடாமல்ச் சீட்டுப்போட்டு யெவர்களுடைய பெயர்வந்ததோ அவர்கள்தான் அவ்வேலைசெய்யும்படி நேரிடும் அதாவது தொழுகைக்கு பாங்கு சொல்வதும் ஜமாஅத்துகளைத் தொழுகைக்காக ஆயித்தப்படுத்துவதும் முந்தின சப்பில் நிற்பதுமாகயிருக்கும்

மோதின் பாங்குசொன்னவுடனே செய்த்தான் முப்பதுமயில்த் தூரத்திற்கு ஓடுவான் இன்னம் பாங்குக்கு ஒருமனிதன் ஜவாபுசொல்லாவிட்டால் அவன் மவுத்தாகும்போது கலிமா ஷகாதத்துச் செல்வதற்கு நாவு தடுமாறும்யென்று நமதுநாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள்திருவாய்மலர்ந்தருளினதாக (தௌபுசாலிகீன்) யென்னுங் கித்தாபில்வருகின்றது.

(இனி) பாங்குசொல்லுகிறது கலாவான தொழுகையானலுஞ்சரி ஐந்நேரத்துத் தொழுகைக்கும் முசாபிராக யிருக்கும்போதும் முகிமாக யிருக்கும்போதும் தனியேதொழும்போதும் ஜமாஅத்தாகத்தொழும்போதும் ஜும்ஆத்தொழும்போதும் ஆண்பிள்ளைகளுக்கு சுன்னத் அமுவக்கதாவாகயிருக்கும் இதுபோல்த்தான் (இக்காமத்துச்) சொல்வதும் முவக்கதாவென்னும் பெலவந்தமான சுன்னத்தாக இருக்கும்இவையிரண்டும் மற்றத் தொழுகைகளுக்குச் சுன்னத்தில்லை.

பெண் பிள்ளைகளுக்கு பாங்கு சொல்லுகிறதும் இக்காமத்துச் சொல்லுகிறதும் மக்குறூகாக யிருக்கும்.

(இனி) பாங்குசொல்லுகிற விபரம் மனிதர்களுக்குத் தெரிந்திருக்கலாம் பாங்கு சொல்லும்போது இரண்டு கலிமாவிரலையுங் காதுக்குள்வைப்பது சுன்னத்து திராணிக்குத்தகுந்த சத்தத்துடன் வுரைத்துச் சொல்லுகிறது சுன்னத்து பாங்குடைய சொற்களின் ஒடுக்கம் அட்சர

ங்களுக்கு சுக்கூன் வைத்துச் சொல்லவும் அல்லாகு அக்குபமென்ற சொல்லை நாலுதரஞ் சொல்லும்போது முதலாவதுசொல்லுகிற (றேப்க்கு) சபர்வைத்துச் சொல்லவும் பாங்கை மேட்டின்பேரிலும் அல்லது பள்ளிவாசலின் வெளி மைதானிலும் காமத்தைத் தொழுகிறதலத்திலுஞ் சொல்கிறது முஸ்தகப்பு தனித்துத்தொழுகிறவன் தனக்குக் கேட்கும்படி தொழுகிறதலத்தில்ச் சொல்லிக்கொள்கிறது மக்றூகல்ல பாங்கையும் இக்காமத்தையும் ஒலுவுடன் சொல்லவேண்டும்.

ஆனால் பாங்கு ஒலுவில்லாமற்சொன்னாலுங் குற்றமில்லை தவாபு குறைச்சல் இக்காமத்தை ஒலுவில்லாமற்சொல்லுகிறது மக்றூகு முழுக்காளி பாங்குசொல்லுகிறது மக்றூகு பாங்குக்கு ஜவாபு மோஇன் சொல்லுவதுபோலச் சொல்லுகிறது வாஜிபு யென்கிலும் ஹய்யா அலஸ்ஸலாஹ சொல்லும்போது (லாகவுல வலாக்குவ்வத்தஇல்லாப்பில்லாஹ்) யென்றும் ஹய்ய அலல்பலாஹ யென்று சொல்லும்போது (மாசா அல்லாகுக்கான வமாலம் யசவ்லம் பக்குன்) யென்றும் இன்னம் அஸ்ஸலாத்து கைறுன்மினன்னவும் யென்று பஜுறுடைய ஒக்த்தில்ச் சொல்லும்போது (சதக்த்த வபறர்த்த வபில்ஹக்கி நத்தக்த்த யென்றுஞ்சொல்லவேண்டும்,

(இனி) அஷ்கது அன்னமுகம்மதற்ற சூலுல்லா வென்று முதலாவதுவிடுத்தஞ்சொல்லும்போது (சல்லல்லாகு அலைக்கயாறசூலல்லாஹ்) யென்று சொல்லுகிறதும் அதை இரண்டாம்விடுத்தஞ்சொல்லும்போது பெருவிர லிருந்கத்தையு முத்தமிட்டு இரு கண்ணின்பேரில் வைத்தபின் கற்றத்துஅய்னீ பிக்கயாறசூலல்லாஹ் அல்லாகும்ம மத்திஃனீ பிஸ்ஸம்யி வல்பசரி யென்றுசொல்லுகிறதும் முஸ்தகப்பு இக்காமத்துச்சொல்லும்போது இப்படி கற்றத்தையனி சொல்லும்படிக்கும் கை வைக்கும்படிக்கும் கித்தாபில் வரவில்லை,

(பின்னர்) நடக்கும்போது அதானென்னும் பாங்கைக் கேட்டால் தரிபட்டுநின்று ஜவாபுசொல்லுகிறது ஏற்றம் ஜவாபு சொல்லுகிறவ

ன் முஅத்தின் ஒவ்வொன்று சொன்னபின் சொல்லவேண்டும் முழுக்காளி ஜவாபு சொல்லலாம் ஹயலு நிபாசிக்காரி சொல்லக்கூடாது பாங்கு சொல்லித் தீர்ந்தவுடன் கேட்டவர்களும் முஅத்தினும் சலவாத்துச் சொல்லி பாங்குடைய துஆவை ஓதவும்.

(அதாவது) அல்லாகும்ம றப்ப ஹாதிகித்தகுவத் தித்தாம்மத்தி ஒஸ்ஸலாத்தில் காயிமத்தி ஆத்தி முகம்மதனில் வஸீலத்த ஒல்பலீலத்த வபுஅதுகு மகாமன் மகுமூதனில்லதி வஅத்தகு யின்னக்க லாதுக்லிபுல் மீஆது.

(இனி) இக்காமத்துக்கு பாங்குக்கு ஜவாபு சொல்லுவதுபோல் சொல்லுகிறது முஸ்தகப்பு கத்துகாமத்திஸ்ஸலாத்து என்றுசொல்லும்போது அகாமஹல்லாகுவ அதாமகா மாதா மத்திஸ்ஸமாவாத்து வல்அறலு ஒஜ்அல்நீ மின்ஸாலிகீ அகுலிகாவென்று சொல்லவேண்டும் இன்னமொருசொற்படி இக்காமத்துக்கு ஜவாபு சொல்லவேண்டியதில்லை இக்காமத்துக்குப்பின் துஆ யேற்பாடில்லை கதுக்காமத்திஸ்ஸலாத்து சொல்லும்போது தொழுகையில் துடங்கவேண்டும் ஒத்து ஆகிறதற்க்குமுன் பாங்கு சொல்லிவிட்டால் மறுபடியு மீட்டப்படும்.

(பின்னர்) முசாபிரும் பள்ளியில் முந்தின இமாம் சமாஅத்தாகத் தொழுகிறவனும துங்காமத்துஞ் சொல்லாமலிருப்பது மக்குறூகு வீட்டில் பட்டணத்தில் விடுகிறது மக்றூகல்ல யென்கிலும் முசாபிருக்கும் வீட்டில் தொழுகிறவனுக்கும் இந்தயிரண்டும் முஸ்தகப்பு முசாபர் இக்காமத்தைக்கொண்டு போதுமாக்கிக்கொள்கிறது ஆகும் பாங்கைக்கொண்டு போதுமாக்கிக்கொள்கிறது மக்குறூகு பள்ளியில் முந்தின இமாம் சமாஅத்தில் இரண்டில் ஒன்றையும் விடாமற்கொண்டுவருகிறது சுன்னத்து இரண்டாவது ஜமாஅத்தில் பாங்கன்றிக் காமத்தை மாத்திரம் சொல்லுவது விடுவதைக்காண எற்றமென்று (உம்தத்துற் றிஆயா) வென்றகித்தாபில் வருகின்றது.

தொழுகையுடைய பறுலுகளின்பயான்.

சறத்தென்னும் வெளிப்பறுலு (எ) அதில் (க-வது) ஒக்த்தறிகிறது அந்த ஒக்த்துடைய விபரம் மேலே சொல்லப்பட் டிருக்கிறது (உ-வது) ஒலுவை வருத்துகிற சிறுதுடக்கு முழுக்கைவருத்துகிறபெருந்துடக்கு இவைகளிரண்டைவிட்டும் இன்னம் (முகல்லலா) வென்னுங்கனத்த நஜீசில் பொறுக்கப்படாத்ததைவிட்டும் (முகப்பா) வென்னும் லேசான நஜீசில் பொறுக்கப்படாத்ததைவிட்டும் சரீரந்துப்புரவாயிருக்கிறது (ங-வது) அந்தக் கனமான நஜீசு இலேசானநஜீசில் நின்றும் வுடுமானந் துப்புரவாயிருக்கிறது (ச-வது) நஜீசுகளைவிட்டுந் தலந்துப்புரவாயிருக்கிறது அதாவது இரண்டு கால்வைக்கிற தலம் சுஜூதுசெய்கிறதலம் யிரண்டு கைவைக்கிறதலம் முட்டுக்கால்வைக்கிற தலமாம்.

(ரு-வது) அவுறத்தைமறைக்கிறது ஆண்பிள்ளைகளுக்கு அவுறத்தாகிறது தொப்புளின் கீழநுகுமுதல் முட்டுக்காலுக்குங் கீழ்வரையிலாயிருக்கும் வெள்ளாட்டிக்கு அவுறத்தாகிறது இதுவும் வயிறும் முதுகுமாயிருக்கும் நாட்டாண்மகளுக்கு அவுறத்தாகிறது முகமும் இருமுன்கையும் இருபாதமுந்தவிர மற்றச் சரீரமடங்கலுமாயிருக்கும் முழங்காவில் நாவிலொருபங்கு வெழியானல் தொழுகைகூடாது.

(இனி) வாலிபக்காரிமுகத்தைப் பிறல் ஆண்பிள்ளைகளுக்கு வெளியாக்கிறதைவிட்டும் ஆண்பிள்ளைகள் அதைப்பார்க்கிறதைவிட்டும் விலக்கப்படும் (சு-வது) கிபுலாவை முன்னோக்கிறது யாதொருவனுக்குக்கிபுலாத் தெரியாதிருந்தால்க் கேட்டுக்கொள்கிறதர்க்கு மொருவருமில்லாவிடில் நன்றாகக் கவனித்து ஒருதிசையை இதுதான் கிபுலாவென்று நிண்ணயப்படுத்தித் தொழவேண்டும் தொழுது முடிந்தபின்பு திசை பிசகிவிட்டதென்று அறிந்தாலும் தொழுகையைத் திருப்பவேண்டியதில்லை தொழுகிறபோது பிசகென்று அறிந்தால கிபுலாப்பக்கந்திரும்பி மிச்சத்தை முடித்துக்கொள்ளவேண்டும் (எ-வது) நீயத்து அதாவது கலப்பறுதலாய் அல்லாகுத்தஆலாவுக்காகத் தொழுகையை நாடுகிறதாகயிருக்கும்,

(இனி) நீயத்தில் பறுலானதொழுகையையும் வாஜிபான தொழுகையையும் இன்னஇன்ன தொழுகையென்று குறிக்கிறது சறுத்தாகிய கடமை மொத்தமாகிய நீயத்துந் தொழுகிறேன் யென்று மாத்திரம் நீயத்துச்செய்தாலிக்கூடாது இமாமைத் துடருகிறவன் இந்த யிமாமுடனே துடருகிறேனென்று நாடிக்கொள்கிறது சறுத்து ஜமாஅத்தொழுகைக்கு (உசல்லீ யில்லாகித்தஆலா தாகியன் லிகாதல் மய்யித்தி) இந்த மையத்துக்காக துஆச்செய்து அல்லாவுக்காகத் தொழுகிறேனென்றுநாடுகிறது வாஜிபு (இனி) சுன்னத்திர்க்கும் நபிலுக்கும் மொத்தமாக அல்லாவுக்காகத் தொழுகிறேனென்று நீயத்துச்செய்தாற் போதும் ஆனால் இன்ன இன்ன தொழுகையென்று குறித்துக்கொள்கிறது முஸ்தகப்பாயிருக்கும்.

(றுக்குனென்னும் விட்பறுலு - ௬) அதில் (௧-வது) தக்பீறுத் திருறீமா அதாவது நமள் நீயத்துடன் தக்பீறு சொல்லிக் கைகட்டுகிறோமே அந்தத் தக்பீறாகயிருக்கும் யிது ஒருசொற்படிசறுத்தாம் (இனி) அல்லாகு ஆக்குபற் அல்லது ஆல்லாகு அக்பற் அல்லீது அல்லாகு அக்குபாற் யென்றுசொன்னால் அவன் தொழுகையை ஆரம்பித்தது துருஸ்தாகாது (௨-வது) நிலைநிற்பது இந்நிலை பறுலிலும் வாஜிபிலும் பசுருடைய சுன்னத்திலும் நிற்கத் திராணிபெற்றவனுக்கு பறுலு ஒருமனிதன் நின்றுகொண்டு தக்பீறைச்சொல்லி இமாமுடன் றுக்கூகிலச் சேர்ந்துக்கொண்டால் அவன்தொழுகைகூடும் குனியும்போதுமாத்திரம் தக்குபீறைச்சொல்லி இமாமுடன் றுக்கூகில்ச் சேர்ந்தால் அவன்தொழுகை துருஸ்தாகாது (இனி) சுன்னத்திலும் நபிலிலும்நிற்கத் திராணியிருக்க இருந்துதொழுகிறது ஆகும் ஆனால் தங்கடமன்றியேயிருந்து தொழுதால் நின்று தொழுகிற தவாபில் பாதிதான் கிடைக்கும்(இனி) நசலாளிநிற்க யேலாவிட்டால் இருந்து றுக்குகு சுஜூது செய்துதொழவேண்டும் இப்படியும் யேலாவிட்டால் இருந்தே றுக்கூகுக்குக் கொஞ்சந் தலைகுனிந்தும் சுஜூதுக்கு அதிலுங்கொஞ்சம் அதிகமாகக் குனிந்தும் சைக்கினையால்த் தொழவேண்டும் இருக்க யேலா

விடில் இரண்டுகாலையும் மேற்கே நீட்டி மல்லார்ந்து படுத்துக்கொண்டு
சைக்கினைசெய்து அல்லது வடக்கே தலையை வைத்துத் தெற்கே காலை
நீட்டி ஒருச்சாய்ந்து கிபுலாவுக்குநேராய் முகத்தைவைத்துச் சைக்கினை
செய்து தொழவேண்டும் (௩-வது) கிறுஅத்து ஓதுவது இந்தக்கிறுஅ
த்துப் பறுலுடைய இரண்டு றக்காஅத்திலும் இன்னும் வாஜிபு சுன்ன
த்து நபில் இப்படியான தொழுகையுடைய றக்காஅத்துகள் அடங்கலி
லும் பறுலாகயிருக்கும் பறுலுடைய திட்டமாவது ஒரு பெரிய ஆயத்
தாகயிருக்கும் ஓதலென்பது தனக்குக் கேட்கும்படி நாவால் அட்சரவி
ருத்தியுடனே சொல்லுவதாயிருக்கும் (௪-வது) றுக்கூ அதாவது இ
ரண்டுகைகளையும் நீட்டினால் யிரண்டு முட்டுக்காலைப் பிடிக்கும்படி கு
னிகிறதாயிருக்கும் இது றுக்குவில் தாழ்ந்ததாயிருக்கும் அதினுடைய
நிறப்பமாகிறது தலையைப் பிட்டியைக்கொண்டு சரியாக்கி வைக்கிறதா
யிருக்கும் இது நின்று தொழுகிறவனுக்குத்தான் இருந்து தொழுதால்
றுக்கூகு வுண்டாகிறதற்கு அவன் இரண்டு முட்டுக்காலின்முன்னிலை
க்கு நேர்படுகிறதாயிருக்கும் (௫-வது) சுஜூது அதாவது பூமியின்பே
ரில் அல்லது பூமியைக்கொண்டு சேர்ந்திருக்கிற கண்டிப்பான வஸ்து
வின்பேரில் நெற்றியை தரிபடவைக்கிறதாயிருக்கும் அதினுடன் மூக்
கைவைக்கிறது வாஜிபு அல்லது சுன்னத்தானதால் நெற்றியின்பேரில்
சுருக்கிக்கொண்டாலும் போதும் மூக்கின்பேரில் சுருக்கிக்கொள்கிறது
தங்கடங்கொண்டொழிய ஆகாது (௬-வது) பின்னிருப்பு அதாவது
தொழுகையின் கடாசியில் (அத்தஹிய்யாத்தை அப்துகு ஒறசூலுகு)
ஓதுகிறவரைக்குந் தாமதிக்கிறதா யிருக்கும்.

(இனி) நிலைப்பை றுக்கூகுக்கு முற்படுத்துகிறதும் சுஜூதுக்குறு
க்கூகை முற்படுத்துகிறதும் கடாசி யிருப்பை யெல்லாத்திர்க்கும் பிற்
படுத்துகிறதும் தொழுகையை நடுவில் முறியாம லிருக்கிறதும் இமா
மைப் பறுலுகளில்த் துடருகிறதும் இமாமுடைய காலைக்காணத் தன்
காலை முற்படுத்தாம லிருக்கிறதும் தன் மதகபின்படி யிமாமுடைய தொ
ழுகையில் முறிவானசெய்கை வராமல் சரியாகயிருக்கிறதும் இமாமிரு

க்கிற திசையைஅறிந்து விரோதஞ்செய்யாமலிருக்கிறதும் பறுலென்று (துற்றுல்முகுத்தார்) யென்றகித்தாபில் வருகிறது.

தொழுகையுடைய வாஜிபுகளின் பயான்.

அதாவது பாத்திஹாவென்னும் அல்ஹம்ந்து ஓதுவதும் அத்துடனே ஒருசூறத்தை அல்லது மூன்று சிறியஆயத்தை அல்லதுஒருபெரிய ஆயத்தைச்சேர்க்கிறதும் சூறத்துக்குமுன் அல்ஹம்ந்தைஓதுவதும் முந்தின இரண்டுறக்காஅத்திலே கிருஅத்தைக்குறிப்பாக்கிறதும் சுஜூதைப்போல் ஒரு றக்காஅத்தில் மடக்கி வரப்பட்ட செயலில் தரித்தீபைப் பேணுகிறதும் றுக்கூவைக்காண் கிருஅத்தை முற்படுத்துவதும் றுக்கூகில் சுஜூதில் சிறுநிலையில் இரண்டு சஜதாவுக்கிடையிலுள்ளயிருப்பில் தரிபடுகிறதும் முந்தின இருப்பிருக்கிறதும் இரண்டு யிருப்பிலும் இரண்டு அத்தகிய்யாத்து ஓதுவதும் அந்தந்தப் பறுலுகளையும் அந்தந்த வாஜிபுகளையும் அந்தந்தத் தானத்தில் கொண்டு வருகிறதும் அத்தகிய்யாத்தில் முந்தினயிருப்பில் பறுலான தொழுகையிலும் வாஜிபான தொழுகையிலும் வளக்கமாகக் கொண்டுவரப்பட்ட கனத்தசுன்னத்தான தொழுகைகளிலும் (அப்துஹூ ஒறசூலுஹூ) க்குப்பின் சலவாத்தை ஓதாமலிருப்பதும் இமாமுடையசெயலில் முத்ததீ தொடருவதும் அவருக்குப்பின் கிருஅத்து ஓதாமலிருப்பதும் இரைந்துஓதுகிற தொழுகையில் இமாம் யிரைந்தோதுகிறதும் அமர்ந்தோதுகிற தொழுகையில் இமாம் அமர்ந்தோதுகிறதும் வித்துறுத் தொழுகையில் மூன்றுவது றக்காஅத்தில் றுக்கூவுக்குமுன் (குனூத்) தோதுகிறதும் இரண்டு பெருநாள்த்தொழுகையில் ஒவ்வொரு றக்காஅத்திர்க்கும் மும்மூன்று தக்பீறாக ஆறு சாயிதான தக்குபீறு சொல்லுகிறதும் அத் தொழுகையுடைய இரண்டாம் றக்காஅத்தில் றுக்கூவுக்குப் போம்போது கொண்டுவருகிற தக்குபீறு சொல்லுகிறதும் தொழுகையின்கடாசியில் சலாம் சொல்லுகிறதுமா யிருக்கும்.

ஆனால் வேறே மதஹபுக்காரர்கள் இமாமத்துச் செய்யும்போது பஜ்றுடைய (குனூத்தைப்) போல் நமக்கு வேற்றுமையான செயலில் தொடரப்படாது (வாஜிபான அத்தகிய்யாத்தாவது)

அத்தகிய்யாத்து லில்லாஹி ஒஸ்ஸலவாத்து ஒத்தையிபாத்து அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன்னபிய்யு ஒறஹ்மத்துல்லாஹி ஒபறக்காத்துகு அஸ்ஸலாமு அலைனா ஒஅலா இபாத்தில்லா ஹிஸ்ஸாலிகீன் அஷ்ஹது அன்லாயிலாக யில்லல்லாகு ஒஅஸஹது அன்னமுகம்மதன் அப்துகு ஒறசூலுகு யென்ற யிதுவரையிலா யிருக்கும் (குனூத்தென்றும் விட்டுக்கட்டித் துஆவாகிறது)

அல்லாகும்ம இன்னா நஸ்தயீனுக்க ஒனஸ்தஹதீக்க ஒநஸ்தகபிறுக்க ஒநத்தூபுயிலைக்க ஒனூமினுபிக்க ஒநத்தவக்கலு அலைக்க ஒனுதுனீ அலைக்கல்கைற குல்லகு நஸ்குறுக்க ஒலானக்புறுக்க ஒனகுலகு ஒனத்துறுக்கு மன்யபுசுருக்க அல்லாகும்ம இய்யாக்க நக்புது ஒலக்க னுசல்லி ஒனஸ்சுது ஒயிலைக்க நசுஆ நஹபிது ஒநற்சூ றஹ்மத்தக்க ஒநகுஷா அதாபக்க இன்ன அதாபக்கல் ஜித்தபில் குப்பாறி முல்ஹிக்கு யென்று ஓதுகிறதாயிருக்கும்.

இது பாடமில்லாதவன் றப்பனா ஆத்தினா பித்துன்யா ஹஸனத்தன் ஒபில் ஆஹிறத்தி ஹஸனத்தன் ஒகினா அதாபன்னார் யென்றுமாத்திரமோதவும் அல்லது (அல்லாகும் மகுபிறுலி) யென்று மூன்றுவிடுத்தம் ஓதவும்.

ஸஜ்தாசகுவு.

இவ் வாஜிபுகளில் ஒருவாஜிபை அல்லது மிகுத்தை ஞாபகத்தோடு யிமாம் அல்லது தனித்துத்தொழுகிறவன் விட்டால் திருப்பித் தொழுகிறது வாஜிபு மறதியாகவிட்டாலும் பறுலு வாஜிபுகளை மட்கிச்செய்தாலும் (ஸஜ்தாஸஹ்வு) செய்கிறது வாஜிபு (அதாவது) பின்

னிருப்பில் அத்தகியயாத்து ஓதியபின் வலதுபுறம்மட்டும் சலாஞ்சொல்லி இரண்டு ஸஜதாச்செய்து அத்தகிய்யாத்து சலவாத்து துஆஓதி இரண்டுபுறமும் சலாம்சொல்லவேண்டும் அப்படி ஸஜதாசகுவு செய்யவில்லையானால்த் தொழுகையைத் திருப்பித் தொழுகிறது வாஜிபு (இன்னும்) இமாமுடன் தொழுகிறவன் தன்பேரில் ஸகுவு இல்லாவிட்டாலும் இமாம் சஜதாசகுவு செய்வதற்க்காகத் தானுங் கூடச்செய்கிறது வாஜிபு.

(இனி) றக்கூஹுசுஜூதுபோலொத்ததில் தரிபடுகிறதை விட்டுவிட்டாலும் பெருநாள்த்தொழுகையின் ஸாயிதான தக்குபீறுகளைவிடடாலும் அதின் றுக்கூடையதக்பிறைவிட்டாலும் இமாமுடன்தொழுகிறவன் யிமாமைத் தொடர்ந்திருக்கும்போது சஜதாஸகுவை வாஜிபாக்கும்படியான செய்கையைச்செய்தாலும் இரகசியம் பராசியமான தொழுகையில் ஒரு ஆயத்துக்குக் குறைய விரோதஞ்செய்தாலும் ஸஜதாசகுவு வாஜிபில்லை.

(இன்னும்) பெருநாள்த்தொழுகையிலும் சும்ஆத்தொழுகையிலும் பலவிதமான மனிதர்கள் ஆசர்ஆகிறபடியால் அவையிரண்டிலும் ஸஜதாசகுவு செய்யாமல்விடுகிறது ஆகும்.

ஸஜுதாத்திலாவத்து.

குறுஆனில் (யச) தானத்திலுள்ள சஜதாவினுடைய ஆயத்தை ஓதினவன்பேரிலும் அதைக் கேட்டவன்பேரிலும் சஜதாத்திலாவத்து வாஜிபாயிருக்கும் ஸாதென்கிற சூருவினுடைய சஜதாவும் ஹச்சென்கிறசூருவினுடைய முந்தின சஜதாவும் சஜதாத்திலாவத்தைச் சேர்ந்ததாயிருக்கும் இரண்டாம் சஜதா அதிலுள்ளதல்ல ஒருமனிதன் கிறுஅத்தோதும்போது சஜதாத்திலாவத்துடைய ஆயத்தையு மோதினால் ஒரு ஸஜதாச்செய்து யெழும்பி கொஞ்சம் ஓதி றுக்கூகு செய்யவேண்டும் தொழுகைக்கு வெளியில் சஜதாத்திலாவத்துடைய ஆயத்தைபோதினு

லத் தொழுகையுடைய ஷறத்துகளில் தக்பீறத் தஹ்ரீமா (வெறுமெனி) மூந்தின தக்பீறைத்தவிர மற்ற சுறத்துகளை அதற்குச் சுறத்தாக்கப்படும் தொழுகையை முறிக்கும்படியான செயல்கள் அதை முறிக்கும் அதிலுடைய வட்பறுவெல்லாம் (ருக்குனுகிறது) சஜதாவாக யிருக்கும் முன்னும் பின்னும் தக்பீறு யிணைந்துசொல்லுவது சுன்னத்து முன்னும் பின்னும் வெழும்புவது முஸ்தகப்பு (சஜதாத் திலாவத்துடைய விதமாவது) கையையுயர்த்தாமல் நிலையில்நின்று தக்பீறுசொல்லி ஒரு சஜதாச்செய்து பின்பு தக்பீறுசொல்லித் தலையையுயர்த்தவேண்டும் அதில் சுஜூதுடைய தசுபீகை மூன்றுதரஞ்சொல்லவேணும் அதில் அத்தஹிய்யாத்தும் சலாமுமில்லை.

{தொழுகையின் சுன்னத்துகளின் பயான்}

அதாவது தக்பீறு தஹ்ரீமாவுக்கு இரண்டுகையையுயர்த்துவதும் குனூத்துக்கு கையையுயர்த்துவதும் பெருநாள்த்தொழுகைத்தக்பீறுக்கு கையையுயர்த்துவதும் விரல்களைப் பரத்துகிறதும் தக்குபீறுகட்டும்போது தலையைத் தாழ்த்தாமலிருக்கிறதும் தக்பீறை இமாம் யிணைந்துசொல்லுவதும் தஊ- ஆஊது- பிஸ்மி- ஆமீன்- இவைகளை இரகசியமாகச் சொல்லுவதும் (தஊவாவது) (சுபுகானக் கல்லாகும்ம வபிகம்திக்க வதபாறக்கசுமுக்க வதஆலா சத்துக்க வலாயிலாக கயிறுக்க) வென்பதாம் (பின்னர்) வலதுகையை யிடதுகையின்பேரில்வைப்பதும் அக்கைகளை தொப்புளுக்குக்கீழ்வைப்பதும் வூர்பதியில் முகீமாயிருக்கும்போது ஒத்தது விஸ்தீனமாயிருந்தால் பஜிறிலும் லுஹறிலும் திவாலுல்முபஸ்ஸலில் ஓதுகிறதும் அதாவது சூறத்தில் குஜ்றுத்து (வெகுனீ) காபீம் ஜிக்கவில் யாஅய்யு க்கலதீன வென்னும் சூறத்தொடுத்து சூறத்து லஸ்ஸமாயி தாதில் புறூஜ வரையிலாயிருக்கும் அசறிலும் இஷாவிலும் அவுசாத்தில் முபஸ்ஸலில் நின்றும் ஒருசூறவோதுவதும் அதாவது சூறத்து வஸ்ஸமாயிதாதில்புறூஜ் முதல் சூறத்து

லம்யகுன்வளையிலுள்ள சூறத்துகளாகயிருக்கும் மகறிபில்கிசாருல் முபஸ்ஸலில்நின்றும் ஒரு சூறூஓதுகிறதும் அதாவது லம்யகுன்யென்னும் சூறத்துமுதல் குல்அவூது பிறப்பின்னுசுவளையி லுள்ளதாயிருக்கும் கிட்டுமையில் பாத்திகாவும் நாடிய சூறுவும் ஓதவும்,

(இன்னும்) றுக்கூவுடைய தக்குபீறும் அதில் மூணு விடுத்தம் (சுபுகானறப்பியல்லலீம்) யென்று சொல்லுவதும் இரண்டு முட்டையும் பிரண்டுகைகளினுற் பிடிப்பதும் விரற்களை விரித்துக் கொள்வதும் தனித்துத் தொழுகிறவனும் இமாமும் அதைவிட்டு நிமிரும்போது (சமியல்லாகு லிமன்கமிதா) யென்று சொல்லுவதும் இமாமைத் துடர்ந்தவனும் தனித்துத்தொழுகிறவனும் (அல்லாகும்மறப்பனு லக்கல்கம்து) யென்றுசொல்லுவதும் சுசூதில் மூன்றுவிடுத்தம் (சுபுகான றப்பியல்அகுலா) யென்றுசொல்வதும் அதைவிட் டெழும்பும்போது தக்குபீறுசொல்வுதும் றுக்கூவில் வயிற்றைத் துடையைவிட்டும் சுஜூதில்முழங்கையை பூமியைவிட்டும் தூரப்புடுத்திக்கொள்வதும் நெருக்கமில்லாத தலத்தில் கொடுங்கையை விலாவைவிட்டும்அகட்டிக்கொள்வதும் அத்தகிய்யாத்தில் வலதுகாலை நிறுத்தி இடதுகாலைப்படுக்கவைத்து அதின்பேரிலிருப்பதும் பின் னிருப்பில் அத்தகிய்யாத்துக்குப்பின் சலவாத்து துஆஓதுவதும் (அதாவது) அல்லாகும்மசல்லி அலாமுகம்மதின் வஅலாஆலிமுகம்மதின் கமாசல்லேத்த அலாஇபுருகீம வஅலாஆலி இபுருகீம இன்னக்க கமீதுன் மஜீது ஒபாறிக்கு அலாமுகம்மதின் வஅலாஆலி முகம்மதின் கமாபாறக்கத்த அலாயிபுருகீம வஅலாஆலி இபுருகீம இன்னக்க் கமீதுன் மஜீது அல்லாகும் மகுபிருலீ ஒலீவாலிதைய்ய ஒலி ஒஸ்தாதீ ஒலி ஜமீயில் முசிலிமீன ஒல்முசிலி மாத்து ஒல்மூமினீன ஒல்மூமினுத்து அல் அகுயாயி மின்கும் ஒல் அமுவாத்து இன்னக்க முஜீபுத்தகுவாத்தி சலாங்கொடுப்பதுக்காக வலம்-யிடம் முகத்தைத் திருப்புவதுமாயிருக்கும்.

இந்த சுன்னத்துகளிற் பெண் பிள்ளைகளுக்கு சிலது வித்தியாசமாக யிருக்கும் அதாவது பெண்பிள்ளைகள் மூந்தின தக்குபீறு கட்டும

போது கைகளைக் காதுக்கு சமீபங் கொடுபோகாமல் புயத்திற்கு நேரோ வுயர்த்தவேண்டும் நெஞ்சின்பேரில் கையைக் கட்டவேண்டும் றுக்கூகுசெய்யும்போது முட்டை யிரண்டுகையால் பொதிந்துகொள்ளவேண்டும் றுக்கூகில் கொடுங்கை விலாவோடுஞ் சுஜூதில் வயிற்றைத் துடையோடும் சேர்க்கவேண்டும் இரண்டு முழங்கையும் பூமியின்பேரில் படுக்கப்போடவேண்டும் அத்தகிய்யாத்தில் பிட்டியின்பேரில் யிரண்டு காலை வலதுபக்கம்விட்டு யிருக்கவேண்டும்.

(இனி) ஒரு றக்காஅத்தில் ஒருசூறத்தை நிறப்பமாக ஓதுவது மிகவும்வரிசை இரண்டு றக்காஅத்திலும் கிறுஅத்தைச் சரியாக்கிவைக்கவும்மென்கிலும் பஜ்றில் முந்தின றக்காஅத்தை இமாம் நீளமாக்கிவைக்கிறது சுன்னத்து இரண்டாம் றக்காஅத்தை முந்தின றக்அத்தைக் காண மூன்று ஆயத்தால் நீளமாக்கிறது மக்குறூகு தன்சிகு ஈபில்த் தொழுகையாயிருந்தாலுஞ் சரியே.

இனி யிந்தசுன்னத்துகளில் ஒன்றை ஞாபகத்தோடு விட்டால்ச் குற்றத்தை வருத்திவைக்கும் ஞாபக மில்லாமல்விட்டால் குற்றத்தை வருத்தமாட்டாது யென்கிலும் தொழுகையை ஒகுத்திருந்தால்மீளவைக்கிறது முஸ்தகப்பு,

தொழுகையின் முஸ்தஹப்புகளின் பயான்.

அந்தாவது நிலையில் நிற்கும்போது சுஜூதின் [illegible]லத்தளவிலும் றுக்கூகில் நிற்கும்போது இருபாதத்தின் முதுகளவிலும் சுஜூதி லிருக்கும்போது மூக்கினுனியளவிலும் இருப்பிலிருக்கும்போது மடியளவிலும் முந்தின சலாம்கொடுக்கும்போது வலதுதோட் புயத்தளவிலும் இரண்டாவது சலாம்கொடுக்கும்போது இடதுதோட்புயத்தளவிலும் பார்க்கிறதும் கொட்டாவியிடும்போது வாயைத்திறக்காமல் தடுத்துக் கொள்வதும் யேலாவிட்டால் இடதுகைமுதுகினுல சட்டையின் கை

யினால் வாயைமூடுவதும் தக்குபீறு தகுதீமாவுக்கு கையை யுயர்த்து
போது முன்கையைச் சட்டையைவிட்டு நீக்கிக்கொள்வதும் இருமல்
க்நால் யியன்றமட்டிலும் அடக்கிறதும் ஹய்யா அலல்பலாகு யென்
சொல்லுகிறநேரத்தில் இமாம் சமாத்துகள் யெழும்புகிறதும் கத்க்காம
த்நிஸ்ஸலாத்து யென்று சொல்லுகிறநேரத்தில் இமாம் தொழுகையில்
துடங்கிறதும் வலம் யிடம் கடைக்கண்ணாற் பாராதிருப்பதும் மூன்று
ஆயத்துக்கநிசமாக வோதுவதும் கிருஅத்தைச் செவ்வையாக வோது
வதும் றுக்கூகில் முதுகையும் தலையையும் சரியாகவைப்பதும் சுஜூ
செய்யும்போது முதலாவது யிருமுழங்கால் பின்பு யிருகை பின்பு மூ
கு இப்படியொழுங்காய்வைப்பதும்நிலையில் வரும்போது இதற்குமா
ற்றமாக முதலாவது மூக்கு பின்பு யிருகை பின்பு யிருமுழங்கால் இ
படி யெடுப்பதுமா யிருக்கும்.

அனால் பெண்பிள்ளைகள் தக்குபீறுகட்டும்போது இரண்டு சட்
டைக் கையைவிட்டும் இரண்டு முன்கையையும் நீக்கப்படாது (இந்
முஸ்தகபென்னும் அதபைச் செய்கிறதால் சுன்னத்துடைய் தவாபுக்கு
த் தாழ்ந்த தவாபுகிடைக்கும் அதைவிடுகிறது மக்றூகல்லயென்கிலும்
தவாபு குறைவாகயிருக்கும் (இனி) அதபை முஸ்தகபென்றும் பளீ
லாயென்றும் மந்தூபென்றும் சொல்லப்படும்."

{ தொழுகையுடைய அதபின்
பயான். }

தொழுகிறவர்கள் இந்த அதபென்னும் ஒழுங்கின்படி தொழவே
ண்டும் (அதாவது) சரீரத்தையும் உடையையும் நஜீசுகளைவிட்டும் இ
வன் சிறுதுடக்குப் பெருந்துடக்கைவிட்டுந் துப்புரவாகியபின்பு அவ
ப்புகளை ஹறாமான பார்வை-கேள்வி-கோள்-புறம்- பொய் - இதுபோ
லொத்த பாவங்களைவிட்டுந் துப்புரவாக்கி கல்லபை-வஞ்சகம் - மோசம்-
பெருமை-குது-விளையம இதுபோலொத்தவைகளைவிட்டுந் துப்புர

வாக்கி முந்தின பாவங்களைவிட்டுந் தெளபாச்செய்து இபாதத்தை அல்லாகுத்த ஆலாவுக்காகக் கலப்பறுதலாக்கி நிய்யத்துச்செய்து கிபுலாவுக்கு நேராகநின்று இரண்டு முன்கையையுஞ் சட்டைக்கையைவிட்டுங் கொஞ்சம்நீக்கி இரண்டு பெருவிரலைக்கொண்டு யிருகாதின் சிறு சோணையைத் தொட்டவனாக யிரண்டு கையையுமுயர்த்தி இருமுன்கையின் முன்புறத்தைக் கிபுலாவுக்கு ஆண்பிள்ளைகள் நேராக்கவேண்டும்ஆனால் பெண்பிள்ளைகள் அவள் விரற்களின்தலைகளை யிரண்டு தோட்புயத்துக்கு நேராக்கி யுயர்த்திக்கொள்ளவேண்டும்.

(பின்பு) நிய்யத்துச்செய்தவனாக அல்லாகு அக்குபறுயென்று தக்குபீறுசொல்லி நிலையில் இருபாதத்திற்குமிடையில் நாலுவிரல்மட்டுமிடமுண்டா யிருக்கவேண்டும் பெண் பிள்ளைகள் சேர்த்துவைக்கவும் (பின்பு) தக்குபீறுசொல்லி தனா ஓதினவனாகத் தொப்புளுக்குங்கீழே வலதுகையை இடதுகையின்பேரில்வைத்து இடது மணிக்கட்டை வலதுகைச் சுண்டுவிரலாலும் பெருவிரலாலும் பிடித்து இடதுபுறங்கைமீது வலது வுள்ளங்கையைவைத்து மற்ற மூன்று விரலாலும் நீண்டதாகக் கட்டவேண்டும் (ஆனால்) பெண்பிள்ளைகள் விரல் மூடி யிருக்க-மார்புமீது முழங்கை விலாவில்ச் சேர்ந்திருக்கும்படி கட்டிக்கொள்ளவும் பின்பு அவூதும்-பிசுமிலும்-அல்கம்தும் ஓதி ஆமீன் மெள்ளச் சொல்லி ஒரு சூறா அல்லது ஒரு பெரியஆயத்து அல்லது மூன்று சிறியஆயத்து ஓதவேண்டும் ஆனால் முக்ததீ தனாவையும் ஆமீனையுந்தவிர வேறொன்றும் ஓதக்கூடாது இப்படிக் கிறுஅத்து முடிந்தபின் அல்லாகு அக்குபர் சொல்லிக்கொண்டு றுக்கூகுசெய்து பார்வையைக் கால்மீது வைத்து விரல்கள் விரிந்திருக்கும்படியாக முட்டுக்காலைப்பிடித்து கைகால்-இவைகளை ஒழுங்காகவைத்துத் தலைக்குச்சரியாக யிடுப்பைவைக்கவேண்டியது ஆனால் பெண்பிள்ளைகள் சரீரமெல்லாஞ் சேர்த்து முட்டுக்கால் வளைந்திருக்க விரல்களை விரிக்காமல் முட்டுக்கால் யெட்டுகிறமட்டுமவைக்கவும் றுக்கூகில் மூன்றுதரம் அல்லது அதிகம்ஒற்றைபட (சுபுகானறப்பியல அலீம்) யென்று மெள்ளச்சொல்லவும் இமாம் மூனு

யிஅ

அல்லது அஞ்சுதரத்திற் கதிகஞ் சொல்லக்கூடாது இமாம்சமியல்லாஹு லிமன்ஹமிதாச் சொல்லிக்கொண்டு நிமிர்ந்து ஒழுங்காகநின்று அல்லாகும்மறப்பனு ஒலக்கல் கம்து மாத்திரம் முக்ததீ சொல்லவும் ஒன்றியாய்த் தொழுகிறவன் இரண்டுஞ்சொல்லவும் மறுபடி தக்பீறுசொல்லிக்கொண்டு சஜதாச்செய்கிறது யெப்படியானால் முன்னே இரண்டு முட்டுகாலும் பின்பு யிரண்டுகையும் பின்பு மூக்கும் பின்பு நெற்றியுமாகவைத்துக் கைவிரல்கள் விரியாமற் கிபுலாப்பக்கம் பெருவிரல் காதுக்குச்சரியாகவும் கால்விரல்களை மேற்குப்பக்கமிருக்கும்படி பாதத்தை நிறுத்தி இரண்டு கொடுங்கையையும் விலாவைவிட்டு அகட்டி வயிற்றை இரண்டுதுடையைவிட்டுந் தூரப்படுத்தி துடையை ஒழுங்காக நிறுத்திப் பார்வை மூக்கின்மீதும் கன்னத்தின் மீதும் வைத்து சரீரத்தின்கனம் யேழுவுறுப்புகளின்மீது சரியாகவைத்து முதுகை வளைக்காமலிருக்கவும் ஆனால் பெண்பிள்ளைகள் யெல்லா வுறுப்புகளையுஞ் சேர்த்து இரண்டுகாலும் வலதுபக்கம் விட்டுயிருக்கவும் சஜதாவில் சுபுகானறப்பியல் அகுலாயென்று றுக்கூகின் கணக்குப்படியோதித் தக்பீறு சொல்லிக்கொண்டு தலையெடுத்து முழங்கால்மீது கையைவைத்து அமரிக்கையோடு வுட்கார்ந்து மறுபடி தக்பீறுசொல்லிக்கொண்டு இரண்டாவது சஜதாவையும் முன்போலவே தீர்த்து மறுபடி தக்பீறு சொல்லிக்கொண்டு நெற்றி-மூக்கு-கை முட்டுக்கால் இவ்விதமுயர்த்தி யுட்காராமல ஒழுங்காக நிலையில்வந்து முன்போலவே இரண்டாவதுறக்கஅத்தையுந் தொழவும்.

ஆனால் இரண்டாவது றக்கா அத்திமுதல் தனுவும் அவூதும்ஓதவேண்டியதில்லை இரண்டாவது இரண்டாம் றக்கா அத்து முடிந்தால விரலைக் கிபுலாப்பக்கமாக்கி வலதுகாலைநிறுத்தி யிடது காலை விரித்து அதை இரண்டு சவணத்துக்கிடையில் ஆக்கி அதின்பேரிலிருந்து கைவிரல்களை விரித்து துடைமீதுவைத்து முழங்கால் தொடுத்துவைக்கவும் ஆனால் பெண்பிள்ளைகள் இடது சவணத்தின்பேரி லிருந்து யிரண்டு காலையும் வலதுபுறத்திலாக்கி விரல்களைச் சேர்த்திவைக்கவும் பார்வை மடிமீதுவைத்து, அத்தகிய்யாத்து ஓதவேண்டியது அத்தகிய்யாத்தென்

று சொல்லும்போது அல்லாகுத்தஆலாவுக்குக் காணிக்கை வைத்தவனாகவும் அஸ்ஸலாமு அலைக்கவென்று ஓதும்போது நபிசல்லல்லாகுஅலைகிஒசல்லம் அவர்கள்பேரில் சலாஞ்சொன்னதாகவும் அஸ்ஸலாமு அலைனா ஒஅலா இபாதில்லா ஹிஸ்ஸாலிஹீனென்று சொல்லும்போது தன்பேரிலும் வானம் பூமியிலுள்ள ஸாலிகான அடியார்கள்பேரிலும் சலாஞ்சொன்னவனாகவும் அஷ்ஹது யென்று சொல்லும்போது சாட்சி சொன்னவனாகவும் நிய்யத்துச் செய்துகொள்ளவும் அஷ்ஹது சொல்லுஇறநேரம் கலிமா விரலுக்கடுத்த மூன்றுவிரலை மடக்கிப் பெருவிரலத் தலையைக் கலிமாவிரல் (யெகுனி) ஆள்க்காட்டிவிரல் நடுமொழியில்வைத்து லாயிலாகவென்று சொல்லும்போது கலிமாவிரலை சாடையா யுயர்த்தி இல்லல்லாகுவென்று சொல்லும்போது அந்தவிரலை நன்றாயுயர்த்திவைத்து இப்படிச் சைக்கினைசெய்யவும்,

அல்லது சுண்டுவிரலையும் அதை யடுத்தவிரலையு மடக்கி நடுவிரலையும் பெருவிரலையுஞ் சேர்த்து வட்டமாக்கிக்கொண்டு ஆட்காட்டி விரலை யுயர்த்திச் சைக்கினைசெய்யவும் பறுலிலும் வித்றிலும்வளமையாகிய ருத்திப்பென்னும் பெலவந்தமான சுன்னத்துகளிலும் முந்தின யிருப்பில் அப்துகு ஒறசூலுகு யென்றதற்கு அதினம் ஓதக்கூடாது பறுலில் பிந்தின இரண்டு றக்காஅத்துக்கு பாத்திகா யென்னும் அல்கம்துமாத்திரம் ஓதவும் யென்கிலும் இந்த யிரண்டு றக்காஅத்திலும் பாத்திகா அல்லது மூன்று தஸ்பீகு அல்லது வாய்மூடிநிற்கிறது இந்தமூன்றில் ஒன்றைச்செய்தால் போதும் ஆனால்பாத்திகாவோதுவது முஸ்தகப்பு பின்பு இரண்டாமிருப்பிலும் முந்தின இருப்பைப்போல அடங்கலையும் நிறைவேற்றி அத்தகிய்யாத்து ஓதியபின் சலவாத்து துஆ ஓதவேண்டும் பின்பு தன் கன்னத்தின்வெள்ளை பின்னாலிருக்கிறவர்களுக்குத் தெரியும்படி முகத்தை வலதுபுறந்திருப்பி தனித்துத் தொழுகிறவன் மலக்குகளை நிய்யத்துச்செய்தவனாகவும் இமாம்தன்னுடன்சேர்ந்த கவ்முகளையும் நிய்யத்துச்செய்தவனாகவும் முக்குத்ததீ இமாம்ஜனங்கள் மலக்குகள் முதலானவர்களை நிய்யத்துச் செய்தவனாகவும் இமாமுடன்

அஸ்ஸலாமு அலைக்கும் வறகுமத்துல்லாஹியென்று சலாஞ்சொல்லி மு டிக்கவேண்டும் அபுயூசுபு முகம்மது றகிமகு மல்லா அவர்களின்சொற் படி இமாம் சலாஞ்சொல்லி முடிந்தபின் முக்குததி சலாஞ் சொல்வது ஏற்றம்.

(இனி) பறுலுக்குப்பின்னாலே சுன்னத்துத் தொழுகை யுண்டா யிருந்தால் பறுலுத் தொழுதவுடனே (அல்லாகும்ம அந்தஸ்ஸலாம் வ மின்க்ஸ்ஸலாம் தபாறக்கத்த யாதல் ஜலாலி வல்யிக்குறாம்) யென்று அ ல்லது இதுபோலொத்த சிறு துஆஓதியெழுந்திருந்து கொஞ்சம்நகன் டு சுன்னத்துத்தொழுது முடிக்கவேண்டும் சுன்னத்தைப் பிற்படுத்து வது மக்குறாகு தொழுதுமுடிந்தபின் அஸ்தகுபிறுல்லா மூன்றுவிடுத் தமும் ஆய்த்துக்குறுசு ஒருவிடுத்தமும் குல்குவல்லாஹு குல்அகூது பிறப்பில் பலக்கு குல்அகூது பிறப்பின்னாஸி இவைகள் ஒவ்வொரு விடுத்தமும் சுபுகானல்லா (கூங) விடுத்தமும் அல்கம்துலில்லா (கூங) விடுத்தமும் அல்லாகு அக்குபறு (கூங) விடுத்தமும் லாயிலாக யில்ல ல்லாகு முகம்மதுற்றசூலுல்லாகி ஒருவிடுத்தமு ஓதி அந்தந்த வக்தி ல் ஓதவேண்டிய துஆ அல்லது தெரிந்த துஆக்களை ஓதி முடிக்கிறது முஸ்தகப்பு.

(இனி) தொழுகைக்குவெளியில் துஆச்செய்கிறதில் (அதாவது) கிபுலாவை முன்னோக்கி இரண்டு முட்டுக்காலின்பேரில் யிருந்து இர ண்டு கையையும் வானத்தைப்பார்க்க நெஞ்சுக்கு நேரேயுயர்த்தி அது இரண்டையும் நெஞ்சளவில்ச் சேர்த்துக்கொள்கிறதா யிருக்கும் அது இரண்டுக்கிடையில் கொஞ்சமானாலும் இடைவெளி யுண்டாயிருக்கிற து முஸ்தகப்பு தொழுதுமுடிந்தவுடன் இமாம் கவுமுகளைநோக்கி அல் லது வடக்கேமுகமாய் துஆச்செய்துகொள்ளவேண்டும்.

{ தொழுகையை முறிக்கும்படியான செய்கைகளின் பாபு }

அதாவது தொழுதுகொண்டிருக்கும்போது யாதொன்றைத் தி ன்றாலும் குடித்தாலும் பேசினாலும் அது கொஞ்சமானாலுஞ்சரி மறதி

யானாலுஞ்சரி இவைகள் தொழுகையை முறித்துவிடும் யென்கிலும் தின்னப்பட்ட வஸ்து ஒரு கடலைப்பிரமாணத்திர்க்குகுறைவாகப் பல்லுகளுக்கிடையில் இருந்து தின்று முழுங்கிவிட்டால்முறியாது தங்கடமன்றியே கனைக்கிறதில் தும்முகிறதில் கொட்டாவி யிடுகிறதில் யேப்பம் விடுகிறதில் இருமுகிறதில் இரண்டு அட்சரம் வுண்டாகிவிட்டால் முறிந்துபோகும் தங்கடத்தினால் வந்துவிட்டால் முறியாது இன்னும் தொழுகையை இணக்கமாக்குவதன்றித் தொழுகையின் இனமல்லாத மிகுந்த செயலுந் தொழுகையைமுறிக்கும் (மிகுந்த செயலென்பது) தூரத்தினின்று ஒரு மனிதன் இவனைப்பார்த்தால்த் தொழுகையில் இல்லையென்று நிண்ணயங்கொள்ளுவானே அப்படிக்கொத்த செயலாக மிருக்கும் ஒருசொற்படி துடர்ச்சையாக வொருபறுவில் முச்செயற் செய்வதாயிருக்கும்.

இன்னம் தும்மினவனுக்கு யெறகமுக்கல்லாஃ யென்று பிரத்தியுத்தாரஞ்சொன்னாலும் தன்னுடைய இமாமைத்தவிர இன்னமொருவன் பிசகாகவோதினால் அதர்க்குச் சொல்லிக்கொடுத்தாலும் குறுஆனைப்பார்த்து ஓதினாலும் தன்னுடைய நெஞ்சைத் தங்கடமன்றிக் கிபுலாவைவிட்டுத் திருப்பினாலும் தொழுகை முறிந்துபோகும் (இனி) தொழுகையில்த் துடங்கியபின் இடையில் ஞாபகத்தோடு தங்கடமன்றியே தொழுகையை முறிக்கிறது ஹறாமாகயிருக்கும் தங்கடத்தால்த்தொழுகையைமுறிக்கிறது முபாகாகவும் முஸ்தஹப்பாகவும் வாஜிபாகவும் இப்படி மூன்றுவகைப்படும் (அதாவது) தன்முதலில் ஒரு திருகமென்னும் கால் ரூபாய் தவருகிறதைப்பயந்தால் முறிக்கிறது முபாகு தண்ணீரில்த் தாழ்ந்துபோகிறவனையுந் தீயி லெரிந்துபோகிறவனையும் மீட்சியாக்கிவைப்பதர்க்கு முறிக்கிறது வாஜிபு பறுலான தொழுகையைத் தனியே அதாவாகத்தொழுக ஆரம்பஞ் செய்ததர்க்குப்பின் முந்தின இமாமத்துக்காத் இக்காமத்துச் சொல்லப்பட்டால் அதை ஜமாஅத்துடன் நிறப்பமாகத் தொழுகிறதர்க்காக முறிக்கிறது முஸ்தகப்பு

(ஆனால்) நவ்வாலு றக்காஅத் தல்லாத தொழுகையில் முந்தின றக்காஅத்திற்கு ஸஜதாச் செய்துவிட்டாலுஞ் செய்யாதிருந்தாலும் ஒரு பக்கஞ் சலாம்சொல்லி முறித்துவிட்டு இமாமைத் துடருகிறது ஆகும் இரண்டாம் றக்காஅத்திற்கு ஸஜதாச்செய்துவிட்டால் அந்தத்தொழுகையை முறிக்காமல் நிறப்பமாக்கிவிடவேண்டும் நவ்வாலு றக்காஅத்தாகிய தொழுகையில் முந்தின றக்காஅத்திற்கு ஸஜதாச் செய்யாதிருந்தால் முறிக்கலாம் செய்திருந்தால் இரண்டாம்றக்காஅத்துந்தொழுது இருபக்கமும் சலாம்வாங்கி இமாமைத் தொடரவேண்டும் மூன்றும் றக்காஅத்திற்கு சஜதாச்செய்திருந்தால் முறிக்கப்படாது தொழுகையை நிறப்பமாக்கிவிடவேண்டும்.

ஆனால் லொகறுகத்திலும் பெஷாவொகுத்திலும் நபிலென்று நீய்யத்துச்செய்து இமாமுடன் துடர்ந்துகொள்ளவேண்டும் சுன்னத்துத் தொழுதுகொண்டிருக்கும்போது இக்காமத்துச் சொல்லப்பட்டால் முறிக்கப்படாது லொகறுடைய சுன்னத்திலும் சும்ஆவுடைய சுன்னத்திலும் துடங்கிவிட்டால் இரண்டு றக்காஅத்துத்தொழுது சலாம் வாங்கிவிட்டுப் பின்பு அந்தசுன்னத்தைக் கலாச்செய்ய வேண்டும் பறுலு தொழுதுகொண்டிருக்கும்போது தாய்தகப்பன் கூப்பிட்டால்த் தொழுகையை முறிக்கப்படாது நபில்த் தொழுதுகொண்டிருக்கிறதையறிந்து கூப்பிட்டாலுந் தொழுகையை முறிக்கப்படாது நபில்த்தொழுதுகொண்டிருக்கும்போது அறியாமல்க் கூப்பிட்டால் ஜவாபு சொல்லாமலெங்கிலும் அதை கலாச்செய்வது வாசிபு.

{தொழுகையுடைய மக்குறூகுகளின் பயான்.}

அஃதாவது தன்பிடவையைத் தலைமேல்த் தோட்மேல்ப்போட்டு அணையாமல்த் தொங்கல்விடுகிறதும் சுஜூதிர்க்குப்போகும்போது முன்னாலே அல்லது பின்னாலேபிடவையையுயர்த்துகிறதும் தன்பிடவைகொண்டு தன் சரீரத்தைமூடாமல்ப் பலவிதமாகப் போட்டுக்கொள்கி

றதும் வேலைசெய்கிறதற்காக வைத்திருக்கிற அழுக்காகிய கேவலமா
ன சேலையை யுடுத்திக்கொண்டு தொழுகிறதும் மூக்குச்சளி காறல் உமி
நீர் இவைகளைத் துடைக்கப்பட்ட துணியை மேலேபோட்டுத் தொழு
கிறதும் கால்ரூபாய்த்தூக்கம் அல்லது அதற்குக் குறைவாக கனத்த
நஜீசை வைத்துக்கொண்டு தொழுகிறதும் சோம்பறையால் தலை திறந்
துதொழுகிறதும் மலஞ்-ஜலங்-காற்று இவைகளை யடக்கிக்கொண்டு
தொழுகிறதும் விரல்களை நெட்டிவிடுகிறதும் இடுப்பில் கையை வைத்
துநிற்கிறதும் முகத்தை வலம் இடமாகத்திருப்புகிறதும் சுஜூதில் மு
ழங்கையைப் படுக்கவைத்துக்கொள்கிறதும் மனிதருடைய முகத்திற்
க்குயெதிராலே நின்று தொழுகிறதும் நாயிருப்பு இருக்கிறதும் தங்க
டமன்றியே சம்மணங்கூட்டி இருக்கிறதும் இரண்டுமுழங்கைக்குமேல்
சட்டையை யுயர்த்திக்கொள்கிறதும இரண்டுகண்ணை வீணாக மூடிக்
கொள்கிறதும் இரண்டு கண்ணால்வானத்தைப்பார்க்க வுயர்த்துகிறதும்
கொட்டாவி வருகிறநேரம் வாயைமூடாமல் அல்லது முழுங்காம லிரு
ப்பதும் வீணாக வாயையல்லது மூக்கை மூடுகிறதும் கொண்டையை
முடிகிறதும் கிருஅத்தையோதத் தடுக்காமலிருக்குமே அப்படிக்கொ
த்தகாசை அல்லது அதுபோலொத்ததை வாயில்ஒதிக்கிக்கொள்கிறதும்
சரீரத்தையும் பிடவையையுந் தங்கடமன்றி வுலுப்பி விளையாடுகிறதும்
முச்செயலுக்குத் தாழ்ந்த செயலைத் தங்கடமன்றியே செய்கிறதும் சலா
ம்சொன்னதற்கு ஜவாபை கைகொண்டு சைக்கினைசெய்கிறதும் இமா
ம் தன்னிருபாதத்தையும் தங்கடமன்றியே மிகுறுபுக்குள் வைத்து நின்
று தொழுகிறதும் இமாம் மாத்திரம் தங்கடமன்றியே யொருமுழமான
மேட்டின்பேரிலும் ஜமாஅத்தானவர்கள் பள்ளத்தின்பேரிலும் நின்று
தொழுகிறதும் தங்கடமன்றியே இமாம் பள்ளத்திலும் ஜமாஅத்தான
வர்கள் மேட்டிலுமாக நின்றுதொழுகிறதும் வுயிர்ப் பிராணிகளின் ரூ
பமுள்ள பிடவையை யுடுத்துகிறதும் வலம் இடம் முன்னால் வுயிர்ப்
பிராணியின் ரூபம் இருப்பதும் ஆயத்துகளைச் சூறத்துகளை அல்லது
தஸ்பீகுகளை யெத்தொழுகையிலும் கையால் யெண்ணுகிறதும் தொ
ழுகிறவனுக்கு முன்னாலே சத்துரு யென்னுந் திரையில்லாமல் நடக்கிற

தும் ஆனல்ப் பெரும் பள்ளியிலும் மைதானிலு மவன்முன் சுஜூது டைய தலத்தில் நடக்கக்கூடாது சிறுபள்ளியிலும் வீட்டிலும் தொழு கிறவனுக்குமுன்னாலே மதில்வரையிலும் சுத்துருவன்றியே நடக்கக்கூ டாது வீடு பெரிதா யிருந்தாலும் சிறு பள்ளியுடைய குக்குமாக யிரு க்கும்.

பெரும்பள்ளியென்பது பெலமான சொற்படி (சுமி) முழுமாகயி ருக்கும் இதர்க்குக் குறைந்தது சிறுபள்ளியாக யிருக்கும் சுத்துருவில் குறைந்தது ஒருமுழநீளமும் சின்னிவிரல்ப்பருப்பமு முள்ளவஸ்துவா யிருக்கும் அதை ஒருபுருவத்துக்கு நேராக நட்டிக்கொள்ளவேணும் ந ட்ட யேலாவிட்டால் அதைக் கீழே யெதிரில்வைக்கிறதும் அதுகிடை யாவிட்டால் ஒரு கீறல் கீறிக்கொள்கிறதும் ஆகுமென்று சிலகித்தாபில் வருகின்றது.

(இனி) கல்பு ஒத்துமையா யிருக்கிறதர்க்காக கண்ணைமூடுகிறது ம் பாம்பு நட்டுவக்காலியை அடிக்கிறதும் தலையறுபட்ட ரூபமெழுதி னபிடவையை அணிகிறதும் மரம் செடிபோலொத்தவைகள் யெழுத ப்பட்டதை யணிகிறதும் வுயிர்ப்பிராணியுடைய ரூபம்வுள்ளதின்மேல் மிதித்து நின்று தொழுகிறதும் மக்குறூகுஅல்ல இப்போது சொல்ல ப்பட்ட மக்குறூகுகளில் சிலது மக்குறூகு தகுறீமா யிருக்கும் சிலது மக்குறூகு தன்ஸிகாயிருக்கும்.

{தொழுகையில் மறதிவருவதின் பயான்.}

ஒரு மனிதன் புறுலானதொழுகையை அல்லது அதுபோலொ த்ததைத் தொழுதுகொண்டிருக்கும்போது முந்தின யிருப்பைவிட்டும் மறந்து யெழும்பினால் ஞாபகம்வரும்போது இருப்பளவில் முடுகுத லானால் இருந்துகொள்ளவும் சஜதாசகுவு வாஜிபில்லை நிலையளவில் மு டுகினால் யிருக்கப்படாது முந்தின இருப்பைவிட்டதர்க்காகசஜதாசகுவு

செய்யும் நிலையளவில் முடுகியபின்னிருந்தால் ஒருசொற்படி தொழுகை கூடாது ஒருசொற்படி தொழுகைகூடும்மென்கிலும் குற்றவாளியாவான் வாஜிபைப் பிற்படுத்தியதர்க்காக சஜதாசகுவுசெய்யவும் மென்று வந்திருக்கிறது ஆனல் நபில்த் தொழுகைகளில் இரவ்வண்டு றக்காஅத்தும் ஒவ்வொரு தொழுகையாயிருப்பதால் நாலு றக்காஅத்துக்கு நீயத்துச் செய்துதொழும்போது நடுஇருப்பு இராமல் மறதியாக யெழும்பினல் அடுத்த றக்காஅத்துக்கு சுஜூதுசெய்யாமலிருக்கிறவரை இருப்பளவில் மீளவேண்டும் சஜதாச்செய்துவிட்டால் மீளப்படாது ஸஜதாசகுவு செய்யவும் இனி பிந்தின இருப்பைவிட்டும் மறந்து யெழுந்துவிட்டால் அடுத்த றக்காஅத்திர்க்கு சஜதாச் செய்யாம லிருக்கிறவரை மீளவேணும் செய்தால் பறுலு பாத்திலாகி நபிலாகப்புரண்டுவிடும் இன்னமொருறக்காஅத்தும்சேர்த்து ஆறுகநிறப்பமாக்கிமுடிக்கிறது யேற்றமாயிருக்கும் பிந்தின இருப்பு இருந்தபின் யெழுந்துவிட்டால் சஜதாச் செய்யாமலிருக்கிறவரை இருந்து சலாஞ்சொல்லிமுடிக்கவும் சஜதாச் செய்துவிட்டால் ஆறு றக்காஅத்தாக நிறப்பி சஜதாசகுவுசெய்துமுடிக்கவும் இதில் நாலுறக்காஅத்து பறுலும் இரண்டு றக்காஅத்து நபிலுமாகிவிடும்.

ஆனல் இவ்விதம் இமாம்யெழும்பினல் பின் துடர்ந்த ஜனங்கள் யெழும்பக்கூடாது யென்கிலும் தஸ்பீகு வகையறுக்களைச் சொல்லி ஸைக்கினைசெய்யவும் அதை அவர்அறிந்து இருப்பில் மீளாவிட்டால் ஸஜதாச்செய்யாமலிருக்கிறவரை சும்மாயிருக்கவும் சஜதாஅவர்செய்துவிட்டால் இவர்கள் சலாம்வாங்கிவிடவேண்டும் இனி ஒரு மனிதன் நாதமாகத் தொழுகையில் யெத்தனை றக்காஅத்துத் தொழுதோமோவென்று சக்குவைத்தால் அதைவிட்டுவிட்டுப் புதிதாய்த் தக்பீறு கட்டித்தொழவேண்டும் வளக்கமாகச் சந்தபமுண்டானல் பெலமானயெண்ணத்தின்படி நடத்தவேண்டும் துல்லியமில்லாமல் இரண்டுயெண்ணமும் ஒருப்போலிருந்தால்க் குறைந்த றக்காஅத்தை நிண்ணயப் படுத்திக் கொள்ளவும் பறுலான இருப்புடைய தான்மென்றெண்ணின தலமெல்லாம் இருக்கவேண்டும் இந்த சக்கை ஞாபகப்படுத்திக்கொண்டு ஒருப

றுலே நிறைவேற்றுகிறநேரம்வரை சும்மா நின்றுவிட்டால் ஸஜதாசகுவு செய்கிறது வாஜிபு.

{ உள்ளச்சமாய்த் தொழுவதின் பயான். }

தொழுகையில் வுள்ளச்சமாகக் கல்பை அல்லாகுத்தஆலா அளவில்த் தரிபடுத்தி அல்லாகுத்தஆலாவுடைய சமுகத்தில் நிற்கிறோம் அவனை நாம் கண்ணுற்பாராவிட்டாலும் நம்மை யவன் கண்ணன்றிப் பார்க்கிறுனென்று நாடி மனம் ஒத்துமையாகத் தொழுகிறது முஸ்தகப்பு இன்னம் சில சூபியாக்கள் மனம் ஒத்துமைஇல்லாமலத் தொழுதால் அத்தொழுகை மக்குபூலாகமாட்டாதென்றுஞ் சொல்லி யிருக்குறுர்கள் தொழுகைக்கு வுயிராகிறது உள்ளச்சமாயிருக்கும் அதாவது வுறுப்புகள் ஒடுங்கும்படியாக்கி மறதியைவிட்டு நீங்கிக் கல்பில் பயம்வைத்து ஓதுகிற சொற்களையுஞ் செய்கிற செயற்களையும் மறந்துவிடாமல் ஞாபகத்துடன் நிறைவேற்றுகிறதாயிருக்கும்,

ஆயத்து.

தொழுகையில் கல்புஒத்துமையாகி வுள்ளச்சப்பாட்டுடனேதொழும்படியாகிய மூமினுன சனங்கள் ஈடேற்றம் பெற்றுர்களென்று அல்லாகுத்தஆலா குறுஆனில்த் திருவுளம்பற்றினுன்.

ஹதீது.

சர்வரோ ஆலம்பயகும்பற்சல்லல்லாகு அலைகிஒசல்லமவர்கள் ஒருநாள் ஒருமனிதனை றுக்கூகு நிறப்பமாக்காமலத் தொழும்படியாயும் சுஜுதைக் கோழி கொத்துகிறதுபோற் செய்யும்படியாயுங் கண்டு இம்மனிதன் மவுத்தாகிறவரை பேணுதலில்லாமல் இப்படியாகவே தொளுகைசெய்யாமலத் தொழுகையை நிறைவேற்றி வருவாரேயானுல் இசுலாமார்க்கத்தைவிட்டு நீங்கி மவுத்தாவாரென்றும் ஒரு மனிதன் றுக்கூகு சுஜுதை நிறப்பமாக்காமலத் தொழுகிறதர்க்கு வுவமையாலது பசு

சியை ஆற்றிவையாத ஒருகனி இரண்டுகனியைத் தின்றவனைப்போலா யிருக்குமென்றும் முதுகை றுக்கூகு சுஜூதில் செவ்வை யாக்காமல்த் தொழும்படியான மனிதனை அல்லாகுத்தஆலா கிருபைகொண்டு பார்க்கமாட்டானென்றும் ஒருமனிதன் உள்ளச்சப்பாட் டில்லாமல்த் தொழுத தொழுகை ஒரு இருட்டைப்போற் கோலங்கொண்டு யென்னை நீ கெடுத்ததுபோல வுன்னுடைய கூலியை அல்லாகுத்தஆலா கெடுத்துப்போடுவானாகவும் யென்று சொல்லிக்கொண்டு அத் தொழுகை ஒரு இடம் போனவுடனே அதைப் பழைய துணியைப்போற் சுருட்டித் தொழுதவன் முகத்தில் இதைக் கபூல்ச்செய்யமாட்டோமென யெறியப்படுமென்றும் நபிநாயகம் முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள் திருவுளம்பற்றினதாக (இருவாதில்) வந்திருக்கின்றன.

இன்னும் காத்திமுல்லன்பியாவான நமதுநாயகம் றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் வுன்தொழுகையில் மவுத்துவந்துவிட்டபோதும் மவுத்தை நினைத்துத் தொழுவென்று திருவாய்மலர்ந் தருளியதை பீவி றுபிஅத்துல் அதவியா அம்மா அவர்கள் நினைத்து இருபத்தைய்ந்து வருடமாக ஒவ்வொரு தொழுகை யடங்கலிலும் இந்த நேரத்தில் மவுத்தாகிப்போய்விடுவோம் இந்தத் தொழுகைதான் கடாசித்தொழுகையாயிருக்குமென்றெண்ணியெண்ணி துன்யாவின் ஒருவேலையும் பாராம விதேவேலையா யிருந்துவிட்டார்கள்.

ஹிக்காயத்து.

கலறத்து ஹசைன்றலியல்லாகு அன்கு அவர்களின் புத்திரசிகாமணியாகிய சைனுல் ஆபிதீன் றலியல்லாகு அன்குஅவர்கள் தொழுகைக்காக ஒலுச் செய்யும்போதெல்லாம் மேனி மஞ்சணிறமாகிவிடும். முசல்லாவில் நின்றவுடனே பதர்த்தம் வந்துவிடும் என் பதறுகிறீர்களென்று கேட்கப்பட்டால் ஒகே ஜனங்களே யாருடையசமுகத்தில்நின்று முனாஜாத்தென்னும் இரகசியம் பேசுகிறேனென் றறிவீர்களா அல்லாவுடைய சமுகத்தில் நிற்குறேன் அதினாற் பதர்த்தம்வந்துவிடுகிறது யென்று சொல்லுவார்கள்.

இன்னம் அவர்கள் பள்ளியில் ஒருநாள் சுஜூது செய்துக்கொண்டிருக்கும்போது அவர்கள் வீட்டில் நெருப்புப்பிடித்தது ஜனங்கள்வந்து நாயகமே வுங்கள் வீட்டில் நெருப்புப் பிடித்ததுயென்று சொல்லிச் சத்தமிட கொஞ்சமும் நினைக்கவில்லை அப்பால் கேட்டதர்க்கு பெரிய நெருப்பென்னும் நரகம் என்னை இதைவிட்டும் மறக்கச் செய்துவிட்டதென்று சொன்னூர்கள் (ஆகையால்) இருவான்களே இந்தநாயகத்தைப்போல் வுள்ளச்சம்வைத்துத் தொழவேண்டும்,

இமாமத்தின் பாபு.

ஜமாஅத்துடன் தொழுகிறது ஆண்பிள்ளைகளுக்குக் கனமானசுன்னத்து பெலமானசொற்படி வாஜிபாகயிருக்கும் அதைத் தங்கடமன்றி விடுகிறது குற்றமாகயிருக்கிறது.

ஹதீது.

ஒருமனிதன் தன்வீட்டில்த் தனியே தொழுகிறதைக்காண பள்ளியில் ஜமாஅத்துடனே தொழுகிறது (உரு) தறஜா அதிகமாக யிருக்குமென்றும் ஒருமனிதன் (சய) நாளைக்கு ஜமாஅத்துடனே முந்தினதக்பீறில்ச் சேர்ந்து தொழுதால் அவனுக்கு நரகத்தைவிட்டும் முனாபிக்குத்தனத்தைவிட்டும் நீங்கிவிட்டான் யென்று இரண்டு உரிமைச்சீட்டு எழுதப்படுமென்றும் அல்லாகுத்தஆலாவும் அவன் மலக்குகளும் முந்தின சப்புகளின்பேரில் சலவாத்துச்சொல்லுவார்கள் வுங்கள் ஸப்புகளை நெருக்கிவையுங்கள் வுங்களுடையகைகளை ஒருவருக்கொருவர் இடிக்காமல் மெல்லினமாக்கிவையுங்கள் இடைகளிற் சைத்தானுழையாமலிருக்கிறதர்க்காக இடைகளை அடைத்துக் கொள்ளுங்கள் யாராவது இடைகிடந்ததைத் தேடிப்பார்த்து அடைத்து நிற்பானேயானல் அவனுக்கு அல்லாகுத்தஆலா ஒரு தறஜாவை யுயர்த்திவிடுவானென்றும் வுங்களில் ஒருமனிதன் இமாமுக்கு முன்பாகத் தலையை யுயர்த்தினால்

அல்லது வைத்தால் அவன் தொழுகையை அல்லாகுத்தஆலா ஒப்புக்கொள்ளமாட்டான் யென்றும் ஒருசப்பை ஒருமனிதன்சேர்ந்தால் அவனை அல்லாகுத்தஆலா சேர்த்துக்கொள்ளுவான் முறித்தால் அல்லாகுத்தஆலா அவனையு முறித்துவிடுவானென்றும் நமதுநாயகம்முகம்மதுநபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினார்கள்.

ஹிக்காயத்து.

ஹாத்தமுல் அஸம்முறகிமகுல்லா அவர்களுக்கு ஒரு விடுத்தம் ஜமாஅத்தாக தொழுகிறது தவரிப்போனதைப்பற்றி விசனமாயிருக்க அபூயிசுஹாக்குல் புகாறி றகிமகுல்லாஃ யென்கிறவர்கள்மாத்திரங் கைகொடுத்துச் சபூர்ச்செய்யுங்களென்றுசொல்ல எனக்கு ஒருகுழந்தை யிறந்துபோனால் இவ்வூரில் பதினாயிரஞ் சனங்கள்வரை வந்து எனக்கு கைகொடுப்பார்கள் என் பிள்ளைகளெல்லாம் இறந்துபோகிறது எனக்குஒருவருத்தமல்ல தீனுடைய முசீபத்து துன்யாவுடைய முசீபத்தைக்காணப் பெரிதாயிருப்பதால் இன்றையில் இத்தொழுகையை இமாமத்துடனே தொழுகிறதுதவரித் தனியேதொழும்படிநேரிட்டதே இதுதான் எனக்குப் பெரியமுசீபத்தாக யிருக்குமென்று சொன்னார்கள்.

ஹிக்காயத்து.

இமாம் முகியித்தீனுன்னவவீ அவர்கள் சொல்லுகிறதாவது நான் இருபதுவருடமாக இமாம் சமாஅத்தை விடாமல்த் தொழுது வந்தேன் இதினிடையில் ஒருநாளாவது எனக்குச் செய்த்தான் ஹறக்நத்துண்டாகவில்லை ஒருபோதையில் இசாவினுடைய ஜமாஅத்தைவிட்டுவிட்டேன் அந்த சபபால் காலையில் முழுக்காளியாக செய்த்தானுடைய ஹறக்கத்தால் யெழுந்தேனென்று சொல்லி இருக்கிறதாக (நுசுஹத்துல் மஜாலிசுயென்னுங் கித்தாபில் வருகின்றன,

இனி ஜனங்களில்லாதிருந்தால் ஒரு மனிதனை ஒருமனிதன்தொடர்ந்துதொழுதாலும் ஜமாஅத்துடைய வரிசை கிடைக்கும்.

இமாமத்துடைய சறுத்துகள்.

இமாமுடைய சறுத்துகள் (சூ) அதாவது இசுலாமாக யிருக்கிறதும் பாலிகாயிருக்கிறதும் பைத்தியமன்றிப் புத்திசாலியா யிருக்கிறதும் ஆண்பிள்ளையாயிருக்கிறதும் தொழுகை கூடுகிறமட்டும் குறுஆனில் சூறத்துகளாவது ஆயத்துகளாவது பாடமாகயிருக்கிறதும் ஒரு அட்சரத்தை வேறொரு அட்சரமாகப் பேதகமாக்கும்படியான நாவின் கெடுதலைவிட்டும் வயற்றோட்டத்தைப்போல் மற்றுந் தங்கடங்களை விட்டும் சலாமத்தாக யிருக்கிறதுமாம்.

ஆனால் சிறுபிள்ளைகள் ஒன்றுக்கொன்று இமாமத்துச் செய்யும்போது இமாம் பாலிகாயிருக்கிறதும் நீரிழிவுபோலொத்த தங்கடக்காரர்கள் ஒன்றுக்கொன்று சேர்ந்துதொழும்போது இமாம் சுவாத்தியமாயிருக்கிறதும் சறுத்தல்ல யெங்கிலும் யிமாம் மவுமூமைக்காண சுவாத்தியமாகயிருக்குறது அல்லது சரியாக யிருக்கிறது சறுத்தா யிருக்கும் ஓதும்போது ஒரு அட்சரத்தை வேறொரு அட்சரமாய்ப் புறட்டும்படியானவர்கள் ஒன்றோடொன்றுசேர்ந்து தொழுதால் இமாம் அவர்களைப்போல் அல்லது ஓதுதலில் கொஞ்சங் குறைமையா யிருந்தால் குற்றமில்லை.

இமாமைத்தொடருகிறதர்க்கு சறுத்துகள்.

இமாமைத் தொடருகிறதற்குச்சறுத்துகள் (ய)அதில் (க-வது) முக்ததி இமாமைத் தொடருகிறதை நீயத்துச்செய்கிறது (உ-வது)வீடுஅல்லது பள்ளியைப்போல இருவர்தலம் ஒன்றாயிருக்கிறது அதாவது பூமியிலிருந்து தொழுகிறவன் வாகனத்திலிருக்கிறவனைத் தொடராமலும் அல்லது இவன் அவனைத் தொடராமலுமிருக்கிறது (ங - வது) இருவர்தொழுகையும் ஒன்றாயிருக்கிறது அதாவது பறுலு தொழுகிறவன் சுன்னத்து வகையறாத் தொழுகிறவனைத் தொடராம லிருக்கிறது

(ச-வது) முக்த்ததியுடைய யெண்ணத்தில் இமாமுடைய தொழுகை துறுஸ்தாயிருக்கிறது (ஆனால்) வேறொரு மதுகபிலுள்ளவன் முக்த்த திகளின் நீய்யத்தின்படி பறுலுகளை பேணிநடத்தினால் அவனைத் துட ருகிறது துறுஸ்தாகும் தன்மதுகபிலுள்ள இமாம்கிடையாவிட்டால் த னித்துத் தொழுகிறதைக்காண வேறொரு மதுகபிலுள்ள இமாமைத் தொடர்ந்து தொழுகிறது யேற்றமாயிருக்கும் ஆனால் முந்தினஇமாமத் து மிகவும் வரிசையாயிருப்பதால் ஷாபி மதகபுக்காரர் இமாமத்துச்செ ய்தாலுந் துடருகிறதுதான் நலமாயிருக்கும் (ரு- வது) தொழுகையில் ஆண்பிள்ளைகளுடனே பெண்பிள்ளைகளும் தொடர்ந்து தொழும்போ து ஆண்பிள்ளைக்கு முன்னாலேயாவது நேரேவலதுபக்கமாவது நேரே இடதுபக்கமாவது திரையன்றியே இன்னும் சிலசறத்துடனே தொழா மலிருக்கிறது ஆனால் இது பஸாதுடைய காலமா யிருப்பதாற் பெண் பிள்ளைகள் ஆண்பிள்ளைகளுடனே ஜமாஅத்தில் சேர்ந்து தொழுகிறது ஆகாது (சு-வது) முக்த்ததி இமாமுடைய குதிங்காலைக்காண தன் கு திங்காலை முற்படுத்தாமலிருக்கிறது (எ-வது) இமாமைக் காணுகிறது கொண்டாவது அவர் சத்தத்தைக்கொண்டாவது முக்த்ததிகளில் சில ரைக்காண்கிறது கொண்டாவது இமாமுடைய திரும்புதல்களாகியசெ யல்களை அறிகிறது (அ-வது) தொழுததின்பின்னாலேயாவது அல்லது முன்னாலையாவது இமாமை முஹீமென்றும் முசாபிரென்று மறிகிறது (கூ-வது) இமாம் பறுலுகளைச்செய்யும்போது இமாமுக்கு முந்தாமல் இமாமுடனேயாவது அல்லது இமாமுக்குப் பிந்தியாவது நிறைவேற் றுகிறது (ய-வது) நிக்குன்சறுத்து யென்கிறசெயல்களில் முக்த்ததிஇ மாமைப்போல் அல்லது அவனுக்குத் தாழ்மையிருக்கிறது அதாவது றுக்கூகு சுஜூதுசெய்து தொழுகிறவன் இசைக்கினைசெய்து தொழுகிற வனைத் தொடாராமலும் வுடையுடுத்தித் தொழுகிறவன் அம்மணமாகத் தொழுகிறவனைத் தொடராமலிருக்கிறதுமாம்.

இந்த சறுத்துகளில் ஒன்று தவறினால் தொழுகை கூடாது நபி ல்த் தொழுகிறவன் பறுலு தொழுகிறவனைத் தொடர்ந்தாலும் ஒவுச்

செய்தவன் தய்யம்மும் செய்தவனைத் தொடர்ந்தாலும் ஒருவுறுப்பைக் கழுகினவன் மஸஹ் செய்தவனைத் தொடர்ந்தாலும் நின்று தொழுகிறவன் இருந்து தொழுகிறவனைத் தொடர்ந்தாலும் சைக்கினைசெய்து தொழுகிறவன் அவன்போலொத்தவனைத் தொடர்ந்தாலும் கூடும் (பின்னை) நல்லமனிதனை யிமாமாகநேமிக்கவேண்டும்.

இனி ஒருபள்ளியில் நேமிக்கப்பட்ட இமாம் அதிலிருக்கும்போது அவர் அல்லது அவருடைய உத்திரவுபெற்றவர் தொழுவிக்கிறது ஏற்றம் அவரில்லையானால் அந்தஜனங்களில் ஏற்றமான மனிதன் தொழுவிக்கவேண்டும்.

இனி அப்த்தையும் பாசிகென்னுங் கெட்டமனிதனையும் இல்மில்லாத பட்டிக்காட்டுக்காரனையும் சினாவிற் பிறந்தவனையும் இமாமத்துக்கு முற்படுத்துவது மக்குறூகு அவர்களாக முந்திவிட்டால் ஆகும் ஜமாஅத்தின்வரிசையை அவனுடைய இமாமத்து முறிக்காத்ததால் தனித்துத் தொழுகிறதைக்காண ஏற்றம்.

இனி சப்பு நிற்கிறதில் ஒரு முக்த்ததிமாத்திரந் துடர்ந்தால் அவன் சிறுபிள்ளையாயிருந்தாலும் பெரிய மனிதனாயிருந்தாலும் இமாமுடைய வலதுபாகத்தில் இடைவிடாமலும் முந்தாமலும் பிந்தாமலும் நிற்கவேண்டும் இடதுபாகத்தி னிற்கிறதும் மிகவும் பின்னாலே நிற்கிறதும் மக்குறூகு ஒருமுக்த்ததியைக்காண அதிகமானவர்கள் பின்னாலே நிற்கவேண்டும் அதற்கு விரோதஞ்செய்வது மக்குறூகு.

இனி சப்புகள்சேர்ந்தால் முந்தின சப்பில் பெரிய மனிதர்களும் பிந்தினசப்பில் சிறுபிள்ளைகளுமாக நிற்கவேண்டும் சிறுபிள்ளை யொருவனாகயிருந்தால் சப்புடன் சேர்ந்துகொள்ளவும்.

இனி சப்புநிற்கிறது வொருவரோ டொருவர் இடைவழியை யடைத்துத் தோட்புயங்களைச் சரியாக்கவேண்டும் இது கொண்டு இமாமுஞ் சரியாக அணிபெறத்து இடைவிடாமல்நிற்கும்படி சொல்லவேண்டும் ஹதீதில் வந்திருக்கிறதாவது இமாமுக்கு நேரே பிற்புறம் நின்று

தொழுகிறவனுக்கு நூறுவரிசை வலதுபக்கம்நின்று தொழுகிறவனுக்கு யெழுபத்தைந்துவரிசை இடதுபக்கம்நின்று தொழுகிறவனுக்கு அன்பதுவரிசை மற்ற சப்புகளில் நின்று தொழுகிறவர்களுக்கு இருபத்தைய்ந்து வரிசையென்று யெழுதப்படும்.

இனி முந்தின தக்குபீறில்த் தவரிவிடாமல் இமாமுடன் சேர்ந்துகொள்கிறது மிகவும் ஏற்றமாயிருக்கும் யேனென்றால் ஒருவனுக்கு ஜமாஅத்தில் முந்தினதக்குபீறு தவரிவிட்டால் நாற்பதுவிடுத்தம் அவன் மவுத்தாகி நாற்பதுவிடுத்தங் கியாமத்துடைய அமளியையும் . திடுக்கத்தையும் அனுபவிக்கிறதைக்காண மிகப்பெரிதா யிருக்குமென்றும் இன்னும் முந்தின தக்குபீறாகிறது துன்யாவைக் காணவும் அதிலிருக்கிற ஆஸ்தி கிருமத்துகளைக் காணவும் ஏற்றமா யிருக்கும்யென்று நபிநாயகமவர்கள் திருவுளம்பற்றினார்கள்.

முந்தின தக்குபீறுடைய ஒத்தாவது பெலமானசொற்படி முந்தின றக்காஅத்தின் றுக்கூ குவனையிலா யிருக்கும் அந்த றக்காஅத்திற் சேர்ந்துகொண்டால் அவ்வரிசை யுண்டாகும் நபிநாயகமவர்கள் இதற்காக ஓடவேண்டாமென்றும் அப்படியோடுகிறது வுள்ளச்சத்தை நீக்கிவிடுமென்றும் திருவுளம்பற்றியிருப்பதால் ஓடாமற் பயங்கரத்துடனே அதபாக இமாமைத் தொடர்ந்துகொள்ளவேண்டும் இமாம்இவன்போகும்போது றுக்கூகிலிருந்தாலும் சுஜூதிலிருந்தாலும் யெந்தச் செயலிலிருந்தாலும் அவரைத் தொடரவேண்டும் நாவால் நீயத்து அமர்த்தியாய்ச்சொல்லிக்கொண்டுநின்று இமாமைத் தவரவிடலாகாது யென்கிலும் நெருங்கின சமையமாகயிருந்தால் கல்பில்மாத்திரம் நீயத்துச் செய்துக்கொண்டு நிலையில் தக்குபீறுசொல்லி இமாமை யெற்றிக்கொள்ள வேண்டும் ஆனால் இவன் இமாமுடைய றுக்கூக்குப் பின் சேர்ந்திருந்தால் அந்த றக்காஅத்தை கணக்கில்ச் சேர்க்கலாகாது றுக்கூகைவிட்டும் இமாம் தலையை யுயர்த்துகிறதற்குள்ளாக அதி லிவன் சேர்ந்திருந்தால் அந்த றக்காஅத்தைக் கணக்கில் சேர்க்கப்படும் அவர்தலை யுயர்த்தும்போது யிவன்குனிந்தால் சேர்க்கப்படாது.

முக்ததியின் விபரம்.

முந்தின றக்காஅத்திலிருந்து கடாசிவரை இமாமைத் துடர்ந்தவனுக்கு (முதிறிக்கு) யென்று சொல்லப்படும் இவன் அறவே கிருஅத்தோதப்படாது அப்படியோதுகிறது மக்குறூகு வாய்மூடிநின்று கேட்கவேண்டும் முந்தின றக்காஅத்துக்குப்பின் துடர்ந்தவனை (மசுபூக்கு) யென்று சொல்லப்படும் இவனுக்குத் தவரிவிட்ட றக்காஅத்தை இமாம் சலாம்கொடுத்தபின் தொழுது முடிக்கவேண்டும் இப்படித் தொழுதுமுடிக்கிறதில் அவன் தனித்தவனைப்போலாயிருக்கும் தனாவும் அகூதும் பிசுமிலும் கிருஅத்தும் ஓதவேண்டும் சஜதாசகுவு வர்ஜிபாகிவிடிற் செய்யவும் ஆனால் இவனுக்குப்பின் மற்றொருவன் தொடர்ந்தால்த் தொழுகைகூடாது தனித்தவனைக் கொண்டு மற்றொருவன் துடர்ந்துகொள்ளலாம் தனித்துத் தொழுகிறவன் இமாமைப்போல்க் கிருஅத்து ஓதவேணும் ஆனால் அமர்ந்த தொழுகையில் இவன் இரண்டுபேரும் அமர்ந்தோதுகிறது வாஜிபு இரைந்தோதுகிற தொழுகையில் இமாம் இரைந்தோதுகிறது வாஜிபு தனித்தவன் இரைந்தோதுகிறது இமாமைப்போல மிகவும் கடப்புச்செய்யாமல் இரைந்தோதுகிறது ஏற்றம் அமர்ந்தோதுகிற தொழுகையாவது லொகறு அசறுடைய றக்காயத்தடங்கலிலும் மகறிபுடைய மூன்றாவது றக்காஅத்தும் யெசாவுடைய பிந்தினரெண்டு றக்காஅத்தும் பகலையின் னபிலடங்கலிலுமாயிருக்கும் யிவைதவிர வுள்ளதெல்லாம் யிரைந்தோதுகிற தொழுகையாம் அமர்ந்தோதுகிறதில் குறைந்தமட்டாவது தனக்கு அல்லது தன் சமீபத்தி. லுள்ளவனுக்குக் கேட்கும்படி சொல்லுகிறதாயிருக்கும் இரைந் தோதுகிறதிற் குறைந்தமட்டாவது முந்தின ஸப்பு அடங்கலுக்குங் கேட்கும்படிசொல்லுகிறதாயிருக்கும் இரவில் நபிலை இமாமுடன் தொழுதால் இரைந்தோதுகிறது வாஜிபு தனியேதொழுதால் ஏற்றமாயிருக்கும்.

ஒருமனிதன் இரைந்தோதுகிற தொழுகையில் கிருஅத்தை மெள்ள வோதிக்கொண்டுயிருக்கும்போது அவனை ஒருமனிதன் துடர்ந்தால் அதுமுதல் இரைந்தோதுகிறது வாஜிபு அதெப்படியெனில் கிருஅ

த்தைக் கொஞ்சங் கால்வாசிபோ லோத்ததை அமர்ந்தோதி யிருந்தால் துவர்க்கத்திலிருந்து ஆரம்பஞ் செய்து இணைந்தோதவேணும் அறிய மோதியிருந்தால் மீதத்தை இணைந்து நிறப்பமாக்கவும்இப்போதுசொல் லப்பட்ட தெல்லாம் ஆண்பிள்ளைகளுக்காக விருக்கும் பெண்பிள்ளைக ள்யாதொரு தொழுகையிலும் இணைந்தோதப்படாது.

(இனி) தக்குபீறு சமியல்லாகு சலாம் இவைகளை இணைந்து சொல்லுகிறது சுன்னத்து ஆனால் தனித்துத் தொழுகிறவனும் இமாமுடன்சேர்ந்திருக்கிறவனும் தனக்குக் கேட்கும்படி சொல்லவேண்டும்.

வித்துறுத்தொழுகையின் பாடு.

வித்துர்த் தொழுகையாகிறது அமலில் பறுலாக யிருப்பதால்அதை விட்டிருந்தால் கலாச் செய்யவேண்டும் நிண்ணயத்தில் வாஜிபாக யிருப்பதால் அல்லத்தட்டினவன் காபிறுகமாட்டான் இவ் வித்துறு ஒருசலாம்கொண்டு மூன்று றக்காஅத்தாகத் தொழவேண்டும் அதில் மூன்றும் றக்காஅத்துடைய றுக்கூக்குமுன்னாலே இரண்டுகையையும் முந்தின தக்குபீறுக்கு வுயர்த்துவதுபோல் வுயர்த்தி தக்குபீறு சொல்லிக் கட்டிக் குனூத்தை யமர்ந் தோதியபின் றுக்கூக்குத் தக்குபீறு சொல்லித் தொழுது முடிக்கவும் ஆனால் முந்தின றக்காஅத்து இமாமுடன் தவறினவ னென்னும் (மஸ்பூக்கானவன்) இமாமுடன் மாத்திரம் குனூத்தோதவேண்டும் (இனி) றமுலானமாத்தையில் இமாமுடன் இசாவின் பறுலாவ்து தறுவிகாவதுதொழுதிருந்தால் வித்துறையும் இமாமுடன் தொழுகிறதாகும் ஒரு சொற்படி பறுலு தவறிவிட்டால் தறுவீகை இமாமுடன் தொழுதிருந்தபோதிலும் வித்திறை இமாமுடன் தொழப்படாது றமுலானில்மாத்திரம் வித்திறை இமாம் ஜமாஅத்தாகத் தொழுகிறது நல்லது மற்றநாட்களில் மக்குறூகு முக்த்ததி குனூத்தோதி முடிவதர்க்குமுன் இமாம் றுக்கூகில்ப் போய்விட்டால் முக்த்ததியும் வுடனே றுக்கூகில்ப் போகவேணும் அத்தகிய்யாத்தில் அப்துகு ஒறசூலுகுவனா ஓதுகிறதர்க்குமுன் யிமாம் நிலையில் யெழும்பி

னுல் அல்லது சலாங்கொடுத்தால் அத்தகிய்யாத்தை அப்துகு ஒறகு லுகுவரையும் ஓதவும்.

(இனி) வித்துறுத் தொழுகையில் முந்தின றக்காஅத்தில் (ஸப்பிஹிசுமாவும்) இரண்டாம் றக்காஅத்தில் (குல்யாவும்) மூன்றும் றக்காஅத்தில் (குல்குஅல்லாவும்) ஓதுவதுமுஸ்தகப்பு,

(இனி) பஜிறுருகுத்தில் ஷாபிகி மதகபுக்காரர் இமாமத்துச்செய்ய இவன் துடர்ந்தால் குனூத்தோதாமல் இரண்டு கையையும் நாளவிட்டு வாய்மூடிநிற்கவேண்டும் பஜிறில் இமாம்சாமஅத்தாகத்தொழும்போது பேதிபோலொத்த முசிபத்து நீங்கிறதுர்க்காக றுக்கூகுக்குப் பின்பு யிமாமும் ஜமாஅத்தும் குனூத் தோதுகிறது நமது மதஹபிலும் ஆகும் (இனி) வித்திறில் சலாஞ்சொன்னபின் (சுபுகானல்மலிக்குல்குத்தூசு) யென்று மூன்றுதரஞ்சொல்லி மூன்றும்விடுத்தம் சத்தத்தையுயர்த்தி (றப்புல் மலாயிக்கத்தி ஒற்றூஹ) யென்று சொல்லவேணும்.

நபிலானதொழுகைகளின் பாபு.

சுன்னத்தான தொழுகைகளெல்லாம் நபிலென்றுஞ் சொல்லப்படும் நபிலான தொழுகைகளடங்கலையும் சுன்னத்தென்று சொல்லப்படாது சுன்னத்தான தொழுகைகளடங்கலிலும் முஸ்தகப்பான தொழுகைகளடங்கலிலும் வித்துருத்தொழுகையிலும் யெல்லா றக்காஅத்துகளுக்கும் கிறுஅத்தோதுகிறது பறுலாயிருக்கும்

(இனி) அன்றுடம் வளமையாகக் கொண்டுவரப்பட்ட றுத்திபான சுன்னத்துகளின் விபரம் ஒக்த்துடைய பாபிற் சொல்லப்பட்டிருக்கின்றன.

தறுவீகுத்தொழுகையின் பயான்.

றமுலான்மாத்தையில் ஒவ்வொரு யிரவிலும் (உ0) றக்காஅத்துத்தொழுகிறது ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் சுன்னத்து முவக்கதாவாயிருக்கும் (யெகுனி) பெலவந்தமாக்கப்பட்ட சுன்னத்தாயிருக்கும் அதை யிரண்டிரண்டு றக்காஅத்தாகச் சலாஞ்சொல்லிமுடித்து (உ0) றக்காஅத்தையு நிறப்பமாக்கிறது மிகவும் யேற்றமாயிருக்கும் அதை யிமாம் ஜமாஅத்தாகத் தொழுகிறது சுன்னத்தில் (கிபாயாவாயிருக்கும்)

அதினுடைய ஒக்த்தாகிறது இசாத்தொழுதபின் கிழக்கு வெளுக்கிறவரையிலா யிருக்கும் அதில் ஒருவிடுத்தம் குறுஆன்முழுமையும் ஒதிமுடித்து கத்தஞ்செய்கிறது சுன்னத்து அதைச் சனங்கள் சோம்பிச் சடைகிறதர்க்காக விடப்படாது யென்கிலும் யிக்காலத்தி லநேகமனிதர்களுக்கு அதைப்பற்றி சடவுண்டாகித் தறுவீகைத் தொழாதவர்களாக யிருப்பதால் அப்படி வராமலிருக்கும்படி ஆயத்து அல்லது சூறுக்களையோதி இமாம் ஜமாஅத்தாகத்தொழுகிறதும் நலமாக யிருக்குமென்று (இக்த்தியார்) யென்கிற கித்தாபில்வருகிறது அதில்நவ்வாலு றக்காஅத்துக்கிடையில் நாலு றக்காஅத்துத்தொழுகிறநேரம் வரையிலிருக்கிறது முஸ்தகப்பாயிருக்கும் இதுபோல்த்தான் தறுவீகு இருபது றக்காஅத்து முடிந்தபின் வித்துறுக்குமுன் யிருக்கிறது முஸ்தகப்பு இந்தத் தறுவீகுகளின் தஸ்பீகுகள் துஆக்கள் தமிழில்யெழுத அட்சரம் ஒத்துமைப்படமாட்டாதாகையால் கேட்டுப் படித்துக்கொள்கிறது நல்லதாயிருக்கும்.

ஹதீது

இயாராகிலும் ஒருமனிதன் றமுலான்மாத்தையின் யிரவையில் முழித்துத் தவாபைத் தேடினவனாகவும் அதை யுறுதிகொண்டவனாகவும் நபிலான வணக்கங்களை வணங்கினுல் அவனுடைய முந்தினபா

வங்களை அல்லாகுத்தஆலா பொறுத்துவிடுவான் யென்று நமதுநாயகம் முகம்மதுசல்லல்லாகு அலைகிஒசல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினார்கள்.

இன்னும் ஹலறத்து அலிறலியல்லாகு அன்குஅவர்கள் சொன்னதாவது ஹலறத்து வுமறிபுனுகத்தாபு றெலியல்லாகு அன்குஅவர்கள் இந்த தருவீகை யென்னினின்றுங் கேட்ட ஹதீதால் காயப்படுத்தினார்கள் அந்த ஹதீதாவது நான் நபிசல்லல்லாகு அலைகிஒசல்ல மவர்கள் மஜ்லிசிலிருக்கும்போது திருவுளமானார்கள் அறுசைச்சுற்றி கலீறத்துல் குத்சென்று ஒளிவால் ஒருதானமுண்டாயிருக்கிறது அதிலெண்ணத்திலடங்காத மலக்குகள்யிருந்து ஓயாமல் அல்லாகுத்த ஆலாவை வணங்கிக்கொண்டிருக்கிறார்கள் றமுலான்மாதம் வந்தவுடன் பூமியில் யிறங்கிறதர்க்கு அல்லாகுத்தஆலாயிடம் உத்திரவுபெற்று பூமியிலிறங்கி அந்தமாத்தையின் யிரவுகாலங்களில் முழித்து வணங்கிறவர்களுடனே யிவர்களுஞ்சேர்ந்து வணங்குவார்கள் அந்தமலக்குகள் ஒருவனைத்தொட்டாலும் அல்லது அவர்களை ஒருவன்தொட்டாலும் சீதேவித்தனம்பெறுவான் அப்பால் அவனுக்கு மூதேவித்தனமில்லை யிந்த (கதீதை) உமறிபுனுகத்தாபு றலியல்லாகுஅன்கு அவர்கள் கேட்டவுடன் நாம் யிதர்க்குமிகவும் பாத்திரமா யிருக்குமென்றுசொல்லி அதுமுதல் மனிதர்களை றமுலான் யிரவுகளிற் சேகரஞ் செய்து தருவீகைத்தொழும்படி கட்டாயஞ்செய்து வளமையாக்கினார்கள்.

ஆதலால் யெல்லாஜனங்களும் இதின் தவாபை ஆதரவுவைத்து சோம்பிச் சடையாமல்த் தொழுதுவரவேண்டும் இந்தத் தருவீகினுடைய வரிசையைப்பற்றி நமதுநாயகம் முகம்மதுசல்லல்லாகு அலைகிஒசல்லமவர்களுடைய (ஹதீது) அநேகம்வந்திருக்கிறது நம்ம ளியாவரையும் அல்லாகுத்தஆலா சீதேவியான கூட்டத்திற் சேர்த்து தருவீகை நேமமாகக் கொண்டுவரும்படி நல்லுதவிசெய்வாராக ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

இசுராக்குடைய விபரம்.

பஜிறு தொழுதபின் பொழுது கிளம்புகிற வரையிலும் திக்கு
றைக்கொண்டும் தஸ்பீகைக் கொண்டும் பராக்காகிறதும் பொழுது
ஒரு வல்லையப்பிரமாணம் ஆனபின் இரண்டுறக்காஅத்து இசுராக்குத்
தொழுகிறது முஸ்தகப்பு,

தகிய்யத்துல் மஸ்ஜிதின் விபரம்.

பள்ளிக்குட் போனவுடன் (தகிய்யத்துல் மஸ்ஜிது) யென்று யி
ரண்டுறக்காஅத்து நிய்யத்துச்செய்து தொழுகிறது சுன்னத்துயிருக்
கிறதர்க்குமுன் அதைத்தொழுகிறது ஏற்றமாயிருக்கும் இதையொரு
நாளைக்கி யொருவிடுத்தம் தொழுதாலும்போதும் மக்குறூகான ஒக்த்
தில் பள்ளிக்குட்புகுந்தால் அதைத் தொழப்படாதுயென்கிலும் நாலா
ங்கலிமா தஸ்பீகு சலவாத்தை யோதிக்கொள்கிறது முஸ்தகப்பு.

ஒலுவின் தொழுகையுடைய விபரம்.

ஒலுச்செய்து முடிந்தபின் அல்லது குளித்தபின் ஈரம் வுலரமுன்
ஒலுவின் நபிலென்று யிரண்டுறக்காஅத்து நீயத்துச் செய்து தொழுகி
றதுமுஸ்தகப்பு ஆனால் தகிய்யத்துல் மஸ்ஜிது சுக்குறுல்ஒலுவு யென்
னும் யிந்த யிரண்டுதொழுகையும் தனிப்பட்ட தொழுகை யில்லாத்த
தால் பறுலு மற்றுஞ் சுன்னத்துமுதலான தொழுகைகள் இந்தயிரண்
டைத் தொழாதநேரத்தில் பகரமாகிவிடும் இதர்க்காகத்தான் தொழுகி
றநேரத்தைத்தவிர மற்றநேரங்களிற் பள்ளியுட் புகுந்தால் அல்லது ஒ
லுச்செய்தால் இந்த யிரண்டையும் தொழும்படி யேவப்படும் தொழு
கைநேரத்தில் யேவப்படாது.

ளுகாத்தொழுகையின் விபரம்.

அத்தொழுகை முஸ்தகப்பா யிருக்கும் அதின் ஒகுத்தாவது பொழுது வுயர்ந்ததுமுதல் மதியமாகிறதர்க்குக் கொஞ்ச முன்வரையி லாயிருக்கும் அதர்க்குத் தெரிவுதலான ஒக்த்தாவது பகலையில் நாலி லொன்றுக்குப் பின்வரையிலாயிருக்கும் அதில் (ஒஸ்சம்ஸி) யென்கிற சூருவும் (ஒல்லுகா) யென்கிற சூருவும் ஓதவேண்டும் அதில் குறைந் தது யிரண்டு, ஒருசொற்படி நாலு, கூடினது பன்னிரண்டு றக்காஅத்தாகயிருக்கும் ஆனால் யெட்டு றக்காஅத்து மிகவும் வரிசையா யிருக்கும்,

தஸ்பீகுத்தொழுகையின் விபரம்.

அத்தொழுகை நாலுறக்காஅத்து முஸ்தகப்பா யிருக்கும் மக்குறூகான ஒக்த்தைத் தவிர மற்றநேரமடங்கலிலும் அல்லது ஒவ்வொருநாளுடைய பகலடங்கலிலும் இரவடங்கலிலும் ஒருவிடுத்தந்தொழுகவும் யேலாவிட்டால் கிழமையில் ஒருவிடுத்தம் அல்லது மாதத்தையில் ஒருவிடுத்தம் அல்லது வருடத்தி லொரு விடுத்தம் அல்லது வயசி லொருவிடுத்தந் தொழுகவும் அதில் மிகுதமான தவாபுண்டா யிருக்கிறதென்று கதீதுகளில் வருகிறது அதின்விபரமாவது நாலு றக்காஅத்தை நீயத்துச்செய்து தக்குபீறுகட்டி தனுவோதிப்பின் சுப்புகானல்லாகி ஒல்கம்துலில்லாகி ஒலாயிலாக இல்லல்லாகு ஒல்லாகு அக்குபறு(யிரு) விடுத்தம் அதைக் கிறுஅத்திர்க்குப் பின்னும் றுக்கூகிலும் சிறுநிலையி லும் ஒவ்வொரு ஸஜதா அடங்கலிலும் இரண்டு சுஜதிர்க் கிடையிலி ருக்கும்போதும் (ய) விடுத்தம் ஓதவும் ஆனால் றுக்கூகு சுஜது இந் தயிடங்களில் வளமையாக வோதுகிற தஸ்பீகுக்குப் பின்னாலோதவும் இப்படி ஒவ்வொரு றக்காஅத்திர்க்கு (எரு) விகிதம் (கூா) தஸ்பீகு ஓ தி சலாமுக்குமுன்னாலே சலவாத்து ஓதியபின்பு (அல்லாகும்ம யின்னீ

அஸ்அலுக்க தறபீக்க அகுலில்குதா) யென்கிற துஆவையோதிச் சலாஞ்சொல்லவும்.

தகச்சுதுத்தொழுகையின் விபரம்.

அத்தொழுகை சுன்னத்தாக யிருக்கும் அதிற் குறைந்தது இரண்டு றக்காஅத்து நடுத்தரம் நாலுறக்காஅத்து மிகுந்தது யெட்டு றக்காஅத்தாகயிருக்கும் தஹஜ்ஜத்துடைய வரிசை மட்டிடப்படாது இரவையில் விடிய (எஇ) நாழிகையிருக்கும்போது அல்லது (சு)நாழிகையிருக்கும்போது தொழுகிறது மிகவும் ஏற்றமாகயிருக்கும்.

ஸபறுடைய நபில்த்தொழுகையின் விபரம்.

ஸபர் புறப்படும்போது வீட்டில் இரண்டு றக்காஅத்துத் தொழுகிறதும் ஸபறைவிட்டுவந்து சேரும்போது இரண்டு றக்காஅத்துப் பள்ளியில்த் தொழுகிறதும் முஸ்தகப்பு.

தாய்தகப்பன்மீது நபில்த்தொழுகிறதின் விபரம்.

வெள்ளிக்கிழமை இரவையில் மகறிபுக்கும் யெசாவுக்கு மிடையில் இரண்டு றக்காஅத்துத் தொழவும் ஒவ்வொரு றக்காஅத்தில் பாத்திகா ஒருவிடுத்தம் ஆயத்துக் குறுசி பதினையந்து விடுத்தம் குல்குவல்லாஹு பதினைந்துவிடுத்தம் சலவாத்து இருபது விடுத்தம் ஓதித்தொழுது அதின் தவாபை தாய்தகப்பனுக்காக பகுஷுசெய்கிறது முஸ்தகப்பு இப்படிச்செய்தால்த் தாய் தகப்பனுக்குச் செய்யவேண்டிய கடமையை நிறைவேற்றி இருவர்களுக்கும்நன்றிசெய்தவனுவான்இத்தொழுகையின் பெயர் (சலாத்துல்வாலிதைன்) யென்றுசொல்லப்படும்.

தப்பிப்போன தொழுகையை நிறைவேற்றுவதின் பாபு.

தப்பிவிட்ட தொழுகைக்கும் ஒக்த்துத் தொழுகைக்கும் இடையிலும் கலாவான தொழுகை ஒன்றுக்கொன்றுக் கிடையிலும் தர்த்தீபு வாஜிபு அதின்விபரமாவது ஒருமனிதனுக்கு அஞ்சு ஒக்த்துத் தொழுகைவனா கலாவாகயிருந்து ஒக்த்துத்தொழுகை நேரம்வந்துவிடுமானல் அந்தக்கலாவை மீட்டினதின்பின்னல் ஒக்குத்துத் தொழுகையைத் தொழவேண்டும் இன்னம் ஒருமனிதனுக்கு சில தொழுகை கலாவாக யிருக்குமானல் அதைக் கலாச்செய்யும்போது பஜிறு லொக்று அசறு மகறிபு இசா இவ்விதமாக அ...வுடன் தொழவேண்டும்.

இனி வித்துறுத் தொழுகையைத்தவிர தப்பிவிட்ட தொழுகைகள் தான் புலூக்கானதுமுதல் ஆறு ஒக்த்துத்தொழுகை அல்லது அதிகமாகிவிட்டாலும் அல்லது கலாவை மறந்து ஞாபகமில்லாமல் அவ்வொக்த்துத் தொழுகையைத் தொழுதுவிட்டாலும் அல்லது அந்தநேரத்துத் தொழுகைக்குமாத்திரம் ஒக்த்துயிருந்தது கலாவை முந்தியும் ஒக்த்தைப் பிந்தியுந்தொழுதால் நேரத்துத் தொழுகையுந்தவரிவிடுமென்று யிருந்தாலும் கலாவை முந்தி ஒக்த்தைப் பிந்தித்தொழவேண்டும் யென்ற தர்த்தீபு விழுந்துபோய்விடும் ஒருமனிதன் தர்த்தீபு வாஜிபாயிருக்க அந்நேரத்துத் தொழுகையை முற்படுத்தினல் அந்தத் தொழுகைகூடாது:

இனி சிறுபிள்ளை இஷாத்தொழுதபின் செய்த்தான் அறக்கத்துச்செய்து புலூக்காகி பஜிறு ஒக்த்துத் தப்பினபின் முழித்தால் அந்த தொழுகையைக் கலாச்செய்கிறது அவன்பேரில் வாஜிபாயிருக்கும்.

(பின்னர்) ஒக்த்தைவிட்டுத் தங்கடமன்றியே தொழுகையைப் பிற்படுத்துவது பெரும்பாவமாயிருக்கும் அதைக் கலாச்செய்கிறது கொண்டு அந்தப்பாவநீங்காது யென்கிலும் அதைக்கலாச்செய்தபின் தௌ

பாச்செய்கிறதுகொண்டும் அல்லது ஹஜ்ஜு செய்கிறது கொண்டும் அந்தப்பாவ நீங்கிவிடும் ஆதலால் ஒக்குத்தைவிட்டுத் தொழுகையைப்பிற்படுத்தாமல் அதின்பேரில் மிகவும் ஞாபகத்துடன் பேணுதலாய்க்கொண்டுவரவேண்டும்.

கலாத்தொழுகைக ளிருந்தால் வுண்பனே திண்பனே மலஞ்சலம் இவைகளுக்குப் போகிறநேரமும் மிகவும் மிஸ்கீனுகயிருந்தால் அவன் காலட்சேபங் களிக்கிறதர்க்காக வுள்ள நேரமுந்தவிர ஹறுமான நேரமுந்தவிர மற்றநேரங்களிலெல்லாம் கலாவை நிறைவேற்றவேண்டியது கடமையாயிருக்கும்.

ஒருமனிதன் ஒரு ஒக்த்து இரண்டுஒக்த்துத் தொழுகை கலாவிருக்க மவுத்து முடுகிவிட்டால் அவன் அத்தொழுகைகளுக்குத் தெண்டமாக பிதியாக்கொடுக்கும்படி ஒசியத்துச்செய்கிறது வாஜிபு அவன்மவுத்தானல் அவன் முதலில் மூன்றிலொருபங்கையெடுத்து வித்துறுத் தொழுகையுள்பட ஒவ்வொரு தொழுகைக்கும் ஒவ்வொரு நோன்புக்கும் (அரை) மரக்கால்மணிக் கோதும்பைவிகிதம் சதக்காக் கொடுக்கவேணும் நமதுதேசத்தில் சுமார் பட்டணம்படிக்கு (ஒண்ணெயரைக்கால்படி) நல்ல மணிக்கோதும்பையின் கிரையங் கொடுக்கப்படும் அவன் ஒசியத்துச் செய்யாவிட்டால் அவனுடைய அனந்தரக்காரர்கள் இப்பிரகாரங் கொடுக்கிறது முஸ்தகப்பாயிருக்கும்.

இப்படிப் பிதியாக்கொடுத்தால் அல்லாநாடினல்க் கலாத்தொழுகையின் குற்றத்தைப் பொறுத்துக்கொள்வான் சதக்காவுடைய தவாபு சந்தாபமன்றியே கிடைக்கும்

குறுஆனில் யாராவது ஒருமனிதன் நல்ல அமலை அணுவளவாவது செய்தால் அதின் தவாபைப்பெற்றுக்கொள்வான் யென்றும் கெட்ட அமலை அணுவளவாவதுசெய்தால் அதின்கெடுதியைக் கண்டுகொள்வானென்றும் அல்லாகுத்த ஆலா திருவுளம்பற்றினுன்.

ஜுமுஆநாளின் அதபுகள் வரிசைகளுடைய பயான்.

ஜுமுஆவுக்காகக் குளித்து மணம்பூசுகிறதும் நல்ல அழகாகிய கலாலான பிடவைகள் வுடுத்துகிறதும் நகங்களை அறுக்கிறதும் தலைமுடி இறக்கிறதும் பள்ளிக்குள் ஊதுபத்திமுதலான வாசங்களைப் புகைக்கிறதும் ஜுமுஆவுக்காகக் காலைநேரத்தில் போகிறதும் கத்தீபு வருகிறவரைக்கும் இபாதத்துச்செய்துகொண்டிருக்கிறதும் சுன்னத்து (ஆனால்) ஜுமுஆ ஹஜ்ஜுக்கொப்பாக யிருப்பதால் தொழுதபின் தலைமுடி இறக்கிறது நல்லதென்று சில இமாம்கள் சொல்லி யிருக்கிறார்கள் சூறத்தில் கஹபு ஓதுகிறதும் வீண்பேச்சுப் பேசாமல் அதபோடிருக்கிறதும் ஜுமுஆத் தொழுதுமுடிந்து பேசமுன் சூறத்துல் பாத்திகாவும் குல்குவல்லாகு குல்அகூது பிறப்பில்பலக்கு குல்அகூது பிறப்பின்னாசு யென்ற மூன்றுசூறத்தையும் யெவ்வேழுவிடுத்தம் ஓதினால் அந்த ஜுமுஆத்தொடுத்து அடுத்த ஜுமுஆவரையில் அவனை ஷெய்த்தானை விட்டுங் கார்மான மாக்கப்படும்.

ஹதீது.

ஜுமுஆவுடைய நாளாகிறது இரண்டு பெருநாளைக் காணவும் மற்றநாட்க ளடங்கலைக்காணவும் ஏற்றமாயிருக்கும் அந்தநாள்த்தொழுகை அவன்பேரிற் கடமையாயிருக்கும் யாராகிலும் ஒரு மனிதன் தங்கடமன்றி விடுவானேயானால் அவன் கருமத்தில் பறக்கத்தில்லை அவனுக்கு ஹஜ்ஜுடைய பலனுமில்லை சதக்காவுடைய நன்மையுமில்லை தொழுகையுடைய வரிசையுமில்லை அல்லாகுத்தஆலா யென்ஷபாஅத்தை அவனுக்குக் கொடுக்கமாட்டான் அவன் இபாதத்தை அல்லாகுத்தஆலா ஒப்புக்கொள்ளமாட்டான் யென்றும் ஜுமுஆவாகிறது பக்கீறுகளுக்கு ஹஜ்ஜாகவும் மிஸ்கீன்களுக்குப் பெருநாளாகவு மிருக்கு மென்றும் நபிநாயகம் முகம்மதுசல்லல்லாகு அலைகி ஒசல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினார்கள்.

ஹிக்காயத்து.

மைசறத்திபுனு செலீசு றகுமதுல்லாகி அலைகிஅவர்கள் ஒருகப றுஸ்தானுக்குப் போய் கபுருளிகளுக்குச் சலாஞ் சொன்னார்கள் அப்போது ஒரு கபுறிலிருந்து ஒருவரெழும்பி இவர்களைப்பார்த்துத் துன்யாவுடையவர்களே நீங்கள் மாதமொன்றுக்கு நாலு ஹஜ்ஜுச் செய்கிறீர்கள் வுங்களுக்கே சுபசோபனமென்றார் அப்போது இவர்கள் அப்படி நாங்கள் எங்கே நாலுஹஜ்ஜுச்செய்கிறோமென்று கேட்டார்கள் அதற்கு அந்த கபுருளி சொல்லுகிறார் நீங்கள் ஜும்ஆவுக்குப் போகிறீர்களே அதாகிறது கபூல்ச்செய்யப்பட்ட ஹஜ்ஜென்று அறியமாட்டீர்களோ வென்றுசொன்னார்கள்.

ஹிக்காயத்து.

தைய நூறியென்கிறவர்கள் அவுசாயி றகிமகுல்லா அவர்களைத் தொட்டும் பேசிவருகிறார்கள் அதாவது யெங்களிடம் ஒரு வேட்டைக்காரனிருந்தான் அவன் ஜும்ஆநாளையில் வேட்டைக்குப்போனதில் அவனையும் அவனுடைய கோவேறுகழுதையையும் பூமியில் சுரிய வாங்கப்பட்டது அதைப்போய்ப் பார்க்கும்போது அவனுடைய கோவேறு கழுதையின் காதும் வாலுந்தவிர மற்ற வுறுப்புகளையெல்லாம் பூமி விழுங்கியிருந்தது இதைமனிதர்கள்பார்த்து இந்தமனிதன் ஜும்ஆத்தொழுகையை விட்டுவிட்டதினால் இந்த அதாபு துன்யாவில்நேரிட்டதென்று மனக்கவலையுற்றார்கள்.

ஹிக்காயத்து

இபுனு அபீசைபா முஜாகிதென்கிறவரைத்தொட்டுஞ் சொல்லுகிறார்கள் சிலமனிதர்கள் வெள்ளிக்கிழமைபன்று ஜும்ஆநேரம் வந்தகின்பேரில் ஸபர் புறப்பட்டுப்போனார்கள் அவர்கள் போய்த் தங்கினவிடத்தில் ஆகாயத்திலிருந்து நெருப்பிறங்கி யவர்களைக்கரித்துவிட்டது.

ஹதீது

தஸ்வி யத்துல் அவதுமென்னுங் கித்தாபில் வந்திருக்கிறதாவது அல்லாகுத்தஆலா நபிஆதம் அலைகிஸ்ஸலா மவர்களைப் படைக்கிறதைப்பற்றி மலக்குகள் தர்க்கித்தவுடன் அவர்களின்பேரில்க் கோபமானுன் ஆண்டவன் கோபமானதைப்பயந்து அவர்கள் அறுஷை யேழுதவணைசுற்றினார்கள் அப்போது பூமியில் ஒருவீட்டைக்கட்டும்படி அவர்களுக்கு உத்திரவுசெய்து அதைச் சுற்றிவாருங்கள் நீங்கள் தர்க்கித்ததை மன்னிக்குறேன் யென்றுசொல்ல பூமியில் கருபத்துல்லாவைக்கட்டி அதை தவாபுசெய்தார்கள் அப்பால் நபி நூகு அலைகிஸ்ஸலா மவர்களுடையகாலத்தில் வாந்தப் பெருவெள்ளம் வந்தபோது நாலாம்வானத்தில் அந்த கஃபாவைக் கொடுபோய் வைக்கப்பட்டது அப்பால் அதின் வலதுபாகத்தில் ஒரு மனுருவை யுண்டாக்கப்பட்டது அந்தப் பள்ளிக்குப் பைத்துல் மகுமூறென்று பெயர்வைத்தான் அந்தமனுருவின் வுயரம் அன்னூறுவருடத்திய அடிப்பாடுண்டும் ஜும்ஆநாள் வந்தவுடன் அந்த மனுருவின்பேரில் ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்கள் யேறி பாங்குசொல்லுவார்கள் இசுறுபீல் அலைகிஸ்ஸலாமவர்கள் அந்தப் பள்ளிமின்பர் மேலேறிக் கொத்துபா ஓதுவார்கள் மீக்காயீல் அலைகிஸ்ஸலா மவர்கள் யெல்லாமலக்குகளுக்கும் இமாமத்துச்செய்வார்கள் தொழுகையைவிட்டும் அவர்கள் பராகானவுடனே ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்கள் நான் பாங்குசொன்னதர்க்காகக் கிடைக்கிற தவாபு முழுமையையும் பூலோகத்தில் ஜும்ஆவுடையநாளில் முசுலீம்களில் பாங்கு சொன்னவர்களுக்கு நான் கதியாச்செய்துவிட்டேனென்று சொல்லுவார்கள் அப்பால் இசுறுபீல் அலைகிஸ்ஸலாமவர்கள் நான் கொத்துபா ஓதினதர்க்காகக்கிடைக்கிற தவாபு முழுமையையும் பூலோகத்தில் கொத்துபா ஓதினவர்களுக்கு நான் கதியாச்செய்து விட்டேனென்று சொல்லுவார்கள் மீக்காயீல் அலைகிஸ்ஸலாமவர்கள் நான் இமாமத்துச் செய்ததர்க்காகக் கிடைக்கிற தவாபு முழுமையும் பூலோகத்தில் இமாமத்துச்செய்தவர்களுக்கு நான் கதியாச் செய்துவிட்டேனென்று சொல்லுவார்கள்.

முக்த்ததியாய் நின்று தொழுத மலக்குக ளடங்கலும் நாங்கள் இமாமுக்குப் பின்னின்று தொழுததர்க்காகக் கிடைக்கிற தவாபு முழுமையும் பூலோகத்தில் இமாமுக்குப்பின் முக்த்ததியாய் நின்று தொழுதவர்களுக்குக் கதியாச் செய்துவிட்டோமென்று சொல்லுவார்கள் அப்போது அல்லாகுத்தஆலா அந்த மலக்குக ளடங்கலையும் பார்த்து ஆய் மலக்குகளே நீங்கள் சகாவத்தை வெளியாக்கிவிட்டீர்கள் ஆதலால் பூலோகத்தில் ஜும்ஆத்தொழுத ஜனங்களுடைய பாவங்க ளடங்கலையும் திடனாக நான் பொறுத்துவிட்டேனென்று சொல்லுவான் இதடங்கலும் நபிமார்களுக்கெல்லாம் நாயகமாகவும் கிரீடமாகவும் விளங்காநின்ற நமது ஆண்டவர்கள் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிஉசல்லமவர்களுடைய உம்மத்துகளாகிய நம்மவர்களுக்குச்சொந்தமானதாக யிருக்கும் முன் சென்றுபோன நபிமார்களுடைய உம்மத்துகளுக்கு இவ்விதமான சிறப்பாகிய வரிசைகளில்லை அல்லாகுத்தஆலா நம்ம ளியாவரையும் ஜும்ஆமுதலான தொழுகைகளைத் தவரவிடாமற் றரிபாடாகக்கொண்டுவந்த மூமினான ஜனங்கள் கூட்டத்திற்சேர்ப்பானாக ஆமீன்.

ஜும்ஆத்தொழுகையின் பாபு ஜும்ஆவின் குக்குமுகள்,

அதில் பறுலு (இரண்டு) றக்காஅத்து சுன்னத்து முந்தி(நாலு) பிந்தி (நாலு) றக்காஅத்தாகயிருக்கும் அத் தொழுகை விதியாகிறதர்க்கு அக்கலும்புலூகுந்தவிர (௬) காரியத்தைச் சறுத்தாக்கப்படும் அதாவது ஆண்பிள்ளையாக யிருக்கிறதும் நாட்டாளுன்மகனாகயிருக்கிறதும் பட்டணத்தில் முக்கீமாகயிருக்கிறதும் சுவாத்தியமாயிருக்கிறதும் இரு கண் குருடன்றிக் கண்தெரிந்தவனா யிருக்கிறதும், நடந்துபோகத் திராணி யுண்டாயிருக்கிறதும், அநீதக்காரனைவிட்டு மச்சந் தீர்ந் திருக்கிறதும், கடிசாகிய மழை சேறு இல்லாதிருக்கிறதும், சிறைச்சாலையி லில்லாமலிருக்கிறதுமாம்.

இனி ஜும்ஆ துறுஸ்தாகிறதர்க்கு (எ) காரியத்தைச் சறுத்தாக்கப்படும் அதில் (முதலாவது) பட்டணம் அல்லது பட்டணத்துடை

ய முத்தவெளியிலா யிருக்கிறது பட்டணமென்பது ஒரு வூரா யிருக்கும் அதிலுள்ள பள்ளிகளில் ஒரு பெரிய பள்ளியில் ஜும்ஆ வாஜிபான சனங்க ளடங்கலும் அதில்க் கூடித் தொழுதால் இடங்கொள்ளாம லிருக்கிறது அப்பேர்க்கொத்த வூரைப் பட்டணமென்றுசொல்லப்படும் (ஆனால்) சந்தைக்கடைகள் வுண்டாகிய பெரிய சிற்றூரில் ஜும்ஆப்பள்ளிகட்டி ஜும்ஆத் தொழும்படிக்கு காலி வுாக்கீம் வுத்தரவு செய்தால் ஜும்ஆக்கூடும் அப்படிக்கில்லாத்த சிற்றூர்களில் ஜும்ஆத் தொழுதால் லொகறையுந் தொழவேண்டியது அவர்கள்பேரில் வாஜிபாயிருக்கும்.

(உ-வது) சுல்த்தான் அல்லது சுல்த்தானுடைய ஆள் அதிகாரி யுண்டாயிருக்கிறது (ஆனால்) காபிர்களுடைய கையின்கீழிருக்கிற பட்டணங்களில் சுல்த்தானை சறுத்திடுகிறது வாஜிபல்லை யென்கிலும் அந்தப் பட்டணங்களி லுள்ளவர்கள் ஒரு காரியஸ்தனைத் தெண்டித்துத் தேடி நேமிக்கப்படுகிறது வாஜிபு யெல்லோரும் சம்மதமாய் ஒருமனிதனை காலியென்று நேமிதப்படுத்தினால் அவர் காலியாகிவிடுவார் அத்தேசங்களில் ஜும்ஆக்களையும் பெருநாள்த் தொழுகைகளையும் கொண்டு செலுத்தவேண்டும்.

(௩-வது) லொகறுடைய வக்த்தாயிருக்கிறது (௪-வது) அந்தவக்த்துக்குள்ளே கொத்துபா ஓதித் திருகிறது இரண்டு கொத்துபா வோதுகிறதும் இரண்டுக் கிடையில் மூன்று ஆயத்துடைய நேரந் தரிபடுகிறதும் துப்புரவாக யிருப்பதும் அவுறத்தை மறைக்கிறதும் நின்று ஓதுகிறதும் சுன்னத்தாக யிருக்கும்.

(ரு-வது) கொத்துபாவை ஜும்ஆமுடிகிற ஜமாஅத்துடைய முகதாவில் தொழுகைக்கு முன்னாலே ஓதிமுடிக்கிறது.

(சு-வது) ஜமாஅத்து வுண்டாயிருக்கிறது அதில்க் குறைந்தது இமாமைத்தவிர மூன்று ஆண்பிள்ளைகளா யிருக்கும்.

(எ-வது) அப்பள்ளியில் எல்லோருந் தொழும்படி உத்திரவுகொடுக்கப்பட்டிருக்கிறது.

(இனி) தங்கடமானவனும் சிறைச்சாலையி லிருக்கிறவனும் முஸாபிராயிருக்கிறவனும் ஜும்ஆநாளையில் பட்டணத்தில் லொகறை ஜமாஅத்தோடு தொழுகிறதும் மக்றூகு தகுறிமா யிருக்கும்.

(இனி) இமாம் மின்பறில் யேறிவிட்டால் கொத்துபா முடிகிறவரையில் தொழுகிறதையும் பேசுகிறதையும் நிறுத்திக் கொள்ளவும் தொழுகையிற் செய்யத்தகாத செயலடங்கலும் கொத்துபாவிலுஞ் செய்யத்தகாது யென்கிலும் கொத்துபாவைக் கேட்கிறதும் வாய் மூடிக் கொள்கிறதும் வாஜிபாயிருக்கும் இதில் முந்தின சப்பிலிருக்கிறவனுக்கும் தூரத்தி லிருக்கிறவனுக்கும் இடையில் வித்தியாசமில்லை யிமாம் குத்துபா ஓதும்போது பேசினவர்களுக்கு ஜும்ஆக் கூடாதென்று கதிதில் வருகின்றன.

(இனி) மோதின் முந்தின பாங்கைச் சொன்னவுடன் வியாபாரம் கொடுக்கல் வாங்கல் முதலான செய்கை யடங்கலையும் விட்டு ஜும்ஆவுக்கு வரவேண்டியது வாஜிபாயிருக்கும் ஆனால் அதபும் ஒடுங்குதலுமாய்ச் சங்கையுடன் காலால் நடந்துவருவது ஏற்றமாயிருக்கும் பாங்கு சொன்னதின்பின்னால் துன்யாவுடைய அமல் பார்க்கிறது தொழுது தீறுகிறவரை ஹறாமாயிருக்கும் பள்ளிவாசலுக்கு அருகே வந்தவுடன் (அல்லாகும்மஜ் அல்னீ மின்அக்ற பிமந்தக்கற்றப இலைக்க) யென்றுஓதவும் கொத்துபா காதுக்குக் கேட்கும்படி இமாமுக்கு சமீபத்தி லிருக்கிறது ஏற்றமாயிருக்கும் இமாம் மின்பறில்யேறினவுடனே மோதின் இரண்டாம் பாங்குசொல்லிக் கத்தீபு கொத்துபா ஓதியபின் இக்காமத்துச்சொல்லி ஜனங்கள் இமாமுடன் எல்லோரும் ஜும்ஆவுடைய பறுலு இரண்டு றக்காஅத்துத் தொழவேண்டும்.

இனி யொருபட்டணத்தில் பல யிடத்திலும் ஜும்ஆத்தொழுகிறதாகும் இது பத்துவாவான சொல்லாகயிருக்கும் ஒரு சொற்படி முந்தின கொத்துபமாத்திரம் கூடுமென்று வந்திருப்பதால் கொத்துபா முந்தினது சந்தாபமாகிவிட்டால் பிந்தின சுன்னத்து ஜும்ஆ நாலுறக்காஅத்துத் தொழுதபின் ஆகிறு லொகறென்றும் ஆகிறு பறுலென்

றும் நீயத்துச்செய்து நாலு றக்காஅத்துக்கும் சூறு பாத்திஹாவோதி தொழுதபின்பு சுன்னத்துல் ஒக்த்தென்று நீயத்துச் செய்து இரண்டு றக்காஅத்துத் தொழவேண்டும் பட்டண மென்கிறதில் சந்தாபமுள்ள வூர்களிலும் இப்பிரகாரமே தொழவேணும் மின்பரின்பேரில் கத்தீபு எறினதுமுதல் கொத்துபாத்தொழுது தீருகிறவரை துஆ மக்பூலாகிற ஒரு சாஅத்துநேர முண்டாயிருப்பதால் கல்பால் துஆச் செய்யவேண்டும் இன்னமொரு சொற்படி துஆ மக்பூலாகிறநேரம் அன்றுஅசறென்றும் வந்திருப்பதால் அந்தநேரமும் துஆச்செய்யவேண்டும்.

இரண்டு பெருநாளின்பாபு.

இரண்டு பெருநாள்த்தொழுகையும் ஜும்ஆ விதியான ஜனங்கள் பேரில் ஜும்ஆவுடைய சறுத்துகளில் குத்துபாவைத்தவிர மற்றசறுத்துகளைக்கொண்டு வாஜிபாயிருக்கும் ஜும்ஆவில் கொத்துபரசறுத்தாகயிருக்கும் பெருநா ளிரண்டிலுங் கொத்துபா சுன்னத்தாகயிருக்கும்,

(இனி) பித்துருடைய நாளென்னும் நோன்புப்பெருநாளில் தொழுகைக்குப் போகுமுன் மதுரமான கனிகளை யொன்றுபடத்தின்னுவதும் மிசுவாக்குச் செய்வதும் குளிக்கிறதும் மணம்பூசுகிறதும் மிகவு மழகான வுடைகள் வுடுக்கிறதும் சதக்காப் பித்று வாஜிப்பானவர்கள் ஈதுத் தொழுகைக்குப்போகுமுன்கொடுக்கிறதும் ஈதுகா வென்னும் பெருநாள்க் கொத்துபாப்பள்ளிக்கு [illegible]லேநேரத்தில் காலால் நடந்து போகிறதும் முஸ்தகப்பாயிருக்கும்.

பாதையில் [illegible]யமாகத் தக்பீறுசொல்லிக்கொண்டு போகலாம் இமாம தொழுகையை யாரம்பஞ் செய்தால்த் தக்பீறு சொல்லுவதை நிறுத்தவேண்டும் ஆனல் அறிவில்லாமல் இரைந்துசொல்லுகிறவர்களை விலக்கப்படாது பெருநாள்த் தொழுகைக்குமுன் முசல்லாவிலும்வீட்டிலும் நபில்த்தொழுகிறது மக்குறூகு பெருநாள்த் தொழுகை தொழுதபின் முசல்லாவில் நபில்த்தொழுகிறது மக்குறூகு வீட்டில்த் தொழுகிறது முஸ்தகப்பா யிருக்கும் அவாமென்னும் படியாத ஜனங்

கள் நன்மையானவிஷயங்களில் அவட்கை சொற்பமாகவைப்பதால் அவர்கள் ஈதுத் தொழுத பின்னும் முன்னும் நபில்த் தொழுதால் விலக்கப்படாது (அத்தொழுகையின் ஒக்த்தாவது) பொழுது உதயமாகி ஒரு வல்லியப் பிரமாணத்துக்கு வுயர்ந்ததில்நின்றும் மதியமாகிறவரையிலாயிருக்கும்.

ஆனால்த் தொழுகையி லிருக்கும்போது சூரியன் உச்சியில் வந்துவிட்டால் தொழுகைகூடாது அத்தொழுகையை அந்த ஒக்த்தைவிட்டும் பிற்படுத்தினால்ப் பாவியாவார்கள் ஆனால் அடை மழையால்த் தொழுகயேலாமல் தவரிவிட்டால் அல்லது பிறைமேகத்தால்த் தெரியாமல் மதியமானபின் அன்று பிறையென்றும் அல்லது தொழுகதொழுகை பசாதென்றும் வெளியானால் நோன்புப்பெருநாள்த் தொழுகையை மறுநாள் மதியத்திர்க்குமுன் தொழுகிறதும் முன்சொன்ன தங்கடத்திர்க்காக கச்சுப்பெருநாள்த் தொழுகையை மூன்று நாள் வரையிலுந் தொழுகிறது ஆகும்.

அத்தொழுகையின் ஒழுங்காவது.

இமாம் ஜமாஅத்துடனே நிய்யத்துச்செய்து தக்குபீறு கட்டி கனாவோதி (மூன்று) தக்குபீறு ஒவ்வொரு தக்குபீறுக்குங் கையை யுயர்த்திக் கையைக் கட்டாமல் நாளவிட்டு (மூன்று) தஸ்பீகுநோ மின்றுமெல்லோர்களுஞ் சொல்லி இமாம் அஊது பிசுமில்லா பாத்திகாவோதி (ஸப்பிஹிசும) யென்கிற சூறத்தையோதி ஒரு றக்காஅத்துத் தொழுது இரண்டாம் றக்காஅத்திர்க்கு நிலையில் வந்து பிசுமில்லா பாத்திகா (ஹல்ஹத்தாக்க) யென்கிற சூறத்தை யோதவும் இப்[illegible] ஜும்ஆவிலும் ஈதிலும் ஓதுகிறது முஸ்தகப்பு யென்கிலும் பறுலான தொழுகையில் குறிப்பாக யெப்போதும் கட்டாயமாய் ஒரு சூறத்தை யோதி வருகிறது மக்குறூகாகயிருப்பதால் இந்த இரண்டிலும் மிகுந்த காலத்திர்க்கு வோதினால்ப்போதும் பின்பு றுக்கூகுக்கு முன் (மூன்று) விடுத்தங் கையையுயர்த்தி முன்போல தக்குபீறுசொல்லி றுக்கூகுக் தக்

குபீறுக்குக் கையையுயர்த்தாமல் றுக்கூகுசெய்து தொழுகையைமுடித்தபின் இமாம் மின்பறில்யேறி இரண்டுகொத்துபாவோதவேண்டும்.

(இனி) ஈதுல் அலுகாவென்னும் ஹஜ்ஜுப் பெருநாள்த் தொழுகையாகிறது நோன்புப்பெருநாள்த் தொழுகையைப்போலா யிருக்கும் ஆனால் ஒலுகியாக் கொடுக்காதவனு யிருந்தாலும் கொடுக்கிறவனுயிருந்தாலும் தின்னுதலைத் தொழுகைக்குப் பிற்படுத்துவது முஸ்தகப்பு தின்னுகிறது மக்றூகல்லை பாதையில் இரைந்து தக்குபீறுசொல்லிக்கொண்டு போகிறதாகும் பின்னும் அறபாவென்னும் ஒன்பதாம் நாள் பஜிறிலிருந்து பதிமூன்றும்நாள் அசறுவரை கூடிய (உ௩) வக்திலும் அந்தந்த நேரத்தின் பறுலுத் தொழுகை தொழுதவுடனே ஆண்பிள்ளைகள் இரைந்தும் பெண்பிள்ளைகள் மெள்ளவும் தக்குபீறுத் தவ்ஷீக்கு ஒவ்வொரு விடுத்தஞ் சொல்லுகிறது வாஜிபு ஒவ்வொருவிடுத்தத்தைக்காண அதிகமாக்கிறது முஸ்தகப்பு அதாவது (அல்லாகு அக்குபற் அல்லாகு அக்குபற் லாயிலாக யில்லல்லாகு வல்லாகு அக்குபறு அல்லாகு அக்குபறு வலில்லாகில்கம்து) யென்பதாம் பெருநாள்த்தொழுகைக்குப்பின் தக்குபீறு சொல்லுகிறது குற்றமல்ல தக்குபீறுத்தஷ்ரீக்கை இமாம் விட்டுவிட்டாலும் ஜனங்கள் சொல்லவேண்டும்.

சதக்கா ப[illegible]றுவின்பயான்.

ஒரு முசுலிமான நாட்டு[illegible]மகனுகிய மனிதனுக்கு அகத்தியமான செலவுகளைவிட்டும் மேல் [illegible]சமாகிய ஸக்காத்தின் நிறிபந்தனு யிருந்தால் அவனுக்கும் அவ[illegible] சிறுபிள்ளைகளுக்கும் அவன் வேலைக்குடைய அடிமைகளுக்கும் கணக்கிட்டு பித்துருக் கொடுக்கிறது வாஜிபு அவனுக்கு ஸக்காத்துமுதல்வந்து வருடந் திகையவில்லையானாலுஞ் சரி.

இனி பெண்சாதிக்காகவும் பெரியபிள்ளைகளுக்காகவும் வியாபாரமாக வைத்திருக்கிற அடிமைகளுக்காகவும் இவன் ஸதக்காப்பித்ருக் கொடுக்கிறது வாஜிபில்லை கொடுத்தால் நலமாம் யென்கிலும் பெண்சா

திற்கும் பெரிய பிள்ளைகளுக்கும் சக்காத்து வாஜிபானசொத்திருந்தால் தங்கள் தங்கள்பேரில் வாஜிபு சிறு பிள்ளைகள்பேருக்கு சொத்திருந்தால் அச்சொத்திலிருந்து அந்தப்பிள்ளைக்காக சதக்காப் பித்ருக் கொடுக்கப்படும்.

(இனி) பித்ருவென்பது பேரீத்தம்பழத்தில் அல்லது தொலிக் கோதும்பையில் ஒருமரக்கால் அல்லது மணிக்கோதும்பையில் அரை மரக்கால் கொடுக்கவேணும் ஆனால் இவைகளின்விலையை கொடுக்கிறது யேற்றமாயிருக்கும் ஒரு மரக்காலென்பது இந்நாட்டில் இந்நேரம்வ ளங்கிற பட்டணம் பக்காப்படி (உவ) கொண்டதா யிருப்பதால் விதப்படி கணக்குப்பார்த்துத் தனக்கும் தன்பிள்ளைகளுக்கும் அதின்கிரா யத்தைப் பந்துகளின் மிஸ்கீனுக்காவது மற்ற யெந்த மிஸ்கீனுக்காவது கொடுக்கவும் அந்த பித்ருவைக் கொடுக்காவிட்டால் அவன் பிடித்த நோன்பு வானத்திற்க்கும் பூமிக்கு மிடையில்க் கொழுகப்பட் டிருக்கு மென்றும அல்லாகுத்தஆலா அந்த நோன்பைக் கபூலாக்கமாட்டானெ ன்றும் நோன்பாளி நோன்புட னிருக்குங்காலத்தில்ச் செய்த வீண்வே லை வீண்பேச்சுமுதலிய குற்றங்களுக்குத் தெண்டகுற்றமென்றும அ வைகளைவிட்டு துப்புரவாக்குமென்றும் நமது நாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிஒசல்லமவர்கள் கதீதில்திருவாய்மலர்ந்தருளினார்கள்,

(இனி) அது வாஜிபாகிற [illegible]து நோன்புப் பெருநாள்க்கிழக்கு வெளுத்தவுடனேயா யிருப்பதால் கிழக்கு வெளுக்கிறதர்க்கு முன் குழந்தை பிறந்தாலும் ஒரு மனிதன் இசுலாத்தில் வந்தாலும் அவர்களுக்காகப் பித்ருக் கொடுக்கவேண்டியது வாஜிபு கிழக்கு வெளுக்குமுன் ஒருமனித னிறந்தாலும் ஒரு குழந்தை கிழக்கு வெளுத்தபின் பிறந்தாலும் வாஜிபில்லை பித்ருவை கிழக்குவெளுத்தபின் முசல்லாவுக்குப் போகுமுன் கொடுக்கிறது முஸ்தகப்பு.

இனி மிகுந்தபேருடைய சதக்காவை ஒருமிஸ்கீனுக்குக் கொடுக்கிறது ஆகுமாகிறதுபோல் ஒரு மனிதனுடைய சதக்காவை மிகுந்த பேருக்குக் கொடுக்கிறது ஆகும் யென்கிலும் பிற்படுத்துவது மக்குறூ

கா யிருப்பதுபோல் ஒரு மனிதனுடைய சதக்காவை மிகுந்தபேருக்கு க்கொடுக்கிறது மக்குறூகு தன்சீகு ஆனால் காபிருக்குக் கொடுக்கப்படாது.

உலுகிய்யாவின் பயான்·

அதாவது ஹஜ்ஜுப்பெருநாளையில் பித்ரு வாஜிபாகிய சீமான் தனமுள்ள முக்கீமாகிய முசிலிமான நாட்டான்மகன்பேரில் பத்தாவது நாள் கிழக்கு வெளுத்ததின்பின்பு வாஜிபாகும் அவன் தன்னைத்தொட்டும் தன் மக்களைத்தொட்டும் ஆளொன்றுக்கு ஒரு கிடாய்விகிதம் அறுத்துக் கொடுக்கவேண்டும் இன்னமொருசொற்படி அவனுக்குமாத்திரம் ஒரு கிடாய் அறுத்துக்கொடுத்தால் போதுமென்றும் வந்திருக்கிறது அதர்க்குப்பின் இரண்டுநாள்வரையுங் கொடுக்கிறது ஆகும் இந்தமூன்றுநாளில் முதனாள்க் கொடுக்கிறது மிகவும் வரிசை மூன்றுநாளுந் தவரிவிட்டால் வுலுகிய்யாவின் கிறயத்தை அல்லது வாங்கியிருந்த ஆட்டை சதக்காக்கொடுக்கவும்.

சிறுபிள்ளை சீமானுகயிருந்தால் அவன் முதலிலிருந்து வுலுகிய்யாக் கொடுக்கவேண்டும் பட்டணத்திலுள்ளவர் வுலுஹிய்யாவைப்பெருநாட் டொழுகைக்கு முன் அறுக்கிறது ஆகமாட்டாது பட்டிக்காட்டிலுள்ளவர்கள் பத்தாநாள் கிழ[illegible]கபின் அறுத்துக்கொடுக்கலாம் (வுலுஹிய்யாக் கொடுக்கிறது) பெருங் கொம்புள்ளதாகவும் வுறுப்புகளிற் குற்றங் குறை [illegible]லாத்ததாகவும் கண் விஸ்தீனமானதாகவும் அழகானதாக[illegible] பெரிதானதாகவும் கொழுத்ததாகவும்வுள்ள கிடாயைத் தெரிந்து கொடுக்கவேண்டும் கிடாயில் ஒரு கண் குருடு இரு கண் குருடு சொரி பிடித்தது மெலிந்தது நடக்கயேலாத்தது நொண்டியானது காது கால் கண்ணிமைகளில் மிகுதம் யெடுபட்டுப் போனது பல்லில்லாத்தது இவ்விதமான கிடாயை வுலுஹிய்யாக் கொடுக்கலாகாது.

ஆனால் மோளைவினை யடித்தது பைத்தியமானது இவைகளைக் கொடுக்கிறது ஆகும். வுலுஹிய்யாக் கொடுக்கிறதர்க்கு ஒருவருடைத்தெச

ன்ற கிடாயா யிருக்கவேண்டும் யென்கிலும் செம்மறிக்கிடாயில் ஆறு மாதஞ் சென்றதா யிருந்தாலும் போதுமானதா யிருக்கும் வுளுகிய்யா இறைச்சியைத் தான் தின்னுகிறதும் சீமான்களுக்குக் கொடுக்கிறது மாகும் ஆனால் மூன்றிலொருபங்குக்குக் குறையாமல் மிஸ்கீன்களுக்கு சதக்காக் கொடுக்கவேண்டும் நேத்திக்கடனால் வாஜிபான வுளுகிய்யா விற் றான் தின்னுகிறதும் சீமான்களுக்குக் கொடுக்கிறது மாகாது.

இனி வுளுஹிய்யாவின் தோலையுஞ் சதக்காக் கொடுக்க வேணும் அல்லது வீட்டுக்கு யேத்தனமாகச்செய்து பலிமாறுகிறது மாகும் வி லைக்கு விற்கிறது ஆகமாட்டாது வுளுஹிய்யாவை அறுக்கத்தெரிந்தவ னுயிருந்தால் தன்கையால் அறுத்துக்கொடுக்கிறது மிகவும் வரிசையா யிருக்கும் வுளுஹிய்யாவின் கிடாயை மெல்லினமாகஇழுத்துக்கொண் டுவந்து வுளுஹிய்யாவைக் கொண்டு தனக்குப் பிதியாவாக அல்லாகு த்தஆலாவுக்குக் கலப்பறுதலாய்க் கொடுக்கிறதை நீய்யத்துச் செய்து அதைக்கொண்டு கிபுலாவுக்கு முன்னேக்கி (அல்லாகும்ம ஹாதிஹி மின்க ஒலக்க பிசுமில்லாகி அல்லாகு அக்குபற்) யென்று சொல்லிக் கூர்மையான கத்தியைக் கொண்டு அறுக்கவேண்டும் அதன்பின் (அல் லாகும்மத்தகப்பல் ஹர்மின்னீத முஹாபிதமீ கமாத்தகப்பல்த்தமின்க லிலீக்க இபுறுகீம ஒஹபிபிக்க முகம்மதின் சல்லல்லாகு அலைகிமா ஒச ல்லம் அல்லாஹு-ம்மஜ் அல்ஹாபிதா அல்லீ மினன்னர்) யென்று து ஆச்செய்யவும் யாதொன்றைத் தின்னுகிறதர்க்கு முன் வுளுஹிய்யாவி னுடைய இறைச்சியைத் துவக்கமாகத் தின்னவேணும் முந்தி யதினு டைய ஈரலிலிருந்து தின்னுகிறது சுன்னத்தாயிருக்கும் அதின் சால்னு விற் கொஞ்சங் குடிக்கவேணும்

இன்னும் ஹஜ்ஜு-டையமாதம் பிறைப்பிறந்து ஒன்றுமுதல் பத் தானுள்வரையில் வுளுஹிய்யாக் கொடுக்கிறவன் தன் சரீரத்தி னின்று மொரு ரோமங்களை யெடுக்காமலும் நகங்களை அறுக்காமலுமிருக்கிறது முஸ்தகப்பாயிருக்கும் (பின்னர்) கிடாயை அறுக்கத்தெரியாதவன் அ வ னல்லாதவனுக்கு வுத்தரவு கொடுத்துத் தானு மந்த வுளுஹிய்யாவு

க்குக் கூடவந்துநின்று அறுத்தபின் (அல்லாகும்மத்தகப்பல்) லென்கி றதுஆவை ஓதவேணும் அறுத்த மனிதனுக்கும் அதில் தின்னக் கொடுக்கவேண்டும்.

(இனி) பிள்ளைபிறந்த யேழாநாள் (அக்கீக்கா) கொடுக்கிறது முஸ்தகப்பு அதாவது ஒரு கிடாய்வாங்கி வுலு ஹிய்யாவைப்போல் அறுத்து மொளியாகக் களட்டி யெலும்பை முரியாமற் கொடுக்கிறது. யிருக்கும் அப்படிக் கொடுக்கிறதில் தீனுக்குந் துன்யாவுக்கும் அநேகபாயிதா வுண்டும் சாபீ மதுகபில் ஆண்குழந்தை பிறந்தால் இரண்டு கிடாய் கொடுக்கவேண்டும் அல்லாகுத்தஆலா நம்ம ளியாவருக்கும் யிதுபோலான நற்கருமங்களைச்செய்ய நற்புத்தி தருவாறாக ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

ஜநசாவுடைய ஹுக்குமுகளின் பாபு.

மையித்தைக் குளிப்பாட்டுகிறதும் கல்லடக்கஞ் செய்ய யெத்தனிக்கிறதும் கபன்செய்கிறதும் தொழுவிக்கிறதும் அடக்கஞ்செய்கிறதும் பறுலுக்கிபாயாவாயிருக்கும் (மவுத்தினுடைய அடையாளமாவது) காலிரண்டும் செவ்வையாக நில்லாமற் சோர்ந்து போகிறதும் மூக்குமுன்னிருந்ததைக்காணப் பேதகமாகிறதும் இரண்டு பொய்க்கண் பள்ளமாயிருக்கிறதும் பீசத்தின் தோலி நீண்டுவிடுகிறதும் முகத்தில் சுருக்கு நிமிருகிறதுமாயிருக்கும் இவைகள் வெளியானவுடனே கிபுலாமுகமாக வலதுபக்கம் ஒருச்சாய்த்துப்போடுகிறது சுன்னத்து கிழக்கே தலையை யுயர்த்தி மேற்கே காலுமாக்கி மல்லாக்கப்போடுகிறது மாகும் சேட்டிமம் அடைக்கிறதற்குமுன் ஷகாதத்துக் கலிமாச்சொல்லிக்கொடுக்கிறது முஸ்தகப்பு ஆனால் தல்க்கீன் மையத்தை யடக்கினபின் ஓதுகிறது குற்றமில்லை சக்கறாத்தி லிருக்கிறவன் ஷகாதத்து ஒரு தரஞ்சொன்னாலும் போதும் அவன் வேறேபேச்சுப்பேசினால் மறுபடியுஞ் சொல்லிக் கொடுக்கவேண்டும் அவனைச் சொல்லு சொல்லுயென்று அடட்டக்கூடாது யின்னும் அவனிடத்தில் யாசீன் யென்கிற சூறாவும்

றகுது யென்கிறசூறுவும் ஓதுகிறது முஸ்தகப்பு இப்படி யோதுகிறது வருத்தத்தை லேசாக்குமென்று ஹதீதில் வந்திருக்கிறது மவுத்தாகிவிட்டால் இரண்டு நாடியையுங் கட்டி பிசுமில்லாகி ஒஅலா மில்லத்தி றசூலுல்லாகி சல்லல்லாகு அலைகி ஒசல்லம் அல்லாகும்ம யஸ்ஸிர் அலைகி'அம்றகு ஒஸஹ்ஹில் அலைகி மாபகுதகு ஒஅசுயிதுகு பிலிக்காயிக்க ஒஜ்அல் மாகறஜ யிலைகி கைறன்மிம்மா கறஜ அன்குயென்று சொல்லி இரண்டு கண்ணையுங் கசக்கி மூடி ஒற்றைபட சாம்பிராணிப்பு கைகாட்டிய கட்டிலின்பேரில் இசவுபோல்வைத்து தொப்புளுக்கு முட்டுக்காலுக்கு மிடையில் மறைத்துப் பிடவைகளையெல்லாம் வுரியவேண்டும் மையத்தைக் குளிப்பாட்டுகிற தலத்தைக் குளிப்பாட்டுகிறவனும் அவனுக்கு வுதவியாயிருக்கிறவனுந் தவிர மற்றயாருங் காணாமல் மறைக்கவேண்டும் மையத்துக்கு வுடையக்காரனாகிய சொந்தக்காரன் முழுகாட்டவேணும் சொந்தக்கார னில்லாவிட்டால் மார்க்கத்தில் பேணுதலானவன் குளிப்பாட்டவேணும் (குளிப்பாட்டுகிற விபரமாவது) குளிப்பாட்டுகிறவன் கையிலே ஒரு துண்டுச்சீலைசுற்றிக் கண்ணை மூடிக்கொண்டு பின்துவாரம் முன்துவாரத்தைக் கழுகவேணும் வாய் கொப்பிளிக்காமல் நாசிக்குத் தண்ணீர்செலுத்தாமல் ஒலுச்செய்து வைக்கவேண்டும்,

ஆனால் விரலில்த் துண்டுச்சீலைசுற்றிப் பல்லுகளையும் வுதட்டையும் மூக்கையும் துடைக்கவேண்டும் இலந்தையிலை போட்டுச் சுடவைத்த தண்ணீர் அதில்லாவிட்டால் சுடவைத்த வெரும் வெந்நீரை மையத்தின்பேரில் வூற்றித் தலையையுந் தாடியையும் கித்துமியென்னும் பூண்டுகொண்டு அதில்லாவிட்டால் சவுக்காரம்போலொத்ததுகொண்டு கழுகியபின் இடதுபுறம் ஒருச்சாய்த்துப்போட்டு தண்ணீர் கீழ்அடியிற் சேரும்படிவிட்டுக் கழுகி பின்புவலதுபுறம் ஒருச்சாய்த்துப்போட்டு முன்போற்கழுகி பின்பு மையத்தை யிருத்தாட்டிவைத்து அதைத் தன்னளவிற் சாத்திக்கொண்டு வயிற்றை மெல்லினமாகத் தடவியேதாகிலும் பிற்புறத்தில் வெளிப்பட்டால் கழுகவேண்டும் குளிப்பாட்டி

னதை இரண்டாவது குளிப்பாட்டுவது கடமையல்ல பின்புபிடவையா ல் வுலர்த்தி பலமணத்தைத் தலையின்பேரிலும்தாடியின்பேரிலும் கற் ப்பூரத்தைச் சுஜூது செய்யுந் தலங்களிலும் வைக்க வேண்டும்.

கபனுடைய விபரம்.

அதாவது தங்கடத்தை யுடையநேரத்திற் கிடைத்ததைக் கொ ண்டு கபன் செய்கிறது கடமை தங்கடமில்லாத்த நேரத்தில் ஆண்பிள் ளைக்குச் சட்டை யுடுத்தாடை அடையவளைந்தான் இந்த மூன்று பிட வையில் கபன் செய்கிறது சுன்னத்தா யிருக்கும் வுடைத்தாடையும் அ டையவளைந்தானும் உச்சிதொடுத்து வுள்ளங்கால்வரையிலா யிருக்குப் முந்தி யடையவளைந்தானை விரித்து அதின்பேரில் உடுத்தாடையை வி ரித்து மையத்திற்குச் சட்டையிட்டு உடுத்தாடையின்பேரில் வைத்து இடதுபுறம் முந்தியும் வலது புறம் பிந்தியுமாகச் சுற்றியதுபோல் அ டைய வளைந்தானையுஞ் சுற்றவேண்டும் பெரியோர்கள் வுலமாக்கள் ஸா தாத்துகளாக யிருந்தால் தலைப்பாகை கட்டிவைக்கிறது ஏற்றமாயிருக் குமென்று பிந்தின இமாம்கள் சொல்லி யிருக்கிறார்கள்.

இனிப் பெண்பிள்ளைகளுக்கு சட்டை மக்கனு வுடுத்தாடை அ டைய வளைந்தான் மார்க்கட்டுத் துண்டு இந்த அஞ்சு பிடவையில் கப ன் செய்கிறது சுன்னத்தா யிருக்கும் அவளுக்குச் சட்டையணைந்து அ வளுடைய தலை ரோமத்தை இரண்டு வகுப்பாக வகிர்ந்து அதைச்சட் டைக்குமேல் நெஞ்சுக்கு நேராக்கவேண்டும் பின்பு மக்கனுப்போட்டு வுடுத்தாடை அடையவளைந்தானை முன் சொன்னதுபோற் சுற்றி அதி ன்மேல் மார்க்கட்டுத் துண்டைக் கட்டவேண்டும் கபனுலைந்து போகி றதைப் பயந்தால் கயிற்றைக்கொண்டு கட்டவேண்டும்.

ஜனசாத் தொழுகையின் சறுத்துகள்.

ஜனசாத் தொழுகையின் சறுத்துகள் யெட்டாகயிருக்கும் அதா வது மையத்து இசுலாமா யிருக்கிறதும் அது துப்புரவா யிருக்கிறது

ஜனசா ஆசராயிருக்கிறதும் அதை ஜனங்களுக்கு முன்னாலே முற்படுத்திவைக்கிறதும் அதை சந்தூக்குடன் பூமியின்பேரில்வைக்கிறதும் இமாம் பாலிகாயிருக்கிறதும் அவன் மையத்தி னின்று மொரு வுறுப்புக்கு நேராகநிற்கிறதும் இமாமும் மையத்தும் வெட்கத்தலத்தை மறைக்கிறதுமாம் தொழுகையுடைய சறுத்துகளில் ஒக்த்தைத் தவிர மற்ற சறுத்துக ளெல்லா முண்டாயிருக்கவேண்டும்.

இனி நீயத்தாவது (உஸல்லி லில்லாஹித்தஆலா தாகியன் லில் மையித்தி) இந்த மையத்துக்குத் துஆச் செய்தவனாய் அல்லாகுத்த ஆலாவுக்காகத் தொழுகிறேன் யென்று இமாம் சொல்லவேணும் முக்த்ததியானவன் (உஸல்லி லில்லாகித்தஆலா தாகியன்லில் மையித்தி மஅல் யிமாமி) இந்த மையத்துக்குத் துஆச் செய்தவனாய் அல்லாகுத்தஆலாவுக்காக இந்த இமாமுடனே தொழுகிறேனென்று சொல்லித் தக்குபீறு கட்டவேண்டும்.

ஜனசாத் தொழுகையின் றுக்குனுகள்.

அதாவது நாலு விடுத்தந் தக்குபீறு சொல்லுகிறதும் நிலை நிற்கிறதுமா யிருக்கும்.

ஜனசாத்தொழுகையின் சுன்னத்துகள்.

அதாவது (ச) ஆகயிருக்கும் அதில் (க-வது) மையத்து ஆணாயிருந்தாலும் பெண்ணா யிருந்தாலும் இமாம் மையத்துடைய நெஞ்சுக்குநேரே நிற்கிறது (உ-வது) முந்தின தக்குபீறுக்குப் பின்னாலே (சுபுஹானக் கல்லாகும்ம ஒபிகம்திக்க ஒத்தபாறக் கசுமுக்க ஒத்தஆலா ஜத்துக்க ஒஜல்ல தனாவுக்க ஒலாயிலாக கொய்றுக்க) யென்ற தனாஒதுகிறது (ங-வது) இரண்டாந் தக்குபீறுக்குப் பின்னாலே (அல்லாகும்மசல்லியலா முகம்மதின் ஒஅலா ஆலிமுகம்மதின் கமாசல்லைத்த) யென்ற

சலவாத்தை முடிய வோதுகிறது (ச-வது) மூன்றாந் தக்பீறுக்குப் பின்னாலே அல்லாகும் மக்பிர்லி கையினா ஓமையித்தினா ஓஷாகிதினா ஓகாயிபினா ஓசகீறினா ஓகபீறினா ஓதக்கறினா ஓவுன்தானா அல்லாகும் ம மன் அகுயைத்தகு மின்னா பஅஹயிகி அலல் இசுலாமி ஓமன் தவப்பைதகு மின்னாபொத்த வப்பதகு அலல் ஈமானி யென்று துஆ ஓதுகிறதாயிருக்கும்.

மையத்து பைத்தியகாரனாக யிருந்தாலும் சிறுபிள்ளையாக யிருந்தாலும் (அல்லாகும்மஜ் அல்கு லனாபறத்தன் ஓஜ் அல்குலனா அஜ்றன் ஓதுகுறன் ஓஜ்அல்குலனா ஷாபிஅன் ஒமுஸ்ப்பஆ யென்றோதவும் அந்தப் பைத்தியகாரனும் சிறுபிள்ளையும் பெண் பிள்ளையா யிருந்தால் ஹு யென்கிற இடத்தில் ஹா யென்றும் ஷாபிஅன் யென்கிற இடத்தில் ஷாபி அத்தன் யென்றும் முஸ்பஆ யென்கிற இடத்தில் முஸ்ப அத்தன் யென்றும் ஓதவும் (ச-வது) தக்பீறுக்குப்பின்னாலே றப்பனா ஆத்தினா யென்றதைக் கடாசிவரை யோதினாலுஞ்சரி யோதவில்லை யானாலுஞ்சரி அப்பால் சலாஞ் சொல்லும்போது ஜனாசாவுக்கும் ஜனங்களுக்கும் நீயத்துச் செய்து சொல்லவும் இந்தத் தொழுகைக்குப் பள்ளியுடைய இமாம் ஒலிகாரனைக்காண ஏற்றமானவனாக யிருந்தால் அவன் தொழுவிக்கிறது முஸ்தகப்பு இல்லாவிட்டால் ஒலிகாரன் தொழுவிக்கிறது நல்லது பள்ளிக்குள் ஜனாசாத் தொழுவிக்கிறது மக்றூகு ஜனாசாவை நாற்பது அடித்தூரமாவது சுமந்தால் அவனுடைய நாற்பது பெரும்பாவத்தைப் பொறுக்கப்படுமென்று ஹதீது வந்திருக்கிறது.

ஜனாசாவைக் கொண்டுபோம்போது ஓடாமலும் மிகவுந் தாமதியாமலும் சரியான நடை நடந்துகொண்டு போகிறது முஸ்தகப்பு நம்மள் மதுஹபில் ஜனாசாவுக்குப் பின்னாலே போகிறதும் ஷாபி மதுஹபில் ஜனாசாவுக்கு முன்னாலே போகிறது மேற்றம்.

துன்யாவுடைய பேச்சுகளைப் பேசாமல் தஸ்பீகு திக்கிறுகளை மெள்ள வோதிக்கொண்டு போகவேணும் ஜனசாவை வைக்கிறதற்கு முன்னாலே யிருக்கிறது மக்றூகு.

கபுறின் விபரம்·

பூமி கெட்டியா யிருந்தால் பிள்ளைக் குளிவைத்துத் தோண்டப்படும் இறசலா யிருந்தால் ஒற்றைக் குளி தோண்டப்படும் குளியை இடுப்பளவு அல்லது நெஞ்சளவு அல்லது ஓராளுயரந் தோண்டவும்ஓராளுயரந் தோண்டுகிறது மிகவு நல்லது இனி மையத்தைக் கிபுலா முகமாகக் கபுறில் வைக்கவேணும் வைக்கிறவன் பிசுமில்லாகி ஒஅலா மில்லத்தி றசூலுல்லாஹி சல்லல்லாகு அலைகி ஒசல்லம்யென்றுசொல்லவும்·

மையத்தை வலது பாகத்தின்பேரில் கிபுலா அளவில் முகந்திருப்பிவைத்து முடிச்சை யவிழ்த்துவிட்டுப் பச்சச் செங்கல்லை அல்லது மூங்கிற்பட்டையை வைத்து மறைத்து அடைக்கப்படும் பெண் பிள்ளையை யடக்கும்போது பறுதா மேலே பிடித் தடக்கவேண்டும் ஆண் பிள்ளையாயிருந்தால் பறுதாப் பிடிக்கவேண்டியதில்லை அடக்கின பின்பு கபுறை மேடு கூட்டப்படும் மண்ணைத் தள்ளும்போது தலைமாட்டினிற்கிறவர்கள் கையால் மூன்றுபிடி மண்ணைப் பிடித்துப்போடுகிறது முஸ்தகப்பு மூன்று பிடிபோடும்போது மின்ஹா கலக்குனக்கும் இரண்டாம்பிடியில் ஒபீஹா நயீதுக்கும் மூன்றும்பிடியில் ஒமின்ஹானு குறிஜக்கும் தாரத்தன் வுகுறு யென்று சொல்லவேண்டும்·

அடக்கியபின் மேலே தண்ணீர் தெளித்தாலுங் குற்றமில்லை தலைமாட்டில் (பக்கறு) சூறுவை துவக்கமிருந்து முபிலிகூன் வரையிலும் ஓதி துஆவோதவேண்டும் இன்னும் அடக்கியபின் கொஞ்சநேரமிருக்கிறது முஸ்தகப்பு·

மையத்திற்குச் சொந்தமானவர்கட்கு அதுல மல்லாகு அஜறக்க ஒ அகுஸன் அஸா அக்க ஒகொபற லிமையத்திக்க யென்று சொல்லிக் கைகொடுத்து சலிப்பாறச் சொல்லுகிறது முஸ்தகப்பு·

அடுத்த வீட்டுக்காரருஞ் சொந்த பெந்துக்காரரும் அன்று சோறுபொங்கி அவர்கட்குக் கொடுபோய்க் கொடுக்கிறது முஸ்தகப்பு·

அடக்கினது முதல் யேழுநாள்வரை தன்னால் இயன்றதை யொவ்வொரு நாளடங்கலிலும் மையத்துவீட்டுக்காரர் மையத்துக்குதவாபு கிடைப்பதற்க்காக மிஸ்கீன்களுக்கு சதக்காக்கொடுக்கிறது முஸ்தகப்பு.

சதக்காக் கொடுக்க சக்தி இல்லாத்தவர்கள் இரண்டு றெக்காஅத்து நபில்த்தொழுது மையத்திர்க்காக ஹதியாச் செய்யவேண்டும்.

இனி கபறுஸ்தான்பேரில் நிற்கிற பச்சைச் செடிகள் புல்லுகளைத் தறிக்கிறது மக்குறூகாயிருக்கும் அவைகள் பச்சையாயிருக்கிறமட்டுந் தஸ்பீகுசெய்யும் அதினால் அந்த மையத்திர்க்கு அதாபு லேசாகும் அல்லாகுத்த ஆலாவின் கிருபை இறங்குமென்றும் ஹதீது வந்திருப்பதால் பச்சைக்குழையைக் கபுறில்வைக்கிறது ஆகும்.

{ கபுறைச் சியாரத்துச்செய்வதின் பயான். }

சியாறத்துக்கு வரிசையான நாளாகிறது வெள்ளிக் கிழமை சனிக்கிழமை திங்கட்கிழமை வியாழக்கிழமையாயிருக்கும் இன்னும் பருத்து இராத்திரியிலும் இரண்டு பெருநாள் இராத்திரியிலும் அறபா இராத்திரியிலும் சியாறத்து எற்றம்.

{ கபுறைச் சியாறத்துச்செய்வதின் அதபுகள். }

கபுறைச் சியாறத்துச் செய்கிறவர்கள் கபுறிடத்தில்க் கால்மாட்டுப்புறமாகப் போய்நின்று கிபுலாவைப் பின்னோக்கி மையத்துடைய முகத்தை முன்னோக்கி நின்று (அஸ்ஸலாமு அலைக்கும் தாறக்கவுமின் மூமினீன் வயின்னா யின்ஷா அல்லாஹு பிக்கும் லாஹிக்கூன் வநஸ்அலுல்லா ஹலனா வலக்குமுல் ஆபியத்த) யென்று சொல்லி துஆச் செய்யவேணும் அதினடியிலிருந்தால் அந்த மையத்து ஹயாத்தா யிருக்கும் போது யெவ்விதஞ் சங்கை செய்தோமோ அவ்விதஞ் சங்கைசெய்திருக்கவேண்டும்.

இன்னுஞ் சியாறத்துச்செய்கிறவன் சூறத்து யாசீன் ஓதுகிறது முஸ்தகப்பு அப்படி முகத்தை முன்னோக்கி நிற்க விடம்படவில்லையானல் தலைமாட்டில் அல்லது கால்மாட்டில் நிற்கிறது ஆகும்.

இன்னம் பாத்திகா ஒருவிடுத்தம் குல்குவல்லாகு அகது மூன்று விடுத்த மோதவேண்டும் (யஉ) விடுத்த மோதினல் மிகவு நல்லதாகயிருக்கும் அப்பால்த் துஆவோதி பகுஷுசெய்யவும் (துஆவாகிறது) அல்லாகும்ம கபிர்லகும் ஒறகமகும் ஒகுஷுருகும் ஒயிய்யானு பீஸும் றத்திஸ்ஸாலிகீன் ஒஅவுவலில் தவாப மாக்க றவுனகு பிறகுமத்திக்க யாஅறுகமற்றுகிமீன் யென்று சொல்லிக்கொண்டாலும் போதும்.

இனி யாராகிலு மொருமனிதன் கபுறாளிகளுக்கு துஆவையும் தனக்கு வுறுதியையும் கல்பு இளகிறதையும் நினைத்துக் கபுறாளிகளுக்கு சியாறத்துச்செய்கிறது முஸ்தகப்பு.

யாதொருவன் கபுறுகளுக்கு அருகேநடந்துபோகும்போது தனக்கு வுறுதி பெறுமலும் அவர்களுக்குத் துஆச் செய்யாமலும்போனல் வுண்மையாகத் தனக்குஞ் சதிமானஞ்செய்து அவர்கட்குஞ் சதிமானஞ் செய்தவனுகி விடுவான்.

ஜனுசா தொழுகை வகையறுக்களின் வரிசை.

ஒருமையத்தின்பேரில் நூறு பேருவரை தொழுது அந்த மையத்துக்காக அல்லாகுத்த ஆலாயிடத்தில் பிழைபொறுக்கும்படி மன்றுட்டஞ் செய்வார்களாகில் அவர்களுக்கு அவனின் மன்றுட்டங் கொடுக்கப்படுமென்றும் இன்னம் ஒரு மையத்தின்பேரில் மூன்று சப்பாகவின்று தொழுதால் அந்த மையத்திர்க்குப் பிழை பொறுக்கப்படுமென்றும் நமதுநாயகம் முகம்மதுநபிசல்லல்லாகு அலைகிஒசல்லமவர்கள்திருவுளம் பற்றினர்கள்.

ஹிக்காயத்து.

(துருபத்து மறுளிய்யா) வென்கிற கித்தாப்பில் வருகிறதாவது ஸாலிகானவர்களில் ஒருவர் ஒரு பாவியான மனிதனைக் கனவிற் கண்டு அல்லாகுத்த ஆலா வுன்னை யென்னசெய்தானென்று கேட்க யென்னுடைய நன்மையுந் தீமையு நிறுக்கப்படும்போது நன்மை சுருங்கிப் பாவ மதிகமாகியிருந்தது அதைப்பற்றி நான் தட்டழிந் திருக்கும்போது மீஜானென்கிற தராசில் வானத்திலிருந்து ஒருமுகர்வைக்கப்பட்ட ஒரு பைக்கட்டு வந்து விழுந்தது வுடனே நன்மைத் தட்டு முறுகிவிட்டது அதை நான் இதென்ன வஸ்துவோவென்று நினைத்து அவிழ்த்துப் பார்க்க நான் பூலோகத்தி லிருக்குங்காலத்தில் முசிலிமானவன் கபுறில்த் தள்ளின ஒருபிடி மண்ணாக யிருந்தது பின்பு நன்மை யொரு கடுகுப் பிரமாணமாக யிருந்தாலும் அதை நாம் கொண்டுவந்து கணக் கிட்டுக் கூலிகொடுப்போமென்று வுருத் தோற்றமன்றியே யொரு சப்தங் கேட்டது அப்பால் நான் முசிலிமான மனிதனுடைய கபுறுக்கு வுபகாரஞ்செய்த நன்மையால் அல்லாகுத்த ஆலா யென் பாவத்தைப் பொறுத்து யென்னை சுவர்க்கபதி சேர்த்தான் யென்று சொன்னார்.

ஹிக்காயத்து.

ஒரு வாலிபமான மையத்தை யொருவர் குளிப்பாட்டும்போது அந்த வாலிபன் குளிப்பாட்டினவருடைய பெருவிரலைப் பிடித்துக்கொண்டார் அப்போது குளிப்பாட்டினவர் அந்த வாலிபனைப் பார்த்து மகனே கையை விட்டுவிடு நீ மவுத்தாக வில்லையென்று நானறிவேனென்று சொன்னார் வுடனே அந்தவாலிபன் கையை விட்டுவிட்டார் இதினால்த் தெரியவந்தது அல்லா வுடைய வொலிமார்கள் வெளியிலும் வுள்ளிலும் மவுத்தாக மாட்டார்கள் யென்கிலும் வெளிக்கு மவுத்தாவார்கள் வுள்ளில் ஒருவீட்டில் இருந்து இன்னொரு வீட்டுக்குப் போவார்கள் இப்பிரகாரம் கதிதுகளும் வருகின்றன.

101

{ ஒப்பாரிசொல்லி யழுகிறதின்டயான் ஹதீது. }

அல்லாகுத்த ஆலாவுடைய முனிவு ஒப்பாரிசொல்லி யழுகிறவர் களின்பேரிலும் அதைக்கேட்டு விலகாம லிருக்கிறவர்களின் பேரிலும் இறங்குமென்றும் இன்னுந் துன்யாவில் ஒப்பாரிசொல்லியழுதவர்களை கியாமநாளில் நரகத்தில் இரண்டு சப்பாகநிறுத்தி நரகவாதிகளைப்பார்த் து நாய் சத்தம்போடுவதுபோற் போட்டு வூளையிட்டுக்கொண்டு அதா புப்படுவார்களென்றும் நபிநாயகம் முகம்மதுசல்லல்லாகு அலைகி ஒசல் லமவர்கள் திருவாய்மலர்ந் தருளினார்கள்.

ஹிக்காயத்து.

இருசாது யென்கிற கிதாப்பில்வருகிறதாவது முசுனீ றகிமகுல் லாஃ யென்பவர்கள் சொல்லுகின்றதாவது நான் ஒரு ஜும்ஆ இரவில் கபுறுஸ்தானை சியாறத்துச்செய்ய போய் நித்திரை செய்தேன் கனவில் மவுத்தானவர்க ளெல்லாம் கபுறைவிட்டு மெழும்பி வட்டமாக நின்றார் கள் அப்போது மூடப்பட்ட தாம்பாளங்கள் அவர்கள் பேரில் இறங்கி விட்டது அவர்களி லொருவன் தனியே அதாபுப்பட்டுக்கொண் டிருக் கிறான் அவனிடம்போய் யெல்லோர்களுஞ் சந்தோசத்திலிருக்க நீமாத் திரங் கைசேதப்படவேண்டிய காரணமென்னவென்று கேட்டேன் அ தற்கு அவன் இவர்களுடைய அனந்தரக்காரர்கள் குறுஆன்ஓதிப் பகு ஷிசெய்கிற சிறப்பாலும் ஸதக்காக்கொடுத்து தவாபை யனுப்புகிற வி தத்தாலும் அவர்களுக்கு இந்தத் தாம்பாளத்தில் வெகுமதிகள் வருகி றது அதினாலவர்கள் மகிழ்ச்சி யடைகிறார்கள் யெனக்கு ஒருதாயுண்டு மவள் நன்மை செய்யாமல் பூமியில் யெப்போதும் யென்னை நினைத்து அ ழுதுகொண்டிருக்கிறா ளாகையால் நான் கைசேதப்படுகிறேன் அவளு க்கு இச் செய்தியைச்சொல்லி யெனக்கு நன்மையான கருமங்களைச் செ ய்யும்படி சொல்லுமென்று சொன்னார் இவ்விதமாகக் கண்டு விழித்து அவர் சொன்ன யெல்கையிற்போய் அப் பெண்பிள்ளை யிடத்திற் சொ ன்னேன் அப்பவே அவள் அழுகையைவிட்டு நீங்கித் தௌபாச் செய்

து கொஞ்சப்பணத்தை அவருக்காக ஸதக்காக்கொடுக்கும்படிதந்தான் அதை ஸதக்காக் கொடுத்துவிட்டு மறு ஜும்ஆ இரவிற்போய்ப் படுத் துறங்கும்போது அவரை மகிழ்ச்சி யடையக்கண்டேன் அப்போது அ வர் யென்தாய்அனுப்பின ஹதியா யெனக்குக்கிடைத்தது யென்க்காக நீர் இம்மாத்திரம் வுபகாரஞ்செய்தீரோ அல்லாகுத்தஆலா வுமக்கு நகு மத்துச் செய்வானாகவும் யென்று சொன்னார்,

சபூர்செய்கிறதின் பயான் ஹதீது

யாராவது முசிபத்துக்குச் சபூர்ச்செய்தால் (முன்னூறு) தறஜா வும் இபாதத்துக்குச் சபூர்செய்தால் (ஆறுநூறு) தறஜாவும் தங்கடத்தி ர்க்கு சபூர்செய்தால் (ஒன்பதுநூறு) தறஜாவும் அல்லாகுத்தஆலா யெ ழுதுவானென்று நமத்நாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகி ஒசல் லமவர்கள் திருவுளம்பற்றினதாக (தன்பீகுல் காபிலீனில் வருகின்றது)

இன்னும் அல்லாகு சுபுகானகு ஒத்தஆலாகதீதுகு துசியில் யெ ன் னடிமைகளில் ஒருவனுக்கு அவன்சரீரத்திலாவது அவன்முதலிலா வது அவன் பிள்ளைகளிலாவது வொரு முசிபத்துவந்து நேரிட்டபோ து அழகான சபுறைக்கொண்டு முன்னோக்கினால் அவனுக்கு கியாம நாளில் மீசானென்னும் தராசில் அவனின் நன்மை தீமைகளை நிறுத்துக் கேள்வி கணக்குக் கேட்க வெட்கப்படுகிறேன் யென்று திருவுளமான தாக நபிநாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகி ஒசல்லமவர்கள் திரு வாய்மலர்ந்தருளினார்கள்.

ஹிக்காயத்து.

இராஜநாயக மென்னும் நபி சுலைமா னலைகிஸ்ஸலாமவர்கட்கு ஒ ருகுழந்தை இறந்துவிட்டது அதைப்பற்றி யவர்கள் கடிசாக மனவருத் தப்பட்டுக்கொண் டிருந்தார்கள் அப்போது இரண்டு மலக்குகள் வாதி பிரிதிவாதியைப்போல் இவர்கள் முன்வந்து அல்லாவுடைய நபியே நா னொரு பயிர்ச்செய்தேன் அதை இம்மனிதன் மிதித்துக் கலாக்காக்கி வி

ட்டாரென்று ஒருவர் சொன்னாரப்போது சுலைமான் அலைகிஸ்ஸலாமவ ர்கள் நீர் யேன் அப்படி மிதித்தீரென்று அம்மனிதனைக் கேட்க மனித ர்கள் சதாகாலமும் சஞ்சாரஞ்செய்யும்படியான பப்பளிக்கை வீதியில் இவர் பயிர்ச்செய்ததினால் நானதில் நடந்தேனென்றுசொல்ல சுலையுமா ன்அலைகிஸ்ஸலா மவர்கள் அது வுன்பேரில் குற்றமில்லை யென்றார்கள் அதர்க்கு அந்த வாதியானவர் நபியே மவுத் தென்கிறது ஆகிரத்திர்க்கு ப்பாதையா யிருக்கத் தங்கள் குழந்தை இறந்ததைப்பற்றி இவ்விதம்ம னவருத்த மாகலாமா வென்றுசொல்லிச் சலிப்பைமாற்றினார்கள்.

எம துடற் பிறப்பாகிய இகுவான்களே இப்பேர்க் கொத்தவர்க ளின் நடப்பை ஆராய்வுசெய்து சபூர்செய்வதைப்பற்றி வந்திருக்கிறஹ தீதுகளைக் கவனித்துத் தங்கள் தங்களுடைய மவுத்தை நினைத்து ஆகி றத்திர்க்கு ஆகுமான நல்ல அமல்களைச்செய்த கூட்டத்தில் நம்மனைவர் களையும் அல்லாகுத்தஆலா சேர்த்துவைப்பானாக ஆமீன்.

முசிலீமான மனிதர்களை
நசல் மினவுதலின் பயான்
ஹதீது.

ஒரு முசுலிமானவன் மற்றொரு முசிலீமானவனை நசல்மினவுதர்க் காக வீட்டைவிட்டும் புறப்பட்டால் அல்லாகுத்தஆலாவின் றகுமத்து அவ னிடுப்புமட்டிலும் பொதிந்துக்கொள்ளும் அந்த நசலாளி இடம் போய் யுட்கார்ந்தவுடன் அவன் வுச்சிமுதல் வுள்ளங்கால்வரை பொதிந் துக்கொள்ளும் இன்னும் ஒருமனிதன் ஒலுச்செய்துக்கொண்டு நசல் மி னவப் போவானாகில் ஜகன்ன மென்னு நரகம் அவனைவிட்டும் (எழுபது) வருடம் பயணத்திர்க்கு அப்புறமாகிவிடும் இருவரும் கியாமநாளில் அ ல்லாகுத்தஆலாவின் அறுசினிழலி லிருப்பார்கள் யென்று நமது நாயக ம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள்.

இன்னம் வுங்களில் பிணியாளிக ளுண்டா யிருந்தால் போய்த் தெரிசித்து மினவுங்கள் அந்த நோயாளியின் பிழையைப் பொறுக்கப்

படும் அவன் துஆ கபூலாகிறதாக யிருப்பதால் அவனை வுங்களுக்காக துஆச் செய்யும்படி சொல்லுங்கள் அவன் துஆ மலக்குகளின் துஆ வைப்போலாக யிருக்குமென்று நபிநாயகம் அவர்கள் திருவுளம் பற்றி னார்கள்.

(அதன் அதபாவது) அவனிடம் போய் யெதிரிலிருந்து வுமக்கெ ப்படி யிருக்கிறதென்று கேட்டு வருத்தமுள்ள இடத்தில் கைவைத்து அவனின் கயாத்து நீளமாக யிருக்கிறதுகொண்டு நல்மாராயஞ் சொல் லித் தெரிந்த துஆக்களால் அல்லாகுத்த ஆலாயிடம் அவன் வருத்தம் லேசாகும்படியும் அவன் கூலியை அதிகமாக்கும்படியும் துஆக்கேட்க வும் ஒரு விடுத்தமாவது நோயாளியைப்போய்த் தெரிசிப்பது பறுலு கிபாயாவா யிருக்கும் அதினம்போகிறது யேற்றமாயிருக்கும்.

இனி நசல் மினவப்போன மனிதன் நசலாளியின் தலையில் கை வைத்து சலவாத்தோதி யேழுவிடுத்தம் பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீ ம் அஸ்ஊ அலுல்லாஹல் கறீம் றப்பல் அறுஷில் அலீம் அன்யு ஆபிய க்க ஒயெசுபியக்க ஒகுவமுகுயில் யிலாம் ஒகியறமீம் ஒஒதுபவுல் பலா அல் அலீம் ஒயுகுத்தில் கைறல் அமீம் ஒசல்லல்லர்கு ஒசல்லம் அலா செய்யிதினு முகம்மதின் வஆலிகி ஒசகுபிகி அஜ்மயீன் யென்று வோ துகிறது நலமாயிருக்கும் இப்பிரகாரம் (துகுபத்துல் மறுலிய்யா) வெ ன்கிற கித்தாபில் வருகிறது.

ஹதீது.

ஒரு முசுலிமான மனிதன் நசலாளி யாகிவிடுவானானால் அல்லா குத்தஆலா நாலு மலக்கை அம்மனிதனிடம் போகும்படி அனுப்புவா ன் அவர்களில் ஒருமலக்கு அந்த நசலாளியின் பெலத்தை யெடுத்துக் கொள்வார் ஒருவர் அவனுடைய அழகை யெடுத்துக்கொள்வார் ஒருவ ர்அவனுடைய நாவின் ருசியை யெடுத்துக் கொள்வார் ஒருவர் அவனு டைய பாவத்தை யெடுத்துக்கொள்வார் இந்த நாலும் இவன் சுகமடை கிறமட்டிலு மிவனைவிட்டு நீங்கியிருக்கும் இவன் ருகத்துப்பெற்றவுட ன் அல்லாகுத்தஆலா பெலத்தையும் அழகையும் நாவின் ருசியையும்

அவனளவில் மீளவைக்கும்படி மூன்று மலக்குகளுக்கும் வுத்திரவு செய்வான் அதுகேட்டு மீளவைப்பார்கள் பின்னர் ஆண்டவனே அந்தமூன்று மலக்குகளுக்கும் சுமையை இறக்கிவிட்டாயே நான் சுமந்துகொண்டிருக்கிற இம்மனிதனுடைய பாவங்களை இவனளவில் மீளவைக்கட்டுமோவென்று நாலாவது மலக்குக்கேட்பார்கள் அதற்க்கு அப்படிச்செய்வது சரியல்லை ஆதலால் நீர் இப்பாவமென்னுஞ் சுமையை நான்காவது கடலுக் கப்பாற் கொடுபோய் யெறிந்து விடுமென்று அல்லாகுத்த ஆலா உத்திரவு கொடுப்பானென்றும் இன்னும் அல்லாகுத்த ஆலா ஒரு மனிதனளவில் அனுப்பிய மூநாட் காச்சலென்னும் வியாதியின் பேரில் சபூர்செய்தால் அம்மனிதனுடைய ஒரு வருடத்தின் பாவத்திர்க்குத் தெண்டகுற்றமா யிருக்குமென்றும் ஹலறத்து முகம்மது முஸ்தபா சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானதாக (தசுவியத்துல் அவது) யென்கிற கித்தாபில் வருகின்றன.

ஆகச்சே ஆய் யெமது பிரியமுள்ள தீனையுடைய தோழர்களே அல்லாகுத்த ஆலாவின் கிருபை றகுமத்துப்பெற்ற சகோதரர்களே வுங்களுக்கு வரப்பட்ட வியாதிகளின்பேரிற் சபூர்ச்செய்து அதின் தறஜாக்களைப் பெற்றுக்கொள்வதை விரும்பிப் பதறும விருப்பீர்களாகவும்.

இன்னும் வியாதிகளாகிறது மவுத்துடைய தூதாக இருப்பதால் அதுவந்து வுங்களை மூடிக்கொண்டு அமல்ச் செய்யவொட்டாமல்ப் பெலக்கேடு செய்வதர்க்கு முன் பரிபூரணமாகிய தறஜாவையும் தவாபையும் கொடுக்கும்படியான நல்ல அமல்க்களைத் தவரவிடாமல்ச் செய்யுங்கள் நீங்கள் பார்க்கவில்லையா இவ்வுலகத்தின்கண் யெவ்வளவோ ஜனங்கள் சரீர சுவாத்தியமா யிருக்கும்போது நல்ல அமல்க்களைத் தவரவிட்டுவிட்டு விருந்தாப்பியமும் நசலும் பெலக்குறைச்சலும் வந்தவுடன் முன் தவரவிட்ட அமல்களின்பேரில் வுள்ளமுருகி யுணர்வற்றுக் கைசேதப்பட்டு தாரைதாரையா யிருகண்ணிலிருந்து சலமொழுக அழுகின்றார்கள் இதை நீங்கள் பார்த்திருந்தும் கேட்டிருந்தும் வுணர்வு பெறும லிருக்கிறீர்கள்.

இன்னும் வாலிபமும் சீமான்தனமும் சரீரசுகமும் சாவகாசமாகிய ஒத்துகளும் பூமியில் கயாத்தாயிருக்கிறதும் ஆகிய இவ்வைய்ந்தும் கொள்ளை முதலாக யிருக்கும் இவைகள் தவரிவிட்டால் மறுபடி திரும்புகிறது தெண்டிப்பாயிருக்கும் இதில்மவுத்துமுடிகிவிட்டால் பூலோகத்தில் கயாத்துத் திரும்புகிறதேயில்லை இவைகளில்ச்செய்யவேண்டிய அமல்களைச் செய்துகொள்ளுங்களென்று ஹதீதில் வந்தபடி நம்மளியாவரும் செய்துவர ஆண்டவன் நல்லுதவி செய்வானாக ஆமீன் யாஅருகமற்றாகிமீன் ஒல்கம்து லில்லாகி றப்பில் ஆலமீன்.

மவுத்தினுடைய பாபு ஆயத்து

குறுஆன் சரீபில் வுயிரடங்கலும் மவுத்தென்கிற குடிப்பைக் குடியாமல் ஒன்றுந் தவரமாட்டாது யெல்லா நபுசுகளும் மவுத்தை யனுபவிக்குமென்றும் இன்னும் முதலாவது மவுத்தைப் படைத்து இரண்டாவது கயாத்தைப் படைத்தோமென்றும் அல்லாகுத்த ஆலா திருவுளம் பற்றினான்.

ஹதீது

மவுத்துடைய வருத்தம் மனிதர்களுக்குத் தெரிந்திருப்பதுபோல் ஆடுமாடு வொட்டகங்களைப்போலொத்த விலங்கினங்களுக்குத் தெரிந்திருந்தால் மவுத்தைநினைந்து அவைகள் மெலிந்துபோய்விடும் கொழுப்புள்ள இறைச்சிதின்ன அகப்படாதென்றும் ஒரு மூமினான மனிதன் சக்கறாத்தில்ப் படும்படியான வருத்தமாவது ஒரு கயாத்தாகிய மனிதனைக் கூர்மையுள்ள கத்திபால் யெழுபதுவிடுத்தம் வெட்டுகிறதைக்காணக் கடுமையான வருத்தமாக யிருக்குமென்றும் மவுத்து வுங்களுடைய இன்பங்களை யெல்லாங் கெடுத்து வுங்கள் பெலங்களை யெல்லாங் குறைத்து வுங்கள் பெண்சாதி பிள்ளைகளை விட்டும் பிரித்துவிடுகிறதற்கு மூன்பாக அதை ஞாபகஞ்செய்து நல்த் தங்கரியமாகிய ஈன்னடத்தைக

ளை யதிகப்படுத்திக் கொள்ளுங்களென்றும் நபிநாயகம் முகம்மது சல்ல
ல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளம் பற்றினதாக நுசுஹத்தில் ம
ஜாலிசு யென்கிற கித்தாபிலும் தன்பீகுல்காபிலீன் யென்கிற கித்தாபி
லும் வருகின்றன.

ஹிக்காயத்து.

கலறத்து இல்யாசு அலைகிஸ்ஸலா மவர்களிடம் மலக்கல்மவுத்து
அலைகிஸ்ஸலா மவர்கள்வந்து உங்கள் றூகை வாங்கும்படி அல்லாகுத்த
ஆலா யென்னை யனுப்பினு னென்றூர்கள் அதைக்கேட்டவுடன் இல்யா
சு அலைகிஸ்ஸலா மவர்கள் நடுக்கத்துடன் மிகுதமாக அழுதார்கள் அல்
லாவுடைய நபியே இவ்வளவு அழுகை துன்யாவின் பேரிலா அல்லது
மவுத்தின்பேரிலா யென்று மலக்கல்மவுத்து அலைகிஸ்ஸலா மவர்கள்கே
ட்க நான் அவைகளைப் பற்றி யழுகவில்லை யென்கிலும் யெனக்குப் பி
ன்னுல் மிகுந்த சாலிகானபேர்கள் அல்லாவை இபாதத்துச் செய்யவும்
திக்கிர் செய்யவுமாக யிருப்பார்கள் நான் இப்போது மவுத்தானுல் அ
வைகளைச் செய்ய யெனக்கு நசிபு இல்லையேயென்று நினைத்து அழுகி
றேன் யென்றூர்கள் அந்நேரம் அல்லாகுத்தஆலா உத்திரவு செய்தான்
ஆய் மலக்கல்மவுத்தே நம்முடைய நபி இல்யாசு யென்னை மிகுதமாகஇ
பாதத்துச்செய்யவும் திக்கிர்ச்செய்யவும் ஆதரவுவைத்ததால் அவருடை
ய றூகை வாங்கவேண்டாம் அவரை கியாமத்துடைய ஒடுக்கம்வரையு
ம் கயாத்தாக்கிவிட்டேன் யென்று உத்திரவுசெய்தான் இந்த இல்யாசு
இதுறீசு கிலுறு ஈசா அலைகிமிஸ்ஸலாம் இந்த நாலு நபிமார்களும் கி
யாமநாள்வரை ஜீவித்திருந்து மவுத்தாவார்களென்று கித்தாபுகளில் வ
ருகின்றன.

ஹிக்காயத்து.

நமது நாயகம் கலறத்து முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்
லமவர்கள் சமானுக்கு முற்பட்டகாலத்தில் மனிதர்களின் கண்ணுக்கு
த் தெரியும்படி கலறத்து மலக்கல்மவுத்து அலைகிஸ்ஸலா மவர்கள் வந்
து றூகை வாங்கிறதாகயிருந்தது இம்முறைப்படி நடந்துவரும் காலத்

தில் கலறத்து மூசா அலைகிஸ்ஸலா மவர்கள் சமுகத்தில் மலக்கல் மவுத்து அலைகிஸ்ஸலாமவர்கள் ஆசராகி உங்கள் றூகை வாங்கவந்தேனென்று சொல்ல மூசா அலைகிஸ்ஸலாமவர்கட்குங் கடுமையான கோப மீறி மலக்கல்மவுத்து அலைகிஸ்ஸலா மவர்கள்முகத்தில் ஓரடி யடித்தார்கள் அவ்வடியால் மலக்கல்மவுத்து அலைகிஸ்ஸலா மவர்களின் கண்ணிரண்டுங் கீழே விழுந்துவிட்டது அப்பால் இச்செய்தியை யவர்கள் அல்லாகுத்தஆலாவின் சமுகத்தில் தெரிவித்து யாறப்பீ மூசாநபி யுனக்குச் சங்கையானவ ராகையால் நான் சபூர்ச் செய்தேன் அவர் மற்றொருவராகயிருந்தால் நான் வருத்தப்படுத்துவே னென்றார்கள்.

அப்பால் அல்லாகுத்தஆலா அவர்களின் கண்ணை மீளவைத்து ஆய் மலக்கல்மவுத்தே நீர் நமது கலீமு மூசா அலைகிஸ்ஸலாமிடம்போய் அவருக்குச் சொல்லும் உங்கள் முன்கையை ஒரு காளைமாட்டின்சடலத்தில் வையுங்கள் அக்கைக்குள் அடங்கின அம்மாட்டின் ரோமமடங்கலையும் யெண்ணி யொவ்வொரு ரோமத்திற்க்கு மொவ்வொரு வருடமாகக் கணக்கிட்டு அக்கணக்கின் வருட முடியுமட்டிலும் நீங்கள் பூமியில் கயாத்தாக யிருப்பீர்கள் யென்று சொல்லும்படி உத்திரவுசெய்தான் இச்செய்தியை மலக்கல்மவுத்து அலைகிஸ்ஸலாமவர்கள் மூசா அலைகிஸ்ஸலா மவர்கட்கு அறிவித்தார்கள் இதைக்கேட்டு அவ்வளவு காலமுடிவு பெற்றபின் யென்னவென்று மூசா அலைகிஸ்ஸலாமவர்கள் கேட்க மலக்கல் மவுத்து அலைகிஸ்ஸலாமவர்கள் அப்பால் உங்கள் றூகை வாங்கப்படுமென்றார்கள் அவ்வளவு நீண்ட காலம் கயாத்தாக யிருந்தும் அப்பால் யென்றூகை வாங்கப்படுகிறதானால் இப்பவே யென்றூகை வாங்கிவிடுமென்று உத்திரவு செய்தார்கள் அதன் பின்பு அவர்கள் றூகை வாங்கப்பட்டது.

அதுமுதல் அல்லாகுத்தஆலா மலக்கல்மவுத்து அவர்கட்கு நீர் மனிதர்களின் றூகை வாங்கிறது அவர்கள் கண்ணுக்குத் தெரியும்படியான ரூபத்தில் போகவேண்டாமென்று உத்திரவு செய்தான் இச் செய்தி தப்சிற மஆலிமில் வருகின்றன.

(ஆதலால்) ஆய் முசிலிமாகிய யெமதன்புற்ற நேசர்களே அசுரூ பாகிய கவுமுகளே இப்பேர்க்கொத்த வலுப்பமாகிய மவுத்து சதிமான மாகவந்து உங்களுடைய இன்பசுகங்களை முறித்து முங்கள்பெண்சாதி பிள்ளை முதலிய இனங்களைவிட்டுப் பிரித்து வேறு படுத்துகிற தர்க்கு முன் உங்களுடைய தெளிவாகிய கல்பால் மவுத்தென்னும் வேங்கைப் புலியானது சங்கையாகிய நபிமார்கள் ஒலிமார்களைக்கொண்டு போய்வி ட்டதே இன்னும் மகா வீர சூரர்களையும் அதிகாரிகளையும் இராஜாக்க ளையும் பாய்ந்துவிட்டதே அம்முறைபோற்றான் நம்மளையுஞ் செய்துவி டுமென்று பயந்து அதர்குபயோகமாகிய நல்ல ஸவாதாக்க ளென்னுந் தொழுகை முதலான இபாதத்துகளைத் தவரவிடாமற் செய்து வருவீர் களாகவும் இப்படிச் செய்யாமல் பணம் பணங் காசு காசு வீடு வீடு பெண்டு பெண்டு பிள்ளை பிள்ளையென்று இபுலீசுடைய கலவையி லக ப்பட்டுக்கொண்டு துன்யாவுக்கே தொண்டு வூழியஞ் செய்து கொண் டிருப்பீர்களாகில் இருந்தாப்போலிருக்க உங்களுடைய றூகென்னுமா ணிக்கத்தை மலக்கல்மவுத்து அலைகிஸ்ஸலா மவர்கள் பிரித்துக்கொண் டுபோய்விடுவார்கள் அத்தருணத்தி லுங்களுடைய ஆட்சிகளும்அதிகா ரங்களும் ஆளடிமைகளும் வீரசூரங்களும் பணங் காசுகளும் அந்த ம வுத்தின் வருத்தங்களைத் தட்டி விலக மாட்டாது இதனை நீங்கள் பார் த்தும் கேட்டு மிருக்கிறீர்கள் அப்படிக்கிருக்க மேலு மேலும் துன்யா வே சதமென்றும் பணங் காசு பெண்டு பிள்ளை கெதியென்றும் யெண் ணினல் மவுத்து வரும்போது யென்ன முகாந்திரஞ் செய்கிறது அல் லாகுத்தஆலா நம்மனைவர்களுக்கும் நல்லறிவைத் தருவாளுக ஆமீன்.

ஹிக்காயத்து.

திற்றத் துன்னுசிகீனென்னுங் கித்தாபில்வருகிறது நமது நாயக ம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகி வசல்லம வர்களின் புத்திரியாயும் மாதர்களுக்கு நாயகியாயும் விளங்கும் பீவி பாத்திமா றலியல்லாகு அ ன்கா அவர்கள் மவுத்தானவுடனே ஹஸறத்து அலி ஹசன் ஹூஸைன் அஷ்ஹாபு கொப்பாறி றலியல்லாகு அன்கும் இவர்கள் நான்கு பெய

ர்களும் ஜனசாவைச் சுமந்து அனேக சனங்களுடன் கொண்டுபோய்க் கபுறருகில் இறக்கிவைத்து கபுறே இவர்கள் நபிநாயகத்தின் புத்திரி அலியிபுனு அபீத்தாலிபின் மனைவி ஹசன் ஹுசைனின் மாதாவாகிய பாத்திமா நாயகியா யிருக்கும் யென்று அறிவாயோ வென்று அழுதற்றெலிய்யல்லாகு அன்கு மவர்கள் சத்தமிட கபுறிலிருந்து நான் வம்மிசத்தைசொல்லி வீறுபேசும்படியான விடல்ல யாருக்கு நன்மையதிகமும் கல்பு சலாமத்து மிருக்குமோ அவர்கள்தான் யென்னி லீடேற்றம் பெறுவார்களென்று மறுசத்தம் வந்தது:

ஹிக்காயத்து.

ஈசா அலைகிஸ்ஸலா மவர்களிடத்தில் சில காபிரீன்கள் சொன்னதாவது நீர் நூதனமாக அடக்கின மையத்துகளை யெழுப்பினீர் வெகுகாலஞ் சென்ற மையத்திலொருவனாய் மெழுப்ப வில்லை மவுத்தான மையத்தை நீர் கயாத்தாக்கிறது மெய்யாயிருந்தால் நூகுஅலைகிஸ்ஸலா மவர்களுடைய மகன் (ஷாமு) யென்கிறவனை எழுப்பிக்காட்டும் அப்போதுதான் உம்மை நபியென்று வுண்மை கொள்வோமென்றார்கள்.

அப்பவே ஈசா அலைகிஸ்ஸலா மவர்கள் (ஷாமு)வென்பவருடைய கபுறினிடத்தில் வந்து அல்லாகுத்தஆலா இடத்தில் இரண்டு றக்காஅத்துத் தொழுது துஆக்கேட்க அல்லாகுத்தஆலா அவர்களை எழுப்பினன் அப்போது அவர்களின் தலையுந் தாடியும் நரைத்திருந்தது உம்முடைய காலத்தில் நரையில்லையே வுமக்கு நரை யேதென்று ஈசா அலைகிஸ்ஸலாமவர்கள் கேட்க நீர் கூப்பிட்டதர்க்கு கியாம நாள் வந்துவிட்டதோவென் றெண்ணின திடுக்கத்தால் நரைத்துவிட்ட தென்று சாமு சொன்னார்கள்.

நீர் மவுத்தாகி யெவ்வளவு கால மாச்சுதென்று ஈசா அலைகிஸ்ஸலா மவர்கள் கேட்க (சுதூ) வருடமாச்சுது இதுவரைசக்கருத்தினுடைய வருத்தம் என்னைவிட்டு நீங்கவில்லையென்று சொன்னார்கள் அப்பால் அவர்களை பழையபடி கபுறில் மீளவைக்கப்பட்டது இதைப்பார்த்துச் சிலர்கள் நபி ஈசா அலைகிஸ்ஸலாமவர்கட்கு ஈமான் கொண்டார்கள்.

இன்னும் சில மனிதர்களைச் சிரிக்கும்படியாக நபிநாயக மவர்கள் கண்டு மவுத்தை நினைத்தீர்களே யானால் இப்படிச் சிரிக்கமாட்டீர்கள் கபுருகிறது நல்லோர்களுக்கு சுவர்க்கத்தின் பூங்காவனமும் பாவிகளுக்கு நரகத்தின் கிடங்குமா யிருக்குமென்று நமது நாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிஉசல்ல மவர்கள் திருவாய்மலர்ந் தருளினார்கள் இச்செய்திகள் தன்பீகுல் காபிலீ னென்கிற கித்தாபில் வருகின்றன.

(ஆதலால்) மனிதர்களுக்கு வம்மிசம் பொருள் சொற்சத்தி சுற்றத்தார் இவைகள் யாதொன்றும் ஆகிறத்திர்க்கு உபயோகமாகாது இன்னம் மவுத்தைத் தட்டி விலக எவர்களாலு முடியாது மவுத்து வருகிறதர்க்கு முன் புத்திசாலிகள் அதர்க்கு ஆகுமான தக்குவாச் செய்துக்கொள்வார்கள் அல்லாகுத்தஆலா நம்மள் யாவரையும் ஈமானுடன் மவுத்தாக்கிச் சக்கருத்தின் வருத்தத்தை இலேசாக்கிவைப்பானாக ஆமீன் யாஅற்றக மற்றாகிமீன்.

தொழுகையின் பிரசங்கம்

முற்றிற்று.

ஸக்காத்தின் பிரசங்கம்.

குறுஆன் சரீபில் (௩௨) தானத்தில் ஸக்காத்தைத் தொழுகையுடன்சேர்த்து அல்லாகுத்த ஆலா திருவுளம்பற்றி யிருக்கிறான் தொழுகைக்குப் பின்னாலே மற்ற இபாதத்துகளிலெல்லாம் சக்காத்து மிகவும் வரிசையுடையதா யிருக்கும்.

ஸக்காத்துடைய மகிமையின் பயான்.

குறுஆன் சரீபில் ஈமான்கொண்ட ஜனங்களே கொள்வினை கொடுப்பனை தோழமை யொன்றுக்கொன்று சிப்பாரிசை இவைகள் செல்லாத நாள் வருகிறதர்க்கு முன்பாக உங்களுக்கு நான் தந்திருக்கிற முதலில் நின்றும் ஸக்காத்துக் கொடுங்க ளென்று அல்லாகுத்த ஆலா திருவுளம் பற்றினான்.

ஹதீது.

உங்களுடைய முதற்களை ஸக்காத்துக் கொடுக்கிறது கொண்டு கார்மானமாக்கிக் கொள்ளுங்கள் நசலாளிகளுக்கு சதக்காவைக்கொண்டு மருந்து செய்யுங்கள் பலாய் முசீபத்துகளுக்குத் தாழ்மையுடன் துஆக் கேட்கிறதுகொண்டு முன்னோக்குங்களென்று செய்யிதுல் முறுசலீனாகிய நமது நாயகம் முகம்மது ந[illegible]ல்லாகு அலைகி ஓசல்ல மவர்கள் திருவுளம் பற்றினார்கள்.

றி[illegible]யத்து

உலமாக்களிற் சில[illegible]பேசிவருகிறதாவது அல்லாகுத்த ஆலா நபி ஆதம் அலைகிஸ்ஸலா[illegible] மவர்களுடைய முதுகில்நின்றும் அவர்கள் பிச்சளத்தை வெளிப்படுத்தும்போது அவர்களிற் சீமான்களை வேறாகப் பிரித்து என் னடியார்களில் எளியவர்களுடைய றிசுக்கை யுங்கள் வசம் வைத்திருக்கிறேன் நீங்கள் மருண்டுபோய் அவர்களுடைய இரணத்

தைக் கொடாமல் தடுத்துக் கொள்கிறதை நானுங்களுக்கு அச்சம் பூட்டி யறிவிக்கிறேன் அவர்கள் ரிசுக்கைக் கொடாதிருக்கில் உங்கள்பேரில் என்னுடைய கோபம் இறங்கிவிடுமென்று அல்லாகுத்த ஆலா திருவுளம் பற்றினான் யென்றும் (இன்னும்) சாலிகானவர்களிற் சிலர் பேசிவருகிறதாவது முந்தின நபிமார்களுடைய உம்மத்துகளின் சக்காத்து முதற்களை மனிதர்கள் தின்னுகிறதை ஹறாமாக்கப்பட் டிருந்தது வானத்திலிருந்து வொருவகை நெருப் பிறங்கி அந்த ஸக்காத்து முதற்களைக் கரித்துவிடும் நமது நாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகி வசல்லமவர்க ளும்மத்துகளுடைய ஸக்காத்து முதற்களை யதாக்குப் பாத்திரப் பட்டவர்கட்கு அல்லாகுத்தஆலா ஹலாலாக்கி வைத்தான் அந்த சக்காத்துமுதல் கழிவாக யிருப்பதால் அல்லாகுத்த ஆலா பனிஹாசிம் கிளையாருக்கு ஹறுமாக்கி வைத்தான் அவர்கள் துப்புரவானவர்களாக யிருக்கும்.

ஸக்காத்துக் கொடாதவர்களுடைய கெடுதியின் பாடு.

அல்லாகுத்த ஆலா கொடுத்த முதலை ஹக்கின்படி செலவு செய்யாமல் லுத்தத்தனஞ் செய்யும்படியாகிய ஜனங்களுக்கு அது நலவென்கிறதாக நபியே நீர் யெண்ணிக்கொள்ளாதையும் அதுஅவர்கட்கு மிகுக்த கெடுதி யுடையதாயிருக்கும் மேலைக்கி கியாமநாளில் அம் முதலைப் பாம்பாகச் சமைத்துக் கழுத்திற் போடப்படும் அப்பாம்பு நானுன்னுடைய புதையலாக யிருக்கும் நானுன்னுடைய முதலாக யிருக்குமென்று சொல்லி அவனுடைய இரண்டு கன்னத்தையுங் கடிக்குமென்றும்அம்முதற்களை நரகத்திற் காச்சித் துன்யாவில் யேழைகளைக்கண்டு சுளித்த முகங்களிலும் யேழைகளைக் கண்டு திரும்பின விலாக்களிலும் பிற் காட்டிய முதுகுகளிலும் இதுதான் நீங்கள் உங்கள் ஜடல்த்திர்க்குத் தக்கரியஞ் செய்து வைத்தது அதின் லாபத்தைப் பெற்றுக் கொள்ளுங்களென்று சொல்லிச் சூடு போடப்படுமென்றும் இன்னும் சக்காத்துக்

கொடாம லிருப்பார்களே யந்த முஷரிக்கென்னு மிணை வைக்கிறவர்க
ட்கு வொயி லென்கிற நரகமென்றும் அல்லாஹு சுபுகானஹு வத்தஆ
லா குறுஆன் சரீபில்த் திருவுளம் பற்றினன்.

ஹதீது.

ஸக்காத் தாகிறது இசுலாத்துடைய லாபமா யிருக்கும் சக்காத்
துக் கொடாதவர்களுடைய முதலே யொழியக் கடலிலுங் கரையிலுங்
கலாக் காகமாட்டாதென்றும் மிகுருசுடைய இரவையிற்பணக்காரரில்
மிகுந்தபேரை நரகத்திற் கண்டே னென்றும் மிஸ்கீன்கள் சீமானுக்கு
ஐந்துநூறு வருடத்திற்குமுன் சுவர்க்கம் புகுதுவார்க ளென்றும் இ
மாமுல் முத்தகீனுகிய நமது நாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகி
வசல்லமவர்கள் திருவுளம் பற்றினர்கள்.

ஹிக்காயத்து.

றூகில் பயானென்கிற தபுசீரிற் சொல்லிவருகிறதாவது மூசாஅ
லைகிஸ்ஸலாமவர்கள் மிகவும் உள்ளச்சத்துடன் தொழுதுக்கொண் டிரு
க்கிற வொரு மனிதனைக்கண்டு புதுமையாகி யாண்டவனே இந்த மனி
தனுடைய தொழுகையை யழகாக்கிவைத்த காரண மென்னவென்று
ஆச்சரியமடைந்து கேட்டார்கள் அப்போது அல்லாகுத்தஆலா மூசா
வே அவனொரு நாளொன்றுக்கு ஆயிரம் றக்காஅத்துத் தொழுது ஆ
யிரம் அடிமையை யுரிமைவிட்டு ஆயிரம்விடுத்தம் ஜனசாத்தொழுகை
யுந் தொழுது ஆயிரந்தடவை பீசபீற்செய்தாலு மிவைக ளடங்கலு ம
வனுக்குப் பிரயோசனங்கொடாது அவன் தன்னுடைய முதலுக்கு சக்
காத்துக் கொடுக்கிறமட்டிலுமென்று திருவுளமானன்.

ஹிக்காயத்து.

திறசுமாதுல் குறுஆனுகிய இபுனு அப்பாசு றலியல்லாகு அ
ன்குமா அவர்களுடைய காலத்தில் ஒரு மனுடன் மவுத்தாகி அவனுக்
குக் கபுறு தோண்டப்பட்டதில் அந்தக் கபுறி லொருபாம்பைக்கண்டு

அதை அவர்கட்கறிவித்ததில் அவர்கள் வேறொரு கபுறைத் தோண்டச்சொன்னார்கள் அப்பால் வேறொரு கபுறைத் தோண்டினதிலும் முன்போலவே பாம்பைக் காணப்பட்டது இந்தப்படி யேழுகபுறு தோண்டப்பட்டு யேழிலும் பாம்பிருந்தது பின்பு இபுனுஅப்பாசுறலியல்லாகு அன்குமா அவர்கள் மவுத்தானவனுடைய தாய்பிள்ளைக ளிடத்தில் அவர்கருமத்தைக் குறித்து விசாரித்ததில் அந்த மனிதன் கணக்குப்படி ஸக்காத்துக் கொடாதிருந்தா னென்றார்கள் அப்பா லவனை அந்தக்கபுறிற்றானே பாம்புடன் அடக்கும்படி இபுனு அப்பாசுறலியல்லாகு அன்குமா அவர்கள் உத்தரவு செய்தார்கள் அந்தப்படி யடக்கஞ் செய்யப்பட்டது இப்பிரகாரம் (நுசுகத்தில்மசாலி)சென்கிறகித்தாபில்வருகின்றன·

ஸக்காத்தின் சூக்குமுகளின் பாபு·

ஸக்காத்தாவது முதலில் ஈவுப்படி யெடுத்து ஹாஷீங் கிளையார்களாகிய ஸாதாத்தின் பக்கீறுகளைத் தவிர மற்றமிசிக்கீன்களுக்குக்கொடுத்து தனக்கு ஒரு பிரயோசனத்தைப் பகரம் வாங்காமல் அல்லாவுக்காக அவர்களுக்குப் பாத்திர மாக்கிவைக்கிறதா யிருக்கும்.

(ஆனால்) சக்காத்து முதலே ஈவுப்படியெடுத்து சக்காத்தை நிய்யத்துச்செய்து சோறு கறியாக்கித் தானுங் கூட யிருந்து மிசிக்கீனுடன் தின்றால்க் கூடாது அவன்கையில் யெல்லாத்தையுங் கொடுத்துவிட்டால் கூடும் பைத்தியகாரனுக்கும் புலூக்குக்குஅடுக்காத சிறுபிள்ளைகளுக்குங் கொடுக்கக்கூடாது அந்த இரண்டு பெயர்களுடனே தாய்,தகப்பன் அல்லது ஒசியத்துக்காரன் வந்து வாங்கினால் ஆகும்·

இனி அது பறுலாகிறதின் சறுத்தாவது.

பைத்தியமன்றிப் புத்திசாலியா யிருக்கிறதும் பாலிகாயிருக்குறதும் முசுலிமா யிருக்கிறதும் எசமான்மகனாக யிருக்கிறதும் அடிமைசத்

புறத்தால்த் தேடுதலுண்டாகிய கட்டைவிட்டும் வீடு சிலை முதலான அகத்தியமாகிய சாமான்களை விட்டும் மேல் மிச்சமானஐவேசென்னும் வளர்மையாகிய நிறப்பமுடைய நிசாபுக்குச் சொந்தம் பெறுகிறதுமாயிருக்கும்.

(அதை யிறுக்கிறது பறுலாகிறதின் சறுத்தாவது) முதல் வந்து ஒருவருடம் நிறம்புகிறதாயிருக்கும் ஒரு வருடத்தினிடையிற் கச்சவடம் அனந்தரம் முதலிய மற்ற வகைகளாற் பிரயோசனந் தேடப்பட்டதை அந்த அசல் நிபாசுடனே சேர்த்து யெல்லாத்திர்க்குஞ் சக்காத்துக்கொடுக்கவேண்டும் நிசாபு வருசத்துடைய துவக்கம் ஒடுக்கம் நிறப்பமாயிருக்கிறது சறுத்தாயிருக்கும் நடுவிற் குறைந்து மறுபடி யுண்டாகிவிட்டாலுஞ் சரி.

(இனி) சக்காத்தை நிறைவேற்றுகிறது துருஸ்தாகிறதின் சறுத்தாவது அதைக் கொடுக்கும்போது யென்பேரில்விதியான சக்காத்தைக் கொடுக்கிறேனென்று அல்லது அம்முதலைக் கணக்குப்பார்த்தெடுத்து வேறே வைக்கும்போது ஸக்காத்துக் கொடுக்கிறதர்க்காக யெடுத்துவைக்கிறேன் யென்று நிய்யத்துச் செய்யவேணும் யெங்கினும் ஒரு மனிதன் தன்னுடைய முதலடங்கலையும் நிய்யத்தில்லாமற் கொடுத்தால் துருஸ்தாகும் ஆனால் நிய்யத்தில்லாமல் அம்முதலில் அரைவாசி முக்கால்வாசி கொடுத்தால் நிய்யத்தை விட்டதால் பறுலுக்குச் சேராது சுன்னத்தான சதக்காவிற் சேரும்.

நிசாபின் விபரம்.

அதாவது பொன்னிலிருபதுகளஞ்சியும் வெள்ளியிலிருநூறுதிறுகமுமாயிருக்கும் களஞ்சியென்பது இருபது பணவிடை திறுகமென்பது பதினாலு பணவிடை பணவிடை யென்பது ஐந்து தொலிக்கோதும்பை இடையாயிருக்கும்.

பொன் வெள்ளியில் காணையத்திர்க்கும் வார்க்கப்பட்டதர்க்கும் கனகத்துக்கும் ஒரே குக்குமாயிருக்கும் கச்சவடச் சரக்கு இருந்தால் தங்க

விலையாவது வெள்ளிவிலையாவது வைத்துக் கணக்கிட்டு ஈவுப்படி கிரையத்தில் ஸக்காத்துக்கொடுக்கப்படும் சரக்குகள் நிசாபின் கிரையமாகாவிட்டால் தங்கம் வெள்ளிக் கணக்குடன் இதின் கிரையத்தையுஞ்சேர்த்து ஈவு செய்து கொடுக்கப்படும் இப்போது சொன்ன நிசா புடையவர்கள் தங்களின் சொத்தில் நாற்பதிலொன்று கொடுக்கிறது பறுலு நிசாபுக்கு அதிகப்பட்டது ஐந்திலொருபங்கானால் அடங்கலுக்கும் வீதப்படி கொடுக்கவேணும் அய்ந்திலொரு பங்குக்குக் குறைந்தால் அதை மன்னிக்கப்படும் நிசாபுக்குமாத்திரங் கொடுக்கப் படும் அதெப்படியெனில் ஒரு மனிதனுக்கு அய்ம்பது ரூபா யிருந்தால் ஒண்ணேயகால் ஐம்பத்தொன்பதுவரை யிருந்தாலும் ஒண்ணேயகால் அறுபது இருந்தால் ஒன்னரைரூபாய் இப்படியே ஈவுசெய்துகொடுக்கவேணும்.

ஆடு மாடு வகையறுக்களுடைய ஸக்காத்தின் பயான்.

ஒரு வருடத்தில் மிகுந்த நாளைக்குக் கைத்தீவனமில்லாமற் காட்டின் மேய்ந்து ஜீவிக்கும்படியான ஆடுகளிலும் மாடுகளிலும் ஒட்டகங்களிலும் ஸக்காத்துக் கொடுக்கிறது பறுலா யிருக்கும் கைத்தீவனந் தின்னப்பட்டதுகளிலும் வேலைகளுக்கு வைத்திருக்கப் பட்டதுகளிலும் ஐந்துக்குக் குறைந்த ஒட்டகங்களிலும் முப்பதுக்குக் குறைந்த மாடுகளிலும் நாற்பதுக்குக் குறைந்த ஆடுகளிலும் ஸக்காத்து பறுவில்லை.

இனி ஆடு (௪௰) திலிருந்து(௱௨௰)வரை யொரு ஆடு கொடுக்கப்படும் (௱௨௧) முதல் (௨௱) வரை இரண்டு ஆடு கொடுக்கப்படும் (௨௱௧) லிருந்து (௩௯௯) வரை மூன்று ஆடு கொடுக்கப்படும் (௪௱) க்கு நாலு கொடுக்கப்படும் அப்பால் யெவ்வளவு அதிகப்பட்டாலும் நூற்றுக்கு ஒன்று விகிதம் கொடுக்கப்படும்.

இத்தேயங்களில் காடேறி மேயும்படியான ஒட்டகங்களும் மாடுகளும் உபாயமாயிருப்பதால் அதின் ஹுக்குமுகளை இங்ஙனம் விரிவாய் யெழுதப்படவில்லை.

இனி நன்செய் புன்செய் முதலிய நிலங்களில் வரப்பட்ட மாசூர்களிலும் ஸக்காத்துக் கொடுக்கிறது பறுலாயிருக்கும் அதின் குக்குமுகள் விரிவாக யிருக்கின்றன.

{ஸக்காத்தைவாங்கப் பாத்திரமானவர்களின் பயான்}

சக்காத்தை வாங்கப் பாத்திரமானவர்கள் யேழு வகையாகயிருக்கும் அதில் (க-வது) பக்கீறு அவன் நிசாபுக்குக் குறைந்த ஐவேசுடையவனாயிருக்கும் (உ-வது) மிசிக்கீன் அவன் யாதொன்று மில்லாதவனாயிருக்கும் (ங-வது) ஸக்காத்து முதலைப் பிரித்து சுல்த்தானிடங் கொடுக்கிற தண்டல்க் காரனாயிருக்கும் இவனுக்கு வேலையின்சம்பளங்கொடுக்கப்படும் (ச-வது) முக்காத்தபென்னு முறி யெழுதிக்கொடுத்த அடிமை ஆனால் ஹாசிமிய்யுடைய முக்காத்தபுக்குக் கொடுக்கப் படாது (ரு-வது) கடனைவிட்டும் மேல் மிச்சமாகிய நிசாபை யுடைய தாக்காத கடன்காரன் அவனுக்குக் கொடுக்கிறதுக் கடனில்லாத்த பக்கீறுக்குக் கொடுக்கிறதைக் காண மிக யேற்றமாயிருக்கும் (சு-வது) பீசபீலுக்குப் போகும்போது தட்டு முட்டுச் சாமான்செலவாகிப் படைக்குப்போய்ச் சேருகிறதர்க்கு யேலாம லிருக்கிறவர்கள் (எ-வது) முசாபிர்அவன் யெப்பேர்க்கொத்தவ னென்றில் அவனுக்குத் தன்னூரில் முதலிருக்கிறது வழியில் முட்டுப்பாடாகி அந்த முத லிவனுக்கு வுதக வில்லை அப்பேர்க் கொத்தவனாயிருக்கும் இந்த யேழு கூட்டக்காரர்கள் யெல்லோருக்கும் ஸக்காத்தைப் பிரித்துக் கொடுக்கிறது மாகும் ஒரு பக்கீறுக்கு மாத்திரங் கொடுக்கிறது மாகும்,

ஆனால் ஒருவனுக்கு நிசாபுத் தொகையைக் கொடுக்கிறது மக்ருறு ஒருவன் கடன்காரனாகி யல்லது பிள்ளை குட்டி செலவுடையவ

ரு யிருந்தால்க் கடனை இறுக்கும்படியாயுங் கடன்போக மிச்சம் நிசாபு க்கு அதிக மாகாமலும் செலவுகாரனுக்குச் செலவுக்குக்காணும்படியா யுங் கொடுக்கிறது நல்லது.

ஸக்காத்து முதலைத் திம்மிக் காபிர்களுக்கும் பள்ளிவாசற் கட்டுகிறதர்க்கும் கபன் செய்கிறதர்க்கும் (உா)திறுகமென்னும் நிசாபுடைய சீமானுக்கும் அவனுடைய சிறு குழந்தைகளுக்கும் அவன் முறியெழுதி வாங்கிய அடிமைகளுக்கும் பனூஹாசிம்களுக்கும் அவர்கள் உரிமைவிட்ட பயல்களுக்கும் ஸக்காத்துக் கொடுத்தால் கூடாது யென்கிலும் யிவர்களுக்கு சதக்காக் கொடுக்கலாம்.

இன் ஸக்காத்துக் கொடுக்கிறவன் தன்னுடைய தாய் - தகப்பன் பாட்டன் - பாட்டியாள் - தன் பிள்ளை - பிள்ளையுடைய பிள்ளை - தன் பெண்சாதி - தன் னடிமை - தான் முறியெழுதி வாங்கிய மூக்காதப்பு யென்னு மடிமை ஆகியஇவர்கட்கு ஸக்காத்துக்கொடுத்தால்க்கூடாது.

இனி சக்காத்துக் கொடுத்தால் ஒரு பக்கீறுடைய செலவுக்கும் அவன் பிள்ளை குட்டிகளுடைய செலவுக்கும் ஒரு நாளைக்குக் காணும் படி கொடுக்கிறது முஸ்தகப்பு.

(ஸக்காத்துக் கொடுக்கிறதின் ஒழுங்காவது) தன் னுடற்பிறப்பாகிய மிடிமை யாளனுக்குக் கொடுக்கிறது அப்பால் அவன் பிள்ளைகளுக்குக் கொடுக்கிறது யெளியவனாகிய சிறிய தகப்பன் பெரியதகப்பன் மாமன் அப்பால் அடுத்தவீட்டார் அப்பாத் தன் தெருவிலுள்ளவர்கள் அப்பால்த் தன் னூரிலுள்ளவர்கள் அப்பாலந்த வூரைச்சுற்றி யிருக்கப்பட்டவர்கள் இந்த விபரப்படி கொடுக்கிறது மிச்ச மேற்றமாயிருக்கும் சக்காத்தை வாங்கிப் பாவமான வழியில் செலவு செய்கிறவனென்று தெரிந்தால் அவனுக்குக் கொடுக்கிறது தகுமல்ல.

சுன்னத்தான சதக்காவின் பயான்.

செலவுகளில் யேற்றமான செலவானது தன்பேரிற் செலவு செய்கிறதாயிருக்கும் அப்பால்த் தான் அன்னவஸ்திரங்கொடுக்க வாஜிபானவர்கட்குச் செலவு செய்கிறதாயிருக்கும் மற்றச் செலவைப் பார்க்கிலும் இந்த இரண்டுவிதமான செலவுகள் கொடுக்கிறது அகத்தியமான நேரத்தில் முற்படுக்துகிறது பறுலாயிருக்கும் இவர்கட்கு அகத்தியமான செலவுபோக மீதம் மற்றப் பெயர்கட்குக் கொடுக்கிறதுமிச்சம் நல்லது.

இன்னும் தான் சரீரசுகமாக யிருக்கும்போது ஸதக்காக்கொடுக்கிறது நசலில் சதக்காக் கொடுக்கிறதைக்காண மிகவும் நன்மையா யிருக்கும் தன் பந்துஜனங்கள் பட்டினி பசியாயிருக்கப் பார்த் திருந்து அவர்கட்குக் கொடுக்காமல் மற்றப் பெயர்கட்குக் கொடுக்கிறது ஹறுமாயிருக்கும் பந்து ஜனங்கள் சம்மதப்பட்டால்க்குற்றமில்லை ஸதக்காவை இரகசியமாய்க் கொடுக்கிறது யேற்றம் ஆனால் நாம்கொடுக்கிறதைப்பார்த்து மற்றவர்களுங் கொடுப்பார்க ளென் றெண்ணிப் பகிரங்கமாய்க் கொடுக்கிறது குற்றமில்லை.

ஸதக்காவின் தவாபு,

சதக்கரவின் தவாபு அஞ்சுவகைப்படும் அதில் (க-வது) சரீர சுவாத்தியமான மனிதனுக்குக் கொடுத்தால் ஒண்ணுக்குப் 'பத்தும்' (உ-வது) நோய்மிடிமையாளனுக்குக்கொடுத்தால் ஒண்ணுக்குத் 'தொண்ணூறு' (ங-வது) தன் பெந்துகளில் யேழையா யிருக்கிறவர்கட்குக் கொடுத்தால் ஒண்ணுக்குத் 'தொள்ளாயிரம்' (ச-வது) தாய் தகப்பனுக்குக்கொடுத்தால் ஒண்ணுக்கு 'இலட்சம்' (ரு-வது) பிக்குகு மசலாத் தெரிந்திருக்கிற ஆலிம் அல்லது இல்மு படிக்கிறவர்களுக்குக் கொடுத்தால் ஒண்ணுக்கு 'ஒன்பதுலட்சம்'

இயாராவது வொரு மனிதன் ஒரு கடுகுப்பிரமாணமாவது அல்லாகுத்த ஆலாவுக்காக ஒரு மிசிக்கீனுக்கு ஸதக்காக் கொடுத்தால் அல்லாகு சுபுகானகுத் தஆலா ரகசியமாக அவனைச் சுவர்க்கத்திற் சேர்ப்பான்.

இன்ஸான்வுங்களி லொருமனிதன் பசீலத் தனத்தை யொடுக்கிச் சரீர சுவாத்தியமா யிருக்கும்போது கால்ரூபாய் சதக்காச்செய்கிறது அவன் மவுத்தாகும்போது இருபத்தியஞ்சு ரூபாயை யொசியத்துச் செய்து செலவு செய்கிறதைக்காண யேற்றமாயிருக்கும்.

ஒரு ஜனங்கள் அறநிமானத்தை முறித்தால் அல்லாகுத்தஆலா ஒன்றுக்கொன்று அவர்களுக் கிடையில் பழிசெய்து மவுத் தாகும்படி கட்டளை செய்வான் ஒரு கூட்டத்தார் வஸினுவை மிகுத மாக்கினுல் அவர்களின்பேரிற் பேதியைக் கட்டளைசெய்வான் ஒரு கூட்டத்தார் சக்காத்தைக்கொடாவிட்டால் மழையையவர்கள்பேரில இறக்கமாட்டான் யென்று இரு சகானுக்கும் நாயகமாகிய முகம்மது நபிசல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் திருவாய்மலர்ந் தருளினதாக (தன்பீகுல் காபிலீன்) யென்கிற கித்தாபில் வருகின்றன.

இன்னம சபீகுல் முதின்பீனுகிய நமதுநாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் வுங்கள் வாயலில் வந்து கையேந்திக் கேட்கிறவனுடைய துஆவைக் கொள்ளையிட்டுக் கொள்ளுங்கள் யென்று திருவுளம் பற்றினுர்கள்.

இன்னம் ஆயிசா றலியல்லாகு அன்ஹா ஒருமிசிக்கீனுக்கு யேதாவது கொடுத்தால் அவன் துஆக்கேட்டவுடனே நாம் கொடுத்ததற்கு இவனுடைய துஆ ஈடாகிவிடுமென்று பயந்து அவனுக்காக இவர்களும் பதில் துஆச் செய்வார்கள்.

(இனி) பாவிக்கானவர்கள் யென்னும் பெரும்பாவமுடைய கள்ளு ஜினுச் செய்யும்படியானவர்களுக்கு ஒருநாள் வொஜீபனத்தைக் காண வதிகங் கொடுக்கப்படாது மிகுந்த பேர்கள் வந்து சதக்காக் கேட்

டால் இவனிடத்தில் யெல்லாருக்குங் காணும்படி ஐவேசு இல்லாவிட்டால் சில்லனை யதிகம் மாருமல் இவன் கல்பு யாரளவில்த் திரும்புகிறதோ அவனுக்குக் கொடுக்கிறது நல்லது

இன்னும் கேட்டவனைச் சும்மா வனுப்பாமல் யேதாவது இருந்தால் அதைக் கொடுத்தனுப்பவேணும் இல்லாவிடில் நலவான வார்த்தை சொல்லியனுப்பவேணும் மூன்று விடுத்தஞ் சொல்லியும் போகாவிட்டால் விரட்டுகிறது குற்றமில்லை தான்கொடுத்ததை வுபகாரமாகக் காணுமல் அல்லாகுத்த ஆலா தந்த நிசுக்கைக் கொடுத்தோ மென்று யெண்ண வேண்டும்.

கையேந்திக்கேட்கிறதின் பயான் ஹறத்து.

இயாராகிலு மொருவன் மனிதர்களிடத்திற் கேட்டு வாங்கிச் சீமானுகி விடலாமென் றெண்ணி யாசகம் வாங்கினுல் அல்லாகுத்த ஆலா அவனுக்கு மிடிமையை அதினப்படுத்துவானென்று நபிநாயகம் முகம்மது றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் திருவுளமானுர்கள்.

இன்னும் ஒரு மனிதன் இன்ன மொரு மனிதனிடத்தில் வந்து ஓய் இன்னுரே அல்லா முகத்திர்க்காக யெனக்கு யேதாவது தாருமென்று ஆண்டவன் பெயரைச்சொல்லிக் கேட்கிறது பிசகா யிருக்கும் அப்படிக் கேட்டதர்க்குக் கொடாதவன் கியாமநாளில்த் தன்னுடைய சரீரத்தில் யெலும்பில்லாமல்த் தளும்பிக்கொண் டிருப்பானென்று ஹலறத்து ஹிலுறு அலைகிஸ்ஸலா மவர்கள் சொல்லி யிருக்கின்றுர்கள் ஆகலால் அல்லாவுடைய பெயரைக்கொண்டு கேட்கிறதுங் கேட்டாற் கொடாதிருப்பதும் பாவமாயிருக்கும்.

இனி யொரு மனிதனுக்கு அன்றைக்குக் காணும்படியான ஜீவனமுஞ் சூட்டையுங் குளிரையுந் தாங்கும்படியான வுடு பிடவையு மிருந்தால் அல்லது இந்த இரண்டையுஞ் சம்பாத்தியஞ் செய்துக்கொள்

ளக் கூடியவனு யிருந்தால் அவன் ஒருவரிடத்தில் வாயிழப்பது ஆகமா ட்டாது ஆனல் இவன் கேட்காதிருக்கக் கொடுத்ததை வாங்கிற தாகும் ஒருவன் ஒரு ஸுவாற் செய்தால் அவனை யடித்து வெருட்டக் கூடாது அவன் குதிரைமே லேறிவந்து கேட்டாலுஞ் சரி அவன் கையேந்தினு ற் கொடுக்கத்தான்வேணும்.

இன்னம் இல்மு படிக்கிறவர்கள் தீனுடைய வேலையிலிருப்பதா ல் முட்டிடைக்காக ஒருவரிடத்திற் சுவாற் செய்கிறதாகும் அவர்கள் இ ந்த இல்மை விட்டுவிட்டுச் சம்பாத்தியஞ் செய்யத் திறமையிருந்தாலுஞ் சரியே

இனி கையி லில்லாதவனுக்கு மற்றொருவன் வேறே மனித ரிட த்தில்க் கேட்டு வாங்கிச் சேகரித்துக் கொடுக்கிறது நலவின் பேரிலும் தக்குவாவின் பேரிலும் வுதவியான செயற் செய்கிற நடத்தைகளிலுள் ளதா யிருக்கும்,

இனி கையிலில்லாதவன் சம்பாதிக்க யேலாதவனுயிருந்தால் வீ டுகடோறும் போய் வாங்கத் திராணிபெற்றால் அவன் வாங்கித்தின்னு கிறது பறுலா யிருக்கும் ஒருவன் வெளியிற்போகத் திராணியில்லாவி ட்டால் அவனுடைய விபரத்தை யறிந்தவர்கள் அவன் யெழுந்திருந்து இபாதத்துச் செய்யப் பெலம் வருகிறமட்டிலும் அவனுக் குபகாரஞ் செய்கிறது பறுலு அவனுக்கு ஒருவரும் ஒஜீபனங் கொடுக்கா திருந் துவிட்டால் அவனுடைய விபரத்தை யறிந்தவர்க ளடங்கலும் பாவி யாகி விடுவார்கள் அவன் செய்கையை யறிந்தவ னிடத்தில் ஒன்று மில் லாவிட்டால் மற்றவர்க ளிடத்திற் சொல்லி யுபகாரஞ்செய்யத் திராணி பெற்றால் அப்படி செய்கிறது அவன்பேரில் பறுலாகவிருக்கும்.

ஹிக்காயத்து.

ஹலறத்து ஹசனுல் பசறீ றகிமகுல்லாஃ அவர்களிடத்தில் ஒரு மிசிக்கீன் தெருவழியில் யேதாவது தரவேணுமென்று கேட்க மேலே போட்டிருந்த துப்பட்டியை யுடனே கொடுத்துவிட்டார்கள் அப்பொ

மூது வீட்டிற்போய் வேறேயெடுத்து மேலேபோட்டுக்கொண்டு கொடுக்கப்படாதாவென்று வொரு மனிதன் கேட்க இதர்க்கு முன் யெங்கள் பள்ளியில் ஒரு மிசிக்கீன் யென்னிடத்தில் ஒஜீபனங் கேட்டதர்க்கு வீட்டிற் போயனுப்புகிறேனென்று சொல்லிவிட்டு வீட்டுக்கு வந்து மறந்துவிட்டேன் மறுநாட் காலையில் மிசிக்கீனைப் பள்ளியில் மவுத்தாயிருக்கக்கண்டு நாங்கள் கவலையுற்று கபன்செய்து கபுறில் அடக்கினேம் அப்பால் அந்த கபன்சீலை மிகுறுபில் இருக்கக் கண்டோம் அதில் வுங்களுடைய கபனை நாம் ஒப்பவில்லை யென்று யெழுதப்பட் டிருந்தது அதுமுதல் யாராவது யென்னிடத்தில் யெதாவது கேட்டால் அவர்கட்கு வாயிதாச் சொல்லுகிற தில்லை யுடனே கொடுத்து வீடுவேன் யென்று சொன்னார்கள் ஆங்கயால் ஆய் மூமீன்களே கேட்ட மிஸ்கீன்களை றத்துச் செய்யாமல் வுபகாரஞ் செய்யுங்கள்.

விருந்துடைய வரிசையின் பயான் ஹதீது

எந்த வீட்டிலாவது ஒரு விருந்தாளி வந்தால் றகுமத்துடைய மலக்கும் அவருடன் வருவாரென்றும் யாராவது ஒரு மனிதன் விருந்தாளிக்குச் சங்கை செய்தால் யெனக்குச் சங்கை செய்ததுபோலென்றும் விருந்தாளிக்கிச் சங்கை செய்யவேண்டியது யெல்லா முசிலிமானவர்கள்பேரிலும் வாஜிபா யிருக்குமென்றும் நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் திருவுளம் பற்றினார்கள்,

ஹிக்காயத்து.

றவ்லுற்றயாகீன் யென்கிற கித்தாப்பில் வருகிறதாவது வொருசிற்றூரில் சாலிகான பெண்பிள்ளைகளில் (பில்லத்து) யென்னும்பெயரையுடைய வொரு பெண்பிள்ளை யிருந்தாள் அப் பெண்பிள்ளை இடத்தில் ஒரு ஆடு இருந்தது அதிற் பாலுந் தேனுங் கரவையாகுதென்று பிரஸ்தாபமாகி (அபிறாறபிகில் மாலக்கி றகிமகுல்லா யென்கிறவர்கள் இத்து

டைய நிசத்தை யறியவேணுமென் றெண்ணி அச்சிற்றூருக்குப்போய் அந்தப் பெண்பிள்ளை இடத்தில் விசாரிக்க ஆட்டைக் கொண்டு வந்து நிறுத்தினாள் இவர்கள் அதைக் கரந்ததிற் பாலுந் தேனும் வந்தது இதென்ன காரணமென்று ஆச்சரிய முற்று அவளிடங் கேட்க நாங்கள் யேழைகளாகயிருந்தோம் ஒரு சிறியஆடுமாத்திரம் யெங்களிடமிருந்தது அப்போது வுலுகிய்யாப் பெருநாள்வந்தது யென் புருடன் அதையறுக்கும்படி சொன்னார் யென் சிறுபிள்ளைகளைப் பயந்து நான் அறுக்கப்படாதென்று சொல்லி விட்டிருந்தேன் அப்பால் ஒரு விருந்தாளிவந்ததில் ஒஜ்பனங் கொடுக்க நிருவாகமில்லை யென் புருஷனைப்பார்த்து இவ் விருந்தாளிக்குச் சங்கைசெய்யவேண்டியது கடமையென்று சொல்ல நல்லதென்று ஒப்புக்கொண்டு ஆட்டைப்பிடித்து குழந்தைகள்கண்டால் அழுமென்று மதிலுக்கு வெளியேகொடுவந்துஅறுக்கும்போது வேறொரு ஆடு மதிளிலிருந்து வீட்டிற் குதித்தது அவ் வாடுதா னிது நாங்கள் விருந்தாளிக்குச் செய்தவுபகாரத்தால் இப்படியான காரணமுள்ள வொரு ஆட்டைப் பகரமாக அல்லாகுத்த ஆலா யெங்களுக்குத் தந்தானென்று சொன்னாள் நபஅ நல்லாகு பிஅவுலியாயி ஹிஅஜ்மயீன்.

(ஆதலால்) ஆய் தெளிவாகிய அகப்பார்வைகளையுடையவர்களே தீன்தாராகிய யெமது சகோதரர்களே வுங்களுடைய சொத்து சுகங்கள் பறிபட்டு வழிந்துபோக முன் பறுலாகிய வுங்களுடையசக்காத்துகளை நிறைவேற்றி வருகிறதுடனே சதக்காக் கொடுக்கிறதையும் விருந்தாளிகளுக்குச் சங்கை செய்கிறதையும் யேழை மிசிக்கீன்களுக்கு இகுசான் செய்கிறதையும் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள் நீங்கள் புறக்கும்போது வுரியாணைகப் பிறந்தீர்கள் மவுத்தாகும்போதும் வெறுங்கையாக மண்ணறைக்குட் புகுதுவீர்கள் இந்த பூலோக மாகிறது ஆகிறத்திர்க்கு வுபயோகமாகிற பயிர்ச்செய்யுந் தலமாயிருக்கும் இவடத்திற் செய்த சகாவத்தும் இபாதத்துமே யொழிய வேறே யாதொன்றும் வுங்களுக்கு வுபயோகப்படாது சகாவத்துச் செய்து லாபம் பெறாமல் வுங்களுடைய அனந்தரகாரர்களுக்கு விட்டுவிட்டுப் போகிறதில் வுங்களுக்கு யென்ன வுபயோகம் அவர்கள் உங்களுடைய முதற்களை ஹறாமான செய்

கைகளிற் செலவு செய்து வுங்கள் பெயரை பக்ஙாமஞ் செய்கிறார்க ளே அப்படி வராமல் நம்ம ளியாவருக்கும் அல்லாகுத்தஆலா நற்புத்தி யைத் தந்து நற்பாதையில் செலவு செய்யும்படியான நாட்டத்தையுந்த ந்து நற்களை சேர்ப்பானுக ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

சக்காத்தின் பிரசங்கம்

முற்றிற்று.

நோன்பினுடைய பிரசங்கம்.

சங்கையாகிய குறுஆன் சரீபில் அல்லாகுத்தஆலா திருவுளம்பற் றியிருக்கிறுன் யாதெனில் ஆய் ஒமினுகிய ஜனங்களே வுங்களுக்கு மு ன்னுண்டாகிய சனங்கள்பேரில் நோன்பை விதியாக்கப்பட்டதுபோல் வுங்கள்பேரில் (றம்லான்) மாத்தையின் நோன்பை விதியாக்கப் பட்ட து யென்று

ஹதீது.

சுவர்க்க லோகத்தில் றையானென்று ஓர் வாசலுண்டாயிருக் கிறது நோன்பாளிகளைத் தவிர கியாமநாளில் அவ்வாயலில் வேறொரு வரும் புகுதமாட்டார்களென்றும் அல்லாகுத்தஆலாவுடைய பாதையி ல் நோன்பு பிடிக்கும்படியான மனிதர்களுடைய முகத்தை நரகத்தை விட்டும் (எய) வருடத்தின் பயணத்தூரம் அல்லாகுத்த ஆலா தூரமா க்கி வைப்பானென்றும் சந்திரன் சூரியன் பறவை விலங்கின முதலிய படைப்புகளில் செய்த்தானைத்தவிர மற்ற வெல்லா வஸ்துக்களும் இர விலும் பகலிலும் நோன்பாளிகளுக்குச் சோபனஞ் சொல்லித் துஆச் செய்வார்களென்றும் நபிநாயகம் முகம்மதுசல்லல்லாகு அலைகி வசல் லமவர்கள் திருவுளம் பற்றினுர்கள்,

ஆதலால் ஆய் அசுருபாகிய ஜனங்களே சங்கையாகிய நோன்பு களைப்பிடித்து வருவீர்களாகவும்.

(இனி) அதின் ஹக்குமுகள் யாதெனில் நோன்பாகிறது கய்லு நிபாசு இவைகளைவிட்டுந் துப்புரவாகிய முசுலிமானவர்கள் கிழக்குவெளுத்ததுமுதற் பொழு தடைகிறவரையில் ஞாபகமாய் அல்லதுகத்தாவாய் யாதொரு வஸ்தை யுள்ளே புகுத்தி வைக்கிறதை விட்டும் அபத்தின் ஆசையை நிறைவேத்துவதைவிட்டும் நிய்யத்தோ டிருக்கிறதா யிருக்கும்.

ஆனால் மறதியாகத் தின்றாலுங் குடித்தாலுஞ் ஜிமாகு செய்தாலு முறியமாட்டாது ஞாபகம்வந்தவுடன் விலகவும் (கத்தாவென்பது) வாய் கொப்பளிக்கும்போது நோன்பு ஞாபகத்துடன் தண்ணீர் தொண்டைக்குள் முந்திவிடுகிறதாம் இதுஞாபகத்தைப்போலாயிருக்கும்.

(நோன்பின் றுக்குனுவது) வயிறு அபம் ஆகிய இவை இரண்டின் விருப்பத்தை நிறைவேற்றுகிறதை விட்டும் பிடித்துக்கொள்கிறதாயிருக்கும்.

(நோன்பு துருஸ்தாகிறதர்க்கு சறுத்தாவது) இசுலாமாக யிருக்கிறதும் ஹய்லு நிபாசைவிட்டுந் துப்புரவா யிருக்கிறதும் நிய்யத்து வைப்பதுமா யிருக்கும் ஆனால் ஜனுபத்து முழுக்கைவிட்டுந் துப்புரவா யிருப்பது சறுத்தல்ல.

நோன்புடைய வகைகளின் விபரம்.

றமலானுடைய அதாவான நோன்பும் கலாவான நோன்பும் தெண்டங்களுடைய நோன்பும் பறுலாயிருக்கும் குறிக்கப்பட்டநேர்ச்சை நோன்பும் மொத்தமாகிய நேர்ச்சை நோன்பும் வாஜிபு ஒரு சொற்படி இவை யிரண்டும் பறுவென்றும் வந்திருக்கிறது.

இன்னும் நபில் நோன்பில்த் துடங்கியபின் அதை திறப்ப மாக்கிறதும் அதை பஸாதாக்கினல் அதைக் கலாச்செய்வதும் நேர்ச்சை செய்யப்பட்ட இகுத்திக்காபுடைய நோன்பும் வாஜிபு முகற்றமாதம் ஒன்பது அல்லது பதினேறுநாளுடனே பத்தாநாள் நோன்பும்அறபாநோன்பும் யெல்லா மாதங்களிலும் (௰௩ - ௰௪ - ௰௫) யென்னும் அய்யா

மூல்பீலு நோன்பும் வியாழன் திங்கள் நோன்பும் சவ்வால் மாதம் சு-நோன்பும் பிடிக்கிறதுமுஸ்தகப்பு.

ஹதீது

அல்லாகுத்தஆலா அளவில் நபிலான நோன்புகளில் மிகவு முகப்பானது நபிதாவூது அலைகிஸ்ஸலாம் அவர்களுடைய நோன்புகளா யிருக்கும் அவர்கள் அல்லாகுத்தஆலாவை நாடி யொருநாள் நோன்புபிடிக்கிறவர்களும் ஒருநாள் விடுகிறவர்களுமா யிருந்தார்கள் யென்று நமது நாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் திருவுள மானார்கள்.

இனி ஆறு நோன்பை யொரு சொற்படி சேர்ந்துப் பிடிக்கிற து நல்லது இன்னமொரு சொற்படி முந்தின பத்தில்இரண்டும் இரண்டாம்பத்தில் இரண்டும் மூன்றும்பத்தில் இரண்டுமாகப் பிடிக்கிறது நல்லதாயிருக்கும்.

இனி இரண்டு பெருநாளிலும் ஹஜ்ஜுப் பிறை (யக-யஉ-யங) ஆக இந்த அய்ந்துநாட்களிலும் நோன்பு பிடிக்கிறது ஹறுமுக்கு அடுத்த மக்றூகாயிருக்கும் முகற்றமாதம் பத்தாநாள்மாத்திரம் பிடிக்கிறதும் வெள்ளிக்கிழமை சனிக்கிழமை மாத்திரம் நோன்பு பிடிக்கிறதும் மக்றூகு தன்சிகா யிருக்கும்.

நோன்புடைய நிய்யத்தின் விபரம்.

றமலான் அதாநோன்புங் குறிக்கப்பட்டநேர்ச்சைநோன்பும் நபில்நோன்பும் இரவையிலிருந்து பகல் பாதியாகாம லிருக்கிறவரை குறிப்பான நிய்யத்துச் செய்கிறதுகொண்டும் இன்னம் மொத்தமாகிய நிய்யத்துக்கொண்டும் (யெகுனி) நாளை அல்லாகுத்த ஆலாவுக்காக நோன்பு பிடிக்கிறேனென்று நிய்யத்துச் செய்கிறது கொண்டும் இன்னம் நபில் நிய்யத்துக்கொண்டும் (யெகுனி) நாளைக்கி நபில்நோன்பு அல்லாவுக்காகப் பிடிக்கிறே னென்று நிய்யத்துச் செய்கிறது கொண்டும் துருஸ்தாகும்.

ஆனால் இந்த மூன்றிலும் நிய்யத்தாவது கல்பென்னு மிருதயத்தில் நோன்பு பிடிக்கிறேனென் றறிகிறதா யிருக்கும் நிய்யத்திர்க்கு மூந்தின ஒக்த்து பொழு தடைந்தவுடனேயா யிருக்கும் ஆனதால்பொழு தடைகிறதர்க்கு முன் நீயத்துச்செய்தாற் கூடாது.

இனி குறிக்கப்பட்ட நேர்ச்சை யெப்படியென்றால் இந்த வியாழக்கிழமை நோன்பு அல்லாகுத்த ஆலாவுக்காக நான் பிடிக்கிறது என்பேரில் விதியா யிருக்குமென்று சொல்லுகிறதுபோல் (இனி) இந்தமூன்றிலும் குறிப்பாகிய நீயத் தெப்படியெனில்.

றம்லான் அதாவான நோன்பின் நீய்யத்தாவது (நவைத்து சவுமகதின் அன்அதாயி பறுலி றமலான் ஹாதிஹிஸ்சனத்தி லில்லாகித்த ஆலா இந்த வருசத்து றம்லான் மாதம் பறுலான நோன்பின் அதாவைத் தொட்டும் அல்லாகுத் தஆலாவுக்காக நாளைப்பிடிக்க நிய்யத்துச் செய்தேன் யென்பதாம்)

குறிக்கப்பட்ட் நேர்ச்சை அதாநோன்பின் நீயத்தாவது (நவைத்து சவுமகதின் அன்அதாயின் நதிரில் முஐயனி லில்லாகித்தஆலா குறிக்கப்பட்ட நேர்ச்சை நோன்பின் அதாவாக அல்லாகுத்தஆலாவுக்கு நாளைப்பிடிக்க நிய்யத்துச் செய்தே னென்பதாம்)

முஸ்தகப்பான நோன்பின் நிய்யத்தாவது.

நவைத்து சவுமகதின் அன்சவுமி ஆசூறு அலில்லாகித் தஆலா ஆசூறு நாளுடைய நோன்பைத் தொட்டும் அல்லாகுத் தஆலாவுக்காக நாளைப்பிடிக்க நிய்யத்துச் செய்தேனென்பதாம்.

இந்த ஆசூறுவைப்போல் மற்ற முஸ்தகப்பான நாட்களின் நோன்பைக் குறித்து நிய்யத்துச் செய்துக்கொள்ள வேண்டியது.

இந்த முஸ்தகப்பான நோன்புகள் யெல்லாத்திர்க்கும் மொத்தமாய் அல்லாகுத்த ஆலாவுக்காக நாளை நோன்பு பிடிக்கிறேனென்று நாடினாலும் போதும்.

இரவையில் நிய்யத்துச் செய்யாதவன் நோன்பை முறிக்கிற செய்கையை மெய் வெள்ளை கீறியபின் செய்யாமலிருந்தாற் பாதிப் பகலாகிறதற்குமுன் யெந்த நேரமாவது இன்று நோன்பாயிருக்கிறே னென்று நாடினாலும் நோன்பு துருஸ்தாகிவிடும்.

ஆனால் இந்தநேரமுதல் நோன்பா யிருக்கிறேனென்று நிய்யத்துச்செய்தாலுங் கிழக்கு வெளுத்தபின் நோன்பைமுறிக்கும்படியான செய்கை செய்திருந்தாலும் நோன்பு கூடாது.

இனி றமுலான் கலாநோன்பும் குறிக்கப்பட்ட நேர்ச்சைக் கலாநோன்பும் மொத்தமாகிய நேர்ச்சைநோன்பும் நபில் நோன்பைப் பசாதாக்கியபின் அதின் கலா நோன்பும் தெண்டங்களுடைய நோன்பும் இரவையில் நின்றும் குறிக்கப்பட்ட நிய்யத்துக்கொண்டு துருஸ்தாகிவிடும் ஆகையால் நிய்யத்தில் இந்த நோன்பை யென்று குறிப் பாக்கிறதும் இரவையில் நிய்யத்துச்செய்வதும் சறுத்து.

ஆதலால் இந்த நோன்புகளைப் பகலையில்நிய்யத்துச்செய்தால் நபில் நோன்பாகிவிடும் இந்த நோன்புகளுடைய நிய்யத்தின் சறுத்தாவது அவன் கல்பில் அவன் பிடிக்கிற நோன்பு யெந்த நோன்பென்று அறிகிறதாயிருக்கும்,

இனி நிய்யத்தைக்கொண்டு வாயினால் மொழிகிறது சுன்னத்தாயிருக்கும்,

மொத்தமாகிய நேர்ச்சை நோன்பு யெப்படியெனில் அல்லாகுத்தஆலா யென்னுடைய நசலாளிக்கு சுவாத்தியஞ் செய்தால் ஒருநாளைக்கு நோன்புபிடிக்கிறது யென்பேரில் விதியா யிருக்கிறது யென்பது போலாம்,

பிறையின் விபரம்

றமலான் அதினுடைய பிறையைக் காணுகிறது கொண்டு தரிபடும் அல்லது மேகம் மற்றதினால் அதைமறைக்கப்பட்டால் ஷகுபான் மாத்தையை (கூ0) நாளாக யெண்ணுகிறது கொண்டு தரிபடும் சகுபான்மாதம் முப்பதாம் இரவையில் மனிதர்கள் பிறையைத் தேடிப்பார்க்

கிறது வாஜிபு சக்துடையனுள் ஷகுபான் முப்பதில் நபில்னேன்பைத் தவிர மற்றநோன்பு மக்குறூகு.

இனி வானத்தில் மேகம் மற்ற துண்டாயிருந்தால் றமலான்பிறைக்கண்டதர்க்கு மானத்தையுந் தக்குவாவையும் பூண்ட ஒரு, நீதவான் சொல்லை அல்லது நீதவான் யென்கிறதின் ஹாலை மறைக்கப்பட்டவனுடைய சொல்லைக் கபூல்ச் செய்யப்படும் அவர்கள் அடிமை யானாலும் பெண்பிள்ளை யானாலும் படரில் ஹத்தடிக்கப்பட்டு தௌபாச்செய்யப் பட்டவனுனாலுஞ்சரி இதில் சாட்சி சொல்லுகிறேனென்று மொழிதல் சறுத்தல்ல ஸவ்வால்ப்பிறைக்கு படரில் ஹத்தடிக்கப்படாத ஆக்கில் பாலிக்காகிய முசுலிமான் இரண்டு நாட்டான்மகன் அல்லது ஒரு நாட்டான்மகனும் இரண்டுநாட்டான் மகளும் சாகிது சொல்லுகிறேனென்று மொழிதல் சறுத்தா யிருக்கும்.

வானத்தில் மேக மற்றதுண்டா யிருக்கவில்லை யானல் இரண்டு பிறைக்கும் பெருங் கூட்டத்துடைய சொல்லைக் கபூற்செய்யப்படும்பெருங் கூட்டத்தின் யெண்ணத்துடைய மட்டாவது பெரியோருடைய யோசினையளவில் ஒப்பிவிக்கப்பட்டதா யிருக்கும்,

(இனி) யாதொருவன் பிறையைத் தனித்தவனாய்க்கண்டு அவன் சொல்லைத் தட்டப்பட்டுப்போனால் அவன் நோன்பு பிடிக்கவேண்டும் அவன் நோன்பு பிடியாமல் விட்டால் கலாச்செய்யவேணும் அவன்பேரில் தெண்டகுற்றமில்லை,

(இனி) துல்ஹஜ்ஜு மாத்தைப்பிறையும் மற்றப் பிறைகளுஞ் சவ்வால்ப் பிறையைப்போலா யிருக்கும்,

(இனிப்) பிறை வுதயமாகுந் தலங்கள் விதற்பமா யிருக்கிறதர்க்குப் பெலவந்தமான சொற்படி ஹுக்குமுகள் மாற்றமில்லை இதினால்த்தான் (மகறிபுத்தேசத்தார்) பிறைக்கண்டதை (மஷரிக்குதேசத்தார்) அறிந்தால் அவர்கள் நோன்புபிடிக்கவேண்டியது வாஜிபாகிவிடும்,

இன்னம் பகலையிற் பிறைக்கண்டால் அப் பிறைசென்ற இராத்திரியுடைய பிறையல்ல வருகிற இராத்திரியுடைய பிறைத்தான்,

நோன்பை முறிக்காத செய்கைகளின் விபரம்.

நோன்பு பிடித்தவன் மறதியாகத் தின்றாலுங் குடித்தாலும் ஜிமாகு செய்தாலுந் தொண்டையில் புழுதி யல்லது ஈ யல்லது புகைப் புகுந்தாலும் யெண்ணை தேய்த்தாலுஞ் சுறுமாப் போட்டாலும் இரத்தங் குத்தி வாங்கினாலும் பெண்சாதியை முத்தமிட்டு விந் திறங்கவில்லையானாலும் ஹறக்கத்தானாலும் பார்வை யிடுகிறதினால் யோசினை யிடுகிறதினால் விந்திறங்கினாலும் ஒலுச்செய்தபின் வாயிலுள்ள மிச்ச ஈரத்தை யெச்சியுடனே முழுங்கினாலுங் காதில்த் தண்ணீர் புகுந்தாலும் காதில் குச்சியை மடக்கி மடக்கிப் புகுதவைத்தாலும் பல்லுகளுக் கிடையில் கடலைப் பிரமாணத்துக்குத் தாழ்ந்ததை முழுங்கினாலும் சத்தி யதிகமாகி வாயை நிறப்பிவிட்டாலும் ஜுனுபாளியாக விடிவேறானாலும் புறம்பேசினாலும் மூக்கிலே சளியிருந்து அதை யுறிஞ்சித் தொண்டைக்குளியிற் புகுந்தாலும் வாய்நீர் நாடியளவில்த் தொங்கினதை யுதட்டினா லுள்ளே யிழுத்தாலும் யாதொரு வஸ்துவை வாயாற் சுவைத்தாலும் நோன்பை முறிக்காது பென்கிலும் இவைகளில் சிலது ஹறாம் சிலது மக்குறூகாயிருக்கும்,

ஆனால் யெவ்விதமான புகையாயிருந்தாலும் அதை முரண்டாகத் தொண்டைக் குளியில் நுழைய வைத்தால் நோன்பை முறிக்கும் (ஷாபியீ மதுகபில்) காறலை முழுங்கிறது நோன்பை முறிப்பதால் அதைத் துப்பிவிடுகிறது நமது மதுகபில்ப் பேணுதலா யிருக்கும் இனி ஒரு வஸ்துவை வாயலிட்டுச் சுவைக்கிறது மக்குறூகாயிருக்கும்,

தெண்டமில்லாமல் நோன்பை முறிப்பதின் பயான்.

வாய் கொப்பளிக்கும்போது தண்ணீர் தொண்டைக் குளியிற் போகிறதுபோல் அல்லது நித்திரைசெய்தவனைக் குடிக்கிறதுபோல் அல்லது கிழக்கு வெளுக்கவில்லையென் றெண்ணி ஜிமாகு செய்கிற

துபோல் அல்லது கிழக்கு வெளுக்கவில்லையென் றெண்ணி சகருக்கு ஒஜீபனம் தின்னுகிறதுபோல் கத்தாவாக நோன்பை முறித்தாலும் நோன்பாளியை யொருவன் வம்பித்து முறிக்கும்படி செய்ததர்க்குநோன்பை முறித்தாலும் அல்லது மறதியாகத் தின்றவன் ஜிமாகுசெய்தவன் ஹறக்கத்தானவன் பார்வையால் இந்திரியத்தை இறக்கினவன் சத்திமிகுதமானவன் நோன்பு முறிந்துவிட்டதென் றெண்ணி ஞாபகத்தோடு தின்றாலும் ஜிமாகுசெய்தாலும் காதுக்குள்ளே யெண்ணெச்சொட்டிவிட்டாலும் கல்லைக் கட்டையை இரும்பை இதுபோலொத்தவைகளை முழுங்கினாலும் றமலான் அடங்கலிலும் நோன்பு பிடிக்கிறதை நிய்யத்துச் செய்யாமல் பிடித்தாலும் நிய்யத்துச் செய்யாமல்விடிந்தவன் ஞாபகத்தோடு தின்றாலும் தொண்டைக்குள் மழை பனி நுழைந்தாலும் பெண்சாதியை முத்தமிட்டு அல்லது பிடித்து மனி இறக்கிவிட்டாலும் றமலான் அதாவான நோன்பல்லாத்ததை பசாதாக்கி விட்டாலும் இஸ்திஞ்சாத்துப்புரவு செய்யும்போது தண்ணீர் பின் துவாரத்திர்க்குள்ளே அல்லது பெண்பிள்ளையின் வுள்ளபத்திலே நுழைந்தாலும் தானேவாய்நிறம்பிய சத்தியை யுள்ளே மீளவைத்தாலும் ஞாபகத்தோடு முரண்டாய் சத்தி யெடுக்கத்தேடி வாயை நிறப்பிவிட்டாலும் பல்லுக் கிடையில் கடலைப்பிரமாண முள்ளதிருந்தா லதைத்தின்றாலும் பொழுது தடையாம லிருக்க நோன்பு திறந்தாலும் தெண்டகுற்ற மில்லை நோன்பு முறிந்துவிடும் கலாச்செய்ய வேணும்.

ஆனால் கோழை அல்லது கடமாகச் சத்தி யெடுத்தால் நோன்பு முறியாது இஸ்திஞ்சாத் துப்புரவு செய்யும்போது ஆண்பிள்ளையின் பின் துவாரத்திலும் பெண்பிள்ளையின் முன்துவாரத்திலும் தண்ணீருள்ளே சேருகிறதுகொண்டு நோன்பு முறியுமென் றிருப்பதால் தண்ணீருக்குள்ளே யிருந்து துப்புரவுசெய்கிறதை விட்டு விடுகிறது வாஜிபாயிருக்கும்,

{தெண்டகுற்றம் விதியாகுவதின் விபரம்.}

றமலான் அதாநோன்பில் ஞாபகத்தோடு இரண்டி லொரு துவாரத்தில் ஜிமாகு செய்தாலும் ஜமாகு செய்யப்பட்டாலும் யாதொரு ஒ

ஜீபனத்தைத் தின்றாலும் யாதொரு மருந்தைக் குடித்தாலும் வாயில்புகுந்த மழையை யல்லது பனியை முழுங்கினாலும் பெண்சாதியுடைய யெச்சிலை முழுங்கினாலும் அல்லது இரத்தங்குற்றி வாங்கினதில் இது நோன்பை முறிக்குமென் றெண்ணி ஞாபகத்தோடு தின்றாலும் கலாவுஞ் செய்து தெண்ட குற்றமுங் கொடுக்கவேண்டும்.

(இனி) கப்பாறத்தாவது (யெகுனி) தெண்டமாவது பிடிக்குதல் நடக்குதல் பேச்சு பார்வை கேள்வி புத்தி இவைகளில் ஒன்று தப்பி விடுதலென்னும் அய்பில்லாத்த அடிமையை யுரிமை விடுகிறதா யிருக்கும்.

இப்படி அடிமையை யுரிமைவிட யேலாவிட்டால் இரண்டு பெருநாளும் துல்கஜ்ஜு மாதம் (௰க-௰உ-௰ங) நாளும் அல்லாத இரண்டு மாதம் துடர்பிடியாக நோன்பு பிடிக்கிறது இப்படி நோன்பு பிடிக்கத் திராணி பெறுவிட்டால் (சூ௰) மிசிக்கீனுக்கு காலையிலும் மாலையிலும் ஒஜீபனம் வயிறு நிறையக் கொடுக்கிறது அல்லது (சூ௰) மிசிக்கீனுக்கு ஒவ்வொருவருக்கும் அரை மரக்கால் மணிக் கோதும்பை அல்லது ஒரு மரக்கால் ஈத்தம்பழம் அல்லது தொலிக்கோதும்பை அல்லது அதின் கிரையம் விகிதம் கொடுக்கிறது.

மிகுந்த நாட்களில் ஞாபகத்தோடு பல விடுத்தம் ஜமாகு செய்ததர்க்காக அல்லது பலவிடுத்தம் தின்றதர்க்காக ஒரு கப்பாறத்தென்னுந்தெண்டம் போதுமா யிருக்கின்றன ஆனால் கப்பாறத்துக் கொடுத்தபின் ஜமாகை திண்ணுதலைக் காணப்பட்டால் வேறே கப்பாறத்துக் கொடுக்கவேணும.

{ நோன்பில்லாதிருந்தவர்கள் திண்ணாமலிருப்பதின் விபரம் }

கித்தாவால் அல்லது சங்கடத்தால் நோன்பை முறித்தாலும் கிழக்கு வெளுத்தபின் ஹய்லு நிபாசிக்காரி துப்பரவாகிவிட்டாலும் பகலையில்த் தின்றபின் முசாபிர்முக்கிமாகிவிட்டாலும் பைத்தியகாரன்தெளிவுபெற்றாலும் நசளாளி சுவாத்தியமானாலும் சிறுபிள்ளை பாலிக்கான

னும் காபிர் இசுலாமானுலுந் தின்றநேரம்போக மீதநேரத்திர்க்கு வயி று அபம் ஆகிய இரண்டு ஆசையை நிறைவேற்றுவனந்த விட்டு நீங்கிக் கொள்கிறது வாஜிபு,

காபிருஞ் சிறுபிள்ளையுந் தவிர மற்றவர்க ளந்த நோன்பைக் கலா ச்செய்யவேணும் நசலாளியும் முசாபிரும் பைத்தியகாரனும் வண்ணுதி ருந்து மத்தியானத்திர்க்கு முன்னுலே நிய்யத்துச் செய்தால் பறுலைத் தொட்டு நிறைவேறும் ஹயலு நிபாசிக்காரி நிய்யத்துச்செய்தால்த் துருஸ்தாகமாட்டாது.

ஹயலு நிபாசா யிருக்கும்போது தீன் குடிப்பை விட்டு விட்டு நோன்பாளியைப்போ லிருக்கிறது பிசகாம் நசலாளியும் முசாபிரும் ஊண் தீனை விட்டுவிட்டு நோன்பாளியைப்போ லிருக்கிறது வாஜிபில் லையென்கிலும் பகிரங்கமாகத் தின்னப்படாது வுபாயமாகத் தின்னவே ணும்.

இனி சிறுபிள்ளைகள் நோன்பு பிடிக்கத் திராணிபெற்றுல்ப் பிடிக் கும்படி யேவவேணும் பத்துவயசில் நோன்பை விட்டால் அடிக்கவே ணும் இதுபோல்த்தான் தொழுகைக்கும்.

ஆனுல் அப்பிள்ளைகள் நோன்பை முறித்தால் கலாச் செய்கிறது வாஜிபில்லை தொழுகையை முறித்தால் மீட்டும்படி செய்யவேணும்.

நோன்புடைய மக்குறூகுகளின் விபரம்,

நோன்பாளி தங்கடமன்றியே யாதொன்றை சுவைத்து ருசிபார் த்துத் துப்புகிறதும் மென்று சேர்ந்த வெள்ளைக் குந்துருக்கத்தை மெ ல்லுகிறதும் ஒலுவில் வாய் கொப்பளிக்கும் போதும் நாசிக்குத் தண் ணீர் செலுத்தும்போதும் அதிகக் கடப்பாகச் செய்கிறதும் இன்னும் முறிக்கிறதை யச்சந்திரவில்லையானுல் பெண்சாதியை முத்தமிடுகிறது ம் பிடிக்கிறதும் கழுத்தோடு கழுத்துக் கட்டி யணைகிறதும் உமிநீரை வாயிற் சேகரப்படுத்தி முழுங்கிறதும் நோன்பை விட்டுப் பெலக்கே டாக்கும்படியான காரியத்தைச் செய்கிறதும் மக்குறூகு,

இனி சினத்தை நடாமல் யெண்ணையை மீசையில்த் தேய்க்கிறதும் சுருமாப்போடுகிறதும் குளிர்ச்சிக்காகக் குளிக்கிறதும் கடாசிப்பகலையில் மிசுவாக்குச் செய்கிறதும் ஈரப்பிடவையைத் தன்மேரிற் போடுகிறதும் மக்றூகல்லே.

நோன்புடைய முஸ்தகப்புகளின் விபரம்,

சகர் ஒஜீபனந் தின்னுகிறதும் இரவு தரிபாடாக யிருக்கிறதில் சந்தாப முண்டாகாம லிருக்கிறமட்டுக்கு அதைப் பிற்படுத்துகிறதும் மேகத்துடைய நாள் அல்லாத்ததில் நோன்பு திறக்கிறதை நட்சத்திரம் வெளியாகிறதர்க்கு முன்னாலே அஸ்த்தமித்தபின் தீவறமாக்கிறதும் முஸ்தகப்பு.

ஆதலால் சந்தாபமுண்டாகிற ஒக்த்துவனாயில் சகர்ஒஜீபனத்தைப் பிற்படுத்துகிறது மக்குறூகு மேகத்துடையனாளயில் மோரீன்பாங்கு சொல்லிவிட்டாலும் தன் யெண்ணத்திற் பொழுது அடைந்தது யென்ற யெண்ணம் அதிகமாகாம லிருக்கிறமட்டுக்கும் நோன்பு திறக்கப்படாது.

இனி நோன்பு திறக்கமுன் மகறிபு தொழப்படாது இனிப்பான வஸ்துவைக்கொண்டு நோன்பு திறக்கவேணும் நோன்பு திறக்கப்பட்ட வஸ்துவில் ஏற்றமானது பழமாயிருக்கும் அதுகிடையாவிட்டால் பாலு அல்லது ஒலுவுக் காகும்படியான தண்ணீர்கொண்டுதிறக்கவேணும்.

இன்னம்நபிநாயகம் முகம்மதுசல்லல்லாகு அலைகிஉசல்லமவர்கள் மூன்று பேரீத்தம்பழம் அல்லது நெருப்புத்தொடாத வஸ்துவைக்கொண்டு நோன்பு திறக்கிறவர்களா யிருந்தார்கள் நாமும் அதுபோற் செய்வது ஏற்றமாயிருக்கும்.

இன்னும் நோன்பு திறக்கும்போது தனக்கு முக்கியமான ஹாஜத்துகளுக்கு துஆக் கேட்கவும் திறந்தவுடன் (அல்லாகும்மலெக்கஅ மது ஒபிக்க ஆமந்து ஒஅலைக்கத் தவக்கல்த்து ஒஅலாறிசிக்கிக்க அபு

த்தற்த்து ஒசௌமல்க்கதிமின்ஷகுறி றமலான் நவைத்து பகுபிறஸீமா கத்தம்த்து ஒமா அக்கற்த்து ஆண்டவனே வுனக்காகநோன்பு பிடித்தே ன் உன்பேரில் பரஞ்சாற்றினேன் உன்னுடைய றிசுக்கின் பேரில் நோ ன்புதிறந்தேன் றம்லான் மாத்தையில் நின்றும் நாளேனுன்னை நீய்யத் துச் செய்தேன் ஆனதால் நான் முன்செய்த பாவத்தையும் பின் செய்த பாவத்தையும் யெனக்குப் பொருத்தருள்வாயாக) இப்படிச் சொல்லு கிறது சுன்னத்து இதுகொண்டு திறக்கிற நிய்யத்தும் பிடிக்கிற நீய்யத் து முண்டாகிவிட்டது.

தானல்லாதவர்களிடத்தில் நோன்பு திறந்தால் (அபுத்தர யிந்தக் கு முஸ்ஸாயிமூன் ஒஅக்கலத்தா அமக்குமூல் அபுறூர் ஒஸல்லத்து அ லைக்குமுல் மலாயிக்கத்து) யென்று சொல்லவேண்டும்.

நோன்பு திறக்கும்போது வயிறு நிறம்பத்தின்னக்கூடாது அது இபாதத்தில் சோம்பலை யுண்டாக்கும் நோன்பின் பிரயோசனத்தை ப ழுதாக்கிவிடும் அதாவது நபுசை யடக்கிறதா யிருக்கும்.

நோன்பாளிக்கு ஒஜீபனங்கொடுக்கிற தவாபு

நோன்பாளிக்கு வொஜீபனங் கொடுக்கிறது மெத்த யேற்றமா யிருக்கும் (ஹதீதில்) வந்திருக்கிறதாவது யர்தாமொருவன் நோன்பாளி க்கு நோன்புதிறக்க ஒஜீபனங் கொடுத்தால் அல்லது பீசபீற் செய்கிற வனை ஆய்த்தமாக்கிவைத்தால் அவ்விரண்டு பெயருக்குங் கிடைக்கிற தவாபு இவனுக்குக் கிடைக்கும் இன்னும் (ஹதீதில்) மிகவும் நிருமத் தாகிய தீன்குடிப்பு இவைகளைத் தொட்டுங் கியாமனாளில் மூன்று பெ யரைக் கேள்வி கணக்குக் கேட்கப்படாது யென்று வந்திருக்கிறது அ வர்கள் ளியாரெனில் நோன்பு பிடிக்க ஒஜீபனங் கொடுத்தவன் நோன்பு திறக்க ஒஜீபனங் கொடுத்தவன் விருந்தாளிக்கு விருந் துபசரித்தவன் ஆகிய இம்மூன்று கூட்டத்தாரைத் தவிர மற்றவர்களை தீனைத் தொட் டுங் குடிப்பைத்தொட்டுங் கேள்வி கேட்கப்படும்.

நோன்புடையபதவியின் விபரம்,

நோன்பின் பதவிகள் மூன்று அதிற் றணிந்தது வுண்ணமலுந் தின்னமலுஞ் சேர்க்கை செய்யாமலு மிருப்பது இச் செயலை விட்டுவிட்டால் ஷறகுடைய இமாம்கள் நோன்பு துருஸ்தாகிவிட்டதென்று ஹூக்கும் செய்வார்கள் இதற்கு மேலான பதவியாகிறது முந்தின பதவியுடைய நோன்புடனே வுறுப்புகளைப் பாவத்தைவிட்டும் விலக்கிறது இப்படி நோன்பு பிடித்தால் அந்நோன்பை அல்லாகுத்தஆலா கபூல்ச்செய்வான்,

அய்ந்து செயல் நோன்பை முறிக்கும் (எகுனி) தவாபைக் கெடுக்கும் அதாவது பொய் - புறம் -கோள் - பொய்ச்சத்தியம் ஆசைகொண்டுபார்க்கிறது யென்றும் யெத்தனையோ ஜனங்கள் நோன்பு பிடிக்கிறார்கள் அவர்கட்குப் பசியையுந் தாகத்தையுந் தவிர அவர்கள் செய்கையா லொரு பலனு மில்லையென்றும் சகத சற்குருவாகிய நமது நாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் திருவுளம்பற்றினார்கள்,

சகலத்திலும் மேன்மையான நோன்பாவது அல்லாவைத்தவிர வுள்ள வஸ்துகளைவிட்டுங் கல்பை விலக்கிறதாயிருக்கும் இது நபிமார்கள் ஒலிமார்களுடைய நோன்பாயிருக்கும்.

தங்கடத்தால் நோன்பைவிடுகிற விபரம்.

முசாபிருனவனுந் தன்பேரில் அல்லது பிள்ளையின்பேரிற் பயந்த ஹமல்க்காரியும் பால்க்காரியும் நசலதினமாகிறதைப் பயந்த நோயாளியும் நோன்பைவிடுகிறது ஆகும்,

இவர்கள் திராணிபெற்றமட்டும் பிதியா வில்லாமலும் துடர் பிடியாக நோன்பு பிடிக்கிறது வாஜிபென்கிறது இல்லாமலும் கலாச்செய்வது வாஜிபாயிருக்கும் மறு றமலான் வந்துவிட்டால் அதாவான நோன்பை முற்படுத்திக் கலாவான நோன்பைப் பிற்படுத்தவேணும்,

முசாபிர் நோன்பு பிடிப்பதிற் றங்கடஞ் செய்யவில்லை யானல் நோன்பு பிடிக்கிறது முஸ்தகப்பு அந்தத் தங்கடத்திலே அவர்கள் மவுத்தாகிவிட்டால் பிதியாக் கொடுக்கும்படி ஒசியத்துச் செய்கிறது அவர்களின்பேரில் வாஜிபில்லை தங்கடம் நீங்கியபின்பு மவுத்தானல் ருகத்தாயிருந்தநாளில் யெவ்வளவு நோன்புபிடிக்க வேணுமானதோ அவ்வளவு நாளிலும் பிடியாம லிருந்ததற்காக பிதியாவுக்கு வொசியத்துச் செய்யவேணும் அந்த வொசியத்தைக்கொண்டு ஒலிகாரன் ஒவ்வொருநோன்புக்கு பித்தறுவைப்போல சதக்காக் கொடுக்கவேண்டும்,

இனி நோன்பு பிடிக்க யேலாத தளர்ச்சியான கிழவன் நோன்பை விடுகிறதாகும் அவன் சீமானயிருந்தால் ஒவ்வொரு நோன்புக்குப் பித்தறுவைப்போல ஸதக்காக் கொடுக்கிறது வாஜிபு மாதந் துவக்கத்திற் கொடுத்தாலுமாகும் அப்படி சீமானு யிருக்கவில்லையானல் அல்லாகுத்தஆலா விடத்திற் பிழைபொறுக்கத் தேடிக்கொள்ளவேணும்.

{ றமலா நோன்புடைய வரிசையின் பயான் ஹதீது. }

றசபுமாதம் அல்லாகுத்த ஆலாவின் மாதமாயிருக்கும் ஷகுபான் மாதம் யென்னுடைய மாதமாயிருக்கும் றமலான் மாதம் என்னுடைய உம்மத்துகளின் மாதமா யிருக்குமென்று நபிநாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் திருவாய்மலர்ந் தருளினர்கள்,

இன்னும் இபுனு அப்பாசுறலியல்லாகு அன்குமா அவர்கள்சொல்லி வருகிறதாவது நபிசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் திருவுளம் பற்றினர்கள் அதாவது யென்னுடைய வும்மத்துகள் றமலான்மாத்தையின் வரிசையை இவ்வளவென் றறிவார்களேயானல் வருடத்தினுடைய மாதமடங்கலும் றமலானு யிருந்ததில்லையே யென்று யோசிப்பார்களேனென்றல் அதின் நன்மைகளாவது சேகர மாக்கப்பட்டதாகவும் கபூற் செய்யப்பட்டதாகவும் பாவங்களைப் பொறுக்கப்பட்டதாகவும் துஆ கபூலாக்கப்பட்டதாகவு மிருக்கிறதென்றும்,

இன்னும்றமலான்மாத்தையின்நோன்பை அல்லாகுத்தஆலா உங்கள்பேரிற் பறுலாக்கிவைத்தான் நான் அவ்விரவுகளில் முழித்து வணங்கிறதை சுன்னத்தாக்கிவைத்தேன் யாராகிலு மொருவன் அதின் வரிசையை யுண்மைகொண்டு அல்லாகுத்தஆலா முகத்தை நாடிப் பகலெல்லா நோன்பிருந்து இரவெல்லாம் வணங்கு வானாகில் அன்று பிறந்த பாலகனைப்போ லாகிவிடுவானென்றும்,

இன்னம் தீனுக்கு அடிமூடு யேழைகளுக்கும் சீமான்களுக்கும்மூன்ருக யிருக்கும் அதாவது கலிமா-தொழுகை-நோன்பு ஆக யிம்மூன்றி லொன்றைவிட்டால் அதைக் கொண்டவன் மாறு செய்தவ னாகிவிட்டான் அவனை வெட்டுகிறது ஹலாலாகிவிட்டது அவன் முதலைப்பரிக்கிறதும் கலாலாகிவிட்டது அவனுடைய சுன்னத்தான வணக்கத்தையும் நபிலாகிய வணக்கத்தையும் அல்லாகுத்தஆலா கபூற்செய்யமாட்டானென்றும் இரு ஜகானுக்கும் நாயகமாகிய முகம்மதுநபி சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினதாக இபுனு அப்பாசுறழியல்லாகு அன்குமா அவர்கள் பேசிவருகிறார்கள்,

றிவாயத்து.

றமலான்மாத்தையில் ஒரு நோன்பு ஆயிரம்நோன்பைக்காணவும் ஒரு தசுபீகு ஆயிரந் தசுபீகைக்காணவும் ஒரு றக்காஅத்து ஆயிரம்றக்காஅத்தைக் காணவும் ஏற்றமாக யிருக்கும் அதிற் செலவு செய்கிறது பீசபீலிலே செலவு செய்கிறதுபோலா யிருக்குமென்றும் நுகயி இமாம் சொன்னார்கள்,

ஹதீது.

றமலான்மாத்தையில் ஒவ்வொரு இரவிலும் நோன்பு திறக்கும்போது நரகத்திற்குப் பாத்திரமாகிய ஜனங்களில் பத்துலட்சம் பெயரையும் அம்மாத்தையின் ஒவ்வொரு ஜும்ஆவில் ஒவ்வொரு சாஅத்தென்னு மிரண்டரை நாழிகைக்கு பத்து லட்சம் பெயரையும் அல்லாகுத்தஆலா வுரிமை விடுவானென்றும் யிதுவுந்தவிர அந்த மாத்தையின் கடாசி இரவில் முதனாள்தொடுத்துக் கடாசிவரைக்கும் மேலே

சொன்ன கணக்கின்முறைப்படி கூடிய ஜனங்களை பொரே மொத்தமா
க அல்லாகுத்தஆலா நரகத்தைவிட்டு முரிமை விடுவானென்றும் சல்
மான்யென்கிறவர்கள் இபுனு அப்பாசுறலியல்லாகு அன்கும் அவர்க
ளைத்தொட்டும் பேசிவருகிறார்கள்,

ஹிக்காயத்து.

நுசுகத்தென்கிற கித்தாபில்வருகிறது ஒரு மஜூசிக் காபிர் தன்
மகன் றமலான் மாத்தையில் முசிலிமானவர்க ளிருக்கிறசபையில் பகல்
நேரத்தில் ஒரு வஸ்துவைத் தின்னக்கண்டு இந்த மாதம் இசுலா மான
னவர்கட்கு நல்ல மாதமாக யிருப்பதால் அவர்கட்கு முன்பாக நீயெப்
படித் தின்றாய் அவர்களின் சங்கையை நீயேன் பேணவில்லை யென்று
சொல்லி மகனைக் கன்னத்தில் அறைந்தான் அப்பால் அந்த வாரத்தில்
அந்த மஜூஸி இறந்தான் அந்தவூரிலுள்ள ஆலிம் கனவி லவனைச் சொ
ற்கத்தி லிருக்கக்கண்டு நீ மஜூசியல்லவா நீ சொற்கத்திற்கு யெப்படி
வந்தாயென்று கேட்க நான் மஜூசிதான்யென்கிலும் றமலான் மாத்தை
யை நான் சங்கைசெய்ததற்காக நான் மரண மாகிறதற்குக் கொஞ்ச
முன்பாய் அல்லாகுத்தஆலா யென்னைத் தீனி லிசுலாமென்னு மார்க்க
த்திற் சேரும்படி வுபகாரஞ் செய்துவிட்டானென்று சொன்னார்,

ஹிக்காயத்து.

ஸஹுறத்துற் றியால்யென்கிற கித்தாபில் வருகிறதாவது வுலமா
க்களி லொருவர் பேசிவருகிறார்கள் யெங்களிடத்தில் முகம்மதுயென்
று ஒரு மனிதனுண்டாயிருந்தார் அவர் தொழுகையைச் சிலகாலம் வி
ட்டு விட்டு றமலான்மாதம் வந்துவிடுமேயானால் அழகான வுடையுடுத்
தி மணம்பூசி நோன்பு பிடித்துத் தப்பிப்போன தொழுகைகளைக் கலா
ச்செய்கிறவராக யிருந்தார் அப்பேர்து அவரிடத்தில் நான் இதைக்குறி
த்துக் கேட்டதற்கு இதாகிறது தௌபாவையும் றகுமத்தையும் பறக்
கத்தையும் வுடைய மாதமாயிருக்கும் நாயன் அவனுடைய வரிசையை
க்கொண்டு யென்னைத் தொட்டும் பொறுக்கப் போதுமென்றார் இப்ப

டிக் கிருக்கக் கொஞ்சநாளையில் அவர் மவுத்தாகி விட்டார் நானவரைக் கனவிற்கண்டு அல்லாகுத்தஆலா வும்மை யென்னசெய்தா னென்றேன் அதர்க்கு அவர் றமலான் மாத்தையின் சங்கைக்காக யென்பிழையைப் பொறுத்தா னென்றார்.

ஆதலால் தீனையுடைய இருவான்களான யெமதன்புற்ற சினேகிதர்களே இப்பேர்க்கொத்த சங்கையான றமலானுடைய வரிசையை யுங்களின் றெளிவாகிய புத்தியால் ஆராய்ந்து அதினுடைய நோன்பை நிறைவேற்றிப் பறுலான வணக்கங்களையும் நபிலான வணக்கங்களையு மீட்டி றமலானைத்தவிர மற்ற நாட்களின் றொழுகை வகையருக்களை அந்தந்த ஒத்துகளிற் றவரவிடாமல் நிறைவேற்றுவீர்களாகவும்,

லெயிலத்துல்க் கதிறிரவின் வரிசை.

பனூயிசுறாயீல்க் கூட்டத்தி லொரு வாலிபன் ஆயிர மாதமாக பீசபீற் செய்தானென்று நபிகள் சிகாமணியாகிய நமது நாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினார்கள் அதைப்பற்றி மூமினனவர்கள் புதுமைப்பட்டு அவரவரோ தங்கள் தங்களுடைய அமல்களையெல்லர் மிகவுங் குறைவாயெண்ணி அவருடைய வரிசை நமக்கில்லையேயென்று மனவருத்தமுற்றார்கள் அதர்க்காக ஆயிர மாத்தையைக் காண மேன்மைபொருந்திய இரவாகிய (லெயிலத்துல்க் கதிரை) யுங்களுக்குக் கொடுத்தோமென்று அல்லாகுத்தஆலா (இன்னா அன்சல்னா) யென்கிற சூறத்தை இறக்கி வைத்தான் அந்த இரவாவது றமலான்மாதம் (உஎ) திகதியென்று அநேகம் சாலிகானபெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இன்னும் நபிநாயகம் முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் திருவுளம்பற்றியதாவது (லெயிலத்துல்கதிரி) யுடைய இரவையில் அல்லாகுத்தஆலா ஜிபுரீல் அலைகிஸ்ஸலா மவர்களை யனேகம் மலக்குகளுடனே பச்சைக் கொடிபிடித்தவர்களாய்ப் பூமியி லிறங்கச் சொல்வா

ன் அவர்க ளிறங்கி அந்தக் கொடியைக் கஃபாவுடைய முகட்டில் நட்டு வார்கள் அவர்கட்கு (சூா) இறகுண்டாயிருக்கும் அதி லிரண் டிறகை மாத்திர மொருகாலமும் விரிப்பதில்லை யென்கிலும் அந்தஇறகை (லெயிலத்துல்க் கத்துறு) வுடைய இரவையில்மாத்திரம் விரிப்பார்கள் அந்த இரண்டு இறகும் மஷறிக்கையும் மகறிபையுங் கடந்துவிடும்படி இருந்துக்கொண்டு அவர்கள் மற்ற மலக்குகளை இந்த வும்மத்தார்களிருக்குந் தலங்களுக்கு அனுப்புவார்கள் அவர்களில் நின்று வணங்கிறவன் இருந்து வணங்கிறவன் தொழுகிறவன் திக்கிறுசெய்கிறவன் இவர்க ளடங்கல் பேரிலுங் கைதொட்டுச் சலாஞ்சொல்லிக் கிழக்கு வெளுக்கிறவரைக்கும் அவர்களுடைய துஆவுக்கு இவர்கள் ஆமீன் கூறுவார்கள் கிழக்கு வெளுத்தால் ஜிபுறாயில் அலைஹிஸ்ஸலாமவர்கள் மலக்கின்கூட்டங்களை நீங்கள் பயணப்படுங்கள் பயணப்படுங்களென்றுசொல்லுவார்கள் அப்போது அவர்கள் யாஜிபுறீலே அல்லாகுத்தஆலா முகம்மதுநபிசல்லல்லாகு அலைகி வசல்லம் அவர்களுடைய வும்மத்துகளின் ஹாஜத்துகளில் யென்ன செய்தானென்று கேட்பார்கள் அதர்க்கு ஜிபுறீல்அலைகிஸ்ஸலாமவர்கள் நாலு பெயர்களைத் தவிர மற்றவர்களைக் கிருபைகொண்டு பார்த்து அவர்கள் பிழையைப் பொறுத்தானென்று சொல்லுவார்கள் அப்போது அந்த நாலுபெயர்களும் யாரென்று கேட்பார்கள் கள்ளுக்குடியன் தாய்தகப்பனை நோவினை செய்தவன் குடல்வாய் ஜனங்களை முறித்தவன் மூன்றுநாளைக்கு மேல் முசுலிமானவனிடம் பேசாமல் வெறுத்துக்கொண் டிருந்தவன் இந்நான்கு பெயர்களுமா யிருக்குமென்று சொல்லுவார்கள்,

இகுத்திக்காபின் பயான்.

இகுத்திக் காபாகிறது ஆண் பிள்ளை ஜமாஅத்துப் பள்ளியிலும் பெண்பிள்ளை வீட்டுப்பள்ளியிலும் இக்திக்காபுடைய நிய்யத்துக்கொண்டு தரிபடுகிறதாயிருக்கும் ஆகையால்த் தரிபடுதல் றுக்குனுயிருக்கும் பள்ளிக் குள்ளாகயிருக்கிறதும் ஜனுபத்து ஹைலு நிபாசை விட்டுத்

துப்புரவா யிருக்கிறதுஞ் சறுத்தாயிருக்கும் வீட்டுப் பள்ளியென்பது வீட்டிற் பெண்பிள்ளை தொழுகிறதர்க்காக குறிக்கப்பட்ட விடமாயிருக்கும்,

இனி இகுத்திக்காபாகிறது அதை நாவினல் நேருகிறதுகொண்டு வாஜிபு றமலான் பிந்தினபத்தில் ஒருநாளாவது யிருக்கிறது சுன்னத்து முவக்கதா வேறே நாடின ஒக்த்தில் முஸ்தகப்பு நேர்ந்து இகுத்திக்காபிருக்கிறதர்க்கும் றமலான் பிந்தின பைத்தில் இகுத்திக்கா பிருக்கிறதர்க்கும் நோன்பு சறுத்தாயிருக்கும் முஸ்தகப்பாகிய இகுத்திக் காபுக்கு நோன்பு சறுத்தில்லை ஆனதால் நபிலாகியஇகுத்திகாபில்க் குறைந்தநேரம் ஒரு சாஅத்தாயிருக்கும் ஆனல்ப் பள்ளிக்குட் புகுதும்போது இகுத்திகாபை நிய்யத்துச்செய்து புகுந்தால் வுள்ளே யிருக்காமல்வுலாவினவனு யிருந்தாலும் இரவையி லானுலும் நபிலாகிய இகுத்திக்காபுண்டாகும் பள்ளியைவிட்டு வெளியிற் புறப்படுகிறதுகொண்டு அது முடிந்துவிடும் அதர்க்கு நிய்யத்தாவது (நவைத்துல் இகுத்திக்காப மாதுமது பிகாதல் மஸிஜிதி இந்தப் பள்ளிவாசலில் நானிருக்கிறவனா அல்லாவுக்காக இகுத்திக்காபை நீய்யத்துச் செய்தேனென்று நாடுகிறது.

இனி வாஜிபாகிய இகுத்திக்காபிலும் சுன்னத்தாகிய இகுத்திக்காபிலும் ஜும்ஆ சுதுத்தொழுகைக் கொழிய இன்னம் மலஞ் சலத்திர்க்கும் ஷெய்த்தான் ஹறக்கத்திர்க்குக் குளிக்கிறதர்க் காகவேண்டியும் ஒலுச்செய்கிறதர்க் காகவேண்டியுமே தவிர வெளியிற்புறப்படக்கூடாது அப்படித் தங்கடமன்றியே மறதியாக வானுலுங் கொஞ்சநேரம் புறப்பட்டால் இகுத்திக்காபு முறிந்துபோம்.

தங்கடங்கொண்டு புறப்பட்டதில்த் தன் அகத்தியத்தைத் தவிர மற்ற நேரந் தரிபட்டால் இகுத்திக்காபு முறிந்துபோம் இகுத்திக்காபு இருக்கிறவன் வுள்ளே தின்னுகிறது குடிக்கிறது நித்திரை செய்கிறது மின்னந் தனக்குந் தன் அன்னவஸ்திரச் செலவிலுள்ளவர்களுக்குந்தேவையானதர்க்காக விற்பனை செய்கிறதுமாகும் ஆனல் சரக்கைப்பள்ளிக்குட் கொடுபோகிறது மக்குறூகு தீன் குடிப்புக் கொண்டுபோய்க்

கொடுக்க மனிதரில்லாவிட்டால் வெளியில் வந்து பசியாறுகிறதாகும் ஆனால் முடிந்தபின் வீட்டிற் றரிபடாமல் வரவேணும் வாய்மூடியிருக் கிறதும் பாய்தாவில்லாமற் பேசுகிறதும் மக்றூறு ஆதலால் குறுஆனை யோதுகிறதையும் திக்றுசெய்கிறதையும் ஹதீதை யல்லது இல்மைப் பாடங்கொடுப்பதையும் நபிநாயகமவர்களின் விசேடங்களையும் நபிமார்கள் கிஸ்ஸாக்களையும் ஸாலிகானவர்களுடைய செய்திகளையும் தீனுடையகாரியங்களையும் எழுதிக்கொண்டிருக்கிறதுநல்லதா யிருக்கும்.

இனி ஜமாஅத்து செய்தாலும் முத்தமிட்டாலும் பிடித்தாலும் மற்ற விதத்தால் மனி இறக்கினாலும் இகுத்திக்காபு பாத்தலாகி விடும் இகுத்திக்காபை அல்லாவுக்காகக் கலப்பறுதலாய் நாடி யிருந்தால் அமல்களில் மெத்த மேன்மையாகிய அமலையுடைய வகைகளி லுள்ளதா யிருக்கும்.

துன்யாவுடைய கருமங்களைவிட்டு கல்பைப் பராக்கு வெளித்துவைக்கிறதுந் தன்னை நாயனளவிற் சாற்றுகிறதும் அல்லாவுடைய இபாதத்தை அவன் வீட்டுக்குள்ளே நிறை வேற்றுகிறதும் அவன் கார்மானத்தாற்கார்மானம்பெறுகிறதும் இகுத்திக்காபிலுண்டாயிருக்கிறது

இகுத்திக்காபு இருக்கிறவனுக்கு வுவமையாவது வொரு ஹாஜத்துக்காக வொரு இராஜாவின் வாயலிற் றரிபடுகிறவனைப்போலும் வெனக்கு வென்னையன் வென் பாவங்களைப் பொறுக்கிறவரை அவன் வாசலைவிட்டும் நீங்காமல்த் தரிபட்டவனா யிருப்பேனென்று அவனுடைய நடத்தைவென்னும் ஹாலு பேசுவதுபோலுமா யிருக்கும்.

இன்னம் யாராகிலுமொருவன் றமலான்மாதம் பிந்தினபத்தில் இகுத்திக்காபிருந்தால் அவனுக்கு இரண்டு ஹஜ்ஜுடையதவாபும் இரண்டு வும்றாவுடைய தவாபுங் கிடைக்குமென்று ஹதீதில் வந்திருக்கிறது.

நேர்ச்சையின் பயான்.

நேர்ச்சையென்பது அல்லாகுத்தஆலா விதியாக்காதகருமத்தை யொரு காரணத்திற்காக மனிதன்தன்பேரில்விதியாக்கிறதாயிருக்கும்.

அது யேதுபோலெனில் ஒரு நோயாளி ஆண்டவனுக்காக இன்னமாதம் நான் நோன்புபிடிக்கிறது யென்பேரில் விதியா யிருக்குமென்று சொன்னால் இது நதறுல் முத்தலக்கென்னும் மொத்தமான நேர்ச்சை அதை நிறைவேற்றவேண்டியது அவன்பேரில் வாஜிபு யென் வியாதியை அல்லாகுத்தஆலா சுகப்படுத்திவைத்தால் நான் றெஜபுமாதம் நோன்பு பிடிக்கிறது யென்பேரில் விதியாயிருக்குமென்று சொன்னால் இது நதறுல் முஅல்லக்கென்னுங் கொளுவப்பட்ட நேர்ச்சை அந்தவியாதிதீர்ந்து வொருனாளாவது சுவாத்தியம் பெற்றுவிட்டால் அதையவன் நிறைவேற்றவேண்டியது அவன்பேரில் வாஜிபு அந்த வியாதிதீருமல் யிறந்துபோய்விட்டால் அவன்பேரி லந்த நேர்ச்சையை நிறைவேற்றவேண்டியது வாஜிபில்லே,

(இனி) கொளுவப்படாத நேர்த்திக்கடன் ஒரு காலத்தைக்கொண்டும் ஒரு தானத்தைக்கொண்டும் ஒரு பக்கீரைக் கொண்டும் ஒரு காசைக்கொண்டும் சொந்தம்பெருது ஒரு மனிதன் ஜும்ஆ னளில் மக்கத்தில் இநத ருபாயை இன்னருக்குச் சதக்காக்கொடுப்பேனென்று நேத்திக்கடன் செய்து பின்பு வேறொருவூரில்க்கொடுப்பதுபோல் விரோதஞ்செய்தால் குற்றமில்லைக் கொடுத்தது துருஸ்தாகும் ஆனல் சீமான்கள் நேத்திக்கடன் வாங்கிறது கலாவில்லை,

(இனி) நேத்திக்கடன் நேர்ந்து துருஸ்தாகியதை நிறைவேற்றுகிறது வாஜிபாகிறதர்க்கு சறுத்தாவது (நாலு) அதில் (க- வது) பாவத்தை நேரப்படாது அதாவது கள்ளுக்குடிப்பதுபோலவும் பஞ்சா யெடுப்பதுபோலவும் இன்னம் ஹறுமான செய்கைகளைப்போலவும் (உ-வது) அந்நேரம் அல்லது பின்னல் அவன்பேரில் வாஜிபான செய்கையாக இருக்கப்படாது அது யேதுபோலெனில் அந்நேரத்தில் அல்லதுபின்னலே இவன்பேரில் வாஜிபாகிய தொழுகை நோன்பை நேத்திக் கடன் நேருகிறதுபோல (ங-வது) அது மக்குஸூதான இபாதத்தா யிருக்கவேணும் அதாவது தொழுகைநோன்பு ஸக்காத்துஇவைகளைப்போலவாம் ஆனல் ஒலுச்செய்வே னென்று நேத்திக்கடன் நேர்ந்தாலது து

ருஸ்தல்ல (ச-வது) அதின் இனத்தில் மக்ருஸ-ூதான வாஜிபு இருக்க வேண்டும் இதர்க்காகத்தான் இன்னுளை நசல்மீண்டுகொணுவேனென்று நேத்திக்கடன் நேர்ந்தால் அந்த நேத்திக்கடன் துருஸ்தல்ல.

இக்காலத்திற் படிக்காத ஜனங்கள் மிகுதமாக மவுத்தானவர்கட்கு நேருகிறதாவது யேதுபோலெனில் இன்ன வொலியேயென்னுடைய நசல்த்திர்ந்தால் அல்லது யென் முருது நிறைவேறினு வுங்களுக்கு இத்தனை ரூபாய் அல்லது இவ்வளவுசோறு அல்லது யெண்ணை அல்லது விளக்கு அல்லது வெள்ளி பொன் அல்லது இதுபோலொத்த வஸ்தைத் தருவே னென்று நேத்திக் கடன் நேருகிறது ஹறாமா யிருக்கும்.

ஆனால் அந்த வொலியுடைய பெயரைச்சொன்னதில் அவர்களுடைய கபுறிலிருக்கிற மிசிக்கீன்களை நாடி யல்லது அவர்கள் பள்ளி வாசலுக்காக யெரிக்கிறதர்க்கு யெண்ணையென்று நாடி நேத்திக்கடன் அல்லாகுத்த ஆலாவுக்கும் அதின்தவாபு அந்த வொலிக்குமென்று நாடினாற் குற்றமில்லை யென்கிலும் ஆண்டவனே நானுனக்காக இன்னவொலியுடைய கபுறிலிருக்கிற பக்கீறுகளுக்கு அல்லது இன்ன மதரசாவிலிருக்குற வோதுகிறபிள்ளைகளுக்கு அல்லது இன்னபள்ளியிலிருக்கிற மிஸ்கீன்களுக்கு இத்தனை ரூபாய் கொடுக்கிறேன் அல்லது ஒஜீபனம் கொடுக்கிறே னென் வியாதியைத் திர்த்துவையென்று நேமுகஞ் செய்கிறது யேற்றமா யிருக்கும்.

இப்படி நேர்ந்ததில் அந்தபக்கீறு மிஸ்கீனைத் தவிர வேறே எந்த மிஸ்கீனுக்குங் கொடுக்கிறதுமாகும் இப்பிரகாரம் ஆலங்கீறிறத்துல் முகுத்தாறு முதலான கித்தாபுகளில் வருகின்றன (ஆனுல்) ரூபங்களைக் கொடுப்பேனென்று நேருகிறது அறவே ஆகாது அவுலியாக்கள் தான் நம்மள்வியாதியை அல்லாகுத்தஆலா வன்றியே திர்ப்பார்களென்று நாடுகிறது குபிரா யிருக்குமென்று றத்துல் முகுத்தாறுயென்ற கித்தாபின் இரண்டாஞ் சில்தில் வருகின்றன.

ஆதலால் அல்லாகுத்தஆலா நம்ம ளியாவருக்கும் நோன்புடை
ய் பலனையும் இருத்திக்காபுடைய வரிசையையும் அவுலியாக்களுடைய
துஆபறக்கத்தையுந் தருவானாக ஆமீன்.

நோன்பின் பிரசங்கம்

முற்றிற்று.

ஹஜ்ஜின் பிரசங்கம் அதின் வரிசை.

குறுஆன் ஷரீபில் அல்லாகு சுபுகானகுத்தஆலா திருவுளம் ப
றியிருக்கின்றான் இயாராவது ஒரு முசிலிமான மனிதன் தான் செல
வேண்டிய கடன்போகத் தனக்குந் தன் பெண்சாதிபிள்ளைகளுக்கும்
க்கம்போய் அவன் வருகிறவரை காணும்படியான செலவுக்கும் வாகன
த்திற்குந் திராணிபெற்றால் அவன் அல்லாகுத்த ஆலாவுக்காக கஃப
விற்சென்று ஹஜ்ஜுசெய்கிறது கடமையாயிருக்கும்.

ஹதீது.

இயாராவது ஒரு மனிதன் ஹஜ்ஜுக்குப் போய்வரத் திரா
பெற்று ஹஜ்ஜு செய்யாமல் மவுத்தானால் அவன் நாடினால் யெக
தியாகச் சாகவும் அல்லது நசுறாணியாகச் சாகவும் (யெகுனி) அவ
சாகும்போது யெகூதியாகச் சாவான் அல்லது நசுறாணியாகச் சா
னென்றும் இன்னம் யாராவது ஒரு மனிதன் அல்லாவை நாடி ஹஜ்ஜ
செய்யப்போய் வந்தால் அவன் முன்செய்த பாவங்களையும் பின் பா
ங்களையும் பொறுக்கப்படும் இன்னமவன் யாருக்காகத் துஆக் கேட்ட
னே அந்த துவாவையுங் கபூற்செய்யப் படுமென்றுமின்னம் இயா
வது ஒரு மனிதன் ஹஜ்ஜுச் செய்கிறவனாக வும்றாச் செய்கிறவனா
நாடி வீட்டைவிட்டுப் புறப்பட்டுப் போகிறவழியில் மவுத்தாகிவிட்ட
ல் அவனுக்கு ஹஜ்ஜுடைய தவாபையும் வும்றாவுடைய தவாபை
ம்கியாம நாள்வரையிலும் வருட மடங்கலுக்கும் அல்லாகுத்த ஆ

கொடுப்பானென்றும் ஒருமனிதன் ஹஜ்ஜுக்குப் போய் வரும்போது வீட்டுக்குள் நுழைகிறதற்கு முன்பாக அவனைக் கண்டால் அவனுக்கு சலாஞ்சொல்லி கைகொடுத்து வுனக்குப் பிழை பொறுக்கத் தேடும்படி சொல்லு அவன் பாவங்களைப் பொறுக்கப்பட்டவனா யிருக்கிறானென்றும் நமது நாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிஉசல்லமவர்கள் திருவுளம்பற்றினார்கள்.

ஹிக்காயத்து.

முகம்மதிபுனு முன்கதிர் றகிமகுல்லாஃ யென்கிறவர்கள் (௩௩) ஹஜ்ஜுசெய்து கடாசி ஹஜ்ஜில் அறபாத்து மலையி னின்றுக்கொண்டு ஆண்டவனே இந்தத்தலத்தில் (௩௩) தரமின்றேன் அதிலொன்று என் பேரில் விதியான கடமைக்காக இன்னமொன்று யென் தகப்பனுக்கு ஹதியா ஒன்று யென் தாய்க்கு ஹதியாப் போக பாக்கி (௩௰) இந்தத் தானத்திர்க்கு வந்து ஹஜ்ஜு மக்குபூலாகாம லிருப்பார்களோ அவர்கட்கு நான் நன்கொடை கொடுத்தேன் அதர்க்கு நீ ஷாகிதா யிருவென்று சொல்லிவிட்டு முஸ்தலிபா வென்கிற தானத்திர்க்குவந்து நித்திரை செய்யும்போது ஒகே முன்கதி றென்கிறவருடைய மகனே கொடையைப் படைத்தவன் மீதிற் கொடை கொடுக்குறீரோ அல்லாகுத்தஆலா வுமக்குச்சொல்லுகிறான் யென் வலுப்பத்தின்பேரிலும் யென் சிறப்பின்பேரிலும் சத்தியமாக அறபாத்து மலையைபடைக்க (உ௲) வருடத்திர்க்கு முன் அதில்த் தரிபடுகிறவர்கள் பிழையைப் பொறுத்துவிட்டே னென்று ஒரு சத்தங்கேட்டார்கள்.

ஹிக்காயத்து.

அபீ அப்துல்லாஹில் ஜவுகறி யென்கிறவர்கள் சொல்லிவருகிறதாவது நானொரு வருடம் அறபாத்துமலையில் ஹஜ்ஜுடைய நாளிரவையி னெடுக்கத்தில் நித்திரை செய்துகொண் டிருந்தேன் வான லோகத்தி லிருந்து இரண்டு மலக் கிறங்கினார்கள் அதி லொருவர் மற்றவனைப் பார்த்து இவ் வருடம் யெத்தனை ஜனம் ஹஜ்ஜுக்காகவந்து இத்தானத்

தில் தரித்தார்களென்று கேட்க ஆறுலட்சம் பெயரென்றார் யெத்தனை பெயருடைய ஹஜ்ஜி மக்பூலாச்சுதென்று கேட்க ஆறுபெயரைத்தவிர மற்றவர்களுடைய ஹஜ்ஜை மக்பூலாக்கவில்லையென்றார் அப்பவேநான் யென் கன்னத்திலடித்து அழுகலானேனென்றநாடினேன் அப்போது ஒருமலக்கு ஆறுபெயரைத்தவிர மற்றவர்களுடைய ஹஜ்ஜுக்கு அல்லாகுத்தஆலா யென்ன பைசல்செய்தானென்று கேட்க அவர்களளவில்க் கிருபையென்னுங் கண்கொண்டு கொடையாளியான நாயன் பார்த்து ஒவ்வொரு லட்சம் ஜனத்துடைய ஹஜ்ஜிகளை ஒவ்வொருவர்பொருட்டால்க் கபூல்செய்து ஆறுலட்சம் பெயருடைய பாவங்களை ஆறு பெயருடைய பொருட்டாற் பொறுத்து விட்டானென்று சொன்னார்கள் வுடனே நான் கண்விழித்துவிட்டேன் (இச்செய்திஇருசாதில்வருகின்றது) கச்சு மருபூலான கூட்டத்தில் ஆண்டவன் நம்மைச்சேர்ப்பானாகஆமீன்.

ஹஜ்ஜுடைய ஹுக்குமுகளின் பயான்.

(ஹஜ்ஜாவது) அதினுடைய நிய்யத்துக்கொண்டு இகுறாங் கட்டி நகறென்னும் பத்தாநாள் பஜிறிலிருந்து அசறி னுடைக்கம்வரையில் தவாபு செய்தவனாக கஃபாவைச் சியாறத்துச் செய்கிறதும் அறபா நாள் மதியந் திரும்பினதிலிருந்து நகருடைய நாள் பஜிறுவரையில்த் தரிபட்டவனாக அறபாவைச் சியாறத்துச் செய்கிறதுமாயிருக்கும் (ஆனால்) இகுறாங் கட்டுகிறது சறத்தாகயிருக்கும்.

இகுறாம் கட்டுகிறதாவது வுலுச்செய்தபின் அல்லது குளித்தபின் துப்புரவாகிய தையலில்லாத வெள்ளைச்சீலை இரண்டில் ஒன்றையுடுத்தி யொன்றை மேலேபோட்டு இகுறாம் கட்டுகிறதலத்தில் மணம்பூசி இரண்டு றக்காஅத்துத் தொழுது அல்லாகும்ம இன்னீ வுறீதுல் ஹஜ்ஜ பொயெஸ்ஸிர்கு லீவுத்தகப்பல்கு மின்னீ ஆண்டவனே நான் ஹஜ்ஜை நாடுகிறேன் அதை யெனக்கு லேசாக்கித் தரவேணும் அதைக் கபூல்ச் செய்யவேணுமென்று நாடிச்சொல்லி இதினடியில் வருகிற தல்பியாவுஞ் சொல்லி முடிக்கவும் இப்படி யிகுறாம கட்டுமுன் முடி யிறக்குறது நக

ம்தறிக்கிறது இதுபோலான செய்ல்களைச் செய்துகொள்கிறது முஸ்த கப்பாம் (பின்னர்) (இனி) அறபாவில்த் தரிபடுகிறதும் தவாபு சியாற த்தும் றுக்குனுயிருக்கும் இனி அதாகிறது வயசி லொரு விடுத்தம் தீ வரத்தின்பேரில் பறுலாயிருக்கும் அதைப் பிற்படுத்துகிறதுகொண்டு பாவியாகிவிடுவா னவன் சாட்சியை யொப்புக்கொள்ளப்படாது அவன் ஹஜ்ஜு செய்யாமல் மவுத்தாகிவிட்டால் பாவியாகிவிடுவான்.

(இனி) அது பறுலாகிறதற்குச் சறுத்தாகிறது (அ) அதாவது இசுலாமா யிருக்கிறதும் புத்திசாலியா யிருக்கிறதும் பாலிகா யிருக்கிறதும் நாட்டான்மகனு யிருக்கிறதும் தன்னூர்க்காரர் புறப்படுகிறநேரத்தில்த் திராணிபெற் றிருக்கிறதும் நடுத்தரமாகிய வூண்தீன்சாமான்பேரில்த் திராணி பெற்றிருக்கிறதும் வாகனத்தின்பேரில்த் திராணிபெற் றிருக்கிறதும் தாறுல் ஹறுபென்னு மிசுலாமில்லாத காபிர்தேசத்தி லிருக்கிற ஒரு முசுலிமானவன் ஹஜ்ஜு விதியென்றறிகிறதுமாயிருக்கும்.

தின்னப்பட்ட தீனின்பேரில்த் திராணிபெற் றிருக்கிறது தான் போய்வருகிறவரைக்கும் தன்னுடைய செலவைவிட்டும் தான் அன்ன வஸ்திரங் கொடுக்கவேண்டியது வாஜிபானவர்களின் செலவை விட்டும் தனக்கு வேண்டுமாகிய வீடு சாமான் தொழிலாயுதங்கள் கடனிறுக்கிறது இப்படிக்கொத்ததைவிட்டும் மேல் மிச்சமாயிருக்கவேணும்.

இனி யதை யிறுக்கிறதின் பறுலாகிற சறுத்தாவது (ஙி) அதாவது சரீரசுவாத்தியமா யிருக்கிறதும் பாதையில் அச்சந் தீர்ந்திருக்கிறதும் சிறைசாலையி லில்லாமலிருக்கிறதும் பெண் பிள்ளைக்குக் கொள்ள ஹறுமானவன் அல்லது புருட னுண்டாயிருக்கிறதும் இத்தா யில்லாமலிருக்கிற துமாம்,

ஹஜ்ஜுடைய வாஜிபுகளின் விபரம்.

அதாவது மீக்காத்தென்னும் இஹுறாங் கட்டுகிறதற்குக் குறிப்பிடப்பட்ட யெல்கையில் வைத்து இஹுறாங் கட்டுகிறதும் அறபாத்து மலையில் பொழுது அஸ்தமிக்கிறவரையில்த் தரிபடுகிறதும் நகருடைய

நாட் கிழக்குவெளுத்தபின் சூரியன் உதயமாகமுன் முஸ்தலிபா வென்னுந் தானத்தில்த் தரிபடுகிறதும் ஜம்ருக்களைக் கல்லா லெறிகிறதும் காறினென்னும் (ஹஜ்ஜு வும்றா) இரண்டுக்குஞ் சேர்த்து இகுறாங் கட்டினவனும் (முத்தமத்திஹு) யென்னும் வும்றாச் செய்தபின் ஹஜ்ஜுக்கு இகுறாங் கட்டினவனும் குறுபான் கொடுக்கிறதும் இன்னம் தலைமுடியிறக்கிறதும் அதை (ஹறமில்) நகருடையனுளில்க் குறிப்பிட்டுஅறுக்கிறதும் தலைமுடி இறக்கிறதர்க்குமுன் கல்லெறிகிறதை முற்படுத்துவதும் இவை யிரண்டுக்கு மிடையில் (காறினுமுத்தமத்திஹு)குறுபான் கொடுக்கவேண்டியதை ஆக்கிக் கொள்ளுகிறதும் தவாபு சியாறத்தை நகருடையனுட்களிற் செய்கிறதும் ஸபா மறுவாவுக்குஇடையில் ஓடுதலென்னும் ஸயீயை ஹஜ்ஜுடையனுளில்ச்செய்வதும் அந்த ஸஹியை தவாபுக்குப் பின்னாலே செய்வதும் அதிலேதங்கடமில்லாத்தவன் நடந்துபோகிறதும் ஸஹியை ஸபாவில் நின்றுந் துவக்கஞ் செய்வதும் தவாபுல் விதாஹு யென்னும் பயணத்துடைய தவாபும் தவாபு அடங்கலையும் ஹஜறுல் அசுவதில் நின்றுந் துவக்கஞ்செய்வதும் யெந்த தவாபானலும் யெவ்வேழு விடுத்த மடங்கலுக்கும் இரண்டு றக்கா அத்துத் தொழுகிறதும் தவாபு செய்கிறதாவது ஹத்தீம்யென்ற தானத்திர்க்குப் பின்னாலேயாம் (இன்னும்) தவாபு செய்கிறதில் வலதுபுறம் முன்றுடங்கிறதும் தங்கட மில்லாத்தவன் நடக்கிறதும் சிறுதுடக்குப் பெருந்துடக்குகளை விட்டுந் துப்புரவா யிருக்கிறதும் வெட்கத்தலத்தை மறைக்கிறதும் தவாபு சியாறத்தில் மிகுந்ததைச் செய்தபின் சொஞ்சத்தைச் செய்கிறதும் விலக்கலானதுகளை விடுகிறதுமா யிருக்கும்.

விலக்கலானதுக ளென்றது ஆண்பிள்ளை தையல்வுடுப்பு அணைகிறதும் தலையையும் முகத்தையும் மறைக்கிறதும் பெண்பிள்ளை முகத்தை மறைக்கிறதும் பெண்பிள்ளைக ளிருக்கிற யிடத்தில் ஜமாகுடைய பேச்சுப் பேசுவதும் பாவமானகருமங்களைச்செய்கிறதும் ஒன்றுக்கொன்று தர்க்கித்துச் சண்டைபோடுகிறதும் வேட்டைமிருகத்தைக் கொல்லுகிறதும் அதை காண்பித்துக் கொடுக்கிறதுமா யிருக்கும் இவைகளைவிட்டு நீங்கவும்

ஹஜ்ஜுடைய சுன்னத்துகளின் விபரம்

அதாவது இஹ்றாங் கட்டுமுன் குளிக்கிறது அல்லது ஒலுச் செய்கிறதும் வெண்மையான புதுசாகிய அல்லது வெளுத்துத் துப்புர வான இரண்டு பிடவையில் ஒரு பிடவையை யுடுத்தி யொரு பிடவை யை முதுகின்பேரிற்போடுகிறதும் இஹ்றாங் கட்டமுன் சரீரத்தில் மணம் பூசுகிறதும் அந்நேர மிரண்டு றக்அத்துத் தொழுகிறதும் இஹ்றாங் கட்டினபின் யெப்பொழுதானாலும் மேட்டி லேறினாலும் பள்ளத்தி லிறங்கினாலும் வாகனங்களைச் சந்தித்தாலும் ஷகரு ஒக்துகளிலும் (தல்பியா) யெகுனி (லப்பைக்கல்லா ஹும்ம லப்பைக்கு லகுதக்க லா ஷரீக்கலக்கலப்பைக்கு இன்னல்ஹம்த ஒன்னிகுமத்தலக்க ஒல்முல்க்க லாஷரீக்கலக்க) யென்றுமிகுதமாய்ச்சொல்வதும் தல்பியாவிற்றுடங்குந் தோறெல்லாம் அதை மடக்கி மடக்கிச் சொல்லுகிறதும் நபிசல்லல்லாகு அலைகி ஒசல்ல மவர்கள்பேரிற் சலவாத்து மிகுதமாகச் சொல்லுகிறதும் சுவர்க்கலோகத்தையு மதின் னல்லோர்களென்னுந் தோழமையையும் கேட்கிறதும் நரகத்தைவிட்டுங் காவற்றேடுகிறதும் மக்கத்திலே புகுதுகிறதர்க்காகக் குளிக்கிறதும் அதிற் பகலையிலே மேல்புறத்து வாசல்வழியே போகிறதும் சிறப்பாகிய பைத்துல்லாவைத் தெரிசித்தநேரமெல்லாம் தக்குபீர் தகுலீல் சொல்லுகிறதும் அதைக் கண்டபோது தனக்கு வுவப்பானதைக்கொண்டு துஆச்செய்கிறதும் முன்னேக்குதலென்னுங் குத்தூமுடைய தவாபும் அதிலே மேல் வேட்டியை வலது கைமுட்டுக்குங் கீழாக்கி யதின்முந்தியை யிடது தோழின் புயத்தின்மேலாக்கிப் போட்டுக்கொள்கிறதும் அதிலே முந்தினமூன் றுவிடுத்தத்தில் இரண்டு தோள்ப்புயத்தையும் அசைத்து அடிகளை முடுகவைத்து தீவரமாய் நடக்கிறதும் தவாபு செய்யுந்தோறெல்லாம் ஹசறுல் அசுவதை முன்னேக்கித் தக்குபீறுசொல்லி யிருகையை யுயர்த்தின பின் அதை முத்தமிடுகிறது வருத்தமா யிருந்தால் கையைக்கொண்டு சைக்கினை செய்து தக்குபீர் தகுலீல் சலவாத்துச் சொல்லிக் கொள்கிறதும் பள்ளியுடைய சுவரிலே யெடுக்கப்பட்ட மீலையினில் அகுலறயினுக் கிடையில்

ஸகியென்னும் ஓடுதலும் மிகுதமாய்தவாபுசெய்கிறதும் ஹஜ்ஜினுடைய யேழாநாள் மக்கத்திலே லொஹறு தொழுத பின் இமாம் குத்துபாவோதுகிறதும்,

எட்டானாட் சூரிய னுதயமானபின் மக்கத்திலிருந்து மீனுபசாருக்குப் போகிறதும் அதிலே இராத்திரியிருக்கிறதும் பின்பு அறபா னாள் சூரியனுதயமானபின் மீனு பாசாரிலிருந்து அறபாவுக்குப் போகிறதும் இதில் மதியத்திற்குப் பின் லொஹறுக்கு முன் இமாம்குத்துபாவோதுகிறதும் அதில் லொஹறையும் அசறையு மொன்றாய்ச்சேர்த்து ஜம்ஆகத் தொழுதபின் ஜனங்களெல்லாந் தரிபடுகிற இடமென்னும் மவக்கிபுக்குப்போய்ச் சஞ்சலமடைந்து பாவத்தை நினைத்துக் கண்ணீர்விட்டழுகிறதும் தனக்குந் தன் தாய்தகப்பன் மூமினாகிய வுடப்பிறந்தார்களுக்கும் இருபதியுடைய நலவிக்த தானுடியதைத் துஆச்செய்துகேட்கிறதும் பொழுது அஸ்தமித்தபின் னொடுங்குத லுடனே அறபாத்தைவிட்டுப் புறப்பட்டு முஸ்தலிபாவென்னுந் தானத்தில் வாதீமுகஸ்ஸறவிட்டிமிம்மி முஸ்ருமலக்கி முடுகுதலி லிறங்கிறதும் அதில் ராத்திரி படுக்கிறதும் மீனுவில்த் தரிபடுகிற நாட்களில் அவன் சாமானுடனே இராத் தரிக்கிறதும் ஹஜ்ஜைக்கொண்டுமாத்திரம் இகுறாங் கட்டினவனென்னும் முபுறித குறுபான்கொடுக்கிறதும் அதில்நின்றும் இன்னம் மற்ற முஸ்தகப்பான குறுபானி னின்றும் முத்து அத்துக்கிருனுடைய குறுபானி னின்றுமாத்திரம் தின்னுகிறதும் நகருடைய நாளையில் குத்துபாவோதுகிறதும் மீனுவிலிருந்து பிரையாணித்தபின் னொரு சாஅத்தாவது மக்கத்துடைய முஹஸ்ஸபென்னும் மூத்த வெளியிலிறங்கிறதும் ஸம்ஸம் யென்ற கிணற்றுத்தண்ணீர் குடிக்கிறதும் அத்தண்ணீரை வயிறுமுட்ட விலாக்குடை யெலும்புக ளொழும்பும்படி குடிக்கிறதும் குடிக்கும்போது பைத்துல்லாவுக்கு முன்னோக்கி நேரேநின்று பார்க்கிறதும் அந்தத் தண்ணீரைத் தலையின்பேரிலும் மற்ற சரீரத்தின்பேரிலுந் தெளித்துக்கொள்கிறதும் ஹசறுல்அசுவதுக்குங் கஃபாவுடைய வாசலுக்கு மிடையிலுள்ள முல்த்தசுமா வென்னுந் தலத்தில் நெஞ்சையும் முகத்தையும் அதின்பேரில் வைத்துக் கஃபாவின் திரை

யைப்பிடித்தும் கஃபாவைக்கொண்டு மன்றுடுகிறவனைப்போற்கொளு வுகிறதும் அப்போது வுள்ளச்சம் சஞ்சலப்பாட்டுடனே தக்குபீர் தகுவில் சலவாத்துச்சொல்லித் துஆச்செய்கிறதும் கஃபாவுடைய வாசலை முத்தமிட்டுக்கொள்கிறதும் பள்ளியை விட்டுப் புறப்படுகிற வனாயிற் பைத்துல்லாவைக் கடைக்கண்ணிட்டுப் பார்த்தவனாகப் பிற்காட்டிய முதுகொண்டு மீளுகிறதுமாயிருக்கும்;

தன்னை மற்றவனை நோவினைச்செய்கிற துண்டாகாவிட்டால் கஃபாவினுட் போகிறது முஸ்தகப்பு அதில் நபிநாயகத்தின் முசல்லாவை நாடவேண்டும்.

இனி ஹஜ்ஜுடைய மாசங்களாகிறது (சவ்வாலுந் துல்கஹுதாவும் துல்ஹஜ்ஜு முந்தின பத்துநாளுமாக யிருக்கும் இந்த மாசத்திர்க்குமுன்னுமேல ஹஜ்ஜுக்கு இஹுறும் கட்டுகிறது மக்குறூகு.

உம்றுவின் விபரம்

அதாகிறது சுன்னத்து முவக்கதாவா யிருக்கும் வும்றுவாகிறது இஹுறுமுந் தவாபும் ஸஃயென்னும் சபா மறுவா வோடுகிறதும் அதில் முடியிறக்கிறதும் அல்லது கொஞ்சம் ஒரு யிறையளவு கறுக்கிறதுமாயிருக்கும்,

ஆனால் இஹுறும் சறுத்தாயிருக்கும் தவாபில் மிகுதம் றுக்குனுயிருக்கும் இது இரண்டைத்தவிர வுள்ள செய்கையெல்லாம் வாஜிபா யிருக்கும்.

உம்று வருடமடங்கலும் ஆகும் றமலானில் முஸ்தகப்பு அறபா நாளும் அதர்க்குப்பின் நாலுநாளும் மக்குறூகு.

ஹஜ்ஜுல் அக்குபறின் விபரம்,

துல்ஹஜ்ஜுமாதம் ஒன்பதாநாளாகிய அறபா வன்று வெள்ளிக்கிழமை வந்தால் அந்த வருடத்தின் ஹஜ்ஜாகிறது ஜும்ஆ இல்லாமல்

மற்றநாள்வருகிற யெழுபது ஹஜ்ஜைக்காண ஏற்றமா யிருக்குமென்று ஹதீதில் வருகின்றன.

இனி சீமானுடைய ஹஜ்ஜு பக்கீறுடைய ஹஜ்ஜைக்காண மிகவும் வரிசை பறுலான ஹஜ்ஜு தாய்தகப்பனுக்கு வழிப்படுகிறதைக் காண மிகவும் வரிசையாயிருக்கும் ஆனால் தாய்தகப்பன் இவனுடைய கிதுமத்தளவில் ஹாஜத்தானல்வத ரவன்றிப்புறப்படுகிறதுமக்குறாகூ

இனி தாய்தகப்பனுக்கு வழிப்படுகிறது நபிலானஹஜ்ஜைக்காண ஏற்றமாயிருக்கும்.

ஹஜ்ஜுனுடைய குற்றங்களின் பயான்

குற்றமாவது இகுறுமின்பேரிலுள்ள குற்றம் ஹறமின்பேரிலுள்ள குற்றம் இப்படி இரண்டு பங்காயிருக்கும்.

இகுறுமின் குற்றம்.

இகுறுமின் பேரிலுள்ள குற்றத்தில் சிலது இரத்தத்தைவாஜிபாக்கும் சிலது அரைமரக்கால்மணிக் கோதும்பையை ஸதக்காக்கொடுக்கிறதை வாஜிபாக்கும் சிலது அதற்குக் குறைய வாஜிபாக்கும் சிலது விலைவைக்கிறதை வாஜிபாக்கும்.

ஆதலால் இகுறுங்கட்டின பாலிக்கானவன் நிறப்பமாகிய வொரு வுறுப்புக்கு மணம்பூசினலும் தலைக்கு மருதோன்றிகொண்டு பூசினலும் நிறப்பமாகிய வொரு வுறுப்புக்கு சைய்த்தூன் யெண்ணை அல்லது நல்லெண்ணைபூசினலும் நிறப்பமாகிய வொரு பகலைக்கு அல்லது இரவைக்குத் தையலுடுப்பு வுடுத்தினலுந் தலையைமறைத்தாலும் தலையிற் கால்வாசி இறக்கினலும் இரத்தங் குற்றி வாங்குந் தலத்தை இறக்கி யிரத்தங்குற்றி வாங்கினலும் இரண்டு கமுக்கட்டி லொன்றை இறக்கினலும் சிழ்ரோமங்களை யெடுத்தாலும் பிடரிரோமமிறக்கினலும்

இரண்டுகை இரண்டுகால் நகங்களை யொரு மஜ்லிசில் அறுத்தாலும்அ ல்லது ஒருகை யொருகால் நகங்களை யறுத்தாலும் குத்தூமுக்கு அல் லது சறுத்துக்கு ஜஃனுபாளியாகத் தவாபுசெய்தாலும் முன் சொன்ன வாஜிபுகளில் யாதொரு வாஜிபைவிட்டாலும் இரத்தம் வாஜிபுஇரத்த மென்றதாவது ஒரு கிடா யறுத்துக்கொடுக்கிறதா யிருக்கும்.

முபுறிது தன் யிகுறாமின்பேரில் செய்தகுற்றத்தின் சபபுகொண் டு ஒரு இரத்தம் வாஜிபாகிவிட்டதே அந்த ஒன்றடங்கலிலும் காறினி ன்பேரில் இரண்டு ரத்தம் வாஜிபு குறுபானைக்கூடக் கொண்டுபோன முத்தமத்திவும் இதுபோல்த்தான்.

இனி ஹறமில் குருபானி யறுக்குமுன் தலையிறக்கினாலும் கல்லெ றியமுன் தலையிறக்கினாலும் இரண்டு ரத்தம் வாஜிபு இது இரண்டிலு ம் முபுறிதின்பேரில் யாதொன்று மில்லை.

இனி யொரு வுறுப்புக்குக் குறைய மணம்பூசினாலும் வொருபக லுக்குக் குறையத் தையலுடுப்பை யணிந்தாலும் தலை மூடினாலும் தலையில் கால்வாசிக்குக் குறைய இறக்கினாலும் மீசையை இறக்கினாலு ம் அஞ்சு நகத்திற்க்குக்குறைய அறுத்தாலும் பிரிச்சலாக அஞ்சுநகம்அ றுத்தாலும் குத்தூமுக்கு அல்லது சதுறுக்கு வொலுவில்லாமல் தவா புசெய்தாலும் சதுறுடைய தவாபில் மூன்று சுற்றை விட்டாலும் மூன் று ஜஃம்றுவில் ஒன்றைவிட்டாலும் அவனல்லாதவன் றலையைஇறக்கி னாலும் அரைமரக்கால்மணிக் கோதுமை கொண்டு சதக்காக் கொடுக் கவேண்டும்.

தங்கடங்கொண்டு மணம் பூசினாலும் முடி யிறக்கினாலும் வுடுத் தினாலும் நாடினால் அறுக்கவும் அல்லது மூன்று மரக்காற் கோதும் பைகொண்டு ஆறு மிசிக்கீனுக்கு ஸதக்காக் கொடுக்கவும் அல்லது மூ ன்றுநாளைக்கு நோன்பு பிடிக்கவும்,

இனி பேனை விட்டிலைப்போலொத்ததைக் கொன்றால் அவன்நா டினதை சதக்காக் கொடுக்கவும் வேட்டை மிருகத்தைக் கொன்றாலும்

அறிவித்தாலும் அதைக் கொன்றவிடத்தில் அல்லது அதற்கு முடுகு தலான விடத்தில் இரண்டு நீதவான் அம்மிருகத்தின் விலைவைத்து அந்தவிலைக்குக் குறுபானுடைய விலையை யெத்திவிட்டால் அதைக் கொடுத்துக் குறுபானி கொடுக்கிற வஸ்துவை வாங்கிக் குறுபானிகொடுக்கவும் அல்லது தவசத்தைவாங்கி மணிக் கோதும்பானால் ஒவ் வொரு பக்கீருக்கு அரைமரக்கால் கொடுக்கவும் அல்லது ஒவ்வொரு மிசுக்கீனுடைய சதக்காவுக்குப் பதிலாக வொவ்வொரு நோன்புபிடிக்கவும் அரைமரக்காலுக்குக் குறைந்தாலதை சதக்காக்கொடுக்கவும் அல்லதுஒருநோன்பு பிடிக்கவும்.

வேட்டைமிருகத்தைக் காயப்படுத்தினாலும் ரோமத்தைப் பிடிங்கினாலும் ஒரு வுறுப்பைக் கெடுத்தாலும் அந்த மிருகம் இவ்விதமான அய்பால் யென்னவிலை குறைந்ததோ அந்தக் குறைவான விலையைக் கொடுக்கவும் அதெப்படியென்றால் முந்தின ஒருபிராணி ஒருரூபாயாகயிருந்தது அய்பால்க் கால்ரூபாய் குறைந்து முக்கால் ரூபா யாகிவிட்டால் கால்ரூபாய் கொடுப்பதுபோல் அதி னிறகைப் பிடிங்கினாலும் கால்களை முறித்தாலும் முட்டையை யுடைத்தாலும் அதின் கிரையங் கொடுக்கிறது வாஜிபு.

ஹறத்தின் குற்றம்.

இகுறு மில்லாத்தவன் ஹறத்தினுடைய வேட்டை மிருகத்தைய டித்தாலும் அதைப் பால்கரந்தாலும் ஹறத்தின் புல்லைத் தரித்தாலும் ஒருவருக்குஞ் சொந்தமாகாமல் வைத் துண்டாக்காத மரத்தைத் தறித்தாலும் அதினுடைய விலையை மதித்துக்கொடுக்கிறது வாஜிபு.

ஆனால் பட்டமரத்தை முறிந்த மரத்தைத் தறித்தால்ப் பிணையில்லை அதிலுள்ள புல்லுகளை ஆடுமாடுகளைவிட்டுமேய்க்கவும் அறுக்கவும்படாது இதுகளெல்லாஞ் சுக்குநாறிப் பூண்டைத்தவிர மற்றப் பூண்டுகளை அறுக்கப்படாது காளானைப் பிடிங்கிக்கொள்ளலாம்.

இனி காக்கையை பருந்தை நட்டுவக்காலியை யெலியை பாம்பை கடிநாயை கொசுகை யெறும்பை செள்ளை வுண்ணியை முதலையை யீசலை வேட்டை மிருகமல்லாத்ததை கொல்லுகிறது கொண்டு யாதொரு குற்றமில்லை.

ஆனால் ஆட்டை மாட்டை ஒட்டையைக் கோழியை வீட்டுத் தாராவை அறுக்கிறது ஆகும் இகுரு மில்லாதவன் வேட்டையாடி கில்லு யென்னும் ஹறத்தைத்தவிர வுள்ள இடத்தி லறுத்ததைத்தின்னுகிறது ஆகும்.

இனி மக்கத்திலே அதினுடைய ஹக்குகளைப் பேணினவ னாகத் தரிபடுகிறது முஸ்தகப்பு ஹதீதில் இந்த பைத்தென்னுங் கஃபத்துல்லாவின்பேரில் நாளொன்றிற்கு நூற்றியிருபது றகுமத்திறங்கும்(சுய) றகுமத்து தவாபு செய்கிறவர்கட்கும் (சயு) றகுமத்துத் தொழுகிறவர்கட்கும் (உய) றகுமத்துப் பார்க்கிறவர்கட்குமா யிருக்குமென்று வந்திருக்கிறது ஆண்டவன் நம்மனவோருக்கும் அந்த றகுமத்தை நசீபாக்கி வைப்பானாக ஆமீன்.

குறுபானியின் பயான்.

குறுபானில்த் தாழ்ந்தது ஒரு ஆடாகயிருக்கும் குறுபானாகிறது ஐந்து வருடத்துடைய ஒட்டகமும் இரண்டுவருடத்துடைய மாடும் ஒருவருடத்துடைய கிடாயுமாயிருக்கும் வுளுஹிய்யாக்களிலாகுமானது தான் குறுபானிலேயு மாகும் ஹஜ்ஜிலே ஆடு யெல்லாக் காரியத்திலுமாகும்.

ஆனால் தவாபு சியாறத்து இவைகளை ஜுனுபாளியாக ஹயலுக்காரியாகச் செய்வதும் அறபாவில்த் தரிபட்டபின் முடியிறக்கமுன் சேர்க்கை செய்கிறதுமாகாது அவை இரண்டிலும் ஒட்டகம் அல்லது மாடு வாஜிபு.

சுன்னத்துடைய குறுபான் முத்தஅத்துக் கிருனுடைய குறுபானி னின்றுமட்டுந் தின்னுகிறது முஸ்தகப்பு இந்த மூன்றைத்தவிர மற்

ற குறுபான்களில் தின்னப்படாது தின்றால் அதின்விலையை மிசிக்கீனு க்குக் கொடுக்கிறது வாஜிபு.

முத்தஅத்துக்கிறுனுடைய குறுபானை நகருடைய நாளையிலேயே அறுக்கவேண்டும் அடங்கலுக்கும் ஹறத்திலேயே குறிப்பாக அறுக்க வேண்டும் அதினுடைய போர்வையை மூக்கணங் கயற்றுடனே ஸதக் க்காக் கொடுக்கவேண்டும் அறுக்கிறவனுக்குக் கூலியாக யிவைகளைக் கொடுக்கப்படாது.

மக்கத்தின் வரிசை ஹதீது,

பூமியில் நன்மையை யொன்றுக்கு லட்சமாக எழுதப்படுமே அப்படிக்கொத்த வூர் மக்கத்தைத்தவிர வேறில்லை அம்மக்கத்தில் யாராவது ஒரு விடுத்தந் தொழுதால் லட்சம் விடுத்தந்தொழுததாகவும் ஒரு நாளைக்கு நோன்பு பிடித்தால் லட்சநோன்பு பிடித்ததாகவும் ஒருதிருகம் ஸதக்காச்செய்தால் லட்சந் திருகஞ் சதக்காச் செய்ததாகவும் ஒருகத்தமோதினால் லட்சம் கத்தம் ஓதினதாகவும் ஒரு தசுபீகுசொன்னால் லட்சந் தசுபீகுசொன்னதாகவும் அல்லாகுத்தஆலா எழுதுவானென்றும்.

இன்னும் மக்கத்தில் பதினைந்து இடத்தில் துஆவைக் கபூல்ச் செய்யப்படும் அதாவது கஃபாவினுள்ளிலும் ஹஜறுல் அசுவதுக் கல்லுக்கருகிலும் றுக்குனில் யெமானிக்கருகிலும் மீசாபென்னும் தண்ணீர் ஓடுகிற மடைக்குங் கீளேயும் இசுமாயீல் அலைகிஸ்ஸலா மவர்கள் வீட்டிலும் முல்த்தசமாவிலும் இபுறுகீம் அலைகிஸ்ஸலா மவர்களுடைய மக்காமிலும் ஸம்ஸம் யென்ற கிணற்றிடத்திலும் சபாவும்பேரிலும் மறுவாவின்பேரிலும் அறபாத்து மலையிலும் முஸ்தலிபாவிலும் ஜம்றத்துல்வூலா ஜம்றத்தில் வுஸ்தா ஜெம்றத்தில் அக்கபா இவைகளிலு மாமென்று நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிஸசல்லமவர்கள் திருவாய்மலர்ந் தருளினார்கள்.

நபிசல்லல்லாகு அலைகிஒசல்ல மவர்களின் றவுலாவை சியாறத்துச் செய்வதின் பயான்.

துற்றுல் முகுத்தார் யென்கிற கித்தாபில் வருகிறதாவது மக்காமாநகரமாகிறது மதீனமாநகரத்தைக் காண யேற்றமா யிருக்கும் யென்கிலும் நபிசல்லல்லாகு அலைகிஒசல்ல மவர்களின் சங்கையாகிய வுறுப்புகளைப் பொதிந்திருக்கிற யிடமாகிறது மக்கத்தைக் காணவும் கஃபாவைக்காணவும் அறுஷைக் காணவும் குருசியைக்காணவு மிகஏற்றமா யிருக்கும்,

நபிநாயகம் அவர்களின் கபுறை சியாறத்துச் செய்கிறது முஸ்தகப்பாயிருக்கும் யென்கிலும் கையிற் பொருள் விஸ்தீன மானவர்கட்கு வாஜிபாயிருக்கும்.

ஹதீது

இயாராவது வொருவன் நான் வுபாத்தான பின் யென்கபுறைவ
ந்து தெரிசித்தவன் நான் ஹயாத்தாக யிருக்கிறபோது யென்னை வந்து
கண்டதுபோலா யிருக்குமென்றும் இயாராவது ஒருமனிதன் யென் க
புறை சியாறத்துச்செய்தால் அவனுக்கு யென்னுடைய ஷபாஅத்துவா
ஜிபு இயாராவது ஒரு மனிதன் ஹஜ்ஜு செய்தபின்பு யென்னுடையற
வுலாவில் வந்து யென்னை நாடினுல் அவனுக்கு மக்பூலான இரண்டுஹ
ஜ்ஜு யெழுதப்படுமென்றும் யாராவது வொரு மனிதன் யென்னை வந்
துகாணத் திராணிபெற்றபின் யென்னைவந்து தெரிசிக்கவில்லையானுல்
யென்னை வெறுத்தவனு யிருக்குமென்றும் யாராவது ஒரு மனிதன் மதீ
னத்தின் குட்டின்பேரிலும் தாகத்தின்பேரிலும் சபூர்செய்தால் அவனு
க்கு நான் கியாமநாளில் நான் மன்றுடுவேனென்றும் இரு சகானுக்கும்
நாயகமாகிய முகம்மது நபிசல்லல்லாகு அலைகிஒசல்ல மவர்கள் திருவுள
ம்பற்றினுர்கள்.

ஹிக்காயத்து.

அபுல் ஹசனுல்சூபீ றகிமகுல்லாஃ அவர்கள் பேசி வருகிறதா
வது காத்தமுல் அஸம்மு றகிமகுல்லாஃ ஒருவிடுத்தம் நபிசல்லல்லாகு

அலைகிஒசல்ல மவர்களின் சிறப்பாகிய றவுலாவில் நின்று ஆண்டவனே வுன்னுடைய ஹபீபாகிய முகம்மது நபிசல்லல்லாகு அலைகிஒசல்லமவ ர்களுடைய கபுறைத் தெரிசித்தோம் யெங்களைப் பேர் கெட்டவர்களா க வாக்காதே யென்று சொன்னார்கள் வுடனே வுருத்தோற்ற மன்றியே ஒசை இன்னாரே வுமக்கு நாம் முகம்மதுநபியுடைய கபுறைத் தெரிசிக் கும்படி யெப்பொழுது கட்டளை செய்தோமோ அப்பொழுதே வும் மைத் துப்புரவாக்கி வைத்துவிட்டோம் இன்னும் வுமக்கும் வும்முட ன் சியாறத்துச் செய்யவந்தார்களே அவர்கட்கும் பிழை பொறுத்துவி ட்டோம் நீங்கள் போகலாம் ஆனதால் நான் வும்மைத்தொட்டும் முகம் மது நபியுடைய கபுறை சியாறத்துச் செய்தவர்களைத் தொட்டும் பொ றுத்தமா யிருக்கிறேனென்று சத்தம்வந்தது இச்செய்தி இருசாது . யெ ன்கிற கித்தாபில் வருகின்றன.

அதின் அதபுகள்.

இயாராவது வொருமனிதன் மதீனாவுக்குப்போனால்முதலாவது நபிநாயகம் அவர்களின் கபுறை சியாறத்துச் செய்யவேண்டும் அப்படி ச்செய்யும்போது நபிநாயகம் அவர்களின் பள்ளி வாசலையும் சியாறத்து ச்செய்கிறேனென்று நாடிக்கொள்ளவேண்டும் நபிநாயகம் அவர்களின்ப ள்ளியிற் றொழுகிறது வொன்றுக்கு ஆயிரமாயிருக்கும் பைத்தில் முக த்திசுப் பள்ளியில்த் தொழுகிறது ஒன்றுக்கு ஐநூறாக யிருக்கும்.

இனி நபிசல்லல்லாகு அலைகிஒசல்ல மவர்களுடைய சியாறத்தை நாடினவன் சலவாத்துகளை மிகுதமாக்கிக் கொள்ளவேண்டும் மதீனாமு நவ்வறாவுடைய சுவர்களைக்கண்டால் சலவாத்துச்சொல்லித் துஆ வோ தவேண்டும் வுள்ளே புகுதுமுன் அல்லது பின் சியாறத்துக்குப் போ குமுன் குளித்து மணம்பூசி அழகாகிய பிடவையுடுத்தித் தன் சாமான் களையெல்லாம் ஒரிடத்தில் வைத்துவிட்டுத் தாழ்மையாகத் தான் றவு லாவின் வஹுப்பத்தைக்கண்டு காலரல் நடந்து (பிசுமில்லாகி ஒஅலா மில்லத்தி றசூலில்லாகி சல்லல்லாகு அலைகிஒசல்லம்) யென்று துஆஜ

தி மதீனாவிலுள்ளே வந்து பின்பு சிறப்பாகிய பள்ளியிற் புகுந்து இரண்டு றக்காஅத்து தைகியத்தில் மஸ்ஜிது தொழுது சிறப்பாகிய மின்பறின் தூண்கள் வலதுபுயத்திர்க்கு நேராகும்படி நின்று அல்லா குத்தஆலா தனக்குச்செய்த வுபகாரத்தை நாடி சுக்குறுக்காக இரண்டு றக்காஅத்துந் தொழுது நாடின கருமங்களுக்கு துஆச் செய்யவும்.

பின்பு சிறப்புஞ் சங்கையும் பொருந்தின கபுறளவில் முகந் திரும்பினவனாக வெழும்பி சிறப்பும் மாட்சிமையுந் தங்கிய குப்பாவுக்கு நாலுமுளந் தூரத்தில் அதபுடனே கிபுலாவைப் பின்னோக்கி நபிநாயகம் அவர்களின் சிறப்பாகிய தலைக்கும் சங்கையாகிய முகத்திர்க்கும் நேர்பட்டுத் தன்னளவில் அவர்களின் சீதேவியாகிய பார்வையையுந் தன்பேச்சை யவர்கள் கேட்கிறதையுந் தான் சொல்லுகிற சலாமுக்கு அவர்கள் பிரத்தி சொல்லுகிறதையுந் துஆவுக்கு அவர்கள் ஆமீன் கூறுகிறதையு நாடி. அஸ்ஸலாமு அலைக்க.யா றசூலல்லா அஸ்ஸலாமு அலைக்க யா நபியல்லா ஜெஸாக் கல்லாகு அன்னு அபுலலமா ஜெஸா நபிய்யன் அன்கவ்மிகி யென்று சொல்லித் தெரிந்ததுகளை யோதி யப்பால்த் தன்னிடம் ஒசியத்துச் செய்தவர்களுடைய சலாமை நபி நாயகம் அவர்கட்கு அறிவிக்க வேண்டும் அதாவது அஸ்ஸலாமு அலைக்கயா றசூலல்லா இன்னான் மகன் இன்னான் யெத்த சப்பஹூபிக்க யிலா றப்பிக்க பஸ்பகுலஹூ ஒலில் முச்லிமீன் யென்று சொல்வதாம் பின்பு சலவாத்து முதலானதுகளை யோதவும் அப்பால்க் கொஞ்சந்தள்ளி அபூபக்கர் சித்திக்கு றலியல்லாகு அன்கு அவர்களின் தலைக்கு நேரேநின்று அஸ்ஸலாமு அலைக்க யா ஸாகிப றசூலில்லா ஜெஸாக் கல்லாஹூ அன்னு அபுலலமா ஜெஸா யிமாமன் அன் வும்மத்தி நபியிகி யென்று சொல்லித் தனக்குத் தெரிந்ததை யோதி பகுஷுசெய்து பின்பு கொஞ்சந் தள்ளி நின்று வுமறிபுனு கத்தாபு றலியல்லாகு அன்ஹூ அவர்களின் தலைக்கு நேரேநின்று அஸ்ஸலாமு அலைக்க யாஅமீறல் மூமினீன ஜெஸாக் கல்லாஹூ அஹூஸனல் ஜெஸாயென்று சொலலித் தனக்குத் தெரிந்ததை யோதி பகுஷுசெய்து துஆ வோதி நபிநாயகம் அவர்களின் சிறப்பாகிய தலையினிடத்தில் முன்போல நின்று து

ஆமோதி மின்பறக்குங் கபுறு ஷரிபுக்கு மிடையி லிருக்கிறது சொர்கலோகத்தின் பூங்காவனமென்று ஹதீதில் வந்திருப்பதால் அபீலுபானுவென்னுந் தூணிடம் வந்து நபில்த்தொழுது அத்தலம்அபீலுபானுவென்கிற அசுகாபியின் தௌபாக் கபூலான யிடமானதால்த் தன்பாவங்களைவிட்டும் தௌபாச்செய்து மறுபடியும் றவுலாவுக்கு வந்து தன்னுலேயென்றதைத் தொழுது துஆவோதி தசுபீகு தகுலீலு இஸ்திக்குபார் மிகுதம் ஓதி மின்பறுக்குவந்து நமது நாயகம் குத்துபா வோதும்போது தங்க ளிருகைகளையும் வைத்த சிறப்பாகிய தானத்திற் றன்கையைவைத்து சலவாத்துச்சொல்லி நாடின துஆ வோதியபின்பு வுஸ்த்து வானத்துல் ஹன்னுனவுக்குவரவும்.

அதாவது ஒரு ஈத்தமரமாயிருக்கு அதினிடையில் சிலநாள் நாயகம் குத்துபா வோதிக்கொண் டிருந்தார்கள் அப்பால் மின்பர் கட்டிய பின் மரத்தைவிட்டு மின்பறில் குத்துபா வோதிக்கொண் டிருந்தார்க ளப்போது அம்மரம் அலறி சத்தமிட்டழுததை பார்த்து நாயக மிறங்கிவந்து கட்டியணைத்தவுடன் அமர்ந்துவிட்டது அம்மரத்தில் மீதம் வுண்டாயிருக்கிறது அதைக்கொண்டு பறக்கத்துப் பெற்றுக்கொள்ளவும்.

இனி மதீனுவில் தானிருக்குங் காலமெல்லாம் நபி நாயகத்தின் சியாறத்தையும் இரவையில் முழித்துவணங்கிறதையு மிகுதமாக்கிக்கொள்ளவும் இன்னம் பக்கீஹு-யென்னுந் தானத்தில்வந்து அவடத்தி லடங்கியிருக்கிறவர்களை சியாறத்துச்செய்யவும் இன்னம் வுகுதுமலையி லடங்கிய சுகதாக்களை சியாறத்துச்செய்கிறது முஸ்தகப்பு மஸ்ஜிது குபாவுக்கு வந்து அதில்த் தொழுது தனக்குவேண்டிய துஆக்களைக் கேட்கவும்.

இனி தன்னூருக்குப் புறப்படும்போது நபிநாயகத்தின் பள்ளிக்குவந்து தொழுது துஆக்கேட்டு நாயகத்தின் கபுறிடம் வந்து சலாஞ் சொல்லி ஆண்டவனிடம் தன்னை சலாமத்தாக வூருக்குச் சேர்க்கும்படி துஆக் கேட்டு கைறமுதயின் யாறசூலல்லாயென்று சொல்லிக் கண்ணீர்புறப்படும்படி தெண்டிக்கிறது முஸ்தகப்பு அப்போது கண்ணீர்

வெளியாகிறது கபூலுக் கடையாளமாகும் இன்னும் அவடத்தி லிருக்கி
றவர்கட்கு யேதாவது ஸதக்காக் கொடுத்து அழுது நாயகத்தைவிட்டு
ம் பிரிகிறதின்பேரில் கைசேதப்பட்டவனாகப் பிரயாணப் படுகிறது
முஸ்தகப்பு.

இன்னும் வருகிற வழியில் மேடான பூமிகளின்பேரி லேறும்
போது தக்குபீறு சொல்லி ஆயிபூன தாயிபூன ஆபித்தூன ஸாஜிதூன
லிறப்பினா ஹாமிதூன ஸதக்கல்லாஹு ஒகதா ஒநஸற அப்தா ஒஹஸ
மல் அஹ்ஸாப வஹதா வென்று ஓதுகிறது முஸ்தகப்பு.

இனி தன் குடும்பத்தி னின்றவாக்கில்ச் சரிமுட்டாக வரக்கூடா
து யென்கிலும் முன்பாகவே அறிவித்து வரவேண்டும் வூருக்குள் நு
ழையும்போது பள்ளியில் இரண்டு றக்காஅத்துத் தொழுது வீட்டுக்
கு வந்தவுடன் அல்லாவை சுக்குறுசெய்து நம்மை இவ்வளவுவரை சலா
மத்தாகக் கொடுவந்து சேர்த்தானே யென்றெண்ணி இரண்டு றக்கா
அத்துத்தொழுகவும் அப்பால் பயபுத்தியுடன் வயசெல்லாம் நல்லஅம
லைச்செய்யவும் செய்த அமலைப் பழுதாக்காமலுந் தெண்டித்து நடக்க
வேண்டும்.

இனி ஹஜ்ஜுக்குப்போய் வருகிறவனை யெதிர் சென்று மறுகப
ன் லக்கயென்று சோபனஞ்சொல்லிக் கைபிடித்து முசாபஹாச் செய்
து களுத்தோடு களுத்துக்கட்டிக் ஹஜ்ஜார்ளி வீட்டுக்குப் போகுமுன்
இவனுடைய பாவங்களைப் பொறுக்கும்படி துஆச்செய்யச் சொல்வது
ஏற்றமாயிருக்கும்.

ஆண்டவனே யெங்களுக்கு வுன் கஃபாவின் றெரிசனையையும்
வுன்றசூலின் றவுலாவின் றெரிசனையையுந் தந்து வுன் றசூலவர்களின்
ஷபாயத்தையுந் தந்து அவர்களுடைய ஹவுலுல்கவுதறின் தண்ணீ
ரைக் குடிப்பாட்டுவாயாக ஆமீன் ஒசல்லல்லாகு ஒசல்லம அலாஹபீபி
கி முகம்மதின் வஆலிகி ஒசஹுபிகி அஜ்மயீன் ஒல்கம்து லில்லாகி ற
ப்பில் ஆலமீன்.

குறுஆன் வோதுவதின் பயான் ஹதீது.

இயாராவது வொருமனிதன் அல்லாகுத்த ஆலாவுடைய சந்தி[illegible]ணைப ஆதரவுவைத்தால் அல்லாவுடைய கிளியாருக்குச் சங்கைசெய்பவ[illegible]மென்று நபிசல்லல்லாகு அலைகிஉசல்லமவர்கள் திருவுளம்பற்றினார்கள் அப்போது அசுகாபிகள் அல்லாவுடைய றசூலே அவர்களியாராயிருக்குமென்று கேட்க அவர்களாகிறது குறுஆன் ஓதும்படியானவர்களாயிருக்கும் அவர்கட்கு யாராவது ஒருவன் சங்கைசெய்தால் அல்லாகுத்த ஆலாவுக்குச் சங்கை செய்தவனாகிவிடுவான் அவனை அல்லாஹு சுபுகானஹுத்தஆலா சுவர்க்கலோகத்திற் சேர்ப்பான் அவர்களைத் தூடணித்தால் அல்லாகுத்தஆலாவைத் தூஷணித்தவனாகி விடுவான் அல்லாகுத்தஆலா அவனை நரகத்திற்ச் சேர்ப்பானென்று நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகி ஒசல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினார்கள்.

இன்னும் வுங்களில் யேற்றமானவனாகிறவன் குறுஆனைப் படித்துக்கொண்டு மற்றவர்கட்கும் படித்துக்கொடுக்கிறானே அப்படிக்கொத்த மனிதனாக யிருக்குமென்றும் குறுஆனில் ஒரு ஹறுபையாராவது வொருமனிதன் ஓதினால் அவனுக்குப் பத்துநன்மை யெழுதப்படுமென்றும் ஒவ்வொருநாளடங்கலுக்கும் யாராவது ஒருவன் இருனூறு ஆயத்தைக் குறுஆனிற் பார்த்து வோதினால் அவன் கபுறைச்சூழ அடங்கியிருக்கிற கபுறுகளில் யேழு கபுறாளிகளுக்கு மன்றாட்டஞ் செய்யும்படி உத்திரவு கொடுக்கப்படுமென்றும் குறுஆன் ஓதுகிறவன் அல்லாகுத்தஆலாவுடன் பேசிக்கொண்டிருக்கிறவனைப் போலாயிருக்குமென்றும் வியாதி யடங்கலுக்கும் குறுஆன் மருந்தாயிருக்குமென்றும் நபிநாயகந் திருவுளமானதாக றுசூஹத்தில் மஜாலிசென்கிற கித்தாப்பிலும் துற்றத்தின் னாசிகினிலும் வருகின்றது.

{ சிலசூறத்து ஆயத்துவகையருக்களின் பாயிதா ஹதீது. }

இயாராகிலு மொருவன் அல்கம்துசூறவை இரண்டு விடுத்தம் ஓதுவானாகில் அல்லது குல்ஹுவல்லாஹு சூறவை மூன்று விடுத்தம் வோதுவானாகில் குறு ஆனடங்கலையும் ஓதின தவாபு கிடைக்குமென்றும் குறுஆனுக்குக் கல்பாகிறது யாசீன் சூறவா யிருக்குமென்றும் காலைநேரம் மாலைநேரம் குல்ஹுவல்லாஹு குல்அவூது பிறப்பில்பலக்கு குல் அவூது பிறப்பின்னாசி இவைகளை மும்மூன்றுவிடுத்தம் ஓதுவானாகில் அவனுக்கு வரும்படியான தீங்குகளடங்கலைவிட்டுஞ் சலாமத்துப் பெறுவானென்றும் ஆயத்துல் குறுசியை யாராகிலு மொருமனிதன் இரவில் ஓதி நித்திரைசெய்வானாகில் அவனைத் தீங்குகளை விட்டும் அல்லாகுத்தஆலா சலாமத்தாக்கி வைப்பானென்றும் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளம்பற்றினர்கள்.

ஹிக்காயத்து.

நுசுஹத்தில் மஜாலிசென்கிற கித்தாபில் வருகிறதாவது ஒரு மனிதன் யெப்பொழுதும் வளக்கமாக ஒவ்வொரு இரவிலும் ஆயத்துக் குறிசியை யோதித் தன்னுடைய ஆடுகள் காமானமா யிருக்கவேணுமென்று நாடி நித்திரை செய்கிறவரா யிருந்தார் அப்படி யிருக்க வொருநாள் அந்த ஆயத்தை யோதிக்கொண்டிருக்கும்போது கொஞ்சந் தூங்கிவிட்டு மறுபடி முழித்து வுடனே முடியவோதிவிட்டு அன்றிரவிற் றூங்கிக் காலையில்விழித்துத் தன் ஆட்டுக்கூட்டங்களைப் பார்க்கும்போது ஒரு மனிதன் அதினிடையில் அகப்பட்டுத் திசை தெறியாமல்த்தட்டழிந்து நிற்கிறதைக் கண்டு இவிடத்தில் யேன் மயங்கிக்கொண்டு நிற்கிறாயென்று கேட்க நான் நித்தியம் இந்த ஆட்டுக்கிடையில் ஒரு ஆடு தூக்கிக்கொண்டு போகலாமென்று வந்து பார்க்குந்தோ றெல்லாம் ஒரு கோட்டை வளைந்திருப்பதைக் கண்டு அகத்திற் செல்ல இடமில்லாமல்த் திரும்பிப்போகிற வளக்கமா யிருந்தது இன்றிரவில் வந்து பார்க்கக் கோட்டையிற் கொஞ்சம் வழி யுண்டாயிருந்தது அவ் வழியே யுள்

ளேசென்று வொரு ஆட்டைத் தூக்கிக்கொண்டு வந்து பழைய வழி யைப் பார்க்க அடைபட்டிருந்தது அதின் காரணத்தால் இவ்விதம் நா ன் தட்டழிந்துகொண் டிருக்கிறேனென்று சொன்னான் ஓதிவந்த மனி தன் இதைக்கேட்டவுடன் இக்காரணம் ஆயத்துக் குறிசியின் பறக்கத் தால் யென்று மனமகிழ்ந்தார்.

ஹதீது.

இயாராகிலு மொருவர் மழைத் தண்ணீரைப் பூமியில் விழுமு ன் னெடுத்து அத்தண்ணீரில் அல்கம்துசூறு (எ௰) தரம் ஆயத்தில் கு றிசி (எ௰) தரம் குல்ஹுவல்லாகு (எ௰) தரம் குல்அவூது பிறப்பில்ப லக்கு (எ௰) தரம் குல்அவூது பிறப்பின்னாசு (எ௰) தரம் ஓதி அத்த ண்ணீரை யேழுநாட் காலையில் இடைவிடாமற் குடிப்பார்க ளாகில் அ வர்களின் சரீரத்திலுள்ள வியாதிகள் யாவையும் அல்லாகுத்தஆலா சத் தியமாக சுவாத்திய மாக்கிவைப்பானென்று சிபுரீல் அலைகிஸ்ஸலா மவ ர்களைத்தொட்டும் நபிநாயகம் திருவுள்ம்பற்றினார்கள்.

இன்னும் வஞ்சனை சூனியம் ஜின்னு செயித்தானுடைய தீங்கு முதலாகிய வியாதிக ளடங்கலைவிட்டும் சுத்தப் படுகிறதற்காக பேரில ந்தைமரத்தின் யேழு யிலையை யரைத்துக் கொஞ்சந் தண்ணீரிற் கலக் கி ஆயத்தில் குறுசியை அதில் யேழுதரம் ஓதியபின் அத்துடன் குளி க்கிறதற்குக் காணும்படியான தண்ணீரைச் சேர்த்து ஒரு துப்புரவா ன தானத்திற் குளித்து அப்பால் (௰௬) ரொட்டிசுட்டு அலம்தரக்கை பா சூறுவும் (௰க) தரமும் லியீலாபிக்குறைஷின் சூறுவும் ஓதி அந்த வுறட்டிகளை நவ்வாலாக முறித்து ஒவ்வொரு துண்டிலும் குல்குஅல் லாஹு குல்அவூது பிறப்பில்பலக்கு குல்அவூது பிறப்பின்னாசி இவை களை ஒவ்வொருதரம் ஓதி யெல்லாத் துண்டுகளையும் ஒன்று சேர்த்து பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீம் ஒகஸ்பு னல்லாஹுவனிகுமல் வக்கீலெ ன்று (௰௬) தரம் ஓதி அப்பால் நால்வழி கூடுமிடத்திற்கொண்டுவந்து அதை மிஸ்கீனுகளுக்கு சதக்காக்கொடுத்து பாத்திகா வோதி முடிக்க வும் இப்பிரகாரஞ் செய்தால் அவ் வியாதிகளை விட்டும் அந்த நசலாளி

யை அல்லாகுத்தஆலா சுகப்படுத்தி வைப்பானென்று செய்கு அலிய்யுல் கௌதீ றகிமகுல்லாஃ அவர்கள் சொல்லியிருக்கிறதாக முஜற்றபாத்துத் தய்றபீயென்னும் கித்தாபில் வருகின்றன,

ஹதீது.

இயாராவது வொருவர் (லாயிலாக யில்லல்லாகுல் மலிக்குல் ஹக்குல் முபீன் முகம்மதுற்றசூலுல்லா ஹிஸ்ஸாதிக்குல் வகுதில்அமீன்) யென்று நித்தியம் நூற்றுவிடுத்தம் ஓதுவார்களாகில் அவர்களுக்கு அல்லாகுத்தஆலா கிட்டுமை யடங்கலைவிட்டும் நிவாரணையும் தங்கடங்க ளடங்கலைவிட்டுஞ் சந்தோசமுமாக்கி நினையாப்புறத்தில் நின்றும் றிஸ்க்குங்கொடுத்து மிடிமையைவிட்டும் அச்சந் தீர்தலையும் கபுறுடைய வெருட்சியைவிட்டும் மருகுதலையும் ஆக்கி அவனுக்கு சுவர்க்கலோகத்துடைய வாசலுகளையுந் திறப்பானென்று நமது நாயகம் முகம்மதுநபிசல்லல்லாகு அலைகிஉசல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினார்கள்.

ஹிக்காயத்து

ஹக்கீமுத் திருமதி றகிமகுல்லாஃ அவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டிருக்கிறதாவது அவர்கள் சொல்லுகிறார்கள் நான் அல்லாகுத்தஆலாவை ஆயிரம் விடுத்தங் கனவிற் கண்டேன் ஒருதடவை ஆண்டவனே ஈமான் நீங்கிறதில்நின்றும் நான்பயப்படுகிறேன் அதற்கென்னவழியென்று நான்கேட்க இந்த துஆவை பஜுறுடைய சுன்னத்துக்கும் பறுலுக்குமிடையில் வோதும்படி அல்லாகுத்தஆலா உத்திரவுசெய்தான் அதாவது (பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீம் அல்லாகும்ம. பிஹுறுமத்தில் ஹசனி வ அகீஹி ஒ ஜத்திஹி வ அபீஹி ஒ உம்மிஹி ஒ பனீஹி நஜ்ஜினீ மினல் கொம்மில்லதீ அனபீஹி யாகய்யு யாகய்யூம் யாதல் ஜலாலி ஒல்யிக்குறாம் அசுஅலுக்க அன்துகு யியகல்பீ பினூறி மகறிபத்திக்க யாஅல்லாஹு யாஅல்லாஹு யாஅல்லாஹு யாஅறுகமற்றாகிமீன்)

இன்னும் யாசீன்யென்கிற சூறாவில் சலா முன்கவ்லன் யென்கிற ஆயத்தை நிறப்பமாக (௩௪௭௯) தரம் தன்னுடைய ஹாஜத்து அகத்தி

யமான கருமங்கள் கைகூடி வருவதர்க்காக நாட்டம்வைத்து வோதிது ஆச்செய்தால் அதை அல்லாகுத்தஆலா நிறைவேற்றி வைப்பா னென்றும் மேற்படி ஆயத்தை வொருநா ளொன்றிர்க்கு (உ௫) விடுத்தம்பே திக்காலத்தில் ஓதிவந்தால் அந்த பேதியின் ஆபத்தை விட்டும் அல்லா குத்தஆலா சலாமத்தாக்கி வைப்பானென்றும் சாலிஹீன்கள் சொல்லு கிறார்கள் இந்த ஆயத்தை இசுமுல் அகுலமாயிருக்குமென்று (ஷம்ஷுல் மஆறிபு) யென்னுங்கித்தாபில் அபுல் அப்பாசுல் பூனீறகுமகுல்லாஹ் அவர்கள் சொல்லுகிறார்கள் முன் சொன்ன சங்கதிகள் (முஜற்றபாத் தென்னும்) கித்தாபில் வருகின்றன.

இசுமுகள் ஆயத்துகள் துஆவகையறுக்கள் ஓதும்போது துப்புரவாயிருந்து அதின் பாயிதா ஷக்கு சந்தாபமன்றி யுண்டாகு மென்று நின்னையங் கொள்கிறதுந்தவிர ரீதமாகநடக்கிறதும் சறுத்தாயிருக்கும் இப்பிரகாரம் சையிதுமுகம்மது குவா லேறு றகுமகுல்லாஹ் அவர்கள் தங்களுடைய ஜவாஹிறும் கம்ஸாயென்னுங் கித்தாபில் சொல்லுகின்றார்கள்.

இனி யொரு பெண்பிள்ளைக்குப் பிறக்கிற பிள்ளையெல்லாம் மவுத் தாயிக்குழந்தை தங்காமலிருந்தால் கால்ப்படி மிளகும் அரைப்படி ஓமமும் வாங்கிக்கலந்து திங்கட்கிழமை லொஹறுநேரத்தில் அதின்பேரில் ஒவ்வஷம்ஷி யென்கிற சூறாவை நாற்பதுவிடுத்தம் ஒவ்வொரு விடுத்தத்திர்க்கும் சலவாத்து முன்னும் பின்னுமாக வோதி ஹமலான நாள்முதல்க் குழந்தை பால்குடி மறக்கிறவரையில் அந்த இரண்டையுந்தின்றால் அல்லாகுத்தஆலா குழந்தையை ஹயாத்தாக்கி வைப்பானென்று (கவுலுல்சமீல்) யென்னுங் கித்தாபில் வருகின்றன.

ஸலவாத்துடைய வரிசையின் பாபு

குறுஆன் சரீபில் வந்திருக்கிறதாவது மெய்யாக அல்லாகுத்தஆலாவும் அவனுடைய மலக்குகளும் முகம்மது நபியுடைய சிறப்பையும் வலுப்பத்தையும் வெளியாக்கி அவர்கள்மீது சலவாத்துச்சொல்லுகிறார்கள்.

ஈமான்கொண்ட நல் ஜனங்களே அவர்களின் சங்கையை வெளி யாக்குவதற்கு நீங்கள் மிகவும் பாத்திரப் பட்டவர்களாக யிருப்பதால் அவர்கள்மீது நீங்கள் சலவாத்துஞ் சலாமுஞ் சொல்லுங்கள் ஆதலால் நபிநாயகம் அவர்கள்பேரிற் சலவாத்துச் சொல்லுவது வாஜிபா யிருக் குமென்று இந்த ஆயத்தில் வெளியா யிருக்கிறதாகத் தபுசீர் (பயிலா வி) யென்கிற கித்தாபில் வருகின்றது.

ஹதீது

இயாராவது வொருமனிதன் யென்பெயரைக் கேட்டு ஸலவாத் துச் சொல்லாதிருக்கில் அல்லாகுத்தஆலா அவனை நரகஞ்சேர்த்து வெ குதூரத்திற் கப்புறமாக்கிவைப்பான்.

இயாராவது வொருமனிதன் யென் பெயரைக் கேட்டவுடன் ஸல வாத்துச் சொன்னால் இரண்டு மலக்கு அல்லாகுத்தஆலா வுன் பாவத் தைப் பொறுப்பானென்று சொல்வார்கள் மற்ற மலக்குகளோ ஆமீனெ ன்று கூறுவார்கள்.

இயாராவது வொருமனிதன் யென்பெயரைக் கேட்டவுடன் ஸல வாத்துச் சொல்லாதிருந்தால் அவன்பாவத்தை அல்லாகுத்தஆலா பொ றுக்கமாட்டானென்று இரண்டு மலக்குச் சொல்லுவார்கள் மற்ற மலக் குகள் ஆமீன்யென்று கூறுவார்கள் யென்பதாய் நமதுநாயகம் முகம்ம துநபிஸல்லல்லாகு அலைகிஉசல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினார்கள்.

ஹிக்காயத்து.

ஸாலிகானவர்களி லொருவர் தொழுகையில் அத்தகிய்யாத்திலி ருக்கும்போது நபிநாயகம் அவர்கள்பேரில் ஸலவாத்துச் சொல்ல மறந் துவிட்டார் அன்று நித்திரையில் நபிநாயகம் அவர்கள்வந்து யென்பேரி ல் ஸலவாத்துச்சொல்ல யேன் மறந்தீர் யென்று கேட்க நாயகமே அல் லாகுத்த ஆலாவைப் புகழ்ந்துகொண்டும் அவனை இபாதத்துச் செய் துகொண்டு மிருந்ததால் ஞாபகத்தானே னென்றுசொல்ல துஆக்களு

ம் இபாதத்துகளும் யென்பேரில் சலவாத்துச் சொல்லுகிற மட்டுக்குந் தடுக்கப்பட்டிருக்குமென்றும் ஒரு மனிதன் யியாமனுளில் மிகுந்த நலவான இபாதத்துகளை சலவாத்தில்லாமல் அல்லாகுத்தஆலாவின் சமுகத்திர்க்குக் கொடுவந்தால் அல்லாகுத்தஆலா அந்த இபாதத்தைக் கபூற் செய்யமாட்டா னென்கிறதையும் நீர் அறியவில்லையா யென்று திருவுளம்பற்றினார்கள் இப்பிரகாரம் துற்றத்துன் ஞசிஹீன் யென்கிற கித்தாபில் வருகின்றது;

ஹதீது.

கவுலுல் பதிக் யென்னுங் கித்தாபில் அலியின் றலியல்லாஹு அவர்களைத் தொடடும் வருகிறதாவது யாராவது வொருமனிதன் பறுலான ஹஜ்ஜைச்செய்து வுடனே வொரு பீசபீல்ச்செய்தால் நானூறு ஹஜ்ஜுடைய வரிசை யெழுதப்படுமென்று நபிநாயகம் அவர்கள் திருவுளமாக பெலகீனமான ஜனங்க ளெல்லாம் நமக்கு இவ்வளவு மேன்மை பெற வழியில்லையே யென்று யோசித்து மனவருத்த முற்றார்கள் அப்போது முகம்மதுநபியே யாராவது ஒருவன் வுங்கள்பேரிற் சலவாத்துச்சொன்னால் அதர்க்குப் பகரமாக நானூறு பீசபீலுடைய தவாபு யெழுதுவேன் ஒவ்வொரு பீசபீலுக்குப் பகரமாக நானூறு ஹஜ்ஜுடையபதவீ யென்று அல்லாகுத்தஆலா வொகி யனுப்பினான் வுடனே அசுகாபுகள் சந்தோஷ மடைந்தார்கள்.

ஹிக்காயத்து

(றவுனக்குல் மஜாலிசு) யென்னுங் கித்தாபில் வருகிறதாவது நபிசல்லல்லாகு அலைகி வசல்லமவர்களின் காலத்தில் ஒரு முசுலிமானமனிதனுடைய வொட்டகையை யொரு யெகூதி யென் னொட்டகை யென்று நபிசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களிடத்தில்வந்து தெறியப் படுத்தி வளக்குச்செய்தான் நம் மிசுலா மார்க்கத்தில் சாட்சியின்பேரில் ருஜுவாகவேண்டிய திருப்பதால் வுனக்குச் சாட்சியுண்டாவென்றுவிசாரிக்க ஆமென்று சொல்லி முனுபிக்காகிய நாலு யெகூதியைப் போய்ச் சாட்சிசொல்லும்படி கொடுவந்து விட்டான் நபிநாயகம் அவர்கள் அந்த

காலு சாட்சியையும் விசாரணை செய்து மூசுவிமுடைய வொட்டகை
யை யெகூதிக்குக் கொடுக்கும்படி பைஸற் செய்தார்கள் வுடனே
அந்த மூசுவிம் பதர்த்தமாகி அல்லாகுத்த ஆலாவிடம் தன் மனவ
ருத்தத்தைச் சொல்லித் துஆக்கேட்டு நபிநாயகம் அவர்களைப் பார்த்
து நாயகமே தாங்கள் பைசற்செய்தது ஹக்காயிருக்கும் சாட்சியின்
பேரில்த் தான் பைஸற் செய்திருக்குரீர்கள் யென்கிலும் இந்த வொ
ட்டகை இடத்திற் கேட்டுப்பாருங்க ளென்று சொன்னூர் வுடனே
ஒட்டகத்தைப் பார்த்து ஒட்டகமே நீ யாருக்குப் பாத்திர மென்று
நபிநாயகம் அவர்கள் கேட்க அவ் வொட்டகம் நாகரீகமாகிய அறபி
ப்பாஷையால் அல்லாவுடைய நபியே நான் ஹலாலாகிய வுடமை இ
ந்த மூசுலிமுக்குப் பாத்திரம் இந்த யெகூதியானவன் பொய்ப்பிரியா
து செய்தான் இந்தச் சாட்சிகள் முனபிக்குகளாக யிருக்கு மென்று
சொன்னது இது சாட்சி சொன்னதைப் பார்த்து யெகூதி போய்வி
ட்டான் அப்பால் ஒட்டையை மூசுலிமுக்கு வொப்படைத்து வுமக்
கு பிருகமானது சாட்சி சொல்லுகிறமட்டுக்கும் நலவாகிய அமல்க்க
ளில் யென்ன அமற் செய்தீரென்று கேட்க யெப்போதும் வளக்கமா
க இரவையில் படுக்கிறதர்க்கு முன் தங்கள்பேரில் பத்து விடுத்தம்
சலவாத்துச் சொல்லாமல் நான் நித்திரை செய்கிறதேயில்லை யென்று
சொன்னூர் நீர் சலவாத்து வோதிவந்த பறக்கத்தால்க் களவுசெய்தாற்
கையைத் தறிக்கும்படியான ஹுக்குமு வும்முடைய பேரில் விதித்
ததை அல்லாகுத்த ஆலா வும்மைவிட்டு நீக்கி வைத்ததுபோல்க் கி
யாமநாளிலும் துன்யாவிலும் வருகிற கஸ்டங்களை அல்லாகுத்தஆலா
நீக்கிவைப்பானென்று திருவுளம் பற்றினூர்கள்.

ஹதீது.

இயாராவது வொரு மனிதன் என்பேரில் துன்யாவில் சலவா
த்தைச் சத்தமிட்டுச் சொன்னல் வானலோகத்தி லிருக்கின்ற மலக்கு
கள் அவன்பேரில் சத்தமிட்டுச் சலவாத்துச் சொல்லுவார்கள் மகிலு
களிலெல்லாம் பெரிய பலோகிறவன் யென் பெயரைக்கேட்டு சலவா

த்துச் சொல்லாம லிருக்கிறவனா யிருக்குமென்றும் யென்பேரில் யாராவது ஒருவன் தன் ஹயாத்தில் ஸலவாத்தை மிகுதமாகச் சொல்லி வந்தால் அவனுக்காகப் பிழைபொறுக்கத் தேடும்படி யெல்லாப் படைப்புகளுக்கும் அவன் மவுத்தாகிற சந்தியில் அல்லாகுத்த ஆலா வுத்திரவு செய்வானென்றும் நமது நாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகி ஒசல்லமவர்கள் திருவுளம்பற்றினார்கள்.

ஹிக்காயத்து.

ஷிபுலீ றகிமகுல்லா அவர்கள் சொல்லிவருகிறதாவது நம்மள் வீட்டுக் கருகாமையாக வொரு மனிதனிருந்து மவுத்தானார் அம் மனிதனைக் கனவில்க் கண்டு வும்முடைய செய்தி யென்னவென்று நான் கேட்டேனதற்கு அவர் சொன்னதாவது யென்னை கபுறில்வைக்கப்பட்டவுடன் இரண்டு மலக்குவந்து கேள்வி ,கணக்குக் கேட்டார்கள் அப்போது எனக்கு நாவெழும்பவில்லை நாம் முசிலிமாக மவுத்தாகவில்லையா வென்று மனவருத்த முடையவனா யெண்ணிக் கொண்டிருக்கிற சமையத்தில் ஒருவர் வந்து இன்ன இன்னவிதமாக ஜவாபு சொல்லுங்காணு மென்று சொல்ல அந்த இரண்டு மலக்குகளுக்கும் ஜவாபு சொல்லிவிட்டேன் பின்பு அம் மனிதனைப்பார்த்து யெனக்கு இவ்வளவு உபகாரஞ்செய்தீரே நீர் யாராயிருக்குமென்றுகேட்க நீர் பூலோகத்தி லிருக்குங் காலத்தில் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிஒசல்ல மவர்கள்பேரில் மிகுதமாக சலவாத்துச் சொன்ன காரணத்தால் அல்லாகுத்தஆலா யென்னை வுமக்கு வுதவியாகப் படைத்தான் அப்படியான மலக்கா யிருக்குமென்று சொன்னார்.

ஹதீது.

இயாராவது வொருவன் என்பேரில் ஜும்ஆவுடைய நாளையில அசறுக்குப் பின் (அல்லாகும்மசல்லி அலாமுகம்மதினின் நபிய்யில் வும்மிய்யி வஅலா ஆலிகி ஒஸல்லிம்) யென்று எண்பது விடுத்தம் இந்த சலவாத்தை யோதிவந்தால் அல்லாகுத்த ஆலா அவன் செய்த எண்பது வருடத்துப் பாவங்களைப் பொறுப்பா னென்று

நமது நாயகம் முகம்மதுநபி சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் திருவுளம் பற்றினார்கள் இந்த ஹதீதும் ஹிக்காயத்தும் (நுசுகத்துல் மஜாலிஸி) யென்கிற கித்தாபில் வருகின்றன.

இயாராவது ஒரு மனிதன் நான் வுபாத்தாகியபின் என்பேரில் ஸலாஞ் சொல்லுவானாகில் ஜிபுரீல் அலைகிஸ்ஸலா மென்னிடம் வந்து முகம்மது நபியே இன்னானுடைய மகன் இன்னான் வுங்களுக்குச் சலாஞ் சொல்லி யிருக்கிறானென்று சொல்லுவார்கள் அப்போது ஒ அலைகிஸ்ஸலாம் ஒ றகுமத்துல்லாஹி ஒ பறக்காத்துகு யென்று நான் சொல்வேன் யென்கிறதாக நபி சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் திருவுளம் பற்றினதாக (தம்பி கில்ஹாபிலீன்) யென்கிற கித்தாபில் வருகின்றது.

ஹிக்காயத்து

ஸலவாத்தினுடைய வரிசையைப் பற்றி ஸாலிகோனவர்களிலொருவர் பேசி வருகிறதாவது நான் புற்பூண்டு பயிர் பச்சைகள் மரம் மட்டைகள் பசுமையா யிருக்கும்படியான காலத்தில் வெளிப் புறப்பட்டு கல்பு சந்தோசமாகச் சோலைகளைப் பார்த்து (அல்லாகும்ம ஸல்லி அலாமுகம்மதின் அதத அவுறாகில் அஸ்ஜார் ஒஸல்லி அலாமுகம்மதின் அததல் அஸ்சாரி ஒத்திமார் ஒஸல்லி அலா முகம்மதின் அததகத்ரில் பிகார் ஒசல்லி அலாமுகம்மதின் அதத றம்லில் கிபார் ஒசல்லி அலாமுகம்மதின் அததமாபில் பறுரீ ஒல்பிகார்) யென்றோதினேன் அப்போது நீர் சொன்ன சலவாத்தினுடைய வரிசையை கியாமநாள்ாகிறவரை எழுதும்படி மலக்குகளுக்கு வேலை வைத்துவிட்டீர் அல்லாகுத்தஆலா இடத்திற் சொற்க லோகத்திர்க்குப் பாத்திரமாகிவிட்டீர் யென்று உருத்தோற்ற மன்றியே யொரு சத்தம்வந்தது.

ஆதலால் இப்பேர்க்கொத்த ஸலவாத்துகளின் பறக்கத்தால் நம் மனைவர்களுடைய பாவங்களைப்பொறுத்து அல்லாகுத்தஆலா நம் மனைவர்களையும் சொற்கபதிசேர்ப்பானாகவும் ஆமீன்யாறப்பல் ஆலமீன்.

{சங்கையாகிய மவுலூது ஷரீபின் பதவியின் பயான்.}

(தன்வீறென்னுங்) கித்தாபில் வருகிறதாவது யாதெனில் ஹலறத்து இபுனு அப்பாசுறலியல்லாகு அன்கு தங்கள் மனையி லொரு தலத்தில் சில ஜனங்களுடனிருந்து நபிசல்லல்லாகு அலைகிஉசல்ல மவர்கள் பிறந்த செய்தியைச் சொல்லிக்கொண் டிருக்க அவர்களெல்லாம் மகிழ்ச்சியுடன் சந்தோஷமாகக் காது தாழ்த்தி அதபுட னிருந்து கேட்டுக்கொண் டிருக்கிற சமையத்தில் ஹலறத்து சர்வலோ காயினாத் ஒழுபஹகறே மவுஜூதாத் ஒறகுமத்தே ஆலமான் முகம்மதுமுஸ்தபா சல்லல்லாகு அலைகி உசல்லமவர்கள் வந்து இதைப்பார்த்து வுங்களுக்கு மென்னுடைய ஷபாஅத்து வாஜிபாகிவிட்டதென்று திருவுளம்பற்றினார்கள்.

அபீத் தறுதாவு றலியல்லாகு அன்கு அவர்களும் இருஜஹானுக்கு நாயகமாகிய ஹலறத்து நபிசல்லல்லாகு அலைகிஉசல்ல மவர்களும் ஆமிறில் அன்ஸாரிறலியல்லாகு அன்கு அவர்களுடைய வீட்டுக்குப் போம்போது தங்கள் குழந்தைகளுக்கும் பந்துகளுக்கும் நபிநாயகம் அவர்கள் பிறந்த சங்கதியை அறிவிக்கவும் இதுதானந்தநாள் இதுதானந்தநாள் யென்று சொல்லிக்கொண்டிருக்கிற சமையமாயிருந்தது அதைப்பார்த்து நபிசல்லல்லாகு அலைகி உசல்லமவர்கள் வும்முடையபேரில் அல்லாகுத்தஆலா றகுமத்துடைய வாயலைத் திறந்துவிட்டான் மலக்குகளெல்லாம் வுமக்காகப் பிழை பொறுக்கத் தேடுகிறார்கள் யென்று திருவுளமானார்கள்.

ஆதலால் நமக்கெல்லா நாயகமாகிய முகம்மது நபிசல்லல்லாகு அலைகிஉசல்ல மவர்களின் மவுலிதை சங்கையாக பிதுஅத்தான ராகமில்லாமலும் அதபு கேடில்லாமலும் ஓதுகிறது முஸ்தகப்பா யிருக்குமென்று தபுசீறு றாகுல்பயானில் வருகிறது.

இன்னம் அநேக மசேக்கு குத்துபுமார்கள் ஒலிமார்கள் இமாம்கள் வுலமாக்களெல்லாம் மவுலிது ஓதுகிறதைப்பற்றி மிகவும் புக

முந்திருக்கிறார்கள் யாராவது ஒருவன் அம் மவுலிதைப் பொருத்தக் கேடாகப் பேசினாற் பாவியாகிவிடுவான்.

இன்னும் (அஸ்னதுல் அவிஜார்) யென்கிறகித்தாபில் வருகிறதாவது வுலமாக்களி லொருவர் நபிசல்லல்லாகு அலைகி ஒசல்லமவர்களைக் கனவிற் கண்டு நாயகமே ஜனங்கள் சேகரமாகித் தாங்கள் பிறந்த செய்தியை வாசித்துச் சந்தோசமாக காது தாழ்த்திக் கேட்டு அதில் அநேக முதலுகளைச் செலவு செய்யவும் அநேக கயிறாத்துகளை நடப்பிவிய்க்கவுமாக யிருக்கிறார்களே இதில் தாங்கள் என்ன சொல்லுகிறீர்களென்று கேட்க யாராவது என்னைக்கொண்டு மகிழ்ச்சியானால் அவனைக்கொண்டு நாம் மகிழ்ச்சியாவோம் ஒருவரை யொருவர் முகப்பத்துவைத்தால் இரண்டுபேரும் ஒன்றாயிருப்பார்களென்றும் நபிசல்லல்லாகு அலைகிஒசல்லமவர்கள் திருவுளம் பற்றினார்கள்.

இன்னும் ஹஸானத்துல் ஜலாலி ஜெம்வுல் ஜவாமிகு மாதபத் தபில்ஸலன் முதலாகிய கித்தாபுகளில் வருகிறதாவது நபிசல்லல்லாகு அலைகிஒசல்ல மவர்கள் வுபாத்தானார்களே அந்நாளைத் தெண்டித்து அவர்கள் சங்கையாகிய றூகு அல்லாகுத்தா ஆலாவுடைய திவ்விய சமுகத்திற் சேர்ந்ததே அந்த நேரத்தைப்பேணி மவுலிதுவோதிக் கந்தூரி நடத்தினால் மிகவும் மேன்மையா யிருக்கும் அதினால் நபிசல்லல்லாகு அலைகிஒசல்ல மவர்கள் சந்தோஷமாகி அவ்விடத்திற்க்கு வந்து ஹாலிறாகப்போதும் இன்னம் அந்த நாள் நன்மையாலும் பறக்கத்தாலும் சங்கையாலும் ஒளிவாலும் மற்ற நாட்களைக்காண மிகவும் சிறப்பமாயிருக்கும் நபிநாயகம் அவர்கள் பிறந்த செய்தியை கேட்டவுடன் எழுந்து சங்கையாக அதபுடன் நிற்கிறது அழகாயிருக்கும் இன்னம் முஸ்தகப்பா யிருக்குமென்று (பறுஸெஞ்சீ) இமாம் சொன்னார்கள்.

இனி யாராகிலும் நபிசல்லல்லாகு அலைகிஒசல்லம் அவர்களின் மவுலிதை யோதுவானாகில் அல்லது ஓதும்படி செய்வித்துக்கேட்டு

நபிநாயகம் அவர்களின்பேரில் ஸலவாத்துச் சொல்லிக்கொண் டிருப்பானாகில் அல்லாகுத்த ஆலா அவனுக்கு இருபதியினுடைய தங்கடங்களைவிட்டுங் காப்பாத்தி யவனுடைய பாவங்களைப் பொறுத்து அவனுக்குக் கிருபை செய்து அவன் கல்லை வெளிச்சமாக்கிவைப்பான் அவன் அம்மவுலிதினுடைய மஜ்லிசி லிருந்து நபிசல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள்மீது சலவாத்து வோதித் துன்யாவினுடைய நலவான ஹாஜத்தையாவது ஆகிறத்தினுடைய ஹாஜத்தையாவது கேட்பானாகில் அதை யவனுக்கு அல்லாகுத்தஆலா நிறைவேற்றிக் கொடுப்பான்.

இன்னும் அநேக தேசங்களில் மவுலிது ஷரிபை நடத்திவருகிறார்கள் அதினுடைய பொருட்டால் அநேக மேன்மைகளைப் பெற்றுக் கொள்கிறதுந் தவிர அவர்களின் நாட்டங்கள் நிறைவேறினதாக அநேகம் பெரியோர்களைத் தொட்டும் வந்திருக்கிறது.

ஹதீது.

இயாராகிலு மொருவன் என்னையாவது கஃபாவையாவது கனவிற் கண்டால் அக்கனவு மெய்யாகயிருக்கும் யேனென்றால் ஷெய்த்தான் என்னுடைய ரூபத்தின்பேரில் வரமாட்டா னென்று நபிநாயகம் திருவுளம் பற்றினார்கள்.

ஹிக்காயத்து

எமன் தேசத்தில் மூச புனு அப்த்துற்றகுமான் யென்றொருவருண்டாயிருந்தார்கள் அவர்கள் சொல்லுகிறார்கள் ஒருநாள் எனக்கு மிக்வும் மகப்பத்தாகிய மனிதர்களிற் சிலர்கள் நபிநாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுடைய மவுலிதை யோதும்படிசொன்னார்கள் அப்போது அல்லாகுத்த ஆலாவின்பேரிற் சத்தியமாக நபிநாயக மவர்களை நான் என் கனவில் கண்டல்லாது இதற்குப்பின் மவுலிது வோதுகிற தில்லையென்று எண்ணிக் கொண்டேன் அப்போது ஹிஜ்றத்து (கூா) வருடம் றபியுல்லாகிறு மாதமா

யிருந்தது அதன் பின் ஹஜ்ஜுக்குப் போகவேணுமென்று ஆலோசித்து பிரயாணமாகி மக்கமா நகரத்திற்போய் வும்ருச் ... து மதீனமானகரஞ் சென்று நபிசல்லல்லாகு அலைகிஉசல்ல மவர்களை சியாறத்துச் செய்தபின் மக்கமானகரத்திர்க்குப் புறப்படவேணுமென்று நாடிப் பிரயாணப்பட்டு (அபீகுபைவஸி) யென்கிற மலைக்கு அருகாமையாக யிறங்கினேன் பின்பு ஹஜ்ஜி லக்குபறுடைய நாள் வந்ததின்பிறகு ஓரிரவையில் கஃபாவின்பேரில் பசுமையாகிய துப்பட்டி கொண்டு மூடப்பட் டிருக்கிறதாகவும் அதைச் சூழ அநேகஜனங்களும் அதின்மேலே அனேக ஜனங்களு மிருக்கும்படியாகவும் அச்சனங்களை அது யெடுத்துக்கொண்டு அந்தரத்தி லுயர்ந்து எமன் இராச்சியத்தை னோக்கி நடக்கிறதாகவும் கனவிற்கண்டு உடனே மிகுந்த ஆச்சரிய மடைந்து அதிலொரு மனிதனிடத்தில் இவைகளென்ன எங்கே போகிறது யென்று நான் கேட்க இது அல்லாகுத்தஆலாவுடைய கஃபா அதில் ஹஜ்ஜு செய்தவர்க ளெல்லாம் மேலே யிருக்கிறார்கள் அதின் காவற்காரர்கள் சூழ யிருக்கிறார்கள் இது எமன்தேசத்தில் மூச புனு அப்துற் றகுமானென்று ஒரு மனிதன் நபிநாயக மவர்களுடைய மவுலிதை யோதப்போகிறார் அவடத்தில் ஹாசிறாக நாடிப்போகிறதென்று சொன்னார்.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கிற சமையத்தில் ஒரு பெரிதாகிய கூட்டஞ் சரிமுட்டாக வெளியாச்சுது அக்கூட்டத்தி னடுவில் மிகுந்த சவுந்தரியமுடைய முகமும் மேனியும் வாசமுமுள்ள ஒருவரிருந்தார் அந்த சபையி லொருவரிடத்தில் இக்கூட்டம் யார் இவர்கள் மிகுந்த வலுப்பத்தையும் சிறப்பையு முடையவர்களா யிருக்குறார்களே யென்று நான் கேட்க இக்கூட்டம் நபிசல்லல்லாகு அலைகி ஒசல்ல மவர்களுடைய அசுகாபுகளாம் இவர்களில் வலுப்ப மானவர்கள் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி ஒசல்ல மவர்களாயிருக்கும், இவர்க ளெல்லோர்களுஞ் சேர்ந்து மூசபுனு அப்துற்றகுமான், என்கிற மனிதன் தமது வீட்டில் இவர்களுடைய மவுலிதை யோதிச் சி

றப்பி[illegible]றடுகிறுர் அந்த மஜிலிசுக்குப் போகிறார்கள் யென்றசொ
ல்[illegible]டனே நான் என் கைசேதமே நபிசல்லல்லாகு அலைகிஒசல்
லமவர்கள் நம்மள் வீட்டில் ஆஜருகிற சமையத்தில் நாமிங்கே யிரு
க்குறேமே யென்று மனநிற் கவலையுற்றேன் அந்நேரம் வலுப்பமா
கிய அலைகளையுடைய கடலில் மிகுதமாகிய ஜனங்களால் நிறப்பப்ப
ட்ட ஒருகப்பலைக்கண்டு நானு மதிலேறி வெகு சீக்கிரத்தில் என்
தேசமாகிய எமன் ராச்சியத்தின் கரையில் இமைதட்டி விழிக்குமுன்
வந்து சேர்ந்தேன் அவடத்தில் அப்போதே கஃபாவையும் அதிலி
ருந்த ஜனங்களையும் அதைச் சூழ்ந்த ஜனங்களையும் நபிநாயக் மவர்
ளையும் அவர்களுடைய அசுகாபுகளையுங் கண்டு மனமகிழ்ச்சியாகி
நபிநாயகம் சல்லல்லாகு அலைகி ஒசல்ல மவர்களிடத்திற் போனேன்
என்னை யவர்கள் பார்த்துக் குறிஞ் சிறிப்பாகச் சிரித்து ஓய் மூசா
யென்கிற மனிதனே நமக்கு யாராவது ஒரு மனிதன் சங்கை செய்
தால் அவனிடத்தில் நாம் போய் வுண்மையாகச் சங்கை செய்வோம்
எந்தவீட்டிலாவது நம்முடைய மவுலிதை யோதப்பட்டால் அவ்வி
டத்திற்கு நாம் போய் ஹாலிருகி அவன்பேரில் சலாஞ் சொல்லு
வோம் யென்று அறிவித்தார்கள் உடனே பதறி முழித்தேன் அப்
பவே முந்தி நானெண்ணின எண்ணத்தைவிட்டு நீங்கிக் கலப்பறு
தலாகிய தௌபாச்செய்து ஹஜ்ஜினுடைய இபாதத்துகளை யெல்லா
ம் நிறைவேற்றி வெகு துரிதமாக பாதைகளைக் கடந்து வூரில்வந்து
நபிச்ல்லல்லாகு அலைகி ஒசல்ல மவர்களுடைய மவுலிதை யோதக்
கோரிக்கை செய்து பெரிய விருந்து எற்படுத்திப் பெரியோர்கள் ம
ஷாயிகுகள் வுலமாக்கள் ஸாலிகீன்கள் மிசுக்கீன்கள் முதலாகிய யா
வரையு மழைத்து விருந்துவைத்து அநேக மரியாதைசெய்து நபிச
ல்லல்லாகு அலைகிஒசல்ல மவர்களுடைய மவுலிதை யோதிக்கொண்
டிருக்கிற மத்தியில் முழிப்புக்கு நித்திரைக்கு மிடையி லிருக்கும்
போது நபிசல்லல்லாகு அலைகிஒசல்லமவர்களும் அவர்களைச் சேர்ந்
த சங்கையாகிய அசுகாபுகளும் அந்த மஜ்லிசில்வருபடியாகவும் அ
சுகாபுகளுடைய கையில் மிகுதமாகிய அருமையான வஸ்தியாக்களு

ண்டா யிருக்கிறதாகவுங் கண்டேன் அப்போது நபிசல்லல்லாகு அ லைகிஹசல்ல மவர்கள் ஆய் மூசாயென்கிற மனிதனே இத்திசயது வு மக்கும் உம்மைச் சேர்ந்த யிசுலாமாகிய ஜனங்களுக்கும் ஊறதியா வாக யிருக்குமென்று சொன்னார்கள் வுடனே விழித்துவிட்டேன்.

இன்னும் அநேக தாம்பாளங்களில் பல வகையாகிய நிகுமத் தான ஒஜீபனங்களை வுலமாக்களுடைய முன்னாலே மலக்குகள் வா னத்தி லிருந்து கொடுவந்து வைத்ததாக மவுலிது வோதும்போது கண்டேனென்று அந்த மஜிலிசில் காலிருனவர்களி லொருவர் சொ ன்னார் இச்செய்திகள் (மவுலிது மகுமூது) யென்கிற கிதாபில் வ ருகின்றது.

ஆகையால் எந்த மனிதர்களுடைய கல்பு துப்புரவாகி சங் கையான மவுலிதைப் பெருமையன்றியே நகப்பத்துடன் அதபாக நடப்பிவித்து வருவார்களே அவர்க ளெல்லாம் இப்பூமியிற் றனே கைகண்ட பலனாக இந்த மூசா யென்கிறவர்களைப்போலப் பெற்று க்கொள்வார்கள் அல்லாகுத்த ஆலா நம் மெல்லோரையும் நபிசல்லல் லாகு அலைகிஹசல்லு மவர்களுடைய மவுலிதை நடப்பிவித்து வந்த பறக்கத்தால் அவர்களுடைய காட்சியைப் பெற்றுக் கொண்டார்க ளே அந்த ஸாலிகீன்கள் கூட்டத்திற் சேர்த்து அவர்களுடைய தி ருக்காட்சியை இருபதியிலும் அல்லாகுத்தஆலா தருவானாக ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

பல துஆக்களின் பயான்.

தொழுகையில் ஐய்ந்து ஒக்த்திம் ஓதுகிற துஆ (அல்லாகு ம்ம) யெல்லா வுலகங்களையும் வுயிர்களையும் படைத்துப் பாது காக் கும்படியான ஆண்டவனே (இன்னா) மெய்யாக நாங்கள் (நஸ்அ லுக்க) வுன்னிடத்திற் கேட்கிறோம் (ஈமானன்முஸ்தக்கீமன்) செவ் வருதலாகிய ஈமானையும் (ஒபலுலன்தாயிமன்) நேமமாகிய வரிசை

யையும் (ஒனலுறன் றகுமத்தன்) கிறுபையாகிய பார்வையையும் (ஓயில்மன் ஞபிஅன்) பலன் கொடுக்கும்படியான அறிவையும் (ஓஅக்லன் காமிலன்) நிறப்பமாகிய புத்தியையும் (வகல்பன்முனவ்வறன்) ஒளி வாக்கப்பட்ட கல்பையும் (ஒதவ்பீக்கன் யிகுஸானன்) வுபகாரமான நேர்வழிக் கட்டளையையும் (வதவ் பத்தன்னகுஹன்) கலப்பறுதலான தெளபாவையும் (ஒஸபுறன் ஜமீலன்) அழகாகிய பொறுமையையும் (வஅஜுறன் அலீமன்) வலுப்பமான கூலியையும் (ஓலிஸானன் தக்கிறன்) திக்கிறுச் செய்யும்படியான நாவையும் (வபதனன் ஸாபிறன்) நன்மையின்பேரிலும் வருத்தத்தின்பேரிலும் சபூர்ச் செய்யும்படியான ஜடலத்தையும் (வறிசுக்கன் வாசிஅன்) விஸ்தீனமான யிரணத்தையும் (வ ஸகியன் மஷ்கூறன்) ஒப்புக் கொள்ளப்பட்ட முயற்சியையும் (வதன்பன் மக்பூறன்) பாவத்தைப் பொறுக்கப்படுகிறதையும் (வஅமலன் மக்பூலன்) ஒப்புக்கொள்ளப்பட்ட அமலையும் (வ துஆஅன் முஸ்தஜாபன்) கபூல் செய்யப்பட்ட துஆவையும் (ஒஜன்னத்தல் பிறுதவ்சி நயீமன்) சுகமாகிய பிறதௌசென்னுஞ் சுவர்க்கத்தையும் வுன்னிடங் கேட்டு விரும்புகிறோம் (பிறகுமத்திக்க) வுன் கிறுபைகொண்டு (யா அறுகமற்றுகிமீன்) கிறுபைசெய்கிறவர்களெல்லாத்திலும் மிகக் கிறுபை செய்கிறவனே (அல்லாகும்ம) ஆண்டவனே (தக்கப்பல்மின்ன) யெங்களினின்றும் ஒப்புக்கொள்வாயாக (மாக்கான ஸாலிஹறன்) இணக்கமாகிய அமலை (வஅஸ்லிஹ்லனு) யெங்களுக்கு இணக்கமாக்கி வைத்தருள் (மாக்கான பாஸிதா) பஸாதான அமலை (அல்லாகும் மக்பிர்லனு) ஆண்டவனே எங்களுடைய பாவங்களைப் பொறுத்தருள் (வலிவாலிதீனு) யெங்கள் தாய் தகப்பன்மார்களின் பாவங்களையும் பொறுத்தருள் (றப்பிற்ஹம்குமா கமாறப்பயானீ ஸகீறு) நான் சிறுபிள்ளையாயிருக்குங் காலத்தில் யென்னை யவர்களிருவரும் வளர்த்ததர்க்காக அவர்களிருவருக்குங் கிறுபைசெய்தருள்,

கடன் நீங்க வோதுகிற துஆ.

அல்லாகும்ம யின்னு னவூது பிக்கமினல் ஹம்மி ஒல்ஹசன் வ-நவூதுபிக்கமினல் அஜ-சி ஒலகஸல் வ-நவூதுபிக்கமினல் ஜ-புனி ஒல்புகுல் வ-நாவூதுபிக்க மின் கலபத் நித்தைனி வ-கஹ-றிற்றிஜால்.

பறக்கத்துண்டாக வோதுகிற துஆ.

அல்லாகும்ம யா-கனிய்யு யா-ஹமீதுயா-முப்தீவு யா-முயீதுயா றகீமு யா-வதூது அகுனினு பிஹலாலிக்க அன் ஹறுமிக்க வ-பிதா அத்திக்க அன் மகுசியத்திக்க வ-பிபலுலிக்க அம்மன்சிவாக் இதை வெள்ளிக்கிழமை கொத்துவாத் தொழுதபின் சீமான்தனம் வுண்டாகவேணுமென்று நாடி (எய) விசுத்தம் ஓதிவந்தால் அவனை அல்லாகுத்தஆலா சீமானுக்கி வைப்பானென்று (இகியாவுல்வுலூம்) என்கிற கித்தாபில் வருகின்றது இது கைகண்ட பலனு யிருக்குமென்று (றாகில்பயான்) யென்கிற கித்தாபிலும் வருகின்றது.

...ளிகளுக்கு ஓதுகிற துஆ.

அல்லாகும்மறப்பல் அறுவாகில் ஆனியா வல்அஜ்ஸாதில் பாலியா வல்யிலாமின் நதிறத்நில்லதத்தி க்றஜத்து மினத்துன்யா வஹிய பிக்கமுமினு அத்கில் அலைகா றவ்ஹன் மின் யிந்நிக்க வ-சலாமன் மின்னு அல்லாகும்மஜஅல் குபூறகும் றவ்லத்தன் மின்றியாலில் ஜினுன் வலாதஜஅல் குபூறகும் குப்றத்தன் மின் குபறின்னீறுன் வஜ ஹல்ஹ-ம் மினல்லதீன லாகவ்புன் அலைகிம் வ-லாகும் எகுசனூன்.

{பாத்திஹா வகையறுவோதியபின் பகசு செய்கிறதுஆ.}

அல்லாகும்ம அவ்சில் தவாப மாகறனுஹ- மின்கலாமிக்கல்அஜீஜி ஹதியத்கன் வாசிலா வறஹமத்தன் ஷாமிலா வ பறக்கத்தன்

மக்பூலா மின்னு யிலாறுகி நபியினு முகம்மதின் சல்லல்லாகு அலைகி வ-அலா ஆலிகி வ-சகுபிஹி வ-சல்லம். தும்மயிலா அறுவாகில் மத்கூறின் யென்று ஓதும்போது இவன் யாருக்காக பகசுசெய்கிறானோ அவர்களைக் கல்பில் நாடிக்கொள்ளவும்.

மவுத்தானவர்கட்கு வோதுகிற துஆ.

அல்லாகும்மகுபிற்லஹு வ-றஹிமஹு வ-ஆனசல்லாகு வ-ஹுஷத்தஹு வறஹவி மல்லாகு குறுபத்தகு வஙவ்வறல்லாகு லஹீஹஹு. வ-தக்கப்பலல்லாகு மின்ஹுசனாத்திஹி வத்தஜா வ-சல்லாஹு அன்சய்யி ஆத்திஹி வ-கப்றல்லாகு துனூபனா வ-துனூபகு வ-ஜமஅல்லாகு பைனனா வ-பைனகுபீஜன்னாத்தின் னகீம் வல்கம்துலில்லாகி றப்பில் ஆலமீன்.

விருந்துபசியாறினவுடன் வோதுகிற துஆ.

அல்லாகும் மகுபிற்லனா ஒலிசாகிபி ஹா[illegible]ஹும் ஒதம்மிம் நிய்யத்தகு ஒதகப்பல் லியாவத்தகு ஒஷ்பி ம[illegible]ோகு லீற்கம் மவ்த்தாகு ஒலிமன் கால ஆமீன் மஅல் ஆக்கிலீன். அல்லாகும் மற்ஸூக்னா றிஸ்கன் வாசிஅன் ஹலாலன் தையிபன் பிகொய்றி கத்தின்வலா மசக்காபிபதுலி வ-யின்த உத்தூனிகு மதல்லாகி லா துஹுஸூகா யின்னல்லாக லகபூறுற்றஹீம்.

இனி யெந்த துஆ வோதும்போதும் துவக்கத்தில் லகல்ஹம் துயாஅல்லாகு யாமஹபூது யா றஹுமானு யாறஹீமு அல்லாகும்ம சல்லி வசல்லிம் ஒபாறிக்க ஆலா செய்யதினா ஒம்வுலானா முகம்மதின் ஒஆலிஹி ஒசகுபிகி அதததமாபியில் மில்லாகி சலாத்தன் தாயிமத்தன் பிதவாமி முல்க்கில்லா யென்றோதியொடுக்கத்தில் ஒசல்லல்லாகுத்தஆலா ஒசல்லம் அலாகைறி கல்கிஹி சையதினா முகம்மதின் ஒஆலிஹி ஒசகுபிகி அசுமயீன் ஒசுபுகான றப்பிக்க றப்பில் இஸ்ஸத்

லி அம்மா யசிபூன் ஒசலாமுன் அலல் முறுசலீன ஒல்ஹம்து லில் லாகி றப்பில் ஆலமீன் யென் றோதுகிறது எற்றமாயிருக்கும்.

இனி துஆ ஓதுகிறதினுடைய அதபுகள் யிதற்குமுன் சொல்லப்பட்டிருக்கிறது.

ஷகுபான்மாதம் பதினைந்தா மிரவையிற் செய்கிற விபரம்.

அன்று மகறிபு தொழுதபின் யாசீன் யென்கிற சூறுவை மூன்றுவிடுத்த மோதவும் முதல் விடுத்தத்தில் வயசு நீளமாகிறதை நிய்யத்துச் செய்யவும் இரண்டாம் விடுத்தத்தில் பலாய் முசிபத்தைத் தட்டி விலகிறதை நிய்யத்துச் செய்யவும் மூன்றும் விடுத்தத்தில் மனிதர்களைவிட்டுந் தேள்வையாகிறதை நிய்யத்துச்செய்யவும்.

ஒவ்வொரு விடுத்தம் ஓதியபின் பிசுமில்லா கிற்றகுமானிற்றகீம் அல்லாகும்ம யாதல் மன்னி ஒலாயுமன்னு அலெஹி யாதல் ஜலாலி ஒல்யிக்குறு ..தத் தவ்லி ஒல்யின்ஆம் லாயிலாக யில்லாஃ அந்த லகுறல் லாஜ்ன் ஒஜாறுல் முஸ்தஜீறீன் ஒஅமானல் காயிபீன் அல்லாகும்ம யின்குந்த கதப் தனீ யிந்தக்க பீவும்மில் கிதாபி ஷகிய்யன் அவமஹறூமன் அவ் மத்றூதன் அவ்முக்த்றன் அலெய்ய பிற்றிஸ்க்கி ஒம் ஹ..ல்லாகும்ம பி பலுலிக்க ஜகாவத்தி ஒகிற்மானீ ஒதற்த்தி ஒயிக்தாற் றிஸ்க்கி ஒஅதுபித்னீ இந்தக்க பீவும்மில் கித்தாப்பி ஸயீதன் மற்சூக்கன் முவப்பகன் லில் கைறுத் அல்லாகும்ம பித்தஜல்லீல் அகுலமி பீலய்லத்தின் னிஸ்பிமின் ஷகுபானில் முகற்றமி லலத்தி யுபுறகுபீஹா குல்லு அம்றின் ஹகீமின் ஒயுபுறமு அந்தக்ஷிப அன்னு மினல்பலாயி மானகு லமுஒமாலா னகுலமு ஒமாஅந்த பிஹி நஅகுல்மு அந்தல் அஅஸ்ஸ..ல் அக்றம ஒசல்லல்லாகு கடாசிவறா ஒதிறுல் அல்லாகுத்தஆலா இவனுடைய நிய்யத்தின்படி நிறைவேற்றிக் கொடுப்பான்.

நிக்காஹுடைய பிரசங்கம்
நிக்காகுடைய் வரிசையின் பாபு

குறஆன்சரீபில் அல்லாகுத்த ஆலா திருவுளம் பற்றியதாவது உங்களுக்கு நிக்காகு யெழுத ஹலாலான பெண்டுகளில் செவ்வெண்டு மும்மன்று நவ்வாலாக நிக்காஹு செய்துக்கொள்ளுங்கள் ஆனல் மார்க்கவிதிப்படி நடத்தி நீதமாகக் கொண்டுவர வுங்களால் யேலமாட்டா தென்கிறதைப் பயந்தால் ஒரு பெண்ணை நிக்காஹு யெழுதுங்கள் அல்லது சரியான வெள்ளாட்டியை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள்,

ஹதீது.

ஒரு மனிதன் நிக்காகு செய்துக்கொண்டால் அவன் மார்க்கத்தினுடைய பாதியைப் பேணிக்கொண்டான் மறுபாதியில் அல்லாகுத்தஆலாவைத் தக்குவாச் செய்துக்கொள்ளவுமென்றும்.

இன்னும் யாராவது வொருவன் நிக்காஹு செய்கிறதர்க்கு அன்னவஸ்திரங் கொடுக்கிறதுகொண்டும் வைத்து நடத்துகிறதர்க்குக் குவ்வத்தைக்கொண்டும் திராணிபெற்றால் அவன் கலியாணம் முடித்துக்கொள்ளவும் அப்படிக் கலியாணஞ் செய்கிறது ஹறுமான பார்வையைவிட்டும் சினைவைவிட்டும் பேணிக்கொள்ளு மென்றும் ஒரு மனிதன் திராணி பெறவில்லையானல் அவன் நபில் நோன்புகளைப்பற்றிப் பிடித்துக் கொள்ளவுமென்றும் ஒரு மனிதன் சிறியவயதாகயிருக்கிற காலத்திலேயே நிக்காகு செய்துக்கொண்டால் யென்கைசேதமே இவன் யென்னைவிட்டும் அவனுடைய மார்க்கத்தைப் பேணிக்கொண்டா னென்று அவனுடன் பிறந்த ஷெய்த்தான் சத்த மிடுவான் இன்னும் துனியா வஸ்துக்களில் மனிதனுக்கு வுபயோகமானசரக்காயிருக்கும் அதில் மேத்தியான சரக்கு ஸாலிகானபெண்ணு யிருக்குமென்றும் நமது நாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் திருவாய்மலர்ந் தருளினார்கள்.

ஹிக்காயத்து.

ஒரு சாலிகான மனிதன் வெகுநாளாக நான் நிக்காஹுசு எழுத மாட்டேனென்று சொல்லிக்கொண் டிருந்தார் அப்பாலவர் ஒருநாள் நித்திரை செய்து முழித்தவுடன் எனக்கு நிக்காஹுசு யெழுதி வைய்ங்கள் யென்று கட்டாயமாகச் சொன்னார் உடனே நிக்காகு எழுதி வைத்தார்கள் நாங்க ளெல்லாம் நிக்காகு எழுதச் சொல்லிக் கண்டிப்புச் செய்தநேரத்தில் மாட்டேனென்று சொன்னவர் இப்போது தாமே நிக்காகு எழுதச்சொன்ன தென்ன வென்று மனிதர்கள் கேட்க இன்று கனவில் கியாமநாள் வந்து விட்டதாகவும் எனக்குக் கடிசாகிய தாகம்வந்து நானும் மகுஷரில் நிற்கும்படியாகவும் மற்ற ஜனங்கள் சப்பு சப்பாக யென்னுடன் தாகமாக நிற்குஞ் சமையத்தில் சிறுகுழந்தைகள் தங்கத்தாலும் வெள்ளியாலு முள்ள அழகிய கெண்டிகளில்த் தண்ணீர் கொடுவந்து சப்புகளுக் கிடையில் ஒவ்வொருவராகக் கொடுக்கிறார்கள் என்னுடைய தாகத்தால் யெனக்குக் கொஞ்சந் தண்ணீர் தாவென்று ஒரு பிள்ளையிடம் கைநீட்டிக் கேட்டேன் நாங்கள் முசிலி மானவர்களுடைய பாலிக்காகாமல் மவுத்தான குழந்தைகள் நாங்கள் தண்ணீர் யெங்கள் தாய்தகப்பன்மாருக்குமாத்திரந் தான் கொடுப்போம் வுமக்கு யெங்களிடையிற் பிள்ளைகளில்லை யாதலாற் றரமாட்டோ மென்று சொல்லிவிட்டதாகக்கண்டேன் கலியாணஞ் செய்த மூலியமாக அல்லாகுத்தஆலா வொரு குழந்தையைத் தரப்போதுமென்று ஆதரவு வைக்கிறேனென்று சொன்னார்.

ஹதீது.

இயாராவது வொரு மனிதன் இரண்டு பெண்ணை நிக்காகு செய்து ஒருதலைப் பட்சமாக யிருந்தால் கியாமத்து னாளில் அவனுடைய் ஜடத்தில் பேர்பாதி சரிந்தவனாக வருவா னென்று நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகி ஒசல்ல மவர்கள் திருவுளம் பற்றினார்கள்,

நிக்காகினுடைய வகைகளின் பயான்.

நிக்காஹு வென்பதின் பொருளாவது பெண்பிள்ளையினின்றும் ஆண்பிள்ளை சுகந்தேடுகிறது ஹலாலென்கிறதைப் பரபிதாக்கொடுக்கும்படியாகிய வுடன்படிக்கையா யிருக்கும்

அந்த நிக்காகு ஆறுவகைப்படும் அதில் (௧-வது) பறுலு அதாவது வொருமனிதன் நிக்காகு யெழுதாவிட்டால் ஸினாவில் விழும்படியான சமையம் (௨-வது) வாஜிபு அதாவது ஆசை கடிசான நேரம் (௩-வது) சுன்னத்து முவக்கதா அதாவது சேர்க்கையின்பேரிலும் மகறின்பேரிலும் அன்ன வஸ்திரத்தின்பேரிலும் திராணிபெற்றவன் சுன்னத்தை நிறைவேற்ற வேணுமென்றுஞ் சாலிகான குழந்தைகள் பிறக்கவேணுமென்றும் அல்லது ஸினாவைவிட்டும் பேணவேணும் அல்லது யேவலுக்கு வழிப்படவேணும் மென்கிற எண்ணம்வைத்து நிக்காகு செய்கிறது (௪-வது) மக்குறூகு அதாவது சரியாகவைத்து நடத்த யேலாம லிருக்கிற சமையம் (௫-வது) ஹறாம் அதாவது திட்டமாகவைத்து நடத்த யேலாது அநியாயந்தான் வருமென்று அறிந்தநேரம் (௬-வது) முபாகு அதாவது சுன்னத்தை நிறைவேற்றவேணும் ஸாலிகான குழந்தைகள் பிறக்கவேணும் ஸினாவைவிட்டும் பேணவேணும் யேவலுக்கு வழிப்பட வேணுமென்கிற வெண்ணமில்லாமல் ஆசையை நிறைவேற்றுகிறதற்காக வென்று எண்ணுகிற நேரமாக யிருக்கும்.

நிக்காஹின் ருக்குனுகளின் பயான்.

அதின் சறுத்தாவது வொலிகாரனன்றியே தன்னைக் கொண்டாவது தன் ஒக்கீலைக் கொண்டாவது நிக்காஹு செய்கிறவர்கட்கு சறுத்து சுமார் (௰௪) அதாவது அக்கலுண்டா யிருக்கிறதும் புலூக்குண்டா யிருக்கிறதும் நாட்டான் மகனா யிருக்கிறதும் மார்க்கத்தில் ஹலாலான பெண்ணா யிருக்கிறதும் மாப்பிள்ளை பெண்ணிரண்டு பேரு மறியப்பட் டிருக்கிறதும் நிக்காஹுக அவள் சடலமடங்கலிற்

சேர்க்கிறதும் இரண்டு பெயரும் ஒருவர் வாக்குமொழி மற்றொருவருக்கு அல்லது வக்கீலுக்குத் தெரிகிறதும் இரண்டு முசிலிமாகிய நாட்டான் மகனுன ஆக்கில் பாலிகாகிய ஷாகி துண்டாயிருக்கிறதும் இருவர் மொழிச்சலே இரண்டு சாகிதும் தடருகக் கேட்கிறதும் அந்த மொழிச்சலே இரண்டு சாகிதும் நிக்காஹென்று விளங்கிக் கொள்கிறதும் பாலிக்கான பெண்ணுடைய பொருத்தமறிகிறதும் மொழியப்பட்ட ஈஜாபு கபூல் ஒரே தானத்தி லிருக்கிறதும் ஈஜாபு கபூல் வேற்றுமை யாகாம லிருக்கிறதும் வேற்றுமைப்படுகிறதெப்படியெனில் ஆயிரம் ரூபாய் மகறுக்கு வுன்னை நிக்காஹு செய்தேனென்று சொல்ல அவள் நிக்காகை ஒப்புக்கொண்டேன் மகறை யொப்புக்கொள்ளவில்லை யென்பதுபோலாம் நிக்காகை சறுத்துக்கொண்டு கொளுகாம லிருக்கிறதும் அதேதுபோலெனில் இன்னன் வந்தானனல் சம்மதித்தே னென்று பெண் சொல்வதுபோலா யிருக்கும்.

இனி பாலிக் கில்லாத்த குழந்தைகளுக்கும் பைத்தியகாரர்களுக்கும் ஒலிகாரர் தகப்பன் பாட்டன் அண்ணன் தம்பி சிறியதகப்பன் பெரிய தகப்பன் இவர்கள்போலொத்த அனந்தரக்காரர்களில் அசபத்துக்காரர் அல்லது பறுலுக்காரர் அல்லது குடல்வாசிஜனங்களில் தருத்தீபின்படி மிகவும் முடுகுதலானவர்களி லிருந்து நிக்காஹு யெழுதிவைக்கிறது சறுத்து.

ஆனல் மிகவும் முடுகுதலான்வர்க ளிருக்கும்போது தூரமான வொலிகாரன் நிக்காகுயெழுதிக் கொடுத்தால் துருஸ்தாகாது முடுகுதலானவர்கள் மூன்றுநாட் பயணத்திற் கப்பாலிருந்தாலேயொழிய

ஆனல் தகப்பன் பாட்டனைத்தவிர யாராவது நிக்காஹு எழுதிவைத்தால் அக் குழந்தைகள் புலூக்கான்வுடன் பிரியமில்லாவிட்டால் காஸி இடத்தில்த் தெரியப்படுத்தி பஸகு செய்கிறதாகும் புலூக்காகி சும்மாயிருந்து வொருநா ளிரண்டுநாட் சென்றபின் பஸகு செய்யநாடினல் பஸகு துருஸ்தாகாது.

இனி முன்சொன்ன சறுத்துகளில் ஒலிகாரனும் அந்த இரண்டுபேரின் ஒக்கீலுகளும் பெண் மாப்பிள்ளையைப் போல் நடத்திக் கொடுக்கவேண்டும்.

இனி பாலிக்காகிய கன்னி யழியாத பெண்ணிடம் ஒலிகாரன் இன்னானுக்கு இன்ன மகருக இன்னானும் இன்னானும் ஷாகிதாக வுன்னை நிக்காகு செய்துகொடுக்கிறது சம்மதமா வென்று கேட்க வாய்மூடினல் அல்லது சிரித்தால் அல்லது அழுதால் அது சம்மதத்திற் கடையாளமா யிருக்கும் கன்னியழிந்த பெண் கபூல்த்தானென்று வாயால் மொழிகிறது சறுத்து.

நிக்காஹினுடைய றுக்குனுகளின் விவரம்

நிக்காஹினுடைய றுக்குனுகள் இரண்டாயிருக்கும் அதாவது ஈஜாபும் கபூலுமா யிருக்கும் ஈஜாபாகிறது இரண்டு பெயரில் யாருடைய வார்த்தை நிக்காஹுடைய கருமத்தைக் கொண்டு முந்துகிறதோ அவ்வார்த்தையா யிருக்கும் கபூலாகிறது அந்த ஈஜாபை ஒப்புக்கொள்கிற வார்த்தையா யிருக்கும்.

இனி ஈஜாபுடைய கிறப்பமாகிறது மகறைக் குறிக்கிறதா யிருக்கும் அது யேதுபோலெனில் ஒலிகாரன் தகப்பனாயிருந்தால் என்னுடைய மகள் இன்னாளை இன்னமகருக வுனக்கு நிக்காஹுசெய்து தந்தேனென்று சொல்ல வேண்டும் அவனன்றி நிக்காஹு எழுதிக் கொடுக்கிறவன் ஒக்கீலா யிருந்தால் என்னை ஒக்கீலாக்கிவைத்த யின்னானை அல்லது என்னை ஒக்கீலாக்கிவைத்த இன்னானுடைய மகள் இன்னாளை உனக்கு நிக்காஹு செய்து தந்தே னென்று சொல்லவேண்டும்.

கபுலுடைய விதமாவது கபூல்செய்கிறவன் மாப்பிள்ளையா யிருந்தால் இந்த மகறின்பேரில் அவள் நிக்காஹைக் கபூல்ச்செய்தேனென்

று சொல்லவேண்டும் நிக்காகைக் கபூற்செய்கிறவன் தகப்பனுயிருந் தால் யென் மகன் இன்னானுக்கு அவளுடைய நிக்காகை இன்னமகறுக்கு கபூல்ச் செய்தேனென்று சொல்லவேண்டும் கபூற் செய்கிறவன் ஒக்கீலாயிருந்தால் என்னை ஒக்கீலாக்கிவைத்த இன்னானுக்கு இன்ன மகறின்பேரில் அவளுடைய நிக்காகைக் கபூல்ச் செய்தே னென்று சொல்லவேண்டும்.

இனி பேசின மகர் கொடுக்கவேண்டியது வாஜிபு. பேசாவிட்டால் அவள்போ லொத்தவளுக்கு என்ன மகரோ அந்த மகர் வாஜிபு மகறில்க் குறைந்தது பத்துத் திறுகம் கூடினது கணக்கில்லை மகர்பேசி நிக்காஹு முடிந்து செயர்க்கைக்குமுன் தலாக்குச் சொன்னால் அரை மகர் வாஜிபு இரண்டிலொருவர் இறந்தாலும் அல்லது சேர்க்கை செய்தாலும் அல்லது சேர்க்கை செய்ய இடம்பாடான தனித்த விடத்தி லிருந்தாலும் பேசினமகர் வாஜிபு பேசாதிருந்தால் அவள்போல் ஒத்த பெண்ணுக்குள்ள மகர் வாஜிபு.

நிக்காஹுடைய சுன்னத்து முஸ்தகப்புகளின் விபரம்.

அவைகளாகிறது மிடிமையானவன் கலியாணத்திர்க்காகக் கைமாத்து வாங்கிறதும் ஆனால் நிக்காஹு செய்கிறது பறுலானவன் கடன் வாங்கிறது வாஜிபு இன்னும் வயதிலும் நன் னடத்தையிலும் மேன்மையிலும் முதலிலும் அவள் அவனுக்குத் தணிந்திருக்கிறதும் குணத்திலும் அதபிலும் பேணுதலிலும் அழகிலும் மேலாயிருக்கிறதுங் கலியாண முடிக்க முன் அவளைப் பார்க்கிறதும் பெண் பேசினபின் அவளுக்கு மணமான வஸ்து ஹதியா வனுப்புகிறதும் யெல்லோருக்குந் தெரியும்படி நிக்காகை பகிரங்கமாகச் செய்கிறதும் பள்ளியில்வைத்து நிக்காஹு செய்கிறதும் ஜும்ஆவுடைய நாளில் நிக்காகு செய்கிறதும் நேர்வழியான ஆக்கிதென்னு நிக்காகை மு

டித்துக் கொடுக்கிறவனையும் நீதமான சாகிதையும் வைத்து முடிக்கிறதும் முன் சொன்னபிரகாரம் நிய்யத்து வைக்கிறதும் நிக்காகுக்குமுன் குத்துபா வோதுகிறதும் மகறை இன்னதென்று நிச்சயப்படுத்துகிறதும் அதிற் கொஞ்சமாவது ரொக்கங் கொடுக்கிறதும் கற்கண்டு பாதாங்கொட்டை குத்துபா ஓதும்போது இருவர் தலையிலுஞ் சொரிந்து அதை யெடுத்து ஜனங்கள் கொள்ளையிடும்படி தூவுகிறதும் பெண்ணுக்கு ஆடையாபரணங்களைப் பூட்டி மருதோன்றி யிட்டு சிப்பிட்டுச் சிவிச் சுருமாவிட்டு அலங்கரித்து மணம் பூசுகிறதும் இருவரும் மணவறையிற் போனவுடனே இருவரும் இரண்டு றக்காஅத்துத் தொழுகிறதும் அவளுடைய முன்னெற்றி ரோமத்தைப் பிடித்து அவன் துஆ வோதுகிறதும் துஆவாவது (அல்லாகும்ம பிசுமி கஸ்த ஹில்லத்து பறஜஹா ஒபி அமானத்திக்க அகத்துஹா அல்லாகும்ம பொயின் கலைய்த்த செய்யன் மின்றிஹிமிகா பஜ்அல்ஹு பாற்றன் தக்கிய்யன் ஒஜ்அல்ஹு முசுலிமன் ஸவிய்யன் ஒலாத்தஜ் அல்ஹு ஷரீக்கன் லிஷ் ஷெய்த்தான்) இந்த துஆ வோதுகிறதும் மாப்பிள்ளை வீட்டுக்குப் பெண்போனவுடன் அவள் கால் கழுகி வீட்டு மூலைகளில்த் தெளிக்கிறதும் மாப்பிள்ளைக்குப் பறக்கத்துக்கொண்டு சோபனஞ் சொல்லுகிறதும் ஒலிமா வென்னு மாப்பிள்ளை வீட்டில் விருந்துச்சோறு வைக்கிறதும் இவைகள் சுன்னத்தா யிருக்கும்.

இனி ஜமாகுக்கு முன் ஒலுச்செய்து மூன்று குல்குவல்லாஹு வோதிச் சேர்க்கை செய்யமுன் (பிஸ்மில்லாகி அல்லாகும்ம ஜென்னிபு னஷ்ஷெய்த்தான் ஒஜென்னி பிஷ் ஷெய்த்தான மா றஸக்த்தனு) வென்று ஓதவும் பிஸ்மில்லாச் சொல்லாமற் சேர்க்கை செய்தாற் ஷெய்த்தானுங் கூடச் சேர்க்கைசெய்வான் இந்த குக்குமுகள் றத்துல் முருத்தார் ஷறகு விறகத்தி லிசுலாம் முதலான கித்தாபுகளில் வருகின்றது.

{ஜமாகினுடைய அதபுகள் சுன்னத்துகளின் விபரம்,}

அதாவது (ம௬) ஆகயிருக்கும் அதில் (க-வது) கோபம் வியாகுலம் சலிப்பில்லாமலும் சரீரத்துடைய ஹாலுகள் நிதானமாகவுமிருக்கிறது (உ - வது) ஒலுச்செய்துக்கொள்கிறது (ஈ - வது) பாவமெடங்கலைவிட்டுந் தௌபாச் செய்கிறது (ச - வது) இருவரும் மணம் பூசிக் கொள்கிறது ஆனால் பெண்பிள்ளை வாடை மறைந்து நிறம் வெளியாகிய மணம் பூசிக்கொள்ள வேண்டும் ஆதலால் புருசனுக்கு முத்தமிடுதல் அழகாகிறதை நாடினல் வாடை வெளியாகிய மணம் பூசுகிறது அவனுக்கு முஸ்தகப்பாகிவிடும் இனி எப்போதும் புருடனிருக்கும்போதெல்லாம் பெண்பிள்ளையுடைய மேனி பிடவை துப்புரவா யிருக்கிறதின் பேரிலும் அவளுடைய அலங்காரத்தின்பேரிலும் புருடன் பார்வை விழுகிறதும் அவளில் நின்றும் முகக்கிறதும் இன்னும் வாய்வீச்சம் சரீரநாற்றம் இல்லாமல் அதர்க்காகுமான மருந்துசெய்து அதை மணமாக்கிக் கொள்கிறதும் அவனுடைய மகப்பத்தை அதிகமாக்கும் (ரு - வது) நிய்யத்துச்செய்கிறது அதாவது. காதையுங் கண்ணையும் ஹறாமைவிட்டும் கலாலைக்கொண்டு காரமானஞ் செய்கிறேன் அல்லாகுத்த ஆலாவுடைய திக்கிறைவிட்டுப் பராக்கு வருத்துகிறவைகளை விட்டுங் கல்பை ஒளித்துவைக்கிறேன் அல்லது ஸாலிஹாகிய பிள்ளையைத் தேடுகிறேன் என்று நிய்யத்துச் செய்கிறதாம்

(சு - வது) ஜமாகுக்கு முன் அவளோடு பேசி விளையாடி முத்தமிடுகிறது (எ - வது) இருவரில் ஒவ்வொருவரும் அவரவர் அபத்தின் ஈரத்தை மனியைத் துடைக்கிறதர்க்காகத் தனித் தனியே துப்புரவான ஒரு துண்டுப்பிடவையை எடுத்துக்கொள்கிறது (அ-வது) கிபுலாவுக்கு நேரிடாமல் அதைவிட்டுந் திரும்பிக் கொள்கிறது (கூ-வது) அவன் தன்னையும் அவளையும் மூடிக்கொள்கிறது (ம-வது) ஜமாகுக்குக் கொஞ்சமுன் பிஸ்மில்லாச்சொல்லி குல்வல்லாஹூ அக

து முடியவோதி (பிஸ்மில்லாகில் அலீயில் அலீம் அல்லாகும்மஜ் அ. ல் ஹாத்துற்றியத்தன் தையிப்பத்தன் யின்குந்த கத்தர்த்த அந்து குறிஜதாலிக்க மின்ஸ-ல்பீ) யென்று வோதவேண்டும் (மக - வது) ஜமாகு செய்கிறநேரத்தில்ப் பேசாம லிருக்கிறது பேசினல் ஊமைப்பிள்ளை பிறக்கும் (மஉ-வது) ஜமாகு செய்யும்போது அவ ளபத்தைப் பாராம லிருக்கிறது பார்த்தால் மறதியுண்டாகும் (மங-வது) இவன் ஹாஜத்தை நிறைவேற்றிக்கொண்டால் அவளும் அவள்ஹாஜத்தை நிறைவேற்றிக் கொள்கிறவளாயில் அவள்பேரில் தரிபட்டுத் தாமதஞ் செய்யவேணும் (மச - வது) ஜமாகு செய்யும்போது அவளை முத்தமிடாம லிருக்கிறது முத்தமிட்டால் செவிட்டுப்பிள்ளை பிறக்கும் (மரு-வது) சிறு பிள்ளை ஆடு மாடு மிருகஜாதி வுறைபோடாத குறஆன் இவைக ளுண்டாயிருக்கிற இடத்தில் ஜமாகு செய்யாம லிருக்கிறது (மசு-வது) குளிக்குமுன் இரண்டாவது விடுத்தம் ஜமாகுசெய்ய நாடினல் வெட்கத்தலத்தையுங் கையையுங் கழுகிக்கொள்ளவேண்டும்.

இயாராவது ஒருவன் நஜீசைக் கழுகாமல் மறுபடி ஜமாகு செய்தால் மருந்தில்லையே அப்பேர்க்கொத்த வியாதி யுண்டாகும்.

யாராவது ஒருவன் ஹயலாக யிருக்கிறகாலத்தில் ஜமாகு செய்கிறது ஹறுமா யிருக்கும் ஜமாகு செய்தால் வெண்குட்டங் கருங்குட்டம் பிடிக்குமென்று ஸாலிகானவர்கள் சொல்லுகிறார்கள்.

(இன்னும்) றூமி வைத்தியர்கள் ஹிந்துவைத்தியர்கள் பாரிஸ வைத்தியர்கள் யெல்லாரும் ஒத்துமையாக மனிதர்கள் சேர்க்கையை யதிகஞ் செய்வதாலும் பகலையில் நித்திரை யதிகமும் இராவையில் நித்திரை சுருக்கமுமா யிருப்பதாலும் பசியில்லாமல் ஒஜீபணந் தின்னுவதாலும் சிறுநீரை யடக்குவதாலும் இராசாமத்தில்த் தண்ணீர் குடிப்பதாலும் மிகுதமாகிய வியாதிகள் வுண்டாகு மென்று சொல்லுகிறார்கள்.

இனிப் பிறைப் பிறந்த இரவிலும் பதினைய்ந்தா மிரவிலும் கடாசிகா ளிரவிலும் சபர்போகிற யிரவிலும் ஜமாகு செய்கிறது நல்லதல்ல செய்நால் வியாதியுண்டாகும் பறக்கத்துக் குறையும்.

ஜமாகுக்கு நல்ல நாளாகிறது வெள்ளிக்கிழமை திங்கட்கிழமை வியாழக்கிழமைகளா யிருக்கும்.

நிக்காஹ-யெழுதஹறுமானபெண்டுகளின் பயான்,

ஒரு மனிதன் தன்னுடைய தாயைக் கலியாணஞ் செய்கிறதும் அவளுடைய தாய் அவளுடைய தாய் அந்த வழியடங்கலும் ஹறும் தன் மகளையும் மகளுடைய மகளையும் தன் மகனுடைய மகளையும் அந்த வழியடங்கலும் நிக்காகு யெழுதுகிறது ஹறும் தன்சகோதரியும் அவள் மகளையும் சகோதரன் மகளையும் நிக்காகு எழுதுகிறது ஹறும் தன் தகப்பனுடன் பிறந்த மாமியையும் தாயுடன் பிறந்தவளையும் நிக்காகு யெழுதுகிறது ஹறும் இவர்களின் தாய் மாத்திரம் ஒன்றானலுஞ் சரி அல்லது தகப்பன் மாத்திரம் ஒன்றானலுஞ் சரி தகப்பனுந் தாயும் ஒன்றானலுஞ் சரி இன்னம் தன் பெண்சாதியின் தாயை நிக்காகு யெழுதுகிறது பெண்சாதியுடன் சேர்க்கைசெய்தாலும் செய்யாவிட்டாலுஞ் சரி ஹறுமாயிருக்கும் பெண்சாதியின் மகளை நிக்காகு யெழுதுகிறது பெண்சாதியுடன் சேர்க்கைசெய் திருந்தால் ஹறும் தன் தகப்பனுடைய பெண்சாதியை நிக்காகு யெழுதுகிறது ஹறும் தன் மகன் பெண்சாதியை நிக்காகு யெழுதுகிறது ஹறும் இந்த இரண்டு பெயர்களுடைய வழியி லுள்ளவர்களுடைய பெண்சாதியை நிக்காகு யெழுதுகிறது ஹறும் மேலே சொன்னகூட்டத்தா ரடங்கலும் பால்குடி ஆயிபமாக இந்த முறை யுண்டாயிருந்தாலும் அவர்களைத் தான் நிக்காகு யெழுதுகிறது ஹறும் தன் பெண்சாதி யிருக்க அவள் கூடப்பிறந்தவளை நிக்காகு யெழுதுகிறது ஹறும் தன் பெண்சாதி யிருக்க அவ்வில் ஆண்பிள்ளையா யிருந்தால்

அவளுக்கு ஹறாமாவார்களே அப்பேர்க்கொத்த பெண்பிள்ளையை நிக்காகு யெழுதுகிறது ஹறாம் இது யேதுபோலெனில் ஒரு மனிதன் தன் பெண்சாதியிருக்க அவளுடைய சிறிய தாயை நிக்காகு எழுதுகிறது ஹறாமாகிறதுபோல் இன்னம் சிஞச்செய்த காரணத்தாலும் ஆசைகொண்டு தொட்ட காரணத்தாலும் ஆசையுடன் அவள் அபத்தை பார்த்த காரணத்தாலும் அவ் வேற்றுமையான பெண்ணும் இவனும் சம்மந்தஞ் செய்கிறது ஹறாம்.

இன்னம் ஒரு மனிதன் தன் மகளை யாசையுடன் பிடித்தானேயானால் அல்லது தன் பெண்சாதியைப் பெற்ற தாயை யாசையுடன் பிடித்தானேயானல் தன்பெண்சாதி ஹறாமாகிவிடுவாள்.

இன்னம் தன் பெண்சாதியைத் தலாக்குச்சொல்லி அவள் இத்தா யிருக்குங் காலத்தில் அவள் சகோதரியை நிக்காகு எழுதுகிறது ஹறாம்.

புத்தை வணங்கிற காபிரான பெண்ணை நிக்காகு யெழுதுகிறதுஹறாம் நாலு பெண்சாதி யிருக்க அதர்க்கு அதினம் ஒருத்தியை நிக்காகு யெழுதுகிறது ஹறாம்.

இன்னம் ஒருவன் பெண்சாதியைய அவன் தலாக்குச்சொல்லிஅல்லது மவுத்தாகி இத்தாத் திருதிருக்க அப்பெண்ணை மறுபடி தான் நிக்காகு யெழுதுகிறது ஹறாம்.

தலாக்குவகையருவின் பாபு,

குறுஆன் ஷரீபில் அல்லாகு சுபுகானகுத்தஆலா திருவுளம்பற்றியதாவது யாதெனில் சில பெண்பிள்ளைகளாகிறது அவர்கள் புருஷர்களுக்கு மாறுசெய்து வழிப்படா திருக்கிறதைப் பயந்தால் அவர்கட்கு நல்லறிவுகளையும் நற்புத்திகளையுஞ் சொல்லி அல்லாகுத்தஆலாவுடைய வுத்திரவுகளையும் அறிவித்து உங்களுக்கு வழிப்படும்படி நசிகத்துச்செய்யுங்கள் அப்படிச் சொல்லியு முங்களுக்கு வழிப்படாவிட்டால் விரிப்பில் [illegible]றுத்து வேறே விரிப்பில் நீங்கள் படுத்

திருந்து புத்தி வருகிறதாவென்று பாருங்கள் அதற்கும் வழிப்படா விட்டால் அவர்களைக் காயப்படுத்தாமல் அடித்துப் புத்திவருத்துங்கள் வுங்களுக்கு வழிப்பட்டால் அவர்களை அடியாதிருங்கள் அல்லாகு சுபுகானகுத்தஆலா வுயர்த்தியானவனாகவும் பெரியவனாகவு மிருக்கிறான் நீங்கள் அவர்கட்கு அனியாயஞ் செய்யாதிருங்கள் அப்படி யனியாயஞ் செய்தால் துன்யாவிலும் ஆகிறத்திலும் வுங்களை வேதனைசெய்வான் மனிதர்களே வுங்களில் யாராவது புருசன் பெண்சாதி சேர்ந்திராமற் பிரிந்து பசாதாகிறதை நீங்கள் அறிந்தால் புருடனுடைய ஆளி லொருவனையும் பெண் பிள்ளை யுடைய ஆளி லொருவனையும் இரண்டுபேருடைய வளக்கை விசாரிக்கும்படியாக அனுப்பிச் சேரும்படி முயற்சை செய்யுங்கள் இன்னும் ஒரு ஆயத்தில் பெண்பிள்ளைகளை நன்மையைக்கொண்டு கலந் துறவாடுங்கள் யென்கிறதாக அல்லாகுத்தஆலா திருவுளம்பற்றினான்.

ஹதீது.

ஸாலிகான பெண் கிடைக்கிறது வெள்ளைக்காகங் கிடைக்கிறதுபோலா யிருக்குமென்று நபிநாயகம் சல்லல்லாகு அலைகிஸசல்லமவர்கள் திருவுளம்பற்றினார்கள்.

இன்னம் பெண் பிள்ளையை கோணயெலும்பில் நின்றும் படைக்கப்பட்டது அதை யதற்குத் தகுந்தது போல நடத்தவேண்டும் ஒரே தீர்மானமாக நிமிர்த்தவேணுமென்று நாடினால் முறிந்துவிடும் ஆதம் அலைகிஸ்ஸலாம் அவர்களுடைய யிடது வலாக் கொடி யெலும்பில் நின்றும் ஹவ்வா அலைகிஸ்ஸலா மவர்களை அல்லாகுத்தஆலா வெளியாக்கினான் இந்த சபபினலேதான் பெண் பிள்ளைகளின் புத்திகள் கோணலாயிருக்கிறது அதற்கு சபூர்ச் செய்கிறவர்கள் லாபம் பெறுவார்கள்.

ஹிக்காயத்து.

ஸாலிகானவர்களி லொருவருக்கு ஒரு முகப்பத்தான மனிதனிருந்தார் அவர் வருடத்திற் கொருதடவ்ல் வந்து காணுகிற வளக்

கம் அப்படி யிருக்க ஒருதடவல் இவர் அவர்வீட்டுத் தெருவாசலை த்தட்டினுர் அவர் பெண்சாதி வாசலில் யாரென்று கேட்க வுன்புருஷனின் தோழன் அவனைக் காண வந்தேனென்று சொன்னுர் அப்போதவள் இவரிடத்தில் அவனை இகழ்ச்சியாகப் பேசி மலையில் விறகெடுக்கப்போனுர் அவனை ஆண்டவன் அல்லாகுத்தஆலா ஹறுபாக்கட்டு மென்று சொல்லி மிகவுங் கேவலமாக யேசினுள் இவர் இப்படியே வாசலில் நிற்கும்போது அந்த வீட்டுக்காரர் ஒரு புலியினுடைய முதுகில் விறகுக் கட்டையைச் சுமையாகப் போட்டுக்கொண்டு வந்தார் தோழன் நிற்கிறதைக் கண்டு சலாஞ் சொல்லி மிகவும் மரியாதைசெய்தார் அப்பாற் புலியின் முதுகிலிருந்த விறகுக்கட்டை இறக்கி அல்லாகுத்தஆலா வுனக்கு பறக்கத்துச் செய்வானென்று சொல்லிப் புலியை அனுப்பிவிட்டார் பின்பு இவருமவருமாக வீட்டுக்குட் போக அவள் இவனை யேசவும் சட்டி பானைகளைப்போட் டுடைக்கவுமாக யிருந்ததர்க்கு அவர் ஒன்றும் பேசவில்லை இவருக்குச் சோறு முதலானதைக் கொடுத் தனுப்பிவிட்டார் இவர் அவர் சபூறைப்பார்த்து மிகவும் புதுமையாக யிருக்கிறதென்று ஆச்சரியப்பட்டுப் போனுர் மருவருடம் வந்து கதவைத் தட்டினதில் ஒரு பெண்பிள்ளை வாசலில் யாரென்று கேட்டாள் நான் வுன்புருசனுடைய தோஸ்து அல்லாவை நாடி அவனை நான் காணவந்தேனென்று சொல்ல வாசலி லிருங்களென்று சோபனஞ் சொல்லி இரண்டுபேரையும் மிகவும் புகழ்ந்தாள் அப்படி யிருக்கும்போது அவர் தன் முதுகில் விறகைச் சுமந்துகொண்டுவந்து வீட்டுக்குட்போட அப்பெண்பிள்ளை மிகவும் புகழ்ந்து மரியாதை செய்து சோறு கஞ்சி நிகுமத்தாகக் கொடுத்தாள் அப்பால் இவர் பயணப் படும்போது விறகு சுமந்து கொண்டுவந்த தென்னவென்று கேட்க நான் அந்த நாவுகெட்ட பெண்பிள்ளையினுடைய நாவுக்கு சபூர்ச் செய்ததர்க்காக அந்தப் புலியை அல்லாகுத்தஆலா யெனக்கு வசப்படுத்தித் தந்தான் அவ ளிறந்துபோனுள் அப்பா லிந்த சாலிகானபெண்ணை நிக்காகு செய்தேன் அது முதல் ருகத்தாக யிருப்பதால்

புலி யெனக்கு வசப்படுகிறதில்லை அதுமுதல் நான் விறகைச் சுமக்கும்படி சம்பவித்தது யென்று சொன்னார் இச் செய்தி (இருசாதெ ன்னும்) கித்தாபில் வருகிறது (ஆதலால்) எமது பிறவிகளே இப் பேர்க்கொத்த சாலிகான மூமீன்களை யோசித்து உங்களுடைய மனவிகளுடைய துற்குணத்துக்கு சபூற்ச்செய்துகொள்ளுங்கள்.

ஹதீது.

ஹலாலான வஸ்துக்களி லெல்லாம் அல்லாகுத்த ஆலாவுக்கு மிகவுங் கோபமான செய்கையாவது தலாக்குச் சொல்லுகிறதாக யிருக்கும் யென்று நமது நாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகி ஹுசல்ல முவர்கள் திருவாய்மலர்ந்தருளினார்கள்.

தலாக் கென்பது மார்க்கத்தில் நிக்காஹு மூலமாக இவனுக்குத் தரிபட்ட விலங்கை அவிழ்க்கிறதின் பெயர்.

இனி ஒரு மனிதன் தன் பெண்சாதியைத் தனக்கு வழிப்படுவாளென்று பலவிதம் பார்த்ததிலும் ஆரிற் றெரியப்படுத்தினதிலும் அவளுக்கு வேண்டியவர்களிடத்தில்த் தெரியப்படுத்தி நற் புத்தி சொல்லச் சொன்னதிலும் அவள் வழிப்படாமல் அவள்பேரிலே குற்றந் தரிபட்டுத் தலாக்குச் சொல்லும்படி சம்பவித்தால் கமலில்லாமலும் கைலில்லாமலும் அவள் துப்புரவாக யிருக்கிற காலத்தில் அவளைச் சேர்க்கைசெய்யாமல் புத்தி வருகிறதர்க்காக விரண்டுபெயனாவைத்து ஒரு தலாக்குச் சொல்லவேண்டும்.

கலப்பறுதலான ஒரு தலாக்கு இரண்டு தலாக்குச் சொல்லப்பட்டவளை இத்தாவுக்கு முன் சேர்த்துக்கொள்ளலாம் இத்தாத்தீர்ந்துபோமாகில் நிக்காகைப் புதுப்பிக்கவேண்டும்.

அப்பால் முன்சொன்ன தலாக்குப்போக மீதந்தா னிருக்கும் அதையுஞ் சொல்லிவிட்டால் அப்பவே முன்சொன்ன தலாக்குடன் சேர்ந்து மூன்று தலாக்கும் விஷயமாகிவிடும்.

பின்னர் ஓரே நேரத்தில் மூன்று தலாக்குச் சொல்லுகிறதும் ஒருக்காலும் - இருக்காலும் - முக்காலும் வுன்னை விட்டேனென்று சொல்லுகிறதும் பிதுகத்தா யிருக்கிறதுந் தவிரப் பாவியாகிவிடுவான்.

முத்தலாக்கு மோரே மொத்தமாகச் சொன்னவன் பின்னுற் கைசேதப்படுவான் யேனென்றால் ஒருவேளை யவளை யிவன் சேர்த்துக்கொள்ள வேணுமென்ற யெண்ணம் வந்துவிட்டால் அவளை இவனுடைய இத்தாத் தீர்ந்தபின் யின்ன மொருவனுக்கு நிக்காஹு யெழுதி அவன் சேர்க்கை செய்து தலாக்குச் சொல்லி இத்தாத் தீர்ந்துதானுல்த் தான் இவன் அவளை நிக்காகு எழுதுகிறது ஹலால்.

இப்படிச் செய்யாவிடி லொருநாளுங் கலாலாகமாட்டாள் ஒருதரந் தலாக்குச் சொல்லியிருந்தால் அவளுடைய இத்தாத் தீறுகிறதர்க்குமுன் சேர்த்துக்கொள்ளலாம் நிக்காஹுசெய்யவேண்டிய தில்லை.

இப்படிச் சேர்க்கும்போது இரண்டு தலாக்குத்தான் பாக்கியிருக்கும் அவளுடைய இத்தாத் தீர்ந்தபின் சேர்க்கிறதானுல் அவளை இவன் தகுலீல்ச்செய்கிறதன்றியே நிக்காஹு செய்துக்கொள்ளலாம்

இப்படி நிக்காகு செய்தாலும் முந்தி யொரு தலாக்குச் சொல்லியிருப்பதால் இரண்டு தலாக்குத்தான் பாக்கியிருக்கும்

தலாக்குச் சொல்லித் தீர்ந்துவிட்ட பெண்ணை மார்க்க விதிப்படி செய்யாமல்த் தன்னுடைய இஸ்டப்படி யவளைச்சேர்த்துக்கொண்டால் அது வினுவாயிருக்கும் அதிற் பிறக்கிற பிள்ளைகள் ஹறுமாயிருக்கும் (இன்னும்) ஒருவன் மூன்று தலாக்குச் சொல்லிவிட்டு நான் ஒருத்தலாக்குத்தான் சொன்னே னென்று பிரட்டினவனும் சினுச்செய்த மூதேவியாவான் ஆண்டவன் நம்மை இதைவிட்டுக் காப்பாற்றுவானுக ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

இத்தாவின் பயான்.

தலாக்குடைய இத்தாவாகிறது நாட்டான் மகளுக்கு மூன்று ஹய்லாயிருக்கும் அல்லது ஹயலு காணுதவளா யிருந்தால் மூன்று மாதமாக யிருக்கும்.

மவுத்துக்கு இத்தாவாகிறது (௪) மாதமும் (௰) நாளுமா யிருக்கும் பெண்பிள்ளையைச் சேர்க்கை செய்கிறதர்க்குமுன் இறந்தாலும் அல்லது பின் இறந்தாலும் சரி சிறியபிள்ளையானாலும் பெரியபிள்ளையானாலுஞ் சரி.

இனி அவள் ஹமலாயிருக்கிற காலத்தில் அவளை அவன் தலாக்குச் சொன்னாலும் அல்லது இறந்தாலும் அவளுக்கு யித்தாவாகிறது குழந்தை பெறுகிறதாகயிருக்கும்.

இத்தாத் தீருகிறதர்க்கு முன் யின்னமொருவன் அவளை நிக்காகு யெழுதுகிறது ஹறாம் நம்மள் தேசங்களில் மவுத்தானவர்களுக்காக நாற்பது நாளைக்குமாத்திரம் வீட்டு வாசலில் ஓலைச் செத்தைகளை வைத்து மறைக்கவும் வெளியில் வராமல்த் துப்புரவு கேடாயிருக்கவும் நாற்பதா நாள் ஆற்றிற் போய் முழுகவும் இத்தாத் தீர்ந்து போச்சுதென்று யெண்ணிக்கொள்ளவுமா யிருக்கிறார்கள் அதினால் அவள்பேரில் விதியாகிய (நாலு) மாதமும் (பத்து) நாளான இத்தாத்தீருது.

ஏனென்றால் குறுஆன் ஷரீபிலேயே புருஷன் மவுத்தானபெண்பிள்ளைகள் (நாலு) மாதமும் (பத்து) நாளு மிருக்கும்படி கலப்பறுதலாக அல்லாகுத்தஆலா திருவுளம்பற்றி யிருக்கின்றான்.

புருஷ னிறந்த பெண்பிள்ளை கொஞ்சமாவது ஜீவஜில்லாமல் இரந்து தின்னுகிறவளாக யிருந்தால் உச்சிநொடுத்து உள்ளங்கால் மட்டிலும் மூடிக்கொண்டு அதிகம் பேசாமல் இரந்து அல்லது கூலிவேலை செய்து அன்றன்றைக்குக் காணுமட்டிலுஞ் சம்பாதித்து இவள் யெந்தவீட்டி லிருக்கும்போது புருஷன் மவுத்தானானோ அந்த வீட்டிலேயே இத்தா யிருக்கவேண்டும்

தலாக்குச் சொல்லி இத்தா யிருக்கிற பெண்பிள்ளைக்கு அன்னவஸ்திரங் கொடுக்கிறது புருஷன்பேரிற் கடமை.

இத்தாயிருக்கிற பெண்பிள்ளை யழகான வாஸ்ட்யாபரணங்களை யணியாம லிருப்பதும் மணம் பூசாம லிருப்பதும் சுருமாப் போ

டாமலிருப்பதும் தங்கடமன்றியே யெண்ணை தேய்க்காம லிருப்பது ம் மருதோன்றி தடவாமலிருப்பதும் குங்குமப்பூச் சாயமுள்ள சீலை யை யுடுத்தாம லிருப்பதும் வாஜிபு,

தங்கடத்திற்க்காக வெண்ணை தேய்த்துக்கொள்கிறதும் அழகி ல்லாத்த சேலைகளை யணைகிறதும் குற்றமில்லை தானிருக்கிற வீட் டைவிட்டும் வெளியில் வராம லிருக்கிறதும் தன் சத்தம் பிறனுக்கு த் தெரியாமலும் தன் முகம் பிறனுக்குத் தெரியாமலும் இருக்கிற து வாஜிபு,

அவளை நிக்காகு வெழுத கருமானவர்கள் முகத்தில் முழித் தாற் குற்றமில்லை சிறிய தகப்பன் பெரிய தகப்பன் மக்களிலும் சிறியதாய் பெரியதாய் மக்களிலும் பூலூக்காகிய ஆண் பிள்ளைகள் முகத்தில் முழிக்கிறது ஹறாம்.

நம்மள் தேயங்களில் இத்தாவிருக்கிற வீடுகளில் பெண்பிள் ளைகள் அநேகம் பிதுகத்தான வேலைகளை நடத்துவார்கள் அதைய றிந்தபெயர்கள் தட்டி விலகவேண்டியது கடமை துப்புரவு கேடா னாற் குளிக்கிறது கடமை சில பெண்பிள்ளைகள் துப்புரவு கேடா னாலுங் குளிக்கா திருப்பார்கள் அப்படியான வீட்டில் அல்லாவு டைய லஃனத்தும் மலக்குகளுடைய லஃனத்தும் ஸாலிகான பெ ரியோர்களுடைய லஃனத்தும் இறங்கும்.

இத்தாத் திருகிறதற்க்கு முன் னந்தப் பெண்பிள்ளையை யின்ன மொருவனுக்குப் பேசித் திட்டஞ்செய்து வைக்கப்படாது இந்த ம சாலாக்கள் (றத்துல் முகுத்தார்) முதலானகித்தாபுகளில்வருகின்றது.

பால்குடியின் பயான்.

சிறு குழந்தை பிறந்து (இரண்டனா) வருடம்வரையிற் பா ல் கொடுக்கிறதாகும் (இரண்டனா) வருடத்திற்க்கு மேல் ஒருநாளா வது பால் கொடுக்கிறது ஹறாம்.

நமது இமாம் அபூகனீபா றகிமகுல்லா அவர்களின் இரண்டு கலீபாவான ஆபூயூசுபு முகம்மது றகிமஹுமல்லா அவர்களிடத்திலும் இமாம் ஷாபியீ றகிமஹுல்லா அவர்களிடத்திலும் (இரண்டு) வருடம்வன்ராயிற்றுன் பால்கொடுக்கலாம் அதற்க்குமேற்கொடுக்கப்படாது,

ஆதலாற் குழந்தைகளே இரண்டு வருஷம் ஆகிரதர்க்கு முன்பாகவே தாய் தகப்பன் அக் குழந்தையைப் பால்குடி மறக்கச் செய்யவேண்டும் யேனென்றால் அக்காலம் வருகிறதர்க்கு முன்பாகவே மறக்க வைக்க வில்லையானாற் காலஞ் சென்றாலு மக்குழந்தை பால் குடிக்கும்படி வந்து சம்பவிக்கும் அப்போது தாய் தகப்பன் குற்றவாளி யாவார்கள்.

இனி யொரு குழந்தை யொரு பெண்பிள்ளையிடத்தில் அதர்க்கு (இரண்டரை) வயசாகிறதர்க்கு முன்பாக வொரு முடக்காவது பால் குடித்திருந்தால் அப் பெண்பிள்ளை யக்குழந்தைக்குத் தாயாகவும் பால் கொடுத்த பெண்பிள்ளையின் புருஷன் யெப்பேர்க்கொத்த புருஷனானால் அவனுடைய காரணத்தாற் பாலுண்டாச்சுதே அப்பேர்க்கொத்த புருஷன் அக்குழந்தைக்குத் தகப்பனாகவும் அவர்கள் மக்கள் சகோதரராகவும் அந்தத் தகப்பனுடைய சகோதரன் சிறிய தகப்பன் பெரிய தகப்பனாகவும் அவன் சகோதரி மாமியாகவு மிருப்பதால் வம்மிசத்தில் முன் சொல்லியிருக்கிற பிரகாரம் நிக்காஹு யெழுதுகிறது ஹறாம்,

இரண்டு வேற்றுமையான குழந்தை ஆண்-பெண் ஒருபெண் பிள்ளையிடத்திற் பால் குடித்தால் அந்த இரண்டையுஞ் சேர்த்துநிக்காகு செய்துவைக்கிறதுஹறாம்,

ஒரு குழந்தை யொரு பெண்பிள்ளை யிடத்திற் பால் குடித்தால் அவளுடைய பிள்ளையையும் பிள்ளையுடைய பிள்ளையையும் நிக்காகு யெழுதுகிறது ஹறாம்,

(இரண்டரை) வருடத்திர்க்கு மேற்சென்றபின் ஒருகுழந்தையொரு பெண் பிள்ளையிடத்திற் பால் குடித்தால் இப்பஞ் சொன்ன ஹுக்குமுகள் அதில்த் தரிபடாது ஆகையால் மிகுந்த வூர்களிற் பால்குடி மசால்லாவைப் பேணமல் நடத்திவிடுகிறார்கள் அதைப் பேணுகிறது பறுலாயிருக்கும் பேணமற் செய்தாற் பாவியாவார்கள்,

இன்னஞ் சிலவூர்களில் ஒரு பெண் பிள்ளை தன்னுடைய மகள் பிள்ளை மகன்பிள்ளைக்குப் பாலைக் கொடுத்துவிட்டுப் பின்னாலே சம்மந்தஞ் செய்யமுடியாமல் வியாகூலப் படுகிறார்கள் அப்படி வராமல் முன்பின் யோசித்துப் பால் கொடுக்கவேணும்,

கண்ட கண்ட குழந்தைகளுக்குக் கண்டகண்ட பெண் பிள்ளைகள் பால் கொடுக்கப்படாது ஆகையால் அல்லாகுத்தஆலா நம்மளெல்லாவரையும் அவனுக்கு வழிப்பட்ட நற்கூட்டத்திற் சேர்த்துவைப்பானாக ஆமீன் யா அற்கமற்றாகிமீன்,

ஸினாவுடைய பாபு.

குறுஆன் சரீபில் ஸினாவுக்கு முடுகாதையுங்கள் அது மிகவுங் கெட்டவேலையா யிருக்குமென்றும் கலியாண முடிக்கிறதர்க்கு முன் ஸினாச்செய்த ஆண்பிள்ளையையும் பெண்பிள்ளையையுஞ் சாட்டையால் நூறு அடி அடியுங்கள் கிறுபைவைத்துப் பாராதையுங்கள் அவர்களைத் தெண்டிக்கும்படியான நேரத்தில் ஜனங்கள் வந்து பாருங்களென்றும் அல்லாகுத்தஆலா திருவுளம்பற்றினான்,

ஹ தீ து.

கலியாண முடித்ததின் பின் ஸினாச்செய்த ஆண்பிள்ளையையும் பெண்பிள்ளையையும் சாகிறவரைக்கும் நாட்டிவைத்துக் கல் லெறியுங்களென்றும் இணைவைத்து வணங்கிற குற்றத்திர்க்குப் பின்னாலே வலுப்பமான பாவமாகிறது தனக்கு ஹறாமான பெண்பிள்ளையினுடைய கெற்பத்தில்த் தன்னுடைய நுத்துபாவை வைக்கிறதைப்போல் வலுப்பமான பாவ மொன்றுமில்லை யேழு வானமும் யேழு பூமியும்

சிஞச் செய்கிறவர்களுடைய அபத்தின் ஞற்றத்தைப் பற்றி லகுனத்துச்செய்வார்கள் நரகவாதிகளும் லகுனத்துச் செய்வார்க ளென்றுங் காபிரான பெண்பிள்ளையுடன் ஸிஞச்செய்து அவளுட னிவனு மிருந்தால் அவன் அவளைப்போலாக யிருக்குமென்றும் நமது நாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிஉசல்ல மவர்கள் திருவாய்மலர்ந் தருளினார்கள்,

றிவாயத்து.

இபுலீசு லகுனஹுல்லா காலைநேரத்தில் அவன் மக்களையழைத்து அவர்களிடத்தில் வுங்களி லெவனுவது வொரு முசுலிமானமனிதனை மிகவும் வழி கெடுக்கிறவ னுண்டாமென்று கேட்பான் அப்போ தொருவன்வந்து நானின்ன மனித னிடத்திற்போய் அவனுக்கு மவன் பெண்சாதிக்குஞ் சண்டை யிழுத்துவிட்டு அவன் அவளைத் தலாக்குச் சொல்லும்படி செய்கிறேனென்று சொல்வான் அப்போது ஈதொரு பெரியகாரியமா அவனுக்கு வேறொரு பெண் கிடையாதாவென்று இபுலீசு சொல்லுவான் அப்பால் வேறொருவன் வந்து இன்ன மனிதனுக்கு மின்ன மனிதனுக்கு மிடையில் பித்துறுவுண்டாக்கி யவர்க ளிருவரின் முகப்பத்தை முறித்து விடுகிறேனென்று சொல்லுவான் அப்போது ஈதொரு கெட்டித்தனமல்ல கொஞ்சநாளையில் ஒன்றுசேர்ந்து முகப்பத்தாகி விடுவார்களென்று இபுலீசு சொல்லுவான் அப்பால் வேறொருவன்வந்து நானின்னானிடம் போய் யவனைக் கெடுத்து சிஞச் செய்யும்படி முயற்சைசெய்து விடுகிறேனென்று சொல்வான் வுடனே இபுலீசு சந்தோஷமடைந்து நீ செய்வதாய் சொன்ன வேலை மிகவு நல்லதென்று அவனைத் தன்னருகி லழைத்துத் தன் கிரீடத்தை யவன் தலையில் வைப்பானென்று ஹதீதில் வந்திருக்கிறது.

றிவாயத்து.

ஜகன்னமென்கிற நரகத்தில் ஜுப்புல் ஹுசுன் யென்று ஒரு வோடை யிருக்கிறது அதி லநேகம் பாம்பும் நட்டுவக்காலியு மிருந

க்கிறது அதில் ஒரு நட்டுவக்காலி கோவேறு கழுதைக்குச் சமமாகும் ஒவ்வொன்றுக்கு யெழுபது முள்ளுண்டும் ஒவ்வொரு முள்ளில் ஒவ்வொரு நஞ்சுப்பை யுண்டும் ஷினைச்செய்தவர்களை யவ்வேர்டையிற் றள்ளப்படும் அதில் கிடக்கிற பாம்பும் நட்டுவக்காலியும் அவனை யதாபு செய்யும் ஒருதடவல் கொட்டினால் அதின் வருத்தம் ஆயிரம்வருடத்திர்க் இருக்கும் பின்பு அந்தத்தசை துண்டாய்விழுந்துவிடும் அவர்களுடைய அபத்திலிருந்து சீளுஞ் சலமுமாக வோடும் அவர்களை மலக்குகள் சாட்டையா லடிப்பார்கள் அடியினுடைய வருத்தம் பொறுக்க யேலாமல் நோகுதே யென்று அழுது சத்தமிட்டால் இந்த அழுகை எங்கே போய்விட்டது சிரித்துக்கொண்டு சந்தோஷமாகப் பெருமை யடித்துச் சினைச் செய்தாயே அல்லாவுக்குக் கொஞ்சமாவது பயந்து வெட்கப்பட்டா யில்லையேயென்றுசொல்லி சபானியாக்கள் கஷ்சாகிய அதாபு செய்வார்கள்.

ஷிக்காயத்து

பனூயிக்றாயீல் கூட்டத்தில் ஒரு ஆபிது (அறுபது) வருடம் ஒரு மலையில் வணங்கிக்கொண் டிருந்தார் மழை பெய் யென்று சொன்னால் வுடனே பெய்யு மப்படியிருக்க ஒருநாள் வெளியில் ஒரு ரொட்டியைக்கொண்டு பூமியைப் பார்ப்போமென்று வந்தார் அப்போது ஒரு பெண்பிள்ளையைக் கண்டு மோகித்துப் பேசி ஷினையில் விழுந்துவிட்டார் அப்பவே போதக்கேடாகி மவுத்தாகிவிட்டார் அவருடைய (அறுபது) வருடத்தின் வணக்கத்தையும் இந்த ஒரு சினையுந் தூக்கிப்பார்க்க சினவுடைய பாவந்தான் மூர்க்கமாகிவிட்டது இச்செய்திகள் (இருசாதென்கிற) கித்தாபில் வருகின்றது.

றிவாயத்து.

சீமான் தனமும் ஷினைவும் ஒரு யிடத்திற் சேர்ந்து ஒன்றுபட்டிருக்கமாட்டாதென்றும் ஒரு வூரில் சினை மிகுதமானால் பேதி யுறிகப்படுமென்றுஞ் சினைச் செய்கிறவனுக்குப் பறக்கத்து மாறிவிடுமெ

ன்றும் அவன் முகத்தில் அருள் மாறிப்போகுமென்றும் மனிதருடைய கல்பிற் கோபமாக்கப்பட்டவ னாகிவிடுவா னென்றும் ஆகிறத்தில் அல்லாகுத்தஆலா அவன்பேரிற் கடிசாகியகோபத்துடன் கேள்விக் கணக்குக் கேட்டு பெரிதான கஷ்டமுண்டாகிய நரகத்தில் அவனை அல்லாகுத்தஆலா சேர்த்துவைப்பா னென்றும் இபுனு அப்பாசுமுதலிய அசுகாபுகள் சொல்லியிருக்கிறார்கள்.

இன்னம் குறுஆன் ஷரீபில் யாராவது ஒருமனிதன் ஒருபாவத்தைச் செய்யப் போகுந்தருணத்தில் அல்லாவுடைய சமுகத்தில் நாம் நின்று இப்பாவத்தைக் குறித்து அவன் கேட்டவுடன் சொல்லவேண்டியது நேரிடு மென்று பயந்து அப் பாவத்தைவிட்டுநீங்கி புசுக்கு மாற்றஞ்செய்து பேணுதலாக யிருப்பானே அந்த மனிதனுக்குந் தானம் சுவர்க்கலோகமாக யிருக்குமென்று அல்லாகு சுபுகானகுத்தஆலா திருவுளம்பற்றினான் ஆகச்சே யெல்லா ஜனங்களும் சினைவப்போலொத்த பெரும்பாவங்களைவிட்டு நீங்கவேண்டியது பறுலு ஐனாயிருக்கும்.

இன்னும் யாராவது ஒரு மனிதன் தன் ஹலாலானபெண்ணிருக்க அதை விட்டுவிட்டுப் பிறர் பெண்பிள்ளையிடத்திற் போனால் புலாச் சோறிருக்க நஜீசைத்தின்றதுபோலும் பாற்சட்டியிற்போட்ட அகப்பையை நஜீசிற் போட்டு மறுபடியும் பாற்சட்டியிற் போட்டதுபோலா யிருக்குமென்றும் ஒரு மனிதன் ஹறாமான நடத்தையொரு பெண்பிள்ளையைச் செய்ய எப்போது நாடினானோ அப்பவே இன்ன ஒருமனிதன் இவனுடைய பெண்சாதி பிள்ளை அக்காள் தங்கை முதலான பெண்டுகளை துற்நடத்தை செய்ய யோசித்துவிடுவானென்றும் முஹயிதுத்துல்லாபு நுசுகத்தில் மஜாலிசு முதலிய கித்தாபுகளில் வருகின்றது.

ஹிக்காயத்து.

ஒரு சாலிகான பெண்பிள்ளைக்கு வொரு புருடனுண்டாயிருந்தார் அவர் நகைகள்செய்து மனிதர்களுக்கு விற்றுக்கொண் டிருக்

கிற தொழிலாகயிருந்தது அப் பெண்பிள்ளைக்கு ஒரு வேலைக்காரன் தண்ணீரெடுத்து முப்பது வருடக்காலமாகக் கொடுத்துக் கொண்டு வரும்போது ஒருநாளாவது அவளை இவன் யேரிட்டுப் பார்க்கிற தில்லை அப்படிக்கிருக்க ஒருநாள் அவன் வீட்டுக்குள்வந்து அப்பெண்பிள்ளையின் கையைக் கடிசாகப் பிடித்து விட்டுப்போனான் அப்பால் வெளியிற்போன புருஷன் வந்தவுடன் நீர் இன்றையத் தினம் யேதாவது ஒரு பாவஞ்செய்த துண்டாவென்று அவள் கேட்க யில்லையென்கிலும் ஒரு அழகான பெண்பிள்ளை யென்னிடத்திற் கைக்காப்பு வாங்கினாள் அவள் கையைக் கடிசாக ஆசையுடன் பிடித்தேனென்று சொன்னார் வும்முடைய வீட்டுப் பெண்பிள்ளையில் யிதர்க் குபகாரமாக நீர் ஒரு முசுலிமான்மனிதன் பெண் பிள்ளையை ச்செய்ததுபோல விஷயமாகிவிட்டதென்று சொன்னாள் அம் மனிதன் மனவருத்தமானார் மறுநாள்த் தண்ணீர் யெடுத்துவிடுகிற வேலைக்காரன் வந்து மன்னிக்கவேணுமென்று நலவுசொன்னான் இவள் வுன்பேரிற் கெடுதியில்லை கெடுதி யெல்லாம் யென் புருஷன்பேரில்த் தானென்று சொன்னாள்.

(ஆதலால்) முசுலிமான சகோதரர்களே இதர்க்காகத்தான் நீங்களும் மனிதர்களுடைய பெண்பிள்ளைகளை விட்டும் பத்தினித்தனமாக யிருந்தால் மனிதர்கள் வுங்களுடைய பெண்பிள்ளைகளைவிட்டும் பத்தினித்தனமாக யிருப்பார்களென்று நமது நாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவாய்மலர்ந் தருளினார்கள் இச்செய்திகள் (நுசுகத்தில்மஜாலிசு) யென்றகித்தாபில்வருகின்றது.

ஹதீது.

கியாமநாளில் யேழு கூட்டத்தார் அறுஷினுடைய நிழலி லிருப்பார்கள் அவர்கட்கு யாதொரு வருத்தமுங் கஷ்டமுங் கிடையாது அவர்களாவது (க - வது) நீதமான இராஜன் (உ - வது) வாலிபமாகயிருக்கிற காலத்திலேயே அல்லாகுத்த ஆலாவுடைய இபாதத்தை யதிகமாக்கினவன் (ங - வது) யெப்பொழுதும் பள்ளி வாயலிலிருந்து இபாதத்துச் செய்யவும் வெளியிற் புறப்பட மனமில்லாம

லு மிருந்தவன் (௪ - வது) அல்லாகுத்தஆலாவை முகப்பத்துவைத்து ஒன்றோடொன்று நல்லறிவு சொல்லவும் நல்லமல்களைச் செய்து நற்புத்தியுடனிருந்தவர்கள் (௫ - வது) இரகசியத்தில் அல்லாகுத்த ஆலாவைத் திக்றுசெய்து தன் பாவங்களை நினைத்து அழும்படியானவன் (௬ - வது) ஒரு அழகான பெண் இவனை வலிருவுக் கழைக்க நான் அல்லாவைப் பயப்படுகிறேன் அந்தவேலைக்கு வரமாட்டேனென்று விலகிக்கொள்கிறவன் (௭ - வது) அல்லாவை நாடி வலதுகையால் இடதுகைக்குத் தெரியாமல் ஸதக்காச்செய்கிறவன் ஆகிய விந்த யேழுகூட்டத்தாரும் சந்தோஷமாகக் கியாமநாளி லிருப்பார்களென்று நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளம்பற்றியதாக அபூகுறைறு றலியல்லாகு அன்கு அவர்களைத்தொட்டும் (சகீகுல் புகாறி சகீகுல் முசிலிம்) யென்ற கித்தாபுகளில் வருகின்றது.

ஆணோடாணும் பெண்ணோடு பெண்ணும்
ஹறும் செய்கிற பாபு.
ஹதீது.

லூத்து அலைகிஸ்ஸலாமவர்களுடைய வும்மத்துகள் செய்த வேலையைச் செய்வானே அப்பேர்க்கொத்தவன்பேரில் அல்லாகுத்த ஆலாவுடைய முனி விறங்குமென்று மூன்றுவிடுத்தம் நபிநாயகம்முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் திருவுளம் பற்றினார்கள்.

இன்னும் யென்னுடைய வும்மத்துகளின்பேரில் நான் மிகுதியும் பயப்படுகிறதாவது லூத்துநபியின் கவுங்களுடைய செய்கையாயிருக்கும் யாராவது பின் துவாரத்தில்ச் சேர்க்கைசெய்யக் காண்பீர்களேயானால் மேலேயுங் கீழையு மிருக்கிற விரண்டு பேரையும் வெட்டுங்களென்று நமதுநாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் திருவுளமானார்கள்.

ஹிக்காயத்து.

ஈசா அலைகிஸ்ஸலாமவர்கள் ஒருகாட்டுவழியாகப் போகும்போது ஒரு மனிதன்பேரில் நெருப் பெரியக்கண்டு தண்ணீ ரெடுத்துவிட்டு அத்தீயை நூற்க நாடினார்கள் வுடனே நெருப்புப் பிள்ளையாகவும் மனிதன் நெருப்பாகவும் இரண்டுபட்டது அப்பொழுது ஆச்சரியமடைந்து ஆண்டவனே பூலோகத்தில் இவர்க ளிருவரு மிருந்த கோலப்படி யாக்கிவை அவர்களின் செய்கையை நான் கேட்கிறதற்கென்று துஆச்செய்தார்கள் அல்லாகுத்தஆலா அவர்க ளிருவரையும் ஹயாத்தாக்கினான் ஒருவன் ஆண்பிள்ளையும் மற்றொருவன் சிறு பையனாகவு மானார்கள் அந்த இரண்டு பெயர்களிடத்திலு முங்களுடைய செய்கை யென்னவென்று ஈசா அலைகிஸ்ஸலா மவர்கள் கேட்டபோது அம்மனிதன் அவர்களைப்பார்த்து அல்லாவுடைய றூகே நான்துன்யாவில் இந்தப் பையனை யுகப்பு வைத்தவனா யிருந்தேன் என்னுடைய யிச்சை யிவனைக் கெட்டவேலை செய்துவிட்டது நானிறந்து அவனு மிறந்தபோது அல்லாகுத்தஆலா ஒரு விடுத்தம் அந்தப்பையனை நெருப்பாக்கிறான் அந்த நெருப்பு என்னைக் கரிக்கிறது மறுவிடுத்தம் யென்னை நெருப்பாக்கிறான் நான் அவனைக் கரிக்கிறேன் இப்படியே கியாமநாள்வரையிலு மெங்களுக்கு அதாபு நடக்குமென்று அந்த மனிதன் சொன்னான்.

ஹிக்காயத்து.

சுலைமான் அலைகிஸ்ஸலா மவர்கள் ஒருநாள் இபுலீசு லகுனதுல்லாயிடத்தில் வுனக்கு வஸ்துக்களில் எந்த வஸ்துனக்கு மெத்தவுகப்பானதாகவும் அல்லா அளவில் மெத்தக் கோபமானதாகவு மிருக்குமென்றுகேட்க ஆண் ஆணோடும் பெண் பெண்ணோடுஞ் சேர்க்கை செய்வதைக்காண அல்லாகுத்தஆலா அளவில் மெத்தக் கோபமானதாகவும் யென்னளவில் மெத்த வுகப்பானதாகவும் வேறொன்று மில்லையென்று சொன்னான்.

ஹதீது.

அல்லாகுத்தஆலா மூன்று பெயர்களுடைய ஸகாதத்துக் கலிமாவைக் கபூல்ச் செய்யமாட்டான் அதில் (க - வது) யேறினவனும்

யேறப்பட்டவனும் (உ - வது) யேறினவளும் யேறப் பட்டவளும் (௩ - வது) அனியாயக்கார சுல்தானுமாக யிருக்கும் (இனி) ஒரு மனிதன் தன்னுடைய யிந்திரியத்தை கையால் வெளிப்படுத்துகிறது சினைவைப்போல் ஹறுமாயிருக்கும்,

ஹதீது

பெண்பிள்ளை பெண்பிள்ளையுடன் சேர்க்கை செய்தாளாகில் இரண்டுபெயருஞ் வினைச் செய்தவளாக யிருக்குமென்று நமதுநாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிஉசல்ல மவர்கள் திருவாய்மலர்ந்தருளினார்கள்.

நம் மனைவர்களையும் இவ்விதமான செய்கைகளை விட்டும் அல்லாகுத்தஆலா காப்பாத்துவாகை ஆமீன்.

கள்ளுடைய பயான்.

குறுஆன் ஷரீபில் மூமினுகியஜனங்களே கட்குடிக்கிறதுஞ் சூதுவிளையாடுகிறதுங் கொடிமரம்போல் நட்டி வணங்கப்பட்ட புத்துகளும் பிரேசுச்சீட்டு விளையாடுகிறதும் ஷெய்த்தானுடைய வேலையில் மிகவுங் கெட்டதாயிருக்கும் நீங்க ளீடேற்றம் பெறுகிறதர்க்காக இப்பேர்க்கொத்த வேலைகளைவிட்டும் நீங்கிக் கொள்ளுங்களென்று அல்லாகுத்தஆலா திருவுளம்பற்றினான்.

ஹதீது.

அல்லாகுத்தஆலாவுடைய லகுனத்துகளின் பேரிலும் அதைக் குடிக்கிறவன்பேரிலும் குடிப்பாட்டுகிறவன்பேரிலும் விற்கிறவன்பேரிலும் வாங்கிறவன்பேரிலும் அதைப் பிழிந்து இறக்கிறவன்பேரிலும் பிழியச்சொன்னவன்பேரிலும் அதைச் சுமந்தவன் பேரிலும் சுமந்துவர வாங்கிவைத்தவன்பேரிலும் அதின் விலையைத் தின்றவன் பேரிலும் இறங்குமென்றும் ஒரு மனிதன் கள்ளைக் குடித்தால் நாற்பது

நாட் டொழுகை கபூலாகமாட்டாதென்றும் மஸ்ஸை வருத்தும்படியா ன தடங்கலுங் கருமாக யிருக்குமென்றும் கள்ளாகிறது பாவ மடங் கலுக்குந் திறவுகோலா யிருக்குமென்றும் நபிநாயகம் முகம்மது சல் லல்லாகு அலைகிஒசல்ல மவர்கள் திருவுளம் பற்றியதாக (முறுசிது) யென்னுங் கித்தாபு வகையறுக்களில் வருகின்றது,

ஹிக்காயத்து

ஒரு கோட்டைக்கு நாலு வாயலுண்டாயிருந்தது அக் கோட் டைக்குட் புகுத ஒருமனிதன்வந்து பார்த்தான் அப்போது ஒருவா யலில் காவல்க்காரன் புத்துகானை வணங்கினால்த் தான் விடுவேனெ ன்று சொன்னான் ஒருவாசலில் கொலைசெய்தால்த்தான் விடுவேனெ ன்று சொன்னான் ஒருவாயலில் ஸினைச்செய்தால்த்தான் விடுவேனெ ன்று சொன்னான் ஒரு வாயலில்க் கள்ளைக் குடித்தால்த்தான் விடுவே னென்று சொன்னான் கோட்டைக்குட் புகுத நாடினவன் இவைகளி ல் யெது லேசானதென்று ஆலோசிக்ககள்ளுத்தான் லேசானதென்று யோசித்துக் கள்ளைக்குடித்தான் அப்பால் வெறி மீறினவுடன் ஸினை வுஞ் செய்தான் கொலையுஞ் செய்தான் புத்துகானையும் வணங்கினான் யெல்லாப் பாவமுஞ் செய்து காபிராகிவிட்டான் இதர்க்காகத்தான் கட்குடிப்பது பாவ மடங்கலுக்குந் தலையாக யிருக்குமென்று நபி நாயகம் முகம்மதுசல்லல்லாகு அலைகிஒசல்ல மவர்கள் திருவாய்மல ர்ந்தருளினார்கள்,.

இவ்விதமாகிய பாவங்கள் வராமல் அல்லாகுத்த ஆலா நம் ம ணைவோர்களையும் காப்பாத்திக்கொள்வா னாகவும் ஆமீன்ஆமீன்ஆமீன்.

கக்குகளின் பிரசங்கம்
தாய்தகப்பனுக்குப் பிள்ளைகள் செய்கிற கக்குகளின் விபரம்.

தாய்தகப்பனுக்குப் பிள்ளைகள் நன்றிசெய்வது கடமை இருவ ரில் ஒருவருக்கர்வது மாற்றஞ்செய்வது பெரும்பாவம் அதபுக் குறை

ச்சடீலாக நடப்பது சிறுபாவம் ஒருவன் யென்னை வணங்கி தாய் தகப்பனுக்கு நன்றி செய்யா விட்டால் அவன் வணக்கத்தை யொப்புக்கொள்ளமாட்டேனென்று அல்லாகுத்தஆலா திருவுளம்பற்றினன்.

இன்னும் ஒருவன் தாய்தகப்பனை யடித்தால் அவனை வெட்டப்படுமென்று தவுருத்துவேதத்தில் வந்திருக்கிறது.

இன்னும் தாய்தகப்பன் பிள்ளைகளுக்குத் துஆச் செய்கிறது ஒருநபி தன் னும்மத்துகளுக்கு துஆக் கேட்கிறதுபோலென்று ஹதீதில் வந்திருக்கிறது தான் தொழுதவுடன் தாய் தகப்பனுக்கு துஆக் கேட்கவேண்டும்.

இன்னும் தாய்தகப்பனுக்குப் பிரிய மாகும்படி செய்வதாவது யாதெனில் கடுமையாகிய யெஜமானுக்குப் பெலகீனமாகிய தாழ்மையான குற்றமுடைய அடிமை பணிவிடை செய்கிறதுபோல்த் தாய் தகப்பனுக்குத் தாழ்ச்சி செய்யவேண்டும் தாய்தகப்ப னிருவருடைய பேச்சுக்குமேல்த் தன்னுடைய பேச்சை மேலாக்கப்படாது தாய் தகப்பனுக்குத் தான் செய்யவேண்டிய பணிவிடையை வேறொருவனைச் செய்யும்படி யேவப்படாது ஆகுமான நன்மையுடைய கருமங்களுக்குத் தாய் தகப்பனுக்கு வழிப்படவேண்டும் தாயினுடைய பாதத்திற்குங் கீழ்ச் சொற்கமென்று வந்திருக்கிறது இன்னு மநேககக்குக ளுண்டாயிருக்கின்றன.

ஹதீது.

இயாராவது வொருவன் தாய்தகப்பனுடைய கபுறைச் சியாறத்துச்செய்தால் அவனுக்கு ஒவ்வொரு அடி யொன்றுக்கும் அல்லாகுத்தஆலா நூறு நன்மை யெழுதுவான் தாய்தகப்பனுக்கு நன்றி செய்து கிருபையாக அவர்களைப் பார்த்தால் அவனுக்கு மக்பூலான வொரு ஹஜ்ஜுடைய நன்மையை அல்லாகுத்தஆலா யெழுதுவானென்று நபிநாயகம் முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் திருவுளம் பற்றினர்கள்.

நூ வ

ஹிக்காயத்து

(றவுனக்குல் மஜாலிசு) யென்கிற கித்தாபில் வருகிறதாவது அசனுல்பசரி இமாம் அவர்கள் சொல்லுகிறார்கள் அது யாதெனில் நானொரு தடவை மக்கத்தில் ஹஜ்ஜுடைய நாளில் தவாபு செய்யும்போது ஒரு மனிதன் ஒரு கூண்டையை முதுகிற் போட்டுக்கொண்டு தவாபுசெய்யவும் சபாமறுவாவோடுகிறதும் இன்னும் ஹஜ்ஜினுடைய அமல்களைச் செய்கிறதுமாக யிருந்தார் அவரை நான் பார்த்து ஆய்மனிதனே ஆண்டவன் விதித்த ஹஜ்ஜுடைய கருமங்களை நிறைவேற்றுகிறபோது அதபுகேடாக வொரு பொட்டணத்தை முதுகிற்போட்டுக்கொண்டு நிறைவேற்றுகிறீரே இது நல்லதல்லவேயென்று சொன்னேன் அதர்க்கு அவர் யென்னைப்பார்த்து நாயகமே நான் அதபுகேடான வேலை செய்யவில்லையென்கிலும் அதாகிறது என்னுடைய தாயாகயிருக்கும் அவர்களுக்கு நான் செய்யவேண்டிய கிதுமத்தைச் செய்வதுடன் ஹஜ்ஜுடைய கடமை எனக்கு வந்துவிடுகிறபடியால் இதுபோல் யேழு ஹஜ்ஜுடைய நாள்க்களிலும் என் தாயை முதுகிற் சுமந்தவனாகவும் அவர்கட்கும் ஹஜ்ஜுடைய பதவி கிடைக்கட்டுமென்று செய்துவருகிறேன் ஆகச்சே இப்படி நான் செய்தால் யென்னுடைய தாய்க்கு நான் செய்யவேண்டிய ஹக்குகள் நிறைவேறுமாவென்று கேட்டார் இப்படிப்போலவும் பொழுதுவுதயமாகிற யெல்கையிலிருந்து அது அஸ்தமிக்கிற யெல்கைவரையும் நீர் சுமந்து கிதுமத்துச் செய்தபோதிலும் நீர் வும்முடைய தாய் கெற்பத்தி லிருக்கும்போது வொருதரம் புரண்டிருப்பீரே அப்போது அவள் பட்ட வருத்தத்தினுடைய ஹக்கு நிறைவேறமாட்டாதென்று நான் சொன்னேன்.

(ஆய்) முசுலிமாகிய வுடற்பிறப்பான ஜனங்களே நம்மனைவோரையும் தாய்தகப்பனுடைய ஹக்கை நிறைவேற்றி வைத்தார்களே அப்பேர்க்கொத்த கூட்டத்திற் சேர்த்து நமது பாவங்களையும் பொறுத்து நம மனைவோரையும் நற்பதவியிற் சேர்ப்பானாக ஆமீன்.

பெண்சாதி நடக்கவேண்டிய ஹக்குகள்,

ஒரு பெண்பிள்ளை தன் ஸினக்காரனைகாணவுந் தாய் தகப்பனைக்காணவும் புருஷனுடைய விதியையுஞ் சங்கையையும் முகப்பத்தையும் பெரிதாகக் காணவேண்டும் தன் புருஷனுடைய வீட்டின் அலுவல்களைத் தான் பொறுப்பாகப் பார்க்க வேண்டும் யேதாவது யாருக்குங் கொடுக்கிற கருமத்திலும் வெளிப்புறப்படுகிறதிலும் நபில் நோன்பு பிடிக்கிறதிலும் புருடனிடம் வுத்திரவுபெற்று நடத்தவேண்டும் முக்கியமான காரியத்திற்க்காக வெளியே போகப் புருஷனிடம் வுத்திரவு பெற்றுக் கேவலமான பிடவை யுடுத்திப் பிறலுக்கும் அறிந்த மனிதனுக்குந் தெரியாவண்ணம் தன்சத்தம் வெளிக்கிடாமல் ஆண்பிள்ளை புளக்கமில்லாத வழியாய்ப்போகிறது குற்றமில்லை யெங்கினும் தனிவழி போகலாகா (பின்னர்) பிறல் மனிதனைப்பார்க்கவும் அவர்களை நசல் மினவவும் பலசனங்கள்கூடிச் சிலநேரங்களில் பசாதுண்டாக்கிறபடியால் விருந்துண்கப்போகிறதற்க்கும் புருசன் உத்திரவு கொடுக்கப்படாது அந்த விருந்து கொடுக்கிறவன் நிக்காஹு யெழுதக் கருமானவனாக யிருந்தாலுஞ் சரி மேலே கூறியபடி போக வுத்திரவு கொடுப்பானாகில் இரண்டு பெயர்களும் பாவியாவார்கள்,

இன்னும் வீட்டிலிருந்து மதிலெட்டிப்பார்த்துக்கொண் டிருக்கக்கூடாது அதிலனேகங் கெடுதியுண்டாம் புருஷன் சுகம்பெறுகிறதற்க்காகத் தன்னைத் துப்புரவாக அலங்காரமாக்கி வைக்கவும் வுள்ளிலும் வெளியிலும் புருஷனை நோய்வினை செய்யப்படாது அப்படி நோய்வினைசெய்தாற் பாவியாவாள்,

அவள் யெந்தநேரத்தில் ஹய்லைவிட்டுந் துப்புரவா யிருப்பாளோ அந்த நேரத்தில் புருஷன் சுகத்துக்கழைத்தால் வுடனே ஹாஜராகவேண்டும் அல்லத் தட்டினால் நரகவாதியாவாள் புருஷனுக்குக் கடுகடுப்பான குணத்தைக் காட்டப்படாது புருஷனுக்கு மனவ

ருத்தம் வரும்படிசெய்யப்படாது புருஷன் உச்சிதொடுத்து உள்ளங் கால்வரையில் சீழும் சலமாயிருந்து வோடி யவள் நாவால்வழித்தெ டுத்தாலும் புருஷன் ஹக்கை நிறைவேற்றினவ ளாகமாட்டாள் மறு படியு மவள் பணிவிடை செய்யவேண்டியதுதா னிருக்கிறது.

ஸாலிகான பெண்பிள்ளையின் அடையாள மாவது யெதைக் கொடுத்தாலும் இதுதான் நமக்குச் சீமான்தனமென்றெண்ணிக் க ஷுக்துச் செய்கிறவளாகவும் தனக்கு ஆபரணம் பத்திரித்தனமா கக் காணுகிறவளாகவும் பறுலான வணக்கங்களை நிறைவேற்றியபி ன் புருஷனுடைய பணிவிடைதான் பெரிதென் றெண்ணினவ ளா கவும் அவளுடைய யெண்ணம் மவுத்துக்கு நல்ல அமலைச் செய்ய வேணுமென்ற யெண்ண முடையவளாகவு மிருக்கிறதாம்.

ஹதீது.

ஒரு பெண்பிள்ளை தன்பேரில் விதியான ஐங்தொகுத்துத்தொ ழுகையுந் தொழுது றமலான்மாத்தைய நோன்பும் பிடித்து அவள் மானத்தையுங் காத்து அவள் புருஷனுக்கு வழிப்பட்டால் அல்லா குத்தஆலாவின் சோற்கலோகத்திற்கு யெந்த வாசல்வழியாகப்போ கவேணுமென்று நாடினளோ அந்த வாசல்வழியாகப் புகுதுவாளெ ன்று நபிநாயகம் முகம்மதுச்ஸல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவு ளம்பற்றினார்கள்.

புருஷன் நடத்தவேண்டிய ஹக்குகள்,

ஒரு மனிதன் தன் பெண்சாதிக்கு நடத்த வேண்டிய கடமை யாகிறது அவன் அவளை அநீதஞ்செய்யாமல் நீதமாக வைத்து நட த்துகிறதும் அன்னவஸ்திரம் கொடுக்கிறதும் வாஜிபு,

அதாவது தகுதிபோற் கொடுக்கவேண்டும் அவளைப் படுக்க வீட்டுக்குள்ளொழிய அவளை வெறுக்கப்படாது ஆதலால் பிணக்க முண்டானாற் படுக்கையில்த் தனிக்கவேண்டும் படுக்கைவீட்டைவி ட்டு அவளும் அவனும் வெளிப்படக்கூடாது அவளுடைய கோ

பம் கடிசாகிவிட்டால் (ஐயு ஹற்றிஜ-ஸ-ன்ன் ஜீஸ-ல் கபீஸ-ல் முகு பிது வுகுறுஜ- மின் ஐஸதின் தையிபின்) யென்று சொல்லி அவளு டைய இரண்டு தோட் புயத்திர்க் கிடையில் அவன் முன்கையால் அடிக்கவேண்டும் அப்போது ஷைய்த்தான் அவளை விட்டும் ஓடிப் போய்விடுவான்.

இன்னம் பெண்சாதிகளை நலவுகொண்டு நடத்தி நற்குணமாய்ப் புளங்கி நோய்வினையைப் பொறுக்க வேண்டும் அப்படி யவளு டைய கெட்டகுணத்தின்பேரில் சபூர்செய்தால் யெழுபதுஷகீதுடை ய தவாபு கிடைக்கும்.

இரண்டு பெண்சாதி யிருந்தால் படுக்கையிலும் அன்னவஸ்திர த்திலும் ஒருப்போல நடத்தவேண்டும் சிலர் பேரில் முகப்பத்தாயு ம் சிலர்பேரில் முகப்பத்துக் குறைச்சலாயு மிருக்கப்படாது பிறல் ப் பெண் பிள்ளையைக் கலந் துறவாடக்கூடாது.

இன்னும் அவள் வெளியிற் புறப்படப் பார்த்திருக்கப் படா து அவளுடைய மலஞ்சலத்திர்க்கு யிடங் கட்டிக் கொடுக்கவேண் டியது கடமை யாராவது ஒரு பெண்பிள்ளை வெளியில்வர யின்ன மொருவன் கண்டாற் கனவில் ஷெய்த்தான் இவளுடைய கோல மாகப்போய் அவனுடன் சேர்க்கை செய்து விடுவான் அவள் அலங் காரமாகப் பிறல் மனிதர் பார்க்கும்படி வெளிப்புறப்படப் புருஷன் ஒன்றுஞ்சொல்லாமற் பார்த்திருந்தாற் கூட்டிக்கொடுத்தவனுகி விடுவா ன் சொற்கலோகத்துடைய வாசலில் சொற்கமே கூட்டிக் கொடுத்த மூதேவிக்கு நீ ஹறுமாயிருக்குமென்று யெழுதப்பட் டிருக்கிறதாய் நபிநாயகம் முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளம்ப ற்றினர்கள்.

ஒரு பெண்பிள்ளை வீட்டைவிட்டுஞ் சிங்காரித்துப் புறப்பட் டால் ஷெய்த்தான் கைதட்டிக் குரவையிட்டுக் கூடத் தொடருவான் அவளைப் பார்த்தவனெல்லாம் ஸினச் செய்தவர்களுடைய குற்றத்

திற் சேருவான் அவள்பேரிலே அல்லாவுடைய முனிவும் மலக்கு களுடைய முனிவும் ஸாலிகான மனிதர்களுடைய முனிவும் வீடு வந்து சேருகிறவளாயி லிறங்கிக்கொண்டே யிருக்கும்.

ஒரு பெண்பிள்ளையுடைய காரணத்தால் தகப்பனும் புருஷ னும் பிள்ளையுஞ் சகோதரர்களும் அவளுடன் நரகஞ்சேர்வார்களெ ன்று, ஹதீது வந்திருக்கிறது இச்செய்திகள் (றத்துல்முகுத்தார் இ ருசாது துற்றத்துன் நாசிகின் றுசுகத்தில் மஜாலிசு) இந்தக் கித்தா புகளில் வருகின்றது.

ஹிக்காயத்து.

மூசா அலைகிஸ்ஸலா மவர்களுடைய காலத்தில் ஒரு பஞ்சம் வந்தது வுடனே ஜனங்களெல்லாந் துக்கமடைந்து பசியினுலிடைந்து மூசா அலைகிஸ்ஸலா மவர்களிடத்தில் மழை பெய்யும்படி துஆச்செ ய்யுங்க ளென்று சொல்ல நீங்க ளெல்லோர்களும் யென்னுடைய (தூறி சினமலைக்கு) வாருங்களென்று கூட்டிக் கொண்டு மலையிற் கொஞ்சம் யேறின்வுடன் பாவஞ் செய்தவர்களெல்லாம் யென்னுட ன் வரவேண்டாமென்று சொல்ல ஜனங்களெல்லாம் ஒரு ஒத்தை க்கண் மனிதனைத்தவிரத் திரும்பிவிட்டார்கள் அவனைப் பார்த்து ஆ ய் பறுக்குல் ஆபிதென்கிற மனிதனே நான் சொன்னது காதுக்கு க்கேட்கவில்லையாவென்று சொல்ல நான் பாவஞ்செய்யவில்லை யெனி லும் தெருவழியாய்ப் போகும்போது ஓர்நாள் ஒரு வீட்டுவாயல் த்திறந்திருந்தது இந்த மங்கிப்போன கண்ணால் ஒரு ஜடலத்தைப் பார்த்தேன் அந்த ஜடலம் ஆணென்றும் பெண்ணென்றும் எனக் குத் தெரியவராது வுடனே நீயென் ஜடலத்தி லுள்ளதா யிருக்கப் பாவஞ் செய்துவிட்டாயே நீ யென்னுட னிருக்கப்படாதென்று எ ன் கண்ணைப்பரர்த்துச் சொல்லிப் பிடுங்கித் தூரயெறிந்துவிட்டேன் நான் பார்த்தது பாவமென்கிறதா யிருந்தாற் சொல்லுங்கள் போய் விடுகிறேனென்று சொன்னார் நீர் ஆணென்றும் பெண் ணென்றும் அறியாதவஸ்துவைப் பார்த்ததால் அது குற்றமல்ல நீர்தானே வும

துலக்கையையேந்தி ஆண்டவனிடத்தில் மழைக்குத் துஆக்கேளுமென்றூர்கள், அப்பவே நூய்தாகிய நாயனே யுன்னிடத்திலிருந்கிற கசனை அழியமாட்டாது வுன்னைப் பகிலென்று சொல்ல முடியாது எங்களுக்கு யிப்பவே மழையை யிறக்கென்று துஆக்கேட்டாருடனே மழையானது பெய்துவிட்டது திரும்பி வருகிறதர்க்குட் பூமி சேறுடிவிட்டது யென்று (கஹ-புல் அகுபார்) பேசிவந்தார்கள்.

ஹதீது.

மனிதர்களே பிறல்ப் பெண்பிள்ளையுடன் தனித்திருப்பதை யுங்களுக்கு அச்சம்பூட்டுகிறேன் யென்னுடைய வுயிர் அவனிடந்தரிபட்டிருக்கிறதே அப்பேர்க்கொத்த ஆண்டவனின்பேரில்ச் சத்தியமாக ஒருமனிதன் ஒரு பெண்பிள்ளையுடன் தனித்துப் பேசுகிறதானுல் இரண்டுபேருக்கிடையிலும் ஷெய்த்தா னுழைந்து பஸாத்தாக்கிவிடுவான்.

ஒரு மனிதன் நஜீசிற் புரண்டு நாற்றமாயிருக்கிற கின்சீறைத்தொட்டுப்பிடிக்கிறதைக் காண ஒரு வேற்றுமையாகிய பெண்பிள்ளையின் புயத்தில் இவன் புய் மிடிபடுகிறது மிகவுங் கெட்டதாகயிருக்கும்.

இரண்டு கண் பார்க்கிறது ஸனுவாயிருக்கும் இரண்டுகைதொடுகிறது ஸனுவாயிருக்கும் இரண்டு கால்நடக்கிறதுஸனுவாயிருக்கும்.

இயாராவது ஒருமனிதன் அல்லாவைக் கொண்டும் ஒடுக்கத்துநாளைக்கொண்டும் ஈமான் கொண்டால் வேற்றுமையான பெண்பிள்ளையுடன் தனித்திருக்க மாட்டானென்று நம்முநாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகி ஒசல்லமவர்கள் திருவாய்மலர்ந் தருளினதாக தபுறுனி இமாம்அவர்கள் பேசிவந்தார்கள்.

ஹிக்காயத்து.

அசுமயீ றகிமகுல்லாவைதொட்டும் வருகிறதாவது சில ஜனங்கள் சாமு நகரத்திலிருந்து ஹஜ்ஜுக்கு வருகிற மத்தியில் வனுப்ப

மாகிய திடுக்கத்தைக் கொடுக்கும்படியான ஒரு பதினறடி வேங்கை வழி மறித்துக்கொண்டது அப்போது நான் இதை வெருட்டுகிறதற்கு ஆளில்லையாவென்று ஒரு மனிதனிடங் கேட்க ஆண்பிள்ளையான மனித ரில்லையென்கிலும் ஆயுதங்க ளில்லாமல் வெருட்டும்படியாகிய ஒரு பெண்பிள்ளை யிருக்கிறள் யென்று சொன்னர் நானுமவருமாக அப் பெண்பிள்ளை யிருக்கிற கூடாரத்தி னருகே போனேம் அவர் மகளே கொஞ்சம் வெளியில்வந்து யிந்த வேங்கையைப் போகும்படி சொல்லென்றார் அப் பெண்பிள்ளை தகப்பனே நான் பெண்பிள்ளையாக யிருக்க ஆணுகிய வேங்கைப்புலியைப் பார்க்கவுமக்குச் சம்மதமாவென்று சொல்லி நீர் அந்த வேங்கைப்புலியிடம் போய் வுனக்கு யென்னுடைய மகள் (பாத்திமா) சலாஞ் சொல்லி அல்லாகுத்த ஆலாவின்பேரில் சத்தியஞ்செய்து வுன்னைப்போகும்படிசொன்னுள் யென்று சொல்லும் யென்றனுப்பினுள் அவர்வந்து அப்புலியிடம் இப்படிச் சொல்ல பாதையைவிட்டுந் தூரமாகிவிட்டது யென்கிறதாக (அஸ்மயீ இமாம்அவர்கள் சொன்னுர்கள்.)

{பிள்ளைகளுக்குத் தகப்பன் செய்யவேண்டிய ஹக்குகள்.}

பிள்ளைகளுக்குப் பேசத் திராணி வரும்படியான சமையம் வந்தவுடன் கலிமாச் சொல்லிக்கொடுக்கவேண்டும் விழுபிள்ளையானலுஞ்சரி முந்தியே அழகானபெயர் வைக்கவேண்டும் அது யேதுபோலெனில் ஆண்பிள்ளைக்கு அப்துல்லாஃ அப்துற்றகுமான் அப்துற்றகீம்முகம்மது அகுமது இதுபோலொத்ததும் நபிமார்கள் பெயருமாம் பெண்பிள்ளைகளுக்கு அமத்துல்லா அமத்து றகுமான் பாத்திமா செயனபு இதுபோலொத்ததாம் (பின்னர்) நீங்கள் வுங்கள் பிள்ளைகட்கு நபிமார்கள் பெயர்வையுங்களென்றும் ஒரு வீட்டில் அப்துல்லாஃ அகுமது முகம்மது இப்படி மூன்றுபெய ரிருந்தால் அந்த வீட்டில் மிடிமையும் பலாயு மணுகாதென்றும் ஹதீதில் வந் திருக்கிறது பிள்ளைகட்கு மஷிக்குல் மஹூக்கு காவிலகுலாத்து யென்பதுபோல மார்

க்கத்திலில்லாத பெயர் வைக்கிறதும் ஒட்டகைமுக்கன் குப்பையெ ன்பதுபோல் கீடணமாகிய பெயர் வைக்கிறதும் மக்குறூகுத் தகு நீம் இச்செய்திகள் (தென்பீகுல் காபிலீன்) (முனீறுல் குலூபு) (புஸ் த்தான்) முதலிய கித்தாபுகளில் வருகின்றது.

இன்னும் குறுஆன் ஓதவைக்கவும் தீனுடைய யில்மைப் படி த்துக் கொடுக்கவும் பிள்ளை பிறந்த யேழாநாள்முதல் பத்துவயதுக் குள்ளாக கத்தனுச் செய்யவும் யிதை புலூகுவனாயிற் பிற்படுத்து கிறது மக்குறூகா யிருக்கும்.

இன்னும் ஆறுவயதில் அதபு வருத்தவும் யேழுவயதில் விரி ப்பை மாற்றவம் பத்துவயசில்த் தொழாவிட்டால அடிக்கவும் யெல் லாப் பிள்ளைகளையும் வூண் குடிப்பிற்சரியாக்கவும் நல்லோர்களுடை ய சேருமானத்திற் சேர்க்கவும் பிள்ளை இறந்துவிட்டால் ஒலுச்செய் து இரண்டு றக்கர் அத்துத் தொழுகவும் பிள்ளைகளை யேசாமலும் அதபு கேடாக்காமலுங் கொண்டுவரவேண்டும் வீணருடன் சேராம ற் பிள்ளைகளைத் தட்டி விலக்வேண்டும் இந்த ஹக்கின்பிரகாரம் நட த்தாவிட்டாற் பிள்ளைகள் தாய்தகப்பனுக்குப் பகையராகும்.

இயாராவது ஒரு மனிதனுக்குக் குழந்தை பிறந்து அதர்க்கு நல்லறிவு படித்துக்கொடாமலும் அதபு வருத்தாமலு மிருந்தால் அ ப்பிள்ளைகள் செய்யும்படியான பாவங்க ளடங்கலையுந் தாய்தகப்பன் பேரிலும் யெழுதப்படும் பிள்ளைகட்கு நல் லறிவையுங் குறுஆனை யோதுவதையும் படித்துக் கொடுத்தால் அது வோதும்படியான ஆ யத்துகளில் ஒவ்வொரு அட்சரத்திர்க்குத் தாய் தகப்பன்பேரில் ப த்து நன்மை யெழுதப்படுமென்று நபிநாயகம் முகம்மது சல்லல்லா கு அலைகிவசல்லம் மவர்கள் திருவுளம்பற்றினார்கள்.

ஹிக்காயத்து.

அமீறுல் மூமினீன் வுமறிபுனுகத்தாபு றலியல்லாகு அன்கு அவர்களுடைய காலத்தில் ஒரு சிறுபிள்ளையை விட்டு ஒருமனிதன்

மவுத்தானுன் அதுதொடுத்து ஜும்ஆனாளிரவைத்தவிர மற்ற இரவெல்லாம் அந்த மனிதன் கபுறிலிருந்து வெகுகாலமாக நெருப்புப் புகை யெழும்பிக்கொண் டிருந்தது அவன் குழந்தைக்கு யேழுவயதானவுடனே குறுஆன் ஓதவைத்தார்கள் அப்பிள்ளை பிஸ்மில்லாகிற்றகுமா னிற்றஹீமென்று சொன்னவுடனே கபுறில்வந்த புகை அன்றுமுதல் மாறிவிட்டது யிச்செய்திகள் (றயாஹீனுல் அகியார்) என்கிற கித்தாபில் வருகின்றது.

இன்னம் தன்னுடைய ஆண்குழந்தைகளையும் பெண்குழந்தைகளையும் ஒன்றுபோல் பார்த்து வரவேணும் அதெப்படியெனில் தன்னுடைய ஹயாத்தில் சொத்தைப் பங்கிட்டுக் கொடுத்தால் ஆண்பிள்ளைக்கும் பெண்பிள்ளைக்கும் யேத்தவாட்டமன்றி யொன்றுபோற் பாகித்துக் கொடுக்கவேண்டுங் கூட்டியுங் குறைத்துங் கொடுத்தால் பாவியாவான் ஆனு லிவன் மவுத்தானபின் பெண்குழந்தைக்கு அரைப்பங்கும் ஆண் குழந்தைக்கு முழுப் பங்குமாகப் பாகித்துக் கொடுக்கப்படும் இனி கெட்ட பிள்ளைகளானுல்தான் பாவத்திர்க்கு வுதவிசெய்தவனுகாம லிருப்பதற்காகத் தன்னுடைய சொத்தை நன்மையான விஷயத்திற் செலவுசெய்கிறதுயேற்றம் (பின்னர்) தான் பங்கிடும்போது அந்தக் கெட்ட பிள்ளைகட்கு அன்றாடஞ் செலவுக்குமாத்திரங் கொடுக்கவும் மீதத்தை நற்புத்திவந்தபின் கொடுக்கவும் (இனி) நல்லபிள்ளை இல்முபடிக்கிற வேலையிலிருந்தால் மற்றப் பிள்ளையிலும் அதிகங் கொடுக்கலாம் இப்பிரகாரம் ஆலங்கீறி றத்துல் முகுத்தார் மிஷ் காத்து முதலான கித்தாபுகளில்வருகின்றது,

{ குடல்வாசி ஜனங்களுக்கு செய்யவேண்டிய ஹக்குகள். }

குடல்வாசி ஜனங்களுடன் கலந்துறவாடி யிருக்கிறது வாஜிபு அவர்கள் பசித்திருந்தாற் பார்த்திருக்கப்படாது அவர்களை நோய்வினை செய்யக்கூடாது அவர்கட்கு வுபகாரஞ் செய்யவேண்டும் அவ

ர்களை அடிக்கடி போய் விசாரிக்கவேண்டும் அவர்கள் நசலாளியாயி ருந்தால் நன்றாய் வுபகாரஞ் செய்யவேண்டும் யாராவது ஒருவன் குடல்வாசி ஜனங்களைப் பகைத்தா லவன் வயதை அல்லாகுத்தஆலா சுருக்கிவிடுவான் அவர்களோடு இஷ்டமாக யிருந்தால் வயதைநீளமாக்குவான் யென்று நமது நாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைஹி வசல்ல மவர்கள் திருவுளம்பற்றினார்கள்,

றிவாயத்து.

ஒருநாள் தாவூது அலைஹிஸ்ஸலா மவர்களிடத்தில் இன்னானுடைய மகன் இன்னான் ஆறுநாளைக்குப் பின் மவுத்தாவா னென்று மலக்கல் மவுத்து அலைஹிஸ்ஸலாமவர்கள் சொல்லிவிட்டுப்போ யிருந்தார்கள் அப்பால் வெகுநாளாக அம் மனிதன் ஹயாத்தாயிருக்கிறதைப் பார்த்து மலக்கல்மவுத்து அலைஹிஸ்ஸலா மவர்க ளிடத்தில் இன்னானுடைய மகன் இன்னான் நீங்கள் சொன்னபிரகாரம் மவுத்தாக வில்லையேயென்று தாவூது அலைஹிஸ்ஸலா மவர்கள் கேட்க அவன் முன்னாலே தன் பந்துக்களிடம் பகைத் திருந்தான் நான் தங்களிடஞ் சொன்னபின் கலந்துறவாடிக் கொண்டான் அந்தசபபினாலே அல்லாருத்தஆலா அவனுக்கு இருபதுவயதை நீளமாக்கிவைத்து விட்டானென்று மலக்கல்மவுத்து அலைஹிஸ்ஸலா மவர்கள் சொன்னார்கள்.

அடுத்தவீட்டுக்காரர்களுக்குச் செய்யவேண்டிய ஹக்குகளின் பயான்.
ஹதீது

இயாராகிலு மொருவன் அல்லாவுக்கும் ஒடுக்கத்து நாளுக்கு ஈமான்கொண்டால் அசல்பாகத்காரர்களை நோய்வினை செய்யமாட்டான் அசல்பாகக்காரர்களின் ஹக்காவது அவன் நசலானால் தெரிசிக்கிறதுங் கடன் கேட்டாற் கடன் கொடுக்கிறதும் அவனுக்கு நன்மைவந்தால் சந்தோஷப்படுகிறதும் அவனுக்குத் தங்கடம்வந்தால் ம

னவருத்த படைகிறதும் அவன் வாடயைக்கொண்டு நோயினைசெ
ய்யாதிருப்பதுமாக யிருக்குமென்றும் அவனுக்கு இந்த ஹக்குகளை
க்கொண்டு பேணவிட்டால் கியாமநாளையில் இவனைப்பிடித்து வள
க்காடுவாரென்றும் நபிநாயகம் முகம்மதுநபிசல்லல்லாகு அலைகி ஒச
ல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினார்கள்.

ஹிக்காயத்து.

யஹூக்கூபு அலைகிஸ்ஸலா மவர்களும் அவர்கள் புத்திரசிகா
மணியாகிய யூசுபு அலைகிஸ்ஸலாமவர்களும் ஒருநா ளொருவொட்
டகை இறைச்சியைப் பொறித்துச் சந்தோசமாக சிரித்துப் பசியா
றிக்கொண் டிருந்தார்கள் அடுத்த வீட்டில் ஒரு சிறு குழந்தை இந்
த வாசநுகட்டி யழுதுகொண் டிருந்தது அந்தப் பிள்ளையின் பாட்டி
யானவள் பிள்ளை யழுகிறதைப் பார்த்து அழுதாள் இதுசெய்தி நபி
மார்க ளிரண்டுபெயருக்குந் தெரியமாட்டாது இந்தக் காரணத்தால்
யஹூக்கூபு அலைகிஸ்ஸலா மவர்களை விட்டும் யூசுபு அலைகிஸ்ஸலா
மவர்களை அல்லாகுத்தஆலா பிரித்துவிட்டான் இது யஹூக்கூபு அ
லைகிஸ்ஸலா மவர்கட்குத் தெரிந்தபின் காலமெல்லா மொரு ஆளிட
ஞ்சொல்லி மெத்தையின் மேலேறிப் பசியாற நாட்டமுள்ளவர்களெ
ல்லாம் யஹூக்கூபுடைய வீட்டில் வந்து பசியாறலாமென்று சொல்
லிச் சத்த மிடும்படி தய்யார் செய்திருந்தார்கள்.

எத்தீம்களுக்குச் செய்யவேண்டிய ஹக்குகள்.

எத்தீம்களாகிறது தகப்பனில்லாத குழந்தையா யிருக்கும் குறு
ஆன் சரீபில் யெத்தீம்களுடைய சொத்தைத் தின்னுகிறவர்கள் நெ
ருப்பைத்தான் தின்னுகிறார்களென்று அல்லாகுத்தஆலா திருவுளம்
பற்றினான்.

எத்தீம்களுடைய சொத்தை அநியாயமாக யெடுத்தால் அதற்
க்கு அல்லாகுத்தஆலா வாதியாகிவிடுவான் யெத்தீம்களைக்கண்டால்

அவர்களின் தலையைத் தடவிக்கொடுத்து அவர்கள்பேரி லிரக்கமாகயிருந்து வுபகாரஞ் செய்யவேண்டும் ஒரு மனிதன் எத்திம்களுடைய தலையைத் தடவிக்கொடுத்தால் ஒவ்வொரு முடியொன்றுக்கு பத்துநன்மை யெழுதப்படும் நானும் யெத்திமுக்குப் பிணைப்பட்டவனும் சுவர்க்கத்தில் ஒன்று யிருப்போமென்று காத்தமுல்லன்பியாவாகிய நமது நாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவாய்மலர்ந் தருளினார்கள்.

ஹிக்காயத்து

முன்னோர்களி லொருவர் சொல்லுகிறார்கள் நான் யென்னுடைய ஆரம்பத்தில் பாவம் அதிகஞ் செய்கிறவனாகவும் பெருமை யடிக்கிறவனாகவு மிருந்தேன் அப்படிக்கிருக்க ஒருநாள் தெருவிற் போகும்போது ஒரு யெத்திமைக் கண்டு அதின்பேரி லிரக்கப்பட்டுத் தகப்பனைப்போல வுபகாரஞ்செய்தேன் அன்று இரவையில் படுத்திருக்கும்போது நரகத்திலிருக்கிற மலக்குகள் யென்னைவந்து பிடித்து நரகத்திற்குத் தள்ளிக்கொண்டு போனார்கள் அப்போது அந்த எத்திம்வந்து நான் என்னுண்டவனிடம் போய் வருகிறமட்டிலு மிவனைக் கொஞ்சந் தாமதப்படுத்துங் கொன்றுசொல்ல மலக்குகள் அது கூடாதென்றார்க ளுடனே இவனை விட்டுவிடுங்கள் இவ னந்த எத்திமான குழந்தைக்குச் செய்த வுபகாரத்தால் இவன் குற்றங்களையெல்லா மன்னித்தோமென் றொரு சத்தம்வந்தது அப்பவே விட்டுவிட்டார்கள் நான் முழித்தபின் அதுமுதல் யெத்திமான குழந்தைகளுக்கு அதிக உபகாரஞ் செய்கிறவனாகவும் பாவத்தைவிட்டுந் தௌபாச்செய்கிறவனாகவு மாகிவிட்டேன்.

ஹதீது.

ஏழைகளின்பேரிலும் கைம் பெண்சாதியாகிய புருடனை இறக்கக்கொடுத்த பெண்பிள்ளைகளின் பேரிலும் உபகாரஞ்செய்து தயவாகயிருக்கிறவன் (பீசபீற்) செய்தவனைப்போலவும் பகலெல்லாநோன்பு பிடித்து இரவெல்லா வணங்கினவனைப்போலுமாகயிருக்குமென்று

௩.நாயகம் முகம்மதுசல்லல்லாகு அலைகிஸசல்ல மவர்கள் திருவுளம்பற்றினார்கள்.

௯கம்பெண்சாதி யேழை மிசிக்கீன் இவர்களைத் தூஷணமாகப்பேசவும் அனியாயமாக அடிக்கவுஞ் செய்கிறவர்கட்கு ஸக்கறுத்துவேளையில் (ஈமான்) சறுகுதலாகிவிடுமென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

இசுலாமுடைய ஹக்குகளின் பயான்,

முசுலிமானவர்கள் ஒருவருக் கொருவர் செய்யவேண்டிய ஹக்குகள் (உ௩) அதில் (௧-வது) ஒரு முசுலிமைக் கண்டால் சலாஞ்சொல்லுவதும் ஹதீதில் வந்திருக்கிறது ஒருமுசுலிம் யின்னமொரு முசுலிமுக்குச் சலாஞ்சொல்லி ஜவாபுசொன்னால் எழுபது விடுத்தம் மலக்குகள் அவன்பேரில் சலவாத்துச் சொல்வார்கள் ஆதலால் சலாஞ்சொலவது சுன்னத்து பிறத்திசொல்வது வாஜிபு யெத்தனைவிடுத்தஞ் சந்தித்தாலும் யிடையில் மரம் அல்லது மதில்க் குறுக்கிட்டாலும் மறுபடியுஞ் சலாஞ்சொல்லவேண்டும் அந்த சலாமால் யிசுலாமின் பழகிபறியுதலைப் புதுப்பிக்கிறதை நாடவேணும் முந்தி சலாஞ்சொன்னவர்கட்கு தவாபு அதிகமுண்டு அறிந்தவன் அறியாதவன்பேரிலும் சிறியவன் பெரியவன்பேரிலும் பின்னாலே வருகிறவன் முன்னாலே போகிறவன்பேரிலும் சலாமைத் துவக்கஞ்செய்கிறது மிகவும் யேற்றமாயிருக்கும்,

இனிப் பிறல்ப்பெண்பிள்ளை கிழவியாயிருந்தால் அவன் தும்மினாலுஞ் சலாஞ்சொன்னாலும் பிறத்தி சொல்லவேண்டும் வாலிபக்காரியாயிருந்தால் தன்னுக்குள்ளே சொல்லவேணும் சத்தமிட்டுச் சொல்லப்படாது ஆண்பிள்ளையும் பெண்பிள்ளையுட் னிதுபோலதான்

இனி சலாமைக் கேட்கும்படி சொல்லுகிறது சுன்னத்து பிறத்தியைக்கேட்கும்படி சொல்லுகிறது வாஜிபு கேட்கவில்லையானால் வா

ஜிபு யிறபடாது ஒரு கூட்டத்தின் பேரில் சலாஞ் சொன்னல் எல்லோருஞ் ஜவாபு சொல்லுகிறது நலம் ஒருவன் சொன்னல் வாஜிபு நிறைவேறிப்போகும்,

இனி சலாமுன் அலைக்கும் யென்று சொல்லுகிறது ஆகும் ஆனல் அஸ்ஸலாமு அலைக்கும் யென்று சொல்லுகிறது மிகவும் ஏற்றம் ஜவாபுசொல்வதில் வாவு யென்கிற அட்சரத்தை முற்படுத்தி ஒஅலைக்கு முஸ்ஸலாமென்றுசொல்லவேண்டும் பெலமானசொற்படி (வாவு) இல்லாமற் சொன்னலும் போதுமாயிருக்கும் பிறத்தியை அதிகமாகச் சொல்வது மிகவும் நல்லதாயிருக்கும் அதாவது அஸ்ஸலாமு அலைக்குமென்ருல் பிறத்தி ஒஅலைக்கு முஸ்ஸலாம் ஒறகுமத் துல்லா என்னும் அஸ்ஸலாமு அலைக்கும் ஒறகுமத்துல்லாகி என்ருல் பிறத்தி ஒஅலைக்கு முஸ்ஸலாம் ஒறகுமத்துல்லாகி ஒபறக்காத்துகு யென்று சொல்லுகிறதாக யிருக்கும்·

நிறப்பமாகிய ஸலாமாவது அஸ்ஸலாமு அலைக்கும் ஒறகுமத்துல்லாகி ஒபறக்காத்துகு யென்று சொல்லுகிறது பிறத்தியு மிதுபோலவாயிருக்கும் குறைக்கவுங்கூடாது அதிகமாக்கவுங்கூடாது·

ஸலாமுக்குப்பின் தக்குவாவுடையவனை கைப்பிடித்து முசாபிஹாச் செய்யவேண்டும் முக்கியமாக வுலமாக்கள் ஒலிமார்கள் பெரியோர்களை முஸாபஹாச் செய்து முத்தமிட வேண்டும் வுலமாக்களுடைய முட்டுக்காலைப் பிடிக்கவேண்டும் ஸபரில்னின்று முன் னேக்கி வந்தவனைக் கழுத்தைக் கட்டி யணையவேண்டும்.

(உ-வது) தும்மினவன் அல்கம்து லில்லாகி யென்று புகழ்ந்தவுடனே கேட்டவன் யெறுகமுக்கல்லாவென்று பிறத்தி சொல்லுகிறது வாஜிபு பிறத்தி சொன்னவனுக்குத் தும்மினவன் கொபறல்லாஹு-லி ஒலக்கும் யென்ருவது அல்லது யெஹ-திக்கு முஸ்லாஹு ஒயுஸிலி கு பாலக்கும் யென்ருவது சொல்லுகிறது முஸ்தகப்பு அல்லாகுத்த ஆலா தும்மலை யுதந்திருக்கிருன் கொட்டாவி யென்னும் வாயால்விடும் நெடுஞ்சுவாசத்தைப் பொருத்தங் கெட்டிருக்கிருன் அவன் யேனு

மானமட்டுங் கொட்டாவியைத் தடுத்து அவூதுசொல்லவும் கொட்டாவியிட்டால் ஷயித்தான் அதில்நின்றுஞ் சிரிப்பான்.

(௩-வது) ஒரு முசுலிமானவன் தனக்கு வுவப்பானதை மற்றொரு முசுலிமுக்கு வுவப்பாகிறதும் அவனுக்குப் பொருத்தக்கேடானதை மற்றொருவனுக்குப் பொருத்தக்கேடாகிறதுமா யிருக்கும்,

ஹதீது.

ஒரு மூமினுகிறவன் மற்றொரு மூமினுக்கு ஒன்றை யொன்று பெலவந்தமாக்குமே அப்பேர்க்கொத்த சுவரைப்போலா யிருக்குமென்று வந்திருக்கிறது.

(௪-வது) ஒரு முசுலிமை வேதனைசெய்யாம லிருக்கிறதும் (ஹதீது) முசுலிமாகிறவன் அவனுடைய கையைவிட்டும் நாவை விட்டும் மற்ற முசுலிமானவர்கள் சலாமத்துப் பெற்றார்களே அப்பேர்க்கொத்தவனாக யிருக்குமென்று வந்திருக்கிறது.

(௫-வது) ஒருவர்பேரிலும் பெருமை யடியாமல்த் தாழ்மைசெய்கிறதும் (ஹதீது) ஒரு மனிதனுடைய கல்பில் அணுவளவாவது யீமானிருந்தாற் சொற்கம் புகுதுவான் அணுவளவாவது பெருமை யிருந்தால் நரகம் புகுதுவான்யென்று வந்திருக்கிறது,

(௬-வது) கோட் சொல்லாமல்க் கோட் கேட்காமலிருக்கிறதும் (ஹதீது) கோட்சொன்னவன் சொற்கம் புகுதமாட்டானென்று வந்திருக்கிறது;

(௭-வது) முசுலிமான மனிதனைக் கோபித்தநாள் முதல் மூன்று நாளைக்குமேல் வெறுக்காம லிருக்கவேண்டும் (ஹதீது) மூன்றுநாளைக்குமேல் வெறுத்தால் இரண்டுபெயருஞ் சொற்கம் புகுதார்கள் தீங்குசெய்தவனுக் குபகாரஞ்செய்தால் இவனுக்கு வரப்பட்ட தீங்கைக் காக்கும் அவனுடைய தீங்கு அவனைச் சேருமென்று வந்திருக்கிறது,

(௮-வது) இயன்றமட்டிலும் யெந்த முசுலிம்களுக்கும் வுபகாரஞ்செய்யவும் (ஹதீது) நன்மைக்கு லாயக்கானவர்கட்கும் லாயக் கில்லாதவர்கட்கும் வுபகாரஞ் செய்யென்று வந்திருக்கிறது,

(௬-வது) மூன்று விடுத்தம் வுத்திரவுதேடாமல் ஒருவர் வீட்டுக்குட் போகப்படாது (ஹதீது) யாராவது ஒருமனிதன் ஒருபெண் பிள்ளையைப் பார்த்தவுடன் கண்ணைமூடினால் அதை இபாதத்தென்று யெழுதப்படுமென்று வந்திருக்கிறது,

(௰-வது) மனிதருடன் அழகான குணத்தைக் கொண்டு கலந்துறவாடி யிருக்கவேண்டும் (ஹதீது) வுனக்குத் தீங்கு செய்தவனுக்கு வுபகாரஞ் செய் வுனக் கனியாயஞ் செய்தவனுக்கு அவன்செய்த குற்றத்தை மன்னித்துக்கொள் யென்று வந்திருக்கிறது.

(௰௧-வது) அறிவாளருக்கும் வயதுசென்ற மனிதருக்குஞ் சங்கைசெய்கிறதும் சிறு பிள்ளைகளின்பேரில்த் தயவாயிருக்கிறதும் (ஹதீது) முசுலிமாகிய நல்லறிவுடையவனுக்குச் சங்கை செய்கிறது அல்லாகுத்தஆலாவை வலுப்பமாக்கி வைக்கிறதினின்றுமா யிருக்கும் பெரியமனிதருக்குச் சங்கை செய்யாதவனும் சிறுபிள்ளையின்பேரிலிரக்கமில்லாதவனும் நம்மைச் சேர்ந்தவனல்லவென்று வந்திருக்கிறது.

(௰௨-வது) யாரைக்கண்டாலும் பளபளப்பான முகத்தைக்கொண்டு அழகான வார்த்தை பேசுகிறதும் (ஹதீது) அல்லாகுத்த ஆலா அமர்ந்த வார்த்தையாகவும் மலர்ந்த முகமாகவு மிருக்கிறவன்பேரில் முகப்பத்து வைக்கிறானென்று வந்திருக்கிறது.

(௰௩-வது) வார்த்தைப்பாடு நிறைவேற்றுகிறதும் (ஹதீது) வார்த்தைப்பாடு நிறைவேற்றுகிறது கடமையா யிருக்குமென்று வந்திருக்கிறது.

(௰௪-வது) மனிதர்களுக்குத் தன்னிலும் மற்றவர்களிலும் நீதம்பேசுகிறதும் (ஹதீது) வுன்னை யடுத்தவனுக்கு நீதஞ்செய் நீ மூமினாகிவிடுவாய் இன்னம் ஒரு மனிதனிடத்தில் மூன்றுகாரிய மில்லாவிட்டால் அவனுடைய யீமான் நிறப்பமில்லை அதாவது மிடிமையாயிருக்கும்போது நலவில் செலவுசெய்கிறதும் தன்னில் நீதஞ் செய்கிறதும் சலா மிகுதஞ் சொல்லுகிறது மென்று வந்திருக்கிறது.

(௰௫-வது) வுடையுங் கோலமும் மேன்மையின்பேரி லறிவிக்கு மே அப்பேர்க்கொத்த மனிதனுக்குச் சங்கைசெய்கிறதும் (ஹதீது) வுங்களிடத்தில் ஒரு சங்கையான மனிதன்வந்தால் சங்கை செய்யுங்கள்யென்று வந்திருக்கிறது,

(௰௬-வது) பிரிந்திருக்கிறவர்களைச் சேர்த்துவைக்கிறதும் (ஹதீது) ஸதக்காக்களி லேற்றமானது பிரிந்தவர்களைச் சேர்த்து வைக்கிறதாயிருக்கும் யென்று வந்திருக்கிறது.

(௰௭-வது) ஐபை மறைக்கிறதும் (ஹதீது) யாராவது ஒரு முசுலிமுடைய ஐபை மறைத்தால் இவனுடைய ஐபை அல்லாகுத்தஆலா துன்யாவிலும் ஆகிறத்திலு மறைப்பானென்றுவந்திருக்கிறது.

(௰௮-வது) மனிதர்களுக்கு சந்தாபம் வரும்படி நடக்காமலிருக்கிறதும் (ஹதீது) ஒரு மனிதன் ஒரு ஜனங்களில் ரகசியத்தை அவர்களுக்குப் பொருத்தமில்லாமற் காது தாழ்த்திக் கேட்டாற் காதில் யீயத்தைக் காச்சி விடப்படுமென்று வந்திருக்கிறது.

(௰௯-வது) ஹாஜத்துள்ள மனிதனுக்குத் தகுதிவா னிடத்தில் சுபாரிசு செய்கிறதும் (ஹதீது) நாவுடைய ஸதக்காவைக்காண யேற்றமான ஸதக்கா வொன்றுமில்லையென்று வந்திருக்கிறது.

(உ௰-வது) ஜனுசாவுக்கு ஆயத்தம்பண்ணி படக்கிறதும் (ஹதீது) யாராவது ஒரு மனிதன் ஒரு முசுலிமுடைய ஜனுசாவுக்குஆயத்தம்பண்ணினல் வுகுதுமலையைப்போல அவனுக்குக் கூலியுண்டு மடக்கிறவனா தரிபட்டால் வுகுதுமலையைப்போல இரண்டு பங்கு தவாபு கிடைக்குமென்று வந்திருக்கிறது,

(உக-வது) பணக்காரர்களைக் கலந் துறவாடாமல் யேழைகளை இஷ்டம்வைத்து யெத்திம்களுக்கு வுபகாரஞ்செய்கிறது ஆனு லவன் தீங்கனுயிருந்தால் வெளிக்குக் கலந்துறவாடுகிறது குற்றமில்லை (ஹதீது) நீங்கள் மையத்துகளிடம்போய் இராதையுங்களென்று நபிநாய

கமவர்கள் திருவுளம்பற்றினார்கள் மையத்து யாரென்று அசுகாபுகள் கேட்கச் சீமான்களென்று திருவுளம்பற்றினார்கள்.

(௨௨-வது) ஒவ்வொரு முசுலிமுக்கும் நல்லறிவு சொல்லுகிறதும் (ஹதீது) முசுலிமானவன் மற்றொரு முசுலிமுக்குக் கண்ணாடியாயிருக்கும் அதிலேதாவது ஒரு ஐபைக்கண்டா லதை அவன் மறைக்கவும் மென்று வந்திருக்கிறது.

(௨௩-வது) ஒரு முசுலிமான மனிதனுடைய ஜடலத்தில் முதவில் வம்மிசத்தில் இன்னமொருவன் அனியாயஞ் செய்யக் கண்டால் த் தட்டிவிலகிறதுமா யிருக்கும்.

ஹதீது

இயாராவது ஒருவன் தன்னுடைய வுடற்பிறந்தானாகிய முசுலிமைக் கார்மானஞ்செய்தால் கியாமநாளையில் யிவனைக் காக்கும்படிக்கு ஒரு மலக்கை அல்லாகுத்தஆலா அனுப்புவான் மென்று வந்திருக்கிறது இந்தச்செய்திகள் கொஸ்ஸாலி இமாம் அவர்கள் மெகியாவுல் வுலூம் மென்கிற கித்தாபிற் சொல்லுகிறார்கள்.

வுஸ்தாதுக்குப் பிள்ளைகள்செய்கிற ஹக்கு.

எப்பொழுதும் ஒஸ்தாதுக்குப் பிள்ளைகள் துஆச்செய்யவேணும் தாய்தகப்பனைக்காண அதினம் பெரிதென்று (ஹதீது) வந்திருப்பதால் அவர்கட்குத் தாய்தகப்பனுக்குச் செய்கிற சங்கையைக்காண அதிகஞ் செய்யவேண்டும் இல்மாகிறது றாகை ஹயாத்தாக்கிவைக்கும் அந்த இல்முக்கு வுஸ்தாது காரணமாக யிருக்கிறார்கள் இருபதிக்கு நாயகமாகிய நம்முடைய ஆண்டவர்கள் முகம்மது நபி சல்லல்லாகு அலைகிஒசல்லமவர்கள் (வுனக்கு வொருஅட்சரத்தைப் படித்துத் தந்தவன் உனக்கு யெஜமானாக யிருக்கும் நாடினால் வுன்னை விற்பான் நாடினால் வுன்னை வுரிமைவிடுவானென்று) திருவாய்மலர்ந்தருளினார்கள்.

வுஸ்தாதைத் தூடணிக்கிறது பெரும்பாவமாக யிருக்கும் (தகு வீமுல்முத்த அல்வி) யென்னும் கித்தாபில் இன்ன மநேகம் ஹக்கு களும் அதபுகளுஞ் சொல்லுகின்றார்கள் அதையும் பார்வைசெய்து க்கொள்ளவும்.

அதபுகளின் பிரசங்கம் தீன்குடிப்பின் பயான்.

தின்னுகிறதின் அதபாவது விருந்தாளியிருந்தாலவர்கட்கு ஒ ஜீபனங் கொடுத்துத் தீர்த்துவிட்டு வலதுகாலை நட்டி யிடதுகாலின் பேரிலிருந்து இந்த வொஜீபனத்தால் இபாதத்திர்க்குப் பெலமுண் டாகிறதர்க்காக வுண்ணுகிறேனென்று நாடி விருந்தாளியல்லாதவர்க ளைக் கூடச்சேர்த்துக் கலாலான ஒஜீபனத்தை முன்பாக சுப்புரு விரிப்பில்வைத்து சிறு சிறு பிடியாகப் பிடித்து ஒஜீபனத்தை முக ந்துபாராமலும் வாயா லூதாமலும் அதபாகயிருந்து பசியாறுகிறத ர்க்கு முன்னும் பின்னும் இருகைகளையுங் கழுகிக்கொள்கிறதும் சூ டான ஒஜீபனங் தின்னுமலிருப்பதும் பசி யாறுவதின் ஆரம்பத்தில் பிஸ்மில்லாகிச் சொல்லிக்கொள்வதும் அதை மறந்துவிட்டால் நினை த்தவிடத்திற் சொல்லுகிறதும் ஒவ்வொருபிடி ஒஜீபனஞ் சாப்பிடும் போதும் பிஸ்மில்லாச் சொல்லுவதும் இப்படி பிஸ்மி சொல்லிக் கொள்வானுகில் கியாமத்துநாளில் கேள்வி கணக்கு அந்த தீனைப் பற்றிக் கேட்கப்படாதென்று (ஹதீது) வந்திருக்கிறது.

இன்னும் அவனுடைய வலதுகை கொண்டுதின்னுகிறதும் அ வன் முன்னுலிருக்கிற ஒஜீபனத்தைத்தவிர மற்றதி லெடுக்காமலிரு க்கிறதும் பசியாறினவுடனே கைவிரல்களைச் சூப்புகிறதும் பாசனை வழித்துச் சூப்புகிறதும் அல்லது கழுகிக்குடிக்கிறதும் இன்னம்அ ந்த பாசனினின்றுங் கீழே விழுந்ததை யெடுத்துத் தின்னுகிறதுங் கனிவர்க்கம் வைத்திருக்கிற பாத்திரத்தில் அதின் கொட்டைகளை வையாதிருக்கிறதும் ஒஜீபனத்தைத் தின்ன ஆரம்பஞ்செய்யும்போ

தும் பசியாறிய பின்னும் வுப்பைத் தின்னுகிறதும் இப்படி வுப்பைக்கொண்டு துடங்கி வுப்பைக்கொண்டு முடித்தால் யெழுபது-வியாதியைத் தட்டுமென்று ஹதீது வந்திருக்கிறது.

இன்னம் பசியாறி முடிந்தபின் அல்லாகுத்தஆலாவை சுக்குரு செய்கிறதும் அதெப்படியெனில் (அல்கம்துலில்லாஹில்லதி அத்அமனீ ஓஅஸ-கா கானீமின் கொய்றி ஹவுலின் மின்னீ லாஹவுல ஓலாக்கூவத்த யில்லாப்பில்லாகில் அலிய்யில் அலீம்) இதாயிருக்கும் இந்த அதபாகச் செய்கிறது சுன்னத்தாக யிருக்குமென்று (புஸ்தானுல் ஆறிபீன்) முதலிய கித்தாபில் வருகிறது.

குடிப்பின் அதபுகள்,

அதாவது தண்ணீர்ப்பாசனை வலதுகையா லெடுத்து பிஸ்மில்லாச் சொல்லி யொரு முடக்குக்குடித்து வெளியில் மூச்சு விட்டு அல்கம்ந்துலில்லாஹி யென்று சொல்லி இரண்டாவது தடவையுங் குடித்து மூச்சுவிட்டு அல்கம்ந்து லில்லாகி றப்பில்ஆலமீன் யென்று சொல்லி மூன்றுவது தடவையுங் குடித்து மூச்சுவிட்டு அல்கம்து லில்லாகில்லதி ஸகானி அதுபன் புறாத்தன் பிறகுமத்திகி யென்று சொல்லவும் பாத்திரத்திர்க்குள்ளே மூச்சுவிடுகிறது மக்றூகு ஆடுமாடுபோற் குடிக்கா திருங்களென்று (ஹதீதில்) வந்திருக்கிறது பசியாறித் தீர்ந்தவுடன் அல்கம்து குல்குவல்லாஹு-வோதி துஆவோதுகிறது யேற்றம்.

இனி விருந்தாளி வந்திருந்தால் அவருக்குச் சங்கைசெய்கிறது வாஜிபுக்கடுத்த சுன்னத்து முவக்கதாவா யிருக்கும் முகத் தாட்சிணையும் பதிலுபகாரஞ் செய்கிறதையும் நாடப்படாது சுன்னத்தைநாடிச்செய்யவேணும் தன் கையால் விருந்தாளிக்கு வேலை செய்யவேண்டிய திருப்பதாற் கூட யிருக்கப்படாது தனக்குப்பிரியமாகவைத்திருக்கிற வஸ்துக்களை அவர்கட்குந் தின்னக்கொடுக்க வேண்டும்.

இன்னம் தங்கம் வெள்ளிப்பாத்திரங்களில்த் தின்னுகிறதுங் குடிக்கிறதும் யெண்ணை தேய்க்கிறதும் ஆணுக்கும் பெண்ணுக்கும் மக்குறூகு·

ஹிக்காயத்து

(குலாசத்துல் மபாக்கிர்) யென்கிற கித்தாபில் வருகிறதாவது ஹவுதுல்லகுலம் செய்யதினா முகியித்தீன் றலியல்லாகு அன்கு அவர்கள் ஓர் வனத்தில் சதுபாகத் திரியுங்காலத்தில்த் தாகம அதிகரித்துக் கொண்டபோது இபுலீசு லகன குல்லா ஒளிவாற் சமைத்த சிம்மாதனத்துடைய கோலமெடுத்து அதினுள்ளிருந்துக்கொண்டு வெள்ளிப்பியாலாவாகிய செம்பில் தண்ணீரைநீட்டி அப்த்துல் காதிறேவும்மைவிட்டும் தக்லிபு யென்ற யேவல் விலகல் முதலானதை விழுத்தாட்டிவிட்டோம் ஆதலா லிதைப் பிடியுந் தண்ணீரைக் குடியுமென்றான் அப்போ தவர்கள் இப்படி நபிநாயகம் முகம்மதுசல்லல் லாகு அலைகிஒசல்லமவர்களைவிட்டும் விழுத்தாட்டவில்லை அவர்களைக்காண நான் நாயனிடத்தில் அதின சங்கை பெற்றவனு மில்லை சீ - போடா - ஷெய்த்தானே யென்றூர்கள் அப்போ தவன் சொல்லுவான் நான் இந்தக் கோலங்கொண்டு ஆயிரம் ஆபிதுகளை வழிகெடுத்துவிட்டேன் இப்போது நீராகிறது வும்முடைய இல்மைக்கொண்டும் யென்னைவிட்டுந் தப்பிக்கொண்டீரென்று சொல்லிவிட்டுப்போனான் நம்மளை சய்த்தானைவிட்டுக் காப்பாற்றுவானுகஆமீன்·

நித்திரையின் அதபுகள்

நித்திரை செய்யுமுன் ஒலுச்செய்கிறது முஸ்தகப்பு (ஹதீது) யாராலது ஒரு மனிதன் ஒலுவுடன் படுத்து நித்திரையில்மவுத்தாகிவிட்டால் ஷகீதுடைய தவாபு அவனுக்குக் கிடைக்கும் படுக்குமுன் ஆயத்துக் குறிசியும் குல்குவல்லாகுவும் குல்அவூது பிறப்பில் பலக்கும் குல்அவூது பிறப்பின்னுசும் ஓதிக் கையில் ஊதி மேலெல்லாந் தேய்த்து அப்பால பாத்திகாவும் ஓதித் தஹஜ்ஜதுத்திர்க்கு மு

ழிக்கவேண்டு மென்கிற நிய்யத்து வைத்து இஷாவுக்குப் பின் கிபு லாப்புற முகமாக பிஸ்மில்லா ஹில்லதீ லா ய ழுற்று ம அஸ்மிஹி ஷய்புன் பில் அறுழி வலாபிஸ்ஸமாயி வஹுவஸ்ஸமீஉல் அலீம்)யெ ன்றுசொல்லி வலதுபக்கம் ஒருச்சாய்ந்து படுக்கிறது முஸ்தகப்பு ப டுத்தபின் இடதுபக்கம் ஒருச்சாய்ந்துகொள்கிறது ஏற்றமாயிருக்கும்.

படுத்ததுமுதல் நித்திரை வருகிறவரை அல்லாஃவை திக்று செய்யவும் முழித்தவுடன் அல்ஹம்து லில்லாஹில்லதி அஹ்யானீ பஃத மா அமாத்தனீ வயிலைஹின்னுஷூர் யென்று சொல்லுகிறது மு ஸ்தகப்பு.

இனி பஜிறுக்குப் பின்னும் அசறுக்குப் பின்னும் மகறிபுக் குப் பின்னும் நித்திரைசெய்கிறது மக்ரூகு இரவையில் முழித்து வணங்கிறவன் லொகாவுக்குப் பின் கொஞ்சம் நித்திரை செய்கிறது முஸ்தகப்பு.

கனவுடைய விபரம்.

நல்ல கனவு கண்டால் நல்லோர்க ளிடத்திற்சொல்லி விபரங் கேட்கவேண்டும் கெட்ட கனவுகண்டால் இடதுபுறம் மூன்று விடு த்தந் துப்பி அதைவிட்டும் அல்லாகுத்தஆலா விடம் மூன்றுவிடுத் தஞ் சர்வற்பாடு தேடவுந் தலம்விட்டுச் சற்றே நகன்று படுத்திருந் தெழும்பி இரண்டு றக்காஅத்து நபில்த் தொழுது அந்தக் கன வை யொருவருக்குஞ் சொல்லாமல்த் தன்னு லியன்றதை ஸதக்கா க்கொடுக்கவும் அப்படிக் கொடுத்தால் அல்லாகுத்தஆலா அந்தத்தீ ங்கைவிட்டுங் காப்பாற்றுவான் கனவிற் சரியான கனவு ஸகர் நேர மாயிருக்குங் கண்ட கனவை அதிகமாக்கிச் சொல்லக்கூடாது.

இனி அல்லாகுத்தஆலாவுடைய அறிவிப்பாற் காணுகிறது றகு மானி யென்னும் மலக்குகள் நல் மாராயத்தைக் கொண்டு அறிவித் தால் மலக்கானியென்றும் நபுசுடைய புறத்தாற் பலபல வஸ்துக்க

ளைக் கண்டால் நபுசானியென்றும் ஷெய்த்தானுடைய புறத்தாற் கண்டாற் ஷெய்த்தானியென்றுஞ் சொல்லப்படும்,

இதில் ஸாலிகான மனிதன் நல்ல கனவு கண்டால் நபித்தனத்தில் (௪௬) றில் ஒரு பங்கென்று ஹதீதில் வந்திருக்கிறது,

இரவையில் நித்திரை செய்வதர்க்குமுன் கண்ணுக்குச் சுறுமா விடுவது கண்வியாதியைத் தீர்க்குமென்றும் யெளும்பும்போ தெல்லாம் மிஸ்வாக்குச் செய்வது நலமாக யிருக்குமென்றும் (ஹதீதில்) வருகின்றது,

உடுப்பு வகையருக்களின் விபரம்,

தனிப்படப்பட்டை யல்லது ஆடை தனிப்பட்டும் பாவு பருத்தியுமா யிருக்கிற புடவைகளை யல்லது பட்டுநூல் அதிகமும் பஞ்சுநூல் குறைவாயு மிருக்கிற புடவைகளைப் பீசபீலில்த்தவிர அணிகிறதும் நாலுவிரல் அகலத்திர்க் கதிகமுள்ள சரிகை யுடுப்புகளை யணிகிறதும் தங்கம் வெள்ளி நகைகளை யணிகிறதும் ஆண் பிள்ளைகளுக்கு ஹறும் இவைகளைப் பாலிக்கில்லாத வாண் குழந்தைகளுக்குத் தாய்தகப்ப னுடுத்தாட்டுகிறது மக்குறூகு,

நாலுவிரல் அகலமுள்ள சரிகையுடுப்புகளை யணிகிறதும் பட்டுக்குறைந்தும் பருத்தி கூடியு மிருக்கிற வுடுப்புகளை யணிகிறதும் வெள்ளியால் ஒரு களஞ்சியில் ஒரு மோதிரம்போடுகிறதும் குற்றமில்லை காரப்பட்டுத் தனியே யிருந்தாலும் குற்றமில்லை,

இனி பெண்பிள்ளைகள் பட்டுடைகள் சரிகையுடைகள் வெள்ளி தங்கத்தாலாய நகைகள் அணிந்துக்கொள்கிறதாகும் யென்கிலும் ஆகிறத்தில் தவாபு குறையும்,

ஹதீது

இபாராவது ஒருவன் துன்யாவிற் பட்டை யுடுத்தினால் அவன் அதை ஆகிறத்தி லுடுக்கமாட்டான் அதை இவடத்தி லுடுத்தின

வனுக்கு ஆகிறத்தில் நசீபில்லையென்றும் தங்கத்தை யொரு கையி லும் பட்டை யொருகையிலும் யெடுத்துவைத்துக்கொண்டு இவை இரண்டும் யென்னும்மத்துகளில் ஆண்பிள்ளைகளுக்கு ஹறுமா யிரு க்குமென்றும் நமது நாயகம் முகம்மதுநபிசல்லல்லாகு அலைகிஓசல் லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினார்கள்.

றிவாயத்து.

ஒருநாள் ஒரு மனிதன் கையில் தங்கமோதிரம் போட்டிரு ந்ததை நபிநாயகம் அவர்கள்பார்த்து கழற்றி யொருவன் நெருப்பின் கங்கைத் தன்கையிற் போடுவானோவென்று சொல்லித் தூரயெறிந்து விட்டார்கள் நபிநாயகம் அவர்கள் போனபின் அதையெடுத்துவை த்துக்கொள்ளுமென்று சனங்க ளம்மனிதனுக்குச் சொல்ல அல்லா வினுணை நபிநாயகம் அவர்கள் கழற்றி யெறிந்ததை நா னொருக்கா லு மெடுத் துட யோகப்படுத்தேனென்று அவர் சொல்லிவிட்டார்.

(இனி) புதிய பிடவைகளைத் திங்கள் - புதன் - வியாழம் - இ ப்பேர்க்கொத்த நாட்களில் வாங்கிக் கொஞ்சங் தண்ணீரில் (இன்னு அன்சல்னு) யென்னுஞ் சூறத்தைப் (பத்து) விடுத்த மோதி யூதி யப்பிடவையிற் றெளித்து வுடுத்தும்போது அவூதும் பிஸ்மில்லா வும் (அல்லாகும்ம லெக்கல் கம்து அந்த கசவ்த்தகு அஸ் அலுக்க கைறகு வெர் கைறமா சுனிஅலெகு வஅவூதுபிக்கமின்சற்றிகி ஓசற் றிமாசுனிஅலெகு) யென்று ஓதி இரண்டு றக்காஅத்து சுக்குறுக்கா கத் தொழுது கொண்டால் அவனுக்குப் பறக்கத்து அதிகமாகும் அனேகந் தவாபு யெழுதப்படு மென்று (சாதுல்முத்தவற்றிகீன்) யெ ன்கிற கித்தாபில் வருகின்றது.

வுடுப்பைக் களைந்தாற் சுருட்டிவைக்கவும் யில்லாவிட்டால் ஷெ ய்த்தா னுடுத்துவான் களைந்ததில்க் கொஞ்சங் தண்ணீர் தெளித்து வைக்கவும் இப்பிரகாரம் (வும்தத்துத் தகுறீர்) யென்கிற கித்தாபில் வருகின்றது.

(இனி) நமது நாயகம் முகம்மதுச்ல்லல்லாகு அலைகிஒசல்ல மவ ர்களுக்கு மிச்சம் வுகப்பானது வெள்ளைப்பிடவை சிலநேரங்களிற் பச்சைப்பிடவை சிலநேரங்களிற் கம்பளி யணிவார்கள்.

சிவப்புக் கீற்றுகள் அல்லது பச்சைக்கீற்றுகள் அல்லது ஊதாக்கீற்றுகள் போட்ட வுடுப்புகள் அவர்களுக்கு மிகவு முவப்பாகயிருந்தது (ஹதீதில்) யாதொருவனுடைய பிடவை மெல்லினமாகயிருந்தால் அவனுடைய தீன்மார்க்கம் பெலக்கேடாகிவிடும் ஆதலால்த் தன் மேனியை வெளியர்க்காத அழுத்தமுள்ள பரும்பிடிப் பிடவை யுடுக்கவேண்டும் பிடவைகளை யொட்டுப்போடுகிற வரையில்த் தள்ளக்கூடாது தள்ளப்பட்ட பிடவைகளை பக்கீறுகளுக்கு வுடுத்தாட்டவு மென்று வந்திருக்கிறது,

(இனி) பிடவை யுடுத்துகிறதில் அவுறத்தை மறைக்கிறதையும் முசுலிமான ஜனங்கள் வுகப்பாகிறதர்க்காக அலங்கார மாக்கிறதையும் நிய்யத்துச் செய்யவேண்டும்,

உடுப்பை யுடுத்தும்போது பிஸ்மில்லாச் சொல்லி யுடுத்தவேண்டும் வுடுத்தியபின் அல்கம்து லில்லாஹில்லதி கஸானி ஹாதா ஒறஸ்க்கனீகிமின் கொயிறி ஹவுலின் மின்னீ ஒலாக்குவ்வத்த) யென்று சொல்லவும் சிறுவாலே இருந்தணியவேண்டும் யாதொரு வுடுப்பையுங் கறண்டைக்காலுக்குங் கீழிறக்கப் படாது அதைக் கெண்டைக்கால்வரை யுயர்த்தவேண்டும் சட்டையை மூந்தி ய[illegible]யவேண்டும் தலைப்பாகு அணிகிறது அமர்த்தியுங் கனதிப்பாடுமாக யிருக்கும் தலைப்பாகுடைய நீளம் யேழுமுழத்திலிருந்து பன்னிரண்டுமுழமும் சிலநேர மதிற்கூடவுங் குறையவும் நபிநாயகம் அவர்கள் கட்டினார்கள் தலைப்பாத் தொங்கலை யொரு சாண்மட்டு மிரண்டுதோட்புயத்திர்க் கிடையில் விடவேண்டும் ஒருபக்கம் விடுகிறதுமாகும்.

நமது நாயகம் முகம்மதுந்பிசல்லல்லாகு அலைகிஒசல்லமவர்கள் யாதொரு பிடவையைப் புதிதாகவாங்கினால், வெள்ளிக் கிழமைப் பகலையில் அணிவார்கள் ஒரு வீட்டைவிட்டு மறுவீட்டுக்குப் போனால். வெள்ளிக்கிழமை யிரவையிற் போவார்கள் தங்கடத்திர்க்காக

ஒருவேளை சம்மணங் கூட்டினவர்களாகவும் மிருதம் வேளைகளில் அத்தஹிய்யாத்துடைய கோலம்போலவு மிருப்பார்கள்.

தலைமுடிவைக்கிறது இறக்கிறதுகளின் பயான்.

ஆண்பிள்ளைகள் தலைமுடி வைக்கிறதும் யெடுக்கிறதுமாகும் பின்னர் தலைமுடிவைத்தால் அதற்கு அநேக சுறுத்துகள் யிருக்கிறது தலைமுடியிற் பாதியைவைத்துப் பாதியை யெடுக்கிறதும் குடிமயிகள் வைக்கிறதும் பிடறியின் அருகுகளை யொதுக்கிறதும் ஹறாம்.

இனி தலைமுடியை இறக்க நாடினால் வெள்ளிக் கிழமையில் குத்துபாவுக்குப்பின் அல்லது அன்றைக்கு முன் இறக்கவேண்டும் தாடியில் ஒரு பிடிக்குமேல் அதிகமானதைத் தறிக்கவேண்டும். தாடியைச் சிரைக்கிறது ஹறாம்.

பெண்பிள்ளை தலைமுடியை வைக்கிறதுவாஜிபு இறக்கினாற் பாவியாகிவிடுவாள் அவளை லஃனத்துச் செய்யப்படும்,

இனி ஆணும் பெண்ணும் நரைத்த ரோமத்திற்கு மஞ்சள்சாயம் சிவப்புச்சாயம் பிடிக்கவேணும். ஆனாற் படைக்களத்திற் பகையிருக்கும் பயங்கரம் பூட்டுகிறதற்கும் பெண்சாதிமார்களுக்கு அல்லது ஜாறியாத்தென்னும் வெள்ளாட்டிமார்களுக்கு அலங்காரமாக்கிறதற்குங் கறுப்புச்சாயங் கட்டுகிறதுமாகும்.

இனி நரையைக் கனதிப்பாடாக்கவேண்டும் அதைப் பிடுங்கப் படாது அது மூமினுக்கு ஒளிவாகவுங் கனதிப்பாடாகவு மிருக்கும் ஆனாற் கொஞ்சம் பிடுங்கிறது குற்றமில்லை.

இனி மீசையைத் தறிக்கிறதும் கீழ்ரோமங் கழிக்கிறதும் கமுக்கட்டு ரோமத்தைப் பிடுங்கிறதும் சுன்னத்து முவக்கதாவா யிருக்கும்.

வுதட்டி னருகு வெளியாகுமட்டிற் புருவத்தைப்போலாகும்படி மேல்மீசையை யொட்டத் தறிக்க வேண்டும் மீசையி னிருபுறத்தையும் விடுகிறது குற்றமில்லை முகத்தின் சிறுரோமங்களை இறக்கிறது ஆகும் மூக்கு ரோமத்தைத் தறித்துவிடவேண்டும் பிள்ளைத்தாடியி னிருபுறத்து ரோமத்தைப் பிடுங்கிறது பித்அத்து,

இனி நகத்தை யறுக்கவேண்டும் அதில் மிகவும் வரிசையானது வலதுகைக் கலிமா விரலைக்கொண்டும் இடதுகைச் சின்னி விரலைக்கொண்டும் இருகாலிற் சின்னி விரலைக்கொண்டுந் துவக்கஞ் செய்து அடங்கலிலும் பெருவிரலைக் கொண்டு முடிக்கவேண்டும்,

இனி மீசையைத் தறிக்கிறது கீழ்ரோமங் கழிக்கிறது கமுக்கட்டு முடிபிடுங்கிறது நக மறுக்கிறது இவை யடங்கலையும் யெட்டு நாளைக் கொருவிடுத்தஞ் செய்துவரவேண்டும் ஜும்ஆவுக்குப் போகுமுன் செய்யவேண்டும்.

இன்னம் நகமறுக்கிறதும் கமுக்கட்டுப் பிடுங்கிறதும் கீழ்ரோமங்கழிக்கிறதும் வியாழக்கிழமையில் யேற்றமென்றும் குளிக்கிறதும் மணம் பூசுகிறதும் வுடுப்பு வுடுத்துகிறதும் வெள்ளிக்கிழமையிலேற்றமென்றும் வந்திருக்கிறது,

இனி இவைகளைப் பதினையந்து நாளைக் கொருதரஞ் செய்கிறதுமாகும் நாற்பது நாளைக்குப் பின்னாலே விடுகிறது மக்ரூகுத் தஹ்ரீம்,

இனித் தன் கோலத்தைத் திருத்துகிறதர்க்காகக் கண்ணாடியில் அல்லது தெளிவாகிய தண்ணீரில் பார்க்கும்போது அல்ஹம்து லில்லாகி அல்லாகும்ம கமா ஹஸ்சன்த கல்கீ பொஹ்ஸ்ஸின் குல்க்கீயென்று சொல்லவேண்டும்,

இமாம் கஸ்ஸாலி றகிமகுல்லாஹ் அவர்கள் சொல்லுகிற தாவது இக்காலத்தில் தலைமுடிவைக்கிறது அலவிய்யாக்க ளென்னும் சாதாத்துமார்களுக்கு அடையாளமாக யிருக்கிறது மற்ற வம்மிசத்தார் வைப்பதுகொண்டு யினம் பிசகிறதினால் சாதாத்தல்லாதவர்கள் வை

க்கிறது மக்குறூகாயிருக்கும் இப்படி தபுசீறு (றூகில்பயான்) யெ ன்கிற கித்தாபில் வருகின்றது.

சபர்போகிற அதபுகளின் பயான்.

சபராகிறது தீனிய்யி யென்றும் துன்பவிய்யியென்றும் இரண் டுவகைப்படும் தீனிய்யி யாகிறது இல்மைத் தேடுகிறதை அல்லது நபுஸைப் பழக்கி நேர் வழியில்த் திருப்புகிறதை,அல்லது தீனிலே பித்தனு வுண்டாகிறதைவிட்டும் வெருண்டோடுகிறதை அல்லதுகா பிருடன் பிசபிற் செய்கிறதை அல்லது ஹஜ்ஜை நாடிப்போகிறதா யிருக்கும்.

ஹதீது.

யாதொருவன் தன்வீட்டைவிட்டு யில்மைத்தேடப் புறப்பட் டால் அவன் வருகிறவரை பீசபீலிலா யிருக்குமென்றும் இன்னும் யாதொருவன் தன் தீனைக்கொண்டு ஒரு பூமியைவிட்டு மறுபூமியள வில் வெருண்டோடினுல் அது ஒரு சாண் தூரமாயிருந்தாலுஞ் சரி அவனுக்குச் சொற்கம் பாத்திரமாகிவிட்டது யென்றும் இன்னும் பீ சபீலிற் காலைநேரம்போகிறது அல்லது மாலைநேரம் போகிறது து ன்யாவைக்காணவும் அதிலுள்ள வஸ்துக்களைக்காண மிகவும் யேற்ற மா யிருக்குமென்று வந்திருக்கிறது,

(இனி) துன்யவிய்யாகிறது பஞ்சத்தைவிட்டு வெருண்டோடுகி றதை அல்லது முதலை அல்லது அதுபோலொத்ததை அல்லது தி க்காகு மற்றக்காரியத்தைத் தேடுகிறதை நாடிப்போகிறதாயிருக்கும்.

இப்படிப் போகிறதில் சுவால் செய்வதை விட்டும் பத்திரமாக யிருக்கிறதையும் பிச்சளத்தின்பேரில் நத்கிறுபை யாகிறதையும் நிய யத்துச் செய்யவேண்டும்,

ஆனுல் சபர் போகிறதர்க்கு வியாழன் - திங்கள் - சனி இந்த நாட்களைத் தெரிந்துக்கொள்ளவேண்டும் காலையிற் போகிறதில் பற்

க்கத்தும் ஜெயமு முண்டாயிருக்கிறது வெள்ளிக் கிழமை கிழக்கு வெளுத்தபின் சபர்போகிறது நல்லதல்ல,

இனி சபர் பிரையாணப்படுமுன் கொஞ்சமாவது ஸதக்காச்செய்யவேண்டும் வீட்டிலே இரண்டுறக்காஅத்துத் தொழவேண்டும் சபர்போய்த் திரும்ப வீட்டுக்குவந்தபோதும் இரண்டு றக்கா அத்துத் தொழவேண்டும் பிசுமில்லாச் சொல்லித் துஆ வோதி குல்யாஅய்யுகல் காபிறூனமுதல் அதையடுத்த கீழ் அஞ்சு சூறத்தையும் ஒவ்வொன்றுக்கும் பிசுமில்லாவுடன் வோதிப் பிரையாணிக்கவும்.

அவனுக்குக் கை கொடுக்கிறவர்கள் (அஸ்தவுதிவுக கல்லாக்க ஆலா தினக்க சவ்வத்த கல்லாகுத்தகுவா வகபற தம்பக்க ஓவச்சஹக்க வில்கைறி கய்துமாகுந்த) யென்று சொல்லவும்,

இன்னும் பிரையாணப்படும்போது வீட்டிலுள்ளவர்கட்கு (அஸ்தவுதிவுக்கு முல்லாஃ ஹல்லதீ லாயுலய்யிகு வதாயி அஹு) யென்று சொல்லவேண்டும் உடற்பிறப்புகளுக்கும் பயணஞ்சொல்லவேண்டும்,

இன்னம் கண்ணாடி சுறுமாக்கூடு மிசுவாக்கு சீப்பு நகமறுக்கிறகத்தி மீசைதறிக்கிற கத்தரி கீழ்ரோமங் கழிக்கிறகத்தி பட்டை கயிறு - ஊசி - நூல் இவைகள் யெடுத்துக்கொள்ளவேண்டும் ஸாலிகான வழித்தோழனையுந் தேடிக்கொள்ள வேணும் நாலுபெயர் கூடிப் போகிறது ஏற்றமென்று வந்திருக்கிறது,

அப்படிக் கூடிப்போனால் அவர்களில் ஆலிமான ஆக்கிலாகிய வொருவனை முதன்மையாக்கவேணும் பின்பு அவனுக்கு ஒரு காரியத்திலும் விரோதஞ் செய்யப்படாது. அந்த முதன்மையானவன் மிகவும் ஸாலிதாகவும் தக்குவா வுள்ளவனாகவும் மானத்தாலும் ஸகாவத்தாலும் மிகவும் நிறப்பமானவனாகவும் கிறுபையால் ரொம்ப மிகுதமானவனாகவு மிருக்கவேண்டும்.

ஊருக்கு வரும்போது தன் வீட்டி லுள்ளவர்கட்கும் முடுகுத லான பந்து ஜனங்களுக்கும் யேதாவது நூதனமான வஸ்துக்களைக் கொண்டு வரவேண்டும்,

வீடுகட்டுவதின் பயான்,

தின் ஹுங்கள் குடியுங்கள் கடப்பாக வீண்செலவு செய்யாதிரு ங்களென்று அல்லாகுத்தஆலா குறுஆன்ஷரீபில்த் திருவுளம்பற்றினு ருகச்சே மனிதன் தனக்குப் போதுமானமட்டிலும் வீடுகட்ட வே ண்டுமேதவிரச் சுண்ணாம்பு செங்கல் முதலாகியவிஷயங்களில் அனி யாயமாய் செலவு செய்யப்படாது.

இனி வீடு கட்டுகிறதாயிருந்தால் அதினுயரம் ஆறு அல்லது யேழுமுழ மிருக்கவேணும் அதின் நீளமாவது அதினக் கடப்பில்லா மல்த் தனக்குப் போதுமானமட்டு மிருக்கவேணும் அதினச் செலவு செய்து பெரிதாகக் கட்டினவன் அதைக் கியாமநாளிற் சுமந்துகொ ண்டுவருவான்,

அல்லாஹு சுபுகானகுத்தஆலா பூமியை ஞாயற்றுக்கிழமை ப டைத்தபடியால் ஞாயற்றுக்கிழமையன்று வீடுகட்டத் துவக்கஞ் செ ய்யவேண்டும் வீட்டுக்கு யெல்கை குறிக்கும்போது காபிர்களிடத்தி ல் சாஸ்திரங் கேட்கவும் பார்க்கவும்படாது காபிர்களைக்கொண்டு ம ஞ்சள் வகையறுக்களைத் தடவி முளையை விணாக நட்டும்படி செய் யப்படாது அதினால் ஈமானுக்குப் பிசகுதல்வந்து சேர்விடும்,

வீடுகட்டும்போது அதிலே அல்லாகுத்த ஆலாவை வணங்கிற தையுஞ் சூடு குளிர் இவைகளை விட்டுக் கார்மானத்தையு நிய்யத்து ச் செய்யவேணும் இப்படி நிய்யத்துச் செய்யவில்லையானால் கியாமநா ளில் அந்தவீடு அவன்பேரிற் சுமையாகிவிடும்,

ஒவ்வொரு நாளடங்கலிலும் ஒவ்வொரு படை கட்டவேணும் ஓரோநாளில் முடிக்கப்படாது கட்டுவதில் மலஞ் ஜலத்திற்கு யிடமு.

ம் ஒலுச்செய்யக் குளிக்க யிடமும் விருந்துக்குத் தானமும் பெண்பி ள்ளைகள் தொழுகிறதர்க்கு யெல்கையும் ஆண்பிள்ளை நபில்த் தொழு கிறதர்க்கு ஒரு தலமும் வைத்துக் கட்டவேண்டும்.

வெள்ளிக்கிழமை இரவையிற் குடி புகுதவேணும் அப்போது ஹறுமான செலவு செய்யப்படாது ஹறுமான வீண்செலவு செய்தா ல் அந்த வீடு ஹறுபாகப் போகிறதர்க்கு அடிந் தளமாக யிருக்கும் வீட்டில் நகாசிவேலை செய்யவும் சிலைகள் யெழுதவும் படாது அப்ப டிச்செய்தது றகுமத்து முதலானது கொடுவருகிற மலக்குகளை வெ ருட்டிவிடும் முன் சொல்லிய சிலைகளில்த் தலையை யெடுத்து விட்டா லும் அல்லது அழித்துப்போட்டாலுங் குற்றமில்லை இதுபோல் ம ரஞ் செடி வுயிரில்லாத்த வஸ்துவை யெழுதுகிறதுங் குற்றமில்லை,

நகாசுவேலைசெய்து திரைப்போட்டிருக்கிற வீட்டில் நமதுநாய கம் முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் புகுதமாட்டார்கள் தங்கள் வீட்டுச்சுவர்களை வஸ்திரங்களைக்கொண்டு மறைக்கமாட்டார் கள் அலங்கரிக்கவுமாட்டார்கள் வீட்டில் ஜவாபிருகங்களுடைய தோ ல்களை விரிக்கமாட்டார்கள் ஆதலால் நாமு மிவ்விதஞ் செய்யாதிரு ப்பதுடன் வீட்டில் நாய் வளர்க்கப்படாது கிடை காவலுக்குள்ள நாயும் வேட்டையாடுகிற நாயும் ஒத்தையான வீட்டுக் காவலின் நா யையும் வளர்க்கிறதாகும் தின்ன ஹறுமான ஜவாபிருகங்களை வள ர்க்கப்படாது.

பறக்கத்துண்டாகிற வகைகளின் விபரம்..

வீட்டையும் அதன் பக்கங்களையுங் கூட்டித் துப்புரவு செய்ய வேண்டும் துப்புரவாயிருக்கிறது ஈமானிலுள்ளதாயிருக்குமென்றும் சிமான்தன முண்டாகுமென்றும் அல்லாகுத்த ஆலாவுடைய முகப் பத் துண்டாகுமென்றும் (ஹதீதில்) வந்திருக்கிறது வீட்டிற் புளங் கப்பட்ட பாசன்கள் துப்புரவாகயிருக்கவேண்டும் துப்புரவு யில்லா திருக்கில்ப் பறக்கத்து மாறிவிடும்

(இனி) முகஞ் சந்தோஷமாக யிருக்கிறதும் மணமாகிய பேச்சும் இபாதத்திற்காக சகர் நேரம் யெழுந் திருக்கிறதும் பஜிறுத் தொழுதபின் பள்ளியிற் றுமதித்துச் சூரிய னுதயமாகிறவரை யிருந்து யிசுருக்குத் தொழுகிறதும் அலம் நஷ்றகு சூறத்தை யோதுகிறதும் இதாவக்கஅத்து சூறத்தை யோதுகிறதும் நபிநாயகம் அவர்கள்பேரில் சலவாத்து மிகுதமாயோதுகிறதும் றிஸூக்கை யிழுத்துக்கொண்டு வரும்.

இன்னம் பறுளுத்தொழுகைகளை யுள்ளச்சப்பாட்டுடன் நிறப்பமாகத் தொழுகிறது றிஸூக்கை யதியமாக்கிறதர்க்குப் பெரிய காரணமாயிருக்கும் இச்செய்திகள் (சிர்அத்து புஸ்தான் வகையருக் கித்தாபுகளில் வருகின்றது,

மிடிமையையுண்டாக்கிற வகைகளின் விபரம்.

அம்மணமாகவும் முட்டுக்குமேற் சீலையை நீக்கிக்கொண்டு நித்திரை செய்கிறதும் அம்மணமாகச் சிறுநீருக்கிருக்கிறதும் ஜுனூபாயிருக்கும்போது வுண்ணுகிறதுங் குடிக்கிறதும் விழுந்த ஓஜீபனத்தைப் பொடுபோக்காய் விடுகிறதும் வெள்ளுள்ளி ஈருள்ளியைச்சுடுகிறதும் வீட்டை இரவையிற்கூட்டித் தூக்கிறதும் குப்பையைவீட்டிற் போடுகிறதும் தாய்தகப்பன் அல்லது மசாயிகுகளுக்குமுன்னுலே நடக்கிறதும் அவர்களுடைய பெயரைச் சொல்லிக் கூப்பிடுகிறதும் சற சறப்பான வஸ்துக்களைக் கொண்டு பல்லுக் குத்துகிறதும் இரண்டு கையைச் சக்கியைப்போட்டுக் கழுகிறதும் வாசற்படியி லிருக்கிறதும் நிலையின்பேரிற் சாய்கிறதும் வுடுத்தாடையை யொன்றுக்கொன்று மாத்திக்கொள்கிறதும் பிட்வை யுடுத்தியிருக்கும்போது தைக்கிறதும் விளக்கை வாயாலூதி நூர்க்கிறதும் உடுத்தியிருக்கிற பிடவையால் முகந் துடைக்கிறதும் உடுத்தியிருக்கிற பிடவையால் மூக்குச் சிந்துகிறதும் வுடுத்தியிருக்கிற பிடவையிற் கொ

ஞ்சத்தைத் தலைக்கு வைத்து நித்திரைசெய்கிறதும் வீட்டில் நூலா ம்படை பிடித்திருக்கிறதை தூக்காமலிருக்கிறதும் தொழுகையைப் பெரடுபோக்காக்கிறதும் பள்ளியில் சுபுகு தொழுதவுடன் தரிபடா மற் போய்விடுகிறதும் காலையிற் கடைவீதிக்கு யோடுகிறதும் பக் கீறுகளை யனியாயஞ் செய்கிறதும் ஒன்றுக் கொன்று தூஷணமான வார்த்தைகளைக் கேலி பரியாசமாகப் பேசி வெடிசிரிப்புச் சிரிக்கிற தும் பேனைக் கொல்லாமலிருக்கிறதும் பாத்திரங்களை மூடாமற்றிர ந்துவைக்கிறதும் தரித்திரமென்னும் மிடிமையை வருத்திவியக்கும்.

இனி வீட்டுக்குட் போம்போது வலதுகாலை முன்னேவைத் து பிஸ்மில்லாச் சொல்லியும் ஆளிருந்தால் சலாஞ்சொல்லியும் வுள் ளே புகுதுகிறதும் ஆளில்லாவிட்டால் குல்குவல்லாஹு ஒருவிடுத் தமோதி யுள்ளே புகுதுகிறதும் வெளியில் வரும்போது இடதுகா லை முன்னேவைத்து (பிஸ்மில்லாகித்தவக்கல்த்து அலல்லா) யென் றுசொல்லி வருவதும் வீட்டுக்குள் மணமான வஸ்துக்களை புகைப் போகிறதும் முஸ்தகப்பு இதனால் மிடிமை நீங்கும் இதுசெய்திகள் (தருலீமுலமுந்தஅல்லிம்) முதலாகிய கித்தாப்புகளில் வருகின்றது.

{ஹலாலாகிய வுயிர்ப்பிராணிகளை யறுக்கிறதின் பாபு}

அறுப்புடைய பறுலாகிறது (௪) ஆகயிருக்கும் அதில் (௧-வது) முடிச்சுக்கும் பதப்புக்கு மிடையி லறுக்கிறது (அறுக்கப்பட்டநரம் புகளாவது) குதவனை மூத்தாம்பட்டை கழுத்து முன்புறத்து மிருப க்கத்திலுள்ள வதுஜமினென்னு மிரண்டு பெருநரம்பு ஆக இந்நா லுமாக யிருக்கும்

(ஆனால்) இந்நரம்பு நாலில் மூன்றை யறுக்கிறதுகொண்டும் கலாலாகும் முடிச்சின்பேரில் அறுத்ததில் இம்மூன்று நரம்புகள் அ றுபட்டாலும் போதுமானது,

ஒரு மனிதன் நாடிக்குங்கீழே முடிச்சுக்குமேலே பிசகாக நரம்புகள் அறுபடும்படி தபகு செய்துவிட்டாலும் போதுமென்று (முஸ்தகுபனி) இமாம் அவர்கள் சொல்லுகிறார்கள் மற்ற இமாம்களெல்லாங் கூடாதென்று சொல்லியிருப்பதாற் பேணிக் கொள்கிறது யேற்றமாயிருக்கும்.

இதெல்லாம் மனிதனுடன் புளங்கும்படியாகிய ஆடு - மாடு - ஒட்டகம் - கோழி - தாரா முதலிய வுயிர்ப்பிராணிகளிலா யிருக்கும் மனிதனிடம் புளங்காத வேட்டை மிருகங்களிலும் அறுக்கிறதற்கிடம்பா டாகாத வெருட்சியான ஆடு - மாடு - ஒட்டகங்களிலும் சரீரத்தில் யெந்த இடத்திலாவது இரத்த மோடும்படி கூர்மையாகிய அம்பு - கல்லு - ஆயுதம் முதலான வஸ்துக்களைக்கொண்டு பிஸ்மில்லாச் சொல்லி யெறிந்தாலுமாகும்,

கிணற்றில் விழுந்து யெடுக்க யேலாமையாகப்போனாலும் பிடிகொடுக்காமல் வெருண்டோடினாலும் கோழிபோலொத்தவைகள் மரத்திற் கொளுகிக்கொண்டு சாகிறதைப் பயந்தாலுங் காயப்படுத்துகிறதுகொண்டு போதுமாகும்.

ஒரு கோழியை யொரு பூனை கழுத்தில் நாலுநரம்பும் அற்றுப்போகும்படி கடித்துக் குரந்து அக்கோழிக்கு வுயிரிருந்தாற் கண்டு மறுபடி அதின்மே லறுத்தால்த் தின்னப்படாது.

(௨-வது) அறுக்கிறவன் முசுலிமா யிருக்கிறது அவன் பிசுமில்லாச் சொல்லும்படியாயும் அறுக்கத் தெரிந்தவனாயுமிருந்து பெண்பிள்ளையாகவும் சிறுபிள்ளையாகவும் கத்தனாச் செய்யப்படாதவனாகவும் பைத்தியகார னாகவுமிருந்தாலும் ஊமையனாயிருந்தாலுஞ்சரி ஆனால் வேட்டை மிருகமாகயிருந்தால் இகுராமில்லாதவனாகவும் ஹறத்திர்க்கு வெளியிலா யிருக்கிறதுஞ் சறுத்து.

(௩-வது) நாலுநரம்பும் அறுத்து இரத்தம் ஓடும்படி தகுந்த ஆயுதங்களைக் கொண்டு மறுக்கிறது பல்லைக்கொண்டு கடித்தாலுந் தன்கை நகத்தைக்கொண்டு கிள்ளினாலும் ஹலாலாக மாட்டாது.

இனி யறுக்கும்போது கொஞ்ச மானாலும் ஹயாத்துண்டாயி ருக்கிறதை யெக்கீனாக வறிந்தால் அது வுசும்பவில்லையானாலும் இ ரத்தம் புறப்படவில்லையானாலும் ஹலாலாகிவிடும் அப்படி ஹயாத் திருக்கிறது தெரியாமல் அறுத்தபிறகு இரத்தம் வெளியானாலும் வுசும்பினாலும் ஹலாலாகிவிடும் அப்படி இல்லையானால் ஹலா லா கமாட்டாது,

வியாதியாற் செத்ததையும் ஒருவுயர்ந்த தலத்திலிருந்து விழு ந்து செத்ததையும் ஒன்றுக்கொன்று பாய்ந்து செத்ததையுங் கழுத் திற் கயிறு இருக்கிச் செத்ததையும் அடிபட்டுச் செத்ததையும் ஐ வா மிருகங்கள் கடித்துச் செத்ததையுந் தின்னுகிறது ஹறாம்.

இனி வேட்டை மிருகங்களை இரத்தம் புறப்படும்படி காயப்ப டுத்துவது சறுத்தாக யிருப்பதால் வுருண்டைக் கல்லு கம்புகட்டி இவைகளா லடிபட்டுச் செத்ததைத் தின்னக்கூடாது யேனென்றா லிவைகள் அவைகளி னுடம்பைக் கிழித்துக் காயப்படுத்தாது அடி த்து நொறுக்கிவிடும் ஆகையால் அப்படி யடிபட்டவை ஹயாத்து டனிருக்கக் கண்டால் அறுத்துத் தின்னுகிறது ஆகும்,

சிறு கற்களால் "பிசுமுச்சொல்லி யெறிந்து காயப்படுத்தி இர த்தம் புறப்பட்டு இறந்தாலும் வளதடியா லெறிந்து அதின்கூர்மை யால் காயப்பட்டு இறந்தாலும் ஹலாலாகிவிடும்.

இன்னம் அந்த வுயிர்ப்பிராணி தன்கண் பார்வையைவிட்டு ம றையாமலிருக்கிறதும் அல்லது அதைத் தேடுகிறதைவிட்டு சும்மா யிரும லிருக்கிறது சறுத்து,

(௬ - வது) அல்லாகுத்தஆலாவுடைய திருநாமமாகிய பிஸ்மில் லாவைச் சொன்னவுடன் அறுக்கிறது அதைச் சொன்னபின் வே றொரு வேலையிலிருந்தால் மறுபடியுஞ் சொல்லுகிறது சறுத்து.

வேட்டையாடுகிற விபரம்.

வேட்டை மிருகமாக யிருந்தால் அம்புகொண் டெறியும்போ தும் வேட்டையாடப் படித்திருக்கிற நாய் இராஜாளி வில்லத்தங்கு

ருவி இவைகளை அவிழ்த்து விடும்போதும் பிசுமில்லாகி சொல்ல வேண்டியது சறுத்து ஆதலால் வீரப்பல்லுடைய நாய் - சென்னாய் போல்க் கொத்ததும் நகத்துடைய இராஜாளி வில்வக்கான் போற் கொத்ததும் வேட்டையாடப் படித்திருக்கிறது சறுத்து.

நாய் வேட்டையாடப் படித்திருக்கிற தென்றறிகிறதாவது மூன்றுவிடுத்தம் வேட்டை மிருகங்களி னிறைச்சியைத் தின்னாமலிருக்கிறதைப் பரிசோதனை செய்ய வேணும் இராஜாளிபோற்கொத்தது வேட்டையாடப் படித்திருக்கிறதென் றறிகிறதாவது அதை யவிழ்த்துவிட்டுத் திரும்பக் கூப்பிட்டா லுடனே வரவேண்டும்.

வேட்டை மிருகமாவது வெருட்சியுடையதாய் மனிதனைவிட்டு விலகிக்கொள்கிறதா யுள்ள தின்ன ஹலாலான வுயிர்ப் பிராணியா யிருக்கும்.

ஆதலால் வேட்டைபடித்த நாயையாவது இராசாளிபோற் கொத்ததையாவது அம்பையாவது ஒரு வஸ்துவின் பேரில் பிசுமில்லாச் சொல்லிவிட்டு இவைகள் போய் அவ்வஸ்துவைக் காயப்படுத்தி இறந்துவிடுமானால் அதைத் தின்னுகிறது ஹலால்.

ஆனால் இந்த வஸ்துவில் நாய் கொஞ்சத்தைத் தின்றுவிடுமானால் அதைத் தின்ன ஹலாலாகாது இராசாளிபோற் கொத்தது கொஞ்சத்தைத் தின்றுவிடுமானால் அதைத்தின்னுகிறது ஹலால்.

அவ் வேட்டை மிருகத்தைக் காயப் படுத்தியபின் ஹயாத்தோடே கண்டால் அதை மறுபடி யறுக்கிறது வாஜிபு.

ஒரு மிருகம் அம்பாலெய்தபின் ஒருமேட்டில் ஹயாத்தாக விழுந்து மறுபடி பூமியில் விழுந்திறந்தால்த் தின்னுகிறது ஹலாலல்ல.

பின்னர் துப்பாக்கி பிஷ்த்தோல் இவைகளால் சுட்டுக் கொல்லுகிறது கறுமா யிருக்கும் ஆனால் ஒரு மனிதனுக்கு குறிப்புத்தெறிந்து பலநேரமும் பரிசோதித்து சாகாம லிருக்கும்படி யுறுப்புகளைக் கோணைப்படித்திச் சுடத்தெரிந்தால் சுடுகிறது குற்றமில்லை யென்று

சாபியீ மதுகபைச்சேர்ந்த யிபுனுகசறென்கிற யிமாமவர்கள் சொல்லுகிறார்கள்

இதில் மரணமானால்த் தின்னுகிறது ஹறாம் பிசுமிச்சொல்லிச் சுட்டு மரணமானாலுஞ் சரியே,

இன்னும் களிமண்ணுருண்டைகொண்டு குளலில் வைத்து ஆதிப் பறவைகளை அடித்து மரணமானால்த் தின்னுகிறது ஹறாம்,

இனி வேட்டையாடுகிறதர்க்கு யேற்றமான நாளாகிறது சனிக்கிழமையா யிருக்குமென்று ஹலறத்து சகுபறு ஷாதிக்கு றகிமகுல்லா அவர்கள் சொன்னதாக கித்தாப்பு சபுகிய்யாத்து பிமவர்கிலில் பரியாத்தென்னும் கித்தாபில் வருகின்றது.

(இனி) நபிநாயகமவர்கள் நான் உடும்பை தின்னவு மாட்டேன் தின்னுகிறதை கறு மாக்கவுமாட்டேனென்று திருவுளமானதால் வுடும்பு கனபி மதுகபில் கறுமென்றும் சாபிமதுகபில் கலாலென்றும் வருகின்றன,

அறுப்புகளின் சுன்னத்துகளுடைய பயான்.

தின்ன ஹலாலான வுயிர்ப்பிராணியையறுக்கும்போது கிபுலாவுக்கு நேராக முகத்தைத் திருப்பிவைக்கிறதும் ஒட்டகையை இடது முன்னங்காலைக் கட்டி நிலையில்விட்டு அறுக்கிறதும் ஆட்டைமாட்டைப்படுக்கப்போட் டறுக்கிறதும் ஒட்டகங் தாராபோற் கழுத்து நீண்டதைக் கீழ்க்கழுத்தி லறுக்கிறதும் ஆடு மாடு போல்க் கொத்ததை மேல்க்கழுத்தி லறுக்குகிறதுஞ் சுன்னத்து.

அறுப்புகளின் முஸ்தகப்புகள்.

அறுத்த யோருச்சாய்த்துப் போடு முந்தியே அகலமான கத்தியைக் கூர்மையாக்கிக்கொள்கிறதும் இடது பாகத்தின் பேரில் மேல்

லினமாகப் படுக்கப்போடுகிறதும் மூன்று காலையுங் கட்டிக்கொள்கிறதும் வலதுகையால்த் தீவரமாக அறுக்கிறதும் (பிஸ்மில்லாகி அல்லாகு அக்குபறு) யென்று நிய்யத்துடன் அறுக்கிறதும் நாலு நரம்பையுஞ் சரியாக அறுக்கிறதும் பகலையி லறுக்கிறதும் முஸ்த்தகப்பு,

அறுப்புகளின் மக்குறூகுகள்.

அறுக்குந் தலத்திர்க்குக் காலைப்பிடித் திழுத்துக்கொண்டுபோகிறதும் ஒருச்சாய்த்துப் போட்டபின் கத்தியைத் தீட்டுகிறதும் பிடரிப்புறத்தி லறுக்கிறதும் பிடரி யெலும்புக்குள் ளிருக்கிற வெள்ளை நரம்பை யெற்றுகிறவளையி லறுக்கிறதும் தலையைத் துண்டுபட அறுக்கிறதும் ஹயாத் தொடுங்குமுன் தோலை யுரிக்கிறதும் பிரயோசனமன்றி வருத்தப்படுத்துவ தடங்கலும் கிபுலாவுக்கு மாறிப்போடுவதும் மக்குறூகு.

பிடரிப்புறம் அறுத்ததில் நாலு நரம்பையும் அறுத்துத் தீறுகிறவளையில் ஹயாத்தாக யிருந்தால்த்தான் மக்குறூகு அந்த நாலுநரம்பும் அறுபடுகிறதர்க்குமுன் மவுத்தாகிவிட்டால் அதைத் தின்னுகிறது ஹறாம்.

அறுத்த வஸ்துக்களில் வுயிரொடுங்கிறதர்க்கு முன் ஒரு வுறுப்பைத் தறித்துத் தின்னுகிறது மக்குறூகு

அறுத்தவஸ்துக்களில்த் தின்ன ஹறாமானவைகளின் விபரம்,

தின்னப்பட்டவைகளில் யேழு வஸ்துவைத் தின்னுகிறது ஹறாம் அதாவது ஓட்டப்பட்ட இரத்தம் தகறென்னு மாணுடம்பு இரண்டு விரைக்கொட்டை பெண்ணுடம்பு கழலைக் கட்டி நீர்ப்பையாகிய வூத்தர்ம்பெட்டி பித்து ஆகிய இவைகளில் இரத்தத்தைத்தவிர மற்றதெல்லாம் மக்குறூகுத் தகுறீமென்றும் வந்திருக்கிறது.

{ ஹறாமான வுயிர்ப்பிராணிகளின் பயான், }

வீரப்பல்லுடையவைகளால் வேட்டை யாடும்படியாகிய ஜவா மிருகங்களும் நகத்தை யுடையவைகளால் வேட்டை யாடும்படியாகிய பறவைகளும் பன்றி - குரங்கு - பூனை - கழுதை - கோவேறுகழுதை - முள்ளம்பன்றி - குழிநரி - ஆமை - ஆனை - வெள்ளெலி - கீரிப்பிள்ளை - அணில் - ஓந்தி - பாம்பு - பூமியின் புழுப் பூச்சி இதுபோலொத்ததும் தண்ணீர்ச் சஞ்சாரமுள்ளதில் மீனைத்தவிர வுள்ள வுயிர்ப்பிராணிகளும் ஹறாம் இமாம்ஷாபிகீ அவர்கள் மதுகபில் சிலதை மீனென்று தின்பார்கள் அவைகள் நம்மள் மதுகபில் மீனென்றுசொல்லப்படாத்ததால் ஹலாலல்ல ஆகையால் பூமியில் விழுந்து கோழிக்குஞ்சு இறைச்சி மீன் முதலானவைகளை இருஞ்சிக்கொண்டு போய்க் காயப்படுத்தித் தின்னும்படியான பருந்து வில்வத்தங் குருவி முதலான சகல வஸ்துக்களும் தேளைப்போல் விஷமுள்ள வஸ்துக்களும் ஹறாமாகும்.

இன்னம் சவங்தின்னிக்காகம் கழுகைப்போல் நஜீசை செத்த விடக்கைத் தின்னும்படியாகிய பறவைகளையுந் தின்னப்பட்டாது.

ஹலாலான வுயிர்ப்பிராணிகளை யறுப்பதற்கு முன் அதில் எதையாவது வெட்டித்தின்னுகிறது ஹறாம்.

இன்னம் ஆடு - மாடு - ஒட்டகம் - கோழி ஆகிய இவைகள் நஜீசை அதிகந்தின்றால் அதி னிறைச்சியும் பாலும் மக்குறூகு இதினிறைச்சியின் வீச்சம் போகிறதர்க்காக கோழியை (௩) நாளும் ஆட்டை (௪) நாளும் ஒட்டகம் மாட்டை (௰) நாளைக்குங்கட்டி இரைபோட்டு அறுக்கவேண்டும் அதினிறைச்சி நாறுதிருக்கும்படி நஜீசையும் மற்ற இரைகளையுந் தின்னுவங்தாற் கட்டிப்போடவேண்டியதில்லையென்கிலும் கட்டிப்போடுகிறது நலமாகயிருக்கும்.

{ தங்கடஞ்செய்கிற வுயிர்ப்பிராணிகளைக் கொல்வதின் பயான். }

கோழியையாவது புறுவையாவது பிடிக்கும்படியான பூனையைக்கொல்வது ஆகும் அதைத் தபகு செய்து பூமியிற் புதைக்கிறது யேற்றமா யிருக்கும் இதுபோல்த் தங்கடஞ் செய்யும்படியான வஸ்து வடங்கலையுங் கொல்லுகிறது ஆகும் மிருகங்களை நரம்பு குற்றி வாங்கிறதும் சூடு போடுகிறதும் தங்கடத்திர்க் காகும் மிருகங்களைக் காலால் மிதிக்கக்கூடாது யெந்த வஸ்துவையுந் தீயைக்கொண்டு சுட்டுக் கொல்வது ஹறாம்.

இனி பல்லியையும் ஓந்தியையுங் குளவியையுங் கட்டெறும்பையுஞ் - செள்ளையும் - வண்டையும் - மூட்டையையும் - கொசுகையுங் - காடியையும் - புலியையும் - ஓனாயையுங் - கழுதையுங் - கொடிப் புலியையும் - அடித்துக் கொல்லுகிற தாகும் சிலக்கித்தாபில் இவைகளில் பல்லியைத்தவிர உள்ளதைக் கொல்லுகிறது சுன்னத்தென்றும் பல்லியை கொல்லுகிறது வாசிபென்றும்வருகிறது யேனென்றால்.

இபுறாகீம் அலைகிஸ்ஸலா மவர்களை நமுறூது தீக் குண்டத்தில்த் தள்ளினவுடன் பல்லிவந்து தீயை யூதிவிட்டது ஆகலா லதை அவசியங் கொல்லவேணும் அது நஞ்சுள்ள வஸ்துகளிற் சேர்ந்தது. வுப்பில் முக்கியமாக யெச்சம்போடும் ஒரு அடியிற் கொன்றால் நூறு நன்மை யெழுதப்படும் இரண்டு அடி மூன்றுஅடியிற் கொன்றால் நன்மையை அதிற் குறைய யெழுதப்படும்.

இன்னும் மக்கத்தைச் சார்ந்த ஹறத்திலும் அதைத்தவிர மற்ற இடங்களிலும் யெலியையும் - நட்டுவக்காலியையும் - பருந்தையும் - காக்கையையுங் - கடி நாயையுங் கொல்லப்படு மென்றும் நல்ல பாம்பைக்கொன்றால் ஒரு காபிரைக்கொன்ற தவாபு கிடைக்குமென்றும் நமதுநாயகம் முகம்மதுநபிசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள்

திருவுளம்பற்றினர்கள் இது செய்தி நூறில் அன்வார் வகையருக் கித்தாபுகளில் வருகின்றது.

வீட்டிற் பாம்பைக் கண்டால (இன்னு நஸஹுஅலுக்க பிஅகுதி நூகின் ஒ சுலைமானிபுனு தாவூத அலைகிமிஸ்ஸலாம் அன்லா தூதீனு ஒலாதகுறுஜீ அலைனு) யென்று மூன்று விடுத்தஞ் சொல்லி நாலாவது விடுத்தம் அடித்துப்போடவும் தொழுதுகொண் டிருக்கும்போது பாம்பைக் கண்டாலு மடிக்கலாம் அல்லாகுத்தஆலா நம்மௌ யாவரையு மிவைகளின் தீங்கைவிட்டுக்காப்பாத்துவாளுக ஆமீன்.

தொழிற்செய்வதின் பிரசங்கம்,

தொழிற்களிலெல்லா மேற்றமானது மெய்யான கச்சவடமுந் தன் கைப்பாடுமா யிருக்குமென்று (ஹதீதில்) வந்திருக்கிறது,

பெரியோர்களிற் சிலர்கள் சொல்லுகிறநாவது தொளிற்களி லேற்றமானது வெள்ளாண்மையாக யிருக்கும் இயாராவது ஒரு வஸ்துவை நட்டினுல் அதில் நின்றும் ஒரு பறவையாவது ஒருமனிதனுவது அல்லது ஆடுமாடாவது பொசித்தால் அவனுக்கு ஸதக்காவுடைய தவாபு கிடைக்குமென்று (ஹதீதில்) வந்திருக்கிறது.

இரண்டாவது கைத்தொழில் மூன்ருவது மெய்யான கச்சவடமாயிருக்கும்.

இன்னமொரு (ஹதீதில்) வந்திருக்கிறது ஒன்பது பங்கு பறக்கத்து வெள்ளாண்மையிலும் கச்சவடத்திலும் ஒருபங்கு காட்டிற் சிவித்திருக்கிற தாராக் - கோழி - ஆடு - மாடு - ஒட்டகங்களி லுண்டாயிருக்கிறது இனி றிசுக்கைத் தேடுகிறதிற் காலைநேரத்தில் முயற்சை செய்யவேண்டும் இனி யொரு மனித னிடத்தில் சும்ம கையேந்திக் கேட்கிற தழுமையை விட்டும் பேணுதலானவளுக அதிகத் தொகையை நாடாமல் மணமாகிய ஹலாலான தொழிலினின்றும் தனக்குந் தன் அன்னவஸ்திரம் வாஜிபான வர்கட்கும் ஓஜீபனத்தைத் தேடிக்கொள்கிறது பறுலு அதை மார்க்கத்துக்கு நலவாகியதொழிலா யிருக்கிறதில்த் தேடுகிறது சுன்னத்தா யிருக்கும் யாதாமொ

ருவன் கையேந்திக் கேட்காம லிருப்பதற்க்காகவுந் தன் பிள்ளை கு
ட்டிகளுக்கு அன்னவஸ்திரங் கொடுக்கிறதற்க்காகவும் அயல்பாகக்கா
ரரை விசாரிக்கிறதற்க்காகவும் துன்யாவி னுடைய ஹலாலான றிசுக்
கைத் தேடினால் அவனுடைய முகம் கியாமநாளில் பதினாலாம் பக்க
த்து நிலவைப்போற் றெளிவாக அல்லாகுத்தஆலாவைச் சந்திப்பான்.

யாதா மொருவன் பெருமையை நாடிச் சொத்து அதிகப்பட
வேணுமென்கிற யெண்ணத்தினால் துன்யாவைத் தேடினால் இவன்
அல்லாகுத்த ஆலாயிடஞ் சேரும்போது யிவன்பேரில் அல்லாகுத்த
ஆலா கோபமாகச் சந்திப்பான் தனித்துத் துன்யாவினுடைய வே
லைகளைவிட்டு நீங்கி மூலை மற்ற யிடங்களிலிருந்து வணங்கிறதை
காண ஹலாலான சொத்துக்களைச் சம்பாதித்துத் தானுந் தன் அ
ன்ன சுற்றத்தார்களும் பொசித்துப் பறுலான வணக்கங்களும்வண
ங்கி மற்றவர்கட்குஞ் சதக்காக் கொடுத்துக்கொண் டிருக்கிறது எ
ற்றமா யிருக்கும் யாராவது ஒரு மனிதன் நாற்பது நாளைக்கு ஹ
லாலான ஓஜீபனந்தின்றால் அவனுடைய கல்பு ஒளிவாகிப் பூராய
மென்னும் ஹிக்குமத்தான ஊற்று கல்பில்நின்றும் அவன் நாவின்
பேரில் வெளியாகுமென்று (ஹதீது) வந்திருக்கிறது,

இன்னும் ஒரு மனிதன் துன்யாவைத் தேடினால்த் தேடத்தே
ட அதினுடைய ஆசை அவனைவிட்டு நீங்காது துன்யாவாகிறது க
டல்த் தண்ணீராயிருக்கும் அதைகுடித்தவன் தாகம் தீரமாட்டான் எ
ன்றும் (ஹதீது) வந்திருக்கிறது.

ஆகையால்த் தனக்குந் தன் அன்ன சுற்றத்தார்களுக்கும் கா
லச்சிபம் நடக்கும்படி ஹலாலான சம்பாத்தியஞ்செய்து பெரிய அ
வட்கை வையாம லிருக்கிறது நல்லது,

இனி வியாபாரமென்னும் (பய்கு) யென்பது ஒரு வஸ்துவை
க்கொடுத்து அதுபோ லொத்ததை மார்க்கத்தி லேற்படுத்தப்பட்டி
ருக்கிற பிரகாரம் மாற்றுகிறதின் பெயராயிருக்கும் அதினுடைய (ச
றுத்தாவது) வாங்கிறவனுங் கொடுக்கிறவனும் பைத்தியமன்றியே பு

த்திசாலியா யிருக்கிறதும் சரக்கும் விலையும் அறியப்பட்டிருக்கிறது மா யிருக்கும் அதினுடைய (ருக்குனுவது) இரண்டில் முதலாவது ஈஜாபு அதாவது ஒருவன் முதலாவது இந்தச் சரக்கை இன்னவி லைக்குத் தருவாயாவென்று கேட்பதுபோல் இரண்டாவது கபூல் அ தாவது மற்றொருவன் அந்தவிலைக்கு அதை ஒப்புக்கொண்டேனெ ன்று சொல்லுவதுபோல் அல்லது கணக்குப்படி கூறுகட்டிவைத்தி ருப்பதை கிரயம் பேசாமல் மொத்த ஏற்பாட்டின்படி வாங்கிக்கொ ண்டு போனாலுந் துருஸ்தாகிவிடும்,

கொள்ளவுங் கொடுக்கவுமான இரண்டுபேரி லொருவன் அ தலத்தைவிட்டுங் கபூல்செய்யுமுன் னெழும்பினால் முந்தின ஈஜாபு பாத்திலாகிவிடும் மறு ஈஜாபு புதிதாகவேண்டுமாகும்.

இனி வியாபாரம் நான்கு வகைப்படும் அதில் (க - வது) வ ஜிபு அதாவது பட்டினியாயிருந்து தங்கடப்படுகிறவனுக்கு விற்கி றது (உ - வது) ஹறும் அதாவது செத்த சவம் கள்ளு வகையரு க்களை விற்கிறது (௩ - வது) மக்குறூகு அதாவது ஜும்ஆநாளில் பாங்கு சொன்னதின் பிறகு விற்கிறதுபோல் (௪ - வது) முபாஹ அதாவது இந்த மூன்றுவகையைவிட்டும் நீங்கினதா யிருக்கும்,

(நல்லதொழிலாவது) பயிர்ச்செய்கிற வேலை கூலிக்குச் சுமக்கி றவேலை - தையல்வேலை - தச்சுவேலை - யெழுத்துவேலை - வேட்டி ... ணி சலவை செய்கிறவேலை செருப்பு மோஜாத் தைக்கிறவேலை - ஆ டு மாடு ஒட்டகம் மேய்க்கிறவேலை - சவளிக் கச்சவடஞ் செய்கிற ... இதுபோ லொத்ததாம்.

(கெட்ட தொழிலாவது) நல்லைக் கெடுக்கும்படியான கசா புத் தொழிலும் தட்டான்தொழிலும் வெளிக்குக் கேவலமாகிய ... ரத்தங் குத்தி வாங்கிறதும் தோ லுறப்போடுகிறதும் வீடு பெரு கிறதும் பேணுதல் வருத்தமாகிய காசிக்கடைத் தொழிலும் தர... வேலையும் வுயிர்ப்பிராணிகளை வாங்கி விற்கிறதும் கபன் விற்கிறது ம் பொன் வெள்ளியாலான பாத்திரங்கள் விற்கிறதுமாயிருக்கும்.

இந்தத் தொழிற்களைச் செய்வது ஹறாமல்ல அதற்கு லாயக்கானவர்கள் செய்துக்கொள்ளலாம் வியாபாரங்களிற் சத்தியஞ்செய்கிறதும் மோசஞ் செய்கிறதும் கூலிக்காரனுடைய கூலியை யெடுத்துக்கொள்கிறதும் ஹறாம் கூலிக்காரனுடைய கூலியை வேர்வை யுலருமுன் கொடுக்கிறது நல்லதென்று (ஹதீதில்) நமதுநாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளம்பற்றினார்கள்.

வட்டியினுடைய பாபு.

வட்டியென்னும் றிபாவாகிறது ஒருவஸ்துவைக் கொடுத்து மற்றொரு வஸ்துவை மாற்றும்போது பகரமன்றியே யொருவஸ்துவை யதிகமாக வாங்குவதின் பெயர்.

(குறுஆன்சரீபில்) முமினான மனிதர்களே அல்லாகுத்தஆலாவைப் பயந்து மீட்சி பெறுகிறதற்காக வேண்டி வட்டியை யொட்டிக்கி ரெட்டி முரெட்டியாக தின்னாதிருங்களென்று அல்லாகுத்தஆலா திருவுளம்பற்றினான்

ஹதீது.

நான் மிகுறாஜிக்குப்போன இரவையில் இரத்தமாக ஓடும்படியான வொரு ஆற்றைக் கண்டேன் அதினுள் ளொருமனிதனீந்துகிறான் கரையி லொருமனிதன் கல்லைக் குவித்துக்கொண் டிருக்கிறார் அவன் நீந்திக் கரையில்வர முடுகினால் ஒரு கல்லையெடுத்து அந்த மனிதன் அவன்மீது யெறியுகிறார் அந்தக்கல்லை வாயில்வாங்கிக்கொண்டு மறுபடியும் அந்த இரத்தஆற்றில் நீந்துகிறான் இப்படிக் கரையை யடுத்துவரவும் கல்லெறிந்தா லுடனே ஆற்றில நீந்தவுமாக இருக்கிறதைப்பார்த்து ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்களிடத்திற் கேட்டேன் அப்போ தவர்கள் இவன் வட்டி தின்றவனென்று சொன்னார்கள் யென்றும் வட்டிவாங்கிறவனுடைய வியாபாரத்தில் அல்லாகு

த்தஆலா பறக்கத்தை நீக்கிவிடுவானென்றும் வட்டி தின்னுகிறவன் அல்லாகுத்த ஆலாவுடனும் அவனுடைய றசூலுடனுஞ் சண்டை செய்கிறவனாக யிருக்குமென்றும் நமது நாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் திருவுளம்பற்றினார்கள்.

(வியாபாரத்துடைய வட்டியின்பயான் ஹதீது.)

இயாராவது ஒரு மனிதன் (பிக்குகு) மசலாப் படிக்கிறதற்க்குமுன்பாக வியாபாரஞ் செய்தால் அவன் வட்டியில் முழுங்கிவிடுவான் யென்று நபிநாயகம் திருவுளம்பற்றினார்கள்.

இனி அளக்கப்பட்ட வஸ்துவிலும் நிறுக்கப்பட்ட வஸ்துவிலும் ஒருவருக்கொருவர் மாற்றும்போது இனமொன்றாக யிருந்தால் தவணை வைய்யாமல் அக்கைக்கி இக்கையாகச் சரிக்குச் சரியாய் விற்கவேண்டும் அது யேதுபோலெனில் ஒருவன் ஆனைக்கொம்பன் நெல்லொருபடியும் இன்ன மொருவன் சம்பா நெல் லொருபடியுங் கொடுத்து அக்கைக்கி இக்கையாகச் சரிசரியாய் மாறிக்கொண்டால் க்குற்றமில்லை,

ஒன்று ஒருபடியும் ஒன்று ஒண்ணேயகாற்படியு மானாலும் அல்லது இரண்டு மொவ்வொரு படியாகத் தவணைவைத்தாலும் ஹறாம் (ஆனால்) ஒவ்வொன்றுக்கும் ரூபாய் கிறையம்போட்டால் குற்றமில்லை.

(இனி) இனமொத்துமை யில்லாமலும் நாழியா லளக்கப்படுகிற வஸ்துவையும் நிறுக்கப்படுகிற வஸ்துவையுந்தவிர தேங்காய் சீலைபோலுள்ள வஸ்துவாக யிருந்தால் தவணையும் யேற்றவாட்டமாகக்கொடுக்கிறது மாகும் அது யேதுபோ லெனில் ஒரு பட்டணம் சேலைஞ்சினைக் கொடுத்து ஒரு மாத்தைக்குப் பின் வங்காளத்து இ

இனமாத்திரம் ஒத்துமையாக யிருந்து நாழியாலளக்கப்பட்டது தராசால் நிறுக்கப்பட்டது இல்லாவிட்டாலும் அல்லது இனம் ஒத்துமையில்லாமல் நிறுக்கப்பட்டதும் அளக்கப்பட்டதுமாக யிருந்தாலும் தவணை ஹறும் யேற்றம் வாட்டமாகும்,

இவைகளில் இவன் கொடுத்த வஸ்துவை இத்தனை ரூபாயென்றும் அவன் கொடுத்த வஸ்துவை இத்தனை ரூபாயென்றுங் கிரயம்வைத்து விற்றால் பறவாயில்லை.

ஹதீது.

பிலால் றலியல்லாகு அன்கு அவர்கள் நபிநாயக மவர்களிடம் நல்ல பேரீத்தம்பழங் கொடுவந்து கொடுக்க இது உமக்கேதென்று கேட்டார்கள் யென்னிடத்திற் கேவலமான பேரீத்தம்பழமிருந்தது அதில் இரண்டு மரக்கால் கொடுத்து இதில் ஒரு மரக்கால் வாங்கினேனென்று சொன்னார்கள் கைசேதமே இதுதான் வட்டி. இப்படிச் செய்யாதிரும் வும்மிட மிருந்த பேரீத்தம் பழத்தை யொருவிலைக்கு விற்று இந்தப் பேரீத்தம்பழத்தை யொருவிலை வைத்து வாங்குமென்று நபிசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் திருவுளம் பற்றினார்கள்.

இன்னும் பேரீத்தம் பழத்தைப் பேரீத்தம் பழத்திர்க்குப் பதிலாகவும் உப்பை யுப்புக்கு வதிலாகவும் தொலிக்கோதும்பையைத் தொலிக் கோதும்பைக்குப் பதிலாகவும் மணிக் கோதும்பையை மணிக்கோதும்பைக்குப் பதிலாகவும் தங்கத்தைத் தங்கத்திர்க்கு வதிலாகவும் வெள்ளியை வெள்ளிக்கு வதிலாகவும் அக்கைக்கி இக்கையாக வில்லுங்கள் யேற்ற வாட்டமாக விற்கிறது வட்டியாக யிருக்குமென்று நபிநாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானார்கள்,

ஸலமென்னும் வுடன்படிக்கையின் பயான்.

அதாவது விலையை முன் கொடுத்து சரக்கைத் தவணையில் வாங்கிறது (அதின் சறுத்துகளாவது) இன்ன இனமான வஸ்துவென்று விபரிக்கிறதும் இன்ன வகையென்று விவரிக்கிறதும் இன்னவன்னிப்பென்று விபரிக்கிறதும் இத்தனைதுலாம் இத்தனை கோட்டையென்று விவரிக்கிறதும் இன்ன தவணையென்று விபரிக்கிறதும் இத்தனை ரூபாய்க்கென்று விவரிக்கிறதும் இன்ன தலத்தில்ச் சரக்குத் தருகிறேனென்று விவரிக்கிறதும் வுடன்படிக்கை செய்தவுடனேயே இரண்டுபேரும் பிரிகிறதர்க்கு முன்பாகவிலையைக் கைப்பற்றிக்கொள்கிறதுமா யிருக்கும்;

அதர்க் குவமையாவது நன் செய்யில் விளைந்த ஆனைக் கொம்பன் நல்ல நெல் (இருபது) கோட்டை நாலு மாத்தையில் கோட்டை ஒன்றுக்கு ரூபாயிகள் அஞ்சுவிகிதம் (நூறு) ரூபாய்கள் யென்று பேசி வுடனே ரொக்கம் ரூபாய்கள் கொடுத்துத் திருநெல்வேலியில் நெல்த் தருகிறதென்று நிச்சயப்படுத்துவதுபோலவாம்;

ஒரு மாத்தைக்குக் குறையத் தவணை வைத்தாலும் தங்கம் வெள்ளியில் (சலம்) செய்தாலும் இந்த சறுத்துகளி லொன்று தவறினாலும் அது இன்னவிதமான வன்னிப்பென்றுமட்டும் வருத்தவும் அது யிவ்வளவு திட்டமென்று அறிகிறதர்க்கும் யேலாமையான வஸ்துவிலும் உடம்படிக்கை யென்னும் (சலம்) துருஸ்தாகமாட்டாது.

ஏனென்றால் இந்தச் சறுத்துத் தவறினதுகளிற் கொடுத்தவனுக்கும் வாங்கினவனுக்குந் தர்க்கம்வந்து சம்பவிக்கும் அதர்க்காக மார்க்கத்தில் இவ்விதமான சறுத்தைக்கொண்டு யேற்படுத்தப்பட்டது.

ஹலறத்து இபுனு அப்பாசுறலியல்லாகு அன்கு அவர்கள் அல்லாகுத்தஆலா வட்டியாபாரத்தை ஹறாமாக்கி வைத்தவுடனே (ஸலம்) யென்னும் வுடன்படிக்கையை ஹலாலாக்கி வைத்தா ரென்று சொன்னார்கள்.

பாயிதா.

ஹறாமுக்கும் ஹலாலுக்கும் வுவமானமாவது பூலோகத்தில் ஆடுமாடொட்டகம் ஹலாலானதாக யிருப்பதால் அவைகள் ஒவ்வொரு குட்டி போட்டு நாம் அதை யெவ்வளவோ அறுத்துத் தின்றாலும் யெப்போதும் மாறாமல் பெருகிப் பறக்கத்தாகயிருக்கிறது பன்றி நாய்போல்க்கொத்த ஜவாமிருகங்கள் ஹறாமா யிருப்பதால் அவைகள் ஈற்று ஒன்றுக்கு நாலுப்த்தென்று யெத்தனேயோ குட்டிகள் போட்டாலும் அதைத் தின்னுகிறவர்கள் சுருக்கமாயிருந்தும் அவைகள் பெருகிறதன்றியே பறக்கத்து மாறியிருக்கிறது இப்படிப்போலதான் ஹறாமான முதலுகள் யெவ்வளவு வரத்துவந்தபோதிலும் கடாசி கணக்குப் பார்க்க ஒன்று மில்லாமற் போய்விடும் ஆகையா லிவைகளை நன்றாகத் தங்கள் தங்கள் மனதில் ஆலோசித்துப்பார்த்து ஹலாலாகிய சம்பாத்தியஞ் செய்வீர்களாக,

கைக்கடனுடைய வட்டியின் பயான்.

குறுஆன்ஷரீபில் அல்லாகுத்தஆலா வட்டி தின்னும்படியாகிய ஜனங்கள் கியாமநாளில் கபுறைவிட்டு மெழும்பும்போது பயித்தியத்தால் மதிமயக்கமாக ஷெய்த்தான் பிடித்தவர்களைப் போல் யெழும்பி மகுசர் வெளியில்வந்து சேருவார்கள் யென்றும் இன்னும் வட்டிக்கிக்கொடுத்து வாங்கிறவர்கள் அல்லாகுத்த ஆலாயிடத்திற்போர்செய்து சண்டைபோடுகிறவர்களைப் போலதா யிருக்குமென்றும் திருவுளம் பற்றினன்,

ஹதீது.

ஒரு திறுகமாவது வட்டிவாங்கிறது (௩௩) விடுத்தம் ஸினச்செய்த குற்றத்தைக்காணப் பெரிய குற்றமாக யிருக்கு மென்றும் வட்டிக்கிக் கொடுக்கிறவன் வாங்கிறவன் முறியெழுதுகிறவன் சாட்சி சொல்லுகிறவன் ஆகிய இந் நான்கு பெயர்கள் மீதும் அல்லாகுத்த்ஆலாவுடைய முனிவு இறங்கு மென்றும் நபிநாயகம் முகம்மது

சல்லல்லாகு அலைகிஒசல்லம் அவர்கள் திருவுளம்பற்றினார்கள் இது போல் அநேகம் தலீல்களும் ஹதீதுகளும் வட்டியினுடைய கெடுதியைப்பற்றி வந்திருக்கின்றன.

இன்னம் வட்டியில்லாமற் கைக்கடன் கொடுக்கிறது ஸதக்காக் கொடுக்கிறதைக்காண ஏற்றமா யிருக்குமென்று நபிநாயகங் திருவுளமானார்கள்.

ஹிக்காயத்து

நம்மள் இமாம் அபூஹனீபா றகிமகுல்லா அவர்கள் ஒரு எகூதிக்கு கொஞ்சப்பணம் கடன் கொடுத்திருந்தார்கள் அப்பால் ஒரு நாள் அவன் வீட்டிற்குப்போயக் கொஞ்சம் மண்ணையள்ளி ஞாபகமில்லாமல்க் காகித யெழுத்திற் போட்டார்கள் ஞாபகம் வந்தவுடனே நம்மள் கொடுத்த முதலுக்கு ஒருவேளை இந்த மண்வட்டியாகிவிடுமேயென்று பயந்து தாங்கள் கொடுத் திருந்த முதல் முழுமையையும் ஹதியாச் செய்துவிட்டார்கள்.

ஆனதால் யெமது இகுவான்களே நமது யிமாம்அவர்களுடைய தக்குவாவை நோட்டமிட்டு நடந்து வருவீர்களாகவும் பூலோகத்தில் மார்க்கத்திர்க்கு விரோதமாக நடக்கிற சண்டாளர்களை நோட்டமிடவேண்டாம்

இன்னும் யாராவது ஒருவன் மார்க்கத்திற் சொல்லப்படாதபிரகாரம் நடந்தால் அவன் நரகவாதியாக யிருக்கும் இந்த ஸமான் ஒடுக்கத்துடைய காலமாக யிருப்பதால் மார்க்கத்தி லாகும்படியானதெல்லாம் வெறுக்கப்பட்டதாகவும் மார்க்கத்தி லாகாததெல்லாம் எடுத்து நடக்கப்பட்டதாகவும் மனிதர்கள் கொண்டு வருகிறார்கள் ஆகச்சே அவைகளையெல்லாம் கவனித்து மார்க்கத்தில் யார்தான் நேராக நடக்குகிறார்கள்யென்று யோசிக்கப்படாது தன்னைத்தான்யோசித்துக்கொள்ளவேண்டும்.

நபிநாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிஒசல்ல மவர்கள் தங்கள் அஸ்ஹாபுகளைப்பார்த்து யிக்காலத்தில் மார்க்கத்துடைய கரு

மங்களைப் பத்துப்பங்கு வைத்து ஒன்பதுபங்கை யொரு மனிதன் செய்து யொருபங்கைச் செய்யாமல்விட்டால் அவனீடேற்றம் பெறமாட்டான் பிந்தி யொருகாலம் வருகிறது அந்தக் காலத்தில் ஒன்பதுபங்கைச் செய்யாமல் ஒரு பங்கைச் செய்தா லீடேற்றம் பெறுவானென்று திருவுளமானதாக (யெகுயாவுல் வுலூம்) யென்கிறகித்தாபில் கொஸ்ஸாலி யிமாம்அவர்கள் பேசிவருகிருர்கள்,

ஆகையால் வட்டி தின்னுகிறவன் கபுறில் றம்லான்மாதம் லெயிலத்துல்கதிர் இரவையிலும் அதாபில் வருத்தப்படுகிருனென்று இபுனு ஹஜர் இமாம் அவர்கள் சொல்லுகிருர்கள் இந்த புரபிற்சொன்ன ஹுக்குமுகள் (றத்துல்முகுத்தார் கன்சு முஜுசிது இதுபோலொத்த கித்தாபில் வருகின்றது

(இனி) வட்டிக்கு ஹீலாவான தந்திரஞ் செய்கிறது பெலமான சொற்படி மக்குறூகாயிருக்கும்.

(பின்னர்) ஆலங்கீறி வகையறுவில் வருகிறதாவது ஒரு மனிதன் தனி வட்டியாபாரம் மாத்திரஞ் செய்கிருன் வேறொரு யாபாரமுஞ் செய்யவேயில்லையென்று வேறொருவனுக்கு யெக்கீனுகத் தெரிந்தால் இவன் அவனிடத்திலப் புசிக்கிறது கறும் வட்டியாபாரம் அதிகமும் மற்ற கலாலான வியாபாரம் சுருக்கமுமாக யிருந்தா லுண்ணுகிறது மக்குருகா யிருக்கும் வட்டியாபாரம் சுருக்கமும் மற்றும் வியாபார மதிகமுமாக விருந்தா லுண்ணுகிறது ஆ[illegible] யெங்கிறு வுண்ணுமலிருப்பது நலமாக யிருக்கும் அவனுடைய செய்கை தெரியாதவனுக் கொன்றுமில்லை சந்தேகமிருந்தால் பேணிக் கொள்கிறது நல்லது.

{ கடனை நிறைவேற்றுவதின் பயான் ஹதீது, }

இயாராவது ஒருவன் கடனை நிறைவேற்றவேணுமென்ற யெண்ணத்தின்பேரில் வாங்குவானேயானுல் அல்லாகுத்தஆலா அவனைக்

கடன் நிறைவேற்றும்படி செய்வான் நிறைவேற்றப்படாதென்ற யெ ண்ணத்தின்பேரில் வாங்குவானேயானால் அவனை அல்லாகுத்த ஆலா ஹலாக்காக்கிவிடுவான்.

இயாராவது ஒரு மனிதன் ஒரு பெண்ணை மகர் கொடுக்கப் படாதென்கிற யெண்ணத்தின்பேரில் நிக்காகு யெழுதினால் அவன் மவுத்தாகும்போது ஸினாச் செய்தவனுடைய ஹுக்குமு அவனி லேற்படுத்தப்படும்.

இயாராவது ஒருவன் ஒரு சரக்கை விலைகொடுக்கப்படாதென் ற யெண்ணத்துடன் வாங்குவானாகி லவன் மவுத்தாகும்போது மோ சஞ் செய்தவனுடைய ஹுக்குமு அவனி லேற்படுத்தப்படும்,

மோசஞ் செய்தவன் நரகவாதியாயிருக்கும் பீசபீலில் மவுத்தா னவனுடைய பாவங்களைப் பொறுக்கப்படுங் கடன் காரனைத்தவிர யென்று நபிநாயகம் முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தி ருவாய்மலர்ந்தருளினார்கள்.

இல்லாதவனுக்கு கடனை மன்னிக்கிறதின்பயான். ஹதீது.

இயா[illegible]து ஒருவன் யெழியவனுக்கு பின்னாலே தாட்டுமெ ன்று கடனை வழிபார்த்தானேயானால் அல்லது கடனடக்கலையும் ம ன்னிப்புச் செய்தானேயானால் அல்லது கொஞ்சத்தைத்தள்ளிக்கொ டுத்தானேயானால் அவனை அல்லாகுத்தஆலா நரகத்தினுடைய காங் கையைவிட்டும் காப்பாத்துவான் இன்ன மவனை அறுசுடைய நிழ லிலாக்கிவைப்பான் இன்ன மொரு மனிதன் யெழியவனை வழிபார் த்தால் ஒவ்வொரு நாளைக்கும் தவணை வருகிறதர்க்கு முன் அந்தக் கடன்போலொத்ததை சதக்காக்கொடுத்த வரிசையும் தவணை வந்த பின் வழிபார்த்தா லதர்க்கு ஒவ்வொரு நாளைக்கும் அந்தக் கடனை

ப்போ லிரண்டு பங்கு சதக்காக் கொடுத்த தவாபுங் கிடைக்குமெ ன்று நமதுநாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் திருவுளம்பற்றினார்கள்.

கடனைத் தீர்த்துவைக்கத் திராணி யிருக்க மோசம் பண்ண வேணுமென் றெண்ணம்வைத்தால் அது அனியாயமாக யிருக்குமெ ன்றும் இவனுடைய நன்மைமை அவனுக்குப் பிடிங்கிக் கொடுக்க ப்படுமென்றும் (ஹதீதில்) வந்திருக்கிறது.

றிவாயத்து.

முந்தினகாலத்தில் ஒரு மனிதனுக்கு சக்ராத்து காலில் மலக் கல்மவுத்து அலைகிஸ்ஸலா மவர்கள் வந்து றூகை வாங்கும்போது நல்ல அமற் செய்தாயாவென்று கேட்க யில்லையென்று சொன்னார் நன்றாய் யோசித்துப்பாரென்று சொல்ல நான் மனிதர்களிடம் வியா பாரவேலை நடத்தி வரும்போது சீமானை யிருக்கிறவனைக் கடனைக் கேட்டு நெருக்கிறதில்லை மிசிக்கீன்களிடத்தில் கடனை மன்னித்துவி டுவேன் இதைத்தவிர வேறே யொரு அமலுஞ் செய்யவில்லையென் று சொன்னார் உடனே அவரை அல்லாகுத்தஆலா சொற்கவாதி யா க்கிவைத்துவிட்டானென்று நபிநாயகம் முகம்மதுசல்லல்லாகு அலை கிவசல்லமவர்கள் திருவுளமானதாக குதைபத்து றலியல்லாகு அன் கு அவர்களைத்தொட்டும் (ஸகீகுல்புகாறி ஸகீகுல் முசுலீம்) யென் னுங் கித்தாபுகளில் வருகின்றது.

கூட்டுவியாபாரங்களின் பயான்.

அவை இரண்டுவகைப்படும் அதில் (௧-வது) சிறுக்த் தென் னுங் கூட்டு அதாவது இரண்டு பெயரும் லாபத்திலும் முதலிலு ம் பங்காகயிருக்கிறது இதில் லாபநஷ்டம் இருவருக்கும் பொது.

ஆனால் இரண்டுபெயரி லொருவனுக்கு லாபத்தில் கன்றா க்ட்டாக நூறு ரூபாயென்றும் அதுபோக மீதம் பேசினபடி பங்கு வைத்துக் கொள்ளுகிறதென்றும் பேசினால் அந்தக் கூட்டு வியாபா

ரன் கூடாது பசாதாகிவிடும் (உ-வது) முலாறபாயென்னும் ஒத்தலாபம் அதாவது ஒருவன் முதல்வைக்கிறது ஒருத்தன் வியாபாரஞ்செய்கிறது. லாபம் வந்தால் பேசினபடி இரண்டுபேருக்கும் பொதுவாகயிருக்கும் முதலில் நட்டம்வந்தால் முதல் வைத்தவனுக்கு மாத்திரமாகயிருக்கும் ஆனால் முதல்வைத்தவன் சொன்னதற்கு ஒத்தலாபக்காரன் விரோதஞ் செய்தால் அவன் ஜாமின்தாராவான் இந்தக் கூட்டு வியாபாரங்களில் அநேகம் பிரிவுகளும் அநேகஞ் சறுத்துகளு மிருக்கிறது அவைகளை இங்ஙனம் விசேடமாகச் சொல்லுமிடத்து விரியுமென்று சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

கூலிவாடகையின் பயான்.

அதாவது அறியப்பட்ட பிரயோசனத்தை அறியப்பட்ட கூலிக்குப் பகரமாக விற்கிறதாயிருக்கும்.

அதின் சறுத்தாவது தவணையும் வேலையும் கூலியும் அறியப்பட்டிருக்கவேண்டும் ஆகச்சே வீடுகள் கடைகளை வாடகைக்குக்கொடுக்கிறதும் பயிர்ச் செய்கிறதற்க்காகவேண்டி நிலங் கரைகளைக் கூலிக்குக்கொடுக்கிறதும் ஆகும்.

ஆனால் இதில் இன்னவஸ்துவைப் பயிர்ச்செய்ய வேண்டுமென்று அல்லது நீ நாடின பயிர்களை வெள்ளாமை செய்துக்கொள் ளென்று விபரிக்கவேண்டும்

இன்னம் ஒருவனைச் சம்பளத்திற்க்காகச் சேர்க்கிறதும் சீலையைப்போலொரு வஸ்துவைச் செம்மையாக்கித் தருவதற்க்காக கூலிபேசிக்கொடுக்கிறதும் ஆடு - மாடு - ஒட்டை - குதிரை - கழுதை முதலியவைகளை வாடகைக்குக் கொடுக்கிறதுமாகும் வாடகைக்குப் பிடித்தவன் கட்டுப்செய்து அவைகளை ஹலாக்காக்கிறது கொண்டு வாடகைக்கு வாங்கினவன் சாமீன்தாராவான் அவைகள் தன் னிபல்லாற் கெட்டு ஹலாக்கானல் அவன் சாமீன்தா ராகமாட்டான்.

இனி பாங்கு இக்காமத்துச் சொல்வதற்க்கும் குறுஆனைப் படிப்பிக்கிறதற்க்கும் பிக்குகுடைய யில்மை யோதிக்கொடுக்கிறதற்க்கும் வஅலு நசிகத்து சொல்லுவதற்க்கும் ஹச்சுச்செய்வதற்க்கும் இமாமத்துச் செய்வதற்க்குங் கூலி கொடுக்கிறது ஆகும் இது பத்துவாவான சொல்லாக யிருக்குமென்று றத்துல்முகுத்தார் கன்சுத்தக்காயிகு சாமிகுற்றுமூசு ஹிதாயா முதலிய கிதாபுகளில் வருகின்றன.

(பின்னர்) கெட்டராகம் பாடுகிறதும் மையத்துக்கு ஓலை யிட்டு அழுகிறதும் வீணை கின்னரிபோலொத்தகருவிகளால் விளையாடுகிறதும் பீசபீல் வகையருவைப்போ லொத்ததைத் தவிரப் பட்டணப்பிரவேச முதலிய வீண்விளையாட்டுகள் பெருமைக்காக வாத்தியங்கள் மேளதாளங்கள் அடிக்கிறதும் பாவமாயிருப்பதால் இவைகளுக்குக் கூலிவாடகை பேசுகிறதுங் கொடுக்கிறது மாகாது இப்பிரகாரம் றத்துல்முகுத்தார் முதலிய கிதாபுகளில் வருகின்றன,

இனி இந்தக் கூலியினுடைய பாபில் அநேகவிதமான விட்டங்களுண்டாயிருக்கிறது இக்கிதாபு சிறிதாயிருப்பதால் இதில் யெழுதவில்லை விரிவான கிதாபுகளைப் பார்வை செய்துக்கொள்வீர்களாக.

ஹதீது

கூலிவேலை செய்தவனுடைய கூலியை அவன் வேர்வை யுலருகிறதற்க்குமுன் கொடுத்து விடுங்களென்று நபிநாயகம் கல்றத்து நபிசல்லல்லாகு அலைகிஒசல்ல மவர்கள் திருவுளம்பற்றியதாக தபுறுனி இமாம் றிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

(இன்னும்) அல்லாகு சுபுகானகுத்த ஆலா ஹதீது குதுசியில் திருவுளம்பற்றியதாக நபிசல்லல்லாகு அலைகிஒசல்ல மவர்கள் திருவாய்மலர்ந் தருளினார்கள் அதேதெனில் கியாமநாளில் மூன்று கூட்டத்தார்களின்பேரில் நான் வாதியாயிருப்பேன்-அதில் (க-வது) யென்னுடைய பெயரைச் சொல்லிக்கொடுக்கப்பட்ட அமானிதத்தைமோசஞ்செய்தவன் (உ-வது) ஒருநாட்டான் மகனை மாறுட்டமாக அடிமையென்று சொல்லி அவனை விலைக்குவிற்றுத் தின்றவன் (௩-வது)

ஒரு கூலிக்காரனை வேலைசெய்யச் சொல்லிப் பரிபூரணமாக வேலை யை வாங்கிக்கொண்டு அவன் கூலியைப் பேசினபிரகாரங் கொடாம ல் மோசஞ்செய்கிறவன் ஆக யிம்மூன்று பெயருமாம் இப்பிரகாரம் இபுனு மாஜ்ஜாவென்கிற இமாம் றிவாயத்துச் செய்தார்கள்.

ஆதலால் யெனதன்புற்ற சகோதரர்களே அநீதத்தைவிட்டு நீங் கிப் பேசினபிரகாரங் கூலிகளைக் கொடுத்து வருவீர்களாகவும்,

மேளதாளங்களின் பயான்.

மேளதாளங்கள் ஷெய்த்தானுடைய சத்தமாக யிருப்பதால் அ தைப் பெருமையாக விளையாட்டாக அடிக்கிறதுங் காது தாழ்த்திக் கேட்கிறதும் ஹறாமாயிருக்கும்.

நமது நாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிஉசல்ல மவர்க ள் கொட்டுத் தவுல்ச் சத்தங்களைக்கேட்டுக் காதையடைத்துக்கொண் டார்கள் யென்று (றத்துல்முகுத்தார்) யென்றகித்தபில் வருகின்றது.

(பத்தாவல்ஹம்மாதிய்யா) யென்னுங் கித்தாபில் வருகிறதாவது தம்பூரு மேளம் வாத்தியம் வீணை இதுபோற்கொத்த விளையாட்டுச் சாமான்களைப் பனிமாறுகிறது ஹறாம்,

(குன்யத்துத் தாலிபீன்) யென்னுங் கித்தாபில் கிக்காகு வகைய, றாக்களில் தவுலு மேளம் வாத்தியங்களை யடித்து நடத்தும்படியான இடங்களி லிருக்கப்படாது அந்த வீண்வாத்தியங்கள் ஹறாமா யிரு க்குமென்று குத்துபுநாயகம் மவுலானா அப்த்துல் காதிறு ஜெயிலானீ அவர்கள் சொன்னார்கள்,

இன்னும் அப்த்துல் அஸீஸித்திகுலவி அவர்கள் செல்லுகிற தாவது காகிதவேட்டு கம்பவேட்டுபோற்கொத்த கருமருந்துகளைத்தீ யிற் சுட்டும் மேளவாத்தியங்களை யடித்தும் வூருசுற்றிப் பட்டணப் பிரவேசஞ்செய்து முதலை வீண்செலவு செய்கிறதாகாது அது ஹறா மா யிருக்கும்,

அனியாயத்தின் பாபு,

(குறுஆன்ஷரீபில்) அனியாயஞ் செய்கிறவர்கள் மீது அல்லாவுடைய முனீ விறங்கிறதென்றும் அவர்கள் செய்யும்படியான செயல்களைவிட்டும் அல்லாகுத்தஆலா மறதியாக யிருக்கவில்லை அவர்களைப் பார்வை யேறச் சொருகும்படியாகிய கியாமநாள் வரைக்கும் அதாபு செய்யாமல் கியாமநாளில் அதாபு செய்வதற்காகப் பிற்படுத்திவைத்திருக்கிறுனென்றும் வந்திருக்கின்றது

ஹதீது.

சருவரோ ஆலம் நமதாண்டகை நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் கடாசி ஹஜ்ஜில் மீனு பஸாரில் குத்துபா வோதும்போது ஆய் மனிதர்களே வுங்களுடைய இரத்தங்களும் வுங்களுடைய முதல்களும் வுங்களுடைய வம்மிசங்களும் இந்த வூரி லிந்த மாத்தையி லிந்நாளுடைய சங்கையைப்போற் சங்கையாக யிருப்பதால் ஒருவனுடைய முதலை ஒருவ னெடுக்கிறதும் ஒருவனை யொருவன் வெட்டுகிறதும் ஒருவனை யொருவன் யேசுகிறதும் ஒருவனை யொருவன் அனியாயஞ்செய்கிறதும் ஹறுமா யிருக்கும் நீங்கள் மேலைக்கு கியாமநாளில் அல்லாகுத்தஆலாவுடைய சமுகத்தில் ஜவாபுசொல்லும்படிவந்து நேறிடும் வுங்களை அணுவளவாவது விடாமற் கேள்வி கணக்குக் கேட்பானென்று திருவாய்மலர்ந்தருளினுர்கள்.

அல்லாகுத்தஆலா அனியாயஞ் செய்கிற மனிதனுக்குக் கொஞ்சம் விடுதலை கொடுக்கிறுன் பிடித்தானேயானுல் ஒரே பிடியாகப் பிடிப்பான் அது யேதுபோலெனில் பிறஅவுனுக்கு அனேகதவுலத்தையும் (சா) வயசையுங் கொடுத்தான் அவன் மனிதர்களை அநேகவிதமா யனீதஞ்செய்தான் ஒரு நாளாவது தலையிடி காச்சல் பல்வலி முதலியவியாதிகள் யுண்டாகவில்லை அப்பால் மூசா அலைகிஸ்ஸலாமவர்கள் மார்க்கத்தை யறிவிக்க அவன் ஒப்புக்கொள்ளாம லிரு

ந்ததர்க்காக அவனை ஓரேபிடியாப்பிடித்து நீலாற்றில் ஹலாக்காக்கி ஞன் அவனுக்கு அன்னேரம் யாதொன்றும் பிரயோசனங் கொடுக்கவில்லை.

இன்னம் யாராவது ஒருவன் யின்னமொருவனுடைய பூமியில் அனியாயமாக ஒரு முழமாவது யெடுப்பானுகில் அந்தபூமியை யேழாம்பூமிவரை தோண்டி யவன்கழுத்திற் காரையாகப்போடப்படும்.

இன்னம் அனியாயம் மூன்றுவகையாக யிருக்கும் அதில் (௧-வது) அல்லாவுக்கு யிணைவைக்கிற அனியாயம் அதை அல்லா குத்தஆலா ஒருபோதும் பொறுக்கமாட்டான் (௨-வது) அல்லாவுடைய வுத்திரவுக்கு விரோதமாக நடந்து மனிதர்கள் தங்கள் ஜடலங்களுக்கு அனியாயஞ் செய்கிறது அதை அல்லா நாடினுற் பொறுப்பான் (௩-வது) மனிதர்கள் ஒன்றுக்கொன்று அனியாயஞ்செய்கிறது அதை மனிதர்கள் பொறுக்காவிட்டால் அல்லாகுத்த ஆலாவும் பொறுக்க மாட்டானென்று நபிநாயகம் அகுமது றசூல்சல்லல்லாகு அலைகிஒசல்ல மவர்களுடைய (ஹதீது) வந்திருக்கிறது.

கல்புனுடைய பாவங்களின் பாபு.

கல்புனுடைய பாவங்க ளநேகமுண்டு கல்பாகிறது வுறுப்புகளுக்கெல்லாந் தலைவனுக யிருக்கும் அதினுடைய துற்குணங்களைவிட்டும் துய்தாக்குவது பறுலு ஐனுகயிருக்கும்,

ஹ தீ து.

ஆதமுடைய மக்களின் ஜடலத்தில் ஒரு துண்டுக்கறி யிருக்கிறது அது யிணக்கமாகிவிட்டாற் சரீர மடங்கலு மிணக்கமாகிவிடும் அது கெட்டுவிட்டாற் சரீர மடங்கலுங் கெட்டுவிடும் அதாவது கல்பாக யிருக்குமென்று நபிநாயகம்அவர்கள் திருவுளம்பற்றினூர்கள்.

ஹிக்காயத்து.

லுக்குமான் ஹக்கீம் ஒரு மனிதனுக்குள் விலைப்பட்ட ஹபசியாகிய அடிமையாக யிருந்தார்கள் ஒருநாள் அந்த இசமான் இவர்களைப்பார்த்து ஒரு ஆட்டை யறுத்து நல்ல கறியாக ஒரு துண்டுதசை கொண்டுவரவேண்டுமென்று சொன்னார் வுடனே இவர்கள் ஒரு ஆட்டையறுத்து நாவையுந் தாமரைக்காயையும் யெடுத்துக் கொண்டுபோய் அவரிடங் கொடுத்தார்கள்,

மறுபடியு மொருநாள் ஒரு ஆட்டை யறுத்துக் கேவலமான ஒரு துண்டுச்சதை கொண்டுவந்து தரவேணுமென்று சொல்ல முன்போலவே நாவையுந் தாமரைக்காயையும் யெடுத்துக்கொண்டுபோய்க்கொடுத்தார்கள்.

வுடனே பார்த் தாச்சரியமடைந்து யென்னகாணும் முந்தியுமிதைத்தான் கொண்டுவந்தீர் இப்பவு மிதைத்தான் கொண்டு வந்தீரென்று இசமான் சொல்ல இவர்கள் இந்த இரண்டும் நல்தாகிவிட்டுதேயானால் வுறுப்புகளிலெல்லா மிதுதான் மேன்மையாயிருக்கும் கெட்டுவிட்டதேயானு லிதுதான் கெட்டதாயிருக்கு மென்று சொன்னார்கள் இவர்களுடைய புத்தியின் கூர்மையை இசமான் பார்த்து வுரிமைவிட்டார் அப்பால் வெகுநாளாக யிவர்கட்கு இசமானாயிருந்தவர் கிதுமத்துச் செய்தாரென்று (துகுறுல் ஆபிதீன்) யென்கிற கித்தாபில் வருகிறது கல்புக்கு வியாதி - பெருமை - முகத் தாட்சிணை கோபம் பொறுமை இவைபோ லொத்ததாக யிருக்கும்.

பெருமையின் விபரம்.

(குறுஆன் ஷரீபில்) சுவர்க்க லோகமென்னு நல்வீட்டை பசாதையும் பெருமையையு நாடாம லிருக்கிறவர்கட்கு நான் தங்கிஷஞ் செய்துவைத் திருக்கிறேனென்று அல்லாகுத்தஆலா திருவுளம் பற்றினான்.

ஹதீது.

மூன்று காரியம் மனிதனைக் கெடுத்துவிடும் அதாவது கடிசாகிய பகீல்தனமும் மனம்போன போக்கில் மார்க்கத்திர்க்குப் பிசகா நடக்கிறதும் தன்னைப் பெரிதாக யெண்ணி யகம் பெருமை யாகிறதுமாம்.

இன்னும் முற்காலத்தில் ஒரு மனிதன் அகம்பெருமை யெண்ணி வுடையிலும் நடையிலும் வேற்றுமையாக நடந்தான் அவனை அல்லாகுத்தஆலா பூமிக்குட் சுரிய வாங்கிவிட்டான் அவன் கியாமநாளாகிறவரைக்குங் கொஞ்சங் கொஞ்சமாகப் பூமிக்குட் டாழ்ந்துகொண்டிருக்கிறான்.

ஒரு மனிதன் பெருமையடித்தால் அவன் சிறுமையடைகுவான் தாழ்மை யடைந்தா லவன் மேன்மை யடைகுவானென்று நமது நாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிஉசல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள்.

ஹலறத்து அப்துல்லா இபுனு மஸ்கூது றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லிவருகிறதாவது ஈடேற்றமாகிறது தக்குவாச் செய்வதிலும் நல்லெண்ண மெண்ணுவதிலும் யிருக்கிறது கெடுதியாகிய ஹலாக்காகிறது பெருமையாக நடப்பதிலும் அல்லாவுடைய றகுமத்தைவிட்டு மாசை முறிவதிலும் யிருக்கிறது.

றிவாயத்து.

நபிநாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிஉசல்ல மவர்கள் பெருமையை விட்டு நீங்கி ஒட்டகைக்குப் புல்லுப் போடுகிறவர்களாகவும் தங்கள் சீலையை யொட்டுப்போடுகிறவர்க ளாகவும் தங்கள் செருப்பைத் தைக்கிறவர்களாகவும் தங்கள் வீட்டைத் தூக்கிறவர்களாகவும் ஆட்டிற் பால் கரக்கிறவர்களாகவும் அடிமையுடன் பசியாறுகிறவர்களாகவும் அடிமைக்கு யேலாதநேரத்தில் அவனுடன் மாவைத் திரிக்கிறவர்களாகவும் கடையிற் சாமான் வாங்கிக் கொண்டு

வருகிறவர்களாகவும் முதலாளிக்கும்மிசிக்கீனுக்கும் கைகொடுக்கிறவர்களாகவும் யாரைக் கண்டாலும் சலாம் முந்திச் சொல்லுகிறவர்களாகவும் யார்வீட்டிற் பசியாறக் கூப்பிட்டாலும் போகிறவர்களாகவும் அதிகக் கடப்பான வீண்செலவு செய்யாதவர்களாகவும் நற்குண முடையவர்களாகவும் குருஞ்சிரிப்பாகச் சமாள முகமானவர்களாகவும் கடுகடுப் பாகாதவர்களாகவும் தாழ்மையுள்ளவர்களாகவும் கல்பு யிரக்கமுள்ளவர்களாகவும் முசுலிமானவர்கள் பேரில்த் தயவுள்ளவர்களாகவும் மிகவும் பொசித்து வயிறு யேப்ப மிடாதவர்களாகவும் அவட்கை யில்லாதவர்களாகவும் இருந்தார்கள் (ஆதலால்) இப்பேர்க்கொத்த செய்கையை யுடையவர்களெல்லாம் பெருமையை விட்டும் நீங்கிவிடுவார்கள் இப்பேர்க்கொத்த செய்கையைத் தெரிந்துக் கொள்வது மேன்மையாயிருக்கும் யிப்பிரகாரம் முறுசிதென்னுங் கித்தாபிற் வருகின்றது.

முகத்தாட்சிணையின் பயான்.

குறுஆன் ஷரீபில் யாராவது ஒருவன் அல்லாவுடைய தெரிசினையை ஆதரவுவைத்தால் அவன் வணக்கத்திற் கொஞ்சமாவது முகத்தாட்சிணையில்லாமல் நல்ல அமலைச் செய்யவும் யென்று திருவுளம்பற்றினான்.

ஹதீது.

நான் முகத்தாட்சிணையாக வணங்கிறவர்களுடைய வணக்கத்தைவிட்டும் தேவை யற்றுவிட்டேனென்று அல்லாகுத்தஆலா திருவுளம்பற்றியதாகவுந் கியாம நாளையில் அல்லாவுடைய சமுகத்தில் சில மனிதர்களை நிறுத்தப்பட்டு கேள்வி கணக்குக் கேட்கப்பட்டவுடன் நீங்கள் யெனக்காக அமல்ச் செய்யவில்லை மனிதர்களுங்களை நல்லவர்களென்று சொல்லுவதர்க்காக அமற் செய்தீர்கள் அவர்களிடத்திற் றனேபோய்க் கூலியை வாங்கிக்கொள்ளுங்களென்று சொல்

வி அல்லாகுத்தஆலா அனுப்பி வைத்துவிடுவானென்றும், நபிநாயகம வர்கள் திருவாய்மலர்ந்தருளினர்கள்.

ஆகையால் கலப்பறுதலாக அல்லாகுத்தஆலாவுக்கு நல்ல அம லைச் செய்யவேண்டும் கலப்பறுதலின் அடையாளமாகிறது இவனை யிகழுகிறதும் புகழுகிறதும் ஒருப்போலே யிருக்கவேணு மென்று (துன்னூனில்மிசுரீ றகிமகுல்லாஃ) சொல்லுகிருர்கள்.

ஹிக்காயத்து.

ஜுனைதுல் பகுதாதி றகிமகுல்லாஃ அவர்கள் ஒருவழியேபோ கும்போது ஒரு தலத்தில் ஒரு மனிதன் யெல்லாரு நம்மை அவுலி யாவென்று சொல்லவும் விலாயத்துண்டாகவும் வேணுமென்கிற எ ண்ணமாக வணங்கிக்கொண் டிருந்ததிற் கொஞ்சங் கஸ்புகள் வெளி யாச்சுது அந்த மனிதனுடைய யெண்ணம் இவர்களுடைய கல்பிற் றேன்றியது இதைப்பற்றி இவனுடைய அமல் யெல்லாங் கெட்டு ப்போச்சுதென்று மனவருத்த மடைந்தார்கள்.

(றிசாலத்துல் குசையிரிய்யா) யென்னுங் கித்தாபில் வருகிறதாவ து ஒரு மனிதன் கல்பில் நமக்கு அல்லாகுத்தஆலா யெதை யாவது றபடியாக்கினல் அதைபக்கிறுக்குக் கொடுக்கவேணுமென்றுயெண் ணிக்கொண்டுபோக ஒரு மனித னிவருக்கு ஒரு தங்கக்காசைக்கொ டுத்தார் வுடனே நமக்கு மிகுதம் தேள்வையிருக்கிறதே இதை எங் கே கொடுக்கவென்று யெண்ணினர் அப்பவே பல்லுவலிவந்தது ஒ ருபல்லைப் பிடிங்கினர் மறு பல்லும் வலித்தது அதையும்பிடிங்கினர் வுடனே ஒரு சத்தம்வந்தது தங்கக்காசை பக்கிறுக்குக் கொடுக்காவி ட்டால் வுன்பல் லடங்கலையும் பிடுங்கும்படி செய்வோமென்று வுட னேகொடுத்துவிட்டார்.

ஆகையால் மனிதனுக்கு மனிதன் ஒரு காரியத்தைச் செய்து கொடுக்கவேணுமென்று நாடினல் அந்தப்படி நிறைவேற்றவேண்டிய

து கடமை நற்கருமத்தை நாடினல் பத்து நன்மை யெழுதப்படுமெ ன்று (ஹதீதில்) வந்திருக்கிறது.

கோபத்துடைய பயான் ஹதீது.

கோபமாகிறது ஈமானைக் கெடுத்துவிடும் தேனைக் கரிய போள ங் கெடுக்கிறது போலே,

இன்னம் யாராவது ஒரு மனிதன் நரகத்தைவிட்டு நீங்கி சொர்க்கஞ் சேரநாடினல் அவனுடைய மேலெண்ணத்தை நிறைவேற்றி மனிதர்களுடைய குற்றத்தை மன்னிக்கவும் யாராவது ஒருமனிதன் கோபத்தை யடைக்கினல் அவனுடைய கல்பை அல்லாகுத்த ஆலா பொருத்தத்தால் நிறப்புவான் இன்னும் கோபமாகிறது ஷைத்தானுடைய குணமாகயிருக்கும் செய்த்தானை நெருப்பில் நின்றும் படைக்கப்பட்டது நெருப்பை அமைக்கிறது தண்ணீராயிருப்பதால் கோபம் வந்தவுடனே அஊதுசொல்லி ஒலுச்செய்துக்கொள்ளுங்கள் கோபம் நீங்கிவிடுமென்று நபிநாயகம் அவர்கள் திருவுளம்பற்றியதாக ஹம்பலி இமாமும் தபுறுனியும் பேசிவந்தார்கள்,

ஹிக்காயத்து

வகபு றலியல்லாகு அன்கு அவர்கள் பேசிவருகிறதாவது ஈசா அலைகிஸ்ஸலா மவர்களுடைய மார்க்கத்தில் வுள்ள ஒரு ஆபிது ஒரு மலையில் இபாதத்து கானவிலிருந்து வணங்கிக்கொண்டிருக்கும்போது ஒருநாள் இபுலீசு அவரை வழி கெடுக்க நாடிவந்து வெளியில் நின்று சத்தமிட்டான் அவர் ஒன்றும் பேசவில்லை நான் போனல் நீர் கைசேதப்படுவீர் நான் ஈசா நபியாக யிருக்குமென்றுசொன்னன் நீர் ஈசாநபியாக யிருந்தால் நான் யென்னசெய்யவேணும் நீர்தான் முந்தியே இபாதத்துச் செய்யும்படி யேவிக் கியாமநாளுண்டுமென்று வார்த்தைப்பாடு செய்தீரே இப்பம் வேறே விதமாகச் சொன்னல் நா

ங்கள் ஒப்பமாட்டோமென்று சொல்ல இம்மனிதன் நமக்கு வழிப்படமாட்டான் நேரே சொல்லிவிடுவோமென்று நான் இபுலீசு வுன்னை வழிகெடுக்கவந்தேன் நீ யெனக்கு வழிப்படவில்லை ஆகையா லுனக்கு வேண்டுமான நல்லறிவை யென்னிடத்திற் கேளும் நான் சொல்லுகிறேனென்று இபுலீசு சொல்ல வுன்னிடத்தில் நான் என்னத்தை கேட்கவென்று சொன்னவுடன் பிற்காட்டிப்போனான்.

மறுபடி இபுலீசை ஆபிது கூப்பிட்டு ஆதமுடைய மக்களின் குணங்களில் வுனக்கு வுபயோகமான தென்ன சொல்லென்று கேட்க கோபமாகயிருக்கும் மனிதன் கோபமாக யிருக்கும்போது சிறு குழந்தைகள் பந்தைப் புரட்டுகிறதுபோல நாங்க ளவனைப் புரட்டிவிடுவோமென்று யிபுலீசு சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

இனி குறுஆன் ஷரீபில் முகம்மதுநபியே வும்மை யொருமனிதன் துர்வார்த்தை பேசினால் நல்லவார்த்தையைக் கொண்டு தட்டும் அப்போது வுமக்குக் கடிசான பகையனா யிருந்தவன் முடுகுதலாகிய தோழனாகிவிடுவானென்று அல்லாகுத்தஆலா திருவுளம்பற்றினான்.

ஹசதுடைய பயான்.

குறுஆன்ஷரீபில் நான் சில மனிதர்களுக்குக் கொடுத்திருக்கும்படியான வரிசையாகிய நிஃமத்தின்பேரில் மற்றவர்கள் ஹசதுவைப்பார்களோ அப்படி கசதுவைக்கவேண்டாமென்று அல்லாகுத்தஆலா திருவுளம்பற்றினான்,

ஹதீது.

நெருப்பு விறகைத் தின்னுகிறதுபோல் ஹஸதுங் கெடும்பும் நன்மைகளைத் தின்றுவிடும் ஹஸதுடைய காரணத்தால் இபுலீசு முனிவு பெற்றான் அழிச்சாட்டியமும் ஹஸதென்னுங் கெடுதியும் இணைவைக்கிற பாவத்திற்குச் சமானமாகும் திங்கட்கிழமைக்கும் வியாழக்கிழமைக்கும் மனிதர்களுடைய அமல்களை அல்லாகுத்தஆலா வுடைய

சமுகத்தில் மலக்குகள் கொடுபோய்க் காண்பிவிப்பார்கள். கெடும் புடையவனுக்கு மாத்திரங் கிருபை செய்யாமாட்டானென்று நமது நாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் திருவுளம்பற்றினார்கள்.

ஹறும் தின்னுகிறவனுடைய துஆவையும் மிகுதம் புறம் பேசுகிறவனுடைய துஆவையும் ஹஸதுக்காரனுடைய துஆவையும் அல்லாகுத்தஆலா ஒப்புக்கொள்ளமாட்டானென்று பக்கிஹுல் அபூலைது சொல்லுகிறார்கள்.

குறிகேட்கிறதின் பயான் ஹதீது.

இயாராவது ஒரு மனிதன் பறவை சாஸ்திரம் பார்ப்பானாகில் அல்லது பார்க்கச் சொல்லுவானாகில் அல்லது வள்ளுவன் குறத்தி கோடாங்கி இவர்களிடத்திலு மிவர்கள்போலொத்தவர்களிடத்திலுங் குறி பார்ப்பானாகில் அல்லது வஞ்சனை சூனியஞ் செய்வானாகில் அல்லது செய்யச் சொல்லுவானாகில் அவன் நம்மைச் சேர்ந்தவனல்லவென்றும் இன்னும் யாரொருவனொருவன் குறிகாரனிடத்தில் வந்து குறிகேட்டு அவன் சொன்னதை யுண்மை கொண்டால் அவன் தீனி விசுலாமென்னும் மார்க்கத்தைவிட்டு நீங்கிக் காபிராகிவிட்டானென்றும் நபிநாயகம் முகம்மதுசல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினதாக பஸ்ஸாறு பேசிவந்திருக்கிறார்கள்.

இமாமுல் அகுலம் அபூஹனீபா றகிமஹுல்லாகு அவர்கள் சொல்லி வருகிறதாவது ஒருவன் வஞ்சனை சூனியஞ்செய்கிறது ருசுப்பட்டால் அவனை யுடனே வெட்டவேணுமென்றும் அவன் தெளபாச்செய்து மீளுகிறேனென்று சொன்னாலும் விடப்படாது.

நாவால்வருகிற பாவங்களின் பாபு.

குறுஆன் ஷரீபில் ஒரு மனிதன் ஒரு வார்த்தையைப் பேசும்போது இரண்டு மலக்குகளிருந்து கேட்டுக்கொண் டிருப்பார்கள்

அம் மலக்குகள் கியாமநாளில் சாட்சி சொல்லுவார்கள் யென்று அல்லாகுத்தஆலா திருவுளம்பற்றினன்.

ஹதீது.

இயாராவது ஒரு மனிதன் தன் நாவையும் தன் அபத்தையும் ஹறுமில், பவிமாறமாட்டேனென்று யெனக்குப்பிணை கொடுப்பானேயானல் அவனுக்கு சொற்கலோகத்திர்க்கு நான் பிணையேற்றுக்கொள்வேனென்று ஒரு மனிதனுக்குப் பேச்சு அதிகமானல் அவனுக்குப் பாவமும் அதிகமாகும் பாவ மதிகமானல் கல்பு கிட்டுமையாகும் கல்பு கிட்டுமையானல் நரகம் புகுதுவானென்றும் வாயைமூடினல் சலாமத்தும் பெறுவானென்றும் நமதுநாயகம் முகம்மதுநபிசல்லல்லாகு அலைகிஉசல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினர்கள்.

புறம்பேசுவதின் பயான்.

(குறுஆன் ஷரீபில்) புறம் பேசுகிறவர்கட்கு ஓயிலென்னு நரகமென்று அல்லாகுத்தஆலா திருவுளம்பற்றினன்.

ஹதீது.

புறமென்பது ஒரு முசுலிமான மனிதனுக்குக் கோபம்வரும்படியான வார்த்தைகளைக்கொண்டு காணுதவிடத்திற் பேசுகிறதென்று நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிஉசல்லமவர்கள் சொல்ல நாயகமே நாங்கள் சொல்லும்படியான செய்கை அம்மனிதனிலிருந்தா லெப்படியென்று அசுகாபுகள் கேட்க அவனிலுள்ளதைத் தூஷணமாகச் சொன்னல் அது புறம் அவனி லில்லாத்ததைச் சொல்லுகிறது பொய்யாக யிருக்குமென்று நபிநாயகம்திருவுளம்பற்றினர்கள்.

இன்னும் நான் மிகுறுஜிக்குப் போம்போது சில ஜனங்கள் தங்களுடைய நெஞ்சுகளையும் முகங்களையும் செம்பு நகங்களால் வழித்

துக்கொண்டு அவதிப்படுகிறதைக் கண்டு இக்கூட்டம் யாராயிருக்கு மென்று ஜிபுரீல் அலைகிஸ்ஸலாம் அவர்களிடத்தில் நான் கேட்க இவர்கள் மனிதர்களுடைய இறைச்சியைத் தின்னுவதுபோ லுள்ள புறம் பேசினவர்களாக யிருக்குமென்று சொன்னார்கள்,

றிவாயத்து.

மனிதர்களைப் புறம் பேசுகிறவனுக்கு வுவமையாவது தன்னுடைய நன்மைகளை யெல்லாம் கவணில் வைத்து மேற்கேயுங் கிழக்கேயும் யெறிகிறவனைப்போலா யிருக்கும் கியாமநாளையில் அவன் பட்டோலையை அவன் கையிற் கொடுத்தவுடன் அதைப் பார்த்து விட்டு நான் தொழுத தொழுகைகளை யெங்கே நான் நடந்த நன்னடத்தைகளை யெங்கேயென்று கேட்பான் நீ மனிதர்களைப் புறம்பேசின காரணத்தால் அவ்வளவும் போய்விட்டதென்று மலக்குகள் சொல்லுவார்கள்.

இன்ன மொருமனிதன் தான் செய்யாத அமலுகள் அனேகமாகத் தன் பட்டோலையி லிருக்கிறதைப் பார்த்து இவ்வளவு நன்மையான அமல் யெனக்கு யேதென்று கேட்க வுன்னை யறியாதபடிக்கு மனிதர்கள் புறம் பேசினார்கள் அதின் காரணத்தால் அவர்களுடைய நன்மையைப் பிடுங்கி வுன் பட்டோலையில் யெழுதப் பட்டதென்று மலக்குகள் சொல்லுவார்கள் யென்று (முறுசிது) யென்கிற கித்தாபில் வருகின்றது,

ஹிக்காயத்து.

இமாம் ஹசனுல்பஸரி றகிமஹுல்லாஹ் அவர்களைக் குறித்து ஒரு மனிதன் புறம்பேசுகிறது தங்களுக்குத் தெரிந்து ஒரு தாம்பாளத்தில் நல்ல ஹல்வாவை வைத்து ஒரு மனிதனிடங் கொடுத்து அனுப்பும்போது வும்முடைய நன்மைகளை யெனக்கு ஹதியாவாக அனுப்பினீர் அதற்கு இது பகரமாக யிருக்குமென்று அந்தப் புறம் பேசுகிற மனிதனுக்குச் சொல்லும்படி செய்தார்கள்.

ஹதீது,

ஆயிஷா றலியல்லாகு அன்ஹா அவர்கள் நபிநாயகம் அவ
ளைப்பார்த்து அதோ போகிற பெண்பிள்ளை தன் சீலையை நீள
கவுடுத்திப் பெருமையாகப் போகிறாளென்று சொல்ல வுன்வாயி
ருக்கிறதைக் கீழே துப்பென்று நபிநாயகம் திருவுளமானார்கள்
னே துப்பினார்கள் அது தசைக்கட்டியாகவும் இரத்தமாகவு மிரு
து அப்போது நபிநாயகம் இதுவாகிறது அந்தப் பெண்பிள்ளையி
டைய கறியாகயிருக்கும் அதை நீ தின்றது வெளியில் வந்துவிட்
தென்று திருவுளம் பற்றினார்கள்.

இன்னும் புறம்பேசுகிறதைக் கேட்கிறவன் விலக்காதிருந்த
அவனும் புறம்பேசினவனைப்போலா யிருக்குமென்றும் புறமாகி
வட்டிவாங்கிற குற்றத்தைக்காணப் பெரிதாக யிருக்குமென்றும்
நாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் திருவு
பற்றினார்கள்.

புறம்பேசுகிறது ஆகுமானதானங்கள்.

அதாவது ஆறு தானமாக யிருக்கும் அதில் (௧- வது)
கு செய்கிறவனுடைய தீங்குகளில் மனிதர்கள் அகப்படாம லிரு
றதற்காக அவனுடைய தீங்குகளைச்சொல்லிக்காட்டுகிறது (௨-வ
காஸியுடைய பைஸலால் அநீதத்தி லகப்பட்டவன் இராஜாவினி
வந்து காஸி யநீதஞ்செய்து விட்டா ரென்று சொல்வது (௩ - வ
யாதொருவனுடைய கெட்ட கருமத்தை நீக்கி அவனைத் திரு
வதற்காக அதை விலக்கத் திராணிபெற்றவனிடம் இன்னானி
கருமஞ் செய்கிறான் அதை விலக்கென்று சொல்லுகிறது (௪-வ
பாவமான கருமத்தை வெட்க மில்லாமல் வெளியிரங்கமாகச்
கிறவனுடைய செயலைக்குறித்துப் பேசுகிறது (௫-வது) ஒரு
தனுக்குப் பொட்டையன் - கட்டையன்-நெட்டையன் இதுபோ
த்த பெயர் வைத்திருந்தா லதைச் சொல்லுகிறது (௬ - வது)

துவாக் கேட்கும்போது யென்நகப்பன் அல்லது யென் சகோதரன் அல்லது யென்புருஷன் யென்னை இன்னவிதமான அநீதஞ் செய்து விட்டானிது ஆகுமா ஆகாதா யென்று முபுத்தி யிடத்தில் பத்துவாத் தேடுகிறதுமாயிருக்கும்.

இவைகளைத் தவிர மற்றப்படி கலப்பறுதலாகவும் சாடை சைக்கினையாகவும் புறம் பேசுகிறது மூப்பது விடுத்தஞ் சினுச்செய்நதைக்காணப் பெரிய குற்றமாக யிருக்கும் ஆனால் ஒருவனைக் குறிக்காமல் மொத்தமாகப் பேசுகிறது குற்றமில்லை.

ஒரு மனிதனைத் தான் புறம்பேசின குற்றத்திற்காக அம்மனிதனுக்கும் பிழைபொறுக்கத் தேடவேணும் அவனிடத்திற் சொல்லி மன்னிப்புத் தேடுகிறதற்கு இடம்பாடானால் அவனிடம் மன்னிப்புத் தேடவேணும் புறம்பேசுகிற பாவத்தினின்றும் அல்லாகுத்தஆலா நம்மனைவரையுங் காப்பாற்றுவானாகவும் ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

பட்டர் சொல்லுகிறதின் பயான்.

(குறுஆன்ஷரீபில்) பத்தினியாகிய பெயர்களைப் பட்டர் சொல்லி சாட்சிகொண்டு வருமலிருக்கும்படியான ஜனங்களை (யெண்பது) விடுத்தம் அடியுங்களென்று அல்லாகுத்தஆலா திருவுளம்பற்றினான்.

ஹதீது.

மனிதர்களை ஹலாக்காக்கும்படியாகிய பாவங்கள் (யேழாக) யிருக்கும் அதாவது அல்லாகுத்தஆலாவுக்கு இணைவைக்கிறதும் வஞ்சனை சூனியஞ் செய்கிறதும் அனியாயமான கொலைசெய்கிறதும் எத்தீமான பிள்ளைகளுடைய முதலைத் தின்னுகிறதும் வட்டி தின்னுகிறதும் முசுலிம் ஒருபங்கு காபிர் இருபங்கு மிருந்து சண்டைசெய்கிறபோது வெருண் டோடுகிறதும் மூமினான பத்தினித்தனமாகிய பெண்களைப் பட்டர் சொல்லுகிறதுமாயிருக்கும்.

இப்பாவங்களைவிட்டும் தவிர்ந்துக்கொள்ளுங்களென்று நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினதாக அபூகுறைறு றெலியல்லாகு அன்கு அவர்களைத்தொட்டும் (ஸ்கீகுல்புகாறி-ஸகீகுல்முசிலீம்) யென்கிற கித்தாபுகளில்வருகின்றது

இயாராவது ஒருவன் தன்னுடைய வெள்ளாட்டியைச் சினுச்செய்தவளே யென்று அவள் சினுச்செய்தது தனக்கு றுசுவில்லாமற்சொன்னால் கியாமநாளையி லவனை படர்அடிக்கப்படும் யேனென்றால் அடிமைகளை படர்சொன்னதர்க்காக பூலோகத்தில் ஹத்தில்லையென்றும் இன்னும் யாராவது ஒருமனிதன் தனக்குப்பிறந்த பிள்ளையை அல்லத்தட்டினால் அவனை கியாமநாளையில் மனிதர்களடங்கலுக்குந் தெரியும்படி அவனை ஆண்டவன் பளிகத்தாக்கிவிடுவான் யாராவது ஒரு பெண்பிள்ளை ஒருவனுக்குப் பெற்றபிள்ளையை இன்னொருவனுடைய பிள்ளையென்று வளக்குச்செய்தால் அவளை அல்லாகுத்தஆலா சொற்கலோகஞ் சேர்க்கமாட்டானென்றும் நபிநாயகம் முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளம்பற்றியதாக (முறுசிது) யென்கிற கித்தாபில் வருகின்றது.

கோட்சொல்லுவதின் பயான்.

(குறுஆன்ஷரீபில்) முகம்மதுநபியே கோட்சொல்லும்படியாகிய புறம் பேசும்படியாகி தூஷணிப்பாக்கப்பட்ட பொய்ச்சத்தியஞ் செய்யும்படியான மனிதனடங்கலுக்கும் நீர் வழிப்படவேண்டாமென்று அல்லாகுத்தஆலா திருவுளம்பற்றினான்.

ஹதீது.

கோட் சொல்லுகிறவன் சொற்கலோகத்திற்புகுதமாட்டானென்றுங் கபுறுடைய அதாபைவிட்டும் மீட்சி பெறமாட்டானென்றும் யென்னுடைய வும்மத்தில் மிகவுங் கெட்டவர்களாகிறது கோட்சொ

ல்லி முசிலிமாகிய மனிதர்களுடைய முகப்பத்தைக் கெடுக்கிறவர்க ளாக யிருக்குமென்றும் நமதுநாயகம் முகம்மதுசல்லல்லாகு அலைகி ஒசல்லமவர்கள் திருவுளம்பற்றினார்கள்,

இன்னம் ஹாருமிலே பிறந்த மனிதன் கோட் சொல்வதற்கு கொஞ்சமாவது அஞ்சமாட்டானென்று அப்த்துல்லா ஹிபுனு முபா றக்கு சொன்னார்கள்,

றிவாயத்து.

கோட் சொல்லுகிறவனுடைய செய்கையாவது ஷெய்த்தானு டைய செய்கையைக் காண மிச்சங் கெட்டதா யிருக்குமென்றும்.

இன்னும் ஹலறத்து மூசா அலைகிஸ்ஸலா மவர்களுடைய கா லத்தில் பஞ்சம் வந்தபொழுது மழைக்காக அல்லாகுத்தஆலா யிட த்தில் துஆக் கேட்டார்கள் வும்முடைய கவுமுகளில் கோட்சொல் லும்படியான மனித னிருப்பதால் வும்முடைய துஆவைக் கபூற் செய்ய மாட்டோமென்று அல்லாகுத்தஆலா சொல்ல அவனைச்சொ ன்னால் யெங்களைவிட்டும் அப்புறப்படுத்தி விடுகிறோமென்று மூசா அலைகிஸ்ஸலாமவர்கள் சொன்னார்கள் அதற்கு அல்லாகுத்தஆலா ஆ ய் மூசாவே வுங்களை நான் கோட்சொல்லப்படாதென்று விலகியிரு ருக்க நான் கோட்சொல்லலாமாவென்று அறிவித்தான் வுடனே எ ல்லாஜனங்களும் தௌபாச்செய்தபின் மழை பெய்ததுயென்றும் (இ ருசாது) யென்கிற கித்தாபில் வருகின்றது.

பொய்சொல்வதின் பயான்,

(குறுஆன்ஷரீபில்) பொய் சொல்லுகிறவர்களின்பேரில் அல்லா குத்தஆலாவுடைய முனிவை ஆக்குவோமென்று வந்திருக்கின்றது,

ஹதீது.

ஒரு மனிதன் ஒரு பொய்யைச்சொன்னால் அவனுடையதுற் விச்சத்தால் அவனருகே யிருந்து பாதுகாக்கிற மலக்கு ஒரு மயில

த்நூர மவனைவிட்டும் அகன்றுபோவார்க ளென்றும் ஒரு மனிதன் ஒரு சிறுகுழந்தையை பார்த்து வாய்மூடி வுனக்கு இன்னது தரு கிறேனென்று சொல்லிக் கொடாவிட்டால் அல்லது வெறுங் கை யைக்கொண்டு இந்த கட்டியை வாங்குமென்று சொல்லிக் கூப்பிட் டால் அது பொய்யா யிருக்குமென்றும் இன்னும் ஒரு மனிதனில் நாலு செயலிருந்தால் அவன் வுண்மையாக முனாபிக்காயிருக்கும் நா லில் ஒரு செயலிருந்தால் கால்வாசி முனாபிக்காக யிருக்கும் அதா வது பொய் சொல்லுகிறது அறுதி மாறுகிறது அமானிதத்திர்க்கு மோசஞ்செய்கிறது வளக்கில் மாறுசெய்கிறது ஆகியின் னான்குமா யிருக்குமென்று நமதுநாயகம் முகம்மதுநபிசல்லல்லாகு அலைகிஉசல் லமவர்கள் திருவுளம்பற்றினார்கள்,

ஆதலால் ஒரு மனிதன் நாளெல்லாம் பொய்யனென்று பெய ர்பெற்றால் அவன் மெய்யானதைச் சொன்னாலும் ஒருவரும் ஒப்ப மாட்டார்கள்.

இன்னம் (தம்பீகில் ஹாயிலீன்) யென்கிற கித்தாபில் வருகி றதாவது நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிஉசல்லமவர்கள் மிகுறாஜிக்குப் போம்போது ஒரு மனிதனுடைய அலகைப் பிடரி வளையில் அறுக்கப்படவும் மறுபடியும் அலவு சேர்ந்துக்கொள்ளவும் மறுபடியு மறுக்கப்படவும் பின்னையுஞ் சேர்ந்துக்கொள்ளவுமாக இ ப்படியே அதாபு செய்கிறதைக் கண்டு இவன் யாரென்று ஜிபுரீல் அலைகிஸ்ஸலா மவர்களிடங் கேட்க இவன் தன்வீட்டை விட்டும் புறப்பட்டு மனிதர்களிடம் பொய்யைச்சொல்லித் திரிந்தானே அப் பேர்க்கொத்த மனிதனா யிருக்குமென்று ஜிபுரீல் அலைகிஸ்ஸலா ம வர்கள் சொன்னதாக வருகின்றது.

இனி யாராவது ஒரு மனிதன் இன்ன மொருவன் பேச்சை யொத்துக்கேட்டால் அவன் காதில் கியாமநாளையில் ஈய்யத்தைக்கா ச்சி விடப்படுமென்று நபிநாயகம் திருவுளம்பற்றினார்கள்.

பொய்ச்சாட்சியின் பயான் ஹதீது.

இயாராவது ஒரு முசுலிமான மனிதன்பேரிற் பொய்ச் சாட்சிசொன்னால் அவன் ஒதுங்குந் தானம் நரகமா யிருக்கும் ஹக்கான சாட்சியைத் தேடும்போது சொல்லாமல் மறைத்தவர்கள் பொய்ச்சாட்சி சொன்னவர்களைப்போலா யிருக்குமென்றும் பெரும்பாவங்களிலெல்லாம் பெரும்பாவமாகிறது இணைவைத்து வணங்கிறதும் தாய் தகப்பனை நோய்வினை செய்கிறதும் பொய்ச் சாட்சி சொல்லுகிறதுமா யிருக்குமென்று நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினார்கள்.

பொய்சொல்லுவது ஆகுந்தலம்.

ஆதரவது படைக்களத்திலும் இரண்டு வளக்காளியை இராசியாக்குவதர்க்காகவும் பெண்சாதியைச் சந்தோஷ மாக்குவதர்க்காகவுமா யிருக்கும்.

முசிலிமானவர்களை யேசுவதின் பயான்.

முஸ்லிமானவர்களை யேசுவதுந் தூஷணிப்பதும் புதிதர்கக்கேவலமான பட்டப்பேர் வைப்பதும் ஆகாது (குறுஆன்ஷரீபில்) முசுலிமாகிய ஆண் பெண்களை அவர்கள் செய்யாத நடத்தையைக்கொண்டு தூஷணித்து நோய்வினை செய்யும்படியான ஜனங்கள் வெளிச்சமாகிய பாவத்தையும் பொய்யையுஞ் சுமந்துகொண்டார்கள் யென்று வந்திருக்கின்றது.

ஹதீது.

ஒரு முசுலிமான மனிதனை யேசுகிறது பெரும்பாவமா யிருக்கும் இரண்டு முசிலிமானவன் ஒன்றுக்கொன்று தர்க்கம் பேசினால்

முந்தினவன் சொன்ன பேச்சைக்கேட்டு இரண்டாவதானவன் சும் மாயிருந்துவிட்டால் அவனுக்கு தவாபு கிடைக்கும் இரண்டு பெய ருங் கடப்புச் செய்தா விருவரும் பெரும்பாவியாவார்கள் யென்று நமது நாயகம் முகம்மது முஸ்தபா சல்லல்லாகு அலைகிஉசல்ல மவ ர்கள் திருவுளம்பற்றினர்கள்.

(இனி) முசிலிமைத் தூஷணித்துப் பரியாசம்பண்ணிக் கேவ லப்படுத்துவதைப் பற்றிக் (குறுஆன்ஷரீபில்) அல்லாகுத்தஆலா தி ருவுளம்பற்றியதாவது மூமீனுகிய ஜனங்களே ஒரு கவுமுகள் மற்ற வொரு கவுமுகளைப் பரியாசஞ் செய்யவேண்டாம் பரியாசஞ் செய் தவர்களைக்காண அவர்கள் நல்லவர்களாகிவிடப்போதும் சில பெண் பிள்ளைகள் மற்றப் பெண்பிள்ளைகளைப் பரியாசஞ் செய்ய வேண்டா ம் இந்தப் பெண்பிள்ளைகளைக் காண அந்தப் பெண் பிள்ளைகள் நல் லவர்க ளாகிவிடப்போதும் நீங்கள் ஒருவரை ஐபுசொல்லி அவர்கள் வுங்களை ஐபுசொல்லும்படி செய்துக்கொள்ளவேண்டாம் பொருத்த க்கேடாகிய பட்டப்பேரைச் சொல்லி யொருவருக்கொருவர் கூப்பி டவேண்டாம் இப்படிப் பரியாசம் பண்ணுகிறதும் ஐபு சொல்லுகி றதும் பட்டப்பெயர் ஒன்றுக்கொன்று சொல்லுகிறதும் மிகவுங்கெ ட்டவேலையாக யிருக்கும் இவைகளைவிட்டு யாராவது தௌபாச்செ ய்யவில்லையானுல் அவர்கள் அனியாயக்காரர்களாக யிருக்கும்.

ஹதீது

இயாராவது ஒரு மனிதன் அல்லாகுத்தஆலா இன்னுனுடை ய பாவத்தைப் பொறுக்கமாட்டானென்று சொன்னுல் அவனுடைய பாவத்தைப் பொறுத்து விட்டேன் வுன்னுடைய அமலை அழித்து விட்டேனென்று அல்லாகுத்தஆலா சொல்வா னென்று நமதாண் கை முகம்மதுநபிசல்லல்லாகு அலைகிஉசல்ல மவர்கள் திருவுளம்ப றினர்கள்.

லகுனத்துச் செய்வதின்பயான்.

முஸ்லிமான மனிதனை லகுனத்துச்செய்வது ஹறுமாயிருக்கும் ஆனால் பாவிகளை மொத்தமாக லகுனத்துச்செய்வது குற்றமில்லை ஆதலால் முஸ்லிமான மனிதர்கள் ஒன்றுக்கொன்று அதபாகவுஞ் சங்கையாகவும் பேசவேண்டும் அவர்களைக் கண்டால் சலாஞ்சொல்லிச் சந்திக்கவேண்டும் அல்லாகுத்தஆலாவுடைய றகுமத்துஞ் சங்கையும் இரண்டுபேருக்குங் கிடைக்கும் இன்னம் யாரையும் குபிரின்பேரில் மவுத்தாகும்படி துஆச் செய்யப்படாது.

இன்னும் முஸ்லிமாகிய மனிதனைக் கேலி பரியாசமாகக் காபிரே யென்றுசொல்லுவது குபுரை வருத்துகிறபடியால் அதைவிட்டும் பேணிக்கொள்ள வேண்டும் யேனென்றால் (துற்றுல் முகுத்தார்) யென்னுங் கித்தாபில் வருகிறது ஒருமனிதனைக் காபிரென்றுசொல்ல (௬௩) அத்தாட்சி யிருந்து முஸ்லிமென்று சொல்ல (௧) அத்தாச்சி யிருந்தாலும் அம் மனிதனை முஸ்லிமென்றே பத்துவாக்கொடுக்கவேணும் குபிரென்பது பெரும்பாவத்திலெல்லாம் பெரும்பாவமாகயிருப்பதால் அவ்வார்த்தை சொல்லப்படாது.

ஆதலால் அல்லாகுத்தஆலா நம்மனைவோரையும் நற்குணமுள்ள ஸாலிகான மூமீன்களுடைய கூட்டத்திற் சேர்த்துவைப்பானுக ஆமீன்.

பாவங்களைவிட்டுந் தௌபாச் செய்வதின் பாபு.

பாவங்களாவது இரண்டு வகைப்படும் ஒன்றுவது சிறு பாவங்கள் அதாவது பலவிதத்தாலு முண்டாகும் அப் பாவங்கள் நன்மையான அமல்களைச் செய்வதுகொண்டு மன்னிக்கப்படும் அப் பாவங்களைச் சிறுபாவந்தா னென்று மெல்லினமாக யெண்ணுமல் அப்

பாவத்தைச் செய்ய மிகவும் பயப்படவேண்டும் யேனென்றால் ஒரு பெரும்பாவத்தை இபுலீசினுடைய கலவுதலாலச் செய்தவுடன் மனதிற் கவலையாகிப் பயந்து இப்பேர்க்கொத்த பிர்மாண்டமான பாவஞ் செய்துவிட்டோமே யென்றெண்ணி மனவருத்தமாகிறகாரணத்தால் அல்லாகுத்தஆலா நாடினால் அப்பாவத்தைச் சிறுபாவமாக்கி வைக்கப்போதுமென்றும் ஒரு மனிதன் ஒரு சிறு பாவத்தைச் செய்துவிட்டு சிறு பாவந்தானே செய்தோமென்று மெல்லினமாக யெண்ணுகிறதுகொண்டு அல்லா நாடினால் அதைப் பெரும்பாவ மாக்கவும் போதுமென்று (தம்பீகுல் ஹாபிலீன்) யென்கிற கித்தாபில்வருகின்றது.

இரண்டாவது பெரும்பாவம் அது (சா) சில்வானவ்வளை யுண்டாயிருக்கிறதாய் (இபுனுஹஜர்) இமாம் அவர்கள் யெழுதியிருக்கிறார்கள் அதிற் சிலதாவது அல்லாகுத்த ஆலாவுக்கு இணையாக புத்துபஞ்சா வகையறுவை வைக்கிறது இது பெரும்பாவங்களி லெல்லா மிகவும் பாரதூரமான பெரும்பாவமாக யிருக்கும் இதற்கு கடுத்தது அநீதமான கொலைசெய்வது படர் சொல்லுவது வினைச்செய்வது பொய்ச்சத்தியஞ் செய்வது தாய் தகப்பனை நோய்வினைசெய்வது வஞ்சனை சூனியஞ் செய்வது யெத்தீமுடைய முதலை யெடுக்கிறது வட்டி தின்னுகிறது கட் குடிக்கிறது தொழுகையை விடுகிறது லூத்துச் செய்கிறது பொய்ச்சாட்சி சொல்லுகிறது ஒரு மனிதனை அநியாயஞ் செய்கிறது றமலானுடைய நோன்பைத் தங்கடமன்றியே விடுகிறது குடல்வாசி ஜனங்களை மார்க்கத்துடைய யேவலன்றி வெருத்திருக்கிறது அளவு நிறைகளிற் சூது செய்கிறது லஞ்சம்வாங்கிறது புருஷன் பெண்சாதிக் கிடையில் பித்தனுவை யிழுத்துவிடுகிறது அசுகாபுகளை யேசுகிறது வேற்றுமையான பெண்ணை ஆசையுடன் பார்க்கிறது ஹசதுவைக்கிறது பெருமை யடிக்கிறது குறுஆனைப் படித்து மறக்கிறது புறம்பேசுகிறது முசுலிமான ஜனங்களைப் பரியாசம் பண்ணுகிறது படையைவிட்டும்வெருண்டோடுகிறது பெரும்பாவத்தைச் செய்தாற் தௌபாச் செய்யாம லிருக்கிறது சூது

விளையாடுகிறது பகீல்த்தனம் பண்ணுகிறது தங்கப் பாத்திரத்தில்-வெள்ளிப்பாத்திரத்தில் வுண்ணுகிறது செய்த நன்றியை மறக்கிறது வுஸ்தாதை தூஷணிக்கிறது பெரும்பாவஞ் செய்கிறவர்களை இஸ்டம்வைக்கிறது வழிப்பாதையில் மலஞ் சலஞ் செய்கிறது நபிசல்லல்லாகு அலைகிஒசல்ல மவர்களுடைய பெயரைக்கேட்டு ஸலவாத்து சொல்லாதிருக்கிறது இதுபோலொத்ததாம் இப் பாவங்கள் மன்னிக்கப்படுகிறதர்க்கு தௌபாச் செய்வது கடமை.

(குறுஆன்ஷரீபில்) அல்லாகுத்தஆலா வுண்மையாக தௌபாச் செய்து ஈமான் கொண்டு ஸாலிகான அமல்ச் செய்கிற மனிதர்களுடைய பாவங்களை நான் பொறுப்பேனென்று திருவுளம்பற்றினான்.

ஹதீது.

மனிதர்களே அல்லாகுத்த ஆலாயிடத்தில் வுங்களுடைய பாவங்களைவிட்டும் தௌபாச்செய்து நல்ல அமலளவில் மீளுங்கள் நான் ஒருநாளொன்றுக்கு நூறுவிடுத்தம் யிஸ்திகுபாறுசெய்து தௌபாச்செய்து மீளுகிறேனென்று நபிநாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிஒசல்ல மவர்கள் திருவாய்மலர்ந் தருளினர்கள்.

இருவான்களே நபிநாயகமவர்கள் சிறுபாவம் பெரும்பாவங்களைவிட்டும் பரிசுத்தமானவர்களாயிருந்தும் ஒருநாளொன்றுக்கு நூறுவிடுத்தம் இஸ்திக்குபாறு செய்கிறதாகச் சொல்லியிருக்கிறார்கள் அதை நோட்டமிட்டு நம்மள் யாவரும் இஸ்திக்குபாறு செய்யவேண்டியது கடமையாக யிருக்குமென் றறியவேண்டியதுந் தவிர அதை மறக்காம லிருக்கவேண்டும்.

இனி தௌபா யென்பது பாவத்தைவிட்டு நீங்கி நன்மையான வணக்கத்தளவில் முன்னேக்கிறதின் பெயர் அது யெல்லா ஜனங்கள்பேரிலும் யெந்நேரமும் கடமையாயிருக்கும்,

ஒரு மனிதன் ஒரு பாவத்தைச் செய்தால் அதைவிட்டுந்தௌபாச் செய்கிறனு அல்லையாவென்று ஆறு ஷாஅத்துவரை மலக்கு

கள் யெழுதமாட்டார்கள் இதினிடையிற் பிழைபொறுக்கத் தேடா விட்டால் அப் பாவத்தை யெழுதுவார்கள்,

கலப்புறுதலான தௌபாவின் பயான்.

(குறாஆன்ஷரீபில்) மூமினாகிய ஜனங்களே ஆண்டவன் வுங்கள் பாவங்களைப் பொறுத்து சுவர்க்கபதி சேர்க்கப்போதும் வுங்கள்பாவத்தைவிட்டும் கலப்பறுதலாகிய தௌபாச் செய்து அல்லாகுத்த ஆலா அளவில் மீளுங்களென்று வந்திருக்கிறது.

இனி தௌபாவுடைய றுக்குனுகளாவது பாவத்தைவிட்டும் தன்னை நீக்கிறதும் செய்த பாவத்தின்பேரில் கைசேதப்பட்டுச் சலிக்கிறதும் அப்பாவத்தைக் காலா காலமும் செய்யாம லிருக்கிறதின் பேரில் தன் நாட்டத்தை ஒருபிக்கிறதும் அல்லாவுடைய ஹக்குகளில் அடியார்களுடைய ஹக்குகளில் இடம்பாடானதை நிறைவேற்றுகிறதுமா யிருக்கும்.

இவைகளிற் பெருப்பமானது செய்த குற்றத்தின்பேரில் கைசேதப்படுகிறதாக யிருக்கும் இதர்க்காகத்தான் நபிசல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் தௌபாவாகிறது கைசேதப் படுகிறதாக யிருக்குமென்று திருவுளம் பற்றினார்கள்.

அல்லாகுத்தஆலாவுடைய ஹக்குகளை நிறைவேற்றுகிறதாவது விட்ட தொழுகை நோன்பு ஸக்காத்து ஹஜ்ஜுபோலொத்ததை நிறைவேற்றுகிறதும் கப்பாறுவென்னும் தெண்டத்தை நிறைவேற்றுகிறதுமா யிருக்கும்.

அடியார்களுடைய ஹக்கை நிறைவேற்றுகிறதாவது இயாருடைய முதலையாகிலும் அனியாயமாகப் பறித்திருந்தால் அவனிடத்தில் அல்லது அவனுடைய அனந்தரக்கார னிடத்தில் யேப்பிவிக்கவும் அல்லது ஹலால் தேடி மன்னிப்புக் கேட்கவும் அவடத்திற்கு ஸபர்போய் யேப்பிவிக்க விட மில்லாவிட்டால் முதல்காரனுடைய

நியத்தைக்கொண்டு யேழை மிஸ்கீனுக்கு ஸதக்காச்செய்யவும் அல்லது பள்ளிவாசல் மதுறசாவின் செலவுகளில் நிறைவேற்றவும்,

ஒருவனை யடித்து யேசி நோவினை செய்திருந்தால் மன்னிப்புக்கேட்கவும் யேலாவிட்டால் அவனுக்குப் பிழை பொறுக்கத் தேடவும்·

(இஃ) தௌபாச் செய்தவனுக்கு அடையாளமாகிறது (நாலாகயிருக்கும்) அதில் (க - வது) பொய்சொல்லுகிறதைவிட்டும் புறம் பேசுவதை விட்டும் வீண்வார்த்தை பேசுகிறதை விட்டும் நாவைப் பேணுகிறது (உ - வது) ஒருவரையும் பகையாமலும் ஹசது வையாமலும் கல்பைப் பேணியிருக்கிறது (ங வது) வீணர் - வம்பர்- பாவஞ்செய்வோர் இவர்களைவிட்டும் நீங்கியிருக்கிறது (ச - வது) முன் செய்த பாவத்தை நினைத்துக் கைசேதப்பட்டவனாகவும் பிழைபொறுக்கத் தேடுகிறவனாகவும் அல்லாவுடைய வணக்கத்தின் பேரில்த் தெண்டிக்கிறவனாகவும் மவுத்துக்கு நல் தங்கரியக் தேடுகிறவனாகவுமிருக்கிறது,

ஒரு மனிதன் இப்பிரகாரம் கலப்பறுதலான தௌபாச் செய்தால் மற்ற மனிதர்கள் அவனை முகப்பத்து வைக்கிறதும் தௌபாவின்பேரில்த் தரிபாடா யிருக்கும்படி துஆச் செய்கிறதும் அவனை முந்தின பாவங்களை குறித்து ஐபுசொல்லாமலிருக்கிறதும் அவனைத் தங்களுட னிருத்தாட்டி நன்மையைக்கொண்டு வுபகாரஞ் செய்கிறதும் வாஜிபு இவ்விதம் (தம்பீகுல் ஹாபிலீன்) யென்கிற கித்தாபில் வருகிறது.

தௌபாவின் வரிசையின்பயான் ஹதீது,

ஒரு மூமீனாகிய மனிதன் ஒரு பாவஞ் செய்தால் அவனுடைய கல்பில் ஒரு கறுப்புப் புள்ளி விழும் தௌபாச் செய்து பிழை பொறுக்கத் தேடினால் அப் புள்ளியை மாற்றப்படும் பிழை பொ

றுக்கத் தேடாவிட்டால் அவன் கல்பை மூடிவிடுமென்றும் கலப்ப றுதலான தௌபாச் செய்தவன் பாவஞ் செய்யாதவனைப்போலாக யிருக்குமென்றும் நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளம்பற்றினார்கள்.

ஹிக்காயத்து.

பனூ யிசுறயீல் கூட்டத்தில் ஒரு மனிதன் பள்ளியில் அநேகஞ் சனங்க ளிருக்கும்போது பள்ளியின் வாசலில் வந்து நாம் இன்ன இன்ன பாவங்களெல்லாஞ் செய் திருக்கிறோமே இப் பள்ளிக்குள் நல்லோர்கள் முன்பாக நாம் யெப்படிபோகிறது யென றெண்ணித் தன் பாவங்களைக்கொண்டு தன்னைத் தூஷணித்து வாசல்வெளியில் நின்றார் வுடனே அல்லாகுத்தஆலா அக்காலத்திலுள்ள ஓர் நபிக்கு இம் மனிதன் தான் பாவத்தைச் செய்ததின் பேரில்த் தன்னைத் தூஷணித்து கைசேதப்படுகிற னிவன் (ஷித்தீக்குக) ளுடைய கூட்டத்திற் சேர்ந்துவிட்டானென்று ஒகி யனுப்பினான்.

இன்னும் (மதுனவிய்) யென்னுங் கித்தாபில் வருகிற தாவது யாராவது ஒருவன் அறுதிமானத்தையும் தௌபாவையும் முறித்தால் ஓடுக்கத்தில் அவன் அல்லாவுடைய லகுனத்துக்குப் பாத்திரப்பட்டவ னாகிவிடுவான்.

ஹிக்காயத்து.

இபுலீசு லகுனகுல்லாஹ் அல்லாகுத்த ஆலாவினிடத்தில் ஆண்டவனே யென்னை ஆதம் நபியுடைய காரணத்தால் சொற்கத்தைவிட்டும்வெளியாக்கி விட்டாய் அவர் பேரிலும் அவர்களுடைய பிச்சனத்தின்பேரிலும் யென்னைச் சாட்டிவை யென்றுகேட்க ஆதம் நபிக்கு ஒரு குழந்தை பிறந்தால் வுனக்கு மொரு குழந்தை பிறக்கும் அவர்களுடைய நெஞ்சுகளில் நீ னுழைய யிடமிருக்கிறது அவர்களுடைய முதலுகளைப் பாவத்திற் செலவு செய்கிறதுகொண்டு வுனக்குப் பங்கிருக்கிறது அவர்கள் பிசுமில்லாச் சொல்லாமற் செய்கிற

வேலைகளில் யெல்லாம் வுனக்குப் பங்கிருக்கிறது யென்று அல்லாகுத்தஆலா திருவுளம்பற்றினன் வுடனே ஆதம் மலைகிஸ்ஸலா மவர்கள் யெழுந்து நின்று யென் ஆண்டவனே அவனை யெங்கள்பேரிற்சாட்டிவிட்டாய் வுன்னைத்தவிர யெங்களுக்கு ஆதரவு யாருமில்லையென்று சொல்ல வுமக்கு ஒரு குழந்தை பிறந்தால் அதைப் பாதுகாக்க ஒரு மலக்கை யேற்படுத்துவேன் ஒரு நன்மை செய்தால் அதினுடைய தவாபைப் பத்துப்பங்கு யெழுதுவேன் யென்று சொல்லக் காணுமென்று சொன்னார்கள் அவர்களுடைய வுயிர் ஜடலத்தி லிருக்குங்காலமெல்லாம் தௌபாவை யொப்புக்கொள்வேன் அவர்களுடைய பாவங்களைப் பொறுக்கப் பாராட்டமாட்டே னென்றுசொல்ல ஆண்டவனே இவ்வளவு போதும்போது மென்றார்கள் இது செய்தி (நுசுகத்தில் மஜாலிசு) யென்கிற கித்தாபில் வருகின்றது,

அல்லாகுத்தஆலாவைப் பயப்படுகிறதின் பயான்.

ஹதீது.

இபுனு மஸ-கூது றலியல்லாகு அன்கு அவர்கள் நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிஉசல்ல மவர்கள் திருவாய்மலர்ந் தருளியதாகச் சொல்லுகிறதாவது ஒரு மூமினுகிய மனிதன் தன் பாவங்களை யொரு பிர்மாண்டமான மலையைப்போலவு மதுக்குங் கீழே தானிருக்கிறதுபோலேயும் அவன் மேலே அது விழுகப்போகிறதுபோலேயும் யெண்ணிப் பயந்துக்கொண் டிருப்பான் கெட்ட மனிதனுகிறவன் தன் பாவங்களை நாசிக்குமேலே பரக்கிற கொசுகுக்குச் சமமாக யெண்ணுவான் யென்றும்,

இன்னும் ஒரு மனிதனுடைய தொலி அல்லாகுத்த ஆலாவின் பயங்கரத்தாற் சிலுசிலுத்தால் அவனுடைய பாவங்கள் பட்டமரத்தி னிலைக ளுதிர்ந்துபோவதுபோ லுதிர்ந்து விடுமென்றுஞ் சொன்னார்கள்.

ஹிக்காயத்து

பனூயிசுறாயீல் கூட்டத்தில் ஒரு மனிதன் அல்லாகுத்த ஆலாவுக்கு சிலநாள் இபாதத்துச்செய்தபின் இருபது வருடம் மாறுசெய்துக்கொண்டிருந்தான் ஒருநாள் ஒரு கண்ணாடியில்த் தன் முகத்தைப் பார்க்கும்போது தாடியில் நரை வெளியானதைக்கண்டு ஆண்டவனே இருபதுவருஷம் உனக்கு நான் மாறுசெய்தேன் உன்னளவில் நான் தௌபாச்செய்து மீண்டால் யென்னை நீ யொப்புக்கொள்வாயாவென்று சொன்னார் அப்பவே நம்மை நீ முந்திப் பிரியம்வைத்தாய் வுன்னை நாம் பிரியம் வைத்தோம் அதர்க்குப் பின் நீ மாறுசெய்தாய் வுனக்கு நாம் வீவுகொடுத் திருந்தோம் இனி நம்மளவில் நீ வந்து சேர்ந்தால் நாம் ஒப்புக்கொள்வோ மென்று ஒரு சப்தங்கேட்டது வுடனே கலப்பறுதலான தௌபாச் செய்து அல்லாவைப் பயந் தழுது நன்னடத்தையில் திரும்பிவிட்டார்.

றிவாயத்து.

அல்லாகுத்தஆலா தன்னுடைய மூமினாகிய அடியான் தௌபாச் செய்கிறதைக்கொண்டு யெவ்வளவு சந்தோஷமாகிறானேயானால் ஒரு மனிதன் தன்னுடன் ஒட்டகையில் ஒஜீபனங் தண்ணீர்முதலானதுகளை வைத்து ஒரு பயங்கரமான காட்டிற்போ யிறங்கி யொருபக்கத்தில் ஒட்டகத்தை நிறுத்திவிட்டுக் கீழே தலையை வைத்து நித்திரை செய்தபின் முழித்துப்பார்க்க வொட்டகையைக் காணாமல் அவ் வொட்டகையைக் காடெல்லாந் தேடித் திரிந்து பார்க்கும்போது கடிசாகிய தாகமும் பசியும் காங்கையும் அதிகப்பட்டுப் பேசானுகி நாம் முந்தியிருந்த இடத்திற்போய் மவுத்தாகிற மட்டுக்கும் நித்திரைசெய்வோமென் றெண்ணி அத்தலத்திர்க்கு வந்து தலையைக் கொடுங்கையின் பேரில்வைத்து மவுத்தாகுவோமென்று யெண்ணிக் கொஞ்சம் நித்திரை செய்து முழித்துப்பார்க்க அத்தலத்தில் ஒட்டகமும் அதிலிருந்த சாமானு மிருக்கும்படி கண்டால் யெவ்வளவு சந்தோஷமாவானோ அந்தக்காண அல்லாகுத்த ஆலா விடத்தில் மூமினாகிய மனிதன் தௌபாச் செய்து மீளுகிறதின்பேரில் அல்லா

குத்தஆலா மிகவுஞ் சந்தோஷமாவான் யென்று நபிசல்லல்லாகு அலைகி ஒசல்லமவர்கள் திருவுளம்பற்றியதாக (புகாறி முசுலிம்) திருமதி யென்ற கித்தாப்புகளில் வருகிறது.

ஹதீது

தௌபாவை மேலைக்குச் செய்யலாமென் றெண்ணிப் பிற்படுத்திக் கொண்டிருக்கும்படியான ஜனங்கள் கெட்டு ஹலாக்காகிப் போவார்களென்று நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைகி ஒசல்லமவர்கள் திருவுளம்பற்றினார்கள்.

இன்னம் யாராகிலு மொரு மனிதன் தன்னுடைய கண் அல்லாவைப் பயந்து தன் பாவங்களை நினைத்துக் கண்ணீரொழுகும்படி அழுதால் ஒவ்வொரு துள்ளிகளையும் மீசான்யென்கிற தராசில் வுகுதுமலையைப்போல வைத்து நிறுக்கப்பட்டு ஒவ்வொரு துள்ளிக்கும் பதிலாக சொற்கலோகத்தில் ஒவ்வொரு ஆற்றைக் கொடுக்கப்படும் அதைச் சூழ அநேகம் பட்டணங்களும் அநேகம் மாளிகைகளும் தோப்புகளும் மட்டிட முடியாத நிகுமத்துகளும் வுண்டாயிருக்குமென்று நமது நாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகி ஒசல்ல மவர்கள் திருவுளம்பற்றினார்கள் இந்தச் செய்திகள் (நுசுகத்தில் மஜாலிசு) இருசாது யென்கிற கித்தாபுகளில் வருகின்றது.

ஆகையால் யெல்லா ஜனங்களும் அல்லாவை பயந்து பாவத்தை நினைத்து கலப்பறுதலான தௌபாச்செய்கிறது வேண்டுமானதாகயிருக்கிறது நம் மனைவோரையுங் கலப்பறுதலான தௌபாச் செய்து அல்லாவைப் பயந்து நல்ல அமல்ச்செய்துவருகிற ஸாலிகீன்களுடைய கூட்டத்திற் சேர்ப்பானாக ஆமீன்,

{ அல்லாகுத்தஆலாவின் றகுமத்துடைய பயான் ஹதீது. }

அல்லாகுத்தஆலா கல்க்குகளைப் படைத்துக் கட்டளைசெய்தபொழுது என்னுடைய கிருபையாகிறது என் கோபத்தை மீறிவிட்

டிதென்று அறுஷிக்கு மேல் யெழுதினைக் திருக்கிறு னென்றும் என்னுடைய ஷபாஅத்தாகிறது யென் னுமைத்திற் பெரும்பாவஞ்செய்தவர்களுக்காக யிருக்குமென்றும் அதைப் பொய்யென்றுசொன்னவன் அந்த ஷபாஅத்தைப் பெற்றுக்கொள்ள மாட்டானென்றும் அல்லாகுத்தஆலா (நூறு) றகுமத்தைப் படைத்து அதி லொரு றகுமத்தைப் பூலோகத்தி லிருக்கிற சீவசெந்து ஜனங்க ளடங்கலுக்குங் காணும்படி யிறக்கி யிருக்கிறுன் அது கியாமநா ளாகிறமட்டுக்கும் விஸ்தினமாகும் கியாமநாள் வந்தவுடன் இந்த ஒரு றகுமத்தையும் மற்றத் (தொண்ணூற் றொன்பது) றகுமத்துடன் சேர்த்து நூருக நிறப்பமாக்கி அல்லாகுத்த ஆலாவினுடைய மூமினுன நல்லடியார்களாகிய சிதேவிகள் மீதி லாக்கி விடுவானென்றும் நபிநாயகம் முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளம் பற்றினர்கள்.

ஹிக்காயத்து.

முற்காலத்தி லொரு மனிதன் ஸக்கறுத்து வந்தவுடனே யெனக்குப் பாவம் அதிகமா யிருப்பதால் நான் மவுத்தானல் யென்னைத் தீயிற்போட் டெரித்துச் சாம்பலாக்கிப் பாதிச்சாம்பலைக் கடலிற் கரைத்தும் பாதியை ஆகாயத்திற்றூவியும் விடுங்களென்று வசியத்துச்செய்து மவுத்தானபின் அப்படியே செய்தார்கள் வுடனே அல்லாகுத்தஆலா அச்சாம்பல்களையெல்லாந் திரட்டி ரூபமாக்கி நீயே னிப்படிச் செய்யச் சொன்னு யென்று கேட்க ஆண்டவனே வுன்னைப் பயந்து இப்பிரகாரஞ் செய்யச்சொன்னே னென்று அல்லாகுத்த ஆலாவிடஞ் சொன்னர் அல்லாகுத்தஆலா அவருடைய பயங்கரத்தால் அவர் செய்த பாவங்க ளடங்கலையும் பொறுத்தான் யென்று நபிநாயகம் திருவுளமானதாக (தம்பீகுல் ஹாபிலீன்) யென்கிற கித்தாயில் வருகின்றது.

இன்னும் ஈமானகிறது அல்லாவுடைய அதாபைப் பயப்படுகிறதர்க் கிடையிலும் அவனுடைய றகுமத்தை ஆதரவு வைக்கிறதர்க்கிடையிலுமாக யிருக்குமென்று நபிநாயகம் அவர்கள் திருவுளமா

கி யிருப்பதால் அவனுடைய அதாபைப் பயப்படுகிறதும் அவனுடைய றகுமத்தை ஆதரவுவைக்கிறதும் யெல்லார்கள்மீதுங் கடமை அல்லாகுத்தஆலா தனது மூமினுகிய அடியார்கள்பேரில் தாயானவள் பிள்ளைகளின்பேரில் இரக்கம் வைப்பதைக்காண அதிகக்கிருபையுள்ளவனு யிருக்குமென்றும் நபிநாயகம் திருவுளம்பற்றினுர்கள்.

புலையிலிருனு யியாலு றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறதாவது ஒரு மனிதன் சுவாத்தியமாக யிருக்கும் போது பயம் வைத்து நல்ல அமல் மிகுதஞ்செய்கிறதும் நசலாகயிருக்கும்போது தாக்கத்துக் குறைந்திருப்பதால் அவனுடைய றகுமத்தை ஆதரவு வைக்கிறதும் ஏற்றமாயிருக்கும்.

இன்னும் (குறஆன்ஷரீபில்) மனிதர்களே அல்லாவுடைய தக்குவாக்கொண்டும் நல்ல வணக்கங்களைக்கொண்டும் அல்லாவுடைய பொருத்தத்தளவிலும் வானலோகம் பூலோக மிவைகளைக்காண விஸ்தீனமுள்ள சொர்க்க லோகத்தளவிலும் தீவரமாகிக் கொள்ளுங்களென்றும் அல்லாகுத்தஆலா திருவுளம்பற்றினுன்.

ஹதீது.

அல்லாகுத்த ஆலா சொர்க்கலோகங்களைப் படைத்து அவைகளிலே அநேகவிதமான மாளிகைகளும் கஸ்தூரிமேடைகளும் தோப்புக்களும் பட்சிகளும் பலநிறமுள்ள அழகான கூறுலீன்களும் அநேக வகையான நிகுமத்துகளும் தன்னுடைய மூமீனன நல்லஅடியார்களுக்குத் தயாரியஞ் செய்து வைத்திருக்கிறுன் அதிலுள்ள முத்துக்களி லொன்றை பூமியில் வெளியாக்கினுல் சந்திரன் சூரியன் இவைகளுடைய பிரகாசத்தை மாற்றித் தன்னுடைய பிரகாசத்தை யே வெளியாக்கிவிடும் அந்த கூறுலீன்களி லொருவர் கடலிற் துப்பினுல் கடற் சலமெல்லாம் மதுரமாகிவிடும் இந்த நிகுமத்துகளி லெல்லாம் பெரிய நிகுமத்தாகிறது அல்லாரப்பில் ஆலமீனுடைய திருக்காட்சியாக யிருக்குமென்று நமது நாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளம்பற்றினுர்கள்.

நற்புத்தி யுபதேசப்பிரசங்கம்.

குறுஆன்ஷரீபில் மகா வலுப்பமும் மேன்மையும் வுயர்த்தியும் சங்கையும்பொருந்திய மாலிக்குல் முலூக் கென்னும் இராஜாக்களுக்கெல்லா மிராஜாவாகிய நமதாண்டவன் அல்லாகு சுபுகானகுதஆலா ஷானுகு வஅம்மனவாலுகு யாவருக்குந் துலக்கமாய்விளங்கும்படி திருவுளம்பற்றியிருக்கிறான் யாதெனில் ஆய் அகப்பார்வையுடையவர்களொன்னும் வுள்விளங்கி அறியும்படியாகிய கூட்டங்களே வுங்களுக்கு முன்னுண்டாகிய கவ்முகளுடைய நடத்தைகளையும் ஹாலுகளையும் அவர்கள் சென்ற இடங்களையும் அவர்களுடைய சரித்திரங்களையும் அவர்கள்போன போக்கையும் நன்றாகவிசாரித்து நாமளும் அவர்களைப்போலழிந்து பனுவாகி மண்ணறையிற் சேர்ந்து விடுவோமென் றன்புகூர்ந்து வுறுதிபெற்றுக் கொள்ளுங்களென்று அல்லாகு சுபுகானகு ஒத்தஆலா திருவுளமா யிருக்கிறான்.

இன்னும் துன்யாவினுடைய இன்ப சுகங்களாவது அதை யனுபவிக்கிறவர்கட்குக் கடல்த் தண்ணீரைப் போலா யிருக்கும் எவ்வளவு குடித்தாலுந் தாகந் தீராது கடாசி ஹலாக்காக்கி விடுமென்று நபிநாயகம் முகம்மது நபிசல்லலல்லாகு அலைகிஒசல்லமவர்கள் திருவுளமானார்கள்.

இன்னும் (கஸ்ஸாலிறகுமகுல்லாஹி) அவர்கள் இத் துன்யாவைப்பற்றி யொரு வுவமை சொல்லுகிறார்கள் அவை யாதெனில் சில ஜனங்கள் ஒரு ஊருக்குப்போய்ச் சேருகிறதர்க்காக ஒரு கப்பலிலேறிப் போகும்போது வழியில் ஒரு தீவைக்கண்டு கப்பலுடைய நகுதாவாகிய ஹேஜண்டு ஜனங்களை இந்தத் தீவிற்போய் அதிசயங்களைப் பார்த்துவிட்டு வாருங்களென்று சொல்லி இறக்கிவிட்டார் ஜனங்களதைக்கேட்டு அந்தத் தீவைப் போய்ப் பார்க்கும்போது அதில் விநோதமாகிய தண்ணீர்த் தடாகங்களுஞ் சுனைகளும் அருமையாகிய

சோலைகளும் இன்பமாகிய கனிகளும் பலவிதமாகிய வின்பங்களு ம் யிருக்கிறதைக் கண்டு அக் கூட்டங்கள் நாலு பாகமாகப் பிரிந்தா ர்கள் ஒரு கூட்டம் போனவுடனே அதில் தரிக்காமல் சொற்ப வி ன்பங்களைப் பெற்றுக்கொண்டு தீவரமாகக் கப்பலில் வந்து சாதா ருணமாய்ப் படுத்துக்கொண்டார்கள் ஒரு கூட்டம் கொஞ்சநேரந் த ரித்து அதிக சுகம்பெற்று கலிதீரும்படி நின்றுவிட்டு கப்பலில்வந் து வட்கார்ந் திருக்குறுர்கள் ஒரு கூட்டம் தாங்கள் வயிறு நிரம்ப த்தின்று அக்கனிகளைச் சுமையாகக் கட்டித் தலையிற் சுமந்துக்கொ ண்டு கப்பலுக்கு வந்து பார்க்கக் கப்பலில் சுமைகளை வைக்க இட மில்லாமலுந் தாங்க ளிருக்க இடமில்லாமலு மிருந்ததால் அச்சுமை களை வெகுநேரமாகச் சுமந்துக்கொண்டு நின்று சடைத்த பின் அச் சுமைகளைக் கடலில்த் தள்ளிவிட்டுக் கப்பலில் அப்படியே நின்றார் கள் ஒரு கூட்டங் கப்பலை மறந்துவிட்டுத் தீவின் இன்பத்திலேயே மயங்கிவிட்டார்கள்-கப்பல் அப்படியே போய்விட்டது யிதேபிரகார ந்தான் அல்லாகுத்தஆலா மனிதர்களை பூமியென்கிற தீவுக்குப்போ ய் ஆகிறத்திர்க்கு வரும்படி அனுப்பினுன் அவர்கள் யின் னுங்குபா கமாகப் பிரிந்தார்கள்.

அதன் விபரமாவது (முதலாவது) கூட்டமென்றது அம்பியா க்கள் அவுலியாக்களாக யிருக்கும் அவர்கள் யிபாதத்துக்கு வுதவி யானமட்டும் புசித்து துன்யாவி ன்பசுகங்களைவிட்டும் நீங்கிக் கபூ லான அமல்களுடனே கபுறுக்குப் போனுர்கள் இரண்டாவது கூட் டமென்றது சாலிகான மூமீன்களாக யிருக்கும் அவர்கள் துன்யா வின் கலாலான ஒசிபணத்தைத் தேடி சம்பாதித்ததுடன் நல்லஅம ல்க்களைக் கொண்டுவந்தார்கள். (மூன்ருவது) கூட்ட மென்றது துன் யாவையே விரும்பி அமல்ச்செய்யாமல்ச் சம்பாத்தியஞ் செய்து வைத் தமுதல் அவர்கட்கு வுபயோக மில்லாமல் யேங்கி யேங்கி சக்கறுத் தில் மிக வருத்தப்பட்டு முதலை விட்டுப்போருமே யென்ற வருத் தத்துடனே முதல் வெளியிற் பேபுட்டுவிட்டுப் பிவண்டு சாணி பி

முதலிய நசீசை வெளியிற் போட்டுவிட்டுக் குழிக்குப்போவதுபோ ற் கபுறுக்குப் போகின்றார்கள் இந்தமூன்றுகூட்டமும் மூமினு யிருப் பதால் அமலுக்குத்தக்கபடி சுவர்க்கம் புகுதுகின்றார்கள் (நாலாவது) கூட்டமாகிறது ஆகிறத்தை மறந்து காபிராகிவிட்டபடியால் சுவர்க்க ம் புகுதமாட்டார்கள் இவர்களுக்கு ஆகிறத்துடைய நினவே யில்லை துன்யாவே கெதியாக யிருக்குமென்ற யெண்ணத் துடையவர்களாக விருக்கும்.

இதர்க்காகத்தான் நமது நாயகம் முகம்மது நபிசல்லல்லாகு அ லைகிவசல்ல மவர்கள் திருவுளம்பற்றியதாவது துன்யாவானது ஒருசா அத்து நேரமா யிருக்கும் அதில் சுகமென்ப தில்லை இன்னும் ஒருவ ன் துன்யாவை விரும்பினல் அவனை அதுஅடிமையாக்கிக்கொள்ளும் துன்யாவை விட்டுவிட்டு ஆண்டவனை விரும்பினல் அந்தத்துன்யா அ வனுக்கு அடிமையாகத் தொண்டு ஊழியஞ் செய்யு மென்று திருவு ளம்பற்றினர்கள்.

(ஆகையால்) யெமது வுடற்பிறப்பாகிய இகுவான்களே இந்த மருட்டுதலையுடைய துன்யாவுக்கு வழிப்படாமல் அல்லாகுத்த ஆலா வுடைய கட்டளைக்குத் தலைசாய்த்து இக்கித்தாபிற் சொல்லியிருக்கிற மார்க்கவிதிகளைத் தெளிவா யறிந்து நடந்துவருவீர்க ளாகவும்.

ஆண்டவனே யெனக்கும் யென்னுடைய தாய் தகப்பன்மார்க ள் வுஸ்தாதுமார்கள் மற்று மூமீன்கள் யாவருக்கும் பிழைபொறுத்து க்கிறுபை செய்வாயாக ஆமீன் ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

{வலிகானவர்களுடைய ஹிக்காயத்துப் பிரசங்கம்.}

(குறுஆன்ஷரீபில்) அல்லாகு சுபுகானகு வத்தஆலா ஷானகு வஅம்மனவாலுகு திருவுளம்பற்றியதாவது யாதெனில் ஆய் நமதுநபி யாகிய முகம்மதுநபியே யுமக்கு முன்னுள்ள நபிமார்கள் றசூல் மார்க

ளுடைய சங்கதிகளில் நின்றும் வும்முடையகல்பை அதைக்கொண்டு நாம் தரிபடுத்தி வைக்கும்படியான சங்கதிகள் யாவும் வும்முடையபேரில் நாம் விசேஷ மறிவிக்கிரோம் இவைகளில்வுமக்கு வுபதேசமும் ஹக்கான சங்கதியும் மூமினான ஜனங்களுக்கு நல்லறிவுபதேசமும் வந்துவிடுமென்று,

இனி இதைப் பயான்செய்வதில் ஹலறத்து ஜுனைதில் பகுதாதி கத்தசல்லாகு றூக்கு சொல்லுகின்றதாவது யாதெனில் அவுலியாக்களுடைய ஹிக்காயத்துகள் அல்லாகுத்த ஆலாவுடைய கூட்டங்களில் ஒன்றாயிருக்கும் அவைகளைக்கொண்டு முரீதுகளுடைய கல்புகளைத் தரிபடுத்தப்படுமென்று

இன்னும் ஆலிமீன்களி லொருவர் கதிதில் வருகிறதாகச் சொல்லுகின்றதாவது நல்லோர்களுடைய பெயரைச் சொல்லும்படியான தலத்தில் அல்லாகுத்தஆலாவுடைய றகுமத் திறங்கும்.

ஹிக்காயத்து.

வஹபிபுனு முனப்பஹு அவர்களைத்தொட்டும் ஹிக்காயத்துஸ் ஸாலிகீனென்னும் கித்தாபிற் பேசி வருகின்றதாவது யாதெனில் ஒருநாள் ஹஸறத்து இபுறுகீம் அலைகிஸ்ஸலா மவர்கள் ஒரு வனாந்தரத்திற் கடினமான வெயிலில் நடந்து போம்போது தாக மதிகரித்துத் தண்ணீரை நாலு திசையிலுந் தேடிப்பார்க்கத் தண்ணீர் கிட்டாமல் அந்த வனத்திற் சுற்றித் திரியும்போது ஒரு ஹபசியானமனிதனைக் கண்டார்கள் அம் மனிதன் தன் கையில் ஒரு கொம்பை வைத்துக்கொண்டு ஆடு மேய்க்கிறார் அவரருகே இவர்கள்போய்ச் சலாஞ் சொன்னார்கள் அவர் ஜவாபுசொல்லி அல்லாவுடைய தோழரே யெங்கே வந்தீர்களென்று கேட்க இபுறுகீம் அலைகிஸ்ஸலா மவர்கள் புதுமையாகி யென்னுடைய பெயரை நீர் யெப்படியறிந்தீரென்று கேட்க அல்லாகுத்தஆலா அறிவித்தானென்றார் அப்பால் ஆப் ஹபசிமனிதனே யெனக்குத் தாக மதிகமாக யிருக்கிறது வும்

முடைய ஆட்டிற் கொஞ்சம் பால்கரந்து தாருமென்றுசொல்ல நாய கமே தங்களுக்குப் பால்வேண்டுமா குளிர்ந்த தண்ணீர் வேண்டுமா வென்றார் அதற் கிவர்கள் ஓய் மனிதனே இந்த வெயிலில் இவ்வ ளவு கடினமான காந்தலுடைய நேரத்திற் குளிர்ந்த தண்ணீரை எ ங்கேயிருந்து நமக்குக் கொடுவந்து தரப்போகிறீரென்று சொன்னார் கள் வுடனே அவர் தமது கையில் வைத்திருந்த அசாவைக்கொண்டு ஓர் படலக்கல்லில் அடித்தார் அக்கல் அல்லாவி னுதவியாற் பிள ந்து அதினின்றும் பாலைக்காணத் தெளிவாகவும் சீனியைக்காண ம துரமாகவும் பனியைக் காணக் குளிராகவு முள்ள அழகிய தண் ணீர் புறப்பட்டது வுடனே அந்த ஹபசீ கலீலுற் றகுமானே அல் லாவுடைய குதறத்தில் நின்றும் புதுமையாகாமல் இத் தண்ணீரை க்குடியுங்க ளென்றார்,

அப்பால் அத் தண்ணீரைக் குடித்துத் தாகந் தீர்ந்தபின் இ வர் இபுருகீம் கலீலுல்லா அவர்களைப் பார்த்து நாயகமே அல்லா குத்த ஆலாவுக்கு இயாரர்வது ஒருவன் வழிப்பட்டால் யெல்லாக ல்க்குகளும் அவனுக்கு வழிப்படும் இன்னும் நான் இந்த மலையை ப்பார்த்து நீ யெழும்பென்று சொன்னால் அது ஆகாயத்தில் யேக மாய் நிற்குமென்று கையாற் சைக்கினைசெய்தார் வுடனே அம்மலை ஆகாயத்தில் மேகத்தைப்போற் கொளுக்குதலில்லாமல் அந்தரமாய் நி ற்கிறதை இபுருகீம் அலைகிஸ்ஸலா மவர்கள் பார்த்து அல்லாகுத்த ஆலாவை மிகவுந் துதித்தார்கள் அப்பவே சிபுரீல் அலைகிஸ்ஸலா மவர்க ளிறங்கி நபியே இவர் மனிதரிடத்தில் அப்தாயிருக்கும் அ ல்லாகுத்தஆலாவிடத்தில் ஒலியாக யிருக்கும் இந்த அப்தைப்போ ல் யாருடைய் கல்பு அல்லாகுத்தஆலா அளவில் ஓரே முகமாக யிரு ந்து அவனுடைய யேவலுக்கு வழிப்பட்டு அவனுடைய விலகல்க ளைத் தவிர்ந்து நடப்பானோ அவன் மனிதர்களிடத்தில் யெவ்வளவு கேவலமாக யிருந்தாலும் அவன் அல்லாகுத்தஆலாவிடத்தில் வெகு மதிபெற்ற ஒலியாயிருக்குமென்று சொன்னார்கள்.

ஹிக்காயத்து.

ஒருநாள் ஹலறத்து மூசா அலைகிஸ்ஸலா மவர்கள் அல்லாகுத்தஆலாவிடத்தில் நாயனே வுன்னுடைய அவ்லியாக்களி னின்றும் ஒரு வொலியை யெனக்குக் காண்பித்தருளென்று கேட்டார்கள் அப்போது மூசாவே இன்னமலையிற் போய் யேற்றி யந்த வோடைத்தலத்தி லிறங்கிப்பாரும் கண்டுகொள்வீர்யென்று சப்தங் கேட்டது அந்தப்படியே போய்ப் பார்க்கவும் ஒரு விஸ்தீனமான பூமியில் பூமிக்குத் தாழாலே ஒரு குச்சுவீடு இருந்தது அதனுட்புகுந்து பார்க்கும்போது குஷ்டரோகம் பிடித்துத் தசைத் துண்டுபோலான ஒரு இன்சானை அதில் யெறியப்பட்டுக் கிடக்கக் கண்டு அஸ்ஸலாமு அலைக்க அல்லாவுடைய ஒலியேயென்று சலாஞ் சொல்லவும் வஅலைக்கஸ்ஸலாம் அல்லாவுடைய கலீமே யென்று பிறத்திசொன்னார் பின்பு மூசாஅலைகிஸ்ஸலா மவர்கள் நீர் யென்னை என்னவிதமாக அறிந்தீரென்று கேட்க அவர் சொல்லுகிறார் நானிந்த ஹாலிலே இருக்கிறபடியால் யென்னை யொருவரும் வந்து பார்க்க மாட்டார்கள் அப்பேர்ப்பட்டவனாக யிருக்கிறேன்.

இன்னம் நானாகிறவன் அல்லாகுத்தஆலாயிடத்தில் வுங்களை யெனக்குக் காட்டிவிய்க்கும்படியாக சில காலமாய்க்கேட்டுக்கொண்டேயிருந்தேன் அல்லாகுத்தஆலா அதைக் கபூல்ச்செய்தான் யென்றார் பின்பு வுமக்குப் பணிவிடை செய்கிறது யார் வூண் தீன் குடிப்பு முதலானது யெங்கேயா யிருக்கு மென்று கேட்டதர்க்கு யெனக்கு ஒரு மகனுண்டு மவன் இந்தக் காட்டிலுள்ள வஸ்துகளைக்கொய்துக்கொண்டுவந்து தருவான் அதைத் தின்று நோன்பு திறப்பேன்யென்றார் அவனை நான் பார்க்கவேணுமென்று கேட்டதர்க்கு இன்னயிடத்திர்க்குப் போயிருக்கிறானென்று சொன்னார் அவடத்திற்போய்ப்பார்க்க அந்தப் பிள்ளையாகுமது சந்திரனைப்போற் சவுந்திரமுள்ளதாயிருக்கக்கண்டு புதுமையுற்றுப் பார்த்துக்கொண்டு நிற்கும்போது ஒரு புலிவந்து அந்தப்பிள்ளையைப் பாய்ந்து கொன்றுவிட்டது அப்

போது அல்லாயிடத்தில் நாயனே வுன்னுடைய ஒலி இப்படி யெறியப்பட்டுக் கிடக்கவும் அவருக்கோ புணிகிடைக்கார காத்திமில்லாதிருக்கவுமா யிருக்கிறதேயென்று கேட்டார்கள்.

அப்போது அல்லாகுத்தஆலா அவரிடத்திற்போய் இது செய்தியைச் சொல்லும் அவருடைய சபுறைப் பாருமென்றுசொன்னன் அப்படியே அவரிடத்திற்போய் வும்முடைய மகனைப் புலி பாய்ந்து கொன்றுவிட்டதென்று சொல்ல மிகவும் சந்தோஷமாகி வானத்தைப்பார்த்து நாயனே அந்தப் பிள்ளையை நீ எனக்குத்தந்தாய் அது எனக்குப் பின்னுலே சீவித்திருக்குமென்று யெண்ணி யிருந்தேன் நீ யிப்போது அதைவிட்டும் - என்னை ராகத்தாக்கிவித்து அதை யுன்னளவிற் சேர்த்துக்கொண்டாயோ இப்பவே யென்னையும் ஸஜதாச் செய்தவனுயிருக்கிற ஹாலிலே வுன்னளவில் அழைத்துக்கொள்ளென்று சொன்னவராய் சுஜூதில் விழுந்தார் மூசா அலைகிஸ்ஸலாமவர்கள் அவரைப்போய் யுசுப்பிப்பார்க்க மவுத்தாயிருக்கிறார் அப்போது சொல்லுவார்கள் நாயனே யுன்னுடைய ஒலி இப்பேர்ப்பட்டவனத்திலே யெறியப்பட்டுக் கிடக்கவும் அவருடைய பிள்ளையை அந்த வோடைத்தலத்தில்க் கொல்லப்பட்டதாய்க் கிடக்கிறதேயென்று சொல்ல சிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்க ளிறங்கி இருவரையும் குளிப்பாட்டி கபனிட்டுத் தபன்செய்துவிட்டுப் போனார்கள் இதைப்பற்றி அவுலியாக்களி லொருவர் சொல்லுகின்றார்கள் யாராவதொரு மனிதன் அல்லாகுத்தஆலாயிடத்தில் இபாதத்தைக்கொண்டு முடுகுதல்பெற்றால் அவன் மனிதர்களுக் கிடையில் பருதேசியாயிருப்பானென்று இது செய்தி (மகாசிதுல்ஸலிகி) னென்கிற கித்தாபில் வருகின்றது,

ஹிக்காயத்து.

தின்னூனில் மிசுறீ றலியல்லாகு அன்கு அவர்கள் பேசிவருகிறதாவது ஒருதினம் கஃபத்துல்லாவினுள் அவர்கள் புகுந்தார்கள் அப்போது ஓர் மனிதன் வுடையில்லாமல் அதின் மதிலுக்குக்கீழே

விழுந்து கிடந்து சலிப்பானவருக அல்லாகுத்தஆலாவைத் திக்திறு செய்துக்கொண்டு கிடக்கக்கண்டு அவரை யடுத்து சலாஞ் சொல்லி நீங்கள் யாரென்று கேட்டார்கள் அதற்க் கவர் நானொரு பருதேசியா யிருக்குமென்று சொன்னார் வுடனே வும்முடையபெய ரென்னவென்று இவர்கள் கேட்கவும் தேடிவருகிறவனை விட்டும் ஒழித்து வோடுகிறவன்யென்று சொன்னார் அதர்க் கிவர்கள் நீ ரிப்போது என்ன சொல்லுகிரீரென்று கேட்கவும் வுடனே யழுதார் அந்த வுடனே இவர்களும் அழுதார்கள் அப்பவே அவர்மவுத்தாகிவிட்டார்.

(பின்னர்) இந்த தின்னூனில் மிசிறி யவர்கள் தங்க ளுடுப்பை அவரின்பேரில் மூடிவிட்டு வெளியிற்போய் அவரை அடக்கஞ் செய்வதர்க்காக கபன் முதலானதுக ளெடுத்துக் கொண்டுவந்துபார்க்க அவனைக் காணவில்லை இவர்களுடனே திகைப்புற்று சுபுகானல்லாஃ நகுமாஞகிய ஆண்டவனே இப்படி எனக்கு முன் யாரெடுத்து அடக்கஞ் செய்துவிட்டார்க ளென்று சொல்லிவிட்டுக் கொஞ்சம் நித்திரையி லாயினார்கள் அவ்வேளையில் ஆப் தின்னூனே அவனைப் பூலோகத்திற் ஷெய்த்தான் தேடினான் காணவில்லை நரகத்திர்க்கு அதிபதியான மாலிக்கு நரகத்திற் றேடினார் காண வில்லை சுவர்க்கலோகத்திர்க்கு அதிபதியான ரிலுவான் சுவர்க்கத்திற்றேடினார் காணவில்லை யென்று யாதொரு வுருத்தோற்ற மன்றியே சத்தம்வந்தது வுடனே வேறே எவ்விடத்தி லிருக்கிறாரென் றிவர்கள்கேட்க தத்துவமுடைய இராஜனிடத்தில் (மகுஅதுசிதுகு) யென்னும்யோகத்தலத்தி லிருக்கிறாரென்று முன்போல் சத்தம்வந்தது.

இதர்க்காகத்தான் சொல்லப்பட் டிருக்கிறது இபாதத்துச்செய்வதில் மனிதர்கள் றுகுபானீ கைவானி றப்பானியென்று மூவகைப்படும் இதில் முந்திய றுகுபானிக் கூட்டத்தார் அல்லாகுத்தஆலாவைப் பயந்ததர்க்காக வணங்கிறவர்கள் (உ-வது) கைவானிக்கூட்டத்தார் அல்லாகுத்தஆலாவுடைய றகுமத்தை ஆதரவு வைத்து வணங்கிறவர்கள் (௩-வது) றப்பானிக்கூட்டத்தார் துன்யா ஆகிறம் சுவ

ர்க்கம் நரகம் நபுசு ஞாது இவைகளில் யாதொன்றுந் தெரியாதவர்களாக வணங்கிறவர்கள்.

(ஆகையால்) கியாமநாளில் முந்தின கூட்டத்தாரை நரகத்தை விட்டுஞ் செயம் பெற்றீர்களென்றும் இரண்டாவது கூட்டத்தாரை சுவர்க்கத்திற் புகுந்துகொள்ளுங்க ளென்றும் மூன்றாவது கூட்டத்தாரை இதாலது வுங்கள் தேட்டம் நாட்டம் முறாதாயிருக்கும் சுவர்க்கத்தை யுங்களுக்காகவே யல்லாது படைக்கவில்லை யென்றும் சொல்லப்படும்

ஹிக்காயத்து.

சுல்த்தான் இபுறுகீமிபுனு அதுஹம் றலியல்லாகு அன்குஅவர்களைத்தொட்டும் பேசிவரப்பட் டிருக்கிறதாவது அவர்கள் சொன்னார்கள் நான் பைத்துல்லாவுக்கு ஹஜ்ஜுசெய்யப் புறப்பட்டபோது பனி யதிகமா யிருந்தது ஒரு மலையின் பொதும்பிற் போய் யொதுங்கினேன் ஒரு வலுப்பமான புலி வந்து என்பேரிற் புகுந்தது என்னைக் கண்டபோது என்னைப் பார்த்து என்னுடைய இல்லிடத்தில் என்னுத்திரவன்றி ஏன்வந்து புகுந்தீர்களென்று கேட்டபோது அதற்கு நான் சொன்னேன் நானுகிறது பருதேசியானவன் இன் றிரவில் உன்னிடத்தில் இராத் தரித்துவிட்டுப் போகவந்தேனென்று சொல்லவும் அது என்னை யொன்றுஞ் செய்யாமல் எனக்கருகே படுத்து றங்கினது நா னிரவுமுழுதுங் குறுஆன் ஓதினவனாக இராத்தரித்தேன் பின்பு காலையில் எழும்பி யதைவிட்டுத் திரும்பும்போது புலிசொல்லுகிறது ஓய் இபுறுகீமே நாம் புலியிடத்தில் படுத் துறங்கினோம் அது நம்மை யொன்றுஞ் செய்யவில்லையென்று நீர் வும்முடைய மனதினுள்ளே பெருமையெண்ணவேண்டாம் நானுகிறது அல்லாவினுணை மூன்றுநாளாக வொன்றுந் தின்னவில்லை நீர் நம்மிடத்தில் விருந்தாளியாய் வந்தபடியால் உம்மை விட்டுவிட்டேன் அல்லாதவனா யும்மைத் தின்றுவிடுவேனென்று சொன்னது,

அதைக் கேட்டு அல்லாகுத்த ஆலாவைப் புகழ்ந்துக்கொண்டு அதைவிட்டும் புறப்பட்டு கதுபாவிற் சென்று ஹஜ்ஜூ செய்து முடித்துக்கொண்டு என்னுடைய இபாதத்துகானவில் மீண்டு வந்து சேர்ந்தேன் என்னுடைய நபுசாகிறது இருபதுவருடகாலமாக மாதுவிளங்கனியின்பேரில் இச்சை வைத்துக்கொண் டிருந்தது நானதைக் கொடுக்காமல்த் திருகுதாளம் பண்ணிக்கொண்டே வந்தேன் ஒருநாளிரவில் என்னிடம் சொன்னது நீர் என்னுடையஷஹூவத்தைநிறைவேற்றவில்லையானல் இபாதத்துச் செய்கிறதில் உம்மை நான் சோம்புதலர்க்கி வைப்பேனென்றது அதர்க்கு நான் என்னபுசே நான் பரிபாலனமுள்ள யிடங்களுக்குப் போனல் உன்னிச்சைப்படி நிறைவேற்றி வைக்கிறேனென்று சொல்லியிருந்தேன் அப்படி யிருக்கவும் முடுகிய காலத்திற் காட்டுக்குப் போகவேண்டிய காரணம் வந்து நேரிட்டது அப்படிப் புறப்பட்டுப் போகும்போது ஒருமரத்தைக்கண்டு யதை யடுத்துப் பார்க்க மாதுவிளமரமாகயிருந்தது அதின் கனியை நாலைந்துவரையிலும் பறித்துத் தின்று பார்க்க அவை முழுதும் புளிப்பாக யிருந்தது அப்போது என்னபுசு சொல்லும் நானினிப்புப் பழத்தையே யல்லாது இச்சை வைக்கவில்லையென்றது.

பின்பு அதைவிட்டு மப்பாற் பரிபாலனமுள்ள யிடத்திற்சென்றேன் அங்கேயொருதோப்பில் ஓர்மனிதனைக்கண்டேன் அவரிடம் அப்பழ மொன்று கேட்டேன் தந்தார் தின்றேன் அதையும் புளிப்பாகக்கண்டேன் அவரிடம் முன்னடப்பைச் சொன்னேன் அவர் சொல்லுவார் ஆய் இபுருகீமே நபுசு நாடியகருமத்தில் நீர் நபுசுக்கு வழிப்படுகிறீர் நானுகிறது இந்தத் தோட்டத்திலேயே நாற்பதுவருட காலமாக யிருக்கிறேன் இதி லுள்ள கனிகளி லின்னது இனிப்பென்றும் இன்னது புளிப்பென்றும் அல்லாகுத்தஆலாபேரி லாணையாக நானறியமாட்டே னென்றார்,

அதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு அவடம்விட்டு அப்பால்நடந்துபோனேன் அவடத்தில் நசலேயுடைய வோர் வாலிபனைக் கண்

டேன் அவருடைய திரேக படங்களிலும் வண்டுகள் கொட்டிக்கொண்டே யிருந்தது இன்னம் புழுக்களு முதிர்ந்துகொண்டே யிருந்தது அவர் சொல்லுகிறார் புகழுடங்களும் அல்லாவுக்காக யிருக்கும் அவனுடைய கல்க்குகளி னின்றும் மிகுந்தம் பெயனாக்காண என்னை சுவாத்தியமாக்கிவைத்தானே அப்பேர்க்கொத்த நாயனென்றார்.

அப்போது நான் சொன்னேன் உம்மி லிருக்கிறதே இதைக்காணவும் வலுப்பமான பலாயிருக்கிறதோ என்றேன் அதற்கவர்சொன்னார் வண்டுகள் திரேகங்களிற்கொட்டுகிறதாகிறது மாது விளம்பழத்தை நீர் இச்சைவைத்துத் திரிகிறதைக்காண கைறுயிருக்கும் இன்னும் நீராகிறது அல்லாகுத்தஆலாவுக்கு அநீதஞ் செய்த அடியாராக யிருக்கிரீர் ஆனதால்த்தான் வுமக்கு இனிப்புப்பழத்தையும் புளிப்பாக்கப்பட்டதென்று நானறிந்திருக்கிறே னென்று சொன்னார்,

அந்தச் சொல்லைக் கேட்டபோது தட்டழிந்து தடம்புரண்டு மதிமயங்கி நான் விழுந்து கிடந்தேன் பின்பு தெளிவுண்டானபோது அவரைப்பார்த்து நீர் இப்பேர்ப்பட்ட பத்வியிலா யிருக்கிரீர் இவ் வியாதியைவிட்டும் சுவாத்தியமாக்கும்படி நாயனிடம் கேட்கப்படாதாவென்று கேட்டே னதற்கு அவர் அல்லாகுத்தஆலா அடியார்கள்பேரில்த் தான்நாடியதைக் கொண்டு ஹூக்கும்செய்வான் ஆகையால் அவன் என்னைத் துண்டுதுண்டாகத் தறித்து எறிந்துவிட்டாலும் அல்லாவினுனை நானவனிலே பிரியத்தா லதிகமாகுவேனே தவிர வேறில்லை யென்றார் அதைக்கேட்டு நான் ஆச்சரியமடைந்து அவடத்தைவிட்டுந் திரும்ப வந்துவிட்டே னென்றார்கள்,

ஆய் எமது இருவான்களே யிப்பேர்க்கொத்த பெரியோர்களுடைய நடத்தைகளைத் தெரிந்து நல்ல அமற்களைச் செய்து வருவீர்களாகவும் நபஅனல்லாகு மிகிம் ஆமீன்,

ஹிக்காயத்து

பனீஇசுருயில் கூட்டத்தில் ஒரு மனிதன் ஸினாவைக் கொண்டு பராக்காகிறவனாயிருந்தான் அவனொருநாள் ஸினாச் செய்துவிட்டுக் கடலினிடத்திற் குளிக்க வந்தான் குளிக்கு முன்பாக யின்னமொருதரம் ஸினாச் செய்வமாவென்று யெண்ணம் வைத்தானப்போது தண்ணீர் சொல்லும் அடா மிஸ்க்கீனே கெடும்பாவத்தைச் செய்து குளிக்கவந்தவன் குளிக்கிறதற்கு முன்பாக மறுவிடுத்தம் ஸினாச் செய்வதற்கு மனங்கொண்டு நாடுகிறாயாவென்று கேட்டது.

அதைக் கேட்டபோதே அவன் பயந்து நடுங்கி வோர் மலையிற் புகுந்து அவடத்திலிருந்து வணக்கஞ் செய்கிற ஆபிதுகளுடனே கூடியிருந்து தன் பாவங்களை நினைத் தழுது தொழுது வணங்கிக்கொண் டிருந்தார்.

அப்பால் ஒருநாள் அம்மலையிலுள்ள ஆபிதுகளெல்லாம் அக்கடலுக்குக் குளிக்கவந்தார்கள் அம் மனிதனையும் அவர்கள் குளிக்க அழைத்ததற்கு யென் பாவத்தைப் பார்த்தவர் அவடத்திலிருக்கிறார் ஆகையால் நா னவடம் வருகிறதற்கு வெட்கிக்குறேனென்று சொல்லி வாராம லிருந்துவிட்டார் அவர்களெல்லாம் அந்தக் கடலிடம் வந்தபோது அவர்களைப்பார்த்து யுங்கள் தோழ னெங்கேயென்று அத் தண்ணீர் கேட்டது அப்போ தவர்கள் அவருடைய பாவத்தை யுதயமாய்ப் பார்த்தவ ரொருவர் இங்கே யிருக்கிறா ரென்று வெட்கமடைந்து இவ்விடம் வரவில்லை யென்றார்கள் அப்போது தண்ணீர் சொல்லும் அந்த மனிதன் இவடத்தில் வந்து யென் சமுகத்திலிருந்து வணங்கவேணும் வரச் சொல்லுங்க ளென்றது அப்படியே யவர்கள்போய்ச் சொன்னவுடன் அவர் கடலருகே வந்து மிகவுந் தவஞ்செய்து மவுத்தாகி அவடத்திற்றானே கபுறிலடங்கினார் அவருடைய கபுறின்மேலே (சனூபர்) யென்று ஒரு மரம் முளைத்தது அதற்குமுன் அம்மர மில்லாதிருந்தது யிப்பிரகார நவுனகுல் மசாலிசில் வருகின்றன.

ஹிக்காயத்து

தப்ரூஞ்சு தேசத்திலிருந்து சேகு அப்துற்றகுமானி றலியல்லாகு அன்கு அவர்கள் சிம்மாசனத்தில் இருந்து பேசிக்கொண் டிருக்கும்போது அவுலியாக்களுக் கிடையில் நாஞகிறது யெப்படியானால் பறவைகளுக் கிடையிலே கழுத்து நீண்ட (கிற்க்கி) யென்ற இராஜாளியைப்போலா யிருக்குமென்று சொன்னார்கள் அப்போது ஒரு மனிதன் அவர்களளவிலே குதித்துப் பாய்ந்து நின்றுக்கொண்டு வும்மை யடித்து கீழே விழுத்தாட்டி விடட்டுமா வென்று சொன்னார் அதைக்கேட்டு அந்த சைகு அவனை யொரு பார்வைபார்த்து பின்பு தலையைக் குனிந்துகொண் டிருந்துவிட்டு பின்பு சொன்னார்கள் இந்த மனிதனுடைய சிரேகத்தி னின்று முள்ள வொவ்வொரு ரோம மடங்கலின் பேரிலும் அல்லாகுத்தஆலாவுடைய இனுயத்தினின்றுந் தங்கமுடிப்புத் தங்கி யிருக்கக் கண்டே னென்று சொல்லிவிட்டு அப்பால் அவரைப்பார்த்து நீர் யெவ்விடத்திலுள்ள மனிதன் யென்று கேட்டார்கள் அதற்கு அவர் நான்பகுதாதுயென்ற வூரில் சைகு அப்துல்காதிறு ஜீலானி றலியல்லாகு அன்கு அவர்களுடைய அசுகாபுகளி னின்றுமுள்ளவன் யென்றுசொன்னார்.

அப்போது அந்த சைகு சொல்லுவார்கள் சைகு அப்துல்காதிறு யென்ற நாமத்தை இந்தப் பூலோகத்திலேயே யொழியக் கேட்கவில்லை நாஞகிறது அல்லாகுத்த ஆலாவுடைய குதறத்தென்னும் வாசலில் நாற்பதுவருடந் தரிபட்டிருந்தேன் இந்த சைகு அப்துல்காதிறென்பவரை அந்த நாற்பதுவருடத்திற் கிடையில் அந்த றகுமத்தென்கிற வாசலிற் புகுதவுங்காணேன் அல்லது வெளியில் வரவுங்காணேனென்றார் இப்படி இந்தச்சங்கதி நடக்குநேரத்தில் சைகு அப்துல்காதிறு றலியல்லாகு அன்கு அவர்கள் தங்களுடைய அசுகாபுகளுடனே பேசிக்கொண் டிருந்தார்கள் அப்போது அவர்களில் இரண்டுபெயரை யழைத்து நீங்கள் இரண்டு பெயர்களும் (தப்ரூஞ்சு) யென்கிற வூரில் சைகு அப்த்துற்றகுமா னிடத்திற் போய்

சொல்லுங்கள் அப்துல்காதிற வுமக்குச் சலாஞ் சொல்லிச்சொன்னார்
நீர் அல்லாவுடைய குதறத்தென்னும் வாசலில் வந்து நிற்கும்போ
து அவர்கள் அல்லாகுத்தஆலாவுடைய ஹலறத்தென்கிற திருச்சமு
கத்திலா யிருந்தார்களாம் ஆனால் வாச்லில்நிற்கிற மனிதன் அகத்து
ள் சமுகத்தி லிருக்கிறவர்களை அறிய மாட்டார்கள் ஆனதால் அதா
க்கடையாளமாகிறது அல்லாகுத்த ஆலாவினின்றும் வுமக்கு வெண்
மையாகிய புதிதான வொரு ஆடையென்னுங் கில்அத்து வெளியா
ச்சுதாம் அதினுடைய அருகாகிறது (குல்கு வல்லாகு அஹது) யெ
ன்றதாயிருக்கும் அதுவுமோ பன்னீராயிரம் ஒலிமார்களுடைய சா
ட்சிகொண்டு யென்னுடைய கையின்பேரிலேதான் வுமக்கு அந்தக்
கில் அத்து வெளியாச்சு தென்று சொல்லுங்கள் யென்று சொல்லி
யனுப்பிவைத்தார்கள் அவர்கள் நடந்துபோகும்போது வழியில் சை
கு அப்த்துற்றகுமான் அவர்களுடைய அசுகாபுகளைக் கண்டார்கள்
அவர்கள் இவ் விருவரையுங் கூட்டிக்கொண்டுபோய் ஷெ சைகுஅ
வர்களிடத்தில் விட்டார்கள் அப்போது இந்த யிருவரும் சைகுஅ
ப்த்துல்காதிறு சைலானி றலியல்லாகு அன்கு அவர்களுடைய ச
லாமையும் யெத்திவித்து இன்னபடி சொல்லச்சொன்னார்களென்று
அவர்கள் சொல்லியனுப்பிய சங்கதிகளையுஞ் சொன்னார்கள் அவை
களைக்கேட்டு அவர்கள் வுண்மை சொன்னார்களென்றார்கள் றலியல்
லாகு அன்கும் ஆனதால் அப்துல்காதிர் நாயக மிகவும் பெரிய நா
தர்வாக விருக்குமென்று வெளியாச்சுது நபஅனுபிகிம்,

ஹிக்காயத்து

அபூமன்சூறில் மிஹறுனி அவர்கள் பேசிவருகிறதாவது பனீ
இசுறுயீல் கூட்டத்தி லொரு மனிதன் இரண்டுமக்களையும் ஒருமா
ளிகையையும் விட்டுவிட்டு மவுத்தாகிவிட்டார் அந்த இரண்டுமக்களு
ம் அந்த மாளிகையை யனந்தரம் பங்கிடுவதில் ஒன்றுக்கொன்று வ
ளக்குப்பேசினார்கள் அப்போது அந்த மாளிகையி னின்றும் ஒரு
செங்கலாகிறது அவர்களைப் பார்த்துப் பேசினது ஆய் மனிதர்களே

யேன் நீங்கள் இருவரும் ஒன்றுக்கொன்று போராடுகிறீர்கள் நானு கிறவன் ஒரு இராஜனுயிருந்தேன் யெனக்கு (கூஎய) வயது வுண்டாயிருந்தது பின்னர் மவுத்தானேன் பின்னர் கப்றில் (௱கூய) வருடம் மண்ணாகவும் அப்பால் யென் மண்ணை யெடுத்துச் செங்கலுண்டுபண்ணினார்கள் அப்படிச் செங்கலாக (சய) வருடமிருந்தேன் பின்னர் யென்னை யுடைத்து வழிப்பாதையிற் செங்கற் றுண்டாகப் போடப்பட்டு (௱கூய) வருடங் கிடந்தேன் அப்பால் மண்ணானேன் பின்னும் யென் மண்ணையெடுத்துச் செங்கலாய்டித்து இம்மாளிகையிலே வைத்தார்கள் இதில் (கூகூய) வருடகாலமாக யிருக்கிறேன் யெனக்காக நீங்கள் வளக்கடிக்க வேண்டாமென்று சொன்னது இச்செய்திகள் றவுனக்கில் மசாலிசியென்ற கித்தாபில் வருகின்றது (முவ்மிதர்களே) நீங்களிதை வுற்றுணர்ந்து பாருங்கள் வுருதி பெறுங்கள்.

ஹிக்காயத்து.

அப்த்துல்லா கிபுனுல் முபாறக்கு றகுமகுல்லாகு ஒருவருடம் ஹஜ்ஜு செய்யும்போது நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் கனவில்வந்து நீர் பகுதாதென்னு மூருக்கு மீண்டுபோனீரோ யானால் (பஹுறாம்) யென்கிற மஜூசிக்கு யென்னுடைய சலாஞ்சொல்லி அல்லாகுத்தஆலா வும்மைத்தொட்டும்பொருந்தியிருக்கிறானென்று சொல்லுமென்று சொன்னார்கள் அந்தப்படியே யவர்கள் ஹஜ்ஜு செய்து முடிந்தபின்னர் பகுதாதில் (பஹுறாம்) யென்கிற மஜூசி யிடத்திற்போய் அல்லாகுத்தஆலாயிடத்தில் நலவாயிருக்கிற செயலேயேதாவது நீர் செய்ததுண்டுமோவென்று கேட்டார்கள் அப்போ தவன் யென்னுடைய மகனுக்கு யென்னுடைய மகளைக் கலியாணஞ் செய்து கொடுத்தேன் அதற்க்காக ஜனங்களை விருந்துக்கழைத்தேனென்றான் அப்போ இவர்கள் இது ஹறாமான செயல் யிதைத் தவிர வேறே யேதாவது செய்ததுண்டுமோவென்று கேட்க யெனக்கு என் வேறொரு மகளைக் கலியாணஞ் செய்து அதற்க்காக ஜனங்களுக்கு விருந்து செய்தேனென்றான் அவர்கள் இதுவும் ஹறுமானசெயல் இ

ளைத்தவிர வேறே யேதாவது செய்ததுண்டோவென்று கேட்க ஒரு முசிலிமாகிய பெண்பிள்ளை யென்னிடம் வந்து விளக்கேற்றிக்கொண்டுபோனாள் வாயலிற் போனபொழுது விளக்கை நூற்றுவிட்டாள் மறுபடியும் வந்து விளக்கேற்றினாள் முன்போலவே வாயலிற் போனவுடன் நூற்றுவிட்டாள் இம்முறையே மூன்றுதரம் நூற்றுவிட்டு நாலாந்தரம் யேற்றிக் கொண்டு தன் வீட்டுக்குட் புகுந்தாள் அவள் ஏதோ ஒருசங்கதி விசாரிக்கவந்தவளா யிருக்குமென்று யெண்ணி யவளைத் துடர்ந்துபோனேன் அப்போது அவளுடைய பிள்ளைகள் சொல்லுகின்றது யெங்களைப் பசி தங்கடஞ் செய்கிறதே யென்றுசொன்னதை யவள்கேட்டுச் சொன்னாள் அல்லாஅல்லாதவனி னின்றும் கேட்டு வாங்கிறதர்க்கு அல்லாவினின்றும் வெட்கப்படுகிறே னென்றாள் அதைக் கேட்டபோது நான் என்னுடைய வீட்டில் வந்து ஒஜீபனங்களை யெடுத்துக்கொண்டுபோய்க் கொடுத்தேன் யென்றான் அதைக்கேட்டவுடன் அவர்கள் நீ நன்மாராயம் பெற்றுக்கொள் நபிசல்லல்லாகு அலைகிஉசல்லமவர்கள் வுனக்குச் சலாஞ்சொன்னார்கள் அல்லாகுத்தஆலா வுன்னைத்தொட்டும் பொருந்திக்கொண்டா னென்று அறிவித்தார்கள் அதைக் கேட்டவுடனே மனமகிழ்ந்து நபிசல்லல்லாகுஅலைகிஉசல்ல மவர்களையும் இசுலாமார்க்கத்தையும்புகழ்ந்து ஈமான்கொண்டு ஷஹாதத்துக் கலிமாச் சொல்லி இசுலாமாயினார் இச்செய்தி துற்றத்துன் னாசிகீனில் வருகின்றது.

ஹிக்காயத்து.

கொஸ்ஹாலி றகுமதுல்லா தங்களுடைய கித்தாபுன்னசிகத்திற் பேசிவருகிறதாவது ஹலறத்து மூசாஅலைகிஸ்ஸலாமவர்கள் அல்லாகு சுபுகானகு ஒத்த ஆலாயிடத்தில் ஆண்டவனே வுன்னுடைய அவுலியாக்களி லொருவனை யெனக்கு அறிவித்துத் தந்தருளென்று கேட்க நீரிருக்கிற தலத்திர்க்கும் அவரிருக்கிற தலத்திர்க்கும் வெகுநாட்பய

ணமிருக்கிறது அவனை நீர் யெவ்விதம் காணப்போகிறீரென்று அல்
லாகு சுபுகானகு வத்தஆலாகேட்க ஆண்டவனே யெனக்கு நீயொத
வியா யிருக்கும்போது அவ்வளவுதூரம் யெனக்கொரு யெரியகா
ரியமில்லை தூர மட்டங்களும் முடிகுதலா யிருக்குமென்றுசொல்லி மூ
சா அலைகிஸ்ஸலாமவர்கள் மூன்றடி யெடுத்துவைத்து நடந்தார்கள் அ
ப்போது மூசாவே நீர் இப்போதுநடந்தது (நூறு) வருடத்துப் பய
ணமா யிருக்குமென்று அல்லாகுத்தஆலா அறிவிக்க மூசாஅலைகிஸ்
ஸலாமவர்கள் யென்னைப்படைத்த ஆண்டவனே அந்த ஒலி யெவ்வி
டத்திலா யிருக்குமென்றதற்கு அந்த ஒலியிருக்குந்தல்மாகிறது யிரு
ட்கடலா யிருக்குமென்று அல்லாகுத்தஆலா சொன்னான் உடனேஇ
வர்கள் நடந்துபோனார்கள் அப்போது அக்கடலத் தண்ணீரில் ஓர்
மனிதன் (யாஹன்னான் யாமன்னான் அக்கில் அதுறத்தி ஒருஹம் கு
றபத்தி) யென்று சொன்னவராகவும் அவருடைய இரண்டுபாதத்திற்
க்கிடையில் நின்றும் அலைக ளடிக்கும்படியையும் நிற்கக் கண்டு மூசா
அலைகிஸ்ஸலா மவர்கள் அல்லாவுடைய ஒலியேஅஸ்ஸலாமு அலைக்க
வென்று சொன்னார்கள் அதற்கு அவர் அல்லாவுடைய கலீமே ஓ
அலைக்கஸ்ஸலாம் யென்றுசொல்ல வுமக்கு நான் கலீமென்று அறிவி
த்தது யாரென்று கேட்க நான் ஒலியென்று வுங்களுக்கு அறிவித்
தானே அந்த ஒருவன் யெனக்கு மறிவித்தானென்றார் அப்பால்மூசா
அலைகிஸ்ஸலாமவர்கள் அந்த ஒலியைப்பார்த்து நீர் அல்லாகுத்தஆலா
வை யெவ்வளவுகாலமாய் இத்தண்ணீரின்பேரில் வணங்குகிறீரென்று
கேட்டார்கள் நானிக் கடலில் யெண்பதுவருடமாய் அல்லாகுத்த ஆ
லாவை (யாஹன்னான் யாமன்னான்) யென்று கூப்பிடுகிறேன் ஒரு ஜ
வாபும் அவனில்நின்று மெனக்கு வரவில்லையென்று சொன்னார் அ
தற்கிவர்கள் நீர் வுமக்கும் அல்லாவுக்கு மிடையில் நான் தூதாயிருக்க
நாடுகிறீரோவென்று கேட்க ஆமென்றார் வுடனே அல்லாகுத்தஆலா

ளை யழைத்து வுன்னுடைய இந்த அடிமைக்கு யென்ன உத்திரவு செய்கிறுயென்று மூசா அலைகிஸ்ஸலாமவர்கள் சொல்ல ஆய் மூசாநபியே இந்த மனிதனுக்கு நீர் சொல்லும் யெல்லா கல்குகளையும் நான் என்னுடைய றகுமத்தைக் கொண்டு பொறிந்துகொள்ளா விட்டால் வுனக்கும் யெல்லா கல்க்குகளுக்கும் யாதொரு கதியு மில்லையென்று சொல்லும்படி அல்லாகுத்தஆலா வுத்திரவுசெய்தான்.

ஆதலால் யெமது பிறவிபோன்ற நேசர்களாகிய மூமீன் முஸ்லிமான அன்புற்ற இகுவான்களே இக் கித்தாபில் எழுதப்பட்டிருக்கிற யேவல் விலகல்களாகிய மார்க்கவிதிகளையும் ஸாலிகானவர்களுடைய நடத்தைகளையும் வுங்களுடைய தெளிவான புத்திகளால் ஆராய்ந்துபார்த்து விளங்கி அறிகிறதுந்தவிர அழிந்து போகும்படியான இந்த மருட்டுக்லுடைய துன்யாவின் அலுவல்களைப் பெரிதென்று மோகித்துத் தொண்டு ஊழியமுஞ்செய்து வீண்காலம்போக்கி ஆகிறத்திற்கு ஆகுமான நல்ல அமல்களைச் செய்யப் பிற்படுத்தாமல் வல்லபத்தின் வல்லபம்பூண்ட ஆண்டவன் நம்மைப் படைத்து வுறுப்புகளில் யேதொரு குற்றங் குறைவன்றித் தாயினுடைய கெற்பத்தில் பத்துமாதமும் பாதுகாத்து யிப்பூமியிற் பிறப்பித்து அமுதுண்ணச்செய்து நாவிற் பேச்சையுங் கண்ணிற் றெளிவான பார்வையையுந்தந்து கை கால் முதலாகிய வுறுப்புகளைச் செவ்வருதலாக்கித் தந்து வுண்ண அன்னமும் வுடுத்த ஆடையுந் தந்து நயமிட ரின்னதென்று பிரித்தறியப் பகுத்தறிவையுந் தந்து மற்றச் சுகங்கள் யாவையு மீந்து ஆதரிக்காளுகின்ற அல்லாகுத்தஆலாவுக்கு வழிப்பட்டு இரகசியத்திலும் பராசியத்திலும் அவனை முருக்கபாச்செய்து வருவீர்களாகவும்.

நம்ம ளியாவரையும் அல்லாகுத்தஆலா தன்னுடைய நல் லடியார்களிற் சேர்த்து அறிவின்படி அமல்ச்செய்ய வுதவி செய்து ஈமானுடனே களாசேர்த்து நபிசல்லல்லாகு அலைகிவசல்ல மவாகளுடைய

ஷபாஅத்தைக் கொடுத்து சொற்கலோகத்தில் தாக்கிலாக்கி அவ னுடைய சங்கையான திருக்காட்சியைத் தருவானாக ஆமீன் யாறப் பல் ஆலமீன். தம்மல் கித்தாபுல் முசம்மா பிகுற்றதில் அயின் பீம ஸாயிலுத்தீன். பி அவ்னில்லாஹில் முயீன் ஒபிஜாஹி றசூலிஹில் அமீன் சனத்த ஒகுவ கொபூர் கொபறல்லாகு லிமுஅல்லி பிஹிவைதகு அப்துல்காதிறுவொலி காநீஹி ஒல்முஸ்லிமீன் யாறப்பி யஜுஃஅல் காவிசன் விஹிபுறி பி ஒஜுஃஹிக்கல் கறிமி அகு வஸின் அஜறீ பி பலூ வி தாஹா செய்யிதிம் வஆலிகி ஒசகபிஹி வியெவுமி பவ்ஸில்லாபிறி ஒசல்லல்லாகுத்தஆலா ஒசல்லம் அலா செய்யிதில் முறுசலீன் ஒஅ லா ஆ[illegible] ஒசகபிகி ஒ வும்மத்தி அஜுஃமயீன் ஒல்கம்து லில்லாகி றப்பில் ஆலமீ.

நேர்வழிவிளக்கந்

தின்மணிமுழக்கம்.

முற்றிற்று.

[illegible]

1-30